T. B. No 1027-1-1915

[illegible] [illegible]

[illegible] யுத்த சரித்திர

DIGITIZED

Q7
NIF
83562

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஹஸ்ரத் முஹம்மது
ஹனீபா யுத்த சரித்திரம்

1021
1 | 6

OFFICE OF THE REGISTRAR OF
27 MAR 1915
MADRAS

இது

திருநெல்வேலி ஷாஹ் முஹம்மது ஸியாவுதீன்
காதிரீ அவர்களால்

ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்து
தமிழ்நடையில் வழுவற எழுதுவித்து

60

மொ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை
அவர்களால்

நமது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1915.

முதற்பதிப்பு　　　　விலை ரூ. 1—8—0

Registered Copy-right.

[illegible]
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
செப்டம்பர்
மாதம் வருடம் 86

செப்பனிட்டு முடித்த
செப்டம்பர்
மாதம் வருடம் 86

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

Q7
N15

83562

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

முஹம்மது ஹனீபா

யுத்த சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF
27

ஆண்டவன் துதி

ஆண்டவனுடைய துதியைக்கொண்டு நான் இப்புத்தகத்தை யெழுதத் தொடங்குவேனாக. புத்தகம் சீக்கிரமாய் முடிவு பெறும் பொருட்டு ஆண்டவனுடைய நாமத்தை எழுதுவேனாக. ஹகீமாகிய ஆண்டவன் ஹிக்மத்தில் எவ்வித வல்லவனாயிருக்கிறானென்றால், அவனே இக்கிரியத்தைக்கொண்டு இன்சானை (மனிதனை) வெளியாக்குகிறவனும், காற்றையும், ஜலத்தையும், அக்கினியையும், மண்ணையும் சேர்த்து தேர்ந்த இன்சானாக (மனிதனாக) செய்கிறவனாகவுமிருக்கிறான். அவனுடைய குதரத்தை நான் எம்மட்டுக்குப் புகழ முடியும். பேனாவோ விந்தையால் திகைப்புள்ளதாயும், புத்தியோ விபரீதத்தால் பிரமைபுள்ளதாயுமிருக்கின்றன. ஆண்டவன் புகழ வேண்டியதற்காக வாய்க்குள் சக்தியற்ற மாமிசத்துண்டாகிய மூகையான நாவுக்கு வல்லமை தந்தவனாயிருக்கிறான். காண்பதற்காக நயனங்களை வெளிச்சமாக்கியிருக்கிறான். வஹ்தத்துடைய பூங்காவனத்தைக் காட்டவேண்டியதற்காக உலகத்தையும், ஜனங்களையும் படைத்திருக்கிறான். விருக்ஷங்களின் இலைகளின்மேல் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள். அவை ஒவ்வொன்றும் அவன் தௌஹீதுடைய தப்தர்களாயிருக்கின்றன. சகலமும் அவனில் பிரகாசமாயும் அவன் எல்லோருக்கும் மறைவாயுமிருக்கிறான் என்பது ஸ்பஷ்டமாயிருக்கிறது. ஜற்ரஹ் என்ற அணுவில் அச்சூரியன் மறைவாயிருப்பதைப் பாருங்கள். அச்சிங்கம் கவசத்தில் பந்தனமாயிருப்பதையும் பாருங்கள். இதை யறிவது வெகு வருத்தமான காரியமாயிருக்கிறதேயன்றி உலகத்தில் இலேசான காரியமாயிருப்பதில்லை. அந்நாளிலோ (ரோஜேமீசாக்கு) ஆண்டவனால் அலஸ்த்து பிறப்பிக்கு

முடைய விளுவாயும் அதின் மஹிமைமிகுதியோ காலூபலாவாயுமிருக்கது. அனேகர்கள் அச்சத்தத்தில் வெளிக்கொண்டவர்களாயும், புத்தி சுவாதீனமற்றவர்களாயு மிருந்தார்கள். பின்னும் அஹதுடைய இடுப்பில் மீமுடைய வளையலை மாட்டி. (அஹ்மது) எல்லா இனிப்பையுமுடையதா தொடங்கிறான். அவர்களுக்கு (அஹ்மது அவர்களுக்கு) எல்லோர்களின்மேல் மகிமையைத் தந்து தம்முடைய கஞ்சேமகப்பியின் (ஒளிவான பொக்கிசத்தின்) புதைப்பொருளையும் தந்தருளினான். ஓ ஜியா என்பவனே ஒருவனும் ஆண்டவனுடைய புகழைத் தன் வயது முழுமையிலும் புகழக்கூடாமையா யிருக்கது. ஆகையால் நாம் இப்போது ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின்மேல் சலவாத்தை ஓதி ஆண்டவன் புகழை இம்மட்டில் நிறுத்துவோமாக.

முர்சல்களின் தலைவராகிய ஹசரத்து நபி நாயகம் அவர்களின் ஸ்தோத்திரம்.

ஓ ஜியா என்பவனே கதமுல் முர்சலீன் அவர்களுடைய ஸ்தோத்திரத்தைச் செய்ய நீ உன் வாயை முதலில் கஸ்தூரியாலும் குங்குமப் பூவாலும், அம்பராலும், பன்னீராலும், கொப்புளிப்பாயாக. ஹசரத்தவர்களோ உம்மத்துடைய இரக்ஷகராயும், கௌசருடைய ஜலத்தைப் பங்கிடுகிறவராயும், ஹாஷிமி என்ற உரிமைப்பேருள்ளவராயும், ஆண்டவனுடைய மஹ்பூபானவராயும், இருலோக எஜமானனும், இருஜெகப்படைப்புக்கும் காரணராயுமிருக்கிறார்கள். பின்னும் லௌலாக்குடைய கிரீடம் ஆண்டவனுல் அவர் சிரசின்மேல் வைக்கப்பட்டவராயும் வானங்கள் முழுவதின் பேரிலும் ஒரு க்ஷணத்துக்குள் போய் திரும்பி வந்தவராயும், அஹ்மதாகிய இவர்களோ பெருக்க ஆவலோடு அறைத்துடன்போய்ச் சேர்ந்தவராயும், ஆண்டவனை உண்மையாக அறிந்தவராயும், உலகத்தாரால் தேற்ற அழைப்பப்பட்டவராயும், ஜனங்களால் வெகு வருத்தங்களைச் சகித்தவராயும், மேற்குத்துவக்கி கிழ்த்திசை வரையுள்ள நபியாயும், சமுத்திரத்துக்கும், பூமண்டலத்துக்கும், தீர்க்கதரிசியாயும், மனிதர்களுக்கும் பூதங்களுக்கும் நபியாயும், ஷரியத்தைப் பெற்றவராயு மிருக்கிறார்கள். எவன் இவர்களை அறிந்தானோ அவன் ஆண்டவனை அறிந்தான். இவர்களுடைய ஷரியத்

துக்கு 4 ஸ்தம்பங்கள் இருக்கின்றன. 1-வது ஹசரத்து அபாபக்கர் அவர்களும், 2-வது ஹசரத்து உமர் அவர்களும், 3-வது ஹசரத்து உதுமான் அவர்களும், 4-வது ஹசரத்து அலிமுர்த்துஜா அவர்களுமே. ஓ ஜியா என்பவனே நீ இப்போது ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய ஸ்தோத்திரத்தை இம்மட்டில் முடித்து அவர்களின்மேல் இலட்சம் சலவாத்தை செலுத்தி நபுவத்தின் நந்தவனத்திலிருந்து புறப்பட்டு 4-அஸ்ஹாபுகளுடைய புகழ்ச்சியைச் செய்வாயாக.

ஹசரத்து அபாபக்கர் அவர்களுடைய புகழ்ச்சி.

ஹசரத்து அபாபக்கர் அவர்கள் விஷயத்தில் ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் தங்கள் திருவாயை மலர்ந்து சித்தீகேஅக்பர் என்ற பட்டத்தை தந்தருளியிருக்கிறார்கள். அவர்களோ ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய சொந்தமானவராயும், எல்லோரைவிட அந்நியோன்னியமானவராயும், அந்தரங்கமானவராயும், எல்லோரைவிட அதிக கண்ணியமடைந்தவராயும், ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின்மேல் குடும்பசத்தை தத்தம் செய்துவிட்டு சமாதுடைய ஆளை விலைக்கு வாங்கிக்கொண்டவராயுமிருந்தார். பின்னும் அவர் வஷ்ஷம்சு வழ்ழுஹா (ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) வின்பேரில் வண்ணாரப் பூச்சி தீபத்தின்மேல் எவ்விதமாய் மோகம் கொண்டதாயிருக்கிறதோ அத்தன்மையாக இருந்தவராயிருந்தார். பின்னும் இவர் கிலாபத்துடைய சிம்மாசனத்தை முதல் அடைந்தவராயிருந்தார்.

ஹசரத்து உமர் அவர்களுடைய புகழ்ச்சி.

ஹசரத்து உமர் அவர்களோ ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய 2-வது கலீபாவாயிருக்கிறார். இவர்களோ நீதியில் நியாயாதிபதியா யிருந்தார். பின்னும் வர் தம்முடைய வல்லமையால் தேசங்களை ஜெயித்தவராயிருந்தார். னும் இவருடைய நீதியைக்கொண்டு ஜலமும் நெருப்பும் ஒன்றாக்

சேர்ந்திருந்தது. இவருடைய நாமம் அமீருல் மோமினீனு யிருந்தது. எந்நாளும் நீதியே இவருக்கு சிநேகிதனு யிருந்தது.

ஹசரத்து உதுமான் அவர்களுடைய புகழ்ச்சி.

ஹசரத்து உதுமான் அவர்களோ ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய 3-வது கலீப்பாவாயிருந்தார்கள். கலாமுல்லாவை சேகரித்தவராயிருந்தார். அப்பான் என்பவருடைய குமாரராயிருந்தார். பின்னும் இவர் ஹயா உடையவரும், இல்முடையவரும், ஜக்காவத்துடையவும் சமுத்திரமாயிருந்தார். பின்னும் இவர் ஷராப்பத்தில் ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய மருமகனும், தம்முடைய உயிரையும், சொத்தையும், ஹசரத்து நபிநாயகம் அவர்களின்பேரில் தானம் செய்தவராயும், ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய 2-குமாரத்திகளை நிக்காஹ் செய்தவராயும். ஹசரத்து நபிநாயகம் அவர்களால் துன்னூறைன் என்ற பட்ட பேரை யடைந்தவராயுமிருந்தார்.

ஹசரத்து அலிமுர்த்துஜா அவர்களுடைய புகழ்ச்சி.

ஹசரத்து அலிமுர்த்துஜா (றலி) அவர்களோ ஒளலியாக்களுடைய அரசராயிருக்கிறார்கள். இவர்களுடைய புகழ்ச்சியை யான் கொண்டாடுவேனாக. இவர்களுடைய நாமமோ அமீருல் அஷ்ஜுயின் என்றிருந்தது. பின்னும் இவர்களுக்கு துல்துல் என்ற ஒட்டகையும், ஸம்சாம் என்ற பட்டயமுமிருந்தது. எல்லா அஸ்ஹாபுகளில் இவர்கள் வெகு பராக்கிரமசாலியாயிருந்தார். கைபர் என்ற கோட்டையின் வாசலைத் தன் பலத்தால் வெகு சீக்கிரத்தில் பிடுங்கிவிட்டார்கள். குபரை எல்லாம் நாசமாக்கி விட்டார்கள். பின்னும் இவர்கள் ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய சிற்றப்பன் குமாரராயிருந்தார்கள். இவர் என்னுடைய அந்தரங்கங்களில் பொக்கிஷமாயிருக்கிறார் என்று இவர்கள் விஷயத்தில் அரசர் அரசராகிய ஹசரத்து நபிநாயகம் அவர்கள் தங்கள் திருவாக்கால் சொல்லியிருக்கிறார்கள். ஒளலியாக்களில் இவர்களுக்கு அனைத்து முடி, ஆண்டவனிடத்தில் மேன்மையுமிருக்கிறது. பின்னும் ஆ

னுல் இவர்களுக்கு தவப்பும், கருமத்துமிருக்கின்றது. இவருடைய நிக்காஹ்வில் சொர்க்கலோகத் தலைவியாகிய பாத்திமா நாச்சியார் இருந்தார்கள். ஹசரத்து அலியவர்களோ பலத்தில் முஹிப்பலியாயிருந்தார்கள், இவர்கள் விஷயத்தில் லாபத்தா இல்லா அலி என்ற வாக்கியமிருக்கிறது. பின்னும் இவர்கள் விஷயத்தில் அல்லாஹுத் தஆலா இராஜியாயிருப்பானாக என்ற வாக்கியத்தை உண்மையுள்ள இதயத்தோடு சொல்வாயாக. இப்போது கியாமத்து நாளின் நாயகியுடைய புகழ்ச்சியைச் சொல்வாயாக.

கியாமத்து நாளின் நாயகியுடைய புகழ்ச்சி.

ஹசரத்து பாத்திமா நாச்சியாரோ றசூலத்துடைய பூஞ்சோலையின் புஷ்பமாயும், ஜஹறாவு மிருக்கிறார்கள். பின்னும் விலாயத்துடைய வானத்தின் முஷ்தரி என்ற நட்சத்திரமாயிருக்கிறார்கள். பாத்திமாவோ என்னுடைய ஒரு கண்டமாயிருக்கிறாள் — ஹசரத்து நபிநாயகம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஆண்டவனின் கிருபையால் ஷை பீபியை வளர்த்து மௌலா அலி யவர்களைக் கணவனாக்கினான். பின்னும் ஷை நாச்சியார் வயிற்றிலிருந்து சோதி நிறைந்த சந்திரனும் சூரியனுமான 2 சகோதரர்களை ஹசரத்து இமாம் ஹசன் றலியல்லாஹு அன்ஹுவும், ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹுவும், வெளியாக்கினான்.

ஹசரத்து இமாம் ஹசன், ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்களுடைய புகழ்ச்சி.

கராமத்துடைய பொக்கிஷமாயும், குற்றமற்ற அரசராயுமான ஹசரத்து இமாம் ஹசன் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், நிர்மலமான மனமுள்ளவரும், தோஷமற்ற அரசருமான ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஆக இவ்விருவர்களும் தீர்க்கதரிசனத்துடைய பூங்காவனத்தின் சர்வேஜாத் என்ற விருட்சங்களாயிருக்கிறார்கள். ஆண்டவனுடைய விருப்பத்தின்படி இவ்விருவர்களும் இராஜியாய்த் தங்கள் உயிர்களைத் தானம் செய்து விட்டார்கள்.

துஆ.

பாத்திமா நாச்சியாருக்காகவும், சொர்க்கலோக எஜமானர்களாகிய ஹசரத்து இமாம் ஹசன் றலியல்லாஹு அன்ஹு, ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காகவும், ஆண்டவனே நீ என்னுடையவும் என் வீட்டாருடையவும், சகோதரன் ஹமீது இலப்பையுடையவும், ஹாத்திமா லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்ற வாக்கியத்தின் பேரில் செய்வாயாக. ஆமீன் அம்மா ஆமீன் ஓ ஆண்டவனே பஞ்சதனே பாக்குக்காக நீ என்னை என்னுடைய இந்த எழுதகத்தில் சுறுசுறுப்புள்ளவனாக்குவாயாக. பின்னும் நீ என்னுடைய இருதயத்திலிருந்து விசாரத்தையும் துக்கத்தையும் நீக்கிவிட்டு சதா ஆனந்தத்தைத் தருவாயாக.

நூல் செய்வதின் காரணம்.

முஹர்ரம் மாதத்தின் 10-வதுடைய இரவில் நாங்கள் உலாவிக்கொண்டும் வேடிக்கை பார்த்துக்கொண்டுமிருக்கும்போது ஒரு கிரகத்தில் ஜனங்கள் நிறைந்தவர்களாயிருக்கக் கண்டோம். அவ்விடம் ஒருவர் ஏதோ தேசத்து அரசருடைய ஜெயசரித்திரத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அதுவோ காசிம் பின் ஆலி என்பவரால் செய்யப்பட்ட சரித்திரமென்று இருந்தது. ஆனால் அது சரியில்லாததாயிருந்ததனையால் அப்போது அங்கும் முஹையத்தீன் என்று பேருள்ள என் பிரியமான சிநேகிதன் ஒருவன் ஓ என் தம்பியே நீ உன் கையில் பேனாவைப் பிடித்து சேர்த்தியான ஒரு ஜெய சரித்திரத்தை எழுதுவாயாக என்று என்னிடம் வேண்டிக்கொண்டான். அதுபற்றி நான் இந்தச் சரித்திரத்தை எழுதத் தொடங்கினேன்.

எச்சரிப்பு.

முஹர்ரம் மாதத்தின் 10-நாட்களில் தினந்தோறும் ஒவ்வொரு அத்தியாயம் படித்துக்கொள்ளும்படி 10-அத்தியாயங்களில் நான் இந்தப் புத்தகம் எழுதுகிறேன்.

OFFICE OF THE REGISTRAR
21 MAR 19

நூல்.

முதல் அத்தியாயம்.

ஹசரத்து முஹம்மது ஹனீபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிறப்பைப்பற்றி முதலில் சொல்லவேண்டியது முக்கியமாயிருக்கிறது. ஏனெனில் இந்தப் புத்தகம் அலங்கரிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. பின்னும் கௌசர் என்ற ஜலத்துடைய சாக்கியானவராகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் நட்சத்திரங்களுக்கு நடுவில் சந்திரன் இருந்துகொண்டிருக்கிறதுபோல் சபையில் ஒருநாள் தோழர்களுடன் சந்தோஷமாயிருந்துகொண்டும், இல்முடைய சம்பாஷணை செய்துகொண்டுமிருந்தார்கள். அதைச் சபையார் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கும்போது திடீரென்று 4-பேர்கள் அச்சபையில் வந்து சேர்ந்து முதலில் ஆதாபும், தஸ்லீமும், சலாமும் வணக்கத்துடன் செய்து பின்பு 7 கண்டம் பூமியை ஆளும் நபியானவரே! தாங்கள் உண்மையாகவே ஆண்டவனுடைய மஹபூபாயும், சன்மார்க்கத்தை விளக்கும் தீபமாயிருக்கிறீர்கள் என்று புகழ்ந்து நாங்கள் தங்களிடம் வெகு அன்போடும் ஆசையோடும் வந்திருக்கிறோம். தாங்கள் எங்களுடைய ஆசையை நிறைவேற்றி எங்கள் மனதுகளை சந்தோஷப்படுத்த வேண்டுமென்று அவர்கள் சொல்லித் தங்கள் தங்கள் சங்கதிகளை வெளியிடத் தொடங்கினார்கள்.

முதலாவது மனிதன் வெளியிடும் சங்கதி.

அவன் ஹசரத்து நபிநாயகம் அவர்கள் முன் நின்று எனக்கு ஒரு குமாரத்தியிருக்கிறாள். அவள் குமரியாயிருக்கிறாள். அவளை விவாகம் செய்துகொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை. நான் நிர்வாகமற்றவனாயிருக்கிறேன். ஒருவேளை அன்னமும், என் வீட்டில் இல்லை. எனக்கு உதவி கிடைக்குமாகில் முதலில் என் மகளின் விவாகத்தை முடித்து விடுவேன். ஆகையால் எனக்கு 600 தினார் தேவையாயிருக்கிறது. என்னுடைய கருத்தைத் தாங்கள் நிறைவேற்றுவீர்களாக என்று அறிக்கை செய்துகொண்டான். இதை ஹசரத்து நபிநாயகம் அவர்கள் கேட்டு உன் வாசஸ்தலம் எத்தேசமென்று திருவாய்

மலர்ந்து கேட்டார்கள். அதற்கு அவன் என்னுடைய தேசம் பாபி தேசமாயிருக்கிறது என்று சொன்னான்.

இரண்டாவது மனிதன் வெளியிடும் சங்கதி.

இரண்டாம் மனிதன் ஹசரத்து நபி நாயகம் அவர்கள் சமுகத்தில் ஒடுக்கத்துடன் நின்று நான் கைபர் தேசத்திலிருந்து வந்திருக்கிறேன். நானொரு தூதனாயிருக்கிறேன். தங்களிடம் கருத்தை வெளியிட வந்திருக்கிறேன். அதாவது கைபர் தேசத்து அரசனானவன் காபிராயிருக்கிறான். அவனுக்கு ஆண்டவன் அதிசயமான ஒரு குமாரனைத் தந்திருக்கிறான். அவன் தன் குமாரனுடைய விவாகத்திற்காக குருசான் தேசத்து அரசகுமாரத்திக்கு வெகு சந்தோஷமாய் மகத்துவத்தோடு பரிசம் போட்டிருந்தான். இப்படியிருக்கையில் பெற்றோர்கள் காலம் சென்று போனார்கள். இதின்பின் அவ்விளவரசன் அவ்விதமான வருத்தத்துடனும் துக்கத்துடனும் தன் விவாகத்தின் சமாச்சாரத்தை எழுதி உத்திரவானால் விவாக முடிவு பூர்த்தியாக்குவேன் என்று பெண் தகப்பனுக்குக் கடிதம் அனுப்பியிருந்தான். அதற்கு அவன் பெண் உனக்குக் கொடுக்கப்படமாட்டாது. உன்மேல் யத்தீமுடைய கறைபட்டுப்போயிருக்கிறது. உனக்குத் தாயும் தகப்பனுமில்லை. உன்னுடைய பந்துத்துவம் என் மனதிற்குப் பிரியமாயில்லை. நான் என் மகளைக் கொடுக்கமாட்டேன். உன்னுடன் விவாகம் செய்ய என்றன் முறையார் முற்றிலும் சம்மதிக்கவில்லை. உன் பலம் என்மேல் செல்லமாட்டாது. நான் உன்னுடைய பலத்தை ஒரு நிமிஷத்தில் முறித்துவிடுவேன் என்று பதில் எழுதி அனுப்பியிருந்தான். இச்சமாசாரத்தால் அவ்விளவரசன் மனநொந்து வருத்தப்பட்டு அவ்வரசனுடன் யுத்தம் செய்ய ஆயத்தமானான். பின்பு அவன் யுத்தம் செய்து தோல்வி யடைந்தான். மற்ற அரசர்கள் ஒருவரும் அவனுக்கு உதவி செய்யவில்லை. இதனால் மிக்க மனவருத்த மடைந்து கொண்டிருக்கையில் தனது ஜோசியர்களில் ஒருவனை அழைத்து எனக்கு ஆலோசனை சொல் என்று கேட்டான். புத்திமானான அந்த ஜோசியன் சமாச்சாரத்தை யெல்லாம் கேட்டு என் அன்பான அரசரே அந்தப் பெண் உமக்குக் கிடைக்கமாட்டாது. நீர் அப்பெண்ணின் தகப்பன்மேல் ஜெயமும் அடையமாட்டீர். ஆகையால் நான்

என் மனக்கருத்தைத் தங்களிடம் சொல்லுகிறேன். அது உமக்கு வெகு நன்மையாயிருக்குமென்று கூறித் தன் கருத்தை வெளியிட்டான். அதாவது ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் அரபியா தேசத்து அரசராயும், ஆண்டவனுடைய தீர்க்கதரிசியாயும், நன்மார்க்கத்தைக் காட்டுகிறவராயும் இருக்கிறார்கள். நீர் அவ்விடம் போய் இஸ்லாம் கொண்டு வருவீரானால் உம்முடைய மனக்கருத்து நிறைவேற்றப்படும் என்றான். இதையெல்லாம் அவ்விளவரசன் காதுகொடுத்துக் கேட்டு அப்படிச் செய்ய முழுமனதோடு தீர்மானித்துக்கொண்டான். பின்பு அவன் என்னைத் தூதனாகத் தங்கள் சமுகத்தில் அனுப்பியிருக்கிறான். நானொரு வருட பயணம் நடந்து இன்றைக்குத் தங்கள் சமுகத்தில் வந்திருக்கிறேன். ஓ உலக ஒளியே இப்போது எனக்குத் தாங்கள் மறுமொழி தந்து என் மனதைத் திருப்தி செய்வீர்களாக. இதுவே என் கருத்து என்றான்.

மூன்றும் மனிதன் வெளியிடும் சங்கதி.

மூன்றும் மனிதன் ஹசரத்து நபிநாயகம் அவர்கள் சமுகத்தில் நின்று தன் கருத்தைச் சொல்லத் தொடங்கினான்:—அதாவது நான் ஹிந்த் தேசத்திலிருந்து வந்தேன். அவ்விடம் அஜீசம் என்று பேருள்ள ஜனங்கள் மிகுதியாய் வசிக்கிறார்கள். எங்கள் தேசத்தில் 2 வருடமாய்ப் பஞ்சமுண்டாயிருக்கிறது. ஆதலால் எல்லோருடைய சந்ததியும் கெட்டுப்போயிருக்கிறது, எப்போது தங்களுடைய திருநாமத்தைக் கேட்டேனோ அப்போதே சுகமடைவோமென்று நம்பி உடனே புறப்பட்டுத் தங்கள் சமுகத்தில் வந்து சேர்ந்தேன். என்னுடைய தேசத்தின் பேரானது சர்அந்தீப்பாயிருக்கிறது. ஜக்கம் என்ற ஸ்தலமோ சமுத்திரத்தில் இருக்கின்றது. அஜீஜ தேசத்தில் கோஹ்காப் என்ற மலையிருக்கின்றது. அவ்விடத்தில் மதமேறிய இராக்ஷசர்களுடையவும், பூதங்களுடையவும், கனிமாப் பெண்களுடையவும் வருத்திருக்கின்றது. இவர்கள் சதாகாலமு மிருக்கிறதற்கு இதுவே விசேஷமாயிருக்கிறது. ஆனால் அவர்கள் எல்லோரும் காபிர்களாயும் கஷ்டர்களாயு மிருக்கிறார்கள். அவர்கள் ஹப்ஷிகளின்பேரில் பாய்கிறார்கள். அவர்களுடைய பயத்தால் ஹப்ஷிகள்

தங்கள் வீடுகளிலிருந்து வெளியில் புறப்படாதவர்களாயிருக்கிறார்கள். அந்த இராட்சதர்கள் வருஷந்தோறும் தேசமுழுவதையும் சொத்துகளையும் நாசமாக்குகிறார்கள். நான் 9 மாதகாலமாய் நடந்து வந்திருக்கிறேன். இத்தருணத்துக்குள் என்ன நடந்திருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆண்டவனே அறிவான். அத்தேசத்தாரெல்லோரையும் இஸ்லாமாக்கி வெய்களை யிக்கட்டிலிருந்து விடுதலையாக்கி இரட்சிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவே என்னுடைய கருத்தாயிருக்கிறது என்று சொன்னான்.

நான்காவது மனிதன் வெளியிடும் சங்கதி.

நான்காவது மனிதன் வணக்கமாய் எழுந்து நின்று வெகு ஒடுக்கத்துடன் தஸ்லீம் செய்து ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய பாதங்களின்மேல் விழுந்து கதம்போசு செய்து அப்பால் தன் கருத்தை வெளியிடத் தொடங்கினான். அதாவது நான் கோஹிஸ்தானிலிருந்து வந்திருக்கிறேன். அவ்விடம் ஒரு இராஜா இருக்கிறான். அவன் சவுந்தரிய ரூபமுள்ளவனும் நல்ல நடத்தையுள்ளவனும் நல்கிரியையுள்ளவனுமாயிருக்கிறான். அவனிடத்தில் பொக்கிசங்களும் சொத்தும் பொருளும் மிகுதியாயிருக்கின்றது. வெகு பெரிய சேனையுமிருக்கிறது. அவனுக்கோ சூரியனைப்போலொத்த ஒரு குமாரத்தியிருக்கிறாள். அப்பெண் சவுந்தரிய ரூபமும் சோதிப்பொருந்திய முகமுமுள்ளவளாயிருக்கிறாள். அவளுடைய இலக்ஷணங்களின் பயான் செய்ய மனிதனுக்கு வல்லமையில்லை. கனியாப் பெண்களோ ஊழியஞ்செய்ய அவளிடத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அவளோ பலத்தில் பேர்போன பராக்கிரமசாலியாயிருக்கிறாள். உலகத்தில் அவளைப்போலொத்த வீரியமுள்ளவர்கள் இல்லை. அவள் பலமான கோட்டைக்குள் வாசஞ்செய்கிறாள். இரவும் பகலும் சந்தோஷமாய் வாழுகிறாள். ஓ நபிநாயகமே, அவளுடைய வாசலின்மேல் கல் நகாரு ஒன்று இருக்கின்றது. அதின் குச்சிகளோ கல்குச்சிகளாகவேயிருக்கின்றன. பின்னும் விசேஷமான ஒரு கல்பாறையுமிருக்கின்றது. அவளோ வாசலை அடைத்து வாழ்கிறாள். உலகத்தில் எவனேனும் ஜெயிக்கிறதில்லை. எவனாவது அவளுடைய வாசலில் [illegible] வைத்துக்கொண்டிருந்தால், அப்போது அவன் முதலில்

அக்குச்சிகளைக் கொண்டு நகாரு அடிக்கவேண்டும். இதுவே அவள் அறிந்துகொள்வதற்குள்ள அடையாளமாயிருக்கிறது. அப்போது அவள் அறிந்து கோட்டைக்கு வெளியில்வந்து ஒரு இரவு அந்தக் கல்பாறையின்மேல் அவனை உட்காரவைப்பாள். விடிந்த உடன் அவனோடு குஸ்தி செய்து அவனைப் பூமியின்மேல் விழத்தட்டி, உடனே அவனை சிறையாக்கிக்கொள்வாள். இத்தன்மையாகவே அளவற்றவர்களைச் சிறையாக்கி யிருக்கிறாள். எவனாவது ஒருவன் என்னுடன் குஸ்தி செய்து என்னைப் பூமியின்மேல் விழத் தட்டுவானாகில் நான் அவனை விவாகஞ் செய்துகொள்வேன். சதாகாலம் நான் அவனுடைய ஊழியத்தில் இருப்பேன் என்று சொல்லுகிறாள். இதுதான் நான் கொண்டுவந்த சமாசாரம் என்றான். இதை ஹசரத்து நபிநாயகம் அவர்கள் கேட்டு விசாரத்தோடு தலை தாழ்த்திக்கொள்ளவே, ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் ஆண்டவன் கட்டளையால் ஹசரத்து நபிநாயகம் அவர்கள் சமுகத்தில் வந்து நின்று, ஆண்டவனுடைய சலாமையும் சல்வாத்துடைய அரும்பொருளையும் செலுத்தி, அலிமுர்த்தஜா அவர்களை அவ்விடம் அனுப்புங்கள். அவர் முதலில் அஜீறூவில் போய் இராக்ஷசர்களின்மேல் ஜெயமடைந்து அப்பால் குஹிஸ்தான தேசத்தைப் பிடித்து அந்த இராஜாவின் குமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டுவருவார் என்று சொன்னதுமன்றி, அந்த இராஜாவின் குமாரத்தியின் நாமமோ ஹனீப்பாவென்றும், அவள் குபரை விட்டு உபயனத்தையும் ஆக்கிவிட்டு முழு இருதயத்தோடு இஸ்லாமை ஒப்புக்கொள்ளுவாளென்றும், அவள் ஆண்டவனையும், ரசூலையும், அலிமுர்த்தஜாவையும், ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், பாத்திமா நாச்சியார் அவர்களையும், சதா தியானம் செய்வாள் என்றும், இப்போது தாங்கள் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அனுப்புங்கள். அவர்கள் ஹனீப்பாவின்மேல் ஜெயமடைவார்கள். அப்புறம் அவர்கள் பப்பர் தேசத்துக்கு வந்து விறுவனுடைய விறுவையும் தீர்த்து சுகமாகத் தன் வீட்டுக்குத் திரும்புவார்கள் என்றும், அவர்களுடன் தாங்கள் தஜ்யத்துல் தலைவீ ரலியல்லாஹு அன்ஹு என்பவரையும், கமர் ரலியல்லாஹு அன்ஹு, என்பவரையும், உமர்உம்ரீ ரலியல்லாஹு அன்ஹு என்பவரையும், கிஜர் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், இல்யாசு அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அக்காஷா ரலியல்

லாஹு அன்ஹு என்பவரையும், அப்பாசு றலியல்லாஹு அன்ஹு அவர்களையும், செய்து அவர்களையும் அழைப்புங்களென்றும் சொன்னார். ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறிய இந்தச் செய்திகளை ஹசரத்து நபிநாயகம் அவர்கள் கேட்டுச் சந்தோஷப்பட்டு அவ்வாறே புறப்பட்டுப் போகும்படிக்கு அலி முர்த்துஜா அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் அஜீஜஹ் தேசத்துக்குப் போகப் புறப்பட்டது.

ஹசரத்து அலியவர்களோ ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியபடி திஹ்யத்துல் கல்பீ றலியல்லாஹு அன்ஹு, கமர் றலியல்லாஹு அன்ஹு, உமர் அம்ரீ றலியல்லாஹு அன்ஹு, கிஜர் அலைஹிஸ்ஸலாம், இல்யாசு அலைஹிஸ்ஸலாம், அக்காஷா றலியல்லாஹு அன்ஹு, அப்பாசு றலியல்லாஹு அன்ஹு, செய்து ஆகிய இவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு அஜீஜஹ் தேசத்துக்குப் புறப்பட்டார்கள். அப்போது கிஜர் அலைஹிஸ்ஸலாம் முன் செல்லுகிறவராயும் இல்யாசும் அலைஹிஸ்ஸலாம், மற்றவர்களும் கூடப்போகிறவர்களாயுமாக இருந்தார்கள். அனேக பயண ஸ்தலங்களை வெகு கஷ்டங்களுடன் கடந்து கடல்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது இல்யாசு அலைஹிஸ்ஸலாம் மச்சத்தைப் பிடித்து அதின்மேல் அவர் தன் ஜனங்களுடன் ஏறி எங்களை அஜீஜஹ் என்னும் தீவில் கொண்டுபோய் விட்டுவிடுமென்று அம்மச்சத்துக்குச் சொன்னார். அம்மச்சமோ அக்கட்டளையின்படி ஹசரத்து அலி றலியல்லாஹு அன்ஹு முதலானவர்களை ஷை ஜஸீரத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டது. இவர்கள் எல்லோரும் பட்டணத்துக்குள் போனார்கள். அச்சனங்கள் இவர்களைக் கண்டு கப்பலும் தோணியுமில்லாமல் இவர்கள் எப்படி வந்து சேர்ந்தார்கள்? இவர்கள் வருவதின் காரணம் என்ன? எங்கே போக வந்திருக்கிறார்கள்? இவர்களின் நாமங்கள் என்ன? என்று ஆச்சரியப்பட்டார்கள். அப்பால் வெகு பயபக்தியுடன் அவர்கள் தங்கள் வாயைத்திறந்து "நீங்கள் யார்? எவ்விடத்திலிருந்து வருகிறீர்கள்? உங்கள் கருத்து என்ன இருக்கிறது?" என்று கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் "நாங்கள் எல்லோரும் இஸ்லாமானவர்களாயிருக்கிறோம். குபருடைய ஷிபங்களை அழிக்க எங்களை அறப்பியா தேசத்திலிருந்து ஆண்டவன் இவ்விடம் கொண்டுவந்திருக்கிறான். நீங்கள் எல்லோரும் கடுமையான காபிர்களாயிருக்கிறீர்கள். உங்கள்மேல் எங்களை ஆண்டவன் அனுப்பியிருக்கிறான். நீங்கள் சீக்கிரத்தில் குபருடைய பூஜையை அறுத்து கலிமாவை ஓதுங்கள்" என்று சொன்னார்கள். இதையெல்லாம் ஷை ஜஸீராவாசிகள், கேட்டு "அய்யய்யோ நாங்கள் ஒருவர் பேரிலும் அநீதம் செய்யவில்லையே. நாங்களோ இரண்டு வருடகாலமாய்ப் பஞ்சத்தால் வருத்தப்படுகிறோமே. பசியையும் தாகத்தையும் சகிக்கிறோமே. நீங்கள் இஸ்லாமாயிருப்பீர்களானால் எங்கள் தேசத்தில் மழை வருஷிக்கும்படி துஆ செய்யவேண்டும். அப்போது நாங்களெல்லோரும் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொள்வோம். பின்னும் நபிநாயகம் அவர்களின்மேல் பக்திகொள்வோம். உங்கள் ஆண்டவன் உண்மையுள்ளவனென்று விசுவாசிப்போம். அப்படிக்கு இல்லாமல் போனால் நாங்கள் உங்கள் விரோதியாயிருப்போம். உங்கள் மேல் கையை நீட்டுவோம்" என்று சொன்னார்கள். அப்போது ஹசரத்து மௌலா அலியவர்கள் தங்கள் திருக்கைகளை எடுத்து ஆண்டவன் சந்நிதியில் கெஞ்சி மன்றாடி துஆ செய்ய தோழர்கள் எல்லோரும் ஆமீன் அலிஸ்னீ யாகியா சல் முஸ்தகீன் என்றும் பின்னின்று சொன்னார்கள். அப்போது ஆண்டவன் அவ்வேண்டுதலை அங்கீகரித்துக் கொண்டான். உடனே அப்பூமியில் நாலாதிசையிலும் மழை வருஷித்து ஜலம் எங்கும் பூரணமாய் நிறைந்துவிட்டது. சிலநாள்களுக்குள் அத்தேசத்தார், வயிறு நிறைய புசிக்கவும், குடிக்கவும் தொடங்கினார்கள். ஷை அஜீஜஹ் தேசத்தார் கஷ்டங்களிலிருந்து நிவர்த்தியடைந்து சவுக்கியத்தை யடைந்தார்கள். அப்போது அவர்கள் தங்கள் அஞ்ஞானத்தை விட்டுவிட்டு முழு இருதயத்தோடு தங்கள் உபாசனைகளையும் அறுத்து கலிமா ஓதி இஸ்லாமானார்கள். இதின்பின் சில நாள்வரை ஹசரத்து மௌலா அலி அவர்கள் அவ்விடத்தில் தங்கியிருந்து அப்பால் கோஹ்காப்புக்குப் போக எண்ணம் கொண்டார்கள்.

ஹசரத்து மௌலா அலி கோஹ்காப்புக்குப் போகப் புறப்பட்டது.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் தங்கள் தோழர்களோடு கோஹ்காப்புக்குப் போகப் புறப்பட்டு சமுத்திரக்கரை வந்து சேர்ந்தார்கள்.

அப்போது இஸ்யாகு அலைஹிஸ்ஸலாம் மேகத்தை அழைத்து எங்களை உன் முதுகின்மேல் ஏற்றி கோஹகாப்பு கோட்டையில் கொண்டு போய்விடு என்று சொன்னார்கள். அக்கட்டளையின்படி அம்மேகம் அவர்கள் எல்லோரையும் தன் முதுகின்மேல் ஏற்றி சுமந்துக்கொண்டு வருவித்துக்கொண்டும் பின்னலுக்கு ஒப்பாக நிமிஷத்துக்குள் கோஹகாப்பு கோட்டையில் கொண்டுபோய் விட்டுவிட்டது. அத்தேசத்து அரசன் தம் நெஞ்சின்மேல் வந்திருக்கிற இஸ்லாமானவர்களை ஜொஹர் நேரத்தில் கண்டு பயந்து நடுங்கி இவர்கள் மேகத்திலிருந்து எவ்விதமாய் வந்து சேர்ந்தார்கள் என்று கேட்டான். அந்நேரமோ ஜொஹர் நேரமாயிருந்தபடியால் முதலில் ஜொஹர் தொழுக வேணுமென்று இஸ்லாமானவர்கள் முசல்லாவை விரித்தார்கள். இதற்குள் அவ்வரசன் நீங்கள் யார்? உங்கள் கருத்து என்ன சொல்லுங்களென்று கேட்டு வரும்படி தூதனை அனுப்பிவித்தான். அதற்கு இஸ்லாமானவர்கள் "நாங்கள் எல்லோரும் அறப்பியர்களாயும், மதினா நகரில் இருக்கிறவர்களாயும், ஹைதரி பட்டப்பேருள்ளவர்களாயுமிருக்கிறோம். பின்னும் நாங்கள் உங்கள்மேல் ஜெயமடைந்து உங்களுக்கு இஸ்லாமுடைய ருசியைக் காட்டவும், உங்களை இஸ்லாமாக்கவும், நன்மார்க்கம் போதிக்கவும், ஷரீயத்துடைய நடையைக் காட்டவும் வந்திருக்கிறோம். நீங்கள் இவ்விதமாய் நடவாமல் போவீர்களானால் நீங்கள் எங்கள் கைகளிலிருந்து தப்பிப்போவது கூடாமை. ஆண்டவன் ஏகனும் முஹம்மது முஸ்தபா அவர்கள் றசூலானவர்களாயுமிருக்கிறார்களென்று சீக்கிரமாக விசுவாசித்து ஈமான் கொள்ளுங்கள்" என்ற சமாச்சாரத்தைச் சொல்லி அனுப்பிவித்தார்கள். அவ்வரசன் மனவருத்தமான இச்சமாச்சாரங்களைக் கேட்டு விசாரப்பட்டு யுத்தத்திற்காகச் சேனையை ஆயத்தப்படுத்த வேணுமென்று கட்டளையிட்டான். இதின்பின் அவன் யுத்தத்தின் நகாரு அடித்து சேனைகளைத் திரட்டி யுத்தம் செய்ய வந்து நின்றான். ஹசரத்து மௌலா அலி அவர்களோ ஜொஹர் ஜமாஅத்தைத் தொழுது பாங்கு தொழுக தாம் இமாமாகவும், மற்ற எல்லா அஸ்ஹாபுகள் முக்ததிகளாகவும் நின்றார்கள். இதுவே நல்ல தருணமாயிருக்கிறதென்று அவ்வரசன் சமயம் பார்த்து எல்லோரும் ஏகோபித்து அவர்கள்மேல் பாயவேணுமென்று தன் சேனைக்குக் கட்டளை கொடுக்கவே அக்கொடியர்கள் அவர்கள்மேல் பாய ஓடி வந்து நின்றார்கள். அச்சமயமோ ஹசரத்து மௌலா அலி

அவர்கள் சூறத்துல் பாத்திஹா ஓதி முடித்திருந்த சமயமாயிருந்தது. இப்படியிருக்க அல்லாஹுத்தஆலாவுடைய குத்ரத்தைப் பாருங்கள். அவனே தன் முஹிப்புகளையும் தொண்டர்களையும் இரட்சிக்கிறவனாயிருக்கிறான். தத்பீருனது தக்தீர் என்ற பிரயத்தனத்தின்மேல் நகைக்கின்றது. எவனுடைய முயற்சியும் அதின்மேல் செல்லுகிறதில்லை. உடனே ஹசரத்து மௌலா அலி யவர்கள் ருகூஉ போவதற்காக அல்லாஹு அக்பர் என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லவே அக்கொடியர்கள் எல்லோரும் வெகு வெறுப்பானவர்களானார்கள். பின்னும் எப்போது ருகூஉவில் வந்து தஸ்பீஹ் ஓதினார்களோ அப்போது அக்கொடியர்கள் பூமியின்மேல் விழத் தொடங்கினார்கள். பின்னும் எப்போது ருகூஉவிலிருந்து அல்லாஹு அக்பர் என்று நேராக நின்றார்களோ அப்போது அக்கொடியர்கள் தங்கள் தங்கள் இடுப்புகளிலிருந்து ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டார்கள். பின்னும் எப்போது ஹசரத்து மௌலா அலி அவர்கள் தன் தலையை சஜ்தாவில் வைத்தார்களோ அப்போது அக்கொடியர்கள் எல்லோரும் அழத் தொடங்கினார்கள். பின்னும் எப்போது சஜ்தாவிலிருந்து அல்லாஹு அக்பர் என்று தலையை எடுத்தார்களோ அப்போது அக்கொடியர்கள் எல்லோரும் நிலைகெட்டு ஓடத் தொடங்கினார்கள். பின்னும் எப்போது அவர்கள் 2-வது சஜ்தாவுக்காகத் தலையை சஜ்தாவில் வைத்தார்களோ அப்போது அக்கொடியர்கள் எரிந்து எரிந்து அக்கினிசுவாலையானார்கள். இதன்பின் 2-வது ரக்அத்தை முடிக்கவே அக்கொடியர்கள் கூக்குரலிட்டு அழத் தொடங்கினார்கள். பின்னும் எப்போது 4-ரக்அத்துகளையும் முடித்து முதல் சலாம் சொன்னார்களோ அப்போது சகலரும் சங்கிலிகளால் கட்டப்பட்டுப்போனார்கள். பின்னும் எப்போது 2-வது சலாம் சொன்னார்களோ அப்போது அக்கொடியர்கள் எல்லோரும் கெஞ்சத் தொடங்கினார்கள். ஜொஹர் நேரம் முதல் அசர் நேரம் வரை எல்லோரும் அதே ஸ்திதியில் இருந்தார்கள். அப்போது அவர்களெல்லாம், "ஓ ராஜமானே" நாங்கள் அசக்தர்களானோம். எங்களை இரட்சியுங்கள் என்று கெஞ்சினார்கள். அதற்கு ஹசரத்து மௌலா அலி அவர்கள் நீங்கள் சகலரும் என்னுடன் கலிமா ஓதுங்கள். ஆண்டவனே ஏகன் என்றும்; முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களே ஆண்டவனுடைய றசூலானவராயிருக்கிறார்களென்றும், ஈமான்கொண்டு வாருங்கள் என்று சொன்னார்கள். அதற்கு அவர்

கள் எல்லோரும் தாங்கள் சொல்லுவதற்கெல்லாம் நாங்கள் உன்னாயிருக்கிறோம். அவையெல்லாம் செய்ய சித்தமுள்ளவர்களாயிருக்கிறோம். தாங்கள் எங்களை இந்தக் கஷ்டத்திலிருந்து நிவாரணம் செய்யுங்கள் என்று அறிக்கை செய்தார்கள். அப்போது ஹஸரத்து அலீரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அசர் தொழுகையின் பாங்கு சொல்லி எல்லோரையும் விடுதலை செய்தார்கள். உடனே அவர்கள் இருதயங்களில் ஈமான் ஜோதி பிரகாசிக்க, அவர்கள் எல்லோரும் கலிமா ஓதி ஈமான் கொண்டவர்களாய் இருலோக நன்மையையுமடைந்து இஸ்லாம் உண்மை என்றும், குபர் அபத்தமென்றும் சொன்னார்கள். இவர்களில் அனேகர்கள் ஓடி வனாந்தரம் போய்ச் சேர்ந்து அவ்விடம் தங்கினார்கள். ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அவ்விடம் சில நாள் வசித்து ஷரியத்து மார்க்கத்தையும் இஸ்லாம் நடையையும் போதித்தார்கள். இதன்பின் அந்த தேசத்தின் கோட்டைக்கு இஸ்லாம்கடு என்ற நாமத்தைத் தந்தார்கள். இதின் பின் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் ருத்தாசு என்ற தேசத்துக்குப்போகப் பிரயாணப்பட்டார்கள்.

ஹஸரத்து மௌலா அலி அவர்கள் ருத்தாசு பட்டணம் போனது.

ஹஸரத்து மௌலா அலி அவர்கள் இஸ்லாம் கடை விட்டு கஷ்டங்களும் வருத்தங்களும் அடைந்து அனேக ஸ்தலங்களைக் கடந்து ருத்தாசு தேசத்து சாகம் போய்ச் சேர்ந்தார்கள். இதின்பின் பட்டணத்திற்குள் பிரவேசித்து அவ்விடத்திய ஜனங்களைத் தேவுகள் என்ற இராக்ஷசர்களாகக் கண்டார்கள். பின்னும் அப்பட்டணத்தின் ஓரத்தில் ஒரு மைல் தூரத்தில் ஒரு கோட்டையைக் கண்டார்கள். அவ்விடத்தில் அரசக் குமாரத்தியாகிய ஹனீபாத் வசித்துக்கொண்டிருந்தாள். அந்த இடம் வனாந்தரமாயிருந்ததென்று சொல்லுவது சரியல்ல. ஆனால் ஜஹன்னமாயிருந்ததென்று சொல்லக்கூடும். மேலும் அவ்விடத்தில் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமும் கூடபோய்ச் சேர்ந்திருக்கமாட்டார். அது அவ்வளவு சுடும் ஸ்தலமாயிருந்தது. அப்போது ஹஸரத்து மௌலா அலி அவர்கள் கிஜர் அலைஹிஸ்ஸலாமையும், இல்யாசு அலைஹிஸ்ஸலாமையும் கூடவே

இட்டுக்கொண்டு, மற்ற தோழர்களை அப்பட்டணத்தில் விட்டுவிட்டு, மூவர்கள்மட்டும் அக்கோட்டைக்குப் போனார்கள். வாசலின்மேல் ஒரு கல்பாறையும், ஒரு நகாருவும், இரண்டு குச்சிகளுமிருப்பதைக் கண்டார்கள். அப்போது ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அந்தக் குச்சிகளைக் கையில் எடுத்து நகாரு அடித்தார்கள். இந்தச் சத்தத்தை அவ்விடமிருந்த இராக்ஷசன் கேட்டும் தெய்வசித்தத்தைக் கண்டு புத்தி மயங்கினான். பின்னும் அவ்விடத்திலிருந்த கல் ஆணியையும், ஹஸரத்து மௌலா அலி அவர்கள் கண்டு அதையும் பிடுங்கிவிட்டார்கள். அப்படிப் பிடுங்கிவிட்டவே கிணற்றிலிருந்து ஜலம் புறப்பட்டது. அந்த ஜலமோ வெகு தெளிவான ஜலமாயிருந்தது. அந்த ஜலத்தினால் ஹஸரத்து மௌலாஅலி அவர்கள் வுலூ செய்து அவ்விடத்திலிருந்த கல்பாறையை எடுத்து அக்கிணற்றின்மேல் வைத்துவிட்டார்கள். இதின்பின் தம்முடைய தோல் முசல்லாவை விரித்து அதின்மேல் மனத்திருப்தியாய் உட்கார்ந்தார்கள். இத்தருணத்தில் கிஜர் அலைஹிஸ்ஸலாமும் இல்யாசு அலைஹிஸ்ஸலாமும் இந்த வனாந்தரத்துக்கு வெகு தூரத்திலிருந்தார்கள். இதின்பின் ஹஸரத்து மௌலாஅலி அவர்கள் படுக்கையின்மேல் படுத்தார்கள். அப்போது அந்த ஊர் அரசன் மகளாகிய ஹனீபாவின் இராஜகுமாரத்தி நித்திரையில் இருந்தாள். அவள் நகாருவுடைய சத்தத்தைக் கேட்டதே விழித்துக்கொண்டு கோட்டைவாசல் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டு கூர்மையான பார்வையால் கல்பாறையின் பக்கம் பார்த்தாள். பின்னும் ஆசுவாசத்தோடு உட்கார்ந்திருக்கும் விசேஷமான ஒருவரைக் கண்டு, தன் படுக்கையில் உட்கார்ந்திருந்தே அந்த ஸ்தலத்தைவிட்டு நீர் மறைந்திருக்கலாகாது. இராமுழுவதும் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருக்க வேண்டும். விடிந்தவுடன் நானும் நீரும் நின்று குஸ்தி செய்வோம். நீர் என்னைப் பூமியின்மேல் விழத் தட்டினால் நான் உம்முடைய அடிமைப்பெண்ணாய் உம்முடைய சமுகத்தில் இருப்பேன். நான் உம்மை விழத் தட்டினால் நான் உம்மைச் சிறையாக்கிக்கொள்வேன் என்று சத்தமிட்டு ஹஸரத்து மௌலாஅலி அவர்களுக்குச் சொன்னாள். பின்னும் உம்முடைய நாமத்தையும், உம்முடைய பிதாவின் நாமத்தையும், நீர் வசிக்கும் ஸ்தலத்தையும் வெளியிடவேண்டுமென்றும் சொன்னாள். அப்போது ஹஸரத்து மௌலாஅலி அவர்கள் என்னுடைய நாமமோ இப்னே ஆதமாயிருக்கின்றது. என் பிதாவின் நாமமோ அப்துல்லாவா

யிருக்கிறது. என் வாசஸ்தலமோ பூமியின் வயிறாயிருக்கிறது என்று சொல்லி, இப்போது நீர் உம்முடைய நாமத்தையும் குலத்தையும் வெளியிடுமென்று சொன்னார்கள். அப்போது ஷெ அரசகுமாரத்தி என்னுடைய நாமம் ஹனீபஃ. என்னுடைய குலம் இராஜகுலமாயிருக்கிறது. என் பிதா சுல்தானாயிருக்கிறார். அவரிடம் அளவற்ற திரவியமும் சேனையுமிருக்கின்றது என்று சொன்னாள். இந்தச் சம்பாஷணை முடிவுபெறுவதற்குள் இரவு வந்து சம்பவித்ததால் ஹசரத்து ஹைதர் அவர்கள் இராத்தொழுகையில் பிரவேசித்தார்கள். மக்ரிப்பு தொழுகையையும் இஷா தொழுகையையும் நிறைவேற்றி நபில்ரக் அத்துகளையும் தஹஜ்ஜுதையும் தொழுதார்கள். நடுசாமத்தில் ஆண்டவனுடைய தஸ்பீஹ் செய்யத் தொடங்கினார்கள். இதற்குள் சுப்ஹோ நேரம் வந்து சேரவே இன்பமான சத்தத்தோடு பாங்கு சொன்னார்கள். சுப்ஹோ தொழுகையையும் நிறைவேற்றி கோட்டைப்பக்கம் பார்வையைச் செலுத்தினார்கள். அப்போது யானை வடிவுக்கு சமானமாய் இராஜகுமாரத்தியாகிய பீபீ ஹனீபஃ குஸ்தி செய்ய வந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். பின்பு அவள் பர்வதத்துக்கு சமானமாய் முன்னுக்கு வந்துநின்று எழுந்திரும். நீரும் நாமும் குஸ்தி செய்வோம் வாரும் என்றாள்.

பீபீ ஹனீபஃ மௌலா அலியுடன் குஸ்தி செய்தது.

ஹசரத்து மௌலாஅலி அவர்கள் எழுந்துநின்று ஓ குமரியே நீ உன் மனதின் கருத்துப்படி ஆசையை விட்டுவிடாமல் உன் முழுபலத்தோடு என்மேல் முதலில் பாய்வாயாக. ஏனெனில் இரண்டாம்விசை நீ என்மேல் பலம் செலுத்த உன்னால் கூடாததாயிருக்கும் என்று சொன்னார்கள். இதின்பின் பீபீ ஹனீபஃ ஹசரத்து முஹம்மது ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய நாமத்தையும், பின்பு ஹசரத்து அலிமுர்த்துஜா அவர்களுடைய நாமத்தையும், அதின் பின் ஹசரத்து பாத்திமா நாச்சியாருடைய நாமத்தையும், ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு, ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய நாமங்களையும் சொல்லி, ஓ ஆண்டவனே இந்த பஞ்சதனோ பாக்குடைய பரக்கத்தால் எனக்கு ஜெயம் தருவாயாக வென்று வேண்டிக்கொண்டாள்.

அப்பால் ஹசரத்து மௌலாஅலி அவர்கள் தன் கையை அக்கல்பாறையின்மேல் நிறுத்தி ஓ குமரியே இந்த என் கையைப் பாறையிலிருந்து அப்புறப்படுத்திவிடு என்று சொன்னார்கள். ஷெ பீபீ ஹனீப்பஃ தன் பலம்முழுவதையும் வெகுசாய் செலுத்தியும் கொஞ்சங்கூட அசைக்கக் கூடவில்லை. பின்னும் ஷெ பீபீ தொடர்ச்சியாய் அவ்விதமாகவே மூன்று தடவைபலத்தைச் செலுத்தியும் முன்அசைவலாமல் போய்விட்டபடியால் வெட்கமடைந்து தலையைக் குனியவைத்து என் முறையோ தீர்ந்து போய்விட்டது. இப்போது உங்கள் முறை இருக்கின்றது. என்மேல் தங்கள்பலத்தைச் செலுத்துங்கள் என்று சொன்னாள். இதை ஹசரத்து மௌலாஅலி அவர்கள் கேட்டு உடனே ஷெ பீபீ ஹனீப்பஃ உடைய கையின் சிறுவிரலைப் பிடித்துத் தேய்க்கவே, அவளுக்குக் காதல் மீறிவிட்டது. அவள் உடனே வெட்கத்துடன் ஹசரத்து மௌலாஅலி அவர்களுடைய பாதங்களின்மேல் விழுந்து தங்களுடைய திருநாமத்தையுங்காட்டி என்னை ஒப்புக்கொள்ளுங்கள். தாங்களே தெய்வசிங்கமாகிய மௌலா அலியாயிருப்பதாக எனக்குத் தெரிய வருகின்றதென்று சொன்னாள்.

ஹனீப்பஃ உடைய சொப்பனத்தில் ஹசரத்து ரசூலுல்லா அவர்கள் வந்து உபதேசித்தது.

ஒரு இராத்திரியின் விசேஷமும் அற்புதமுமான கதையைக் கேளுங்கள். அதாவது, பீபீ ஹனீப்பஃ என்னும் இராஜகுமாரத்தி ஹசரத் மௌலா அலி அவர்களைநோக்கி அடியிற்கண்டபடி கூறினாள்.

“ஒரு நாள் இராத்திரி படுக்கையின்மேல் நான் படுத்திருக்கையில் என் சொப்பனத்தில் முடிவான தீர்க்கதரிசியாகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள்வந்து திருக்கலிமாவை எனக்குக் கற்றுக்கொடுத்து என்னை இஸ்லாமாக்கித் தங்களுடைய உயரத்தையும் வடிவையும் காட்டி, முகசொரூபத்தையும் திருநாமத்தையும் விளக்கப்பண்ணி, தங்களுடன் 8-பேர்கள் இருப்பார்கள் என்றும் சொல்லி, எனக்கு விவாகத்தின் சந்தோஷ செய்தியையும் தந்திருக்கிறார்கள். பின்னும் தங்களுக்கு என்னை விவாகம் செய்வதின் விருப்பமிருக்குமானால் தாங்கள் முதலில் கெட்டியாயிருக்கும் என் திரேகத்தைக் குட்டையாக்கித் தங்களுடைய 8-தோழர்களையும்

வரவழைத்து அப்பால் விவாகத்தின் நகாறுவை அடியுங்கள். பின்னும் ஷரீயத்தின் வகைப்படி என்னை விவாகம் செய்துகொள்ளுங்கள்." இவ்வாறு பீபீ ஹனீப்பஹ் கூறியதை ஹஸரத்து மௌலா அலி அவர்கள் கேட்டு ஆண்டவன் சன்னதியில் தங்கள் கைகளை எடுத்து துஆ செய்யவே ஆண்டவன் அதை அங்கீகரித்து ஷை பீபீயுடைய நெட்டையாயிருக்கும் வடிவை குட்டையாக்கி சோதி பொருந்திய சொரூபத்தைத் தந்தருளினான். உடனே ஷை பீபீ நாணத்துடன் எழுந்து வீட்டுக்குள் போய்விட்டாள். இதன்பின் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் விவாகத்தின் நகாறு அடித்தார்கள். இச்சத்தத்தை அஸ்ஹாபுகளும் மற்ற ஜனங்களும் கேட்டு சந்தோஷப்பட்டு ஓடி ஹஸரத்து மௌலா அலி அவர்களின் முன்வந்து நின்றார்கள். ஷை பீபீ ஹனீப்பஹ் ஷை அஸ்ஹாபுகளைக் கண்டு சந்தோஷப்பட்டு ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய வாக்கு உண்மையே உண்மையென்று நினைத்து சலவாத்துகளை ஓதினாள். இதின்பின் ஷை பீபீ ஹனீப்பஹ் கிழர் அலைஹிஸ்ஸலாமுக்கு வக்காலத்துக் கொடுத்தாள். இந்த வக்காலத்தின் சாக்ஷிகள் மற்ற அஸ்ஹாபுகளானார்கள். இல்யாசு அலைஹிஸ்ஸலாம் நிக்காஹ் செய்துவிட்டு குத்துபா ஓதினார். இதன்பின் ஷை ஹனீப்பஹ்வுக்கு பீபீ என்ற பட்டப்பெயர் ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் கொடுக்கப்பட்டது. இதன்பின் அஸ்ஹாபுகள் வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் செலுத்தினார்கள். ஹஸரத்து அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இதின் ஜவாபில் மங்களமுண்டாவதாகவென்று சொன்னார்கள். இதின்பின் எப்போதாவது உம்மேல் கஷ்டம் சம்பவிக்குமானாலும் அல்லது எல்லா இராட்சசர்களும் சேர்ந்துவந்து உம்மேல் பாய்ந்தாலும் அப்போது நீர் ஆண்டவன் சிங்கமாகிய மௌலா அலி அவர்களுடைய நாமத்தை ஓதக்கடவீர். அப்போது உடனே அக்கஷ்டம் நிவர்த்தியாகும். அக்கொடியவர்கள் ஓடிப்போவார்கள். ஏனெனில் லா பத்தாஹ் இல்லா அலி என்று சொல்லப்படுகின்றது என்று கிழர் அலைஹிஸ்ஸலாம் ஷை பீபீ ஹனீப்பஹ்வுக்கு சொன்னார்.

முஹம்மது ஹனீப்பு அவர்கள் அவதரித்தல்.

ஷை பீபீ ஹனீப்பஹ் அரசபடுக்கை விரித்து ஹஸரத்து மௌலா அலி அவர்களை அரண்மனையில் அழைத்தாள். எப்போது ஹைதர் அவர்கள் அரண்மனையில் பிரவேசித்தார்களோ அப்போது அல்லாஹுத்தஆலாவுடைய அக்குறை செலுத்தி ஏகாந்த ஸ்தலத்தில் போய் பீபீ ஹனீப்பஹ்வும் உடன் உட்கார்ந்தார்கள். அவர்கள் இதின்பின் இரண்டு வாரங்கள் வரை அவ்விடமிருந்தார்கள். இதின் மத்தியில் ஒரு நாள் சிறைச்சாலையில் அவர்கள் போய் சிறையாயிருந்தவர்களை விடுதலையாக்கினார்கள். அவர்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டு ஸ்தோத்தரித்து தங்கள் தங்கள் தேசங்களுக்குப் புறப்பட்டுப்போனார்கள். ஹஸரத்து மௌலா அலி அவர்களோ மதினமா நகருக்குப் புறப்பட உத்தேசித்தபோது ஷை பீபீ ஹனீப்பஹ் வெகு நடுக்கத்துடன் கைகட்டி நின்று ஓ என் கணவரே ஆண்டவன் கிருபை என்மேலிருக்கிறது. என் வயிறு பாரமுள்ளதாய் தோன்றுகின்றது. இதைவிட நான் என்ன திறந்து சொல்லக்கூடுமென்று சொன்னாள். இந்தக் கர்ப்ப சங்கதியை ஹஸரத்து மௌலா அலி அவர்கள் கேட்டு தம்முடைய மோதிரத்தையும், குத்துவாளையும் தந்து அறப்பியா தேசத்தில் மதினமாநகரி என் ஸ்தலமாயிருக்கிறது. எனக்கு ஜனங்கள் மௌலா அலி என்றும், ஹஸரத்து நபி நாயகம் அவர்களுடைய மருமகன் என்றும் சொல்லுகிறார்கள் என்ற சங்கதிகளை ஷை பீபீ ஹனீப்பஹ்வுக்கு எச்சரித்தார்கள். ஷை பீபீ அந்த ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டு தீர்க்க பார்வை அவைகளின் மேல் செலுத்தியபோது குத்துவாளின் மேல் மௌலா அலி என்று சொந்த நாமத்தின் முத்திரை இடப்பட்டும், நாதே அலி என்று சித்தரிக்கப்பட்டுமிருந்ததைக் கண்டாள். இதின்பின் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அக்கோட்டையின் நாமத்தை மாற்றி ஹனீபுக்கு என்று சூட்டினார்கள்.

ஹஸரத்து மௌலா அலி அவர்கள் மதினமா நகருக்குத் திரும்பிப்போனது.

ஹஸரத்து மௌலா அலி அவர்கள் பீபீ ஹனீப்பஹ்வை விட்டுத் திரும்பினார்கள். பின்பு இஸ்லாம் கடுக்கு வந்து அவ்விடத்திலிருந்து சீக்கிரம் புறப்பட்டு அஜீஜஹ் பட்டணத்துக்குப் போகாமல் மதினமா நகருக்கு நேராய் வந்து சேர்ந்து ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் சன்னதியில் போய் இரு லோக நன்மையை அடைந்தார்கள். பின்பு தாம் போய்வந்த சமாச்

சாரம் எல்லாவற்றையும் அவர்களிடம் அறிவித்தார்கள். இதன்பின் இவர்களுடன் இருந்த எல்லா அஸ்ஹாபுகளும் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள். ஹசரத்து அலி அவர்களும் தங்கள் வீட்டுக்குப் போய் தம்முடைய இருநயனங்களாகிய ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு இவர்களையும் பீபீ பாத்திமா நாச்சியாரையும் கண்டார்கள்.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் பர்பர் தேசத்துக்குப் போகப் புறப்பட்டது.

இன்னும் இவருடைய கோரிக்கைகள் பாக்கியிருக்கிறதென்பதை ஹசரத்து மௌலா அலி அவர்கள் நினைத்து சீக்கிரமாக எழுந்து தன் இருகண்மணிகளைக் கண்டுகொண்டு ஹசரத்து பாத்திமா நாச்சியார் அவர்களைப் பிரிந்து தம்முடைய அஸ்ஹாபுகளை இட்டுக்கொண்டு தன் புத்திரிக்குக் கலியாணஞ் செய்யப் பொருள் உதவி வேண்டுமென்று கேட்ட பர்பர் தேசத்து மனிதனையும் அழைத்துக்கொண்டு ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள்சமுகத்தில் வந்து உத்தரவு பெற்றுக்கொண்டு ஹசரத்து நபிநாயகம் அவர்களின்மேல் சலவாத்தை ஓதி ஓ இருமண்டலங்களின் எஜமானனே, பூமியின் வடங்களை நீ இழுத்துவிட்டுப் பர்பர் தேசத்தில் எங்களை சேர்த்துவிடு என்று துஆ செய்தார்கள். பின்பு அவர்கள் தம்முடன் இருக்க அஸ்ஹாபுகளை கண்களை மூடிக்கொள்ளும்படி சொன்னார்கள். அத்துஆவின்படி பூமியின் வடங்கள் இழுக்கப்பட்டன. அப்போது ஹசரத்து மௌலா அலி அவர்கள் திடீரென்று பட்டணத்தைக் கண்டு கண்களைத் திறந்துகொள்ளுங்கள் என்று சொல்லி இதோ தெரியவருகிற பட்டணம் எந்தப் பட்டணமென்று கூடவந்த பர்பர் நாட்டானைக் கேட்டார்கள். அதற்கு அவன் இதுவோ பர்பர் பட்டணமாயிருக்கிறதென்று சொன்னான். அப்போது எல்லோரும் சந்தோஷமாய் பட்டணத்திற்குள் பிரவேசித்தார்கள். பின்பு நீ என்னைச் சீக்கிரமாகக் கடைவீதியிற் கொண்டுபோய் தவக்கமில்லாமல் விற்றுவிட்டு உனக்கு வேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டு உன்னுடைய புத்திரியின் கலியாணத்தை நிறைவேற்றிக் கொள். இந்த ஊரில் என் விரோதியான அரசன் இருக்கிறான். அவன் காபிரா யிருக்கிறான். அவனிடம் நீ என்னைக் கொண்டுபோய் நான் என்

அடிமையை விற்று விடுகிறேன் என்று சொல்லி ஆயிரம் தீனார் வாங்கிக்கொள். அதைவிட குறைவாக வாங்காதே. அவன் என்னுடைய நாமத்தைக் கேட்டால் பஷம்ஷாம் என்று சொல். அவன் என்னுடைய வித்தையைப்பற்றி கேட்டால் வித்தையில் அவர் அதிகக் கெட்டிக்காரரா யிருக்கிறாரென்றும், உன்னுடைய சகல கஷ்டங்களை அவர் நிவர்த்திக்க செய்வார் என்றும், உன்னுடைய இலக்ஷாதி இலக்ஷம் பகையாளிகளோடு யுத்தஞ் செய்து அவர்களுடைய தலைகளை வெட்டி விடுவார் என்றும், ஆண்டவன் அவருக்கு விசேஷமான பலத்தைத் தந்திருக்கிறான் என்றும் நீ சொல்வாயாக வென்று அம்மனிதனிடஞ் சொன்னார்கள். அவன் இச்சங்கதிகளை எல்லாங்கேட்டு சுவாதீனமற்று அழத்தொடங்கினான். பின்னும் தாங்களோ இருலோக பேஷவாவா யிருக்கிறீர்கள். மானிடர்களுக்கும் பூதங்களுக்கும் நன்மார்க்கம் காட்டுகிறவர்களா யிருக்கிறீர்கள். இப்படியிருக்க நான் உங்கள் விஷயத்தில் எவ்விதமாய் ஒடுக்கமற்ற காரியமும் அவமரியாதையுஞ் செய்யக்கூடும். எவ்விதமாய் நானுங்களை என்னுடைய அடிமையென்று சொல்லக்கூடும் என்று சொன்னான். ஹசரத்து மௌலாஅலி அவர்கள் இதைக்கேட்டு இதுவோ ஹிக்மத்தான சொல்லாயிருக்கிறது. இதில் ஆண்டவன் இராஜியாயிருக்கிறான். சும்மாயில்லாதே என்று சொன்னார்கள். இதை ஷைசாயில் கேட்டு அவ்வுத்திரவின்படி அவன் ஆசிப்பு என்பவனுக்கு முன் போய் நின்று தன்னுடைய சங்கதியைச் சொன்னான். அவன் இதைக் கேட்டு நீ என்னுடன் அரசசபைக்கு வாவென்று சொல்லி அவனைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு போய் அவனை வெளியில் நிறுத்தி தான் அரசசமுகம் போய்நின்று ஷை சாயில் ஒரு அடிமையை வைத்திருக்கிறான். அவன் வெகு பலசாலியா யிருக்கிறான். சந்திரனைப்போல அழகுள்ளவனா யிருக்கிறான். அவன் அவனை விற்றுவிடுகிறான். அவன் விலையும் ஆயிரம் திர்ஹமமாயிருக்கிறது. தாங்கள் அவனை விலைக்கு வாங்கிக்கொண்டு அதை அவனுக்குத் தரவேண்டுமென்று சொன்னான். இதின்பின், அவ்வரசன் ஷை சாயிலை அழைத்து சங்கதியெல்லாம் கேட்கத்தொடங்கினான். அதற்கு அவன் "ஓ அரசனே அந்த அடிமையோ ஒவ்வொரு வித்தையிலும் நன்றாய் தேர்ந்தவனா யிருக்கிறான். ஆதம் நபிமுதல் நாளதுவரை அவனுக்கு ஒப்பானவன் உண்டாகவில்லை. சமுத்திர முத்துகளும் தங்கபர்வதங்களும் அவனுடைய விலையாக மாட்டாது. அவனோ பராக்கிரமசாலியாயும் சூரனாயும் பல

சாலியாயும் சவுந்தரிய ரூபமுள்ளவனுமிருக்கிறான். அவன் வல்லமைகளைக்கூற என்றால் முடியாது. ஆனால் நான் என்ன செய்வேன். நானோர் கடனாளியாயிருக்கிறேன். ஆதலால் நான் அவனை விற்று அக்கடனைத்தீர்க்க விரும்புகிறேன் என்று சொன்னான். அவ்வரசன் இவை எல்லாங்கேட்டு நீ முதலில் அந்த அடிமையைக்கொண்டுவந்து என்னைக் காட்டு என்று சொன்னான். உடனே அவன் ஹசரத்து மௌலா அலியைக் கொண்டுவந்து அவ்வரசன் முன் நிறுத்தினான். அவ்வரசன் அவரைக்கண்டு புத்திமயங்கி சற்று தலையைக் குனியவைத்து அப்பால் உம்முடைய நாமம் என்ன, உம்முடைய எஜமானன் உம்மை நம்மிடம் விற்கிறான், நீர் நம்முடைய வேலை செய்வீரா என்று கேட்டான். அதற்கு ஹசரத்து மௌலா அலி அவர்கள் என்னுடைய நாமம் பஷும் ஷாமாயிருக்கிறது. கஷ்டமும் பிரயாசையும் வெகு வருத்தமுள்ள உம்முடைய காரியங்களை நான் செய்வேன் என்று சொன்னார்கள். அப்போது அவன் ஓ ரூமே என்னுடைய முதல் காரியம் ஏதென்றால் என் பட்டணத்துக்குள் வருடத்தில் ஒரு தடவை ஒரு நதி வந்து பாழாக்குகிறது. அதை அடக்க நான் என்னிடமிருக்கும் இலட்சாதி இலட்ச சமர்த்தர்களையும், சாமார்த்தியமுள்ள அடிமைகளையும் அனுப்புகிறேன். அவர்கள் வருடம் முழுவதும் வேலை செய்து அதை அடைக்கிறார்கள். ஆனால் எப்போது நதியில் ஜலம் வருகிறதோ அப்போது அது அதை உடைத்து விடுகின்றது. இவ்விதமாகவே வருடா வருடம் நடந்துகொண்டு வருகின்றது. நீர் அந்த ஜலத்தை யடைத்துவிட வேண்டும். 2-வது காரியம் ஏதென்றால் இந்த வனாந்தரத்தில் ஒரு பெரிய நாகம் குகைகளில் இருக்கின்றது. அது படாகைகளிலுள்ள கிராமங்களின் ஜனங்களைக்கொன்று கிராமங்களை நாசமாக்குகின்றது. நீர் அச்சர்ப்பத்தைக் கொல்லவேண்டும். 3-வது காரியம் ஏதென்றால் உலகத்தில் என்னுடைய சத்துரு ஒருவன் இருக்கிறான், அவன் மதினமா நகரில் இருந்துகொண்டிருக்கிறான். அவனுடைய நாமம் மௌலா அலி என்றிருக்கின்றது. அவனுடைய ஜெயங்களில் நகாருக்கள் உலகத்தில் சப்திக்கின்றன. நீர் அவனுடைய கைகளைக் கட்டி அவனை என் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும். நீர் என்னுடைய இந்த 3-காரியங்களைச் செய்யவேண்டும். அப்படிச் செய்வீரானால் நான் உம்மை அடிமை தனத்திலிருந்து நீக்கிவிடுவேன். பின்னும் நான் என்னுடைய இராச்சியத்தை எனக்குப்பின் நீர் ஆளும்

படி நான் உமக்குத் தருவேன் என்று சொன்னான். தெய்வசிங்கமாகிய ஹசரத்து மௌலா அலி அவர்கள் இவை எல்லாம் கேட்டு இதைப்போன்ற நூறு காரியங்கள் இருந்தாலும்கூட நான் ஆண்டவன் கிருபையால் அவைகளை யெல்லாம் நிறைவேற்றி விடுவேன் என்று சொன்னார்கள். அப்போது அவ்வரசன் ஆயிரம் தினார் அந்த சாயிலுக்குக் கொடுத்தான். அவன் அதை வாங்கிக்கொண்டு ஹசரத்து மௌலா அலியை விட்டுப் பிரிந்து போய் விட்டான். அதன்பின் அவ்வரசன் இந்த மூன்று காரியங்களையும் நீர் எப்போது நிறைவேற்றுவீர் என்று அவ்வடிமையாகிய மௌலா அலி அவர்களிடம் கேட்டான். அதற்கு அவர்கள் சற்று யோசித்து ஆண்டவன் கிருபையால் இன்றைக்கே அவைகளை முடித்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். இதைக்கேட்டு அவ்வரசன் ஆச்சரியப்பட்டு நகைத்து உமக்குப் பைத்திய மிருக்கிறதா என்ன, நானே இலட்சாதி இலட்ச அடிமைகளை வைத்திருக்கிறேன். கொல்லத்துக்காரர்களையும் வைத்திருக்கிறேன். அவர்களுக்கு அநேக சாமான்களைத் தந்திருக்கிறேன். அப்படியிருக்க அவர்கள் அந் நதியை யடைக்கும் வேலையில் அசக்தர்களா யிருக்கிறார்கள். நாளதுவரை அதைப் பூர்த்தியாக்கவில்லை. நீர் அக்காரியத்தை ஒருநாளில் எவ்விதமாய் முடித்துவிடுவீர். இனி நான் கூறிய நாகம் இருக்கிறதே அதன்மேல் அம்பும், வாளும் பிரயோஜனப்படுகிறதில்லை. ஈட்டியின் குத்தும் பாணத்துடைய வேகமும் அதன்மேல் செல்லுகிறதில்லை. நானே நக்காருக்களும், முரசுகளும் பறைகளும் அடித்துக்கொண்டு சேனைகளுடன் இருபது தடவை அதின்மேல் போயிருக்கிறேன். அதுவோ எல்லாத்தடவைகளில் என் சேனைகளை எல்லாம் நாசமாக்கிவிட்டது. எங்களுடைய பலம் அதின்மேல் செல்லவில்லை. இப்படியிருக்க நீர் இன்றைக்கே அதை எவ்விதமாய் கொல்லுவீர். இனி அந்த மௌலா அலியோ மதினமா நகரியில் இருக்கிறார். அதுவோ வெகு நாள் பயணத்திலிருக்கிறது. இன்று ஒரு நாளில் நீர் போய் அவரை எவ்விதமாய் கட்டிக்கொண்டு வருவீர். இதுவோ புத்திக்கு எட்டாத வார்த்தையாயிருக்கிறது என்று சொன்னான். அதற்கு ஹசரத்து மௌலா அலி அவர்கள் இந்த க்ஷணமே என்னுடைய எல்லாக் காரியங்களை முடித்து விடுகிறேன் என்று சொல்லிக் கோபத்தோடு எழுந்து அந்நதியின் அணைக்குப் போகப் புறப்பட்டார்கள்.

ஹஸரத்து மௌலா அலி அணையைக் கட்டினது.

ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அவ்வணைக்குப்போய் வேலை செய்துகொண்டிருந்த அடிமைகளைக் கண்டு நான் உங்களை மீட்டிவிட்டேன் என்று சொன்னார்கள். அப்போது அவர்களில் ஒருவன் ஆண்டவன் உங்களுக்குப் பிரதியுபகாரம் செய்வானாக வென்றான். இதின்பின் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் சற்று நின்று யோசித்து அந்த ஸ்தலத்துக்கு எதிரில் ஒரு மலை இருப்பதைக் கண்டு அம்மலைக்குப்போய் தம்முடைய வாளாகிய சுல்பக்காரை உருவி அம்மலையின் இடுப்பில் ஓர் அடி ஓங்கி அடித்தார்கள். அதுவோ உடனே இரண்டு துண்டாகப் பிளந்துவிட்டது. அத்துண்டுகளில் ஒன்றைத் தூக்கி எடுத்துக்கொண்டு அவ்வணையில் வைத்து ஜலம் வரும் பாதையை வெகு நேர்த்தியாய் அடைத்துவிட்டார்கள். பின்பு அவர்கள் அவ்வரசனிடத்தில் வந்து நதியின் வழியை நான் அடைத்துவிட்டேன். இப்போது சர்ப்பத்தை அடிக்கப்போகிறேன் என்று சொல்லி அந்நாகத்தின் பக்கம் போகப் புறப்பட்டார்கள். அவ்வரசனோ இவர் பாதையை அடைத்தது நிஜமா வென்று அறிய அவ்வணைக்குப்போய் மலையால் அப்பாதை அடைபட்டுப் போனதைப்பார்த்து ஆச்சரியப்பட்டுத் திகைப்படைந்தான். இச்சமயத்தில் ஒருவன் அவ்வரசன் முன்வந்து ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அம்மலையின்மேல் சுல்பக்கார் என்ற வாளை அடித்து அதை இரண்டு துண்டாக்கினதையும், அதைத் தூக்கிக்கொண்டுபோய் ஜலம் வரும்வழியை அடைத்ததையும் சொல்லி அவர்களுடைய வீரியத்தைப்பற்றி புகழ்ந்தான். இதைக் கேட்டு அவ்வரசன் மேற்கு திசைமுதல் கிழ திசைவரை இம்மனிதனைப்போல் ஒருவருமில்லை. இப்போது அவர் என்ன செய்யப் போகிறார் என்பதைப் பார்ப்போம். இவரோ அடிமையாயிருப்பதில்லை. மேலும் இவர் சுல்தானாயிருப்பார். இவருடைய கட்டளைக்குள் மனிதர்களும், ஜின்களும் அடங்கியிருப்பார்கள். எனக்கு அவருடன் பேச ஒரு வார்த்தை இருக்கின்றது, என்று தம்முடைய மந்திரியுடன் சொன்னார்.

ஹஸரத்து மௌலா அலி சர்ப்பத்தைக் கொன்றது.

இதற்கிடையில் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் சர்ப்பத்தைக் கொல்லப் புறப்பட்டுக் கொஞ்ச தூரம் போயிருந்தார்கள். கோபுரத்தைப்போல உட்கார்ந்திருந்த அச்சர்ப்பம் ஹஸரத்து மௌலா அலி அவர்களைக் கண்டதும் கோபத்தோடு சீறிக்கொண்டு புறப்பட்டது. அதுவோ அமாவாசை இருளைப்போலக் கருப்பாயும், மலையைப் போலப் பருமையான தேகமுள்ளதாயும், அக்கினிக் குழிகளைப்போன்ற இருகண்கள் உள்ளதாயும், எருது கொம்புகளைப்போலத் தலைமேல் இரண்டு கொம்புகளையுடையதாயும், ஸ்திரீயின் தலை உரோமங்களைப்போல மயிருடைய தேகமுள்ளதாயும், குகையைப்போல வாயுள்ளதாயும், துதிக்கையைப்போல மூக்கின் இருதுவாரங்களுள்ளதாயும், வில்வளைவு கட்டிடத்தைப்போலத் தலையுடையதாயுமிருந்தது. பின்னும் அக்கினி சொரியைப்போல அதின் சுவாசத்தின் சுவாலைகள் விருக்ஷங்களை எரித்து நாசமாக்கிக்கொண்டிருந்தன. இவ்விதச் சர்ப்பத்தைக்கண்டு ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அல்லாஹு அக்பர் என்று சொன்னார்கள். அந்த சர்ப்பமோ மின்னலைப்போல ஹஸரத்து மௌலா அலி அவர்கள்மேல் பாய்ந்தது. உடனே அவர்கள் ஞானத்தால் பாத்திஹாவை ஓதி அதின் வாயையும் அதின் மூச்சையும் அடைத்துவிட்டார்கள். பின்னும் அவர்கள் க்ஷணமே தன்னைப் பூமியிலிருந்து கிளப்பி காற்றின்மேல் அந்தரமாய் நிறுத்திக்கொண்டார்கள். அப்போது அந்நாகம் சுவாதீனமற்று உருண்டுகொண்டு அவர்கள்மேல் அக்கினி சுவாலைகளை வீசிக்கொண்டிருந்தது. பின்னும் அது பூமியின்மேல் உருளவும் பிரளவும் தொடங்கினது. இச்சமயத்தில் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் தங்கள் பாதத்தின் இரும்பு கொக்கிகளைக்கொண்டு அதின் தலைமேல் அடித்தார்கள்; அந்த இரண்டு கொக்கிகளோ அதின் தலையை உடைத்துப் பூமிக்குள் புகுந்தன. உடனே அது தன் உயிரை வெறுத்துவிட்டது. அப்போது ஹஸரத்து மௌலா அலி அவர்கள் அதின் மயிர்களைப் பிடித்து அதைத் தூக்கித் தன் தலைக்குமேல் விசையாய்ச் சுற்றித் தரையில் மோதி அடித்தார்கள். உடனே அது மடிந்துபோய்விட்டது. பின்பு அவர்கள் அதின் தலையிலிருந்த தோலை உருவி அதின் சதையை அவ்விடத்திலேயே போட்டுவிட்டார்கள். அப்போது இவ்வித வீரியத்தை மலாயக்குகள் கண்டு மர்ஹபாயா அலி என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதின்பின் அத்தோலை அவ்வரசனிடத்தில் அவர்கள் கொண்டு வந்து அவன் எதிரில் வைத்தார்கள். அதைக்கண்ட சபையோர் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். விரலை முன் பல்லால் கடித்துக்கொண்

டார்கள். அப்போது பர்பர் தேசத்து அரசன் இந்த இரண்டு காரியங்களையும் நீர் நிறைவேற்றினீர். ஆனால் இப்போது ஒரு காரியம் மாத்திரம் பாக்கியிருக்கிறது. அதுவோ வெகு கடினமான காரியமாயிருக்கிறது. என்று சொன்னான்.

ஹசரத்து மௌலா அலியைப் பிடித்தல்.

அவ்வரசன் சொன்னதை ஹசரத்து மௌலா அலி அவர்கள் கேட்டு நாமோ அனேகரைக் கட்டிவிட்டோம். சர்ப்பத்தையும் கொன்றுவிட்டோம். ஆனால் இப்போது ஓ இராஜாவே கேள். மௌலா அலி என்று சொல்லுகிறது எனக்குத்தான். நானே மௌலா அலியாயிருக்கிறேன். நான் உனக்கு வாக்கு கொடுத்த எல்லாக் காரியத்தையும் நிறைவேற்றிவிட்டேன் என்று சொன்னார்கள். இதைக் கேட்ட உடனே அவர்களைப் பிடிக்க எல்லோரும் அவர்கள்மேல் சுருக்கு முடிச்சுகளை எறிந்தார்கள். அப்போது நானூறு சுருக்கு முடிச்சுகள் அவர்களின் திரேகத்தின் மேல் விழுந்தன. இதுவும் தவிர நூறு போர்ச்சேவகர்கள் கத்திகளை உருவிக்கொண்டு அவர்களை வெட்டநின்றுகொண்டிருந்தார்கள். ஆதலால் ஹசரத்து மௌலா அலி அவர்களுக்குக் கோபமுண்டாய் அவர்கள் கர்ச்சித்து உறையிலிருந்த சுல்பக்காரை உருவி அவ்வலைகளை எல்லாம் அறுத்துவிட்டு ஆர்ப்பரித்து ஓ கொடியர்களே இப்போது உங்களையும் முடிவுசெய்துவிடுகிறேன் என்று சொல்லவே அக்கொடியர்கள் கெஞ்சி ஓ மௌலா அலியே! உண்மையாய்த் தாங்கள் எங்களுடைய ஹாதியாயிருக்கிறீர்கள். தாங்கள் எங்கள் அரசராயிருக்கிறீர்கள். எங்களுடைய குற்றங்களை மன்னித்து எங்கள்மேல் கிருபை செய்யுங்கள். நாங்கள் ஈமான் கொண்டு வருகிறோம் என்று சொல்லி எல்லோரும் ஈமான் கொண்டு அவர்களுடைய பாதங்களின்மேல் தங்கள் தலைகளை வைத்தார்கள். இதின்பின் அவ்வரசனும் அவர் பாதங்களின்மேல் விழுந்து குப்ரை விட்டு நீங்கி இஸ்லாமாய்ப் போனான். ஹசரத்து மௌலா அலியவர்கள் இக்காரியங்களை எல்லாம் விரைவில் முடித்து அவர்கள் எல்லோருக்கும் ஷரியத்தைக் கற்றுக்கொடுத்து தமது சுயதேசத்துக்குத் தம்முடைய அஸ்ஹாபுகளுடன் போகப் புறப்பட்டார்கள்.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் மதினமா நகருக்குத் திரும்பிப்போனது.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய பாதங்களை முத்தமிட பர்பர் தேசத்தை விட்டுப் புறப்பட்டார்கள். பின்பு மதினமாநகருக்கு வந்து நடந்த எல்லாச் சமாச்சாரத்தையும் தெரியப்படுத்தினார்கள். இதை ஹசரத்து நபி நாயகம் அவர்கள் கேட்டு ஓ துல்துல் என்ற ஒட்டகை சவாரே! பாக்கியிருக்கும் காரியத்தையும் நீர் முடித்து சீக்கிரம் வந்து சேருமென்று கட்டளையிட்டார்கள். இதைக்கேட்டு வீட்டுக்கு வந்து ஹசரத்து பாத்திமா நாச்சியாரையும் இருகண்மணிகளையும் கண்டார்கள்.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் குருசான் தேசத்துக்குப் போனது.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஹசரத்து நபி நாயகம் அவர்களால் உத்தரவு பெற்று குருசான் தேசம் போகப் புறப்பட்டார்கள். பின்னும் தம்முடன் ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், கிஜர் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், இல்யாசு அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அக்காஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், கமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், அயாசு ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், தஹ்யத்துல்கல்பி ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், உம்ரே அய்யார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், கைபர் தேசத்திலிருந்து இராஜகுமாரனுக்காகத் தூதாக வந்த மனிதனையும் இட்டுக்கொண்டு போனார்கள். ஆக இவ்வெட்டு பேர்களும் ஒருமனப்பட்டு அவர்களின் பின் சென்றார்கள். மதினமா நகரியின் சரகம் கடந்தவுடன் தங்கள்தங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள், என் முந்தானையைப் பிடித்துக்கொள்ளுங்கள், என்று அவர்களுக்கு ஹசரத்து மௌலா அலி அவர்கள் சொன்னார்கள். இதின்பின் அவர்கள் ஓ பூமியே நீ சுருங்கிக்கொள் என்று சொல்லவே, அது தம்முடைய வடங்களை இழுத்துக்கொண்டது. உடனே கைபர் தேசம் காணப்பட்டது. அப்போது அவர்கள், ஓ தோழர்களே, இப்போது நீங்கள் உங்கள் கண்களைத் திறந்துகொள்ளுங்கள் ' என்று சொல்லி,

பாருங்கள், இது எந்தத்தேசம், இதின்நாமம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு கைபர் தேசத்துத் தூதனானவன் இது கைபர் தேசத்து சரகமாயிருக்கிறதென்று சொன்னான். அப்போது இந்த கிராமத்தை அஸ்ஹாபுகள் கண்டு சலவாத்து ஓதினார்கள். இதின்பின் எல்லோரும் முன்சென்றார்கள். இதற்குள் அத்தூதன் எல்லோருக்கு முன்னாகச் சென்று அவ்விளவரசனிடம் போய் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் நிச்சந்தேகமாய் நீயுடைய ஆண்டவனியாயும் உலகரக்ஷகராயுமிருக்கிறார்கள். மக்காக அவர்கள் தம்முடைய கிருபையால் உமக்கு உதவிசெய்ய ஒன்பதுபேர்களை அனுப்பியிருக்கிறார்கள். இவர்களுக்குள் மௌலா அலி அவர்களும் ஒருவராயிருக்கிறார்கள் என்று கூறினான். இந்தச் சமாச்சாரத்தைக் கேட்டதே அவ்வரசன் முன்சென்று வந்து அவர்களை யழைத்துப் போவதற்காக அவர்களிடம் போய்ச் சேர்ந்தான். அவன் ஹசரத்து மௌலா அலி அவர்களை, சூரிய ஒளியைப்போலக் கண்டு அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டு என்னுடைய மானத்தையும், மரியாதையையும் காப்பாற்றுங்கள். எனக்குக் கலிமாவைப் போதியுங்கள் என்று சொல்லி அவர்களை மரியாதையுடன் கொண்டுவந்து சிம்மாசனத்தின்மேல் உட்காரவைத்தான். அப்போது ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஆண்டவன் உன்னைக் காப்பாற்றுகிறவனாயிருக்கிறான். பயப்படாதே யென்று ஆறுதல் செய்தார்கள். இதின்பின் அவ்வரசனுடைய சேனை எல்லாம் இஸ்லாமாய்விட்டது. பின்பு ஓ அஸ்ஹாபுகளே, வஷாவிர்ஹும் என்று ஹதீது இருக்கிறபடியால் நான் உங்களுடன் ஆலோசனை செய்கிறேன். அதாவது நாங்கள் குருசான் தேசத்துக்கு நேராய்ப் போகவேண்டும். இந்தக் காரியம் வருத்தமான காரியமாயிருப்பதில்லை. அவ்விடத்திய இராஜாவைப் போய்க் காணவேண்டுமென்று என் மனதில் வருகின்றது. ஆனால் நீங்கள் இவ்விஷயத்தில் என்ன ஆலோசனை சொல்லுகிறீர்கள் என்று ஹசரத்து மௌலாஅலி அவர்கள் கேட்டார்கள். இதின்பின் கிஜர் அலைஹிஸ்ஸலாம் மேகத்தை யழைத்து நீ எங்களை குருசான் தேசத்துக் கோட்டையில் கொண்டுபோய் விட்டுவிடு. தவக்கம் செய்யாதே என்று சொல்லி நஸ்ருன் மினல்லாஹி என்ற ஆயத்தை ஓதினார்கள். அப்போது எல்லா அஸ்ஹாபுகளும், மேகத்தின்மேல் ஏறினார்கள். அதுவோ குருசான் தேசத்துக் கோட்டைக்குள் கொண்டுபோய் இவர்களை

விட்டுவிட்டது. இவர்களை அத்தேசத்து இராஜா கண்டு இந்த அன்னிய தேசத்தார் கோட்டைக்குள் எவ்விதமாய் வந்துவிட்டார்கள், என்று தன் மனதில் ஆச்சரியப்பட்டு திகைத்து நீங்கள் யார்? எவ்விடத்திலிருந்து வருகிறீர்கள்? என்ன காரணமாய் வந்திருக்கிறீர்கள்? உங்கள் நாமங்கள் என்ன சொல்லுங்களென்று கேட்டான். அதற்கு அவர்கள் நாங்கள் அறபியர்களாயிருக்கிறோம். உன்னைவிட மேன்மை பொருந்தியவர்களாயிருக்கிறோம். உன்னை வலாயாக்கவும் உன் மகளை கைபர் தேசத்து இளவரசனோடு நிக்காஹ் செய்துவிடவும் வந்திருக்கிறோம், என்று சொன்னார்கள். இதை அவ்வரசன் கேட்டு கைகளைப் பிசையத் தொடங்கினான். பின்னும் அவன் உலகமேல் ஒரு நாள் வெகு கடினமான நாள் வரும் ஹைதர் என்று பேருடைய அறபியா தேசத்து ஒருவர் இவ்விடம் வந்து எல்லோருடைய மதத்தைத் திருப்பிவிடுவார் என்று சில நாள்களுக்கு முன் ஒரு ஜோசியன் என்னுடன் சொன்ன வார்த்தை சரியாய் வந்ததே. அது இதே நாளாயிருக்கிறதென்று எண்ணி பயந்து நடுநடுங்கி வீட்டுக்குள் போய் ஒளிந்துக் கொண்டான். பின்பு அவன் இவர்களுடன் யுத்தம் செய்ய எல்லா சேனையையும் ஆயத்தமாகும்படி கட்டளை கொடுத்தான். இந்த அரசனுடைய சக்தியை ஹசரத்து மௌலா அலி அவர்கள் அறிந்து சீக்கிரமாய் அசர் நேரத்துடைய பாங்கு சொன்னார்கள். இகாமத்தை ஓதி முசல்லாவை விரித்து இமாமத்து செய்ய நின்றார்கள். இதற்குள் அல்லாஹுத் தஆலாவுடைய குதரத்தால் அந்தப் பாதகனுடைய சேனை செதறிப்போய் விட்டது. அச்சேனையில் அநேகர்கள் செவிடர்களாயும், புத்தி மயங்கினவர்களாயும், மவுனமானவர்களாயும் போனார்கள். ஹசரத்து மௌலா அலி அவர்களோ இருபுறமும் கூர்மையுள்ள வாளைத் தன் எதிரில் வைத்து முழு இருதயத்தோடு தொழுக நின்றார்கள். பின்பு தக்பீரே தஹ்ரீமாவாகிய அல்லாஹு அக்பர் என்று சொன்னார்கள். அல்லாஹுத் தஆலாவுடைய குதரத்தையும் அவன் தன் அடியார்களைக் காப்பாற்றும் விதங்களையும் பாருங்கள். அந்த வாளோ அக்கொடியர்களை வெட்டத்தொடங்கிற்று, இதைக் கண்டு அக்கொடியர்கள் தலை முட்டிக்கொள்ளத்தொடங்கினார்கள். எப்போது சூரத்துல் பாத்திஹாவை ஹசரத்து மௌலா அலி அவர்கள் முடித்துவிட்டார்களோ அப்போது சேனையின் சங்காரம் வெகு அதிகமாய் தொடங்கப்பட்டது. பின்னும் எப்போது ருக்கூ

யில் அவர்கள் போனார்களோ அப்போது போர்ச்சேவகர்கள் புத்தி மயங்கினவர்களானார்கள். பின்னும் எப்போது அவர்கள் சஜ்தாவில் போய்த் தலையை வைத்தார்களோ அப்போது எல்லோரும் தங்கள் தலைகளைத் தரையில் முட்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். பின்னும் மௌலா அலி அவர்கள் சஜ்தாவின் தஸ்பீஹை ஓதி அல்லாஹு அக்பர் என்று சொல்லித் தலையெடுத்தார்கள். இவ்விதமாகவே அவர்கள் நான்கு ரக்அத்துகளையும் முடித்து அல்லாஹுத்தஆலாவின் ஜிக்கிரை அல்லாஹு ஹஸ்பீ என்ற சத்தத்துடன் செய்தார்கள். இச்சத்தத்தை அவ்வரசனுடைய மகள் கேட்டு புத்தி மயங்கித் தன் வெட்கத்தையும் மானத்தையும் எடுத்து எறிந்துவிட்டு அரண்மனையிலிருந்து புறப்பட்டு ஓடிவெளியே வந்து ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய பாதங்களின்மேல் விழுந்து கெஞ்சி மன்றாடி குற்றங்களை மன்னியுங்கள். தங்களுடைய பராக்கிரமத்தையும் மகிமையையும் கருமத்தையும் சகலரும் பார்த்துக்கொண்டார்கள். இப்போது தாங்கள் சேனையின்மேல் கிருபை செய்யுங்கள். அவர்களை விடுதலை செய்யுங்கள். என்னுடைய பிதா நோவாயிருக்கிறான். அவனை சொஸ்தமாக்குங்கள் என்று வேண்டிக்கொண்டாள். இதை ஹசரத்து மௌலா அலி அவர்கள் கேட்டு புன்சிரிப்பு சிரித்து விடுதலைபெற உனக்கு அபேட்சையிருக்குமாகில் எல்லோருக்கும் ஆண்டவன் ஒருவனே இருக்கிறானென்றும், அவனுடைய ரசூல் முஹம்மது ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் என்றும், இதுவே உண்மை என்றும் நீங்கள் எல்லோரும் ஈமான் கொண்டு வருவீர்களானால் அப்போது இந்த அஜாபுகள் நீங்கிவிடுமென்று சொன்னார்கள். அதற்கு அக்குமாரத்தி எங்களை இவ்விதமாகக் கெடுத்துவிடாதேயுங்கள். ஈமான் கொண்டு வருவதின் வாக்குத்தத்தம் நாங்கள் எல்லோரும் செய்கிறோம். கலிமா ஓதி இஸ்லாமாகிறோம் என்றும், தாங்கள் என்னை இரட்சித்து என் புருடனுடன் என்னை நிக்காஹ் செய்துவிடவேண்டுமென்றும், இவ்வித சொகுசான சாரங்கள் நிறைந்த சொற்களைச் சொன்னாள். ஹசரத்து மௌலா அலி அவர்கள் எப்போது இவ்வித சொற்களைக் கேட்டார்களோ அப்போது ஆண்டவன் சன்னதியில் தங்கள் இருகைகளையெடுத்து முனாஜாத்து செய்தார்கள். இவர்களுடைய தோழர்களோ பின்நின்று ஆமீன் என்று சொல்லவும் யாசீன் ஓதவும் தொடங்கினார்கள். அப்போது மயங்கிப்போயிருந்த போர்ச்சேவகர்கள் புத்தி

சுயாதீனத்திற்கு வந்து கலிமா ஓதி அவர்கள் முன் ஒடுக்கத்தோடு நின்றார்கள். அனேக சண்டாளர்கள் ஈமான் கொண்டு வராமல் யுத்தம் செய்ய யுத்தகளத்தில் போய் நின்றார்கள். எப்போது ஷை பாதகர்கள் யுத்தம் செய்ய ஆரம்பமாய்ப் போனார்களோ, அப்போது உடனே ஹசரத்து மௌலா அலி அவர்கள் கல்பக்தார் என்ற பட்டயத்தை உருவி ஹைதரி கர்ஜிதத்தை கர்ஜித்தார்கள். அதனால் சூரர்களுடைய இருதயங்கள் வெடித்து துண்டு துண்டாய்ப் போய்விட்டன. அனேகர்கள் மடிந்து ஜஹன்னம் போய்ச் சேர்ந்தார்கள். அனேகர்களுடைய காது வழியாய் இரத்தமோடி அவர்கள் மனவியாகுலமுள்ளவர்களானார்கள். ஆனால் சிலர்கள் மாத்திரம் ஹசரத்து மௌலா அலி அவர்களுடன் எதிர்க்க முன்வந்து எதிர்த்து அவர்கள்மேல் விழுந்தார்கள். அப்போது ஹசரத்து மௌலா அலி அவர்களோடு வந்த 8-பராக்கிரமசாலிகளும் யுத்தம் செய்ய நின்றார்கள். பின்னும் ஹசரத்து மௌலா அலி அவர்கள் தம்முடைய குதிரையை அதட்டி சேனைக்குள் பாயவிட்டு கர்ஜித்து வெட்டத் தொடங்கினார்கள். அப்போது பட்டயங்கள் வேகமாயும் நெருக்கமாயும் ஒன்றின்மேல் ஒன்று தாக்கத் தொடங்கின. இவ்வித ஸ்திதியில் ஹசரத்து மௌலா அலி அவர்கள் கோபப்பட்டு எப்பக்கம் திரும்பி அடித்துக்கொண்டிருந்தார்களோ அப்பக்கம் ஆயிரம் ஆயிரமானவர்களை வெட்டுண்டு துண்டு இரண்டாக்கிக்கொண்டிருந்தார்கள். பின்னும் எப்போது அந்நீசர்கள் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய சம்சாம் என்ற பட்டயத்தின் அடிபட்டுக்கொண்டிருந்ததைக் கண்டார்களோ அப்போது அவர்கள் அசக்தர்களாய் நாங்கள் எல்லோரும் இஸ்லாமாய்ப் போகிறோம். இவ்வித வெட்டு வெட்டாதேயுங்கள் என்று அழுது சமாதானம் செய்து கலிமா ஓதினார்கள். இத்தருணத்தில் அஸ்தமித்து மக்ரிப்பு நேரம் வந்து சேர்ந்தது. உடனே ஹசரத்து மௌலா அலி அவர்கள் தொழுகையில் நின்றார்கள். இப்படி இக்கேவல புத்துகள் என்ற விக்கிரகங்கள் பூமியில் விழத்தொடங்கின. யாது தொழுகைக்குப் பின் சன்னத்து தொழுது முடித்து அவர்கள் எல்லோரையும் அழைத்து முதலில் அரசனுக்கு அத்தேச இராச்சியத்தை தானமாகத் தந்துபின்பு கைபர் தேசத்து அரசனை அழைத்தார்கள். அவன் விவாகத்திற்காகப் பட்டணத்தை அலங்கரித்து பட்டைகளையும் கடைகளையும் சிங்காரித்து தேசத்தைப் பூங்காவனத்தைப்போலாக்கினான். இருதாத்தாருடைய

சேனைகளும் வரிசை வரிசையாக நின்றிருந்தன. இவ்விவாகத்தால் அவ்வரசர்களுக்குள் இருந்த கபடங்களும் விரோதங்களும் நீங்கிப் போய்விட்டன. விவாகத்திற்காக எல்லா வகையான சாமான்களும் ஆயத்தமாக்கி ஷரியத்தின வகைப்படி. நிக்காஹ் முடித்து குத்பா ஓதி அப்புஷ்பதிரேகையை அவ்விளவரசன் வசம் ஒப்பிவித்து விட்டார்கள். இதின் பின் ஹஜரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய பாதங்களைத் தரிசிக்க மதினமா நகரத்துக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்து, ஹஜரத்து நபிநாயகம் அவர்களைக் கண்டு எல்லாச் சமாச்சாரங்களையும் அறிவித்து பாத்திமா நாச்சியாரையும் இருகண்மணிகளையும் பார்த்தார்கள். இந்தச் சங்கதியை இம்மட்டில் நிறுத்திவிட்டு இப்போது பீபீ ஹனிபத்து அம்மாளுடைய சங்கதியைப் பற்றி கூறுவோம்.

ஹஜரத்து முஹம்மது ஹனிப்பு அவர்கள் பிறந்ததும் அவர் ஹஜரத்து மௌலா அலி அவர்களிடம் வந்து சேர்ந்ததும்.

இப்போது நாம் முஹம்மது ஹனிப்பு என்பவருடைய ஜனன செய்தியைப்பற்றி கூறுகிறோம். எப்போது ஹஜரத்து மௌலா அலி அவர்கள் பீபீ ஹனிப்பத்துவை விட்டுப் பிரிந்தார்களோ அது முதல் ஒன்பது மாதங்களுக்குப்பின் ஒரு நாள் பீபீ ஹனீப்பத்துவுக்கு பிரசவ வேதனை உண்டாய் முஹர்ரம் மாதத்தின் முதல்தேதி யிரவில் ஆண்டவன் கிருபையால் பிரகாச சந்திரனைய முஹம்மது ஹனீபு அவர்கள் பிறந்தார்கள். ஷை பீபீ அவர்களோ இரண்டாம் சிங்கமாகிய அச்சிசுவிற்கு என்ன நாமத்தை வைக்கவேணுமென்று பெருத்த ஆலோசனையில் இருந்தார்கள். இப்படியிருக்கும்போது ஒருநாள் இராத்திரி ஹஜரத்து நபிநாயகம் அவர்கள் அவ்வரண்மனைக்கு வந்து அப்பால் சிங்கத்தின் ஊஞ்சலிடம் நின்று பட்சமாயும் அன்பாயும் அச்சிசுவை எடுத்து முத்தமிட்டு இவனுடைய நாமம் ஹனிப்பு என்று வைக்கும்படிக்கும் இவன் உலகத்தில் அரசாளுவான் என்றும் சொல்லி அவ்வூஞ்சலில் மெதுவாய்ப் படுக்கவைத்துப் போய்விட்டார்கள். இவ்வித சொப்பனத்தை ஷை பீபீ ஹனீப்பத்து அவர்கள் கண்டு நித்திரையினின்று தெளிந்து அளவற்ற ஸலவாத்துகளை ஓதி அப்பால் அச்சிங்கத்தின் நாமம் ஹனீப்பு என்று வைத்தார்கள். இமைகண்ணைக் காப்பதுபோல் இக்குழந்தை யிரவும் பகலும் மிக்க அருமையாய் பாதுகாக்கப்பட்டு மிகுந்த எச்சரிக்கையோடு வளர்ந்து வரப்பட்டது. எப்போது இவர் ஒரு மாத வயதுள்ளவரானாரோ அப்போது ஜனங்கள் இவரைக் கண்டு இவர் ஒரு வருடக் குழந்தையைப்போலக் காணப்படுகிறார் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவர் ஒரு வருட வயதுள்ளவரானாரோ அப்போது பாலசூரியனைப்போல் பிரகாசிக்கத் தொடங்கினார்கள். இவர் இவ்விதமாய் வளர்ந்துகொண்டு எப்போது ஏழு வயதுள்ளவரானாரோ, அப்போது இவர் அப்பட்டணத்தின் குழந்தைகள் எல்லோருஞ்சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்குமிடத்தில் போய் அவர்கள் எல்லோரையும் அடித்து உதைத்துவிழத் தட்டிக்கொண்டிருந்தார். எப்போது பத்து வயதுள்ளவரானாரோ அப்போது கண்ட பக்கங்களில் விழுந்து அடிக்கத் தொடங்கினார். ஆகையால் எல்லாச் சிறுவர்களும் அவரைக் கண்டால் பயந்து அவருடன் விளையாடாமல் இருந்துகொண்டு மிருந்தார்கள். எவனுக்கும் அவருடன் விளையாடவும் எதிர்க்கவும் பலஞ்செலுத்தவும் முடியாமல் இருந்துகொண்டிருந்தது. ஆதலால் அவர்கள் எல்லோரும் அசங்கியமாய் வாயால் அவரைத் தூஷிக்கவும் சோரப்பிள்ளை என்று சகலரும் வசைகூறவுந் தொடங்கினார்கள். அவர் இச்சொல்லைக் காதால் கேட்டபோது அவருடைய இரத்தம் அதிகமாய்க் கொதிக்கத் தொடங்கியது. ஒருநாள் அவர் வெகு ஒடுக்கத்துடன் தன் மாதாவின் சந்நிதியில் நின்று என் பிதாவின் நாமம் என்ன? அவருடைய இருப்பிடம் எது? அவர் என்ன வேலை செய்கிறார் என்று கேட்டார். அதற்கு ஷை பீபீ ஹனீப்பத்து ஓ மாதாவின் உயிரே அதின் விசாரணையின் காரியம் இப்போது உமக்கு என்ன வந்து சம்பவித்தது? என்ன கஷ்டம் அப்படி வந்து சம்பவித்தது என்று சொன்னார்கள். அதற்கு அப்பாலகர் இப்பட்டணத்தின் சிறியோரும் பெரியோரும் என்னைச் சோரப்பிள்ளை யென்ற சொல்லைக்கொண்டு திட்டுகிறார்கள். ஆதலால் ஓ என் மாதாவே! சங்கதியைச் சொல்லுங்கள். அப்படிக்கு இல்லாமல் போனால் நான் என் உயிரை இழந்துவிடுவேன் என்று சொன்னார். இதைக்கேட்டு ஷை பீபீ ஹனீப்பத்து ஓ என் மகனே! இன்று ஒரு பொழுதின் சாவகாசத்தை நீ எனக்குத் தருவாயாக என்று சொன்னார்கள். இதைக்கேட்டு அவர் மௌனமானார். பகல்முழுவதும் விசாரத்தில் கழிந்தது. இரவு வந்து சம்பவித்ததே ஷை பீபீ ஹனீப்பத்து வரு

செய்து இரண்டு ரக்அத்து தொழுது தம்முடைய இருகைகளையும் எடுத்து மறைப்பொருளை அறிகிறவனே! நிர்ச்சந்தேகமாய் என் கருத்தை நீ அறிகிறாயே. ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுக்காகவும் ஹசரத்து பாத்திமா நாச்சியார் அவர்களுக்காகவும் ஹசரத்து மௌலா அலி அவர்களுக்காகவும் நீ என்னுடைய இக்குழந்தையைக் காப்பாற்றுவாயாக. உன்னைவிட்டு நான் எவனிடத்தில் என் சங்கதியைச் சொல்லுவேன். நீயே என் அங்கலாய்ப்பைக் கேட்கிறவனா யிருக்கிறாய். அவ்வேளையும் நீ அவனைக் காத்துக்கொள் என்று சொல்லிக்கொண்டும், அழுதுகொண்டும், துஆ செய்துகொண்டிருந்தார்கள். இவ்விதஸ்திதியில் அப்பரிசுத்தமுடைய மாதுக்கு நித்திரை வந்து மூடிக்கொண்டது. அப்போது ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மௌலா அலி அவர்களுடன் சொப்பனத்தில் வந்து உன் மனதில் என்ன விசாரம், உன்னுடைய பிள்ளைக்கு ஆண்டவன் துணையாயிருக்கிறான் என்று சொன்னார்கள். அப்போது ஷை பீபீ ஹனீப்பஷ தம்முடைய கருத்தை அவர்கள் சன்னதியில் வெளியிட்டார்கள். அதற்கு அவர்கள் ஓ ஹனீபஷ உலகமுழுவதிலும் அறபியாதேசத்து மதினமா நகரம் பேர்பெற்ற இடமாயிருக்கிறது என்றும், அரசாதி அரசரும் நன்மார்க்கத்துக்கு ஒளியானவருமாகிய முஹம்மது முஸ்தபா அவ்விடமிருக்கிறாரென்றும், உன்புத்திரனுக்குநம்முடைய நாமத்தால் எச்சரித்து அவன் கையில் மோதிரமும் குத்துவாளும் கொடுத்து உடனே அனுப்பிவித்துவிடு மென்றும் சொல்லிப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். இதின்பின் ஷை பீபீ நித்திரையினின்றும் விழித்து ஹசரத்து நபிநாயகம் அவர்களின் மேல் சலவாத்தை ஓதி தன் புத்திரனை அழைத்து எல்லாச் சங்கதியையும் சொல்லி எச்சரித்தார்கள்.

இச்சமாச்சாரங்களை ஷை ஹனீப்ஷா கேட்டுச் சந்தோஷப்பட்டு ஓ என் மாதாவே சீக்கிரமாய் ஹசரத்து மௌலா அலியை நான் தரிசிப்பேன் என்று சொல்லி முதலில் எனக்கு அக்கல்பாறையைக் காட்டுமென்று சொன்னார். பீபியவர்கள் அப்பாறையைக் காட்டியபோது, நீளத்தில் 8 கெஜமும், அகலத்தில் 3 கெஜமும், கனத்தில் 5 கெஜமும், நிறையில் 500 மணங்குமாயிருந்த ஷை கல்பாறையைப் பார்த்துக்கொண்டபின் தன் தாயின் பாதங்களை முத்தமிட்டு உத்திரவு பெற்றுக்

கொண்டு குத்துவாளும் மோதிரமும் வாங்கிக்கொண்டு புறப்பட்டார். ஷை பீபீ ஆண்டவன் மேலும், ஹசரத்து நபிநாயகம் அவர்கள் மேலும் தவக்கல் செய்து விலையற்ற முத்துகளையும் இரத்தினங்களையும் கொடுத்து போகும்படி செலவு கொடுத்தார்கள்.

ஹனீப்ஷா பிதாவைக் காணப் புறப்பட்டது.

இப்படி இவர் புறப்படும்போது இவருக்கு வயது பன்னிரண்டு. இவர் பிரயாணப்பட்டுப் போகையில் பாதையில் ஒருஸ்தலத்தில் தங்கினார். அத்தேசத்து அரசன் இஸ்லாமானவனா யிருந்தான். அவன் இவருடைய வருதலைக் கேட்டு எதிர்கொண்டு வந்து வெகு மரியாதையுடன் அவரைக் கூட்டிக்கொண்டு போய் தன் சிம்மாசனத்தின்மேல் உட்காரவைத்து அடிமையைப்போல் தன் கைகளைக் கட்டி அவர்முன் நின்று ஒரு நாள் தெய்வ சிங்கமாகிய தங்கள் பிதாவான ஹசரத்து மௌலா அலி அவர்கள் இவ்விடம் வந்து காபிர்களாயிருந்த எங்களை இஸ்லாமாக்கி எங்கள் கோட்டைக்கு இஸ்லாம் கடு என்று நாமத்தைச் சூட்டிப் புறப்பட்டுப் போனார்கள். நாங்களோ அவர்களுடைய அடிமைகளா யிருக்கிறோம் என்று சொன்னான். சில நாள்கள் அவ்விடமிருந்து அப்பால் ஷை ஹனீப்ஷா மதினமாநகரை நோக்கிப் புறப்பட்டார். இவருக்காக அவ்வரசன் கப்பலை ஆயத்தமாக்கி செலவுக்கும் கொடுத்துக் கப்பலில் ஏற்றிவிட்டான்.

அக்கப்பல் புறப்பட்டு அனேக நாள்களுக்குப்பின் ஒரு தீவுக்கு வந்து சேர்ந்தது. ஹனீப்ஷா அவர்கள் சுகமே கரையிறங்கினார். அத்தீவின் அரசன் இவருடைய வரவை வேவுகாரராலறிந்து அத்தேசத்துப் பிரபுக்களுடன் எதிர்கொண்டு வந்து அவரைத் தன் அரண்மனைக்கு இட்டுக்கொண்டு போய் வெகு மேன்மையுடன் சிம்மாசனத்தின்மேல் உட்காரவைத்துத் தான் வணக்கத்தோடு எதிரில் நின்று மிக்கமரியாதையோடு வேண்டிய சகல உபசாரங்களுஞ்செய்து, அரண்மனையின் உன்னத பாகத்தில் அவருக்கு விடுதி யமைத்து அவரைச் சிலகாலந் தன் அரண்மனையில் தங்கி பிரயாண ஆயாசத்தைத் தீர்த்துக் கொண்டு செல்லும்படி வேண்டிக்கொண்டான்.

ஹனீப்ஷா அவர்கள் அரசன் வேண்டுகோளின்படிக்கு அங்குச் சிலகாலந் தங்கியிருந்தபோது அரசன் இவருடைய முகவசீகரத்தை

யுங் காந்திபொருந்திய தேகத்தின் வனப்பையுங் கண்டு மிக்க வியப்படைந்ததோடு இவருக்கிருக்கும் புத்தி நுட்பத்திற்கும், வீரதீரத்திற்கும், தக்க வயதாகும்போது இவர் ஒப்புயர்வில்லாத சுத்த வீரனும் மிக்க புகழுடையவர் என்று யூகித்துக்கொண்டு அவரிடத்தில் மிக்க அன்புடையவனாகி, ஹனீப்ஷா தன்னிடமிருந்த பிரக்யாதிபெற்ற உஸ்தாதுகளைக்கொண்டு ஹனீப்ஷா அவர்களுக்கு மல்யுத்தம், வாட்போர், ஈட்டிப்போர் முதலிய ஆயுத வித்தைகளையுங் கற்றுக்கொடுத்தான். ஹனீப்ஷாவோ தன் புத்தி சாமர்த்தியத்தால் சொல்ப காலத்திற்குள் யாவற்றிலும் முதல்தரமான தேர்ச்சியடைந்து தன் வித்தைகளைக் கண்டு தனக்கு வித்தை கற்பித்த உஸ்தாதுகளே பிரமிக்கும்படி செய்தார். அதன்பின் அவர் தன் பிரயாணத்தைத் தொடங்க நினைத்து அரசனிடங் கூறியபோது அரசன் ஒரு சேர்த்தியான கப்பலை ஆயத்தஞ்செய்து அதில் வேண்டிய ஆகார முதலிய யாவும் அமைத்து ஹனீப்ஷா அவர்களை யதிலேற்றி மிக்க அன்போடு பிரயாணப்படுத்தி யனுப்பினான்.

அக்கப்பல் சில நாட்களுக்குப்பின் க்ஷேமமாய் அறப்பியா தேசத்தின் கரைக்கு வந்து சேர அங்குக் கரையிறங்கியபின் ஹனீப்ஷா அவர்கள் அத்துறைமுக நகரத்தின் தலைவனைக் கண்டார்கள். அவன் இவருடைய கெம்பீரத் தோற்றத்தையுந் திருமுக விலாசத்தையுங் கண்டதே, மிக்க உலக அநுபவமுடைய முதியோனாகையால், இவ்வாலிபன் சாமானியனன்று. இவன் இராஜகுலத்தில் பிறந்தவனாக வேண்டும். மேலுஞ் சீக்கிரத்தில் இவன் மிக்க பிரக்யாதியுடைய வீரனாயுலகில் பிரகாசிப்பானென் றறிந்துகொண்டு, அவரை மிக்க மரியாதையோடு தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று மிக்க அன்போடு உபசரித்துக் கொஞ்ச காலம் அங்குத் தங்கி இளைப்பாறிச் செல்லும்படி கேட்டுக்கொண்டார். ஹனீப்ஷா அவருடைய அன்பில் கட்டுப்பட்டவராய் அங்குத் தங்கியிருந்த சில காலத்திற்குள் அரபி பாஷையை நன்றாய்ப் பேசக் கற்றுக்கொண்டார். அதன் பிறகு உள்நாட்டில் சுமார் 160-மைல் தூரத்திலுள்ள மதீனமாநகரைநோக்கிப் புறப்பட்டார்கள். சுமார் எட்டு நாள் பிரயாணஞ் செய்தபிறகு ஒரு நாள் மிக்க செழிப்பான பூமியில் மிக உன்னதமான ஒரு நகரம் புலப்பட்டது. ஹனீப்ஷா அதைக் கண்டதும் நாம் நாடிவந்த மதீனமாநகரம் இதுவேயாக இருக்கும். இதில் சந்தேகமில்லை, இதுவே சோதிபொருந்திய இடமாயும், மோட்சத்துக்குச் சமானமான ஸ்தலமாயுமிருக்கின்றது. இதை மோட்சமென்று சொல்வதில் பிசகேயில்லை என்று எண்ணிப் பட்டணத்துக்குள் பிரவேசித்தார்.

ஹனீப்ஷா அவர்கள் பட்டணத்தின் வீதிகளில் சென்றுகொண்டிருக்கையில் தாகவிடாயுண்டாக அதைத் தீர்த்துக்கொள்வதற்காக ஜலம் எங்கிருக்கிறதென்று பார்த்தபோது, ஓரிடத்தில் விசேஷமாய்ப் பறவைகள் பறந்துகொண்டிருப்பதைக் கண்டு அங்கு சென்றார். அந்தவிடத்தில் அநேக வண்ணார்கள் வெயிலில் உடுப்புகளை உலரவைத்துக்கொண்டிருப்பதையும், அநேகர்கள் உடுப்புகளைக் கட்டிக்கொண்டு போக ஆயத்தமாய் நின்றுகொண்டிருப்பதையும் பார்த்து, இதுவோ, தண்ணீர்த்துறையாயிருக்கின்றதென்றும், பிரயாணிகளுக்குச் சவுக்கியஸ்தலமாயிருக்கிறதென்றும் அறிந்து, அவ்வண்ணார்களைப் பார்த்து நீங்கள் யார்? எவ்விடத்தில் இருக்கப்பட்டவர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் "நாங்கள் எல்லோரும் இவ்விடத்தில் குடியிருக்கிறோம். நாங்கள் துணிகளை இவ்விடத்தில் வெளுக்கிறோம்" என்று சொன்னார்கள். அப்போது அவர் எனக்குப் பசியுந் தாகமுமாயிருக்கிறது. புசிக்க ஏதேனுங் கொண்டுவந்து கொடுங்கள். அப்பால் கொஞ்சம் ஜலமுந் தாருங்களென்று சொன்னார். அதற்கு அவ்வண்ணார்கள் நாங்கள் ஏழைகளாயிருக்கிறோம். புசிக்கத்தக்க எங்களிடம் ஒரு ஆகாரமுமில்லை. ஆனால் இந்த மைதானத்தில் ஜலமிருக்கிறது. அது உங்களுக்கு எட்டத்தக்கதல்ல. ஏனெனில் அது ஒரு கிணற்றிலிருக்கும் பொங்கும் ஜலம். அக்கிணற்றின்மேல் ஒரு கல்பாறை மூடப்பட்டிருக்கிறது. அதைத் தூக்க எங்களால் முடியாது. எங்கள் எல்லோரைவிட பலசாலியானவர் ஒருவர் இருக்கிறார். அவர் வந்து அக்கல்லை நாடோறுந் தூக்கிவிடுகிறார். அப்போது நாங்கள் ஜலத்தை வாரிக்கொண்டு அதனால் உடுப்புகளை வெளுக்கிறோம். அதின்பின் அப்பலசாலியானவர் அக்கல்லை அக்கிணற்றின்மேல் மூடிவிட்டுத் தன் வீட்டுக்குப் போய்விடுகிறார் என்று சொன்னார்கள். இதை அவர் கேட்டு நீங்கள் என்னை அந்தக் கிணற்றண்டை கொண்டுபோய் விடுங்கள் என்று சொன்னார். அப்போது அவ்வண்ணார்கள் அவரைக் கூட்டிக்கொண்டுபோய் அக்கிணற்றைக் காட்டினார்கள். அவர் அதைப் பார்த்து ஆண்டவன் நாமத்தையும் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய நாமத்தையும் துதித்து ஹசரத்து நபிநாயகம் அவர்

கரின்மேல் இருந்து ஊதி அப்பாறையின்கீழ் கையைக் கொடுத்து அதைத் தூக்கியெடுத்து ஒருபக்கம் வைத்துவிட்டார். அதின்பின் அக்கிணற்றிற்குள் இறங்கி ஆண்டவன் நாமத்தைச்சொல்லி ஜலத்தைக் குடித்துத் தாகமாறி ஸ்நானமுஞ் செய்து சுகமடைந்தார். ஷை வண்ணார்கள் இதைக் கண்டு "தாங்கள் வெகு பிரயாசையான காரியத்தைச் செய்தீர்கள். உங்களுடைய நாமத்தையும் பிறப்பிடத்தையும் எங்களுக்குக் கூறுங்கள். இப்போது கெடுதி சம்பவிக்காதிருக்கும்பொருட்டு நீர் சீக்கிரத்தில் ஷை பாறையைக் கிணற்றின்மேல் முன்போல் மூடிவிடவேண்டும்" என்று சொன்னார்கள். அதற்கு அவர் "ஓ வண்ணார்களே கிணற்றை மூடுவது என்னுடைய காரியமல்ல. நீங்கள் எல்லோருஞ்சேர்ந்து அதை மூடிவிடுங்கள்" என்று சொன்னார். இதை ஷை வண்ணார்கள் கேட்டு மூடிவிடும் மூடிவிடும் என்று கூக்குரலிட்டார்கள். அப்போது ஹனீப்ஷாவானவர் ஆண்டவன் சத்தியமாய் நான் ஒருபோதும் மூடமாட்டேன் என்று சொன்னார். இதை அவ்வண்ணார்கள் கேட்டுத் தங்கள் பிரயத்தனங்கள் ஒன்றும் நடக்கவில்லையே என்று யோசித்து எல்லோரும் ஒன்றுகூடி ஹனீப்ஷாவை அடிக்கவெண்ணி அவர்மேல் பாய்ந்தார்கள். அப்போது அவர் அவ்விடத்தில் கிடந்த பீலு என்ற மரவேரின் குச்சியாகிய மிஸ்வாக்கைக் கையில் எடுத்துக்கொண்டு கோபத்துடன் அவர்கள் ஒவ்வொருவரையும் அடிக்கத் தொடங்கினார். வண்ணார்கள் அவர் பலத்தின் முன் நிற்கமுடியாதவர்களாய் எல்லோரும் ஓடி ஹசரத்து நபிநாயகம் அவர்கள் சமுகத்தில் வந்து அப்பாலகருடைய சங்கதிகளைக் கூறி முறையிட்டுக்கொண்டார்கள். அதை அவர்கள் கேட்டு, அவ்விடம் போய் நேரில் கண்டு எந்தச் சங்கதியும் அறிந்து வரும்படி உமரே அய்யார் என்பவருக்குக் கட்டளையிட்டார்கள். அவர் ஷை கிணற்றண்டை வந்து வீரியம் நிறைந்த சொரூபமுள்ள ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்ததைக் கண்டு, "நீர்யார், உம்முடைய பிதாயார் சொல்லும். நீரோ பலத்தோடு பாறையைத் தூக்கிவிட்டீர். இப்போது மறுபடியும் அதை மூடிவிடும். நான் சொல்லுவதை நீர் கேளும். அப்படிக்கு இல்லாவிட்டால் நீர் கெடுதியடைவீர். உமக்கு உதவிசெய்வார் இங்கொருவருமில்லை. எனக்கோ புங்கமரத்துக்குச் சமானமான உம்முடைய உயரத்தின் மேல் இரக்கம் வருகின்றது" என்று சொன்னார். இதை ஹனீப்ஷா கேட்டு "இந்த காரியமோ என்னால்முடியாது. நான் செய்யமாட்டேன்" என்று சொன்னார். இதின்பின் ஷை உமரே அய்யார் என்பவர் கபடோபாயத்தாலும் தந்திரத்தாலும் சூதாலும் அவரைத் தன் ஜம்பீல் என்ற பைக்குள் போட்டுக்கொண்டு அதைத் தூக்க முயன்றார். ஆனால் அந்தப் பையோ பூமியைவிட்டு எழும்பவில்லை. மறுபடி தன் முழுபலத்தையும் பிரயோகித்துத் தன்னாலான வரையில் பார்த்தார். அப்படிச் செய்யவே அந்த ஜம்பீல் கிழிந்துபோய்விட்டது. உடனே ஹனீப்ஷா பையிலிருந்து வெளியே வந்துவிட்டார். உமரே அய்யார் அவருடைய கையைப் பிடித்து இழுக்கத் தொடங்கினார். ஆனால் கொஞ்சங்கூட அவரை அசைக்கக் கூடவில்லை. அப்போது ஷை ஹனீப்ஷா அவரை நோக்கி "ஓ மனிதனே! இது உம்முடைய நல்லகாரியமாயில்லை. உம்முடைய முடிவு நன்மையாக இருக்கவேண்டுமானால் உம்முடைய உயிரைக் காப்பாற்றிக்கொண்டு இதைவிட்டுப் போய்விடும்" என்று சொன்னார். உமரேஅய்யார் இவையெல்லாங் கேட்டுத் திரும்பி ஹசரத்து நபிநாயகம் அவர்கள் சமுகத்திற்கு வந்து நடந்த சங்கதி எல்லாவற்றையுந் தெரிவித்துக் கிழிந்துபோன பையையுங் காட்டினார். அப்போது ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் ஹம்ஜா அவர்களின் பக்கமும் அப்பாசு அவர்களின் பக்கமும் பார்க்கவே அவ்விருவர்களும் உத்திரவுபெற்றுக்கொண்டு அக்கிணற்றை நோக்கிச் சென்றார்கள். அவ்விருவருங் கிணற்றின்மேல் மூடப்படும் அப்பாறையின்மேல் உட்கார்ந்திருந்த அப்பால சிங்கத்தைக்கண்டு "ஓ பாலகனே நீ இக்கிணற்றைமூடிவிடு. உன்னுடைய பலத்தைப் பார்ப்போம். நீயோ ஒழுக்கமற்றவனாயிருக்கிறாய். உன் நாமம் என்ன, உன் குலம் எது, நீ சொல்வாயாக. அப்படிக்கு இல்லாமற்போனால் நம்முடைய ஒரு உள்ளங்கை அடி உனக்குப் போதுமானதாயிருக்கும். அதுவோ உன்னுடைய ஆயுளுக்கு முடிவை யுண்டாக்கிவிடும்" என்று சொன்னார்கள். இதை ஹனீப்ஷா கேட்டு "ஓ புத்திமான்களே! நானோ தாகமுள்ளவனா யிருந்தமையால் அந்த அவாவால் அக்கல்லைத் தூக்கிவிட்டேன். நான் ஜலங் குடித்தபின் அந்த அவா நீங்கிவிட்டதால் எனக்கு முன்னிருந்த அந்தப் பலம்போய்விட்டது. இப்போது நான் அப்பாறையைத் தூக்க அசக்தனாயிருக்கிறேன். ஆகையால் நீங்கள் கிருபை செய்து அப்பாறையைத் தூக்கிக்கொண்டு வந்து கிணற்றை மூடிவிடுங்கள். அப்படிச் செய்ய உங்களால் முடியாமல் போகுமானால், அக்கிணற்று எஜமானனையாவது அழைத்து வந்து அதை மூடிவிடும்படி செய்யுங்கள்" என்று சொன்

னூர். இதை அவர்கள் இருவரும் கேட்டுக் கோபப்பட்டு ஹனீப்ஷாவின் அருகில் சென்று ஒருவர் அப்பாலகிருத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டும், மற்றவர் அவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டும் அவரைத் தூக்க முயன்றார்கள். இப்படி இவர்கள் செய்யவே ஹனீப்ஷாவுக்குக் கோபம் வந்து அவர் தம்முடைய கைகளையும் கால்களையும் உதற அவ்விருவர்களும் சுழன்றுபோய்ப் பூமியின்மேல் குப்புற விழுந்தார்கள். ஆயினும் உடனே சமாளித்தெழுந்து நின்று கோபத்தோடு ஹனீப்ஷாவை நோக்கி, "உன் நாமம் என்ன? உன் பிறப்பிடம் எது? உன் அலுவல் என்ன? உன் கபீலா எது? உன் தாய் யார்? உன் தகப்பன் பேர் என்ன?" வென்று கேட்டார்கள். அதற்கு அவர் புன்சிரிப்பாய், "என் பிதாவோ போக்கியமான மனிதனும், என்னுடைய தாயோ துக்கமடைந்தவளாயும் இருக்கிறார்கள். நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் விடையளிக்கேன். நீங்கள் என்னிடம் தோல்வி யடைந்தீர்கள். இப்போது நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள். என்னை யெதிர்த்து யுத்தஞ் செய்யத்தக்க வீரத்தன்மையுள்ளவன் யாரோ அவனை யென்னிடம் அனுப்புங்கள். நான் அவன்மேல் என் பலத்தைச் செலுத்திக் காட்டுகிறேன்," என்று சொன்னார். இதை அவ்விருவர்களும் கேட்டுக் கோபமும் நாணமுமடைந்து அங்கிருந்து தமது சேனைக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் சென்றபின் அங்கிருக்க அவ்வண்ணார்கள் எல்லோரும் ஒருமித்து ஹனீப்ஷாவின்மேல் தங்கள் பலத்தைச் செலுத்தினார்கள். அப்படிப் பலஞ்செலுத்தியும் அவர்களால் அவரை யசைக்கமுடியவில்லை. அவர்கள் கூட்டமாய் அவர்மேல் விழுந்து பிடித்தபோது அவர் ஜலத்தில் குளித்த பறவை தன் இறகுகளிலுள்ள நீர்த்துளிகளை யுதறுவதுபோல் அவர்களை யுதறிவிட்டார். அப்போது அவரைப் பிடித்திருந்த சகலரும் பூமியில் பலவிடங்களில் சிதறிப்போய்க் குப்புற விழுந்தார்கள். அவர்களில் சிலருடைய மண்டைகள் உடைந்தும், சிலர் கைகள் முறிந்தும், சிலர் உயிர் பதைத்தும், சிலர் இடுப்புடைந்தும், சிலர் விலாவெலும்புகள் முறிந்தும், சிலர் காலொடிந்தும், சிலர் தோள்சரிந்தும், சிலர் கழுத்துடைந்தும் அடியற்ற மரங்கள்போல் நாலாபக்கங்களிலும் போய் விழுந்தார்கள்.

இச்சம்பவத்தைக் கண்ட மற்ற வண்ணார்கள் வியப்பும் திகிலுமடைந்து "அய்யோ இவன் மானிடப்பிறவியல்ல. இராக்ஷதனிலும்

பெரிய இராக்ஷதனாயிருக்கிறான்" என்று கூக்குரலிடத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில் இங்கு நடக்கும் சங்கதிகளைச் சமீபத்திலுள்ள நகர ஜனங்கள் கேட்டு வியப்படைந்து அப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ள வாலிபனைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டு துறையண்டைக்கு ஓடிவந்து பெருங்கூட்டமாய்க் கூடினார்கள்.

இதற்கிடையில் ஹனீப்ஷாவின் சாமர்த்தியத்தையும் புயபலத்தையுங் கண்டு வியப்படைந்து நின்ற வண்ணார்கள் இச்சனக்கூட்டத்தைக் கண்டதே அவர்களிடம் முறையிட்டு "இந்தப் பயலைப் பிடித்துச் சிறைப்படுத்துங்கள்" என்றார்கள். ஜனங்கள் ஏகோபித்துக் கூட்டமாய் ஹனீப்ஷாவின்மேல் பாய்ந்து அவரைப் பிடித்திழுத்தார்கள். இத்தனை பேர் பலமும் ஒன்று சேர்த்து உபயோகப்படுத்தப்பட்டும் அவரை யொரு மயிரிழையளவேனும் அப்புறப்படுத்த முடியவில்லை.

ஹனீப்ஷா தன் கரங்களையுங் கால்களையும் உதறியவுடனே அத்தனை பேரும் தூரத்தில் போய் பூமியில் குப்புற விழுந்து தொந்தரவடைந்தார்கள்.

இக்காட்சியைக் கண்ட மற்ற ஜனங்கள் சொல்லொணா வியப்பும் பீதியுமடைந்து ஓகோ இவன் சாதாரண மனிதனேயல்ல. இவன் பலமோ அளவுகடந்ததாயிருக்கிறது என்று பிரமித்து "அய்யா வாலிபரே உமது பெயரென்ன? நீர் யார்? எங்கே போகவந்தீர்? இதுவரையில் நீர் எத்தனையோ மனிதர்களைத் தரையோடு தரையாய் மோதிவிட்டீர். எங்களுக்கோ இனி யும்மை யெதிர்க்கச் சக்தியில்லை. நீர் முன்னே உமது வரலாற்றைக் கூறும்" என்று கேட்டார்கள்.

இவ்வசனங்களைக் கேட்ட ஹனீப்ஷா "நான் ஒரு விஷயத்தைப் பற்றி விசாரிக்கவே யிங்கு வந்தேன். ஆண்டவன் தன் வல்லமையால் நான் யாரென்பதை வெளியிடுவான். நானோ மண் பிறவியா யிருக்கிறேன். பிரயாணியா யிருக்கிறேன். தர்வேஷா யிருக்கிறேன். ஆனால் இப்போது பசியால் என் வயிறு புண்ணாயிருக்கிறது. எனக்கு முதலில் ஆகாரங் கொண்டுவந்து தாருங்கள். அதன் பின் என் வரலாற்றைக் கூறுகிறேன்" என்று சொன்னார். ஜனங்கள் இதைக்கேட்டு உமக்கு எந்தப் பொருள் புசிக்கத் தரவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அவர் "எனக்கு மனிதர்கள் புசிக்கும் அன்னம் வேண்டும்.

வண்ணார்கள் என்மேல் அதிக அநீதங்களைச் செய்தார்கள். நான் உங்களுடன் பொய் சொல்லுகிறதில்லை. நான் இராக்ஷசனுமல்ல, பூதமுமல்ல, தேவதூதனுமல்ல, நான் மனிதப்பிறவியாயிருக்கிறேன்" என்று சொன்னார். அப்போது அச்சனங்கள் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து ரொட்டிகள் கொண்டுவந்து அவர்முன் வைத்தார்கள். அப்படிக் கொண்டுவந்து வைத்த ரொட்டிகளின் நிறையோ அறப்பியா தேசத்து இருபத்திரண்டு மணங்கு இருந்ததென்று சொல்லுகிறார்கள். அந்த ரொட்டிகள் எல்லாவற்றையும் அவர் புசித்துப் பசியாறிய பின் அங்கிருந்த கிணற்றுக்குள் இறங்கி வயிறு நிறைய ஜலத்தையுங் குடித்துவிட்டு வெளியேறி வந்து மறுபடியும் அந்தக் கல்பாறையின் மேல் உட்கார்ந்துகொண்டார்.

அப்போது அங்கிருந்த ஜனங்கள் அவரை நோக்கி "நீர் ரொட்டி சாப்பிட்டபின் உமது வரலாற்றைச் சொல்லுவதாக எங்களிடஞ் சொல்லியிருக்கிறீர். இப்போதோ நீர் வயிறுநிறைய ரொட்டி சாப்பிட்டீர். இனி உம்முடைய விருத்தாந்தத்தைச் சொல்லும். மேலும் நீர் புசித்த இந்தச் சாப்பாடோ ஒருபோதும் மானிடச் சாப்பாடாகாது. ஆனால் இராக்ஷசர்களுடையதும் பூதங்களுடையதுமாயிருக்கின்றது. இருபத்திரண்டு மணங்கு ஒருபிடி அன்னமாய்விட்டதே. பின்னும் வயிறுநிறைய தண்ணீருங்குடித்தீரே. ஜனங்கள் இப்போது எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறார்களே, இப்போது நீர் உம்முடைய நாமத்தையும் வரலாற்றையுங் கூறும். மனிதனானவன் இவ்வளவு ஆகாரத்தைச் சாப்பிட்டுச் சமித்துக்கொள்ளக்கூடாதே என்று சொன்னார்கள். அதற்கு அவர் நான் மனிதனாகவேயிருக்கிறேன். என் பிதாவைப்பார்க்க வெளியே புறப்பட்டிருக்கிறேன். இத்தேசத்தில் அவர் இருப்பதாக எனக்குத் தெரியவருகிறது. நான் அவருடைய ஒரு அடையாளத்தைக் கண்டுபிடித்திருக்கிறேன். நான் எனக்குச் சுதந்தரமான பொருளையும் அடைந்திருக்கிறேன். இந்த வண்ணார்கள் அந்தப் பொருள்களைக் களவாட ஒருமனப்பட்டிருக்கிறார்கள். எல்லோருஞ் சேர்ந்து என்னுடன் சண்டைபண்ணியிருக்கிறார்கள். ஆயினும், ஆண்டவன் கிருபையால் நான் அவர்களைச் சிறையாக்கி விசாரிப்பேன் என்று சொன்னார். பின்பு ஜனங்கள் உங்கள் தகப்பனாருடைய உயரமும், நிறமும், அவருடைய நாமமும் என்னவென்று கேட்டார்கள். அதற்கு அவர் அவர்களுடைய நாமம் எனக்குத் தாயித்தாயிருக்கிறது. அவருடைய அடையாளமும் எனக்குத் தெரியும். அவருடைய திருப்பாதங்களை நான் பார்ப்பேனானால் அவரை முழுமனதோடு அறிவேன். ஆனால் இந்த வண்ணார்கள் திருடர்களாயிருக்கிறார்கள். இப்போது என்னுடன் சண்டை செய்ய எவன் வருவானோ அவன் முதலில் தன் உயிரைக் கைகழுவிவிட வேண்டும். நான் என் பிதாவைக்கண்டுபிடிப்பதற்கு அத்தாட்சி இந்த இடத்திலேயே இருக்கிறது. நான் இவ்விடத்தைவிட்டுப் போகமாட்டேன். ஒருபோதும் போகமாட்டேன். என் பிதாவின் நிறத்தைத் தெரிந்துகொள்வேன் என்று சொன்னார். இதைக்கேட்ட ஜனங்கள் யாவரும் இதில் ஏதோ விசேஷமிருக்கவேண்டும் என்று யோசித்து யாவரும் கூட்டமாய் நகரத்திற்குச்சென்று ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் சமுகத்தில் நின்று வணங்கி நடந்தசங்கதிகள் யாவற்றையும் அறிவித்தார்கள். இந்தச் சமாசாரத்தைக் கேட்டதும், முக்கால வர்த்தமானங்களையும் உணரவல்ல ஞானபானுவாகிய நமது நபிநாயகமவர்கள் முன் நான்குபேர் வந்து நான்கு விஷயங்களைப்பற்றி முறையிட்டுக்கொண்டதையும் அந்தக்ஷணம் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திலிருந்து ஜிப்ரயீல் அலைஹிவசல்லம் அவர்கள் கொண்டுவந்த கட்டளையையும், தாம் அதன்படியே ஹசரத்து மௌலா அலியவர்களை யனுப்பியதையும், அவர்கள் சென்று திரும்பிவந்து, பீபி ஹனீப்பம்மையை நிகாஹ் செய்துகொண்டது முதலிய சங்கதிகளைத் தம்மிடம் கூறியதையும் ஆகிய யாவற்றையும் சிந்தித்தார்.

இவர் சிந்தித்த மாத்திரத்தில் ஜிப்ரயீல் அலைஹிவசல்லம் ஆண்டவனுடைய கட்டளையைக் கட்டளைப்படி ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களிடம் வந்து ஹனீப்ஷா அவர்கள் மௌலா அலீ அவர்களுடைய புத்திரன் என்ற இரகசியத்தை வெளியிட்டு, அவருடைய அடையாளம் முதலிய யாவற்றையும் தெரியப்படுத்தினார். ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் சொன்னதை நபிநாயகம் அவர்கள் கேட்டு மனதில் சந்தோஷமடைந்து மௌலா அலியவர்களை யழைத்து நடந்த வர்த்தமானங்களைக்கூறி கிணற்றண்டை சென்று அச்சிறுவனைக் கண்டறிந்துகொள்ளும்படி யனுப்பிவிட்டுத் தாங்களும் தங்கள் அஸ்ஹாபுகளுடன் பின்சென்றார்கள். மௌலா அலியவர்கள் போகிறார்களே, இனி என்ன நடக்கிறதோ பார்ப்போமென்று மிக்க ஆவலோடு ஜனங்களெல்லாம் அவர்களைப் பின்பற்றிச் சென்றார்கள்.

ஹசரத்து மௌலா அலி ஹனீப்ஷாவுடன் குஸ்தி செய்தது.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய கட்டளை பெற்றுக்கொண்டு அக்கிணற்றண்டை போய் ஹனீப்ஷா அவர்களுடைய கெம்பீர உருவத்தையும், இளஞ்சூரியன் போன்று பிரகாசிக்கும் முகவிலாசத்தையும், களங்கமற்ற உள்ளத்தையும், எதற்கும் அஞ்சாத சுத்தவீரத்தன்மையையுங் காட்டும் நயனங்களின் பார்வையையும், அவர் தேகத்தில் பலம் அமைந்திருக்கும் இலக்ஷணத்தையுங் கண்டு, தன் மனதிலுண்டான வியப்பையுஞ் சந்தோஷத்தையும் அடக்கிக்கொண்டு, கோபத்தோடு அவர்முன் சென்று நின்று "ஓ அகங்காரமுடைய சிறுவனே இதோ நான் உன் கொலைஞனாக இங்கு வந்திருக்கிறேன். இப்போது நீ இந்தப் பாறையைவிட்டுச் சீக்கிரம் எழுந்து நில். இல்லாவிட்டால் பிடித்துவிழத் தட்டுவேன் என்று இம்மட்டுஞ் சொல்லி தெய்வசிங்கம் கர்ஜித்தார். இச்சத்தத்தால் பூமியும் வானமுங் கிடுகிடென நடுங்கின. இதின்பின் இரண்டாவது தடவையுங் கர்ஜித்தார். அப்போது அதை ஹனீப்ஷா கேட்டு ஓ என் பரிசுத்த நாயனே என்று சொன்னார். பின்னும் அவருக்குள் ஹைதரி கொதிப்பு வரவே பூமிமுழுமையும் தன் புத்தியை இழந்துவிட்டது. இதின்பின் ஹசரத்து மௌலா அலி அவர்கள் எதிரில் வந்து நிற்கவே மனிதர்களும் உயிர் பிராணிகளும் நடுநடுங்கத் தொடங்கினார்கள். பின்பு அவர்கள் அப்பாறையை மின்னலுக்கு ஒப்பாகச் சீக்கிரமாய் தூக்கிவைத்துவிட்டு ஹனீப்ஷாவுடைய கழுத்தைப் பிடித்து அய்யோ ஓ பாலகனே! நீ இளம்பருவமாயிருக்கிறாய். பளபளப்புள்ள உன் முகத்தை மண்ணுக்குள்ளாக்க எனக்கு உன் இளம்பிராயத்தின்மேல் இரக்கம் வருகின்றது. அய்யோ உன் சரீரம் இன்னும் பூரணமாய் வளரவில்லையே. இதற்குள் உன் ஆயுசு முடியப்போகிறதே. நீ ஏன் இங்கு வந்தாய்? என்று கேட்டார்கள். அப்போது ஹனீப்ஷா மௌலாஅலி அவர்களை நோக்கி "நான் இதைவிட்டுப் போகமாட்டேன். நான் என் தந்தையைத் தேடிவந்திருக்கிறேன்" என்றார். இதின்பின் ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஹனீப்ஷாவுடைய இருகைகளைப் பிடிக்கவே அவரும் முட்டிகளைப் பிடித்துக்கொண்டார். பின்பு ஹசரத்து மௌலா அலி அவர்கள் கைகளை விட்டுவிட்டுப் புஜங்களைப் பிடிக்க அவரும் முட்டிகளை விட்டுவிட்டு இடுப்பைப் பிடித்தார். இதின்பின் ஹசரத்து மௌலா அலி அவர்கள் புஜங்களை விட்டுவிடவே அவரும் இடுப்பை விட்டுவிட்டார். அப்பால் இருவருந் தங்கள் பலத்தைப் பரீட்சை செய்யத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் இருவரும் சரிசமானமாயிருந்தார்கள். மலாயக்குகளோ வானங்களிலிருந்து இக்குஸ்தியைப் பார்த்துக்கொண்டும் இருபேர்களின்மேல் சிலாக்கியமும் சாபாசும் செய்துகொண்டுமிருந்தார்கள். ஹசரத்து மௌலா அலி அவர்களும் ஹனீப்ஷாவும் குஸ்தி செய்ய ஆரம்பித்து இருவரும் தோள்களையும் தொடைகளையும் தட்டிக்கொண்டு நின்ற நிலையிலிருந்து பெயராமலிருந்துகொண்டு ஒருவரை யொருவர் விழத் தட்டுவதற்காகச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த வேடிக்கையை ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் பார்த்து மர் ஹபாலக் மர் ஹபா என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இவர்களிருவருக்கும் நெடுநேரம் குஸ்தி செய்தும் வெற்றி தோல்வி கிட்டவில்லை. இருவரும் களைப்படையாமலே குஸ்தி செய்துகொண்டிருந்தார்கள். அஸ்ஹாபுகளோ ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடன் சேர்ந்து எல்லோரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் ஹசரத் மௌலா அலி அவர்களுக்குக் கோபம் வந்து இந்தச் சிறுபயலோடு நாம் இந்நேரம் போராடிக்கொண்டிருப்பது நமது வீரத்தன்மைக்கு இழிவல்லவோ வென்றெண்ணி அடியுண்ட சிங்கம்போல் கர்ச்சித்து ஓர் ஹுங்காரமிட்டு ஹனீப்ஷாவுடைய முட்டிகளில் கைகொடுத்து அவரைச் செண்டுபோல் தன் தலைக்குமேல் தூக்கிச் சக்கரமாய்ச் சுழற்றிப் பூமியின்மேல் விழத்தட்டினார். அப்போது ஹனீப்ஷா பூமியின்மேல் மல்லாந்து விழுந்தார். ஹசரத்து மௌலா அலி அவர்கள் உடனே பாய்ந்து ஹனீப்ஷாவின் மார்மேல் தன் முழங்காலை யூன்றிக்கொண்டு, அவர் மடியிலிருந்த குத்துவாளை எடுத்து உறையிலிருந்து வெளியாக்கிக் கரத்தில் வாங்கிக்கொண்டார். இதற்குள் ஹனீப்ஷா சற்று சமாளித்து ஹசரத்து மௌலா அலியுடைய கையிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டி தன்னாலான சாமர்த்தியமனைத்துங் காட்டிப்பார்த்தார். முடியவில்லை. ஹசரத்து மௌலா அலியவர்கள் மறுபடி கர்ச்சித்து தன் கையிலிருந்த உடைவாளால் ஹனீப்ஷாவின் நெஞ்சில் குத்தக் கையை நீட்டினார். அச்சமயத்தில் ஹனீப்ஷா உதவியற்றவராய் ஆண்டவன் சமூகத்தில் அல்லாஹு அக்பர் என்று

முத்தமிட்டார். பின்னும் அவர் இருலோக அரசராகிய ஹஜரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடையவும், மௌலா அலி அவர்களுடையவும், பாத்திமா நாச்சியார் அவர்களுடையவும், இமாம் ஹஸன் அவர்களுடையவும், இமாம் ஹுஸைன் அவர்களுடையவும் நாமங்களை ஒரு சத்தத்தோடு கூவி என் இருதய ஆசை என் மனதிலேயே இருந்துவிட்டது. என்னுடைய வயதெல்லாம் முடிந்து போய்விட்டது என்று கூறிவிட்டு, ஹஜரத்து மௌலா அலி யவர்களை நோக்கி, "நீர் என் வஸியத்து செய்யீர். சீக்கிரமாய் குத்துவாளை என்மேல் செலுத்திவிடும்" என்று கூறிவிட்டு "ஓ முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களே! தாங்கள் உண்மையான நபியாயிருக்கிறீர்கள். நான் தங்களுடைய பாத தரிசனையால் மஃரூபாய்ப் போனேன். ஓ இருலோக பெரியவரான ஹஜரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களே! தாங்கள் என் தந்தையா யிருக்கிறீர்கள். நான் தங்களுடைய பாத தரிசனத்தால் மஃரூபாய் விட்டேன். இப்போது நான் ஹஜருடைய முசாபிராய்ப் போனேன். இப்போது நான் உயிர் பற்ற அசக்தனாயிருப்பதற்குத் தாங்களே சாட்சியாயிருங்கள். இவ்விடத்தில் என்னோடு சம்பந்தமுடையவன் ஒருவனுமில்லை. நானே என் தேசத்தைவிட்டு பிரயாணியாய் வந்து கிடக்கிறேன். துக்கம் நிறைந்தவனா யிருக்கிறேன். உதவியற்ற முசாபிரா யிருக்கிறேன். என்னுடைய இருதயமோ விசனத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறது. மலக்குகளோ என்னுடைய வேடிக்கையைப் பார்க்க வந்திருக்கிறார்கள். ஆண்டவன் என்னுடைய ஷஹீதின்மேல் பார்வையுள்ளவனா யிருக்கிறான். என்னுடைய மாதாவோ எனக்கு அடையாளங்களைக் காட்டினாள். இவைகளில் ஒன்று கல்பாறையா யிருக்கிறது. நான் என் பிதாவைத் தேடிக்கொண்டு இங்கு வந்தபோது இந்த இடத்தில் ஒரு கல்பாறையைக் கண்டேன். இதைக் கண்டவுடன் இந்த இடத்தில் அவசியமாய் என் பிதாவாகிய ஹைதரானவர் இருக்கிறார் என்று நான் நிச்சயமாய்த் தெரிந்துகொண்டேன். இவ்வளவே என் கதை. ஓ என் கொலைஞனே! நீ என் சகாயமாயிருக்கிறாய். நீ உன் அலுவலை இனி சீக்கிரமாய் நிறைவேற்று. நான் [illegible]மடையும்படி நீ என்னைக் குத்துவாளைக்கொண்டு கொன்றுவிடு" என்றார்.

இவை எல்லாவற்றையும் ஹைதர் அவர்கள் கேட்டு மனம் நொந்து "ஓ சிறுவனே உன் தாயார் கொடுத்த அடையாளங்கள் என்னென்ன விருக்கின்றனவோ அவைகளை எல்லாம் நீ என்னுடன் சொல்" என்று சொன்னார்கள். அப்போது ஹனீப்ஷா "ஓ என் பகைவரே! செவி கொடுத்துக் கேளும். உம்முடைய கையிலிருக்கிற என்னுடைய குத்துவாளானது கனம் பொருந்திய என் பிதாவுடையதாயிருக்கிறது. அதின்மேல் அவர்களுடைய திருநாமம் கொத்தப்பட்டிருக்கிறது" என்று சொன்னார். ஹஜரத்து மௌலா அலி அவர்கள் குத்துவாளை நோக்கி அதன்மேல் தன் பெயர் கொத்தப்பட்டிருப்பதைக் கண்டு கொண்டு ஹனீப்ஷாவை நோக்கி "இன்னும் என்ன அடையாளமிருக்கிறது?" என்று கேட்டார். ஹனீப்ஷா "இதோ என் தந்தை யென் தாயிடம் தந்த கணையாழி என் விரலிலிருக்கிறது" என்றார்.

ஹஜரத்து மௌலா அலி அவர்கள் இதைக் கேட்டு "அந்த மோதிரத்தைக் கழற்றி என் கையில் தா. நான் உனக்கு உன்னுடைய பிதாவாகிய மௌலா அலி அவர்களுடைய தரிசனம் கிடைக்கும்படி செய்கிறேன். நான் உன்னை ஒருபோதும் கொல்லமாட்டேன் என்று சொன்னார்கள். இதை [illegible] ஹனீப்ஷா கேட்டு உடனே தன் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார்.

அப்போது அவர்கள் அம்மோதிரத்தைப் பார்த்தார். அதில் தன் நாமம் இருப்பதைக் கண்டு மனதில் அடங்கொணா வியப்புற்று சந்தோஷமுமடைந்தவராய், சட்டென்று குனிந்து "ஓ என் அருமையான குழந்தையே! என்று ஹனீப்ஷாவைத் தூக்கி ஆலிங்கனஞ் செய்து கொண்டு அவருடைய உச்சியில் முத்தமிட்டு "என்னை பெருமையோடும் ஆவலோடும் காணவந்த என் புதல்வனே! நானே உன்னுடைய பிதா. ஆண்டவன் மிக்க தயவோடு உன்னை யென்னிடம் கொண்டுவந்து சேர்த்ததற்காக அவனுக்கு எப்போதும் நன்றியுள்ளவனா யிருக்கிறேன்" என்றுகூறி ஹனீப்ஷாவை நபிநாயகம் அவர்கள் சமூகத்திற்குக் கொண்டுபோய் அவர்களுடைய தாமரைபோன்ற திருப்பாதங்களில் கிடத்தினார். நபிநாயகம் அவர்கள் ஹனீப்ஷாவை யன்போடு எடுத்து மிக்க சந்தோஷத்தோடு ஆசிர்வதித்தார்கள். அதன்பிறகு ஹஜரத் மௌலா அலியவர்கள் ஹனீப்ஷாவை யழைத்துச் சென்று அங்குள்ள எல்லாரையும் தரிசிக்கச் செய்தார்கள்.

பிறகு யாவருஞ் சந்தோஷ ஆரவாரத்தோடு நகரத்திற்குச் சென்று பின் ஹைதர் மௌலா அலீயவர்கள் ஹனீப்ஷாவை பீபீ பாத்திமா நாச்சியார் அவர்களின் பாதங்களில் கிடத்தி, இவன் நமது புத்திரனாகும் என்றார்கள். ஸ்திரீ ரத்னமாகிய அவ்வுத்தமி மிக்க சந்தோஷத்தோடு ஹனீப்ஷாவுக்கு நல்வரவு கூறி ஆசீர்வதித்தார்கள். பிறகு ஹஸரத்து இமாம் ஹஸனைன், இமாம் ஹுஸைன் இவர்களையும் ஹனீப்ஷா தரிசிக்கச் செய்யப்பட்டார். அவர்கள் இவரைத் தங்கள் கூடப் பிறந்த சகோதரர்போலவே பாவித்து இவர்மேல் அன்புகொண்டார்கள்.

அன்றுமுதல் ஹஸரத் மௌலா அலீயவர்கள் ஹனீப்ஷாவைத் தன் மாளிகையிலேயே வைத்துக்கொண்டு அவருக்கும் இன்னும் வேண்டிய சகல சாத்திர வித்தைகளையுங் கற்பித்துக்கொடுத்தார்.

ஹனீப்ஷா தேசசஞ்சாரஞ் செய்தல், விவாகஞ் செய்துகொள்ளல்.

ஹனீப்ஷாவுக்குப் பதினெட்டுப் பிராயம் வந்தபோது அன்னிய தேசங்களைப் போய் பார்வையிட்டுத் தன் உலகஞானத்தை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், வனாந்தரங்களில் சென்று வேட்டையாட வேண்டுமென்றும், அவாவுடையவராகித் தன் தந்தையாகிய ஹஸரத்து மௌலா அலீ அவர்கள் சமுகத்தில் வெகு மரியாதையுடன் சென்று நின்று மிருதுவசனமாய் இருலோக கருத்தாக்களின் கலீபாவானவர்களே! தங்கள் உத்தரவு கிடைக்குமானால் பல தேசங்களைச் சுற்றிப் பார்க்கவும், வனாந்தரங்களில் போய் வேட்டையாடவும் ஆவல்கொண்டவனாயிருக்கிறேன் என்று சொன்னார். ஹஸரத்து மௌலா அலீ அவர்கள் அதைக் கேட்டு சந்தோஷமுற்று, "நல்லது நீ கொண்ட ஆவல் தகுதியானதே. அவ்வாறே உன் விருப்பப்படி வேட்டைக்குப் போய்வர உனக்கு அனுமதி யளிக்கிறேன். ஆனால் உனக்கு ஒரு வசியத்து கூறுகிறேன். அதாவது நீ ஒருபோதும் ஷர்பத்து பானம் பண்ணலாகாது" என்று சொன்னார்கள். அதற்கு ஹனீப்ஷா தங்கள் கட்டளைப்படியே நடந்துகொள்ளுகிறேன் என்று சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு குதிரையின்மேலேறி மதீனமா நகரைவிட்டுப் புறப்பட்டார். அச்சங்கதியை யறிந்த ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹஸரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹனீப்ஷாவிடம் வந்து நீர் எங்களை விட்டு எங்கே போகிறீரென்று கேட்டார்கள். அதற்கு அவர் நான் பிதாவிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு தேசங்களைச் சுற்றிப்பார்க்க போகிறேன் என்று சொன்னார். இதைக் கேட்டு அவ்விருவர்களுஞ் சற்று நாங்கள் சொல்லுவதை நீர் கேளும். நாங்களும் பிதா அவர்களிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு உம்முடன்கூட வருகிறோம். நீர் சற்றுநேரந் தாமதியும் என்று சொல்லித் துரிதமாய்ப் பிதாவின் சமுகம் வந்து தந்தையே ஹனீப்ஷா செல்வதைப்போல் பல தேசங்களையுஞ் சுற்றிப்பார்க்க எங்களுக்கும் ஆவலாயிருக்கிறது. தயவு செய்து அனுமதி யளித்தால் நாங்களும் அவரோடு சென்று பார்த்து வருவோம் என்று கேட்டு உத்தரவுபெற்றுக்கொண்டு ஹனீப்ஷாவிடம் வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு மூன்று சகோதரர்களும் ஒன்றாய்க்கூடிப் புறப்பட்டு வனாந்தரங்களையும் மலைகளையுங் கடந்து ஒரு மலையடிவாரத்தில் வந்து சேர்ந்தார்கள். அந்த இடத்திலோ மூன்று பாதைகள் பிரிகின்றன. பின்னும் அந்த இடத்தில் ஒரு கல் நாட்டப்பட்டிருந்தது. அக்கல்லில் ஒவ்வொரு பாதையின் சங்கதிகளைப்பற்றியும் எழுதப்பட்டிருந்தது. அதாவது எவன் வலதுபக்க பாதை வழியாய் செல்லுவானோ அவன் மறுபடியுஞ் சுகமே தன் தேசம் வந்து சேருவான் என்றும், எவன் மத்தியிலுள்ள பாதை வழியாய்ப்போவானோ அவன் சிறப்போடும் சந்தோஷத்தோடும் தன் வீட்டுக்கு வந்து சேருவானென்றும், பின்னும் எவன் இடதுபக்க பாதை வழியாய்ப்போவானோ அவன் பலவகையான சமாச்சாரங்களைக் கேள்விப்படுவதுமன்றிப் பயங்கரமான இக்கட்டுகளிலெல்லாஞ் சிக்கிக் கடைசியில் வெகு பாக்கியங்களுடன் வீடு வந்து சேர்வான். ஒருவர் செல்லும் வழி யின்னொருவர் செல்லக்கூடாது என்றும் எழுதப்பட்டிருந்தது.

அவற்றை வாசித்துப் பார்த்த மூவரும் விதியில்லை, நாம் பிரிந்துதான் போகவேண்டும். ஆனால் ஆண்டவன் கடாக்ஷத்தால் திரும்பி வரும்போது மூவரும் இவ்விடத்தில் சந்தித்து ஒன்றாய் வீட்டிற்குப்போக வேண்டும் என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். பிறகு யார் எந்த வழியிற் செல்வது என்பதைப்பற்றி சிந்தித்தபோது, ஹஸரத்து ஹஸன் அவர்கள் பயங்கரமுள்ள பாதை வழியாய் போய்ச் சீக்கிரமாக நான் மறுபடியும் திரும்பி வருகிறேன் என்று சொன்னார்

கள். ஹசரத்து ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நான் நடுவழியாய்ப் போய் ஆண்டவன் கிருபையால் மறுபடியும் திரும்பி வருகிறேன் என்று சொன்னார்கள்.

அவ்விருவரும் சொன்னதை ஹனீப்ஷா அவர்கள் கேட்டு இருவரையும் நோக்கி "ஆண்டவனுக்காகவும் நபியாண்டவர்களுக்காகவும் இடது பக்கமுள்ள வழியில் செல்லும்படி எனக்குத் தாங்கள் இருவர்களும் உத்தரவு தரவேண்டும். பிரமாணிக்கமாய் நான் சீக்கிரத்தில் தங்கள் சமுகம் வந்து சேருவேன். என்னைத் தாங்கள் ஆண்டவன் வசம் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அப்போது அவ்விருவர்களும் அவ்விதமாகவே உத்தரவு கொடுத்தார்கள். அதின் பின் ஹசரத்து ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நடுப்பாதை வழியாய்ச் செல்லத் தொடங்கினார்கள். ஹசரத்து ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களோ வலது பாதை வழியாய்ச் சென்றார்கள். ஹனீப்ஷா அவர்களோ இக்கட்டுள்ள இடதுபாதை வழியில் பிரவேசித்தார்கள். மூவரும் இவ்வாறு பிரிந்து சென்று சில காலங் கழித்து ஹசரத்து ஹசன் அவர்களும் ஹசரத்து ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் அனேக நாடு நகரங்களைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து அந்த மூன்று பாதைகள் கூடுமிடத்தில் சந்தித்தார்கள். அவர்களிருவரும் ஹனீப்ஷா அவர்களுக்காக நெடுங்காலம் எதிர்பார்த்தும் அவர் வாராததைக்கண்டு துயரத்தோடு வீட்டுக்குத் திரும்பினார்கள். அவர்கள் தாங்கள் போய்ப் பார்த்து வந்த சகல விசேஷங்களையும் ஹனீப்ஷா இன்னும் வாராமலிருப்பதையும் ஹசரத்து மௌலா அலி அவர்கள் சமுகத்தில் வெளியிட்டார்கள். அதற்கு அவர்கள் நாளை ஆலோசனை செய்துகொள்ளலாம் என்று சொன்னார்கள்.

ஹனீப்ஷா கத்ருன் என்பவனோடும் அம்லாக்கு என்பவனோடும் யுத்தம் செய்தது.

இப்போது நாம் இடது பக்கம் பாதையே சென்ற ஹனீப்ஷா அவர்கள் சங்கதி என்னமாயிற்றென்று பார்ப்போம்:—

ஹனீப்ஷா அவர்களோ வனாந்தரத்தில் தனிமையான முசாபிராய்ப் பாதையே நடந்துகொண்டிருந்தார். அப்பாதையில் அவர்கள் மானிடப்பிறவியைக் கண்டதேயில்லை, ஆனால் அநேக பறவைகளையும் காட்டு மிருகங்களையும் பார்த்துக்கொண்டே சென்றார். அன்று பொழுது அமர்ந்து இரவு வரவே வானத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கின. அப்போது அவர் பிரயாண ஆயாசத்தால் ஒரு மரத்தடியில் போய்ப் படுத்துக்கொண்டார். ஆனால் அவருடைய கண்கள் மூடப்பட்டிருந்தாலும் இருதயம் விழித்துக்கொண்டு ஆண்டவன் தியானத்திலிருந்தது இவ்விதமாக அவ்விரவு விசாரத்திலும் ஆண்டவன் தியானத்திலும் கழிந்தது. பொழுது விடிந்ததும் அவர்கள் ஒது செய்து இரண்டு ரக்அத்து தொழுது முடித்து தமது இரண்டு கைகளையும் கிப்லா பக்கம் எடுத்து ஓ ஆண்டவனே, எல்லாப் பிராணிகளையும் உன் வசமாக்கிவிடு. நான் முசாபிராயிருக்கிறேன், எனக்கு உன் ரஹ்மத்தைக் காட்டு. நான் மனத்திருப்தியாய்க் கொண்டு போகும்படிக்கும், என் சகோதரர்களுடனும், என் பிதாவுடனும் சமாச்சாரங்களைச் சொல்லும்படிக்கும், நீ எனக்கு அற்புதமான தோழ்மைகளைத் தந்தருளுவாயாக. பின்னும் இந்தக் கானகத்திலும் எனக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றுவாயாக என்று துஆ செய்து முடித்தார். பின்பு அவர்கள் அதிட்டத்தின் மேல் பாரம் போட்டுத் தன் இடுப்பைக்கட்டி குதிரையின் மேலேறி வல்லாஹு யப்அலு மாயஷாவு என்று ஓதி (அல்லாஹுத்தஆலா என்ன விரும்புகிறானோ அதை அவன் செய்கிறான்.) அனேக ஸ்தலங்களைக் கடந்துபோய்க் கொண்டிருந்தார்.

இப்படிச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு மேட்டின்மேல் ஏறிய போது திடீரென்று ஒரு நேர்த்தியான பூஞ்சோலை அவர் கண்ணுக்குப் புலப்பட்டது. அப்பூஞ்சோலையின் வனப்பையும், விஸ்தாரத்தையும், அதன் மத்தியில் தோன்றும் பிரகாசம் பொருந்திய ஒரு கட்டடத்தையும் கண்டு அந்தப் பூங்காவனத்தை நன்றாய்ப்பார்க்க ஆசையுள்ளவராய், குதிரையை ஒரு விருக்ஷத்தில் கட்டிவிட்டு அதற்குள் பிரவேசித்தார்.

சற்று நேரத்திற்குள் ஹனீப்ஷா அங்குத் தோன்றிய கட்டடத்தினருகில் சென்று பார்த்தபோது அது மகா உன்னதமான ஒரு பெரிய மண்டபமாயிருந்தது. அவர் அம்மண்டபத்திற்குள் பிரவேசித்தார். அம்மண்டபத்தில் வெள்ளியாலும் தங்கத்தாலும் அழகிய சித்திர வேலைகள் செய்யப்பட்டிருந்தன. அநேக திரைகளும் அதில் விடப்பட்டிருந்தன. அம்மண்டபத்தை அவர் சுற்றிப்பார்த்தபோது அங்கு

வெள்ளி முளைகளும், தங்கஆணிகளும் ஒவ்வொரு இடங்களிலும் அறையப்பட்டிருக்கதையும், ஏழு குதிரைகள் விடப்பட்டிருக்கதையும் கண்டு, அவற்றிற்குள் சென்று பார்க்க ஆரம்பித்தார். ஒருவிடத்தில் பிரவேசித்தபோது அங்கு ஒரு வயதுசென்ற கிழவன் சிம்மாசனத்தின் மேலுட்கார்ந்துகொண்டிருந்தான். அவர் அவனைக் கண்டு முதலில் சலாம் செய்தார். அந்த மூடனான கிழவனோ அதற்குப்பதில் செய்யவில்லை. இதின்பின் அவர் அங்கிருந்த மேடைமேல் ஏறி அங்குமிங்குமாகப் பார்க்கத் தொடங்கினார்.

சிம்மாசனத்தில் இருந்த அக்கிழவன் நாமம் கத்ருன். அவன் ஹனீப்பாவை சகசோதியான ரூபமுள்ளவராகக் கண்டு "ஓ மனிதா, முஹம்மதிய நீ யிட்டவர். நான் உன்னை அறிந்தேன். இந்த சலாமோ முஹம்மதிய சலாமா யிருக்கிறது என்று நான் தெரிந்துகொண்டேன். நீ இப்போது என்னுடைய இந்த விக்கிரகத்துக்கு முன் சஜதா செய்வாயாக. அப்படி நீ செய்யாவிட்டால் நான் இப்போதே உன்னுடைய தலையை உடலிலிருந்து வீசிவிடுவேன்" என்று சொன்னான். இதை ஹனீப்பா கேட்டு மிக்க கோபமடைந்து அவ்விக்கிரகத்தைத் தன் கையால் தூக்கிப் பூமியின்மேல் மோதி யடித்துவிட்டார். அப்போது அதின் தலை உடைந்தது. தேகமோ மண்ணில் விழுந்தது.

அப்போது அந்த கத்ருன் என்பவன் தன்னுடைய ஸ்திதி இவ்விதமாய்ப் போனதைக்கண்டு அவரை வைதுகொண்டே தன் அரண்மனையைவிட்டு ஓடத் தொடங்கினான். அப்போது உடனே ஹனீப்பா அவனைக்கொல்ல பின் தொடர்ந்தபோது அவன்தன் வாயைத் திறந்து "ஓ சூரரே சய்யதுமார்கள் ஓடுகிறவனைக் கொல்லுகிறதில்லையே, அது அவர்களுக்கு வழக்கமில்லையே. அப்படியிருக்க ஏன் நீர் என்னைக் கொல்ல வருகிறீர், கொல்லாதேயும்" என்றான். இதை அவர் கேட்டுத் திருப்பி அவ்வரண்மனைக்கு வந்துவிட்டார். இதின்பின் அவர் சற்று ஆலோசித்து அவனோ மானிடனாயிருப்பதில்லை. இராக்ஷசனாயிருக்கிறான். உண்மையாகவே அவன் நாளைய தினம் உதவி பெற்றுக்கொண்டு யுத்தத்துக்கு வருவான் என்று அறிந்துகொண்டு ஆயத்தமாயிருந்தார்.

அவர் எண்ணியபடியே அம்மூடன் வெகு சீக்கிரமாக அளவற்ற சேனையைத் திரட்டிக்கொண்டு வந்து யுத்த நக்காரு அடித்தான். இந்த நக்காருவின் சத்தத்தை ஹனீப்பா கேட்டு யாதொரு விசாரமும் பயமும் மனதில் கொள்ளாமல் யுத்தம் செய்ய குதிரையின் மேல் ஏறி அச்சேனையின் எதிரில் வந்துநின்றார். அப்போது மூடனாகிய கத்ருன் என்பவன் தன் அருகில் நிற்கும் தனது குமாரனை நோக்கிக் கோபத்தோடு இதோ நம்மெதிரில் நிற்கும் இம்மனிதனை நீ சீக்கிரமாய்ப் பிடித்துக்கொண்டுவா. இவனே நாலு மணங்கு நிறையுள்ள என் விக்கிரகத்தைப் பூமியில் எறிந்து உடைத்து அதை நாசமாக்கிவிட்டவன். இவன்மேல் நீ யுன் பலத்தைச் செலுத்தி வாள்களுடையவும் கோடரிகளுடையவும் மாரியானது இவன்மேல் வருவிக்கச் செய் என்று கூறினான். இதற்குள் ஒரு இராக்ஷசன் ஒரு எறி ஈட்டியை அவர்மேல் விட்டான். அவரோ தன் சாமர்த்தியத்தால் அது தன்மேல் தாக்காதபடி தப்பித்துக்கொண்டார். பின்பு ஹனீப்பா உக்ரங்கொண்ட ஒரு ஆண் சிங்கமானது மான் கூட்டத்தில் புகுந்தது போல் அந்த இராட்சத சேனையில் புகுந்து தன் வாளைச் சக்கிராகாரமாய்ச் சுழற்றி நாற்புறமும் பனங்காய்களை வெட்டித் தள்ளுவது போல் பகைவர் சிரங்களைப் பூமியில் உருளும்படி செய்யத் தொடங்கினார். அதனால் அச்சேனையிலுள்ளோர் எண்ணிறந்த பேர் கையறுந்தும், காலறுந்தும், தலையறுந்தும், இடுப்பறுந்தும், குடல் சரிந்தும், தலைவேறு உடல் வேறாய்த் துண்டுபட்டும், குவியல் குவியலாய்ச் சரமாய் விழுந்தார்கள்.

தன்சேனை யிவ்வாறு அழிவதைக்கண்ட கத்ருன் என்பவன் தன் படைத்தலைவனும் மந்திரியுமாகிய அம்லாக்கு என்பவனை நோக்கி மிக்க வியாகுலத்தோடு, "ஓ அம்லாக்கு என்பவனே வெகு சீக்கிரமாய் இவ்விஷயத்தில் நீ ஒரு ஆலோசனை செய்வாயாக இன்றேல் நமது சேனை சீக்கிரத்தில் அழிந்துவிடும். என் மனம் கலங்குகிறது" என்று சொன்னான். அப்போது அவன் ஆம் நல்லது என்று சொல்லி அத்தூர் அதிஞ்டீவான் யுத்தம் செய்யத் தானே புறப்பட்டு ஹனீப்பா என்பவர்முன் வந்துநின்று, நீர் உம்முடைய நாமத்தையும் இருப்பிடத்தையும் சொல்லும். பின்னும் நாங்கள் யாராயிருக்கிறோமென்பது உமக்கு தெரியுமா. நீர் உம்முடைய இளம்பிராயத்தின்மேல் கவலையை எடுத்துக்கொள்ளும் என்று சொன்னான். இதை ஸெய். ஹனீப்பா கேட்டு "நானோ வீரியமுள்ள சிங்கமாயிருக்கிறேன். நீயோ என் முன்பாக சோரங்கொட்டையைப் போலிருக்கிறாய். ஓ கொடுமையானே இன்றே நான் ஒரே தடவையில் உங்கள் எல்லோரையும் நாசமாக்குவேன். நான் யாரென்

பதைக் கூறுகிறேன். நீ கேள், என் பிதாவோ மௌலா அலியாயிருக்கிறார். உண்மையாய் அவர் தெய்வசிங்கமாயிருக்கிறார். ஹாசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களோ என்னுடைய பாட்டனாராயிருக்கிறார்கள். உன்னுடைய வாலிபத்தை நான் தரையோடு தரையாக்கி விடுவேன்" என்று சொன்னார்.

அம்லாக்கு என்பவன் எப்போது ஹாசரத் மௌலா அலி அவர்களுடைய நாமத்தைக் கேட்டானோ அப்போது அவன் "என்னுடைய மனக்கருத்துகளெல்லாம் இப்போது நிறைவேற்றப்பட்டன. ஆண்டவன் என்மேல் உபகாரத்தைச் செலுத்தினான். நான் என் மனதில் வெகுகாலமாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஆண்டவன் ஹைதருடைய குமாரனை எனக்குக் காட்டினான். ஓ ஹைதர் குமாரரே கேளும். என்னையே சகலரும் அம்லாக்கு பீல்தந்தார் என்று சொல்லுகிறார்கள். என்னோடு யுத்தம் செய்ய எவனுக்கும் சக்தியில்லை. நீர் சீக்கிரமாய் யுத்தம் செய்து மாண்டுபோவீர். நீர் இப்போது என் எதிரிலிருந்து தப்பிப்போவதுகூடாமை. நான் இப்போது உம்மை இரத்தப் பலியாக்கிவிடுகிறேன் பாரும்," என்று சொன்னான். இவை எல்லாம் கேட்டு ஹனீப்ஷா "ஓ அறுபோசமற்றவனே, துர்புத்தியினனே, நீ குப்ரில் நின்று இஸ்லாமைப் போக்கடித்துக்கொண்டாய். லஹ்னா என்பவனோ இஸ்லாமினால் கண்ணியவானவனாயிருந்தான்; நீ உன் குப்ரில் இருக்கிறாய். நீ பேசன் என்னுடன் டம்பம் பண்ணிக்கொள்ளுகிறாய். ஆண்டவன் கற்பனையால் நீ நாசமாவாய். உன் தகப்பனுக்கு ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களோடு யுத்தம் செய்ய சக்தியில்லாதிருந்தது. பின்னும் அவன் ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முன் ஒரு அரும்புக்குச் சமதையானவனாயிருந்தான். ஆனால் அவன் தன் பெற்றோர்களின் மதத்தை விட்டுவிட்டான். நீ என்னுடைய பலத்தை யறியமாட்டாய். நான் அனேகம் சேனைகளை நாசமாக்கியிருக்கிறேன்" என்று கூறும்போது அம்லாக்கு என்பவன் "வாரும் எதோ உம்முடைய வித்தையை என்மேல் காட்டும் பார்ப்போம்" என்றான். அப்போது ஹனீப்ஷா "ஆண்டவன் சத்தியம் அடிபட்டுக்கொண்டு பின்பு அடிப்பது என்னுடைய சரியமாயிருக்கிறது. என் வாடிக்கையாயிருக்கிறது. தவிர முதலில் சத்துருவின் அடியை வாங்கிக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய பெரியவர்களின் கட்டளையாயிருக்கிறது. நீ காபிர்களுடைய

வழக்கப்படி முதலில் என்மேல் அடி. அதின்பின் நம்முடைய அடியை நீ பெற்றுக்கொள்" என்று சொன்னார். உடனே ஷை அம்லாக்கு என்பவன் தன் ஈட்டியை ஓங்கி ஓ ஹைதர் குமாரரே, இந்தக் குத்தை நீர் தப்ப வைத்துக்கொள்ளுமென்று சொல்லிக் குத்தினான். அப்போது அவர் ஒரு இலக்கு பாய்ந்து அவன் குத்திற்குத் தப்பித்துக்கொண்டு உடனே தன் ஈட்டியால் அவன்மேல் குத்தினார். அந்தக் குத்தோ அத்துரோகியின் தலையின்மேல் படவே அவன் கண்களில் இருள் மூடிக்கொண்டது. அப்போது அவன் பூமியின்மேல் விழுந்தான். ஹனீப்ஷா அவன் நெஞ்சின்மேல் காலை வைத்து மிதித்துக்கொண்டு "இப்போது நீ கலிமா ஓது. இல்லாவிட்டால் உன் தலையை அறுத்துவிடுவேன். இப்போது என் கையிலிருந்து தப்பமாட்டாய்" என்றார். அதற்கு அவன் "என்னைக் கொல்லாதேயும். ஆண்டவன் ஏகனாயிருக்கிறான். நிச்சயத்தேதமாய் அவனுடைய ரசூல் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களாயிருக்கிறார்கள்" என்று வாயினால் சொன்னான். ஆனால் அவனுடைய இருதயமோ முனாபிக்காயிருந்தது. அவனோ பாவியாயும் ஆத்தனாயு மிருந்தான். பிறகு அவன் ஹனீப்ஷாவைத் தன்னுடன் இட்டுக்கொண்டு பட்டணத்தாருள் வந்து இப்போது தங்களுடைய கிருபையையும் கடாட்சத்தையுஞ் செலுத்துங்கள். சகலரையும் இஸ்லாமாக்குங்கள் என்று இவ்வித சூழ்ச்சியான வார்த்தைகளை அவருடன் பேசினான். அப்பால் கத்ருன் என்பவனிடம் அவன் போய் நான் தந்திரத்தோடு ஹனீப்ஷாவைக் கூப்பிட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். நீ உபாயத்தால் நஞ்சு கொடுத்து அவனைக் கொன்றுவிடு என்று சொன்னான். அப்போது கத்ருன் என்பவன் என் புத்தியோ குறைந்துபோயிருக்கிறது. இதோ பாஷாணமிருக்கிறது என்று சொல்லி அம்லாக்கு என்பவனிடத்தில் பாஷாணத்தை எடுத்துக் கொடுத்தான்.

கத்ருன் என்பவனோ இராக்ஷசர்களின் தலைமையானவனும், அம்லாக்கு என்பவனோ மந்திரியானவனுமாயிருந்தபடியால் எவ்விதமாய் நஞ்சு கொடுத்துக் கொல்லவேண்டுமென்று அவ்விருவரும் ஆலோசனை செய்தார்கள். இதின்பின் ஷை அம்லாக்கு என்பவன் ஹனீப்ஷாவிடம் வந்து "ஈமான்கொண்டு வருவதின்பேரில் நான் எல்லோரையும் சமாதானஞ் செய்திருக்கிறேன், அவர்களுஞ் சேனைகளும் ஈமான்

கொண்டு வர சம்மதித்திருக்கிறார்கள். எல்லாக்காரியத்தையும் முடித்து விட்டேன்" என்று சொன்னான். இதைக் கேட்டு ஹனீப்ஷா சந்தோஷப்பட்டு பூங்காவனத்திலிருக்கும் மண்டபத்திற்குப் புறப்பட்டார்கள். எல்லாச் சேனையும் அவர்களின்பின் சென்றது. பின்பு ஹனீப்ஷாவை அம்லாக்கு என்பவன் சிம்மாசனத்தின்மேல் கொண்டு போய் உட்காரவைத்தான். பிறகு நம்பிக்கைத் துரோகியாகிய அம்லாக்கு என்பவன் சீக்கிரமாய் ஷர்பத்து தயார்செய்து அதில் பாஷாணத்தைச் சேர்த்து அதை ஒரு தங்கக் கிண்ணத்தில் ஊற்றி ஹனீப்ஷா அவர்களிடம் கொண்டுவந்து "ஓ அரசரேறே, இப்போது உஷ்ணமும் களைப்பும் அதிகமாயிருக்கிறபடியால் தாங்கள் இந்த ஷர்பத்தைப் பானம் செய்யுங்கள்" என்று கொடுத்தான். அதை அவர் வாங்கி பானம் செய்ய மனமுள்ளவராயிருந்தார். இத்தருணத்தில் அம்லாக்கு என்பவனும் சத்ரூன் என்பவனும் ஆக இவர்கள் ஒருவரோடு ஒருவர் கண்சிமிட்டத் தொடங்கினார்கள்.

ஓ நண்பர்களே! ஆண்டவனுடைய குத்ரத்தையும் அவனுடைய மகிமையையும் நீங்கள் கண்டறிவீர்களாக. எவனை ஆண்டவன் க்ஷேமமாய் வைக்க விரும்புகிறானோ அப்பேர்ப்பட்டவனுக்காக அவனே தானே பாதுகாக்கிறவனாயிருக்கிறான். அவன்பேரில் எவனுடைய சூதும் வஞ்சனையும் நடக்கிறதில்லை. அவனை அக்கினியிலும் சமுத்திரத்திலும் போட்டுவிட்டாலும் கூட அவனுக்கு யாதொரு வகையான பயமுமிருப்பதில்லை.

சத்ரூனும் அம்லாக்கும் கண்சிமிட்டியதைச் சாடையாய்ப் பார்த்தவுடன், ஷர்பத்தைப் பானம் பண்ணலாகாதென்று தன் தந்தை கூறிய கட்டளை ஹனீப்ஷாவின் நினைவிற்கு வந்துவிட்டது. உடனே ஹனீப்ஷா அந்த ஷர்பத்தின் கிண்ணியைக் கையால் கீழே வைத்துவிட்டு அவர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் முதலில் இந்த ஷர்பத்தை பானம் பண்ணுங்கள். அதின்பின் ஏது மீதமிருக்குமோ அதை நான் குடிப்பேன். இதுவே என்னுடைய வழக்கமாயிருக்கிறது" என்று சொன்னார். எப்போது இந்த சங்கதி கேட்டார்களோ அப்போது அவ்விருவரும் புத்திகலங்கி மயங்கினார்கள். அதின்பின் ஷை அம்லாக்கு என்பவன் அந்தக் கிண்ணியை எடுத்துத் தரையில் கொட்டிவிட்டான். அதில் பாஷாணமிருந்ததை ஹனீப்ஷா கண்டறிந்து "ஓ மூடர்களே, ஓ துரோகமுற்றவர்களே, பாவிகளே, முனாபிக்குகளே,

இது உங்களுக்கு ஏற்றதாயில்லாதிருந்தது" என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் எல்லோரும் தங்கள் தலையைப் பூமியின்மேல் வைத்து கதறி கெஞ்சி எங்கள் குற்றத்தை மன்னியுங்கள் என்று மன்றாடினார்கள். இதைக் கேட்டு ஹனீப்ஷா அவர்கள் அவ்விருவர்களுடைய குற்றத்தையும் மன்னித்தார்கள். ஷை நிர்ப்பாக்கியர்கள் வெட்கத்தோடு தங்கள் தலைகளைக் குனியவைத்து நின்றார்கள்.

அதின்பின் ஷை அம்லாக்கு என்பவன் பயபக்தியோடு இளைப்பாறுவதற்காக மேடையின்மேல் நடவுங்கள். தாங்கள் அவ்விடம் என்னுடன் வாருங்கள். நான் தங்களுக்கு அற்புதமான வேடிக்கையைக் காட்டுகிறேன் என்று சொன்னான். அப்படியே அவர்கள் அவனுடன் மேடையின்மேல் போய் மேற்குப்பக்கம் பார்த்தார்கள். காளைப்பக்கம் நெருப்பு கொளுத்தப்பட்டிருப்பதையும், ஏதோ உயரமான வஸ்து கண்களுக்குக் காணப்பட்டுக்கொண்டிருப்பதையும் கண்டார்கள். இதின்பின் கீழ்த்திசையைப் பார்த்தார்கள். அவ்விடத்தில் புகையும் தூசும் எழும்பிக்கொண்டிருந்தன. இந்த அதிசயங்களைக்கண்டு இவைகளின் அந்தரங்கத்தை விரித்துச் சொல்வாயாக வென்று அம்லாக்கு என்பவனிடத்தில் கேட்டார்கள். அதற்கு அவன் இதோ அக்கினியின் மத்தியில் ஒரு கோட்டையிருக்கின்றது. எந்த இடத்தில் புகை இருக்கின்றதோ அந்த இடத்தில் ஒரு கிணறு இருக்கின்றது. பின்னும் அவ்விடம் மூன்று கோட்டைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கோட்டையிலும் ஒவ்வொரு சகோதரன் இருக்கிறான். அவர்களில் ஒருவனைப்பார்க்கிலும் ஒருவன் பலசாலியாயிருக்கிறான். இவர்களில் மூத்தவன்பேர் ஜும்ஹூர். அவன் தன் எல்லாச் சகோதரர்களிலும் சந்தோஷமாயிருக்கிறான். அச்சகோதரருக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவளோ கன்னியாபெண்களை விடவும் ஹூர் என்று கவர்ச்சி கன்னிகளை விடவும் வெகு அதிக அழகுள்ளவளாயிருக்கிறாள். பின்னும் அவள் வாலிப பெண்ணும், சவுந்தரிய ரூபமுள்ளவளாயுமிருக்கிறாள். அவ்விராக்கதியுடைய அழகைப் புகழ்ந்து கூற என் நாவில் சக்தியில்லை. இப்படியிருந்த போதிலும் அதில் ஒரு இம்மியைச்சற்று நான் சொல்லுகிறேன் கேளுங்கள். அதாவது அவளுடைய நெற்றியின் பலகையை ஆண்டவன் தன் குத்ரத்தால் விசேஷ வகையாய் சந்திர ஒளியுள்ளதாகவும், இரண்டு புருவங்களையோ வானவில்களைப் போலாகவும், இவ்விரண்டிற்கும் மத்தியிலுள்ள இடத்திலோ நட்சத்திர சோதியுள்ள

ஒரு மச்சத்தையும், இருதனங்களையோ பாதாம்கொட்டையைப் போலாகவும், இரண்டு கன்னங்களையோ ரோஜா புஷ்பத்தைப்போலாகவும், முகவாய்க்கட்டையையோ கௌசருடைய கிணற்றைப்போலாகவும், அவளுடைய இதழைச் செம்பவழம்போலவும், பற்களைக் குற்றமற்ற சித்திலக்கோர்வை போலவும், ஈர்க்கிடை புகாத ஸ்தனபாரங்களைத் தங்கக்கிண்ணங்கள் கவிழ்த்தது போலவும், இடையை மின்னற்கொடி போலவும், அவளுடைய உயரத்தையோ ஷம்ஷாது (ஒரு மரத்தின் பேர்)டைய உயரத்தைப்போலாகவும், அழகையோ நாவால் புகழக்கூடாத வகையாகவும் படைத்திருக்கிறான். அநேக நாளாய் அவளோடு சயனிக்க எனக்கு ஆசையாயிருக்கிறது. ஆனால் நான் என்ன செய்வேன். என் பிரயத்தனம் ஒன்றும் நடக்கிறதில்லை. என்னுடைய உபாயமும் அங்கு நடக்கிறதில்லை. அவளுடைய மூத்த சகோதரனாகிய ஜம்ஹூரென்பவன் வெகு பராக்கிரமசாலியாயிருக்கிறான். அவனே தன் பலத்தில் கர்வமுள்ளவனாயிருக்கிறான். அவன் கோட்டை கட்டி அக்கோட்டையைச்சுற்றி அக்கினியைக்கொளுத்தி இரவும் பகலும் தன் சகோதரியினிடத்தில் காவலாயிருக்கிறான். எல்லா மனிடர்களும் திகைப்புள்ளவர்களாயும் கஷ்டமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். பின்னும் எல்லா இராஜாக்களுமோ அவன் எதிரில் செல்ல அசக்தர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஒரு வெள்ளை இராஜா சன் அவள்மேல் முற்றிலும் மோகம் கொண்டவனாயிருக்கிறான். அவனே அந்தக் கோட்டைக்குள் இருக்கிறான். அவன் கெடிகிறதும் 6 மாதம் நித்திரை செய்கிறான். இதோ தெரிகிற புகை எல்லாம் அவனுடைய சுவாசத்தின் புகையாயிருக்கின்றது. அவன் அப்பெண்ணின் காதலால் மிக்க துக்கமுள்ளவனாயிருக்கிறான். இப்படியிருந்தும் அதற்காக முயற்சி செய்ய அவன் அசக்தனாயிருக்கிறான். அவளுடைய மற்ற சகோதரர்களோ அவள் வாசலின்மேல் இடைவிடாமல் காவலாளிகளாயிருக்கிறார்கள். அவர்கள் அவளை எவனுக்கும் விவாகம் செய்து கொடுக்கிறதில்லை. அவளைத் தன் அடிமைப்பெண்ணாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எவனாவது அவளுடைய ஆசை மனதில் வைத்து போகிறதாயிருந்தால் அவர்கள் அவனை ஒரு நிமிஷத்தில் இறையாக்கிக்கொள்ளுகிறார்கள்" என்று சொன்னான்.

ஹனீப்ஷா இதையெல்லாம் கேட்டவுடன் ஓ அக்கிரமக்காரர்களே, என் குதிரையை ஆயத்தமாக்குங்கள். நான் இப்போதே போய் அந்தக் கோட்டையைச் சுற்றிப் பார்ப்பேன் என்று சொன்னார்.

ஹனீப்ஷா ஜம்ஹூர் முதலான 7-பேர்களோடு யுத்தம் செய்ததும், ஜைஜுன் அறபை விவாகம் செய்ததும்.

ஹனீப்ஷா உடனே குதிரையின்மேல் ஏறி ஆண்டவன்மேல் பாரம்போட்டு அந்த ஏழு சகோதரர் இருக்கும் கோட்டையை நோக்கிப் புறப்பட்டார். அவர் தன் குதிரையைச் சாட்டையால் அடித்து ஆண்டவனுடைய ஷுக்ர் செய்தார். குதிரையுடனே வாயுவேகத்திலும் அதிவேகமாய்ப் பறந்துபோய்ப் பார்த்துக்கொண்டிருந்தவர்களுடைய திருஷ்டிக்கு மறைந்துவிட்டது. சற்று நேரத்திற்குள் அது அந்த ஏழு சகோதரரிருக்கும் கோட்டையின் வாசலின் சமீபத்தில் வந்து நின்றுகொண்டது. அப்போது அக்கோட்டையின் சமீபத்தில் ஒரு தோட்டமிருந்ததை ஹனீப்ஷா கண்டு வேடிக்கைக்காக அவ்விடம் போய் அசர் தொழுகை முடித்து பின்பு அவ்வக்கினியையும் சுற்றிப் பார்த்தார். அத்தருணத்தில் அப்பெண்ணின் மூத்த சகோதரனான ஜம்ஹூர் என்பவனும் மற்ற சகோதரர்களும் வேட்டையாட வனாந்தரத்துக்குப் போயிருந்தார்கள். எவன் தன் காரியத்தை ஆண்டவன் மேல் ஒப்பித்துவிடுகிறானோ அப்போப்பட்டவனுடைய காரியத்தின் முடிவு மிக்க அநுகூலமும் திருப்தியுமாகவே யிருக்கும்.

ஹனீப்ஷா அவ்வக்கினியை எல்லாம் சுற்றிப் பார்த்தானதின்பின் அரண்மனையையும் சுற்றிப்பார்க்கத்தொடங்கினார். இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில குர்ஆன் ஓதிக்கொண்டிருக்கும் சத்தத்தை அவர் காதால் கேட்டார். அப்போது ஹக்கு சுப்ஹானஹூ வத்தஆலாவுடைய ஷுக்ர்செய்தார். பின்னும் இந்த இடத்திலெவனே ஒருவன் என்பாட்டனார் அவர்களின்மேல் ஈமான்கொண்டு வந்து இஸ்லாமாயிருக்கிறான் என்றும், தன் மனதில் சொல்லிக்கொண்டார். பின்பு சற்றுநேரத்தில் திடீரென்று அச்சத்தம் நின்றுபோகவே அவர் விசாரப்பட்டார். இதற்குள் "இதுவரை சகோதரர்கள் வரவில்லையே. பொழுது எல்லாம் போய்விட்டதே. இராவேளை வந்து சமீபித்ததே" என்று இவ்விதமாகச் சொல்லிக்கொண்டு வாசற்படியின் மேல் தீவட்டியைப்போலப் பிரகாசமுள்ள சவுந்திரிய ரூபவதியான ஒரு பெண் வந்து நிற்பதை அவர் கண்டார். அல்ல வானத்தின்மேலிருந்து பூமியின்மேல் சந்திரன் வந்து விட்டதோ வென்று சந்தேகப்

பட்டார். பின்னும் அவர் அப்பெண்ணைப் பார்த்து அவள் சோதியில் அமிழ்ந்து புத்திமயங்கி போனார். பின்னும் அவர் அப்பெண்ணின் பக்கத்தில் மரியாதையுடன் நின்று என்ன நான் நித்திரையில் இருக்கிறேனோ, அல்லது விழித்துக்கொண்டிருக்கிறேனோ, அல்லது விழிப்புள்ள மனதோடு இருக்கிறேனோ, அல்லது மதிமயக்கமுள்ளவனாயிருக்கிறேனோ தெரியவில்லையே என்று தனக்குள்ளாகவே கலவரமடைந்தார்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் கன்னிகையான அப்பெண் நடுக்கத்துடன் மதுரம் பொருந்திய மொழிகளால் அவருடன் பேசத்தொடங்கி "உம்முடைய நாமமோ முஹம்மது ஹனீபாவிருக்கிறது. உம்முடைய எல்லாச்சமாச்சாரங்களும் எனக்கு வந்து சேர்ந்திருக்கிறது. நீரோ ஹஸரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராயிருக்கிறீர். பின்னும் நீர் பராக்கிரமசாலியாயிருக்கிறீர். நீர் என்னை இன்றைய தினம் விடுவிக்கவேண்டும். நீர் என் வீட்டிற்குள் வரவேண்டும். ஆண்டவன் என்னுடைய துஆவை அங்கீகரித்து உம்மை என்னோடு பெரும் புத்தியுடன் கூடும்படி செய்வித்தான். இன்றைக்கு நீர் என்னைவிட்டுப் போகலாகாது. நீர் என்னை உம்முடன் கூட்டிக்கொண்டு போகவேண்டும். நீரும் நானுமாகச் சேர்ந்து இவ்விடத்திலிருந்து போகவேண்டும். இதின்பின் சம்யோக [illegible] பரணம் பண்ணவேண்டும். எனக்கு ஏழு சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கர்வமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களோ குபரில் அமிழ்ந்து போயிருக்கிறார்கள். அவர்கள் வருவதற்கு முன்னதாக நாங்கள் இவ்விடத்தை விட்டுப்போய் விடவேண்டும். அப்படிக்கு இல்லாவிட்டால் அவர்கள் ஏதோ எங்களுக்குக் கஷ்டம் சம்பவிக்கும்படி செய்வார்கள்" என்று சொன்னாள்.

ஹனீபாஹ் இவையெல்லாம் கேட்டு "ஓ பெண்கள் நாயகமே! அவ்விதமாய் போய்விடுவது நல்லதாயிராது. ஆனால் நீ என்னையும் ஹஸரத்து மௌலா அலி அவர்களையும் எப்படி அறிந்துகொண்டாய். அருமையான பெருமானவர்களாகிய ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை எப்படித் தெரிந்துகொண்டாய்" என்று கேட்டார்.

அதற்கு அப்பெண் "நான் ஒரு நாள் இராத்திரி நித்திரையாயிருந்தேன். என் சொப்பனத்தில் ஹஸரத்து முஹம்மது முஸ்தபா

65

சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களைக் கண்டு அவர்களுடைய பாதங்களின்மேல் நான் விழுந்தேன். அவர்கள் எனக்குக் கலிமாவைக் கற்றுக்கொடுத்து என்னை இஸ்லாமாக்கினார்கள். அதின்பின் குர்ஆனையும் கற்றுக்கொடுத்தார்கள். பின்னும் உம்மையும் ஹஸரத்து மௌலா அலி அவர்களையும் அழைத்து சந்தோஷத்துடன் உம்மோடு என்னை நிக்காஹ் செய்துவிட்டார்கள். என்னுடைய நாமமோ ஆதியில் ஜைத்துல் அறப் என்றிருந்தது. அதை அவர்கள் மாற்றி ஜைனுல் அறப் என்றுபேரிட்டார்கள்" என்றுகூறினாள். இதை ஹனீபாஹ் கேட்டு ஆரியத்தின்படி இரண்டு சாட்சிகள் வேண்டியது அவசியமே. அவர்கள் யாராயிருக்கிறார்கள் என்பதைப்பற்றி நீ சீக்கிரம் சொல்லுமென்று சொன்னார். அதற்கு அப்பெண் நான் சொல்லுவதின்பேரில் இரண்டு சாட்சிகள் இருக்கின்றன. 1-வது கலிமாவும், 2-வது குர்ஆனுமே சாட்சிகளாயிருக்கிறார்களென்று சொன்னாள். இதின்பின் அவர் உம்முடைய சொல்லின்பேரில் பலமான இரண்டு சாட்சிகள் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பயந்து ஓடிப்போவது என்னுடைய வழக்கமல்ல என்று சொன்னார். இவ்விருவர்களும் சம்பாஷணையில் இருந்தார்கள். அப்போது அச்சகோதரர்கள் வருவதின் அடையாளங்கள் வெளிப்பட்டன. அதையறிந்த அக்கன்னிகை ஹனீபாஹ்வை நோக்கி, "நீங்கள் பத்திரமாயிருங்கள். இம்பிகர்களாகிய என் சகோதரர்கள் வருகிறார்கள். அந்தப் பாதகர்கள் இரக்கமற்றவர்கள்" என்று சொல்லிவிட்டு, அரண்மனைக்குள் போய் "ஓ ஆண்டவனே, நீ பூமியுடையவும் வானங்களுடையவும் எஜமானனாயிருக்கிறாய். நன்மையும், தீமையும், உன் வல்லமைக்குள் இருக்கின்றன. இவரை என் சகோதரர்கள்கையில் மாட்டிவிடாதேயும். இவரையும் என் ஏழு சகோதரர்களையும் நீ காப்பாற்றுவாயாக. பின்னும் எனக்கு சம்யோகத்தின் ஒரு மூச்சு ஜலம் தருவாயாக. என் சகோதரர்கள் அடித்தால் என் நாயகன் கொல்லப்படுவான். என் நாயகன் அடித்தால் என் சகோதரர்கள் கொல்லப்படுவார்கள். ஆகையால் என் சகோதரர்களையும் என் புருடனையும் நீ உன் வல்லமையைக்கொண்டு சுகமாய் வைப்பாயாக. பின்னும் என் சகோதரர்களுக்கு ஈமானுடைய அங்கியைத் தரிப்பாயாக. ஓ என் நாயனே என்னுடைய அங்கலாய்ப்பை நீ கேட்டு என் கருத்துக்களைப் பூர்த்தியாக்கி என் தலைமேல் என் பதியின் கிரீடத்தையும் நிலையாய் வைப்பாயாக" என்று ஆண்டவன் சந்நிதியில் துஆ செய்து கொண்டிருந்தாள்.

ஹனீப்ஷா உடைய இருதயத்தில் சிருங்காரசத்தின் நெருப்பு கொளுத்தப்பட்டு அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். எல்லா சகோதரர்களும் வெளியிலிருந்து வந்து அரண்மனைக்குள் புகுந்தார்கள். ஆனால் பின் வந்து கொண்டிருந்த சகோதரனுடைய பார்வையோ திடீரென்று ஹனீப்ஷாவின் மேல் விழுந்தது. உடனே அவன் கதறிக்கொண்டு சகோதரர்களிடம் போய் ஒரு சிங்கமானவர் எங்கள் மேல் வந்திருக்கிறார். அவர் எங்கள் எல்லோரையும் பிடித்துக்கொல்லுவாரென்று சொன்னான். மற்ற சகோதரர்கள் அவனால் இச்சமாசாரத்தைக் கேட்டு உனக்குள் தைரியமில்லை. நீ கோழை நெஞ்சுள்ளவனாயிருக்கிறாய் என்று சொன்னார்கள். இவர்களில் ஒருவன் நான் அவரிடம் போய் அவரைப் பிடித்து உங்கள்முன் கொண்டு வருகிறேன் என்று சொல்லி அத்தோட்டத்தை விட்டுப் புறப்பட்டு அந்த சிங்கமாகிய ஹனீப்ஷாவின் முன்போய் "நீர் யார்? உத்தரவு அன்னியில் இங்கு ஏன் வந்தீர்? எப்படி வந்தீர்? இப்போது நான் உம்மைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போகிறேன்" என்று சொன்னான். இதை ஹனீப்ஷா கேட்டு வா. சீக்கிரம்வா. பிடித்துக்கொண்டுபோ. இல்லாவிட்டால் கெடுதி சம்பவிக்கும் என்றுசொல்லவே, அக்குரூரன் கோபங்கொண்டு சுருசுருப்புள்ளவனாய் வீரியத்துடன் ஹனீப்ஷாவின் முன் வந்து யுத்தம் செய்தான். அவர் உடனே அவனைப் பூமியில் விழத்தட்டி அவன் கழுத்தின் மேலும் முதுகின்மேலும் ஓர் அடி அடித்தார். அவ்வடியால் அவன் ஜீவிப்பின் நம்பிக்கையும் ஆசையும் போய்விட்டது. பின்னும் அவன் தலைமேலிருந்த தலைப்பாகையும் விழுந்தது. அதைக்கொண்டே அவனுடைய கைகளைக்கட்டி அவனை ஒரு மரத்தின் கிளையில் தொங்க வைத்தார். இவன் தன் சகோதரர்களிடம் திரும்பிப்போவதில் தவக்கப்பட்டபடியால் அவனுக்கு என்ன சம்பவித்ததோ தெரியவில்லையென்று மற்ற சகோதரர்கள் கிலேசப்படத்தொடங்கினார்கள். அப்போது அச்சகோதரர்களில் ஒருவன் அவனைப் பார்க்கப் புறப்பட்டான்.

அவன் ஹனீப்ஷா அருகில் வந்து பார்த்தபோது தன் சகோதரன் மரக்கிளையில் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு, மிக்க கோபமடைந்து ஆத்திரத்தோடு ஹனீப்ஷாவின் முன் வந்து நின்று அவருடன் பேசத் தொடங்கினான். உடனே அவர் அவனையும் பிடித்துக் கட்டி மற்றொரு கிளையில் தொங்க வைத்தார். இவ்விதமாகவே ஒவ்வொருவராய் ஐந்து சகோதரர்களைக் கட்டித் தொங்கவிட்டு விட்டார். இவர்கள் எல்லோரும் மரக்கிளைகளில் இலைகளைப்போலத் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது ஜம்ஹூர் என்பவனும், இளைய சகோதரனுமே மீதமிருந்தார்கள். ஷை ஜம்ஹூர் என்பவன் இளையவனைப் பார்த்து அவ்விடம் போன சகோதரர்கள் கொல்லப்பட்டார்களா அல்லது பிழைத்திருக்கிறார்களா தெரியவில்லை. ஆகையால் நீ போய் அவர்களின் சமாச்சாரத்தைச் சீக்கிரத்தில் போய்க்கொண்டுவா வென்று சொன்னான். அவன் நல்லது என்று ஒப்புக்கொண்டு புறப்பட்டான். அவன் வந்து பார்த்து எல்லாச் சகோதரர்களும் மரத்தின் கிளைகளில் தூக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஓடிப்போய் எங்கள் சகோதரர்கள் எல்லோரும் மரக்கிளைகளில் தொங்கிக்கொண்டிருக்கிறார்களென்று ஜம்ஹூரிடம் அழுதுகொண்டு சொன்னான். அப்போது அவன் வெகு கோபப்பட்டு ஹனீப்ஷாவுக்கு முன் வந்து நிர்ப்பயமாய் "நீ யார்? ஏன் நீ என்னுடைய சகோதரர்களைப்பிடித்துக்கட்டிவைத்திருக்கிறாய்? நான் அவர்களுக்காக உன்னிடம் பழி வாங்குவேன். என்னுடைய பேர் உலகத்தில் பிரபலமாயிருக்கிறது. பலத்தில்என்னைப்போல் ஒருவனுமில்லை" என்று சொன்னான். இதைக் கேட்டு ஹனீப்ஷா "உலகத்தில் இன்றைக்கு நான் உன்னுடைய உபாத்தியாயனாயிருக்கிறேன். நான் பராக்கிரமசாலிகளின் அரசராகிய ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய புத்திரனாயிருக்கிறேன். ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பேரனாயிருக்கிறேன். இப்போது நீ உன்னுடைய பலத்தைக் காட்டு. நீ புலியாயிருக்கிறாயோ, அல்லது எறும்பாயிருக்கிறாயோ காட்டிவிடுகிறேன்" என்று சொன்னார். இதைக்கேட்ட உடன் ஜம்ஹூர் என்பவன் தூரத்திலிருந்து ஈட்டியை நீட்டி ஹனீப்ஷாவின் மேல் ஓர் குத்து குத்தினான். அவர் அக்குத்தைத் தப்பவைத்துப்பெருத்த சத்தத்தோடு கர்ஜித்தார். இச்சத்தம் ஜம்ஹூரென்பவனுடைய காதில் விழவே அவன் மெய்மறந்து தன்புத்தியையும் அறிவையும் இழந்தான். பின்னும் பூமியின்மேல் மல்லாந்து விழுந்தான். உடனே ஹனீப்ஷா அவனைக்கொல்ல அவன் நெஞ்சின்மேல் ஏறவே அவன் "ஓ சூரரே, ஆண்டவனுக்காகத் தாங்கள் என்னுடைய குற்றத்தை மன்னியுங்கள். இன்றைக்கு உங்களுடைய வேதத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள். ஆண்டவன் உங்களுடைய பாதுகாக்கிறவனாயிருக்கிறான். ஹசரத்து

முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சந்தேகமாய் பைகம்பராயிருக்கிறார்கள். விக்கிரகங்களும் சிலைகளும் பொய்யாயும், குபரோ வீணாயும் இருக்கின்றன. எவன் உம்மை நிராகரிக்கிறானோ அவன் மூடனாயிருக்கிறான்" என்று சொல்லி மன்னிப்புகேட்டான். அப்போது ஹனீப்ஷா அவனை விட்டுவிட்டார். அதின்பின் அவன் தன்சகோதரர்களையும் விடுதலையாக்கித் தம்முடைய சகோதரர்கள் பக்கம் திரும்பி "ஓ சகோதரர்களே, குபரை விட்டு விடுங்கள். நான்ஹனீப்ஷாவுடைய தாமத்தைப் பரிக்ஷமாய்க் கண்டிருக்கிறேன். இக்காலம்வரை எவனும் என் எதிராளியாயிருக்கவில்லை. மானிடர்களானாலும், மற்ற எவர்களானாலும் பலத்தில் எனக்கொப்பானவர்களாயிருக்கவில்லை. நானோ ஹனீப்ஷாவைச் சிங்கத்தைப்போலக் கண்டேன். என் பலமெல்லாம் போய்விட்டது" என்று சொன்னான். அப்போது எல்லாச் சகோதரர்களும் இன்லையின் பேரில் ஆண்டவனும், அவனுடைய றசூலாகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சத்தியமானவர்களாயிருக்கிறார்கள் என்று ஒப்புக்கொண்டு கலிமாவை ஓதி குபரை மனதோடு நீக்கித்தீனை அங்கீகரித்து சமாதானோடு மனதைச் சோடித்தார்கள். இதின்பின் ஹனீப்ஷா எல்லோரையும் வாழ்த்தினார். எப்போது எல்லாச்சகோதரர்களும் ஒன்று கூடினார்களோ அப்போது அவர்கள் ஹனீப்ஷாவை அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவரைச் சிம்மாசனத்தின்மேல் உட்காரவைத்துத்தங்கள் தங்கையை யழைத்து "ஓ எங்கள் சகோதரியே, எங்கள் கண்மணியே, நீயும் நமதுடைய அங்கிலையைத்தரித்துக்கொள். இருலோகபாக்கியத்தைப்பெற்றுக்கொள்" என்று அவளுக்குச் சொன்னார்கள். அச்சகோதரி இதைக்கேட்டு "நானோ இதற்கு முன்னதாகவே அச்சோதியுள்ள அங்கிலையைத் தரித்துக்கொண்டிருக்கிறேன். ஒருபோதும் நான் உங்களை மறக்கவில்லை. அதின் பாக்கியத்தால் இந்தக்காரியம் இலேசாக முடிந்தது. ஆண்டவனிடத்தில் நான் செய்துகொண்டிருந்த துஆவை ஆண்டவன் அங்கீகரித்துத் தன்னுடைய கிருபையால் உங்கள்பேரில் வந்த கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிட்டான்" என்று சொன்னது மன்றித் தன் சொப்பனத்தின் சங்கதியையும் தன் சகோதரர்களிடம் விவரமாய் வெளியிட்டாள். இதையெல்லாம் கேட்ட அச்சகோதரர்கள் ஹனீப்ஷாவை நோக்கி, "இவள் தங்களுடைய

அடியாளாயிருக்கிறாள். இவள் தங்களுக்கு முபாரக்காகக்கடவது" என்று சொன்னார்கள். இத்தருணத்தில் இராவேளை வந்து சம்பவித்தது. அப்போது ஷை ஜம்ஹூர் என்பவன் ஜல்வாவின் சடங்கு செய்து ஷரூப்படியுள்ள காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி வெளியே போனான். இவன் வருவதற்குள் மற்ற சகோதரர்கள் விவாக சிங்காசனத்தைப் பூங்காவனத்துக்குச்சமானமாகச்சிங்காரித்துத் தீபங்களால் பிரகாசமுள்ளதாய் ஆக்கிவிட்டார்கள். பின்னும் தங்கள் சகோதரிக்கு அழகிற்குப்பின்னும் அழகு செய்வதுபோல் நவரத்னங்கள் இழைக்கப்பட்ட விலைமதிக்கக்கூடாத ஆபரணங்களைப் பூட்டி அலங்காரம்செய்துவிட்டார்கள். அக்கன்னிகை பார்ப்பவர் இவளென்ன பூலோகமாதோ அல்லது சொர்க்க கன்னிகையோ வென்று ஐயுறும்படி பிரகாசித்தாள். பின்னும் ஜைனுல் அறப் என்ற சுத்தமான பெண்ணாகிய தன் சகோதரியை ஹனீப்ஷா உடன் சேர்த்துவிட அவள் சகோதரர்கள் அவளைச் சம்யோக சிங்காதனத்துக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். அப்போது மஷ்ஷாத்தது என்றவள் (கலியாணப்பெண்ணைச் சுத்தம் செய்கிறவள்) ஷறுவுடைய திரையைக் கையில் வாங்கி சில சடங்குகள் செய்தபின் ஹனீப்ஷாஹ்வுக்கு எதிரில் அந்தச்சுந்தரியை உட்காரவைத்தாள். ஷை சுந்தரியோ எனக்கு ஆண்டவன் கிருபையால் மேலான குலமுள்ள மணவாளன் கிடைத்தான் என்று மனதில் சந்தோஷப்பட்டுக்கொண்டு பெண்களுக்குரிய நாணத்துடன் ஷை சிங்காசனத்தின் மேல் குனிந்து உட்கார்ந்தாள். ஷை மஷ்ஷாத்தது தன் கையில் புஷ்பஹாரங்களை வாங்கி இருவர்களுடைய கழுத்திலும் சூட்டி ஷறுவுடைய திரையை நீக்கிவிட்டு ஆண்டவனுடையவும், ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய நாலு அஸ்ஹாபுகளுடையவும், சொர்க்க நாயகியாகிய பாத்திமா நாச்சியாருடையவும் நாமங்களைத்தோத்தரித்து ஜல்வாவின் சடங்குகளை முடித்துக்குர்ஆனே ஷரீப்பையும் கண்ணாடியையும் கொண்டுவந்து அக்கண்ணாடியில் அச்சுந்தரியின்முகத்தைமாப்பிள்ளைக்குக்காட்டிப்பின்பு குர்ஆனையும் அவருக்குக் காட்டினாள். பின்னும் அவள் வெள்ளியையும் தங்கத்தையும் ஸ்திரீ புருடர்களின் மேல் திருஷ்டி சுற்றி தம்பதிகளின் முன் நின்று குனிந்து சலாம் செய்தாள். பிறகு ஹனீப்ஷா ஹசரத்து முஹம்மது றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேல் முழு இருதயத்துடன் அநேக துருதுகளை ஓதி மிட்டாயை வாயில் போட்

டார். இதின்பின் அச்சகோதரர்கள் ஹனீப்ஷாவுக்கு முன் வந்து தஸ்லீம் (குனிந்து சலாம் செய்தல்) செய்து வாழ்த்தினார்கள். அதற்கு அவர் தம்முடைய மைத்துனர்களுக்குச் சலாம் செய்து ஆண்டவன் உங்கள்மேல் ரஹ்மத்து செய்வாராக என்று சொன்னார். அச்சமயம் பெரிய மைத்துனனாகிய ஐம்றூர் என்பவன் ஹனீப்ஷாவிடம் மிக்க வணக்கமாகவும் உருக்கமாகவும் கூறுகிறான். "நாளதுவரை இப்பெண்ணை நாங்கள் பாதுகாத்துக்கொண்டு வந்தோம். இப்போதே இவளைத் தங்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டோம். இனி இவளைத் தாங்கள்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இது உங்கள் கடமையாயிருக்கிறது. இன்னொரு சங்கதி நான் தங்களிடம் கூறவேண்டும். அதாவது ஒரு இராக்ஷசன் இவள்மேல் காதல்கொண்டிருக்கிறான். அவனோ இன்றிராத்திரி நித்திரையின்றி விழித்திருக்கிறான். அவன் ஒரு சமயம் இடையூறு செய்ய நினைப்பான். ஆகையால் தாங்கள் எதற்கும் எச்சரிக்கையாயிருப்பது நலமென்று இதைத் தங்களிடம் கூறினேன்." மூத்த சகோதரன் இவ்வாறு கூறியபின் சகோதரர்கள் யாவரும் ஹனீப்ஷாவிடம் விடை பெற்றுக்கொண்டு தம்பதிகளை ஏகாந்த ஸ்தலத்தில் விட்டுவிட்டுச் சென்றார்கள். தம்பதிகள் இருவரும் இஷ்டபோகங்களை யநுபவித்தபின் நித்திரை போய்விட்டார்கள். கலியாணப் பெண்ணாகிய பீபி ஜைனுல் அறப்பின் மனதில் ஒருவிதமான கலக்கமும் திகிலும் உண்டாயிருந்தது. அதற்குக் காரணம் ஒன்றும் தோற்றவில்லை. கடைசியில் ஆண்டவனைத் துவா செய்துகொண்டே நித்திரை போய்விட்டாள்.

அப்பெண்மேல் காதல் கொண்டிருந்த அந்த வெள்ளை இராட்சதன், இதுகாறும் தனித்து கோட்டைக்குள் வராமலிருந்தாலும், இப்போது வேறொருவன் அவளை மணம்புரிந்துகொண்டபடியால் இச்சமயந்தவறினால் இனியவள் தன்கைக்கு எட்டமாட்டாளென்று யோசித்து, காதலென்னும் இருளானது அவன் அறிவின் பிரகாசத்தை மறைத்துவிட்டதால் முன்யோசனையில்லாதவனாய்ப் புத்தி தடுமாறி அன்றிரவு ஒரு மணிக்கு அக்கோட்டைக்கு வந்தான். இதுகாறும் தினந்தோறும் இரவில் கோட்டை வாசற்படியில் ஒருவர் மாற்றியொருவர் காவலிருந்த சகோதரர்கள் தங்கள் தங்கையை ஆண்சிங்கத்திற்குச் சமமான சுத்தவீரராகிய ஹனீப்ஷாவிற்கு நிகாஹ் செய்துகொடுத்து விட்டபடியால் கவலை யொழிந்து அன்றிரவு வழக்கம்போல் காவலிருப்பதை விட்டுவிட்டுத் தங்கள் தங்கள் அறையில் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். வாசற்படியில் யாரும் காவலில்லையென்று கண்டதே மிகச் சந்தோஷமடைந்து தன் மாயையால் நித்திரை செய்கிறவர்கள் எழுந்திராதபடி செய்துவிட்டு ஜைனுல் அறப்பைத் தூக்கிக்கொண்டு போய்த்தான் வசிக்கும் கிணற்றிலுள்ள ஒரு கட்டிலில் கட்டி வைத்துவிட்டான்.

ஜைனுல் அறப் நித்திரை தெளிந்து கண்விழித்துப் பார்த்தாள். முதலில் எல்லாம் இருளாயிருந்தது. திடுக்கிட்டு உற்று நோக்கினாள். தன் பக்கத்தில் தன் கணவனிருக்கிறாரா வென்று தடவிப்பார்க்கக் கையைத் தூக்க முயன்றாள். தன் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு மூலையிலிருந்து மினுக்கு மினுக்கென்றெரியும் ஒரு தீபத்தின் ஒளிவந்துகொண்டிருந்தது. கொஞ்சங் கொஞ்சமாய்த் தானிருக்கும் இடம் முதலியவை கண்ணுக்குப் புலப்பட்டன. இருண்ட ஒரு குகைக்குள் ஒரு கட்டிலில்தான் கட்டப்பட்டிருப்பதை யறிந்தாள். அந்தக் கிணற்றில் உஷ்ணமான ஆவி வீசிக்கொண்டிருந்தது. சர்ப்பங்கள் சீறும் சத்தம் ஒருபக்கம் செவியில் கேட்கிறது. இராக்ஷசனைப்பற்றிய சங்கதியாவும் தனக்குக் கேள்வியாகையால் நம்மை அந்தப் பாவியாகிய இராக்ஷசன் கபடமாய்த் தூக்கிக்கொண்டு வந்துவிட்டிருக்கிறான் என்று தெரிந்துகொண்டாள். அவள் மனதில் மிக்க பயமுண்டாய் விட்டது.

"ஓ ஆண்டவனே நீ யெப்போதும் எல்லாவிடத்திலுமிருக்கிறாய். இந்த ஆபத்து வேளையில் என் முறைப்பாட்டைக் கேட்டு என்னையாதரிக்க உன்னையன்றி வேறு யாருமில்லை. அந்தோ இந்தத் துஷ்டனாகிய பாதகன் என் புருடனிடமிருந்து என்னைப் பிரித்து இங்குக் கொண்டு வந்து விட்டான். அவர் நித்திரையாகிய மாயையில் அமிழ்ந்து நடக்கும் சங்கதி தெரியாதவராயிருந்து விட்டார். இன்றேல் அப்பாவியின் தீயவெண்ணம் பலித்தேயிராது. அப்போ நான் இங்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் சங்கதி என் கணவருக்காவது சகோதரருக்காவது தெரியாதே. என்னை யார்வந்து இந்த அரக்கனிடமிருந்து விடுவிக்கப் போகிறார்கள். இந்தப் பாவியிடம் மானபங்கப் படுவதைவிட பிராணனைப் போக்கிக்கொள்ள வேண்டியதுதான் உத்தமம். ஓ பரம கருணாநிதியாகிய ஆண்டவனே, தாங்கள் தான் என்னை யென் நாதனிடம் சேர்ப்பிக்கவேண்டும். அபயம் என்றவரை யாதரிக்கும் கருணையும் ஒப்புயர்வற்ற வல்லமையும் உள்ளவர் நீர் ஒருவரே. புருடனை விட்டுப் பிரித்த

நான் தடாகத்தைவிட்டுக் கரையி லெறியப்பட்ட கமலம்போல் வாடுகிறேன். ஓ கருணைக்கடலே நீரே யென்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கண்களில் தாரை தாரையாய் நீர் பெருக ஆண்டவனைப் பிரார்த்தித்தாள்.

ஜைனுல்லறப் அப்பாழுங்கிணற்றில் அவ்வாறுபரிதபித்துக்கொண்டிருக்க, கோட்டைக்குள் மணவறையில் நித்திரை செய்துகொண்டிருந்த ஹனீபாவிடியற்காலம் நித்திரைதெளிந்துவிழித்துக்கொண்டார். தன் பக்கத்தில் சயனித்திருந்த மனைவியைக்காணோம். எழுந்து காலைக் கடன்களை முடிக்கச் சென்றிருப்பாள் என்று நினைத்துக்கொண்டார். ஆனால் சற்று நேரத்திற்குள் அம்மாது கோட்டைக்குள் இல்லையென்று தெரிந்துவிட்டது. ஹனீபா மிக்க வியாகுலத்துடன் "நமது மூத்த மைத்துனன் கூறிய அந்த இராக்கதனே மாயமாய் அவளைக் கொண்டுபோயிருக்கவேண்டும். நாம் தனியாகவே சென்று அவளை மீட்டுவரவேண்டும். அம்லாக்கு என்பவனும் அந்த வெள்ளை இராக்கதனைப்பற்றி நம்மிடம் கூறியிருக்கிறான். ஆகையால் அவனைக் கொண்டே அந்த இராக்கதனைப்பற்றிய எல்லா விஷயங்களையும் விபரமாய்த் தெரிந்துகொண்டு பிறகு நமது பத்தினியிருக்கும் இடத்திற்குச் செல்லவேண்டும்" என்று தனக்குள் தீர்மானம் செய்துகொண்டு உடனே தன் குதிரையின்மேலேறிக்கொண்டு அம்லாக்கு இருக்குமிடத்தைநோக்கிச் சென்றார்.

அம்லாக்கு என்பவன் ஜன்னல் வழியாய் ஹனீபா வருவதைக் கண்டு இவர் அவ்விடமும் போய் எவ்விதமாய்ச் சுகத்தோடு தப்பி வந்திருக்கிறார் என்று தன் மனதில் சிந்தித்துக்கொண்டே எதிர்கொண்டு போய் ஹனீபா அவர்களை வணக்கத்தோடு அழைத்துவந்து ஆசனத்திலிருத்தி, "தாங்கள் சுகமாய் வந்ததைக் கண்டு மிக்க சந்தோஷமடைகிறேன். ஜம்ஹூர் என்பவன் எல்லா இராக்ஷதர்களைக் காட்டிலும் மிக்க பலசாலியாயும் கர்வமுள்ளவனு மிருந்தானே அவன் சமாச்சாரம் என்ன," வென்று கேட்டான். அதற்கு ஹனீபா "நான் அவர்கள் எல்லோரையும் ஜெயித்து அவர்களை இஸ்லாமாக்கி ஷரியத்தின்படி அவர்களுடைய சகோதரியை நிக்காஹ் செய்துகொண்டேன். இரவு நானும் என் மனைவியும் நித்திரைசெய்துகொண்டிருக்கையில் வெள்ளை இராக்ஷதன் மோசம் செய்து என்னுடைய பத்தினியைக் கொண்டுபோயிருக்கிறான். ஆகையால் நீ என்னைச் சீக்கிரமாய்

அவன் வசிக்கும் இடத்திற்குக் கொண்டுபோகவேண்டும்" என்றார். இதை [illegible] அம்லாக்கு என்பவன்கேட்டு அந்த இராக்ஷசனை ஜம்ஹூர் என்பவனைப்போல் எண்ணவேண்டாம். அவனோ 80 கெஜம் உயரமுள்ளவனும், பலத்தில் வெகு பேர்போனவனும், ஒரு யானையை ஒரு மூச்சில் புசித்துவிடுபவனுமாயிருக்கிறான். ஒரு மனிதனும் அவனுடன் எதிர்க்க திராணியுள்ளவனு மிருப்பதில்லை. அவனுடைய கேசம் வெள்ளையாயும், மற்ற தேகமெல்லாம் வெண்ணிறமாயுமிருக்கின்றது. ஆகலால் அவன்பேர் வெள்ளை இராக்ஷசனென்று வழங்கப் பட்டிருக்கிறது. இதுவே அவன் நாமமாயிருக்கின்றது என்று சொன்னான்.

இதை எல்லாம் ஹனீபா கேட்டு, ஓ அம்லாக்கு என்பவனே நீ அவன் பெருமையைப் பாராட்டிக்கொண்டிராதே. சீக்கிரம் எழுந்து என்னோடு கூடவா. வீணாய் இன்னும் ஆலஸ்யம் செய்வாயானால் என் கோபத்திற்காளாவாய் என்றார். ஹனீபாவின் வார்த்தையைக் கேட்ட அம்லாக் என்பவன் உடனே புறப்பட்டு, அவரை யிட்டுக்கொண்டு இராட்சசனிருக்கும் கிணற்றருகிற் சென்று "இதோ இக்கிணற்றில்தான் அந்த இராக்ஷதன் இருக்கிறான்" என்றான். அப்போது அக்கிணற்றின்மேல் குன்றைப்போலொத்த ஒரு பாறை மூடிவைத்திருந்தது. அப்பாறையை யசைக்கவும் அதுகாலம் யாராலும் முடிந்ததில்லை. ஆகையால் அக்கிணற்றுக்குள் ஒருவரும் சென்றதில்லை.

அம்லாக்கு கிணற்றைக்காட்டியவுடனே ஹனீபா அவனைநோக்கி "உனக்குச் சுத்தவீரத்தன்மையிருக்குமாகில் நீ இந்தப் பாறையைத் தூக்கி அப்பால் வைத்துவிட்டுப் பின்பு கிணற்றுக்குள் போய் இராக்ஷதனைக்கொன்று என் காதலியை இட்டுக்கொண்டு சீக்கிரத்தில் கிணற்றுக்கு வெளியில் வந்துவிடு என்று சொன்னார். இதைக்கேட்டு அம்லாக்கு என்பவன் தன் தலையைப்பூமியின்மேல் வைத்து "ஓ அரசரே, தாங்கள் என்னைக் கொன்றுவிட்டாலும் கொன்றுவிடுங்கள். அது எனக்குச் சம்மதம். ஆனால் நான் ஒருபோதும் கிணற்றிற்குள் இறங்கமாட்டேன். என் உயிர் எனக்குப்பிரியமாயிருக்கிறது. அதை எப்படி நான் வீணே இழந்துவிடுவேன் என்றான். அவன் கூறியதைக்கேட்டு ஹனீபா அப்படியானால் இப்போது நீ இங்கு நின்று ஆண்டவன் என்னைக் கிணற்றுக்குள் எவ்விதமாய்க் கொண்டுபோகிறான் என்பதைப் பார் என்றுசொல்லித்தன் இடுப்பைக்கட்டிக்கொண்டு அப்பாறையைத்தூக்

கிக் கிணற்றின் பக்கத்தில் வைத்துவிட்டு இடுப்பில் கயிற்றைக் கட்டிக்கொண்டு அம்லாக்கை நோக்கி நீ இக்கயிற்றின் நுனியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிரு என்றார். அதற்கு அம்லாக்கு "நான் அப்படியே செய்கிறேன். ஆனால் அங்கு தங்களுக்கு நடக்கும் சங்கதி இன்னதென்று எனக்கு எப்படித் தெரியவரும்? நான் எதுவரை இவ்விடத்தில் காத்துக்கொண்டிருக்கவேண்டும்? நான் 6-நாழிகை வரை காத்திருப்பேன்" என்று சொன்னான். அதற்கு அவர் "நான் எப்போது முதல் கர்ஜிக்கிறேனோ அப்போது நான் அவனுடன் யுத்தத்தில் இருக்கிறேனென்று நீ நினைத்துக்கொள். பின்பு எப்போது என் ௨-வது கர்ஜனையின் சப்தத்தை நீ கேட்பாயோ! அப்போது நான் அவன்மேல் பாய்ந்தேன் என்று எண்ணிக்கொள். பின்னும் எப்போது நீ என்னுடைய 3-வது சப்தத்தைக் கேட்பாயோ அப்போது நான் அவனைக் கொன்றுவிட்டேன் என்று உன் மனதில் திடமாய் எண்ணிக்கொள். நீ இவ்விடம் 3-நாழிகைவரை எதிர்பார்என்று" சொன்னார். அம்லாக்கு என்பவன் அதற்குச் சம்மதித்து அவர் பாதத்தை முத்தமிட்டான்.

இதின்பின் ஹனீப்ஷா ஆண்டவனையும் அவனுடைய ரசூலையும் தியானம் செய்து கிணற்றுக்குள் போய் அவ்விடம் நாலாபக்கமும் சுற்றிப்பார்த்தார். அப்போது அங்குக் கட்டிவைக்கப்பட்டிருந்த தன் மனைவியைக்கண்டு அவளை அக்கட்டிலிருந்து அவிழ்த்துவிட்டு இவ்வுனக்கு நேரிட்ட ஆபத்தின் விவரமென்ன? என்று கேட்டார். அதற்கு ஜைனுல் அறப் தான் நித்திரையிலிருந்தபோது தனக்குத் தெரியாமல் இராக்ஷதன் தன்னைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டதையும், தான் விழிப்படைந்தபோது அங்குக் கட்டிலில் கட்டப்பட்டிருந்ததையும் கூறி "அந்தோ என் மணாளரை நான் இக்கிணற்றில் காண்கிறது கனவோ உண்மையோ? அவர் இங்கு வருவது சுலபமல்லவே. இது இக்கொடும் பாதகனாகிய இராக்ஷதனுடைய மாயையோ" என்று பிரலாபித்தாள். இதை ஹனீப்ஷா கேட்டு "ஓ என் சுந்தரியே பயப்படாதே. இன்றைக்கு ஆண்டவனுடைய கிருபை உன்னிடம் வந்திருக்கிறது. நானே உண்மையாய் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரனாகிய இராஜசிங்கமே. இப்போது அந்த வெள்ளை இராக்ஷதன் எங்கேயிருக்கிறான். சீக்கிரம் அவனை யெனக்குக் காட்டு. நான் அவனைக் கொல்லவேண்டும்" என்றார்.

அதற்கு ஷெ. ஜைனுல்அறப் கிணற்றில் மற்றோர் பாகத்தில் சுட்டிக்காட்டி அதோ அவன் அங்குக் கட்டிலில் படுத்திருக்கிறான். இதுவே

நல்ல சமயம். நீர் என்னைச் சீக்கிரமாய் இந்த இடத்திலிருந்து இட்டுக்கொண்டு போய்விடும் என்று சொன்னாள். அப்போது ஹனீப்ஷா "நீ என் காதலியே, ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரன் வெகு பெரிய கோழை நெஞ்சனாயிருக்கிறானென்று உன் சகோதரர்கள் என்னைச் சொல்லுவார்கள். என்பிதா அவர்களும் என்மேல் சந்தோஷமடைய மாட்டார். என்மனதும் ஒப்புக்கொள்ளமாட்டாது. பின்னும் ஒருவேளை நான் வெள்ளை இராக்ஷசனைக் கொல்லாமல் உன்னை இட்டுக்கொண்டு போய் வெள்ளை இராக்ஷசனைக் கொன்றுவிட்டேன், என்று சொல்வேனானால் அப்போது அது பொய்யாகும். நானோ சற்புத்ரனாயிருக்கிறேன். ஒருபோதும் பொய் சொல்லமாட்டேன். இப்போது நான் அவனை என் பட்டயத்தால் அறுத்துக்கொன்று போடுகிறேன். நீ இந்த இடத்திலேயே உட்காரு. நான் அவனுடன் யுத்தம் செய்யப் போகிறேன்" என்று சொன்னார். ஆனால் ஜைனுல் அறப் அதை ஒப்புக்கொள்ளாமல் என்னையும் நீர் உம்மோடு கூட கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று சொன்னாள். அதற்கு அவர் [illegible] என்று சொல்லித் தன்னுடன் அழைத்துக்கொண்டு அந்த இராக்ஷசன் படுத்திருந்தவிடத்தில் போய் அவனைக்கொல்ல சம்சாம் என்ற பட்டயத்தை எடுத்துக்கொண்டு ஆயத்தப்பட்டார். அவனோ கட்டிலின்மேல் மல்லாந்து படுத்திருந்தான். அப்போது ஹனீப்ஷா அவனுடைய உள்ளங்காலில் கட்டையைக் கொண்டு குத்தி அவனை ஏழு விரற்கடை தாழப் பதித்தினர். அவனோ கடும் நித்திரையிலிருந்தான். ஆகையால் அக்குத்து அவனுக்குக் கொசுவின் கடியைப் போலிருந்தது. அப்போது ஹனீப்ஷா கோபங்கொண்டு அவனுடைய காதில் ஹைதரி சத்தத்தைச் சப்தித்து அவனுடைய தூக்கம் கலைந்திடும்படி செய்தார். உடனே அவன் நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டு ஜைனுல் அறப் ஹனீப்ஷா உடனின்றுகொண்டிருப்பதைப் பார்த்து மிக்க உக்கிரங்கொண்டு உயிரை வெறுத்து ஏழு மணங்கு பாரமுள்ள ஒரு கல்லைத் தூக்கி அவர்மேல் எறிந்தான். அதற்கு அவர் தப்பித்துக்கொண்டு சுறுசுறுப்பாய் அவன் சமீபத்தில் சென்று அவன் கழுத்தின்மேல் ஓர் பலத்த குத்து குத்தினர். உடனே அவன் கண்களில் இருள் மூடிக்கொண்டது. அப்போது அவன் அதனாலுண்டான வேதனையால் மிக்க கஷ்டமடைந்தானும் உக்கிரத்தில் சுவாலித்துக்கொண்டு கண்களில் அக்கினிப்பொறி சிந்த ஆரவாரித்து அட மனிதப்பதரே, இழிபவனே நீ என்னைக்கொ

சேடா. இதோ நொடிக்குள் உன்னைக் கசக்கிப்பிழிந்து உன்உதிரத்தைக் குடித்து விடுகிறேன் பார் என்று ஆங்காரத்தோடு பாய்ந்துவந்து ஹனீப்ஷாவின் இருகரங்களையும் பிடித்து இழுத்தான். அவரோ ஒரு மயிரிழைகூட அசையவில்லை. இதைக்கண்டதே அரக்கனுக்குத் திகில் பிடித்தது. அவன் நெஞ்சு தடுமாற்றமடைந்தது. ஹனீப்ஷா தன் எதிரிக்குண்டான இளிவை யறிந்து இதுதான் தருணமென்று தன் கையை முஷ்டி பிடித்து பலங்கொண்டமட்டும் ஓங்கி அவனுடைய புருவமையத்தில் ஒரு குத்து விட்டார். அதனால் அரக்கன் பொறி கலங்கித் தள்ளாடிய சமயம் பார்த்து அவன் கால்களைத் தட்டிவிட்டார். இராக்ஷதன் உடனே அடியற்ற மரம்போல் பூமியில் சாய்ந்தான். அவன் மூக்கினும் வாயினுமிருந்து உதிரம் பொங்கியது.

அரக்கன் தன் மரணம் சமீபித்து விட்டதை யுணர்ந்து வாயை யேந்தி தன் எதிரில் நிற்கும் ஹனீப்ஷாவைப் பார்த்து, "நான் செத்த பின் நீர் இங்குள்ள என்னுடைய எல்லாச் சொத்தையும் எடுத்துக் கொண்டுபோய் விடவேண்டும். இப்போது என்னைச் சீக்கிரமாய் தூரத்தில் எறிந்துவிடும். அக்கினியை அமைத்துவிட்டு அதின் பொறியை விட்டு விடலாகாது. ஏனெனில் அதுமறுபடியும் பற்றிக்கொள்ளுவதில் யாதொரு சந்தேகமில்லை," என்று அவன் சொன்னான். இதை அவர் கேட்டு "ஓ சண்டாளனே, என்ன நீ எனக்குப்புத்தி புகட்டுகிறாயோ, நானோ அதுசெய்ய ஆயத்தமாகவே இருக்கிறேன். ஏனெனில் இராக்ஷதன்மேல் இரண்டு அடிபட்டுப் அடிக்கலாகாது. இரண்டு அடிபட்டு அவன் சௌக்கியமடையக் கூடும். ஆதலால் நீ உடனே அவன்மேல் ஹைதரி சத்தத்தைச் சப்திப்பாயாக வென்று என்பிதாவாகிய மௌலா அலி அவர்கள் என்னை நசீஹத்து செய்திருக்கிறார்கள்" என்று சொல்லி அவன்மேல் ஹைதரி சப்தத்தைச் சப்தித்தார். எப்போது அந்தச் சத்தத்தை அந்த மல்ஊன் கேட்டானோ அந்த க்ஷணமே அவனுடைய ஆத்துமா பறந்து நரகத்தில் போய்ச் சேர்ந்தது.

அதன்பிறகு தம்பதிகளிருவரும் அங்கிருந்த அவனுடைய ஆஸ்தியைத் தேடத் தொடங்கினார்கள். அவன் நெடுநாளாய் சேகரித்து வைத்திருந்த வைரங்களும், இரத்தினங்களும், முத்துக்களும், நவரத்தினங்களிழைத்த ஆபரணங்களும், தங்கப்பாளங்களும் யாவும் இவர்களிடம் சிக்கின. ஹனீப்ஷா யாவற்றையும் வாரி ஒரு பெட்டியில் போட்டு அதைத்தொங்கும் கயிற்றில் கட்டிவிட்டு அப்பெட்டியின்மேல்

தன் நாயகியை உட்காரவைத்து இதை இழுத்துக்கொள்ளும்படி அப்லாக்கு என்பவனுக்கு ஜாடையால் தெரியப்படுத்தினார். ஒடு அப்லாக்கு என்பவன் ஜாடையறிந்து உடனே அக்கயிற்றை இழுத்தான். பெட்டியின்மேல் ஜைனுல் அறபைக் கண்டதே அவன் மனதில் கெட்ட எண்ணம் உதித்தது. பெட்டியையும் அம்மாதையும் கிணற்றிலிருந்து வெளியேற்றிய பின் மறுபடி கயிற்றைக் கிணற்றில் விடாமல் கரையிலேயே எறிந்துவிட்டான். ஏனெனில் பெட்டியையும் இந்த ஸ்திரீயையும் நாம் அபகரித்துக்கொள்ளவேண்டும். ஹனீப்ஷா கிணற்றிலிருந்து வெளிவர முடியாது. நாம் இம்மாதை மணம் புரிந்து கொள்வோம் என்று சிந்தித்துக் கொண்டான். கெடுவரும் முன் மதி கெட்டுவரும் என்று ஆன்றோர் கூறுவது பழுதாகுமோ. ஆகையால் அவன் அப்பெட்டியையும், பீபி ஜைனுல் அறபையும் தன் குதிரையின்மேல் ஏற்றிக்கொண்டு உடனே தன் நகரை நோக்கிப் புறப்பட்டான். சிநேகத்துரோகியும் வஞ்சனுமாகிய அப்லாக் என்பவன் பெட்டியையும், பீபி ஜைனுல் அறபையும் தன் மாளிகையில் கொண்டுபோய் இறக்கி இச்சந்தோஷ சங்கதியைத் தன் அரசனான கத்ருனிடம் கூறிவிட்டுக் கலியாணம் செய்வதற்கும், ஊர் ஜனங்களுக்கெல்லாம் விருந்து வைப்பதற்கும் ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான்.

பீபி ஜைனுல் அறப் அப்லாக்கின் கபடசிந்தையை யறிந்ததே "ஓ துரோகியே, உனக்கு நீயே யேன் வீணாய் அழிவைத் தேடிக் கொள்ளுகிறாய். என்கணவரான இராஜசிங்கத்தைச் சாதாரண மனிதனாய் எண்ணிப்படுகுழியில் வீழாதே. இப்போதும் நான் உன்னை மன்னித்து உன்னுடைய துர்எண்ணத்தை யவரிடம் கூறாமலிருக்கிறேன். பேசாமல் கயிற்றைவிட்டு அவரை மேலேறிவரச்செய். உன் பிரயத்தனம் பலிக்காது. பதிவிரதைகள் சாபம் பொல்லாது. உன் ஜாலக்வாதும் கடவுளை நம்பினோர் முன்னே நில்லாது" என்று தன் மொழிகளால் புத்தி புகன்றாள்.

அந்தத் துஷ்டனுக்கு அது மனதிற் படவில்லை. காதல் அவன் கண்களை மறைத்துவிட்டது. அவன் அந்த உத்தமியை நோக்கி, "ஓ அழகு சுந்தரியே, ஆதிமுதல் நானே உன்மேல் நீங்காக் காதல் கொண்டிருப்பவன். அந்த இராட்சதன் அதன்பிறகே யுன்னைக் கண்டான். நான் அவனை யொழிக்கச் சமயம் பார்த்துக்கொண்டேயிருந்தேன். இன்று சமயம் வாய்த்தது. என் உதவியில்லாவிட்டால் அந்த

ஹனீபாவை அவனைக் கொன்றிருக்க முடியாது. இனியவர் கிணற்றிலிருந்து வெளிவரப்போகிறதில்லை. ஏககாலத்தில் என் போட்டிக்காரர் இருவரும் ஒழிந்து நீயும் என் கையில் சிக்கிவிட்டபோது இப்போது உன்னை விட்டுவிட நான் முழுமூடனாக வல்லவோ இருக்கவேண்டும்; நீ அவன் ஆசையை விட்டுவிடு. என்னிடம் எல்லாப் போகபாக்கியமுமிருக்கிறது" என்று கூறியபோது பீபி ஜைனப் அறப் மிக்க கோபமும் ஆயாசமும் அடைந்து "ஏ புத்தியீனனே! உன் வாயை யித்தோடு மூடு. உனக்கு அழிவுகாலம் சமீபித்துவிட்டது. அந்த அரக்கனிடம் அநியாயச்சிக்கிக்கொண்டிருந்த என்னைக்காப்பாற்றிய ஆண்டவனுக்கு என் கணவனை உக்கிணற்றிலிருந்து வெளிப்படுத்துவது ஒரு பெரிய காரியமல்ல. என் பதிவிரதாத் தன்மையைக் காப்பாற்றுவதும் அவருக்கு ஒரு பெரிதல்ல" என்று கூறிவிட்டு; வியாகுலத்தோடு ஆண்டவனைத் துதித்துக்கொண்டிருந்தாள். ஹனீபாவிற்கு முன்னிருந்த துயரம் நீங்கி நூதனமான வேறு துயரம் வந்து சம்பவித்தது. அவர் கயிறு மறுபடி தொங்கவிடப்படாததைக் கண்டு அய்யமுற்று அம்லாக்கு என்பவனைப் பலதரம் உரத்துக் கூப்பிட்டார். எத்தனைதரம் கூப்பிட்டும் பதிலே வரவில்லை. முதலில் வியப்பும், பிறகு சந்தேகமும் உண்டாய்விட்டது. கடைசியில் அம்லாக்கு என்பவன் சதி செய்தான் என்று தெரிந்துகொண்டு மனம் நொந்து சரி, இனி நமக்கு இந்த விடத்தில் உதவிசெய்ய ஆண்டவனையன்றி வேறு யாருமில்லை யென்றுணர்ந்து, ஆண்டவனை நோக்கி முறையிட்டுக்கொண்டார். "ஓ ஆண்டவனே என்னுடைய சக்தி உள்ளபடி நான் சொன்னவேளையில் என் வழியைக் கேட்கும் பறவைகளும் மச்சங்களும் கூட கண்ணீரிடும். அப்போ நான் என் வயது முழுமையையும் அசட்டையாலும் அகங்காரத்தாலும் துக்கங்களில் செலவழித்தேன். இன்றைக்கு எனக்கு என்றுமில்லாத் துயரமுண்டாயிருக்கிறது. இச்சமயம் என்னைக் காப்பாற்ற உன்னைத்தவிரவேறு ஒருவனும் இல்லை. நீயோ எல்லாக்காரியத்திலும் வல்லவனுமாயிருக்கிறாய். என்னை யிக்கிணற்றிலிருந்து வெளியேற்றுவது உனக்கு வெகு இலேசாகக் காரியமாயிருக்கிறது. உம்மத்தின் இரக்ஷகராகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்காக நீ என்னை இக்கஷ்டத்திலிருந்து, விமோசனம் செய்யவேண்டும்" என்று அழுதார். பின்னும் அவர். "ஓ பிரபஞ்சத்தாரின் நாயகரும், நீர்க்கரி

பியுமானவரே! இக்கிணற்றிலிருந்து தப்ப நீரேயெனக்கு வழிகாட்டுகிறவராக வேண்டும். நானே இக்கிணற்றில் அகப்பட்டுக்கொண்டேன். இதிலிருந்து தப்ப இன்னவிதமாய் முயற்சி செய்வதென்று ஒன்றுமே யெனக்குத் தோன்றவில்லை, என்னுடைய அங்கலாய்ப்பைக் கேட்கிறவன் ஒருவனுமில்லை" என்று தன் தலையைப் பூமியின்மேல் வைத்துக் கண்ணீர்விட்டு மன்றாடினார்.

இதற்குள் அவருடைய நயனங்களில் நித்திரை வந்துவிட்டது. அப்போது அவர் ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களைச் சொப்பனத்தில் கண்டார். அவர்கள் ஹனீபாவை நோக்கி, "ஓ மௌலா அலியின் குமாரனே, நீ உன் தலையை யெடு. எந்த இடத்தில் கஷ்டமிருக்கிறதோ அந்த இடத்தில் சுகமுமிருக்கிறது. ஆண்டவன் உன்னுடைய உதவிக்காரனும் உன்னைக் காத்துக்கொள்ளுகிறவனுமா யிருக்கிறான். உன்னுடைய கஷ்டங்களெல்லாம் விலகிப்போய்விட்டன. உன்னுடைய காரியத்திற்கு ஆண்டவன் பொறுப்பாளியாயிருக்கிறான்;" என்று சந்தோஷச் செய்தியைச் சொல்லிப் போய்விட்டார்கள்.

ஓ நண்பர்களே, அவரைக் காப்பாற்ற ஆண்டவன் முகாந்தரத்தை எவ்விதமாய் காண்பித்திருக்கிறான் என்பதைக் கவனமாய்ப் பாருங்கள். அக்கிணற்றின் ஓரத்தில் ஹனீபாவுடைய நற்குணமுள்ள குதிரை நின்றிருந்தது. அதுவோ அவரிடம் அன்பு நிறைந்ததாயிருந்தது. ஆண்டவனுடைய கிருபையால் மிருகஜென்மமாகிய அக்குதிரைக்கு அச்சமயம் அறிவுவிளங்கிக் கிணற்றின் கரையிலிருந்த கயிற்றின் ஒரு முனையைத் தன் கால்களில் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு மறு முனையை வாயால் கவ்விக் கிணற்றில் விட்டது. கயிறு கிணற்றுக்குள் தொங்கிக்கொண்டிருப்பதை ஹனீபா பார்த்தவுடனே முழுதிருப்தியுடனும் அல்ஹம்து அதி சந்தோஷத்தோடு ஆண்டவனுடைய ஷுக்ர் என்ற வந்தனத்தைச் செலுத்தி நிச்சயமாகவே ஆண்டவனுடைய உதவியெனக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே கயிற்றைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்தார். கரையில் தன் குதிரையைக் கண்டபோது அதனால்தான் நாம் காப்பாற்றப்பட்டோம் என்பதை யறிந்து குதிரையுடைய அன்பைக்கண்டு அதின் முகத்தின்மேல் கையைத் தடவினார். பின்பு மனைவியைத்தேட குதிரையின்மேல் ஏறிப் புறப்பட்டார். பின்னும் அவர் சிலதூரம் நடந்ததின் பின் ஜுப்தாவீர் என்பவன்

எதிர்பட்டு அவரைநோக்கி மிக்க சந்தோஷத்தோடு எங்கள் உயிரும் இருதயமும் உங்கள் மேலேயே நாட்டமாயிருக்கின்றன. ஆண்டவன் உம்மைக் காத்துக்கொண்டிருக்கிறவனாயிருக்கிறான். நீ சங்கடத்தில் சிக்காமல் திரும்பி வந்ததற்காக மிக்க சந்தோஷமடைகிறேன். நடந்த சங்கதி யென்ன, என் தங்கை யெங்கே என்று கேட்டான். அதற்கு அவர் "ஓ ஜும்ஹூரே, உன் தங்கையை யெடுத்துக்கொண்டு போன அந்த வெள்ளை யிராக்ஷதனை நான் வெட்டிவிட்டேன். அவனைக் கொன்றுவிட்டு நான் கிணற்றுக்குள் இருந்த பீபீ ஜைனுல் அறபைக் கிணற்றின்மேல் அனுப்பினேன். அப்போது அம்லாக்கு என்பவன் என்னை வருத்தி மோசஞ்செய்து உன் சகோதரியைக் கொண்டுபோயிருக்கிறான்" என்று சொன்னார். ஜும்ஹூர் இதைக்கேட்டு "இப்போது நீர் விசாரமடையவேண்டாம். வீட்டுக்குப் போகலாம் வாரும். அவ்விடம் போய் நான் எல்லாச் சகோதரர்களையும் இட்டுக்கொண்டு அம்லாக்கு என்பவனுடைய தலையை மண்ணோடு மண்ணாகும்படி செய்கிறேன்" என்று சொன்னான். அவ்வாறே இருவரும் கோட்டைக்குச் சென்று ஜும்ஹூரின் மற்ற சகோதரர்களையும் கூட்டிக்கொண்டு அம்லாக் என்பவன் இருக்கும் கரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

இவர்கள் காட்டில் நுழைந்து சென்றுகொண்டிருக்கையில் சற்று தூரத்தில் தெய்வீகமான சோதிப்பிரகாசம் ஒன்று புலப்பட்டது. ஜும்ஹூர் அதைக் கண்டு மிக்க வியப்படைந்து இக்காட்டில் இந்த சோதி வந்த காரணம் என்ன, இது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது என்று ஹனீபாவிடம் கூறினான். அதற்கு அவர் "ஓ என் மைத்துனனே, இந்த இரகசியத்தை நீ கேள். இந்தச் சோதியோ என் சகோதரர்களுடைய அடையாளமாயிருக்கின்றது. சந்தேகமற நிச்சயமாய் ஹஸன், ஹுஸைன் அவர்களுடைய சோதியாயிருக்கின்றது" என்று சொன்னார். அப்போது எல்லோரும் ஓடி முன் சென்று பார்த்ததில் ஹனீபா கூறியபடியே அவ்விருவர்களும் வருவதைக் கண்டார்கள்.

ஹனீபா தம் சகோதரர் இருவர்க்கும் பக்தியோடு ஸலாம் அளித்து பிதா அவர்களின் சமாச்சாரத்தைப்பற்றி விசாரித்தார். அதற்கு அவர்கள் "உமக்காகப் பிதா அவர்கள் விசாரமுற்று எங்களை யழைத்துக்கொண்டு உன்னைத் தேடப் புறப்பட்டார். சிஞ்ஜிலா வனாந்தரத்தில் நீர் இருப்பீர் என்று எங்களுக்குத் துப்பு சொல்லி அவர்கள் எங்களை அனுப்பிவிட்டுப் பிதா அவர்கள் சமீபத்தில் தங்கி

யிருக்கிறார்கள். நாங்களோ உம்மைத் தேடிக்கொண்டு வனாந்தரம் வந்தோம். இன்றைக்கு நாம் உம்மை ஷைரந்து என்ற வனாந்தரத்தில் கண்டோம். ஷைரந்து என்ற தேசத்தை ஜெயித்தோம். ஆனால் கோட்டை ஜெயிக்க வேண்டியது பாக்கியாயிருக்கிறது. இதைப் பிடிப்பது ஒரு நிமிஷக்காரியம். ஆனால் பிதா அவர்களைக் காணவேண்டுமென்ற ஆவலால் வந்துவிட்டோம் என்று சொன்னார்கள். இதின் பின் அந்த மூன்று தலைவர்களும் ஜும்ஹூர் முதலிய சகோதரர்களுடன் புறப்பட்டு ஹஸரத்து மௌலா அலி அவர்கள் சமுகம் போய் அவர்கள் கால்களை முத்தமிட்டார்கள்.

ஹஸரத்து மௌலா அலி தம் புத்திரர்களைக் கண்டதும் மிக்க சந்தோஷமடைந்து அவர்கள் ஒவ்வொருவரையும் தம் நெஞ்சோடு அணைத்து என் மனது அமைதி யடைந்ததென்று சொன்னார்கள். இதின்பின் ஹனீபா ஆதிமுதல் கடைசிவரை நடந்த எல்லாச் சமாச்சாரங்களையும், ஹஸரத்து மௌலா அலி அவர்களுடன் சொல்லி முடிவில் "ஜும்ஹூர் என்பவனும், அவனுடைய சகோதரர்களும், அவர்களுடைய சகோதரியும் ஈமான்கொண்டு வந்தார்கள். நான் படுக்கையின் மேல் போய்ப் படுத்தேன். ஜைனுல் அறப் என் வைத்தியத்தைச் செய்து கொண்டிருந்து நித்திரை போய்விட்டாள். அத்தருணம் வெள்ளை இராக்ஷசன் வந்து அவளைத் தூக்கிக்கொண்டு போய் கிணற்றுக்குள் சிறையாய் வைத்திருந்தான். நான் அக்கிணற்றுக்குள் போய் அந்த இராக்ஷசனைக் கொன்று பெட்டியின்மேல் ஜைனுல் அறபை உட்கார வைத்துக் கிணற்றின்மேல் அனுப்பிவித்தேன். அம்லாக்கு என்பவன் சதிசெய்ய நினைத்து என் மனைவியைக் கொண்டு போயிருக்கிறான். அந்தத் துஷ்டன் செய்த மோசத்தால் என் மனம் துடித்துக்கொண்டிருக்கிறது. என் நெஞ்சில் தீப்பற்றி எரிகிறது. என் துயரம் ஆண்டவனுக்கே தெரியும். ஓ என் பிதாவே, இச்சமயம் கேளுங்கள். அவன் ஜைனுல் அறபை விவாகம் செய்துகொள்வதாய் சக்காரு அடிக்கிறான். ஆதலால் ஜைனுல் அறப் தன்னுடைய உயிருக்கு என்ன கேடு செய்துகொள்ளுவாளோ என்று மிகவும் கவலை யுள்ளவனாயிருக்கிறேன். ஆதலால் நான் விசாரத்தில் மூழ்கிப்போயிருக்கிறேன்" என்று சொன்னார்.

அதற்கு ஹஸரத்து மௌலா அலி அவர்கள் "ஓ என் அருமையான மகனே, நீ உன்னுடைய மனதை தக்தீரின் மேல் முடிவாக வைத்

இரு. ஆண்டவன் என்னைக் காக்கிறவனா யிருக்கிறானே. அப்போப் பட்டணத்துடைய வருத்தமான காரியங்களை இலேசாக்கி விடுவான். நான் இன்று இரவு தனிமையாக அப்பட்டணத்துக்குப்போய் அந்தப் பாவி என்ன செய்கிறான் என்று பார்க்கிறேன். உபாயத்தால் நான் உன்னுடைய மனைவியாட்டியை உன்னிடம் கொண்டுவந்து சேர்க்கிறேன்" என்று சொல்லிக் கூடாரத்துக்கு வெளியில் வந்து ஒட்டை ஜவானிடம் போய் நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். நான் பட்டணத்துக்குள் போகிறேன் என்று சொன்னார்கள். இதற்குள் [illegible] நக்ஷத்திரனை [illegible]. முஸ்லிம்கள் மக்ரிபில் வந்து சேர்ந்தார்கள்.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஜைனுல் அறபை மீட்டுக்கொண்டுவரப் புறப்பட்டது.

ஹசரத்து மௌலா அலி அவர்கள் மக்ரிப் தொழுது இஸ்மே ஆலி ஓதி தமது குதிரையின்மேல் ஏறிக்கொண்டார்கள். பின்பு அம்லாக்கு என்பவனிருக்கும் பட்டணத்துக்குள் தனிமையாகப் போகப்புறப்பட்டார்கள். அவர் தனியே ஒரு முசாபரைப்போல் நகருக்குள் நுழைந்து அரண்மனைப் பக்கம் சுற்றி, எல்லா விசேஷங்களைப் பார்த்துக்கொண்டு போகையில் அம்லாக்கு என்பவன் வெகு மாட்சிமையோடும், மகிமையோடும் குதிரையின்மேல் ஏறிப் பட்டணப்பிரவேசம் செய்வதைக் கண்டார்கள். பின்பு அவன் திரும்பி வருவதற்கு முன்னமே ஜைனுல் அறபைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று எண்ணி அம்லாக்கின் மாளிகைக்குள் சென்றார்கள்.

அச்சமயம் ஜைனுல் அறபை [illegible] பேர்கள் சேர்ந்து சிங்காரம் செய்வித்து உடைபுனைவித்து அநேக நகைகளால் அலங்கரித்துப் பலவந்தமாய் விவாக சிம்மாசனத்தின்மேல் கொண்டுவந்து உட்கார வைத்தார்கள். அப்போது ஜைனுல் அறபுடைய சிந்தையானது சொல்ல முடியாத நிலைமையிலிருந்தது. அவள் தாரை தாரையாய்க் கண்ணீர் வடித்துக்கொண்டு, "ஓ என் ஆண்டவனே, இப்போது என்னுடைய ஆபத்து நெருங்கிவிட்டது. இச்சமயம் என்னுடைய மானத்தைக் காப்பாற்ற உன்னையன்றி வேறு இல்லை. நீ கருணாநிதியே, கணவனே தெய்வமென்று நம்பியிருக்கும் பதிவிரதையின் கஷ்டங்களைப் பார்த்தும் உமது கடாக்ஷமில்லையோ" என்று கடவு

ளைத் துதித்துக்கொண்டிருந்தாள். இச்சமயத்தில் அம்லாக்கு என்பவன் பட்டணப்பிரவேசம் முடிந்து வீட்டுக்கு வந்து திருமண சிம்மாசனத்தின் மேல் ஏறினான். அப்போது ஹசரத்து மௌலா அலி அவர்கள் எதிரில் நின்றுகொண்டிருந்தார்கள். ஜைனுல் அறபு வெகு ஆயாசத்தோடு "ஓ ஆண்டவனே, இன்னமும் என்னைக் காப்பாற்ற ஆலஸியஞ் செய்யலாகுமோ. அந்தோ என் கணவன் கிணற்றிலிருந்து வெளியேறியிருந்தால் இன்னம் என்னைவந்து மீட்காமலிரார். ஓ கருணையே யுருவான ஆண்டவனே என் கொழுநன் வராவிட்டால் அவர் தந்தையாகிய ஹசரத் மௌலா அலி என்னும் இராஜ சிங்கமாவது இங்கு வரும்படி செய்யலாகாதா. அவர் என் இக்கட்டைக் கண்டதே என் இருதயத்திலிருக்கும் துக்கத்தை விலக்கிவிடுவாரே" என்று பிரலாபித்தாள். அப்போது கூறுவதைக்கேட்ட அம்லாக்கு என்பவன் "ஓகோ உன் கணவன் அக்கிணற்றிலிருந்து வெளியேறுவாரென்ற எண்ணத்தை மறந்துவிடு. மௌலா அலியோ, என் வாசலுக்குள் வர அவருக்கு என்ன சக்தி யிருக்கிறது. இந்தக் கலியாணமோ இரண்டு நாள் கலியாணமாயிருக்கிறது. நாளைக்கே நான் இரத்தப்பழியான யுத்தஞ் செய்ய ஆயத்தமா யிருக்கிறேன்," என்று சொல்லி ஜைனுல் அறபுடைய கையின்மேல் தன் கையை வைத்தான்.

ஜைனுல் அறப் தன் கைமேல் அக்கினி வைக்கப்பட்டதுபோலக் கையை யுதறிக்கொண்டு துடிதுடித்துக்கண்ணீர் ஆறாய்ப் பெருக "ஓ பரம தயாநிதியே! இப்பாவியின் கரம் என்மேல் படலாமோ, தெய்வம் புசிக்கும் போசனத்தைக் கேவலமான நாய் தீண்டத்தகுமோ. பதிவிரதையைத் துராக்ருதமாய் மானபங்கஞ் செய்யத் துணிந்திருக்கும் இக்கொடும்பாவிக்குத் தக்க தண்டனை விதிக்காமலிருப்பது அழகோ. நீ எங்கும் இருந்துகொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருப்பது பொய்யோ" என்று பிரலாபித்துக்கொண்டே "அல்லாஹு அக்பர்" என்று கூவினாள். இதற்குள் ஹசரத்து மௌலா அலி அவர்கள் இஸ்மே ஆலி ஓதிவிட்டு அம்லாக்கு என்பவனுடைய முகத்தின் மேல் கையை ஓங்கி ஓர் அடி அடித்தார்கள், அதனால் அவனுடைய பற்கள் உதிர்ந்து அவனும் பூமியின்மேல் போய்க் குப்புற விழுந்தான். பின்பு அவன் நான் சாகிறேன், நான் சாகிறேன் ஆண்டவனுக்காகத் தாங்கள் என்னை விட்டுவிடுங்கள் என்று அலறினான். அப்போது ஹசரத்து

மௌலா அலி அவர்கள் ஓ பாவியாகிய துடுக்கமற்றவனே! நீ ஆண்டவனை வல்லமைசாலியென்று நினைக்கவில்லையே என்றுசொல்லி அவனைக் கட்டிக்கொண்டும், நான் உன்னை உன் புருடனுடன் சேர்த்துவிடுகிறேன் என்று சொல்லி ஷெ பிபியைத் தன்னுடன் இட்டுக்கொண்டும் புறப்பட்டார்கள். அப்போது ஜைனுல் அறப் சந்தோஷப்பட்டு ஆண்டவனுடைய ஷுக்குரை நிறைவேற்றினாள்.

இதற்குள் அம்லாக்கு என்பவனை ஒருவன் வந்து கட்டிக்கொண்டு போகிறானென்று ஒரு ஆள் சென்று அவன் அரசனான கத்ருன் என்பவனுக்குச் சொன்னான். தன் மந்திரியும் சேனாபதியுமாகிய, அம்லாக்குக்குச் சம்பவித்த ஆபத்தைக்கேட்டதே, கத்ருன் தட்சணம் தன் சேனையைக் கூட்டிக்கொண்டு துரிதமாய் அம்லாக்கின் வாசஸ்தலத்தை நோக்கிச் சென்றான். அவன் சற்றுதூரம் சென்றபோது எதிரில் ஹசரத் மௌலா அலி முதலியவர்கள் வருவதையும், அம்லாக் கட்டுண்டிருப்பதையும் கண்டு அவர்களை வழிமறித்து நின்றான். அம்லாக்கின் கரங்கள் கட்டப்பட்டிருந்ததைப் பார்த்ததே அவனுக்கு மிக்க கோபமுண்டாய்விட்டது. பின்னும் அவன் மிக்க உக்கிரத்தோடு ஹசரத்து மௌலா அலி அவர்களுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தான். ஹசரத்து மௌலா அலி அவர்கள் உடனே தன் இடையிற் றொங்கும் இருபுறமும் கருக்கான வாளை உறையிலிருந்து எடுத்து அங்குள்ளவர்கள் நெஞ்சம் கலங்கும்படி கர்ஜித்து யானைக்கூட்டத்தில் ஆண்சிங்கம் புகுந்ததுபோல் கத்ருனுடைய சேனையில் பாய்ந்து அவர்கள் திடுக்கிட்டு திகைத்து தங்களைக் காத்துக்கொள்வதற்குள் அனேகரைத் தன் வாளின் முன் வீச்சாலும் பின் வீச்சாலும் கண்ட துண்டங்களாக்கி அங்கங்களும் பிணங்கள் குவிந்துவிழும்படி செய்துவிட்டார்.

சேனையிலிருந்தவர்கள் ஹசரத் மௌலா அலி அவர்களுடைய உக்கிரத்திற்கு முன்னிற்க முடியாமல் பின்னிடைந்தார்கள். அனேகர் ஈமான்கொண்டு இஸ்லாமாகித் தங்கள் உயிரைக் காத்துக்கொண்டார்கள். சிலர் அவ்வாறு செய்யாமல் ஆவிபிரிந்து நரகத்திற்காளானார்கள். பின்பு ஹசரத்து மௌலா அலி அவர்கள் கத்ருன் என்பவனையும் பிடித்துக்கொண்டு அவனுடைய கைகளைப் பின்னுக்குக் கட்டிப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். தன் தந்தை வருவதை யறிந்து புத்திரர்கள் எதிர்கொண்டு சென்று சந்தோஷத்தோடு வணங்கி

னார்கள். ஹசரத் மௌலா அலி அவர்களை யாசீர்வதித்து ஹனீபாவிடம் ஜைனுல் அறபை ஒப்பிவித்து அவரைநோக்கி "உனக்குத் துரோகம் செய்த துஷ்டர்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். நீ அவர்களை உன்னுடைய மனவிருப்பத்தின்படி செய்துகொள்" என்று சொன்னார்கள். அப்போது ஹனீபாவும் ஜைனுல்அறபும் ஹசரத்து மௌலா அலி முதலியவர்களை நோக்கி இவர்கள் விஷயத்தில் என்ன செய்வதென்று ஆலோசனை கேட்டார்கள். அதற்கு அவர்கள் எல்லோரும் ஆண்டவனுக்காக அவர்களை இன்றைக்கு மன்னித்து விடுதலை செய்யுங்கள் என்று சொன்னார்கள்.

அம்லாக்கும், கத்ருனும் அவ்வாறே மன்னிக்கப்பட்டபோது அவர்கள் இருவரும் ஹசரத் மௌலா அலி அவர்கள் பாதங்களில் வீழ்ந்து பணிந்தார்கள். ஹசரத்து மௌலா அலி அவர்கள் ஷெஹ்ரந்து என்ற தேசத்தையும் அவர்கள்வசம் ஒப்பிவித்து வருஷா வருஷம் அத்தேசத்தின் வரும்படி சேகரித்து நம்மிடம் அனுப்ப வேண்டுமென்று சொல்லி அவர்களுக்கு ஷெஹரின் எல்லா அதிகாரங்களையும் கற்றுக்கொடுத்து அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடும் செய்தார்கள்.

மறுநாள் ஹசரத்து மௌலா அலி தன் புத்திரர்களோடும், ஜைனுல் அறபோடும் மற்ற பரிவாரங்கள் சகிதமாய் மதீனமா நகரை நோக்கிப் புறப்பட்டார்கள். யாவரும் சுகமாய் சந்தோஷத்தோடு மதீனமா நகருக்கு வந்து சேர்ந்ததும், ஹசரத்து ஹனீபா அவர்களும், ஹசரத்து மௌலா அலி அவர்களும், ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சமுகம் வந்து இருலோக பாக்கியத்தை அடைந்தார்கள். இவர்கள் தாங்கள் சென்றது முதல் இதுவரையில் நடந்த எல்லாச் சங்கதிகளை ஆதி துவக்கி அந்தம் வரை விவரித்து ஹசரத்து நபிநாயகம் அவர்கள் சமுகத்தில் கூறியபோது நாயகமவர்கள் புன்சிரிப்போடு ஹனீப் என்னுடைய வீரமுள்ள வேங்கை (புலி) யாயிருக்கிறான் என்ற பட்டத்தைத் தந்தார்கள். இந்தப் பட்டத்தை அவர் பெற்றுக்கொண்டு சகோதரர்கள் சகிதம் ஹசரத்து பாத்திமா நாச்சியார் அவர்களிடம் வந்து பாத தரிசனை செய்தார். ஷெ பிபி அவர்கள் அவரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். பின்பு ஷெ மூன்று சகோதரர்களும் வீட்டிலேயே இருந்துகொண்டிருந்தார்கள். அனீபா புத்தியிலும், அறிவிலும், வீரியத்திலும், பராக்கிரமத்திலும், நாளுக்குநாள் விர்த்தியடைந்து பெருபிரக்

கியாதி யுடையவரானார். அம்லாக்கு என்பவனும், கத்ருன் என்பவனும் ஷோந்து தேசத்தின் பகுதிப்பணங்களைச் சேகரித்து ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் சமூகத்திற்குக் கிரமப்படி அனுப்பிவித்துக்கொண்டிருந்தார்கள்.

ஹனீப்ஷா தன் தாயாரை அழைத்துக்கொண்டு வருதல்.

உலகில் ஒருவனுக்கிருக்கும் சுற்றத்தாரில் தாயினும் அருமையானவர்கள் யாருமில்லை. எவனும் தன்னைப்பெற்ற தாயையே முதல் முதல் உலகத்தில் காண்கிறான். தாய் மூலமாய்ப் பிறகு தந்தையைக் காண்கிறான். தாயாலேயே ஆதரிக்கப்படுகிறான். ஆகையால் தாயைப் பிரிதல் எவர்க்கும் வருத்தமே. ஹனீப்ஷா தன் தாயைப் பிரிந்து வந்து கொஞ்ச காலமாய் விட்டபடியால் தாயின் நினைப்பு அவர் மனதை வாட்ட ஆரம்பித்தது. தன் தாயைக் காணவேண்டுமென்ற ஏக்கம் நாளுக்கு நாள் அதிகரித்தது. ஆனால் ஹனீப்ஷா ஒருநாள் மனவருத்தத்தோடு தன் தந்தையாகிய ஹசரத்து மௌலாஅலி அவர்களிடம் சென்று வணங்கி, "தந்தையே! எனக்கொரு மனுவிருக்கிறது. அதாவது தாங்கள் உத்தரவு கொடுப்பீர்களானால் நான் போய் என் மாதாவை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொன்னார். அதற்கு ஹசரத் மௌலா அலி அவர்கள் "ஆ! நீ கொண்ட எண்ணம் உன் தாயிடத்தி லுனக்குள்ள அன்பைத் தெரிவிக்கிறது. நான் சந்தோஷமாய் உனக்கு அனுமதி யளிக்கிறேன். ஆண்டவன் உன்னை யெப்போதும் பாதுகாப்பாராக" வென்று ஆசீர்வதித்தார்.

தந்தையிடம் அனுமதி பெற்றுக்கொண்ட ஹனீப்ஷா வழிக்கு வேண்டிய உணவுப்பொருள்களை யெடுத்துக்கொண்டு காலமே புறப்பட்டுச் காடு மலைகளையும், இடையிலுள்ள நாடுகளையும் கடந்து க்ஷேமமாய்த் தன் தாயாருடைய ஸ்தலத்தில் போய்ச் சேர்ந்தார்.

தன் புதல்வன் க்ஷேமமாய்த் திரும்பி வந்ததைக்கண்ட பீபி ஹனீப்பதும் அவர்கள் அவரைத் தழுவிக்கொண்டு உச்சிமோந்து அவர் தன் தந்தையைக் கண்டதும், பிறகு நடந்த மற்ற சங்கதிகளும் யாவு கேட்டு ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தார்கள். ஹனீப்ஷா அவர்கள் தன் தாயாரின் மாளிகையில் சில நாட்கள் இருந்து அதன்பின்பு

தன் தாயாரை யழைத்துக்கொண்டு வழியில் எவ்வித இடையூறுமின்றி மதீனமாபுரிவந்து சேர்ந்தார். இதற்கிடையில் ஹசரத் மௌலா அலி அவர்கள் இவர்களுக்காகப் பிரத்தியேகமான ஒரு மாளிகை யமைத்து வைத்திருந்தார்கள். பீபி ஹனீப்பதும் அவர்கள் தமது கணவரையும், ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களையும், பீபி பாத்திமா நாச்சியார் அவர்களையும் தெரிசித்து வணங்கி அவர்களால் சந்தோஷமாய் ஆசீர்வதிக்கப்பட்டபின் மனக்களிப்போடு தமக்காக அமைக்கப்பட்ட மாளிகையில் வீற்றிருந்தார்கள்.

இதுவரையில் ஹனீப்ஷா அவர்களுடைய பிறப்பு வளர்ப்பு, திருமணம் முதலியவைகள் முடிந்தன. இனி அவர்களுடைய வீரச்செயல்களைப்பற்றிக் கூறுவோம்.

ஹசரத்து அலிமுர்த்துஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கிலாப்பத்தின் சங்கதிகள்.

எப்போது கிலாப்பத்து ஹசரத்து அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின்மேல் நிர்மாணிக்கப்பட்டதோ அப்போது அவர்கள் அரசாளத் தொடங்கினார்கள். பின்னும் அவர்கள் எல்லோரையும் நீதியின் வலிமையைக்கொண்டு அடக்கிவைத்திருந்தார்கள். கடாவும் புலியும் ஓரிடத்தில் சந்தோஷத்தோடு இருந்துகொண்டிருந்தன. இப்படியிருக்கையில் ஒருநாள் ஹனீப்ஷா பாக்கியமத்தோடு தன் பிதாவின் சமூகத்தில் நின்றிருந்தார். அப்போது ஹசரத்து மௌலா அலி அவர்கள் கடாக்ஷப் பார்வையால் அவரைப் பார்த்து எமன் தேசத்தின் இராஜ்ய கிரீடத்தை அவர் தலைமேல் வைத்து ஓ என் மகனே ஒருநாள் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் நீர் செய்யப் புலியாயிருக்கிறீர். நான் உம்மை என் காலத்தைக்கொண்டு பட்டம் தந்தேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதைக்கேட்டு சந்தோஷமடைந்தேன் என்று சொன்னார்கள். பின்னும் இப்பேர்ப்பட்ட பட்டம் ஹனீப்ஷாவுக்கு ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் தந்தார்களென்ற சங்கதி மேற்சொன்ன தாயார் ஹசரத்து பாத்திமா நாச்சியார் கேட்டு என் புத்திரர்களுக்குத் தன் நாமத்தைக்கொண்டு பட்டம்கொடாமல் ஹனீப்பதுவுடைய புத்திரனுக்குப் பட்டம் கொடுத்தார்களே என்று சொல்லிக் கண்ணீர் விட்டார்கள். அப்போது அச்சமாச்சாரத்தை ஹசரத்து

நபிநாயகம் அவர்கள் கேட்டு ஓ என்கண்மணியே ஒருநாள் உம்முடைய புத்திரர்கள் கர்பலா என்ற ஸ்தலத்தில் அகப்பட்டவர்களாயிருப்பார்கள். அவ்வேளையில் நீராவது, நானாவது, அலிமுர்த்துஜாவாவது, வேறே எவராவது இருக்கமாட்டோம். அக்காலத்தில் அவர்களுடைய [illegible] ஆறுதலிடம். இவரோ எஜூதி கூட்டத்தாரோடு யுத்தம் செய்வார் என்று ஷை பீபீ அவர்களுடைய மனஆறுதல் செய்தார்கள். இதைக்கேட்டு ஷை நாச்சியார் சந்தோஷப்பட்டு மனத்திருப்தியடைந்தார்கள், என்ற இந்தச்சங்கதியையும் சொன்னார்கள். பின் புஹை ஹனீப்ஷா தம்முடைய பிதா அவர்களால் கிரீடம் பெற்றுக்கொண்டு எமன் தேசத்தின் பக்கம்சென்றார். பின்னும் ஹசரத்து மௌலாஅலி அவர்களுக்கு அக்பர்அலி என்று பேருள்ள ஒரு குமாரருமிருந்தார். இவரோ பலத்தில் கடலைப்போலிருந்தார். இவரையும் பீபீஹனீப்பாவையும், பீபீ ஜைனுல் அரபையும் ஆக இவர்கள் எல்லோரையும் ஹசரத்து மௌலாஅலி அவர்கள் ஹனீப்ஷா உடன் செய்து அனுப்பிவித்தார்கள். ஹனீப்ஷா இவர்களைத்தன்னுடன் இட்டுக்கொண்டு அன்பாசு என்ற பட்டணம் போய்ச்சேர்ந்தார். அவர் தம்முடையச்சகோதர ராகிய அக்பர் அலி என்பவருக்கு மந்திரி உத்தியோகத்தைத் தந்தார். பின்பு அவர் ஸ்திரத்தோடும் நியாயத்தோடும் அரசாளத் தொடங்கினார். அநீதத்தினுடைய வேரைப் பிடுங்கிவிட்டு நீதியின் நட்சத்திரம் பிரகாசித்துக்கொண்டிருக்கச் செய்தார்.

ஹசரத்து மௌலாஅலி அவர்கள் தன் கலாப்பத்தில் இமாமத்தின் உத்தியோகத்தை ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வசம் ஒப்புவித்தார்கள். அப்போது துஷ்டனான எஜீதென்பவன் ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விஷயத்தில் கலகத்தை புண்டாக்க முயன்றான். பின்பு அவன் பாஷாணம் கொடுக்கும்படி செய்வித்து அவர்களை ஷஹீதாக்கினான். இதின் பின் கிலாபத்தின் தாவா செய்தான். பின்னும் அந்த மூடனானவன் என்னுடன் பைஅத்து செய்வதில் தாமதிக்கலாகாது என்று ஹுசைன் இப்னே அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கடிதம் எழுதினான். இவ்விதமான கடிதங்கள் அடிக்கடி வரத்தொடங்கின. அப்போது ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னை ஒரு விதத்திலும்கூட சிரம நிவாரணம் கொடுக்கமாட்டானென்று பாவித்துப்பட்டணத்தைவிட்டு ஒவ்வொருஇடத்திலும் தம்முடையதத்து

வத்தைப் பரிட்சிக்க வேண்டுமென்று மனதில் நாட்டி தம்முடைய எல்லாப் பந்துக்களையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டு, அனேக யாத்திரை ஸ்தலங்களைக் கடந்து கர்பலா என்ற ஸ்தலத்தில் வந்து சேர்ந்தார்கள்.

அன்பாஜூ என்ற தேசமோ வெகு தொலையில் இருந்தபடியால் ஒருவருடைய சமாச்சாரம் மற்ற ஒருவருக்கும் சேராதிருந்தது. கர்பலா என்ற ஸ்தலமும் வெகுதூரத்திலிருந்தது. ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்கள் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய வீட்டார்மேல் நடந்த கலக சமாச்சாரங்களையும்கூட முஹம்மது ஹனீபு அவர்களுக்கு எழுதி அனுப்பிவிக்கவில்லை. ஆனால் ஹனீப்ஷா அவர்கள் நெடுநாளும் ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்களுடைய விசாரத்தில் இருந்துகொண்டிருந்தார்கள். பின்னும் அவர் சிலவேளை ஆழ்ந்த யோசனையிலும், சிலவேளை விசாரத்தினால் மனவருத்தத்திலும் இருந்துகொண்டிருந்தார். ஹசரத்து ஹுஸைனென் அவர்களுடைய சமாச்சாரங்களைப் பற்றி அவருக்கு எச்சரிக்கையில்லாமலேயிருந்தது. ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஷஹாதத்து என்ற இரத்தசாக்ஷி மரணசெய்தியும், அவர் அறியாதவராயிருந்தார். அக்குரூர பாதகன் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய சந்ததியாருக்குத் தீமை செய்ததும், ஹசரத்து மௌலாஅலி அவர்களுடைய புத்திரர்களைத் துக்கித்ததும் அவருக்குத் தெரியாதிருந்தது.

கர்பலாவின் மைதானத்தில் ஷுமுர்லயீன் வந்து இருலோக எஜமானானவர்களுடைய பாலனர்களைப் பட்டயத்தால் சங்காரம் செய்தான். வானங்களிலும் பூமியிலும் அர்ஷிலும் சகல இடங்களிலும் அழுகையும் கூக்குரலுமாயிருந்தது. அத்தருணத்தில் ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களிருக்கவில்லை, ஹசரத்து மௌலா அலி அவர்களாவது சொர்க்கநாயகியாவது, பக்தியின் அரசராகிய ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களாவது ஒருவரும் இல்லை. ஆனால் அந்நாளில் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் சில பந்துக்களும் சகோதரர்களு மாத்திரம் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஐம்பத்துமூன்று மோமின்களாயிருந்தார்கள். இவர்களில் பத்தொன்பது பேர்கள் பந்துக்களும் புத்திரர்களுமாக இருந்தார்கள். இவர்கள் தங்கள் உயிரையும், இருதயத்தையும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பாதங்களில்

பரித்தியாகம் செய்தார்கள். பின்னும் இவர்கள் தார்க்கனுடைய சேனையை நாசமாக்கத் தொடங்கினார்கள். ஒரு நிமிஷத்தில் அநேகர்களை வெட்டி ஒவ்வொருவர் இரத்த சாஷியாய் மரணமடையத் தொடங்கினார்கள். துஷ்டர்களோ அவர்களை வெட்டிக் கொன்றுவிட்டார்கள். இதின்பின் ஹசரத்து இமாம் அவர்களுடைய முறை வந்தது. இவர்கள் தம்மை ஒண்டியாகக் கண்டபோது உலகத்தின்மேல் விரக்தியுண்டாயிற்று. பின்பு இவர்கள் கர்ஜித்து அல்லாஹு அக்பர் என்ற சத்தத்தை உயர்த்தினார்கள்.

அச்சமயம் இவருடைய ஸ்திதியைக்காண மனமில்லாதவன்போல் ஆதித்தன் மேற்குக்கடலில் மறைந்தான். இவருடைய பகைவரான துஷ்டர்களுடைய மனம்போல் பூமியங்கணும் இருள் சூழ்ந்து கொண்டது. அப்போது ஹசரத்து இமாம் அவர்களுக்கு நித்திரை வந்தது. இவர்கள் படுத்திருக்கும் போதுகனவில் சந்தோஷ செய்தியைக் கேட்டார்கள். அதாவது ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் இவர் கனவில் வந்து தரிசனம் தந்து இவரைநோக்கி, "என் இருகண்மணியே, நீ உண்மையாய் இருலோகத்தின் பாக்கியவானாயிருக்கிறாய். இப்போது நீ துன்யாவின் எல்லாப் பற்றுகளை விட்டுவிடும். சீக்கிரத்தில் ஷஹாதத்தின் கிண்ணத்தைப் பானம் பண்ணு. நீ என்னுடன் வந்து சேருவதற்குத் தாமதிக்கலாகாது. பின்னும் மௌலா அலியுடனும் பாத்திமா உடனும் சேரவேண்டும். உன்னுடைய சகோதரர்கள் உனக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பின்னும் தேவதூதர்கள் அர்ஷின்மேல் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார்கள்.

நபிநாயகம் அவர்களுடைய மரியாதைக்காக ஹசரத்து இமாம் அவர்கள் எழுந்து நின்றார்கள். இதற்குள் விழிப்பு வந்துவிட்டது. அப்போது ஹசரத் இமாம் அவர்கள் ஹசரத்து நபிநாயகம் அவர்களின்மேல் அநேக துருதுகளை ஓதினார்கள். பின்னும் பாக்கியங்கள் வந்துவிட்டதென்றும், கர்பலாவின் பூமியின்மேல் தன் ஷஹாதத்திருக்கிறதென்றும் இமாம் அவர்கள் அறிந்து பேனாவையும் காகிதத்தையும் எடுத்துத் தம்முடைய சமாச்சாரங்களை யெல்லாம் எழுதினார்கள். இதற்குள் இருள்போய் உலகத்தின் பூங்காவனத்தைக்காட்ட அருணோதயம் பிரகாசிக்கத் தொடங்கியது. அப்போது ஹசரத்து இமாம் அவர்கள் தன் சிரசத்தின் மேல் கவசத்தைத் தரித்துக்கொண்டும், ஆயுதங்களை யணிந்துகொண்டும் தன் கையில் சம்சாம் என்ற பட்டயத்தை ஏந்தி ஷஹாதத்தடையப் புறப்பட்டார்கள்.

அப்படிப் புறப்படும்போது அவர்கள் ஆண்டவன் உங்களை ஒவ்வொரு நிமிஷமும் ஒழுக்கத்தோடும் நாணத்தோடும் வைப்பான். அவன் உங்களைப் பாதுகாக்கிறவனும், உங்களுடைய பாலனும், உதவிக்காரனுமாயிருப்பான். நீங்களோ கஷ்டங்களில் பொறுமையுள்ளவர்களாகஇருக்கவேண்டும் என்று தன் வீட்டாருக்கு வசியத்தும், மனஆறுதலும் செய்து தன் பிதா அவர்களின் துல்துல் என்ற வாகனத்தை வரவழைத்து அதின்மேல் ஏறிக்கொண்டு கமர் என்பவரை அழைத்தார்கள். அவரோ அந்த வாகனத்தின் காவல்காரராயிருந்தார். வெகு அழகுள்ளவராயும் வெகு சுறுசுறுப்பாய் நடக்கிறவராயுமிருந்தார். அவர் கையில் ஹசரத்து இமாம் அவர்கள் அக்கடிதத்தை எடுத்துக்கொடுத்து நீர் இதைக்கொண்டு போய் என் சகோதரராகிய முஹம்மது ஹனீப்ஷா இடத்தில் சேர்த்துவிடும். பின்னும் நீர் இங்கத்து கொலையடையப் போகிறவனுடைய சலாமையும் அவருக்குச் சொல்லும். பலவந்தத்துடையவும் நிக்களுடையவும் சங்கதிகளை நீர் அவரிடம் சொல்லும் என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டுத் தாம் யுத்தகளத்தில் வந்து நின்றார்கள்.

* * *

ஹசரத்து இமாம் அவர்களுடைய யுத்தமும் ஷஹாதத்தும்.

ஹசரத்து இமாம் அவர்கள் யுத்தகளத்துக்கு வந்து நின்றதும், அம்பு எய்யத் தொடங்கினார்கள். பகைவனுடைய அஜ்ழர் மல்ஊன் எரிந்து விழத் தொடங்கினான். பின்பு ஹசரத்து இமாம் அவர்கள் வீராவேசத்தோடு ஈட்டியை எடுத்து அந்த மல்ஊனுடைய இருதயத்தில் குத்தினார்கள், அன்று இமாம் அவர்கள் மகாஉக்கிரத்தோடு தன் உடைவாளை உருவிக்கொண்டு தலைக்குமேல் சக்கிராகாரமாய்ச் சுற்றிச் சண்டையில் கோபத்தினொலிக்கப் பகைவர் கூட்டத்துட்புகுந்து ஆயிரக்கணக்கானவர்களை வெட்டி யெறிந்தார்கள். அநேகம் குதிரைவீரரைக் குதிரைகளிலிருந்து விழத் தட்டினார்கள். உக்கிரத்தோடு அம் மல்ஊனுடைய சேனையைச் சின்னாபின்னமாய்ச் சிதறடித்தார்கள். ஹசரத்து இமாம் அவர்களுக்கு எப்போது போய்ச் சேருவதின் வெறி வந்து

விட்டதோ அப்போது வெகு கடுமையோடு பட்டயத்தை வீசத் தொடங்கினார்கள். எல்லாக் கார்ஜிகளையும் நாசமாக்கினார்கள்.

அவர்கள் கூட்டமே பிழைப்பது அரிதாய்விட்டது. இதற்குள் அம்*மல்ஊனுக்குத் துணைப்படையாய் வேறொரு சேனை வந்து சேர்ந்தது. அவர்கள் எல்லோரும் சுகுமான திரேகத்தின்மேல் பரிசுத்தமான இமாம் அவர்களின் தேகத்தின்மேல் ஆயுதங்களை எறியத் தொடங்கினார்கள். பின்னும் இட்டுப்புத்திரர்கள் ஆயிரமாயிரங்களான அம்புகளை எய்யவும், ஈட்டிகளால் குத்தவும், நெருப்பு வீசவும் தொடங்கினார்கள். அப்போது ஹசரத்து இமாம் அவர்களுடைய பிரகாசம் பொருந்திய அழகிய திரேகத்தின்மேல் காயங்கள் பட்டன. காயம் பட்ட தம்முடைய குதிரைக்கு வருத்தமாயிருக்குமே யென்ற கருணையால், ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய புத்திரராகிய ஜெயசாலியான ஹசரத்து ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குதிரையிலிருந்து கீழே இறங்கி அதை விட்டுவிட்டுப் பதாதியாய் நின்றார்கள். இதைக்கண்டு கொலைபாதகர்கள் கூட்டமாய் அவரைச் சூழ்ந்துகொண்டு தங்கள் தங்கள் ஆயுதங்களால் நாலாபக்கமும் தாக்கி ஹசரத்து இமாம் அவர்களைக் கொன்றுவிட்டார்கள். உடனே ஷுமுர்லயீன் முன்சென்று அவர்களுடைய திருதிரேகத்திலிருந்து மகிமைபொருந்திய சிரசை அறுத்துக் கொண்டான்.

அப்போது தீர்க்கதரிசனத்துடைய ஆகாயத்தின் நட்சத்திரம் கர்பலாவின் மைதானத்தில் தலையின்றிக் கிடந்திருந்தது. பின்பு கன்னெஞ்சம், மா துஷ்டனான அந்த ஷுமுர்லயீன் அச்சிரசை இமாம் அவர்களுடைய வீட்டாரிடத்தில் கொண்டுவந்தான். அப்பால் அவன் ஷை வீட்டார்களைச் சிறையாக்கிச் சீக்கிரமாக அவர்களை வெற்றுக்காலுடனும் திருவாணத்தலையுடனும் நடத்தி அருஷையும் குர்சியையும் ஆட்டிவிட்டான். ஷை வீட்டார் எல்லோரும் அழுதழுது பயப்படுங்கள் பயப்படுங்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பூமியிலும் வானங்களிலும் பூகம்பம் நேரிட்டிருந்தன. உலகம் முழுவதும் புகை சூழ்ந்ததுபோலிருந்தது.

அத்தருணத்தில் ஹசரத்து மௌலா அலி அவர்கள் இருந்திருப்பார்களானால் அந்த ஷுமுர்லயீன் தப்பிப் போயிருக்க மாட்டான்.

---

* மல்ஊன் என்பது சாபி என்று அர்த்தமாம்.

பூகோளத்துக்குடைய தூதன் அழுது இந்த ஷுமுர்லயீனைப் பாதாளத்தில் கொண்டுபோய்த் தூள் தூளாக்கிவிட ஆண்டவனிடத்தில் உத்திரவு கேட்டான். பூமியும் வானங்களும் அச்சிரசைக் கண்டு துக்கித்தன. பின்னும் கலம் என்ற பேனாவோ அஜல் என்ற அந்தக் காலத்தில் அவ்விதமாகவே எழுதியிருந்தது. ஆகையால் அத்தூதன் புகல் அற்றவனாயிருந்தான். ஷை வீட்டார் வெற்றுப் பாதங்களுள்ளவர்களாயிருந்தார்கள். இவர்கள் இந்த ஸ்திதியோடு யாத்திரை ஸ்தலங்களைக் கடந்து திமிஷ்க்கு தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது அங்கு அரசனாயிருந்த எஜீது என்பவன் புழுக்கசியின் புத்திரனாயிருந்தான். அவன் முன்னுக்கு ஷை ஷுமுர்லயீன் ஷை வீட்டாரை அவ்வித வருத்தங்களோடு கொண்டுவந்து நிறுத்தி, அந்த திருச்சிரசையுஞ் சிம்மாசனத்தின்மேல் வைத்தான். அந்தச் சிரமோ சோதியின்மேல் சோதியுள்ளதாயிருப்பதை எஜீது என்பவன் பார்த்து இதோ என் சத்துருவின் தலையாயுந் தீனுடைய இமாமாகிய அலிரலியல்லாஹு அன்ஹுவுடைய அவர்களின் குமாரர் ஹுசைனு ரலியல்லாஹு அன்ஹுவுடைய தலையாயுமிருக்கிறதென்று சொல்லி, ஒரு பெட்டியை வரவழைத்து அதில் அத்திருசிரசை வைத்து அதைப் பலமான பூட்டால் பூட்டி, பின்னும் வேறொரு பெட்டியையும் வரவழைத்து அப்பெட்டியை இப்பெட்டியில் வைத்து அசுத்தமான தன் கையால் பலமாய்ப் பூட்டிப் பூட்டினான்.

இதின்பின் கொஞ்சங்கூட இரக்கமின்றி ஹசரத்து இமாமுடைய வீட்டாரைத் தன் எதிரில் அழைத்து ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் பிரத்தியேகஞ் செய்தான். இவன் ஆண்டவனிடத்தில் கொஞ்சங்கூட பயம் வைத்தவனல்ல. பின்னும் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை நினைத்து தலை தாழ்த்தியவனல்ல. இப்படிப் பிரித்ததில் ஆண்பிள்ளைகள் இரண்டு பேர்களிருந்தார்கள். அவ்விருவர்களையுஞ் சிறை செய்தான். பெண்பிள்ளைகளையோ மேகோஷா செய்து சபைக்குள் அழைத்தான். பின்பு அவர்கள் எல்லோரையுஞ் சிறையாக்கி ஒரு வீட்டில் வைத்து இவர்களின்மேல் போர்ச்சேவகர்களைக் காவல்காரர்களாக வைத்தான். அப்போ ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய சந்ததியார்களின்மேல் அவன் எவ்விதமான கொடுமை செலுத்தினான் என்பதைப் பாருங்கள்.

கடிதங் கொண்டுபோனவராகிய உமர் என்பவருடைய செய்தி.

ஹசரத்து இமாம் அவர்கள் கடிதத்தை அனுப்பிவிட்டுத் தாம் யுத்தத்துக்குச் சென்றபின் கடிதங்கொண்டு போனவன் இரவும் பகலும் நடந்து போய்க்கொண்டிருந்தான். இவன் மனதின்மேல் ஹசரத்து இமாமுடைய மரணத்தின் துக்கமிருந்துகொண்டிருந்தது. ஆதலால் அவன் குதிரையின்மேல் ஏறிப்போகிறவனுக்குச் சமானமாய் அவ்வளவு சுருக்காய்ப் போய்க்கொண்டிருந்தான். அனேக நாள்களுக்குப்பின் அவன் ஒரு பட்டணத்தைக் கண்டான். அவ்வேளை இராவேளையாயிருந்தபடியால் அவ்விடம் இராமுழுவதுந் தங்கியிருந்து அருணோதய நட்சத்திரத்தைக்கண்டு இருப்புக்கட்டி போகப் புறப்பட்டான். பின்னும் அனேக நாள் பயண ஸ்தலங்களைக் கடந்து ஒரு பட்டணம் போய்ச் சேர்ந்தான். அப்பட்டணமோ வெகு அதிகமாக அலங்கரிக்கப்பட்டிருப்பதையும், அதின் ஒவ்வொரு ஸ்தலமும் இலக்ஷணம் பொருந்தியதாயிருப்பதையும், ஒவ்வொரு இடத்தின் விசித்திரமும் பலப்பல வகையானவைகளா யிருப்பதையும், ஒவ்வொரு கிரகமும் சந்தோஷத்தை யுண்டாக்கத்தக்கவையாக நாலு வர்ணமுள்ளவைகளா யிருப்பதையுங் கண்டு சற்று ஆலோசித்து, இதோ கலியாணத்தின் சிங்காரமாயிருக்கிறதென்று அறிந்தான். பின்னும் ஒருவேளை ஹனீப்ஷா அவர்கள் இவ்விடம் இருந்திருப்பார்கள் என்றும் நினைத்தான். ஆனால் இவ்விடத்திய இரகசியம் தெரியவில்லையே அதை ஆண்டவனே அறிவான் என்றும் தனக்குள் சொல்லிக்கொண்டான். பின்பு அவன் வழியுடைய கொடுமையினால் பயந்து விசாரத்தோடு தன் கால்களை மடித்து வைக்கத் தொடங்கினான். இதற்குள் திடீரென்று ஒரு அரப்பியன் காணப்பட்டான். அப்போது அவன் ஓ அன்பனே, இந்தப் பட்டணமோ அலங்காரம் நிறைந்ததாயும், ஸ்வர்க்கத்துக்குச் சமானமாய்ப் புகழப்பட்டதாயுங் காணப்படுகின்றது இன்றென்ன விசேஷஞ் சொல் என்றான். அவ்வரப்பியன் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு "நீ இருக்கிறது எவ்விடம், உன்பேர் என்ன, நீ யார், உன் குடும்பம் எது சொல்" என்றான். அதற்கு அவன் நான் முசாபிராயிருக்கிறேன் என்று மறுமொழி சொன்னான். அப்போது அவன் "இவ்விடத்திய அரசன் முகம்மது ஹனீப்ஷாவாயிருக்கிறார். அவருக்கு [illegible] ஒரு பெண் இருக்கிறது. இவை எல்லாம் அப்பெண்

ணுடைய விவாகத்தின் உபகாரங்களாயிருக்கின்றன" என்று சொன்னான். இதை அவன்கேட்டு சத்தமிட்டு பூமியின்மேல் தடுமாறி விழுந்தான். பின்னும் அப்போ இது மிக்க ஆச்சரியம். அவருக்குத் தன் சகோதரருடைய துக்கங்களும் கஷ்டங்களும் தெரியாது. தெரிந்திருக்குமாகில் அவர் கலியாணத்திற்கு அவசரமாக இக்காரியங்களைச் செய்திருக்கமாட்டார் என்று சொல்லிக்கொண்டான்.

ஹனீப்ஷா அவர்களோ தன் அரண்மனையில் உட்கார்ந்துகொண்டு தன் சகோதரர்களை மனதில் நினைத்து எனக்குச் சகோதரர்கள் நினைவு வருகிறது. நான் அவர்களுடைய விஷயமாய் துக்கமுள்ளவனாயிருக்கிறேன் என்று சொல்லிக் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் அஞ்சலகாரனாகிய உமர் என்பவன் ஹனீப்ஷா இடம் வந்து சேர்ந்தான். அப்போது அவர் அவனைப்பார்த்து நீ யார், உன் அலுவல் என்னவென்று வினவினார். அதற்கு அவன் எனக்கு ஒரு அலுவலுமில்லை. ஆனால் நான் கர்பலாவிலிருந்து வந்திருக்கிறேன். நான் ஆண்டவன் சிங்கமாகிய ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரரான ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமாச்சாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஹசரத்து நபி நாயகம் அவர்களுடையவும் ஹசரத்து மௌலா அலி அவர்களுடையவும் குமாரராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்கள் தங்கள் பேருக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். நான் கர்பலாவிலிருந்து புறப்பட்டு நடந்து இன்றைக்குத் தங்கள் சமுகம் அவர்களுடைய கடிதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றான். இதை அவர் கேட்டு உடனே சந்தோஷமாய் எழுந்து அக்கடிதம் நன்மையான சமாச்சாரத்தின் கடிதமாயிருக்குமென்று நினைத்து அஞ்சலகாரன் முன் வந்து நின்றார். ஆனால் அபாயத்தின் சமாச்சாரமிருப்பது அவர் அறியவில்லை. அஞ்சல்காரன் உடனே அக்கடிதத்தை அவர் கையில் கொடுத்தான்.

அதை அவர் வாங்கித் தக்ஷணமே உடைத்து இன்னும் ஏதேனும் சமாச்சாரமிருந்தால் சொல் என்று அஞ்சலக்காரனுக்குச் சொன்னார். அதற்கு அவன் தாங்கள் அதைப்படித்து அறியுங்கள் என்றான். அப்போது அவர் அக்கடிதத்தை மிம்பரின் மேல் ஏறிப் படித்தார். அக்கடிதத்திலே அடியிற் கண்டபடி வரையப்பட்டிருந்தது;—

"ஹைதர் அவர்களுடைய புத்திரனும் என் சகோதரனுமான உமக்கு நான் எழுதுகிறேன், என் சகோதரனே! புழுக்கச்சி குமாரனானவன் தலை எடுத்திருக்கிறான். அவன் விஷயமாய் நீர் சாக்கிரதையாயும், எச்சரிக்கையாயு மிருக்கவேண்டும். அவன் எங்கள்மேல் வெகு கொடுமைகளைச் செலுத்தியிருக்கிறான். பின்னும் என் சகோதரராகிய ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பாஷாணம் கொடுத்துக் கொன்றுவிட்டான். நாங்களோ பஞ்சத்தனுடைய (ஐந்து சட்டைக்காரருடைய) ஐந்து இரத்தினங்களாயிருந்தோம். முதலாவது ஹஸரத்து நபிநாயகம் அவர்களும், இரண்டாவது ஹஸரத்து அலி முர்த்துஜா அவர்களும், மூன்றாவது என் மாதாவாகிய பாத்திமா நாச்சியாரும், நாலாவது என் சகோதரராகிய ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஐந்தாவது நானுமே."

நாங்கள் ஐந்துபேரும் அருவ நக்ஷத்திரத்தின் ஐந்து இரத்தினங்களாயிருந்தோம். அவர்களை ஆண்டவன் உலகத்தில் வெளிப்படுத்தினான். இவர்களில் தலை ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களாயிருந்தார்கள். இவர்களுடைய கழுத்திலிருந்த வளையம் பாத்திமா நாச்சியாராயிருந்தார்கள். வலது காதிலிருந்த வாளியோ ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களாயிருந்தார்கள். இடது காதிலிருந்த வாளியோ நானாக இருந்தேன். பின்னும் ஹஸரத்து நபிநாயகம் அவர்களுடைய இடுப்பிலிருந்த ஜரிகை இடைக்கட்டானது ஆண்டவனுடைய சிங்கமாகிய ஹஸரத்து அலிமுர்த்துஜா அவர்களாயிருந்தார்கள். பின்னும் ஹஸரத்து அலி அவர்களுக்குப் பின் ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரதிநிதியாயிருந்தார்கள். அவர் என் [illegible] மன சந்தோஷமுள்ளவராயிருந்துகொண்டிருந்தார். அன்புடைய பூங்காவனத்து சகா பச்சையாயிருந்துகொண்டிருந்தது.

இப்போது நீர் பாரும், எங்கள் தலைமேலிருந்த நிழலார் போய்விட்டார். பின்னும் புயமாயிருந்தவரும் போய்விட்டார். அவரோ தீர்க்கதரிசனத்தின் ஆகாயத்துடைய சந்திரனாயிருந்தார். விலாயத்துடைய சிம்மாசனத்தின் அரசராயிருந்தார். எப்போது பிரகாசமுள்ள சந்திரனானவர் மறைந்துபோனாரோ பின்னும் எதுமுதல் அவர் போய்விட்டாரோ அதுமுதல் அவருடைய சோதியுள்ள அருபம் காணப்படுகிறதில்லையே! எனக்கு உலகமுழுதும் இருள்சூழ்ந்தது போலிருக்கிறது. என் மரணமும் என்முன் வந்து நிற்கிறது. என்மேல் வெகு பெரிய துக்கம் சம்பவித்திருக்கிறது. சதா கண்ணீர் கண்களிலிருந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. ஓ புல்புல் என்ற குருவியே (மதுர ஸ்வரமாய் இராவில் பாடும் குருவி.) தீர்க்கதரிசனத்துடைய பூங்காவனத்தின் புஷ்பம் நிலையின் காலத்தில் உதிர்ந்து கிடக்கிறதைப் பார்? அந்த சொகுசான புஷ்பமிதோவே போய்விட்டது. முதல் எனக்கு ஒரு நிமிஷமும்கூட அமைதியும் சவுகரியமுமில்லை. இவ்வேளையோ என்மேல் வெகு கடினமான வேளையாயிருக்கிறது. எனக்கு அன்னமும் ஜலமும் பிரியமாயிருப்பதில்லை. என் மனது படிப்புகளையும் விரும்புகிறதில்லை. நித்திரையும் என் நயனங்களிலிருந்து நீங்கிப் போயிருக்கின்றது. பிள்ளைகளும் குட்டிகளும் எனக்கு விருப்பமுள்ளவர்களாயில்லை. பின்னும் துக்கத்தின் காரணத்தால் அன்புடைய பக்தியுடையோர்களும் கூட எனக்கு சத்துருக்களாக காணப்படுகிறார்கள்.

என் சகோதரராகிய ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என் தலைவனாக இருந்தார். உலகத்தில் எனக்கு அவருடைய குடையும் ஆதரவுமிருந்தது. எப்போது அவர் மரணமடைந்தாரோ அதுமுதல் எப்பக்கம் நான் கண்கள் எடுத்து பார்க்கிறேனோ அங்கெல்லாம் இருள் இருளாகவே எனக்கு தெரிய வருகின்றது. என் துணையாளி உலகத்தைவிட்டுப் போனதுமுதல் நான் என்னுடைய சவுகரியத்தையும், சவுக்கியத்தையும் நீக்கிவிட்டேன். ஆண்டவன் சத்தியம். என் கண்களிலிருந்து கண்ணீர் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஒரு நிமிஷங்கூட என் மனதுக்கு அமைதியும் திருப்தியுமில்லை. பைத்தியமுள்ள என் மனது துக்கமும் விசாரமுள்ளதாயிருக்கின்றது. என் மனதை திருப்திகாரஞ் செய்ய ஒருவருமில்லை. இந்த ஸ்திதியிலேயே ஒரு வருடம் கழிந்தது.

இப்போதோ வானம் என் சுகீனதசையின் ஜன்னல்களை திறந்துவிட்டது. சத்துருக்களோ கழுதைகளைப்போல என்னைத் தொடர்ந்திருக்கிறார்கள். எஜீது என்பவன் எப்போது என்னைச் சகோதரரில்லாமல் ஒண்டியானவனாய்ப் பார்த்தானோ அப்போது அவன் அளவற்ற சேனையை என்மேல் அனுப்பினான். சமுத்திர அலைகளைப்போல எங்கள் தலைமேல் ஷாம் தேசத்திலிருந்து சேனைகள் வந்துகொண்டிருக்கின்றன பாரும். எங்கள்மேல் ஷிமுர் மல்ஊன் வந்து [illegible]

னத்தை ஒடிக்கி விட்டான். இன்றைக்கோ நம்முடைய இருப்பிடம் கர்பலாவா யிருக்கின்றது. ஷிமர் என்பவனுடைய சேனைகள் மதம் பிடித்தவர்களாய் இரைச்சலிட்டுக்கொண்டிருக்கிறார்கள். எங்களிடத்திலிருந்து அவன் யூப்ரடிஸ் நதிக்கரையைப் பிடுங்கிக்கொண்டான். தண்ணீர் தாகமிருக்கின்றது. குடிக்கத் தண்ணீர் கிடைக்கிறதில்லை. தாகத்தால் பிள்ளைகளின் நாவு வரண்டுபோ யிருக்கின்றது. பின்னும் அவன் மைதானத்தை நெருக்கி யிருக்கிறான். ஆண்டவனும் அவனுடைய ரசூலுஞ் சாக்ஷியா யிருக்கிறார்கள். நானோ அவனுடைய நெஞ்சின்மேல் முள்ளாயிருந்தேன்.

இக்காரணத்தால் அவன் என்மேல் சேனைகளை அனுப்பிவைத்திருக்கிறான். என்னிடத்தில் சிலபேர்களிருந்தார்கள் அவர்கள் என்னிடம் பக்ஷமுள்ளவர்களா யிருந்தார்கள். அவர்களும் யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். யுத்தகளத்தில் அவர்கள் எல்லோரும் ஷஹீதாய்ப் போனார்கள். என் சகோதரரே நீர் இப்போது பாரும் நான் இப்போது தனியனாய்ப் போய்விட்டேன். ஆனால் இப்போது நான் என் வீட்டாரை ஆண்டவனிடத்திலும் அவன் ரசூலிடத்திலும் ஒப்புவித்தேன், நானோ பின்பில்லாமல் போவதற்காக யுத்தகளத்தில் நிற்கிறேன். நான் ஆயிர மாயிரமானவர்களின்முன் நிற்கிறேன். அனேக காபிர்களை வெட்டினேன். அவர்களைச் சிதற அடித்திருக்கிறேன். அப்படி வெட்டப்பட்டு போனவர்களில் அனேகர்கள் குதிரைப்போர்ச் சேவகர்களும் காலாட்சேவகர்களுமா யிருக்கிறார்கள். நான் ஒரு நிமிஷத்துக்குள் கர்பலா மைதான முழுமையும் இரத்தமோடும்படி செய்துவிட்டேன். எனக்கோ ஆண்டவனுடன் போய்ச் சேரவேண்டுமென்ற வெறி ஏறிவிட்டது.

நான் கெட்டித்தனத்தோடு பட்டயத்தை வீசிக்கொண்டிருந்தேன். இதற்குள் சாக்கியே கௌசர் (மைசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம்) அவர்கள் ஜவஹரத்து நிறைந்த கிண்ணியை கையில் வாங்கிக்கொண்டு நிற்கிறதை நான் கண்டு அதை வாங்கி குடித்தேன், உலகத்தை விட்டு நடந்தேன். என்னுடைய கொலைஞன் ஷிமுர்லயீனாயிருக்கிறான். அவன் தன் தலைமேல் என் இரத்தத்தை சுமந்துகொண்டான். வீட்டாரைப் பிடித்து சிறையாக்கி எஜீதினிடம் கொண்டுபோகிறான். ஜைனுல் ஆபிதீன் என குமாராயிருக்கிறார். அவர் உம்முடைய இருதயகண்டமாயிருக்கிறார் இவரையும் பிடித்து ஷாம் தேசம் எஜீதினிடம் கொண்டுபோகிறான்.

ஆ என் சகோதரரே! உமக்கு உரோச மிருக்கிறது. என் பிதாவானவர் உம்முடைய பிதாவாயிருக்கிறார். உமக்கு இதினால் நாணம் தோன்றுமாகில் ஷாம் தேசத்தின்மேல் என்னுடைய இரத்தப் பழியைத் தீர்த்துக்கொள்வீராக. இது உமக்குத் தக்கதாயிருக்கிறது. இது உம்முடைய கடமையாயிருக்கிறது. ஏனெனில் நான் உம்முடைய சகோதரனாயிருக்கிறேன்.

ஹனீபா அவர்கள் இக்கடிதத்தைப் படித்து முடித்ததே அல்லாஹு அக்பர் என்று சப்தமிட்டார். பின்பு அவர் மிம்பரின் மேலிருந்து பூமியின்மேல் சுவாதீனமின்றி விழுந்து ஸ்மரணை அற்றவராய் மரணத்துக்குச் சமதையான மூர்ச்சை யடைந்தார். உயிர் கொஞ்சம் பாக்கியிருந்தது. அப்போது அதைக்கண்ட சபையோர்கள் யாவரும் மிக்க அயரமடைந்தார்கள். எமன் தேசத்து அரசன் உணர்ச்சியற்றவராய் பூமியின்மேல் சத்தமில்லாமல் கிடக்கிறதைச் சபையார்கண்டு பிரமித்தும் திகைத்தும் துக்கத்தால் அழுதுகொண்டிருந்தார்கள். மந்திரிப் பிரதானிகள் முதலிய அனைவரும் உடனே அரசன் முகத்தில் குளிர்ந்த பனிநீரைத் தெளித்து மயில்விசிறி வெற்றிவேர் விசிறி முதலியவற்றால் விசிறவேண்டிய உபசாரங்களைத்தும் செய்தார்கள். அதன்பின் சற்று நேரங்கழித்து அரசன் கண்விழித்தார். ஹா! என் அன்பான சகோதரர்களே என்று கதறினார். அவர் கண்களினின்றும் கண்ணீர் பிரவாகம்போல் ஓடிற்று. பிறகு அவர் உடுப்புகளைத் தன் திரேகத்தின்மேலிருந்து கிழிக்கவும் துண்டுத்துண்டாக்கவும் தொடங்கினார். இவருடைய சகோதரராகிய அலி அக்பர் என்பவர் கொண்டு வந்து அவருக்கு உடுத்துக்கொண்டிருந்த உடுப்புகளையும் அவர் இவ்விதமாகவே தன் திரேகத்தின் மேலிருந்து எழுபத்திரண்டு தடவை கிழித்துக்கொண்டிருந்தார். எழுபத்திரண்டு பேர்களின் நிமித்தியமாகத் தன் திரேகத்திலிருந்து அவர் உடுப்புகளைக் கிழித்திருக்கிறார். இதின்பின் அவர் தமது கஸ்ப்பு என்ற கன்னங்களின் மேலிருக்கும் ரோமங்களை எப்போது கிள்ளவும் நுள்ளவும் தொடங்கினாரோ அப்போது மோட்சத்தின் கன்னிகைகளின்மேல் அலைக்கழிவு நேரிட்டது. பின்னும் எப்போது அவர் தன் சோதியுள்ள கன்னங்களைப் பிச்சுக்கொள்ளத் தொடங்கினார்களோ அப்போது காட்டுமிருகங்கள் துக்கத்துக்குள் பட்டார்கள். பின்பு எப்போது அவர் தன் தலைமேல் அடித்துக்கொள்ளத் தொடங்கினாரோ அப்போது கன்னிமார் பெண்க

ளும் பூதங்களும் அழுகத் தொடங்கினார்கள். பின்னும் எப்போது அவர் அரச வஸ்திரங்களைக் கிழித்தார்களோ அப்போது உலகத்தின் எல்லாப் பூமியில் அதிருதல் உண்டாய்விட்டது. மலாய்க்குகள் எப்போது ஹனீப்ஷாவைத் துக்கம் நிறைந்தவராகக் கண்டார்களோ அப்போது அவர்களும் அழுதார்கள். பின்னும் எப்போது ஹனீப்ஷா அழுகத் தொடங்கினார்களோ சபையார்களின் இருதயங்கள் வெடிக்கப்பட்டன. பின்னும் எப்போது பெருமூச்சாலும் துக்கத்தாலும் அவருடைய நெஞ்சு எரிந்ததோ அப்போது சகலரும் துக்கத்தாலும் வியாகுலத்தாலும் அழுகத் தொடங்கினார்கள். பின்னும் எப்போது அவர் இந்தத் துக்கத்திலும் துன்பத்திலும் விழுந்தாரோ அப்போது குங்குமப்பூ நிறமுள்ளசோதி அவரில் அதிகப்பட்டது. பின்னும் அவருடைய முகமானது சூரியனைப்போலப்பிரகாசிக்கப்பட்டது. பின்னும் அவர் அழகில் அளவற்றவராயிருந்தார். பின்னும் ஷெ ஹனீப்ஷா தன் சகோதரராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய விசாரத்தில் இரவும் பகலும் பின்வருமாறு சங்கதிகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அதாவது ஹசரத்து முஹம்மது ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பிரியமுள்ள பேரனவர் உலகைவிட்டு எவ்விதமாய் கரைபேறிவிட்டார். ஹசரத்து பாத்திமா நாச்சியாருடைய கண்மணியானவர் பாதகர்களுடைய குரூரங்களால் எவ்விதமான வருத்தங்களைச் சகித்திருக்கிறார். ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய உயிரும் இருதயமுமானவர் மண்ணில் இரத்தத்துடன் எவ்விதமாய் மௌனத்தாகக் கிடக்கிறார். ஹசரத்து இமாம் ஹசன் அவர்களுடைய சகோதரர் இன்றைய தினம் கர்பலாவில் எவ்விதமாய்ப் படுத்துக்கொண்டிருக்கிறார். பின்னும் அவர் சதாக்கால இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளப்போயிருக்கிறார். ஷஹாதத்துடைய கிரீடத்தைத் தலைமேல் வைத்துக்கொண்டு துன்யாவிலிருந்து பாக்கியத்தைக் கொண்டுபோனார். எங்களை இந்த இரைச்சலிலும் ஊர்ப்புரளியிலும் விட்டுவிட்டு தாம் விமோசனமடைந்து கபரில் படுத்திருக்கிறார். பின்னும் அவர் வருத்தங்களாலும் தேவ கட்டளையாலும் ஷஹாதத்துக்கு ஆயத்தமாயிருந்தார். பலாத்காரத்தையும் கொடுமையையும் முழுமையோடு சகித்துக்கொண்டவராயுமிருந்தார்," என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

இதின் பின் அவர் மறுமையாய் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின்மேலும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின்மேலும் துருதுகளை ஓதினார்.

விவாகத்தை நிறுத்திவிட்டு ஹனீப்ஷா எஜீதுடன் யுத்தம் செய்தது.

எமன் தேசத்து அரசரும் வானசீந்திரனுமான ஹனீப்ஷா அவர்கள் ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்களைப்பற்றி மனவருத்தப்பட்ட பின் தன் துயரத்தை பொறுவாறு மனதிலடக்கிக்கொண்டு தன் புத்திரியின் திருமணத்திற்காகச் செய்துகொண்டிருந்த ஏற்பாடுகளையெல்லாம் நிறுத்திவிட்டுத் தன்சகோதரருக்காகப் பழிவாங்கவேண்டுமென்ற வைராக்கியத்தோடு சுப்பியான் என்பவனுடைய சந்ததியை நாசமாக்கத் தன் இராஜ்ஜியத்தை விட்டுப் புறப்பட்டார். அவ்வாறு புறப்படும்போது தன்சகோதரராகிய அக்பர் அலியை நோக்கி நான் சென்றபின் நீ எனக்குப் பதிலாய் நமது புத்திரியின் நிக்காஹை நிறைவேற்றிவிடு என்று கூறினார். பின்னும் அவர் பரிசுத்த ஆண்டவன்மேல் நம்பிக்கைவைத்தும், லௌலாக்குடைய எஜமானராகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின்பேரில் விசுவாசம் கொண்டும், ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய கடாட்சம் பெற்றும், யுத்தத்திற்குப் புறப்பட்டார். நகரமெங்கும் பேரிகை முழங்கியது. ஹனீப்ஷா அவர்கள் தமது சேனையோடு புறப்பட்டு இரண்டு நாள் பிரயாணத்திற்கப்பால் தங்கி மற்ற சேனைகள் முதலிய அனைவர்களின் வரவிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய எல்லாச்சேனைகளையும் கணக்கிட்டபோது மொத்தம் பதினாலாயிரமிருந்தது. எல்லாக் குதிரைப்பட்டாளங்களும் அவ்வரசரிடம் சேகரிக்கப்பட்டன.

சீக்கிரத்தில் கலியாணத்தை முடித்துவிட்டு பூர்த்தியான புத்திமானாகிய அக்பர்அலி என்பவர் எல்லாப்பந்துக்களிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டு அரசராகிய ஹனீப்ஷா அவர்களிடம் வந்து சேர்ந்து வணக்கத்தோடு சலாம் செய்து கலியாணம் முடிந்த சங்கதி எல்லாவற்றையும் சொன்னார். அப்போது அவ்வரசரானவர்

அறப்பியா தேசத்து ஹாபீசுகளை அழைத்து குர்ஆனை ஓதும்படி செய்வித்து அவர்களை சேர்த்தியான நியாமத்துகளைக்கொண்டு புசிப்பித்தார். பின்னும் உலக மிஸ்கீன்களையும், பக்கீரிகளையும், சகல பிரபுக்களையும் அவர்களுடைய குடும்பத்தார்களையும் அழைத்து சமையல் செய்திருந்த நியாமத்துகளைக்கொண்டு புசிப்பித்தார். இப்படிச்செய்து ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உருசு என்ற திருவிழாவைமுடித்தார். அப்போது வானங்களிலிருந்து மலாய்க்குகள் இறங்கி வந்து ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்களுடைய புகழை வாழ்த்தினார்கள். பின்னும் எல்லோரும் தாஹா சூரத்தையும் முஜம்மில் சூரத்தையும் முழு இருதயத்தோடு ஓதினார்கள். மலாய்க்குகள் ஆண்டவனுடைய ஹம்தையும், ஹசரத்து நபி ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய சனாவையும் ஓதிக்கொண்டும், குர்ஆன் படித்துக்கொண்டும் விடியும்வரையிருந்தார்கள். இதின்பின் சமையலான அன்னம் கொண்டுவரப்பட்டது. அப்போது அவ்வரசரானவர் தாம் எழுந்து ஆப்தாபா என்ற கரகத்தைத் தன் கையில் வாங்கி எல்லோருடைய கைகளையும் கழுவிவைத்தார்.

இதன்பின் சேர்த்தியான அறுசுவையன்னம் பரிமாறப்பட்டது. அநேகவகையான நியாமத்துகள் சோடிக்கப்பட்டன. அவற்றை எல்லோரும் புசித்து அப்பால் பாத்திஹா ஓதினார்கள். எளியவர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் தான் தருமம் செய்து துணிகளையும் பங்கிட்டு எல்லோரையும் சந்தோஷப்படுத்தினார்கள். அடிமையாயிருந்த ஆண் பெண்களை விடுதலையாக்கினார்கள். இவைகளுடைய எல்லா சவாபையும் கர்பலாவில் ஷஹீதானவர்களின் ஆத்மாக்களுக்குச் சேர்ப்பித்தார். இராமுழுவதும் அச்சபை சோதி பொருந்தியதாயிருந்தது. இதற்குள் திடீரென்று வானத்தில் சூரியன் உதயமாயினான்.

பராக்கிரமசாலியாகிய அனீப்ஷா தன் சேனைகள் எல்லாவற்றையும் சேகரித்து தாம் குதிரையின் மேல் ஏறிப்புறப்பட்டார். எல்லோரும் குதிரைகளின்மேல் ஏறிக்கொள்ளுங்கள். அல்லாஹு யப்பஹுமா யஹூ என்று ஓதுங்கள் என்று கட்டளையிட்டார். இவர்கள் சகல சேனைகளோடும் புறப்படும்போது அடிக்கப்பட்ட இரணபேரிகையின் சத்தம் அண்டகடாகமும் அதிர்ந்துவிடத் தக்கதாயிருந்தது. அப்போது ஹாபீசுகளும் மற்றும் எல்லோரும் இன்னாபத்தஹ்னா ஓதினார்கள். அரசரானவர் தன் சேனாசைனியங்களோடு புறப்பட்டு மதினமா

நகரை நோக்கிநடந்தார். அநேக பயணஸ்தலங்களைக்கடந்து சென்றார். அவர் தன் படைத்தலைவரை நோக்கி "ஓ என் அரசபிரபுக்களே! எதுவரை நான் என் பகையாளியாகிய எஜீது என்பவனைக்கொல்லாமலிருக்கிறேனோ அதுவரை என் மனதிற்குத்திருப்தியும் சந்தோஷமும் உண்டாகமாட்டாது" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

இவர்கள் சென்றுகொண்டிருக்கையில் திடீரென்று ஒரு தூதன் வழியில் அவ்வரசர் முன் வந்தான். அவர் அவனைப்பார்த்து "நீயார், நீ எவ்விடத்திலிருந்து வந்திருக்கிறாய். சீக்கிரமாய்ச் சொல்" என்று கேட்டார். அதற்கு அவன் நான் ஆண்டவனுடைய அந்தரங்கத்தின் பொக்கிஷஸ்தலமாகிய மதினமா நகரிலிருந்து வந்திருக்கிறேன் என்று சொன்னான். அப்படியானால் அவ்விடத்திய சமாச்சாரம் என்ன சொல் என்று அரசர் கேட்டார். அதற்கு அவன், "என்ன சமாச்சாரம், எல்லாம் காலால் மிதிபட்டுப் போய்விட்டன. பட்டணமோ இருள் அடைந்துபோயிருக்கின்றது. எஜீது என்பவன் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டாரை மதினமா நகரில் கொண்டுவந்திருக்கிறான். ஹசரத்து சைனுல் ஆபேதீன் அவர்களைச் சிறையாக்கி வைத்திருக்கிறான். பின்னும் அவரை அவ்விடம் வைப்பதினால் அவர் இமாமத்தின் தாவா செய்வார் என்றும், தன்னுடன் எந்நாளும் அடிக்கடி யுத்தம் செய்வார் என்றும் அஞ்சி அவரை அவ்விடம் வைத்திருப்பது சரியல்ல என்று உடனே அவரைத் திமிஷ்க்கு (டமாஸ்கஸ்) தேசம் கொண்டுபோய்விட்டான். பின்னும் மதினமாநகர் முழுமையும் சோதனைசெய்து உத்துபா என்பவனுக்கும், வலீது என்பவனுக்கும் பட்டம் கட்டி அநேக சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் விட்டான். பின்னும் அவனிடத்தில் மூன்று இலட்சத்தி எண்பதினாயிரம் குதிரைவீரர்கள் இருக்கின்றனர்" என்று சொன்னான். அச்சமயத்தில் யாவும் கேட்டிருந்த அலீ அக்பர் என்பவர் எழுந்து நின்று "என்னுடைய உயிர் தங்களுடையதாயிருக்கிறது. ஓ சகோதரரே, நான் கேள்விப்பட்டதைத் தங்கள் சமுகத்தில் அறிவிக்கிறேன் கேளுங்கள். மாவியா என்பவனுடைய குமாரனாகிய எஜீதென்பவனை அல்லாஹுத்தஆலா சீக்கிரத்தில் நாசமாக்குவாராக. அவனிடத்தில் மூன்று இலட்சத்தி எண்பதினாயிரம் குதிரைவீரர்கள் இருக்கின்றனர். இதுவுமன்றி யானை பட்டாளங்களையும் அவன் சேகரித்திருக்கிறான். தாங்கள் தனியையாய் அந்தச்சண்டாளன்மேல் போகிறீர்கள்.

83562

இப்போது தங்களுக்கு உதவிசெய்ய ஒருவருமில்லையே" யென்று சொன்னார். இதை அவ்வரசரானவர் கேட்டுப்புன்சிரிப்போடு "ஓ என் சகோதரனே! எங்களுக்கோ ஆண்டவனுடையவும், அவனுடைய ரசூலாகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடையவும், எங்கள் பிதாவாகிய ஹசரத்து மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், உபத்திரங்கள் அடைந்தவர்களுடையவும் உதவியிருக்கிறது. அவர்களுடைய நற்கருணை யெங்களைப் பாதுகாக்கும். பின்னும் அந்த அசேதகனை எஜீது என்பவனுக்கோ இப்லீசுல்லயீன் என்பவனே சதாகால அதிகாரியாயிருக்கிறான். அவனுடைய ஒத்தாசையே அவனுக்கு இருக்கின்றது. நான் சொல்லுவதை நீர் கவனமாய்க்கேளும். ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய மருமகனாரும் தெய்வ சிங்கமாயுமிருக்கிற என்பிதாவான ஹசரத்து மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எனக்குஇராஜ்யத்தைத்தந்தபோது அவர்கள் உமர் அலி என்பவருக்கும், தாலிப் அலி என்பவருக்கும், முஹிப்பலி என்ற ஆகில் அலி என்பவருக்கும் ஆக இம்மூவர்களுக்கும் போக்தாது தேச பாக்டாட் இராஜ்யத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அவ்விடம் போய் சந்தோஷமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதுவுந்தவிர முஷீப்காக்கா என்று பேருள்ளவர் என்னுடைய அபிமான சகோதரர் ஒருவர் இருந்தார். அவருக்கு என்பிதாவானவர் இறக்கு தேசத்தின் இராஜ்யத்தைத் தந்திருந்தார்கள். அவரோ அவ்விடம் அரசாளுகிறார். அவர் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய குடும்பத்தார்களுடையவும், துக்கமடைந்தவர்களுடையவும், இம்சையடைந்தவர்களுடையவும் சிநேகிதரா யிருக்கிறார். இதுவும் தவிர டர்க்கிகளாகிய இரண்டு சகோதரர்கள் போர்ச்சேவர்களா யிருந்தார்கள். இவ்விருவர்களுக்கு தப்ரேசு தேசத்தின் டாப்ரிஸ் இராஜ்யத்தை அவர்கள் தந்தார்கள். இவர்கள் அவ்விடம் அரசாளுகிறார்கள். இதுவும் நீங்கலாக இப்ராஹிம்உஷ்தார் என்றபேருடையவர் நஜூப் தேசத்தின் அரசராயிருக்கிறார். இவரும் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய குடும்பத்தின்மேல் பிரியமுள்ளவராயிருக்கிறார். பின்னும் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய அநேக புத்திரர்கள் உலகத்தில் அரசாளுகிறார்கள். அவர்கள் எல்லோரும் உயிரோடிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் என்

பிதாவான ஹசரத்து அலிமூர்த்துஜா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இராச்சியங்களைக் கொடுத்தகாலத்தில் நீர் சிறுவயதுள்ளவராயிருந்தீர். இது எல்லாம் உமக்குத்தெரியாது. இது எனக்குத்தெரியும். பின்னும் மேல்கண்டவர்களுக்கு ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஷஹாதத்தின் சங்கதி தெரியாமலிருக்கின்றது" என்று தம்முடைய சகோதரராகிய அக்பர் அலி என்பவரிடம் சொன்னார். இவை யெல்லாவற்றையும் அவர் கேட்டு, "இப்போது தாங்கள் கூறிய யாவும் கேட்டு என் மனதுக்குத் திருப்தி யுண்டாயிற்று. பகைஞன் வெகு பலத்தவனும் ஏராள சேனைகளுடையவனு மிருப்பதால் இப்போது நாம் அவர்கள் எல்லோருக்கும் இச்சமாச்சாரத்தைச் சீக்கிரமாய் எழுதி அனுப்பிவிக்கவேண்டும். அவர்கள் வந்து நமக்கு உதவிசெய்து சத்துருவின் சேனையின்மேல் விழுந்து அவர்களையழித்து விடுவார்களென்று என்மனதில் தோன்றுகிறது" என்று சொன்னார்.

ஹனீப்ஷா அவ்வாறே செய்யச் சம்மதித்து உடனே அவரவர்களுக்குக் கடிதங்கள் எழுதி அஞ்சலக்காரர்கள் கையில் கொடுத்து நாலாப்பக்கமும் அனுப்பிவித்தார். அவர்கள் அக்கடிதங்களை எடுத்துக்கொண்டு குதிரை ஓட்டத்துக்குச் சமானமாக வெகு துரிதமாய்ச் சென்றார்கள்.

முஹம்மது ஹனீப்ஷா யுத்தத்துக்கு வருகிறதாய் ஒரு அஞ்சலகாரன் உத்துபா என்பவனிடம் போய் சொன்னது.

மேல்கண்டபடி அஞ்சலக்காரர்கள் கடிதங்களை எடுத்துக்கொண்டு நாலாப்பக்கமும் போய்விட்டபின் அஹ்மதி சேனையின் தலைவரும், சாசுவத சேனையின் தலைவருமாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கம்பீரமாய் ஆரவாரத்தோடும் புறப்பட்டு மதீனமா நகர் போய்ச் சேர்ந்தார்கள். இத்தருணத்தில் ஒரு அஞ்சலக்காரன் உத்துபா என்பவனிடமும், வலீது என்பவனிடமும் போய் "எமன் தேசத்து அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் மதீனமா நகரின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள். அவரோ ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராயிருக்கிறார். அவர் தன் வழி

சத்தில் எல்லோரைவிடவும் மேலானவரா யிருக்கிறார். அவரிடம் பதினாறாயிரம் வீரியமுள்ளதும் சாக்கிரதையுள்ளதுமான சேனை யிருக்கின்றது. அவர்கள் எல்லோரும் இரத்தப்பழியான யுத்தம் செய்யத் தக்கவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் உன்மேல் வந்திருக்கிறார்கள், என்று சொன்னான். இச்சங்கதியை அவ்விருவர்களும் கேட்டதே அவர்களுடைய மனம் கலங்கிவிட்டது.

முஹம்மது ஹனீப்ஹா அவர்களும், உத்துபா என்பவனும் செய்த யுத்தம்.

ஆயினும் அவர்கள் ஆங்காரத்தோடு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஹா அவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய வெளியே புறப்பட்டார்கள். இப்படிக்கு இவர்கள் உலக ஆசையால் புறப்பட்டபோதிலும், இவர்களுடைய இருதயங்கள் திகிலால் திடுக்கிட்டுக்கொண்டிருந்தன. ஆண்டவனுக்குப் பிரியமானவராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஹா அவர்கள் தன் சேனையை அலங்கரித்து வரிசை வரிசையாய் அணிவகுத்து யூகமாய்க் கட்டினார்கள். அஹமதி கொடியையும் நாட்டினார்கள். இதற்குள் உத்துபா என்பவன் அவ்வரசருடைய எதிரில் சரியானபடி வந்து நின்றான். இவனுடைய சேனையின் எதிரில் அவ்வரசருடைய சேனையோ மாவில் உப்பைக் கலந்ததுக்குச் சமானமாயிருந்தது. இச்சமயத்தில் ஒரு அஞ்சலக்காரன் அவ்வரசர் முன் வந்து நின்று ஓ அரசரே நான் சொல்லுவதைத் தாங்கள் கவனமாய்க் கேளுங்கள். அதாவது எவன் ஒருவன் யுத்தகளத்தில் யுத்தத்துக்காக வருவானோ அவன் முதலில் தன்னுடைய நாமத்தையும் கோத்திரத்தையும் வெளியிட வேண்டுமென்று சத்தமிட்டுச் சொன்னான்.

இதை அவ்வரசரானவர் கேட்டுத் தாமே யுத்தத்துக்காகப் புறப்பட்டுப் பிரகாசிக்கும் சந்திரனைப்போல யுத்தகளத்தில் போய் நின்றார்கள். பின்னும் அவர் தம்முடைய குதிரையின்மேல் ஏறித் தெய்வசிங்கமாகிய ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரன் நானாகவே இருக்கிறேன், என்று சொல்லி ஆகாயத்தின்மேல் சந்திரன் திரிவதைப்போல் இருசேனைகளுக்குள் அங்கும் இங்குமாகத் தம்முடைய குதிரையைத் திருப்பிக்கொண்டும், சப்தத்தின்மேல் சப்தமாய்க் கெர்ச்சித்துக்கொண்டு மிருந்தார்கள். பின்னும் அத்தெய்வ பாலசிங்கமானவர் தன் எதிர்சேனையின் பக்கம் பார்த்து, "ஓ மூடர்களே, புத்தியீனர்களே! என்னை எவன் அறிகிறானோ அவனே அறிகிறான். நீங்கள் என்னை அறியாமல் இருப்பீர்களானால் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொள்ளுங்கள். நானே ஹசரத்து அலிமுர்த்துஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிரியமுள்ள பாலகனாயிருக்கிறேன். பின்னும் நான் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய அன்புள்ள பேரனாயிருக்கிறேன். பின்னும் நான் யாபாக தேசத்தின் அரசனாயிருக்கிறேன். இதுவும் தவிர காஜியாகிய ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சகோதரனாயிருக்கிறேன். என்னையே முஹம்மது ஹனீப்ஹா வென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். என்னுடைய ஜெயத்தின் நகாருக்களின் சத்தம் உலகம் எங்கும் தொனிக்கின்றது. இப்போது நான் உங்கள்மேல் ஜெயமடையவும் உங்களுக்குப் பட்டயத்துடைய ஷர்பத்தின் ருசியைக் காட்டவும் வந்திருக்கிறேன். பின்னும் கொலையின் பழியை உங்களிடம் வாங்குவதற்காக நான் எமன் தேசத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறேன். எல்லோரையும் ஆண்டவனுடைய துணையைக்கொண்டு நான் கொன்று ஒரு நிமிஷத்துக்குள் நாசமாக்குவேன். எவன் மரணத்தின் விருப்பமுள்ளவனாயிருக்கிறானோ அவன் என் எதிரில் வந்து நிற்பான். எப்போது என்னுடைய பராக்கிரமத்தின் அடியையும், வெட்டையும் நீங்கள் பார்ப்பீர்களோ அப்போது நீங்கள் எல்லோரும் அய்யய்யோ ஓ-ஹோ-ஆஹா வென்று சொல்லத் தொடங்குவீர்கள்" என்று சொன்னார்கள்.

உத்துபா என்பவன் எப்போது அவ்வரசருடைய இவ்வாக்கியங்களைக் கேட்டானோ அப்போது அவன் வலீது என்பவனைப் பார்த்து ஓ வலீதே, நீ உடனே யுத்தகளத்துக்குப்போய் அவ்வரசரானவர் அவ்விடம் நிற்கிறார். அவருடன் யுத்தம் செய் என்று சொன்னான்.

இதை அவ்வலீது என்பவன் கேட்டுத் திகிலடைந்து அவ்வரசருடன் எதிர்க்கவும், சண்டை செய்யவும் எவனுக்கும் வல்லமை இல்லையே. நாம் எங்கே போகவேண்டும். நாம் எங்களுடைய உயிர்களை எங்கே கொண்டுபோய் ஒளிக்க வேண்டும். அய்யய்யோ இவரோ முஹம்மது ஹனீப்ஹாவாயிருக்கிறார். இதில் சந்தேகமில்லை. பின்னும் அவர் தெய்வ சிங்கத்தின் பாலசிங்கமாயிருக்கிறார் என்று உத்துபா என்பவனிடம் சொன்னான். பின்னும் இதற்குள் ஒரு சேனதானாகவே தன் மரணத்தின்மேல் சம்மதமுள்ளவனாய் யுத்தகளத்துக்குப்போய்ச் சாகப் புறப்பட்டான்.

அவன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் முன் வந்து நின்று "ஓ ஹனீப்ஷா என்பவரே, நீர் யாருடைய நம்பிக்கையின்மேல் உம் தேசத்தை விட்டுவிட்டு வந்தீர்" என்று கேட்டுக்கொண்டே தன் பட்டயத்தை யோங்கி யவரை வெட்டப்போனான். அவ்வடியை அவ்வரசரானவர் கேடகத்தின்மேல் வாங்கிக்கொண்டு அவனுடைய காலைப் பிடித்து இழுத்தார்கள். அப்போது அக்கால் முறிந்துபோய் விட்டது. ஆண்டவனுடைய ஆக்கினை அவன்மேல் அதிகமாயிருந்தது. பின்பு அவ்வரசரானவர் அவனைப் பட்டயத்தால் இரண்டு துண்டாக்கிவிட்டு அத்துண்டுகளை அச்சண்டாளனுடைய சேனைக்குள் எறிந்துவிட்டு ஈட்டியைத் தம் கையில் பிடித்து அதைப் பூமியின்மேல் குத்தி அல்லாஹு அக்பர் என்று சொன்னார்கள். இதின்பின் அவர்கள் தம் தலைமேல் கிரீடத்தைத் தரித்துச் சத்துருவின் சேனைக்குள் தம்முடைய குதிரையை வேகமாய் விட்டுப் படைவீரர்களை வெட்டத் தொடங்கினார்கள்.

உத்துபா என்பவன் இதைக் கண்டபோது துக்க சாகரத்தில் முழுகினவனானான். சூரரான முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் உத்துபா என்பவனுடைய சேனைக்குள் புகுந்து நாலாபக்கத்திலும் சக்கராகாரமாய்ச் சுழன்று அடிமேல் அடியாக அடித்து அச்சேனையை நாசமாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆதலால் அச்சேனைக்குள் கூக்குரலும், குழப்பமும், இரைச்சலும் உண்டாய்விட்டது.

இச்சமயத்தில் அக்பர் அலி என்பவர் பதினாயிரம் போர்ச் சேவகர்களைக்கொண்டு அத்துரோகியின் சேனையைத் தாக்கத் தொடங்கினார். இதைக்கண்டு மலாயிக்குகள் மர்ஹபா லக்மர் நபா என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பின்னும் அப்போர்ச் சேவகர்கள் எதிரியின் சேனையின்மேல் மின்னலைப்போலப் பாய்ந்துகொண்டிருந்தார்கள். அலி அக்பர் என்பவரோ கர்ஜித்து ஆர்ப்பரித்து யுத்தம் செய்துகொண்டிருந்தார். ரோஷங்கெட்ட எதிரிகள் சேனைகள் கும்பு கும்பாய் மடிந்துகொண்டிருந்தார்கள். பின்பு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ யுத்தகளத்திலிருந்து பிரிந்து நின்று, வெற்றி சத்தத்தைச் சப்திக்கத் தொடங்கினார். அச்சத்தத்தை அத்துரோகிகள் கேட்டு உணர்ச்சி கெட்டவர்களானார்கள். பின்னும் பூதங்களும் இராக்ஷசர்களுமே தொனியற்றவர்களானார்கள். வானத்தார் எல்லாருமே பிரமிப்பு அடைந்து அக்கரைகளையும் எண்ண

களையும் நிறைவேற்றுகிறவனாகிய ஆண்டவனுடைய தஸ்பீஹை செய்தார்கள்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய குதிரையைச் சேனைக்குள் செலுத்தித் துரோகியுடைய சேனையையழிக்கத் தொடங்கினார்கள். குதிரைகளின் பாதம் தாக்குதலால் கிளம்பும் தூசிகளால் நாலாபக்கம் இருளாய்விட்டது. வீரர்களின் கர்ஜனைகளால் வானமும் பூமியும் கிடுகிடுவென் றதிர்ந்துவிட்டன. அகோரக்காற்றால் காய்களும் பழங்களும் மரங்களிலிருந்து உதிருவதுபோல எதிரிகளின் தலைகள் கத்திவீச்சுகளால் அவர்களின் சிரசுகளிலிருந்து குவியல் குவியல்களாய் விழுந்துகொண்டிருந்தன. பின்னும் பூமியில் இரத்த வெள்ளம் ஓடத் தொடங்கியது. பாவிகளாகிய உத்துபா என்பவனும் வலீது என்பவனும் தம்முடைய சேனை முழுவதும் நாசமாய்ப் போனதைக் கண்டு மனக்கொதிப்படைந்தார்கள். அவர்கள் சிதறியோடும் தங்கள் சேனையைத் திருப்பிக்கொள்ள பறை அடித்து யாவரையும் மறுபடியொன்று சேர்த்தார்கள். இதின்பின் அவ்வரசரானவருடைய படைச்சேவகர்களும் திரும்பி வந்து தங்கள் தங்கள் கூடாரங்களிலிருந்தார்கள்.

உத்துபா என்பவனும் வலீது என்பவனும் தங்கள் சேனையில் மாண்டுபோனவர்களுடைய கணக்கைப் பார்த்தபோது மாண்டு போனவர்கள் நாற்பதினாயிரம் பேர்கள் என்று அவர்களுக்குத் தெரிய வந்தது. அப்போது அவ்விருவர்களும் உடனே கடிதம் எழுதி அஞ்சலக்காரன் கையில் கொடுத்து எஜீது என்பவனிடத்தில் அனுப்பி வித்தார்கள்.

உத்துபா என்பவனுடைய கடிதத்தை அஞ்சலக்காரன் எஜீது என்பவனிடம் கொண்டுபோய் கொடுத்தது.

அஞ்சலக்காரன் அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு எஜீது என்பவனிடம் கொண்டுபோய்க் கொடுக்க திமிஷ்க்கு தேசத்திற்குப் புறப்பட்டான். இத்தருணத்தில் அந்த அயோக்கியனான எஜீது என்பவன் இளவரசராகிய ஹசரத்து ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் எல்லாப் பெண்பிள்ளைகளையும் தன் முன் அழைத்து நிறுத்தி இவர்களை வைத்திருப்பதினால் என்ன பிரயோசனம்

இருக்கிறது, ஒரு இளைப்பாறுதலில்லையே. நம்மிடமோ அன்றி வேறிடமோ ஆகையால் ஒரு பெரிய பள்ளம் தோண்டி அதற்குள் இவர்கள் எல்லோரையும் உயிரோடு தள்ளிவிட்டு அவர்களின் மேல் மண்ணும் கல்லும் போட்டு அப்பள்ளத்தை நிரப்பிவிட வேண்டுமென்று என் மனதில் தோன்றுகிறது, என்று தன் சபையார்முன் சொல்லிக்கொண்டிருந்தான்.

அந்த வஞ்சகன் இவ்விதமான யோசனையில் உட்கார்ந்திருக்கும் போது உத்பா என்பவனும், வலீது என்பவனும், அனுப்பிய அஞ்சல்காரன் அவனிடம் வந்து சேர்ந்து தான் கொண்டுவந்த கடிதத்தை அவன் கையில் கொடுத்தான். அக்கடிதத்திலே “நமது மேலான அலியின் குமாரனாகிய ஹஸரத் முஹம்மது ஹனீப்ஷா என்பவன் வெகு வீரியமுள்ள நாற்பதினாயிரம் சேனைவீரர்களுடன் இரத்தப்பழி வாங்குவதற்காக வந்திருக்கிறான். அவனுடைய பூரிப்பும் ஆரவாரமும் பயங்கரமானவை. பின்னும் அவன் வெகு தந்திரத்தோடும் வீரத்தோடும் யுத்தம் செய்கிறான். அவன் எங்கள் சேனை முழுவதையும் கொன்று நாசமாக்கிவிட்டான். பின்னும் அவனுக்கும் எங்களுக்கும் நடந்த உக்கிரமான பெருஞ் சண்டையில் உங்களுடைய அளவற்ற சேனைகள் மாண்டுபோய் விட்டன.” என்று இவ்விதமாய் எழுதப்பட்டிருந்தது. இதை அப்பாவியாகிய எஜீது என்பவன் வாசித்தவுடனே சிம்மாசனத்தின் மேல் உட்கார்ந்தபடியே ஹஸரத் முஹம்மது ஹனீப்ஷா அவர்களைத் திட்டத் தொடங்கினான். பின்னும் உடனே அவன் மனக்கொதிப்பால் பெருமூச்சு வாங்கி சிம்மாசனத்தின் மேலிருந்து கீழே குனிந்து இந்தப் பீடையோ எங்கள்மேல் எங்கே இருந்து வந்தது. நம்மிடம் சிக்கியிருக்கும் இவர்களை ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய வீட்டாரை இதற்குள் பள்ளத்தில் போடவேண்டாம், முஹம்மது ஹனீப்ஷா என்பவன் சிறையாய் நம்மிடம் வரும்வரை இவர்களை வைத்து வைக்க வேண்டும், என்று தன் மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான்.

நவல் என்ற மந்திரி ஹனீப்ஷா அவர்களுடைய சகோதரர்களின் சங்கதி எஜீது என்பவனிடம் சொன்னது.

எஜீது என்பவனுக்கு ஒரு மந்திரியிருந்தான். அவன் நற்குணமுங் கல்வியறிவு முடையவனாய் நீதி தவறாது தன் மந்திரித்தொழிலை

நடத்தி வந்தான். அவன் எஜீது என்பவனிடமிருந்த மந்திரிகளுக்கெல்லாம் தலைவனாயிருந்தான். அவன் பெயர் நவல். அந்த நவல் என்ற மந்திரிதன் அரசன் மொழிந்த நியாயமற்ற மொழிகளையெல்லாம் கேட்டு அத்தோடு இவன் அந்த ஹனீப்ஷாவின் பெருமையைச் சற்றுமறியாது “கேடுவருமுன் மதி கெட்டுவரும்” என்ற பழமொழிக்கு இலக்காய் நடந்துகொள்கிறானே என்று தனக்குள் தானே விசாரப்பட்டுக் கொண்டு எஜீது என்பவனை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்கினான்:—

அரசசிங்கமே! அடியேன் ஒரு சிறு மனு செய்து கொள்கின்றேன். தயவுசெய்து அதற்குத் திருச்செவி சாய்க்க வேண்டுகிறேன். மந்திரியானவன் தன் அரசனுக்கு எந்தச் சமயத்திலும் சமயோசிதமான யோசனைகளைக் கூறவேண்டியவன். அதுமட்டுமல்ல, அரசன் செய்யக்கருதும் எந்த விஷயத்தையும் மந்திரி முன்னே சீர்தூக்கிப் பார்த்து அதில் நேரிடக்கூடிய பலாபலன்களை யூகித்தறிந்து அரசனிடம் கூறவேண்டும். அதற்காகவே “மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்” என்ற நீதிவாக்கியம் பிறந்திருக்கிறது. அப்படிக் கூறத் தவறுகிற மந்திரி நரகமடைவான். ஆதலால் இச்சமயம் அடியேன் இரண்டொரு விஷயங்களைக் கூறவேண்டியவனாயிருக்கிறேன்.

யுத்தம் புரிவது அரசனுக்குரிய தொழிலே. ஆனால் நமக்கு ஒரு பகைவன் தோன்றிய காலத்தில் நமது பராக்கிரமத்தில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குறைக்கக் கூடாதெனினும், நமது எதிரியின் பராக்கிரமத்தை நாம் வெறுப்பினால் குறைவாய் மதித்து விடக்கூடாது. அப்படிச் செய்தால் நாம் எதிரிவிஷயத்தில் மிக்க அலட்சியமாயிருந்து விடுவோம். அக்காரணத்தால் அவன் சுலபமாய் நம்மை வென்று விடுவான். நம்மால் ஜெயிக்கக்கூடிய எதிரியென்று தோன்றினும் அப்போதும் சிறிய பாம்பாயினும் பெரிய கோல் கொண்டடி என்பது போல நடந்துகொள்ளவேண்டும். அப்படியின்றி எல்லா விஷயத்திலும் நமக்கு மேலானவன் என்று கண்டால் ஆரம்பத்திலேயே பக்குவமாய் நமது கௌரவத்தையும் இராஜ்யத்தையும் காப்பாற்றிக்கொள்வது நலம். அதைவிட்டு வீணில் எண்ணிறந்த உயிர்களை மாளவைத்துக் குடிகளுக்கும் நமக்கும் துன்பம் உண்டாக்கிக் கொள்வதில் பயனில்லை. இப்போது யுத்தத்திற்கு வந்திருக்கும் அந்த ஹனீப்ஷா என்பவரைப் பற்றி எனக்குத் தெரிந்தமட்டில் சுருக்கமாய்க் கூறுகிறேன். தயவு செய்து கவனமாய்க் கேளுங்கள்.

அவ்வரசரானவரோ தனியானவரா யிருக்கவில்லை. அவருடைய நாமம் முஹம்மது ஹனீப்ஷா. அவர் இருண்ட இரவை பிரகாசிக்கும்படி செய்கிறவராயிருக்கிறார். அவருக்குச் சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஞானிகளா யிருக்கிறார்கள். அவர்களை நீர் அறியாதவராயிருக்கிறீர். அவர்களுடைய சேனையும் அளவற்றதா யிருக்கின்றது. அவர்கள் எல்லோரும் வந்து அவ்வரசருக்கு உதவி செய்வார்கள் என்று கூறும்போது அவைகளைக் கேட்டிருந்த இராஜ சபையிலிருந்த பிரபுக்களனைவரும் திகிலடைந்தார்கள். எஜீது என்பவன் அவைகளைக் கேட்டதே அவனுடைய இரத்தமெல்லாம் கொதித்தது. பின்பு அவன் கோபத்தால் வியர்வை பொங்க மந்திரியை நோக்கி "அவர்கள் யார்? அவர்களுடைய நாமங்கள் என்ன? அவர்கள் எங்கே யிருக்கிறார்கள்? அவர்களுடைய விபரத்தைச் சீக்கிரம் கூறு" என்றான். அதற்கு அந்த மந்திரியானவன் "ஓ எனதிறைவரே கேளும். ஹசரத்து மௌலா அலி அவர்கள் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மருமகன். அவருக்கு மூன்று குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வீரியத்திலும் வித்தையிலும் தேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். அம்மூவர்களில் ஒருவர் உமர் அலி என்று பேருடையவர். இரண்டாவது குமாரர் ஆகில்அலி என்றும், மூன்றாவது குமாரர் தாலிப் அலி என்றும் பேருள்ளவர்களா யிருக்கிறார்கள். இவர்களுடைய நாமங்கள் இவைகளாகவே இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் ஆண்டவனுடைய தியானத்தில் ஒளலியாக்களா யிருக்கிறார்கள். இவர்களோ சத்துருக்கள் விஷயங்களில் சங்கரர்களாயும், இரத்த வெள்ளம் ஓடச் செய்கிறவர்களாயு மிருக்கிறார்கள். பின்னும் இவர்கள் துஷ்டர்களுடைய வேர்களைப் பிடுங்கிவிட்டவர்களாயும் பிடுங்கிவிடுகிறவர்களாயு மிருக்கிறார்கள். இவர்களுடைய சேனைகளுக்கோ கணக்கில்லை. இவர்கள் அளவற்றசேனையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் எக்காலும் பொக்தாது என்ற தேசத்தில் இருந்துகொண் டிருக்கிறார்கள். இதுவும்தவிர ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய அபிமான குமாரர் ஒருவர் இருக்கிறார். இவருடைய நாமம் முஹிப்காக்கா. இவர் புத்தியில் வெகு சாமர்த்தியமுடையவர். இவர் இராக்கு தேசத்தின் அரசராயிருக்கிறார். இவருக்கு இராஜ்யம் ஹசரத்து மௌலா அலி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் தவிர மாலிக்கே உஷ்த்துர் என்பவருடையகுமாரர் இப்ருஹீம் உஷ்த்துர் என்றபேருள்ளவர் ஒருவர் இருக்கிறார்.

இவர் நஜப் தேசத்து அரசராயிருக்கிறார். இவருடைய அச்சமும் பயமும் எங்கும் நிறைந்திருக்கின்றது. இந்தப்பராக்கிரமசாலியோ திண்மையான உருவமுள்ளவராயும் புஷ்டியான சரீரமுள்ளவராயும் இருக்கிறார். இவர் இலட்சாதி இலட்சம் சேனைகளையும் ஒருநொடியில் நாசமும் தூசியுமாக்கி மண்ணுக்குள்ளாக்கி விடும்பராக்கிரமசாலியுமாயிருக்கிறார். இதுவும் தவிர நோஜான், மோகான் என்ற நாமங்களையுடைய இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். இவ்விருவர்களும் ஹசரத்துமௌலா அலி அவர்களுடைய அடிமைகளாயும், நேசர்களாயும், இவர்களிடம் கணக்கற்ற சேனைகள் இருக்கின்றன. இதுவும் தவிர ஒரு இலட்சத்திபதினாயிரம் தயாரான சேனை இருக்கின்றது. இவர்களில் அனேகர்கள் அம்புக்காரர்களா யிருக்கிறார்கள். இரவும் பகலும் இவர்கள் கையில் அம்புகள் இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் மானிடரை வேட்டையாடுவதில் கைதேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். பின்னும் இவர்கள் நாள்தோறும் பறவைகளையும் மனிதர்களையும் வேட்டையாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முன்னுக்கு யானையாகிலும், கொசுவுக்குச் சமானமாயிருக்கிறது. இவர்கள் அம்பு எய்யும் வித்தையிலும், குமானெனும் வித்தையிலும் வல்லவர்களாயிருக்கிறார்கள். பின்னும் சேவல் இரையை எவ்விதமாய் ஒவ்வொன்றாகப் பொறுக்கி புசித்து விடுகின்றதோ அத்தன்மையாய் இவர்கள் உம்முடைய யானைகளைப் பொறுக்கி பொறுக்கிக்கொன்று விடுவார்கள். பின்னும் ஒரு நிமிஷத்தில் சேனையைக் கொன்று மலைகளுக்குச் சமானமான அம்பாரங்களாக்கி விடுவார்கள். இவர்கள் வசம் நஜ்பிரக தேசம் இருக்கின்றது. இவர்கள் அவ்விடம் வாசம் செய்கிறார்கள்" என்று எஜீது என்பவனிடம் சொன்னான்.

எஜீது என்பவன் இதைக்கேட்டு எரிந்து விழுந்து, தன் சிம்மாசனத்தின் மேல் கையை பொங்கி யடித்து அங்கிருந்த சபையோரை நோக்கி, "ஓ ஜனங்களே கேளுங்கள். என் மனதில் யாதொருவித விசாரமுமில்லை. ஆனால் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரர்களின் அச்சமும் பயமும் மாத்திரம் எனக்கு இருக்கிறது. ஏனெனில் உலகிலுள்ள எல்லா வீரர்களிலும் அவர்கள் மகா பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் தெய்வ சிங்கத்தின் சிங்கக்குட்டிகளா யிருக்கிறார்கள். ஆகையால் முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சகோதரர்கள் அவருடன் வந்து சேருவதற்கு

முன்னதாகவே அவரை உயிரோடு பிடித்து என்னிடங் கொண்டுவருவதற்கும், அப்படி அவரை உயிரோடு கொண்டுவரக்கூடாமையானால் அவரைக் கொன்றாவது கொண்டுவருவதற்கும், என் இருதயத்தில் தைக்கப்பட்டிருக்கும் முள்ளை நீக்கிவிடுவதற்கும் ஒருவரும் தகுந்தவர்களாய் எனக்குப் புலப்படவில்லை" என்று கூறினான்.

இச்சொற்களை ஷிமுர்லயீன் என்பவன் கேட்டு உடனே அகங்காரத்தோடு எழுந்து நின்று" ஓ இராஜனே, தாங்களோ அரசாதிஅரசராயிருக்கிறீர். எல்லோரும் உனக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருக்கிறார்கள். பின்னும் நீர் ஈகையுள்ளவராயுமிருக்கிறீர். எனக்கோ ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய சகல பலமும் கிடைத்திருக்கிறது. அதை ஆண்டவன் எனக்குத் தந்திருக்கிறான். பின்னும் நான் தீர்க்க தரிசனத்தின் பூங்காவனத்துடைய சரோ என்ற மரங்களை வெட்டியவனாயிருக்கிறேன். இது என் வழக்கமாயிருக்கிறது. ஆகையால் முஹம்மது ஹனீப்ஷா என்பவரை உயிரோடு பிடித்துத் தங்கள் முன் கொண்டுவர, நான் விடியற்காலம் எழுந்து போகிறேன். அவரைப் பிடித்து உங்கள்முன் கொண்டு வருகிறேன். தங்கள் இருதயத்தில் இருக்கும் முள்ளைப் பிடுங்கிவிடுகிறேன். தாங்கள் இதற்காகச் சற்றும் வியாகுலப்படவேண்டாம்" என்று கூறினான்.

“இதை கேடி எஜீது என்பவன் கேட்டு வெகு சந்தோஷப்பட்டு ஓ ஷிமுர்லயீனே உண்மையாகவே வாஸ்தவத்தில் நீயே முஹம்மது ஹனீப்ஷா என்பவரை ஜெயிக்கத்தக்கவனாயிருக்கிறாய். அக்காரியம் உன்னாலேயே முடியும் என்று சொல்லி அவனை உற்சாகப்படுத்தினான். பின்பு எஜீது என்பவன் முப்பதினாயிரம் குதிரைப்படைச் சேவகர்களை ஷிமுர்லயீன் என்பவன் வசம் ஒப்புவித்து முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய சகோதரர்கள் அவருடன் வந்து சேருவதற்கு முன்னதாகவே நீ வெகு சீக்கிரமாய் புறப்பட்டுப்போய் அவருடைய சேனையைத் தாக்கி முறியடித்து நாசமாக்கிவிட்டு அவருக்கு யாரும் ஒத்தாசை வாராமலிருக்கும்படி செய். ஓ ஷிமுர்லயீனே, நீ இந்தச் சேனையையழைத்துக்கொண்டு பொக்தாது என்ற தேசத்தின் பக்கம் போ. உனக்கு என் ஆசீர்வாதம் இருக்கின்றது. நீ அவர்களுடைய சேனைகளைத் தூள்தூளாக்கி அவர்களில் ஒருவனையும் உயிருடன் விடாமல் அவர்களெல்லோரையும் எமனுலகிற் குடியேற்றிவிடு” என்றான்.

இவையெல்லாம் கேடி ஷிமுர்லயீன் என்பவன் கேட்டு “ஓ என் எஜமானரே, தங்கள் கட்டளையை என் உயிர்போல் நினைத்து அதின்படி செய்யக் காத்திருக்கிறேன்” என்றான்.

ஷிமுர்லயீன் என்பவன் பொக்தாது தேசத்தின் பக்கம் போகப் புறப்பட்டது.

ஷிமுர்லயீன் என்பவன் எஜீது என்பவனிடத்திலிருந்து முப்பதினாயிரம் போர்ச்சேவகர்களைக் கூட்டிக்கொண்டு விடியற்காலம் எழுந்து பொக்தாது என்ற தேசத்தின் பக்கம் போகப்புறப்பட்டான். அவனே அனேக ஸ்தலங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தான். இப்படி இவனை எஜீது என்பவன் அனுப்பிவிட்டபின் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடன் யுத்தஞ் செய்துகொண்டிருக்கும் உத்துபா என்பவனுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காக வெகு சீக்கிரமாய் ஏராளமான சேனையை ஆயத்தமாக்கினான். பின்பு அவன் அவ்விதமாய்ச் சேகரித்த மூன்று இலட்சக் குதிரைப்போர்ச்சேவகர்களுக்கும் ஒருவனைச் சேனாதிபதியாக்கி, நீ போய் அவ்விடஞ் சேர்ந்து முஹம்மது ஹனீப்ஷா என்பவருக்கு முன்னின்று அவருடன் யுத்தஞ் செய்து உன்னால் கூடுமானால் அவரை உயிரோடு பிடித்து அவரை என்னிடம் வெகு காவலோடு அனுப்பிவித்துவிடவேண்டும். அப்படி அவரை நீ அனுப்புவாயானால் நீ என்னிடம் சன்மானமுள்ளவனாயிருப்பாய். அப்படி அவரை உயிரோடு பிடிக்க உன்னால் சாத்தியப்படாமல் போகுமாகில் அப்போது அவருடைய தலையையாவது நீ அறுத்து வெகு சீக்கிரமாய் என்னிடம் அனுப்பவேண்டும். இதின் பின் செய்யவேண்டிய எல்லாக் காரியங்களை நீ செய்யவேண்டும். பின்னும் நீ ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய எல்லாச் சந்ததியாரையும் நாசமாக்கவேண்டும். இதுவுந் தவிர அவருடைய பந்துக்களையும் அழித்துவிடவேண்டும். அவர்களில் எந்த ஸ்திரீ கர்ப்பவதியாயிருப்பாளோ அவளுடைய கர்ப்பத்தையும் முதலில் கிழித்துவிட்டு அப்பால் அவளையுங் கொன்றுவிடவேண்டும். பின்னும் அவர்களில் பால்குடிக்குஞ் சிசு இருக்குமாகில் அச்சிசுகளையுங்கூட சங்கரித்துவிடவேண்டும். இப்படிக்கெல்லாம் நீ நிறைவேற்றி என் இருதயத்தில் பதிந்திருக்கும் முள்ளை பிடுங்கிவிடவேண்டும். இது உன் கடமையாயிருக்கிறது" என்று கூறினான்.

இவ்வித உபதேசங்களை அச்சேனாதிபதி கேட்டு “தாங்கள் ஆக்கியாபித்தபடியே நான்போய் ஜெயமடைவேன். முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய சேனையைத் தூள்தூளாக்கி நாசமாக்குவேன். பின்னும் உடனே அவருடைய தலையை வீசி, அத்தலையை உமது சமூகத்

தில் அனுப்பித்து விடுவேன். பின்பு பெண்களையும், பிள்ளைகளையும், சிசுக்களையும் அழித்துவிடுவேன். தாங்கள் இது விஷயத்தில் மனத்திருப்தியுடன் இருப்பீராக. நீர் ஒன்றும் யோசிக்கவேண்டாம்" என்று எஜீது என்பவனிடம் சொன்னான்.

இவை எல்லாம் அந்த அசுபகாலமுடையோனாகிய எஜீது என்பவன் கேட்டுச் சேனைகளை அவன் வசம் ஒப்பித்து அவனை உத்துபா என்பவனுக்கு உதவியாக அனுப்பினான்.

அரசன் கட்டளையை பெற்றுக்கொண்ட அச்சேனைத்தலைவன் அச்சிங்கமாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களின் மேல் யுத்தஞ்செய்யத் தன் இடுப்பைக்கட்டி சேனையுடன் புறப்பட்டுப் பயணஸ்தலங்களைக் கடந்து சென்றுகொண்டிருந்தான். அவனுடைய மரணம் அவனை அச்சிங்கத்தின் முன் இழுத்துக்கொண்டு சென்றது. இதை அத்துர்அதிஷ்டன் அறியாதிருந்தான்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய செய்தி.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எஜீதுகளோடு யுத்தம் செய்து ஆயிரக்கணக்கானவர்களை மாளச்செய்திருக்கிறார்கள். பின்னும் ஆண்டவன் இவருக்கு அழியாத ஜெயத்தைத் தந்திருந்தான். ஜெயமோ சேனையுள்ள இடத்தோடு கூடியதாயிருந்தது. பின்னும் இவருக்கு ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய ஆசியும், ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய உதவியுமிருந்தன. பின்பு ஜெயசூரனான அக்பர் அலி என்பவர் எல்லாக் கொடுமைக்காரர்களையும் அடித்து நாசமாக்கியிருந்தார். இதின்பின் அவர் தன் சேனையில் ஷஹீதானவர்களுடைய கணக்கைப் பார்த்தபோது, அந்த யுத்தத்தில் ஷஹீதானவர்கள் ஆறாயிரம் குதிரைப் போர்ச்சேவகர்கள் என்று தெரிந்தது. அநேகர் காயம்பட்டவர்களாயுமிருந்தார்கள். இதை அக்பர் அலி என்பவர் கண்டு துக்கமுடையவரானார். இவருடைய துயரத்தைக் காணச் சகியாதவன் போல் ஆதித்தன் மேற்குக்கடலில் மறைந்தான். இரவின் அரசனாகிய சந்திரன் தன் பரிவாரங்களாகிய நட்சத்திரங்களோடு புறப்பட்டான். அப்போது எல்லோரும் நித்திரையில் மூழ்கினவர்களாயிருந்தார்கள். இரவு கொஞ்சம் கொஞ்சமாய்க் கழிந்துகொண்டேயிருந்தது. கடைசி

யில் விடியற்காலம் நெருங்கியது. நட்சத்திரங்களின் ஒளி மழுங்க ஆரம்பித்தது.

அச்சமயம் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எழுந்து வுளுசெய்து ஜமாஅத்துடன் சுப்ஹு தொழுதார்கள். பின்பு அவர்கள் தன் சகோதரராகிய அக்பர் அலி என்பவர் துயரமான முகத்தோடு நின்றிருப்பதைக்கண்டு, அவரை விளித்து, "நீர் துயரமாயிருப்பதின் காரணமென்ன? நீர் அதை மறைக்கவேண்டாம். வாஸ்தவத்தை என்னிடம் கூறு" மென்று சொன்னார்.

அதற்கு அவர், "ஓ என் சிரசின் கிரீடரே, என் துயரத்தின் காரணத்தைத் தங்களுடன் சொல்லுகிறேன். தாங்கள் கவனமாய்க் கேளுங்கள். அதாவது எங்களுடன் சகாயமாய் பதினாலாயிரம் படைச் சேவகர்கள் இருந்தார்கள். அவர்களில் ஆறாயிரம்பேர்கள் இச்சண்டையில் மாண்டுபோனார்கள். மீதமிருக்கிறவர்கள் எண்ணாயிரம் பேர்கள். இவர்களிலும் காயம்படாதவர் ஒருவருமில்லை. எல்லோரும் காயம் பட்டவர்களாகவே யிருக்கிறார்கள். இதுவுந்தவிர உத்துபா என்பவனுக்கு உதவிசெய்வதற்காக ஆறுலட்சங் குதிரைப் போர்ச் சேவகர்களை எஜீது என்பவன் அனுப்பியிருக்கிறான். அவர்கள் இப்போது அவனுக்கு உதவிசெய்ய வருகிறார்களென்ற நூதனமான சங்கதியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னார்.

இதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டுப் புன்சிரிப்புகொண்டு "ஓ ஹைதர் குமாரரே, உமக்குத் தெரியாது. எனக்கு ஹல்அதா என்ற குருவின் கிரீடருடையவும், ஹசரத்து முஹம்மது ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடையவும், இக்கட்டின் சிக்கை அவிழ்க்கிறவராகிய ஹசரத்து மௌலா அலி அவர்களுடையவும், மோட்ச நாயகியாகிய ஹசரத்து பாத்திமா நாச்சியார் அவர்களுடையவும், மரணத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுடையவும், தோஷமற்ற ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், இடுக்கண் செய்யப்பட்ட ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் ஆசீர்வாத பலன் இருக்கிறது. இதுவுமன்றி ஒவ்வொரு நிமிஷமும் வானத்தினுடையவும், பூமியினுடையவும், ஹசரத் நபி யாண்டவர்களுடைய பேரப் பிள்ளைகளுடையவும், லௌஹு உடையவும், கலமுடையவும், அர்ஷுடையவும், எல்லா அம்பியாக்களின் ஆத்துமாக்களுடையவும் ஒத்தாசையு

இருக்கின்றது," என்று சொல்லிவிட்டுப் "பின்னும் கேளும். அவ்வனுடைய கட்டளையால் [illegible] நான் சத்துருக்களை எவ்விதமாய் நாசமாக்குவேன் என்பதை நீர் உம்முடைய கண்களால் நன்றாய்ப் பார்ப்பீர். ஹசரத்து முகம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடையவும், ஹசரத்து அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து ஹைதரே கர்றார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் கருணையான ஆசீர்வாத வல்லமையால் [illegible] கியாமத்து நாள்வரை நான் என் உடைவாளை உபயோகிப்பேன். பூலோகத்தில் [illegible] இவ்வித சண்டை நடவாமல் இருக்கும்படியாக விதமாய் சண்டைசெய்வேன்" என்றும் சொன்னார்கள். ஹசரத்து முகம்மது ஹனீபா அவர்கள் நாள்தோறும் இரவும் பகலும் தன்னை எதிர்த்த அக்ஞானிகளைச் சங்காரஞ்செய்து ஜெயபேரிகை முழக்கிக்கொண்டிருந்தார்கள்.

இதற்குள் தன் உயிரைத் தப்பச்செய்த அப்பாவியாகிய எஜீது அரசனுடைய [illegible] சேனையுடன் ஷாம் தேசத்தை விட்டுப் புறப்பட்டுப் பயணங்களை நடந்துகொண்டு உத்பா என்பவனுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காக மதினமா நகர் வந்து சேர்ந்தான்.

அஞ்சலக்காரன் பொக்தாது தேசம் போய் உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி இவர்களுக்குக் கடிதம் கொடுத்த சமாச்சாரம்.

ஓ அன்பர்களே, அஞ்சலக்காரர்கள் கடிதங்களை வாங்கிக்கொண்டு நாலாபக்கமும் சென்றபோது, அவர்களில் ஒருவன் காற்றைப்போல பறந்துகொண்டு பொக்தாது தேசம் போய்ச்சேர்ந்தான். அந்நகரத்தில் உமர் அலி என்பவரும், தாலிப் அலி என்பவரும், ஆகில் அலி என்பவரும் ஆக இந்த மூன்று சகோதரர்களும் ஏகாந்தமாய் உட்கார்ந்துகொண்டு நீங்காத இரு இமாம்களையும் நினைத்து துக்கித்துக்கொண்டிருந்தார்கள். பின்னும் இவர்கள் மதினமா நகரின் சமாச்சாரம் ஒன்றும் தெரியவில்லையே. தீர்க்கதரிசனத்தின் ஆகாயத்துடைய சந்திர சூரியர்களாகிய எங்கள் சகோதரர்களான ஹசரத்து இமாம் ஹசன் ரலி

யல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து இமாம் ஹுசைன் அவர்களுடையவும் நன்மைதீமை ஒன்றும் தெரியாமல் இருக்கின்றதே என்று பேசிக்கொண்டிருந்தார்கள். இதற்குள் அந்த அஞ்சலக்காரன் வெகு சீக்கிரமாய் அவர்கள் சமுகத்தில்போய் அவர்களுக்குச் சலாம் செய்து கடிதத்தைக் கொடுத்தான்.

அக்கடிதமோ மடிக்கப்பட்டும், அதின்மேல் ஹசரத்து முகம்மது ஹனீபா அவர்களுடைய முத்திரை முத்திரிக்கப்பட்டிருந்தது. உடனே உமர் அலி என்பவர் அக்கடிதத்தை வாங்கிப் படிக்கத் தொடங்கினார், அக்கடிதத்தில் ஓ என் கண்மணிகளாகிய சகோதரர்களே எஜீது என்பவன் அநியாயமாய் முதலில் ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு, அவர்களுக்கு நஞ்சு கொடுத்துக் கொன்றிருக்கிறான். இதின்பின் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அவர்களோடு யுத்தம் செய்து அவர்களுடைய சகோதரர்களையும், பந்துக்களையும், துணையாளிகளையுங் கொன்றுவிட்டு அவரையும் ஷஹீது செய்துவிட்டான். பின்னும் ஷிம்முர்லயீன் என்பவன் அவருடைய திருதேகத்திலிருந்து சிரசை அறுத்துவிட்டான். பின்னும் அவன் இச்சிரசையும், ஹசரத்து சைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய குடும்பத்தாரையும் சிறையாக்கி எஜீது என்பவனிடம் அனுப்பிவிட்டான். இப்போது என்னில் பொறுத்தலும் சகிப்புமில்லை. ஆகலால் நான் பிராணியற்ற அவர்களுடைய இரத்தத்திற்குப் பழியை அவனிடம் வாங்குவதற்காகவும், எஜீதிகளைக் கொல்லுவதற்காகவும் நான் என் இடுப்பைக்கட்டிப் புறப்பட்டிருக்கிறேன். என்னுடைய இந்தக் கடிதத்தை நீங்கள் பார்த்தவுடன் நீங்களும் வெகு சீக்கிரமாய்ப் புறப்பட்டு என்னுடன் வந்து சேரவேண்டும். பாக்கியத்தை யடைய வேண்டும். அஷ்ஷஹீதுகளுக்காக நான் இப்போது என்னைத் தத்தம் செய்துவிட்டேன். நான் என் குடும்பத்தைப் பிரிந்து புறப்பட்டுவிட்டேனென்று எழுதப்பட்டிருந்தது. உமர் அலி என்பவர் அக்கடிதத்தை வாசித்துப்பார்த்து மிக்க ஆயாசமடைந்தவராய் ஆசனத்தில் சாய்ந்துவிட்டார்.

இச்சங்கதிகள் எல்லாவற்றையும் தாலிம் அலி என்பவர் கேட்டு, அவருடைய நயனங்களிலிருந்து இரத்தக்கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. பின்பு உமர் அலி என்பவர் [illegible] வந்து தன்

தலைமேல் அடித்துக்கொள்ளவும், திரேகத்தின் உடுப்புகளைக் கிழித்துக் கொள்ளவுந் தொடங்கினார். இத்தருணத்தில் பொழுது அமர்ந்து இரவு வந்து சம்பவித்தது. இதின்பின் அவர் எளியவர்கள் முதலான சகலர்களுக்கும் அன்னம்புசிப்பித்து எளியவர்களுக்குத் தங்கத்தையும் வெள்ளியையும் திரவியங்களையும் கைருத்து செய்து, பரிசுத்த ஆத்துமாக்களுக்குப் புண்ணியத்தைச் செலுத்தி பாத்திஹா ஓதினார். இதுவுந் தவிர அத்தேசத்தார் எல்லோருக்கும் துக்கம் வெகு அதிகமாயிருந்தது. பின்னும் அம்மூவர்களும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காக ஆயத்தமாய்ப் புறப்பட்டார்கள். ஷை மூன்று சகோதரர்களும் பதினாலாயிரம் சேனையுடன் புறப்பட்டார்கள்.

* * *

முஷீப்காக்கா என்பவர் ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வகைருக்களை ஞாபகஞ் செய்து துக்கித்துக்கொண்டிருந்தது.

ஹசரத்து மெளலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முஷீப்காக்கா வென்று பேருள்ள அபிமான புத்திரர் ஒருவர் இருந்தார். இவர் இராக்கு தேசத்து அரசராயிருந்தார். இவர் ஒருநாள் ஹசரத்து ஹுஸைனன் அவர்களுடைய சமாச்சாரம் யாதொன்றும் எனக்குத் தெரிய வருகிறதில்லையே என்று விசனப்பட்டுக்கொண்டிருந்தார். பின்னும் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பேரப்பிள்ளைகளோ என் சகோதரர்களாயும், என் உயிர்களாயுமிருக்கிறார்கள். பின்னும் அவர்கள் என்னுடைய இருதயத்தின் கண்டங்களாயுமிருக்கிறார்கள். பின்னும் கராமத்தின் அரசராகிய ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களோ சவுந்தரிய ரூபமுள்ளவர்களாயிருக்கிறார்கள். விலாயத்தின் அரசராகிய ஹசரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களோ பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவ்விருவர்களும் மதினமா நகரில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டவனிடத்தில் இவ்விருவர்களுங் கண்ணியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். வெகுநாளாய் இவர்களுடைய சமாச்சாரங்கள் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. இது என்ன காரணமோ வொன்றுந் தோன்றவில்லை. அவ்விடத்திலிருந்து ஒருவரும் வருகிறதுமில்லை. அவ்விடத்திய சமாச்சாரம் ஒருவருங் கொண்டுவந்து சேர்க்கிறதுமில்லை. ஆகையால் இப்போது என்னுடைய மனதுக்குத் திருப்தியும் ஆறுதலுமில்லை. ஆதலால் அவ்விடத்திலிருந்து சமாச்சாரத்தை வரவழைக்க வேண்டுமென்று அவர் துயரத்தோடு சொல்லிக்கொண்டிருந்தார். பின்பு அவர் ஒரு அஞ்சலக்காரனையழைத்து ஓ மனிதா, நீ தாமதஞ்செய்யாமல் மதினமா நகருக்கு உடனே புறப்பட்டுப்போய் என் சகோதரர்களும் அரசர்களுமான அவ்விருவர்களுடைய சமாச்சாரத்தையும் நீ வெகு சீக்கிரங் கொண்டுவரவேண்டும். நான் உனக்கு அதிக இனாம் கொடுப்பேனென்று சொல்லி அவனை அனுப்பிவித்தார். அவனோ கொஞ்சங்கூட ஓரிடமுந் தங்காமலுந் தாமதஞ்செய்யாமலும் வெகு சுறுசுறுப்பாய்ப் போய்க்கொண்டிருந்தான்.

* * *

ஹசரத்து ஹனீப்ஷா அவர்களுடைய கடிதத்தை அஞ்சலகாரன் முஷீப்காக்கா என்பவரிடம் கொண்டுபோய் கொடுத்தது.

ஷை முஷீப்காக்கா என்பவர் அஞ்சலகாரனைச் சமாச்சாரங் கொண்டுவரும்படி மதினமா நகருக்கு அனுப்பிவிட்டுத் தாம் விசாரத்தோடு உட்கார்ந்துகொண்டிருக்கையில் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களால் அனுப்பப்பட்ட அஞ்சலகாரன் வெகு சீக்கிரமாய் இராக்கு பட்டணத்தில்வந்து சேர்ந்தான். பின்பு அவன் முஷீப்காக்கா என்பவரிடம்போய் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய கடிதத்தை அவருடைய சமுகத்திற் கொடுத்தான். உடனே அவர் அக்கடிதத்தை வாங்கித் துயரத்தோடு அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். அக்கடிதத்தின்மேல் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய முத்திரை முத்திரிக்கப்பட்டிருந்தது. அப்படி அவர் படிக்கும்போது நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுந்துகொண்டிருப்பதைப்போல அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுகள் விழுந்துகொண்டிருந்தன. ஷை கடிதம் படித்து முடிந்ததின்பின் அவர் பின்னுந் துக்கம் நிறைந்து அவர் மூச்சில்லாதவரானார். பின்னும் இவருக்கு ஹசரத்து மெளலாஅலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரரும், இருலோக எஜமானருமான ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய துக்கம் வெகு அதிகமாயிருந்தது. இதின்பின் அவர் புத்திசுவாதீனமுள்ளவராய்க் கண்திறந்

தார். பின்பு அவர் பிட்டாய் முதலானவைகளை வரவழைத்து பாத்திஹா ஓதி எல்லா ஜனங்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார். இதின்பின் அவர் இராச்சிய கிரீடத்தைத் தன் தலைமேல் வைத்து உடனே பதினாயிரம் சேனையை ஆயத்தமாக்கினார். பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காக அவரிடம் போக மதினமா நகரின் பக்கம் தம்முடைய சேனையுடன் புறப்பட்டார். இப்படி இவர் புறப்பட்டுப் போகையில் வழிதோறும் என் நாமமோ முஷீப்சாக்கா வென்று பிரபலமா யிருக்கிறது. பின்னும் என்னுடைய கையோ எல்லாத் துஷ்டர்களையும் பலமாய்த் தாக்க வல்லமையுடையதா யிருக்கின்றது. பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ இரத்த வெள்ளம் பெருகச் செய்யக் கூடியவரா யிருக்கிறார். இது வாஸ்த்துவமே. ஆனால் அவர் மதினமா நகருக்குப்போய்ச்சேருவதற்கு முன்னதாகவே நான் அவ்விடம் போய்ச்சேர்ந்து அத்துரோகிகளைப்பட்டயத்தால் தாக்கி யுத்தம் செய்து இரவும் பகலும் அவர்களுடைய இரத்தம் நதிகளாக ஓடும்படி செய்து அவர்களுடைய பலத்தை வேரோடு பிடுங்கிவிட வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டே சென்றார். அதோடு இவர் துக்கம் நிறைந்த மனதோடு பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய செய்தி

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய பயமும் அச்சமும் துரோகிகளுக்கு கியாமத்து நாள்வரை யிருப்பதாக இவரோ உத்துபா என்பவனுடைய சேனையுடன் நாள்தோறும் யுத்தம் செய்து கொண்டிருந்தார். எண்ணிறந்த வீரர்கள் அவருடைய வாளுக்குஇரையானார்கள். உக்ரமான யுத்தத்தால் இரணகளமுழுதும் இரத்தமழை வருஷிக்கும்படி செய்தார்.

ஷுமுர்லயீன் என்பவனிடம் அஞ்சலக்காரன்போய் உமர் அலிவகைருக்களுடைய செய்தியைக் கூறுவது.

ஷுமுர்லயீன் என்பவன் நான் பொக்தாது தேசம்போய் உமர் அலி வகைருக்களின்மேல் யுத்தம் செய்யப் போகிறேன் என்று எஜீது என்பவனிடம் வாக்குத்தத்தம் செய்திருந்தான். இந்த மல்ஊன் தன் காலம் நெருங்கியதால் மதிகெட்டுத் தன் மரணத்தைத் தானே தேடிக் கொண்டு பொக்தாது நாட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். இந்த இப்லீசாகிய ஷுமுர்லயீன் என்பவன் முப்பதினாயிரம் சேனையுடன் பாதையில் ஓரிடத்தில் தங்கியிருந்தான். அச்சமயத்தில் ஒரு தூதன் அவன் எதிரில் சென்று அவனை நோக்கி "ஐயா அவர்களே! உமர் அலிவகைருக்கள் யுத்தத்துக்குப் புறப்பட்டு வருகிறார்கள். அவர்கள் பாதையில் ஓர் இடத்தில் இறங்கியிருக்கிறார்கள். அவர்களோ ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மூன்று குமாரர்களாயிருக்கிறார்கள். அவர்களிடம் பதினான்கு ஆயிரம் துருப்புகள் இருக்கின்றன. இவர்கள் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு உதவி செய்யப் போகிறார்கள். பின்னும் அவர்கள் வெகு துரிதமாய் பயண ஸ்தலங்களைக் கடந்துகொண்டிருக்கிறார்கள்" என்று கூறினான். இந்தச் சமாச்சாரத்தைத் தீனுடைய பகையாளியாகிய ஷுமுர் மல்ஊன் கேட்டவுடனே தன் படைவீரரை நோக்கி, "ஓ போர்ச்சேவகர்களே, ஓ வீரர்களே, நீங்கள் எல்லோரும் உடனே குதிரைகளுக்கு ஜீன்கட்டி புறப்படுங்கள்" என்று கட்டளையிட்டு தட்சணம் புறப்படுவதற்காகப் பயணபேரி யறைவித்துத் தானும் ஆயத்தமாய்ப் புறப்பட்டான்.

உமர் அலி என்பவரிடம் அஞ்சலக்காரன் வந்து ஷுமுர்லயீன் என்பவனுடைய செய்தியைச் சொன்னது.

ஷுமுர்லயீன் என்பவன் புறப்பட்டபின் ஒரு அஞ்சலக்காரன் துரிதத்துடன் உமர் அலி அவர்களின் சமுகத்தில் வந்துநின்று "ஹசரத் அவர்களே! ஷுமுர்லயீன் என்பவன் தங்கள்மேல் யுத்தத்திற்குப் புறப்பட்டு வந்துகொண்டிருக்கிறான். அவன் தனக்கு ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பலம் ஆண்டவன் தன் கிருபையால் தந்திருக்கிறான் என்றும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தலையை யுத்தகளத்தில் அறுத்தது முதல் தன் தேகத்தில் வெகு பலம் வந்திருக்கின்றது என்றும், அந்தவேலையை முடித்த நான் இப்போது இரண்டாவது காரியத்தை நிறைவேற்றுகிறதாகவும், அதாவது பராக்கிரமசாலியாகிய உமர் அலி என்பவரை உயிரோடு பிடித்து உம்மிடம் கொண்டுவருகி

தேன் என்று எஜீது என்பவனிடம் வாக்குறுதிசெய்து முப்பதினாயிரஞ் சேனையை அவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டு உங்களுடன் யுத்தஞ்செய்யப் புறப்பட்டிருக்கிறான். இப்போது அவன் தங்களுக்குப் பாதையில் காணப்படுவான். நாங்களோ வெகு ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்" என்று கூறினான்.

அஞ்சலகாரனால் இச்சங்கதிகளை உமர் அலி அவர்கள் கேட்டதே, ஆண்டவனைப் புகழத் தொடங்கினார். பின்பு அவர் தம்முடைய சேனையை அணிவகுத்து நிறுத்திக் கொடிகளைப் பறக்கவிட்டு இரண பேரிகை பொலிக்கும்படி செய்தார். அச்சத்தத்தைக் கேட்ட போர் வீரர்கள் துரிதமாய்த் தங்கள் உடைகளையணிந்து ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு தாய்ச்சிங்கத்தின் சத்தத்தைக்கேட்ட சிங்கக்குட்டிகள் போல மிக்க உற்சாகத்தோடு அணிகளில் வந்து ஆயத்தமாய்க் கூடினார்கள்.

உமர் அலி வகைருக்களுக்கும் ஷுமுர்லயீன் என்பவனுக்கும் நடந்த யுத்தம்.

ஷுமுர் லயீன் என்பவன் தன் சேனையை உமர் அலி வகைருக்களுடன் யுத்தஞ்செய்வதற்காகத் தன் சேனையை ஆயத்தமாய் நிறுத்தித் தன் படைத்தலைவர்களையும், பிரதம வீரர்களையும் நோக்கி "ஓ சுத்த வீரத்தன்மையுள்ள படைத்தலைவர்களே! வீராதிவீரர்களே! நான் உங்களுடைய தைரியத்திலும் வல்லமையிலும் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன். நான் இந்த உமர் அலி என்பவனை யுயிரோடு பிடித்துக் கட்டிக்கொண்டுபோக ஒரு தந்திரம் கூறுகிறேன். நீங்கள் கவனம் வைத்து அவ்வாறே நடவுங்கள். அதாவது முதலில் நான் தனிமையாய் உமர் அலியோடு யுத்தஞ் செய்கிறேன். நான் அவனை யெப்படியாவது உயிரோடு பிடித்துக்கொள்ளுகிறேன். ஒரு சமயம் அவன் என் கைக்குச் சிக்காமல் தப்பித்துக்கொள்ளும் சமயமாயிருந்தால் நான் உடனே உங்களுக்குச் சமிக்கை செய்கிறேன். அப்போது நீங்கள் உடனே யாவரும் ஏகோபித்து ஒரு மொத்தமாய் அவன்மேற் பாய்ந்து விடுங்கள். உங்களில் எவர்கள் சாவார்களோ அவர்களைத்தவிர மற்றவர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு வந்துவிடுங்கள்" என்று கூறிவிட்டுத் தான் படைமுகத்தில் ஆயத்தமாய் நின்று உமர் அலி அவர்களின் வரவிற்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்குள் உமர் அலியின் படையும் யுத்தகளத்திற்கு வந்து சேர்ந்தது. அப்போது ஷுமுர்லயீன் தீவிரமாய் முன்சென்று நின்று மிக்க கோபாவேசத்தோடு தன் வாளைக் கரத்திற் பிடித்துக்கொண்டு சற்றும் மரியாதை யென்பதைக் கவனிக்காதவனாய், யுத்தகளத்தில் வந்துநின்று வெகு அவமரியாதையோடு "இப்போது என்னோடு யுத்தஞ்செய்யத் துணிகரங்கொண்டு என்முன் வந்திருக்கும் உமர் அலி என்பவன் யார்? அவன் எவனாயினும், வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். புத்திமானாயிருப்பானேல் தனக்கு மரணம் நெருங்கிவிட்டது என்று மனதைத் திட்டப்படுத்திக்கொண்டு என்முன் வரவேண்டும். ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு என்பவரோ ஹசரத்து மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராயும், பின்னும் அவர் பலத்திலும் பராக்கிரமத்திலும் இரண்டாவது மௌலா அலியாயு மிருந்தார். அவர் என்னுடைய கையால் அடிபட்டுத் துகள் துகளாய் இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டார். ‘இப்போதோ எனக்கு மௌலா அலியுடைய பலம் வந்திருக்கிறது. ஓ உமர் அலி நீ எனக்கு எம்மாத்திரம்? நீ ஏன் வீணாய் யுத்தம் செய்ய வந்தாய். நீ எஜீது என்பவனுடைய கையின்மேல் பைஅத்து செய்துகொள், உனக்குத் தேசங்களின்மேலும் பாக்கியங்களின்மேலும் இச்சையிருக்குமாகில் நான் எஜீது என்னும் அரசரிடத்தில் சிபாரிசு செய்து உனக்கு வேண்டிய நாடு முதலியவற்றை வாங்கிக் கொடுக்கிறேனே" என்று பலவாறாய் இறுமாப்போடு கூறிக்கொண்டிருந்தான்.

ஷுமுர்லயீன் கூறும் இப்பிதற்றல்களைக் கேட்ட தாலிப் அலி என்பவர் குதிரையைத் தட்டிவிட்டுக் கண்களில் கோபத்தனல்வீச, மீசை படபடவென்று துடிக்க, முன் அணியில் வந்து நின்று ஹுங்காரத்தோடு ஒரு கர்ச்சனை செய்து தன் வாளை வீசிக்கொண்டு ஷுமுர்லயீன் மேல் பாய்ந்தார். அந்த மல்ஊனானவன் அவரை யெதிர்த்து நின்று பின்னிடையாமல் சமபலன்காட்டி அவரோடு யுத்தம் செய்யத்தொடங்கினான். தாலிப் அலி என்பவர் அவன் ஆத்திரத்தோடு செய்யும் தாக்குதல்களை யெல்லாம் தட்டிக்கொண்டேயிருந்து சமயம் வாய்த்தபோது ஓர் அடி அவன்மேல் அடித்து அவனைப் பூமியின்மேல் விழத்தட்டினார். அவன் கீழே விழுந்தும் சமாளித்துக்கொண்டு எழுந்து ஓடத் தொடங்கினான். தாலிப் அலி என்பவரும், அவன்பின் தொடர்ந்தார். அவனோ தன் சேனைக்குள் அய்யய்யோவென்று சொல்லிச் சத்தமிட்டுக்கொண்டு

புகுந்துவிட்டான். அப்போது தாலிப்அலி என்பவரும் அச்சேனைக்குள் புகுந்து பட்டயத்தால் தாக்கத்தொடங்கினார். அப்போர்ச்சேவகர்கள் அவர் அடிக்குப் பொறுக்கமுடியாமல் ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள். இதற்குள் ஆகில் அலி என்பவரும், உமர் அலி என்பவரும் அச்சேனைக்குள் புகுந்து தாக்கினார்கள். இந்த மூன்று சகோதரர்களும் வெகு உக்கிரங்கொண்டு கொசுக்களை நசுக்கி விடுவதைப்போல அப்போர்ச்சேவகர்களை நசுக்கத்தொடங்கி அனேகர்களைத் தங்கள் வாளுக்கிரையாக்கினார்கள்.

ஷாமுர்லயீன் என்பவன் தன் போர்ச்சேவகர்கள் மாண்டுபோவதையும், அவர்கள் அடியின் வேதனையைத் தாங்காமல் ஓட்டம் பிடித்துக் கொண்டிருப்பதையும் கண்டு தன் புத்தியை இழந்து மதிமயங்கி மவுனமாய் நின்றிருந்தான். அவன் இருதயத்தில் பயம் குடிகொண்டது. அங்கிருந்தவர்களில் ஒருவனுக்காவது அச்சகோதரர்களுடன் யுத்தஞ்செய்யத் திறமையும் தைரியமுமில்லை. அப்போது அவன் யுத்தகளத்திலிருந்து தன் சேனையைத் திருப்பிக்கொள்ள நினைத்து பறைகளையடித்து எல்லாச் சேனையையும் யுத்தகளத்திலிருந்து திருப்பிக்கொண்டான். அப்போது அந்த மூன்று சிங்கங்களும் தங்கள் சேனைகளையும் திருப்பிக்கொண்டு தங்கள் தங்கள் ஸ்தலங்களில் போய்ச் சந்தோஷமாய்ச் சேர்ந்தார்கள். முடவனான அந்த ஷாமுர்லயீன் என்பவன் அச்சிங்கங்கள் இருக்குமிடத்திலிருந்து வெகு தூரத்தில் தங்கியிருந்தான். ஷை. ஷாமுர்லயீன் என்பவனே யுத்தத்தில் தனக்கு ஜெயங் கிடைக்கமாட்டாதென்று எண்ணி அவன் மோசஞ்செய்ய வேண்டுமென்று கருத்துள்ளவனானான். பின்னும் ஷை. மல்ஊன் தன்மேல் கறுப்புத்துணியால் முக்காடிட்டுக்கொண்டு, தன் குணத்தின்படி வஞ்சனையும், மோசமுமாகிய சதியாலோசனைகளைச் செய்துகொண்டிருந்தான். அதாவது ஹஜரத்து மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய இந்தக் குமாரர்களோ வெகு பலமுள்ளவர்களாயும், வீரர்களாயும், சிங்கங்களாயுமிருக்கிறார்கள். நான் எதுவரை இவர்களுடன் யுத்தஞ் செய்வேன். சிங்கத்தோடு யுத்தஞ்செய்ய எனக்குப் பலமில்லை. பின்னும் எதுவரை நான் அவர்களுடன் பட்டப்போர் செய்வேன். இவர்கள் பின்தள்ளக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் நான் இப்போது ஒரு தந்திரத்தைச் செய்கிறேன் பாருங்கள். அவரைப்பிடித்து நான் சிறையாக்கிக் கொள்ளுகிறேன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

உமர் அலி என்பவரிடம் ஒருவன் இருந்தான். அவனுடன் ஷை. ஷாமுர்லயீன் என்பவனுக்குச் சினேகிதமிருந்தது. ஆகையால் அவன் அவனுக்கு ஒரு கடிதத்தை அடியிற் கண்டபடி எழுதினான். "ஓ என் அன்பனே! நீ என் சினேகிதனாயிருக்கிறாய். என் சமதுக்கனாயிருக்கிறாய். நான் உண்மையான சொல் உன்னுடன் சொல்லுகிறேன். நீ அதைக் கவனத்தோடுங் கவலையோடுங் கேட்பாயாக. அதாவது நான் உனக்கு எஜீது என்பவனிடத்திலிருந்து அனேக சொத்தும் பொருளும் திரவியங்களும் வாங்கித்தருகிறேன். பின்னும் ஆயிரமாயிரமான பேர்களின்மேல் நான் உன்னை அதிகாரியாக்குகிறேன். புத்திமான்கள் இவ்விதமாகவே பேசியிருக்கிறார்கள். நீ என் சொல்லை நிஜமென்று எண்ணிக்கொள். எனக்கோ என்னுடைய வாக்குறுதியின்மேல் நாணமும் இருக்கின்றது" என்று கடிதம் எழுதி அனுப்பிவித்து விட்டான். அக்கடிதம் அச்சினேகிதனிடம் போகவே அவன் அக்கடிதத்தைப் படித்து சந்தோஷமுள்ளவனானான். அவன் துன்யாவுடைய பேராசையைக்கொண்டு தீனை இழந்துவிட்டான். தின்ற உப்புக்குத் துரோகஞ் செய்தான். வஞ்சகனானான். தன் மனதை ஷாமுர்லயீன் என்பவனுக்குக் கொடுத்தான். பின்னும் அவன் வெகு கடினமான நன்றிகெட்டவனானான். அவ்வரசர்களின்மேல் தீங்குகளையும் கெடுதிகளையும் செய்தான்.

ஷாமுர்லயீன் என்பவன் தாலிப்அலி வகைரு மூன்று சகோதரர்களை மோசத்தால் சிறை செய்தது.

ஒரு நாள் இராத்திரி உமர் அலி வகைரு மூன்று சகோதரர்களும் உட்கார்ந்திருந்து இராபோஜனம் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அந்த லயீனுடைய அன்பனும், விசுவாசத்துரோகியும், தின்ற உப்புக்குத் துரோகியுமானவன் இம்மூவர்களுடைய சமுகத்தில் ஊழியஞ்செய்ய இடுப்புக்கட்டி நின்றுகொண்டிருந்து தருணம் பார்த்து அம்மூன்று பேர்களின்மேலும் சுருக்குப்போட்டு அவர்களைப் பிடித்துக்கொண்டான். அவனே இருலோகபாக்கியத்தையும் கைநழுவி விட்டான். பின்னும் ஈமானையும் இழந்துவிட்டான். தின்ற உப்புக்குத் துரோகியுமானான். பின்பு அம்மூடன் அம்மூவர்களை ஷை. ஷாமுர்லயீன் என்பவன்முன் கொண்டுவந்து நிறுத்தினான். ஷை. ஷாமுர்லயீன் என்பவன் தான் செய்த தந்திரத்தாலும் மோசத்தாலும் அவ்வரசர்கள் பிடிபட்டுப்போய் தன்முன் வந்து நின்றிருப்பதைக்கண்டு வெகு சந்தோஷப்

பட்டு அவர்களுக்காக ஒரு இரும்புக்கூட்டை வரவழைத்து அவர்களை அக்கூட்டில் அடைத்தான். பின்னும் அந்த ஷுமூர்லயீன் என்பவன் அவர்கள் சிறையாய்ப் போனார்களென்று சந்தோஷப்பட்டானே யன்றி வாஸ்தவத்தில் அவர்கள் தம்முடைய கொலைஞர்களாயும், சங்காரர்களாயு மிருக்கிறார்களென்று நினைக்கவில்லை. பின்னும் அவன் மகிழ்ச்சியால் தேகம் பூரித்து தன் உடுப்பில் அடங்காதவனானான். பின்னும் அவன் தன் தலைமேல் வரும் விதியை அறியவில்லை. மகிழ்ச்சியால் தனக்குத்தானே மிக்க கௌரவமுள்ளவனாய் விட்டான். பின்பு அவன் மனத்திருப்தியுடன் மெள்ள மெள்ள பயண ஸ்தலங்களைக் கடந்துகொண்டிருந்தான். அகஸ்மாத்தாய் சம்பவிக்கும் விதியும் அவன்மேல் மெதுவாய் இறங்கிக்கொண்டிருந்தது.

உமர் அலி வகைருக்களை ஷுமூர்லயீன் என்பவன் சிறைசெய்து கொண்டானென்று ஒரு அஞ்சலக்காரன் முஷீப்காக்கா என்பவரிடம் போய் சொன்னது.

மதினமா நகரில் நடக்கும் சமாச்சாரத்தை யறிந்து வரும்படி முஷீப்காக்கா அவர்களால் அனுப்பப்பட்டிருந்த உபாயசாலியான அஞ்சலக்காரன் மதினமா நகரை நோக்கி வெகு சீக்கிரமாயும் வேகமாயும் போய்க்கொண்டிருந்தான். இப்படி அவன் போய்க்கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு பெரிய சேனை ஒரு ஸ்தலத்தில் பாளையம் இறங்கியிருப்பதை அவன் கண்டான். பின்பு அவன் அதைப் போய்ப் பார்க்க வேண்டுமென்றும், அது யாருடையபட்டாளமாயிருக்கிறது, அது எவ்விடம் போகிறது, என்னத்திற்காகப் போகிறது என்பதை விசாரிக்க வேண்டுமென்றும், அவன் தன் மனதில் நினைத்தான். அப்படி அவன் நினைத்து அதைப் போய்ப் பார்க்கப்போகையில் வேறொரு அஞ்சலக்காரன் அவன் எதிரில் வந்தான். அப்போது இவன் அவனைக்கண்டு "ஓ ஏக இனத்தானே, இது என்ன கூட்டமாயிருக்கிறது. இது சேனையா அல்லது என்ன, இது சேனையாயிருக்குமாகில் யாருடைய சேனையாயிருக்கிறது? எங்கே போகிறது? எக்காரணத்தால் புறப்பட்டது என்பதை நீ எனக்குச் சொல்வாயாக" என்று கேட்டான். அதற்கு அவ்வஞ்சலக்காரன், இதுவோ சேனையாயிருக்கிறது. இந்தச் சேனையோ எஜீது என்பவனுடைய சேனை. இது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு உதவிசெய்வதற்காகப் பொக்தாதுதேசத்திலிருந்து

புறப்பட்டவர்களாகிய தாலிப் அலி வகைருக்களுடன் யுத்தஞ்செய்ய வந்திருக்கிற சேனையா யிருக்கிறது. இச்சேனையின் தலைவன் ஷுமூர்லயீன் என்பவனாயிருக்கிறான். இவன் பொக்தாதுதேசத்துக்குப்போகப் புறப்பட்டான். அப்படிப் புறப்பட்டுப் போகும் பாதையில் தாலிப் அலி வகைருக்களை ஷை ஷுமூர்லயீன் என்பவன் சந்தித்தான். பின்பு அவன் அவர்களைப் பிடித்துக்கொள்ள இதுவே நல்ல தருணமாயிருக்கிறதென்று எண்ணி அவர்களுடன் யுத்தம் செய்தான். அப்படி அவன் அவர்களுடன் யுத்தம் செய்தும் அவர்கள்மேல் ஜெயமடையக் கூடவில்லை. ஆதலால் அவன் மோசஞ்செய்து அம்மூவர்களையும் சிறையாய்ப் பிடித்துக்கொண்டு அவர்களை எஜீது என்பவனிடம் கொண்டு போகிறான்" என்று சொன்னான். இந்தச் சங்கதியை அவ்வஞ்சலக்காரன் கேட்டு மதினமா நகருக்குப் போவதை விட்டுவிட்டு இவ்விடத்திலிருந்தே இப்போது திரும்பிவிடுவது வெகு உத்தமமாயிருக்கிறதென்று தனக்குள் சொல்லிக்கொண்டு முஷீப்காக்கா என்பவரிடம் திரும்பிப் போவதற்காகப் புறப்பட்டான். பின்னும் அவன் இரவும் பகலும் வெகு சீக்கிரமாகச் சுறுசுறுப்போடு நடந்துகொண்டிருந்தான். இப்படி அவன் நடந்துகொண்டிருக்கையில் முஷீப்காக்கா என்பவர் ஒவ்வொருநாளும் இரண்டிரண்டு நாள் பயணதூரம் போய்க் கொண்டிருந்தார். ஆகையால், அவர் இளைப்பாற வேண்டியதற்காக அவர் ஒரு ஸ்தலத்தில் இறங்கி யிருந்தார். அஞ்சலக்காரன் வெகு சீக்கிரமாய் அவரிடம் வந்துசேர்ந்து "ஓ என் எஜமானனே. தாங்களோ ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய அபிமான குமாரரா யிருக்கிறீர்கள். பராக்கிரமத்திலோ தாங்கள் எல்லோரைவிட மேலானவர்களா யிருக்கிறீர்கள். ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய புத்திரர்களாகிய தாலிப் அலி என்பவரும், ஆகில் அலி என்பவரும், உமர் அலி என்பவரும் ஆக இம்மூவர்கள் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காகத் தங்கள் தேசத்திலிருந்து புறப்பட்டு சீக்கிரமாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். அச்சங்கதியை ஷுமூர்லயீன் என்பவன் கேள்விப்பட்டு பாதையில் அவர்களை மடக்கி அவர்களுடன் யுத்தஞ்செய்தான். அப்படி யுத்தம் செய்தும் அவர்கள்மேல் ஜெயமடையக் கூடவில்லை. ஆகையால் அவன் மித்திர துரோகம் செய்து அம்மூவர்களையும் சிறையாய்ப் பிடித்துக் கொண்டு எஜீது என்பவனிடம் கொண்டுபோகிறான்" என்று சொன்

ஞன். ஷெ முஷீப்காக்கா என்பவர் இந்தச் சமாச்சாரங்களை யெல்லாம் கேட்டுத் துன்பமடைந்து ஆண்டவனுடைய ஷுக்கூர் செய்து ஓ அஞ்சலக்காரனே, நீ என்னை வெகு சீக்கிரமாய் அவ்விடம் கொண்டுபோய் சேர்த்து விடு என்று அவனுடன் கூறிவிட்டு உடனே யுத்தத்துக்குப் புறப்படும்படி நகாருவை அடிப்பித்தார். அப்போது ஷெ அஞ்சலக்காரன் அவரைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு ஷாமூர்லயீன் என்பவன் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றான். பின்பு அவன் வெகு சீக்கிரமாய்ப் பயண ஸ்தலங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தான். வழியில் ஷெ ஷாமூர்லயீன் என்பவனுடைய சேனைகள் எதிர்ப்பட்டன.

முஷீப்காக்கா என்பவர் உமர் அலி வகைரு மூன்று சகோதரர்களை ஷாமூர்லயீன் என்பனிடத்திலிருந்து மீட்டுக்கொண்டது.

போக்தாது தேசத்து அரசராகிய நாலிப் அலி அவர்களுடைய போர்ச்சேவகர்களுக்கு அம்மூவர்கள் சிறையாய்ப் போன சங்கதி தெரிந்தபோது அவர்கள் மிக்க வியாகுலப்பட்டு அழத் தொடங்கினார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றாய்க்கூடி சேர்ந்து கூக்குரலிட்டு "நாங்கள் எல்லோரும் எங்கள் உயிர்களை வைத்திருப்பதில் என்ன பிரயோசனம். நாங்கள் எல்லோரும் நிர்ப்பயமுள்ளவர்களாயும், அஞ்சாதவர்களாயும், பகையாளிகளின்மேல் போய்விழவேண்டும். எங்கள் எஜமானர்களை மீட்டுக்கொள்ள வேண்டும். சத்துருக்களை நொறுங்கடிக்கவேண்டும்" என்று அவர்கள் எல்லோருஞ் சேர்ந்து ஒருமைப்பட்டு ஒருநாள் யோசனை செய்தார்கள். இதற்குள் இம்மென்று இரத்தம் உறியுஞ் சிங்கமாகிய முஷீப்காக்கா என்பவருடைய வகையைப்பற்றி அப்போர்ச் சேவகர்கள் கேள்விப்பட்டு சந்தோஷமுள்ளவர்களாய் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின்னும் அவர்கள் ஓ ஆண்டவனே, நீ அவரை வெகு சீக்கிரமாகக் கொண்டுவந்து எங்களுடன் சேர்ப்பிப்பாயாக வென்று சொல்லிக்கொண்டும் அம்மல்ஊனை நாசமாக்க வேண்டுமென்று யோசனை செய்துகொண்டு மிருந்தார்கள். பின்னும் அவர்கள் அம்மல்ஊனுடைய சேனையின் பின்னால் மெதுவாய்த் தொடர்ந்து சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஷாமூர்லயீனென்பவன் அம்மூவர்களைப்பிடித்துக்கொண்டநாள் முதல் சந்தோஷத்தில் நிறைந்தவனாயிருந்தான். பின்னும் அவனுடைய இருதயத்திலோ ஆநந்தத்தின் புஷ்பம் மலர்ந்ததாயுமிருந்தது. இப்படியிருக்க ஒருநாள் இந்த ஷைத்தானானவன் உட்கார்ந்திருந்து சாராயங் குடித்துக்கொண்டிருந்தான். பின்னும் அவன் நரக அக்கினிக்குப் பாத்தியஸ்தனாய்க் கொண்டிருந்தான். அவனுடைய போர்ச் சேவகர்களுங்கூட அஜாக்கிரதையால் உணர்ச்சியற்றவர்களாயிருந்தார்கள்.

முஷீப்காக்கா என்பவர் இராத்தாக்கலால் ஷாமூர்லயீன் என்பவனுடைய சேனையை யழித்தது.

ஷாமூர்லயீன் என்பவனுடைய போர்ச்சேவகர்கள் உணர்ச்சியற்றவர்களாயிருந்த தருணத்தில் முஷீப்காக்கா என்பவர் தம்முடைய சகோதரர்களை மீட்டுக்கொள்ள வேண்டியதற்காகவும், ஷாமூர்லயீன் என்பவனுடன் யுத்தஞ்செய்ய வேண்டியதற்காகவும் யுத்தகளத்தில் வந்து இராக்காலத்தில் இரணபேரிகை முழங்கச்செய்தார். அவருடைய போர்ச்சேவகர்களனைவரும் வீராவேசத்தோடு அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஷெ ஷாமூர்லயீன் என்பவன் யுத்த நகாருவின் சத்தத்தைக் கேட்டுத் தன் சேனையைவிட்டுத் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிப்போய்ஓரிடம் பதுங்கிக்கொண்டான். முஷீப்காக்கா என்பவரோ வெகு உக்கிரத்தோடு எதிரியின் எல்லாப்போர்ச் சேவகர்களையும் கொசுக்களை நசுக்குவதைப்போல் நசுக்கியும், நொறுங் கடித்தும் விட்டார். பின்னும் அவர் இடியைப்போல சேனையின்மேல் விழுந்து கர்ச்சித்துப் போர்ச்சேவகர்களை வெட்டத் தொடங்கினார். இந்த நகாராசத்தத்தை இஸ்லாம் போர்ச்சேவகர்கள் கேட்டு அவர்களும் யாஅலீ, யாஅலீ என்று சொல்லி நிர்ப்பயமாய்ப் பராக்கிரமத்தோடு பகையாளி சேனையின்மேல் விழுந்து வீரியத்தோடு அவர்களை வெட்டத் தொடங்கினார்கள். இதற்குள் ஒருவன் விசாரத்தோடு தன் முன் நின்றிருப்பதை முஷீப்காக்கா என்பவர் கண்டார். அப்போது அவன் அவர்முன் நின்று ஓ அரசரே இந்த மூன்று சகோதரர்களும் உம்முடைய சத்துருக்களா யிருக்கிறார்கள் என்று சொன்னான். இதை அவர் கேட்டு உடனே கமந்து என்று சொல்லப்படும் சுருக்கைக் கொண்டு அவனைப் பிடித்துப் பூமியின்மேல் விழத்தட்டி அப்பால் அவர் தன் மடியிலிருந்த குத்துவாளை உருவி அவனை வெட்டிவிட்டார். இதின்பின் மறுபடியும் அவர் வெகு சுறுசுறுப்போடு ஆயிரமாயிரமான

வர்களை மாய்த்துச் சடையோடு தரையாக்கிவிட்டுப் பின் சேனையை விட்டு நீங்கி, ஷுமுர்லயீன் என்பவனைத் தேடத் தொடங்கினார். அவனோ வேறொரு இடத்தில் மறைந்திருந்தான். அவரோ அவன் ஒளித்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவனை நோக்கி, "ஓ பாவியே, ஓ துராகிதனே! இப்போது நீ என் கைகளிலிருந்து எப்படித் தப்புவாய். தப்பி எங்கே போவாய். எப்படிப் போகக்கூடும். எந்த இடம் உனக்கு அடைக்கலஸ்தலமிருக்கின்றது" என்று சொல்லி உடனே சமத்து என்ற கருத்தையடித்து அவன்மேல் போட்டு அவனைப் பிடித்துக் கொண்டு பலத்தோடு பூமியின்மேல் விழத் தட்டினார். அப்போது அவன் அல்வந்து என்ற மலையைப்போல் பூமியின்மேல் விழுந்தான். பின்பு ஷெய்கு முஷிப்காக்கா என்பவர் அவனுடைய நெஞ்சின்மேல் தன் பாதத்தை வைத்துப் பலத்தோடு பிடித்து அவனுடைய இருகைகளை முதுகின்பின் கொண்டுவந்து கட்டிவிட்டார். அவனோ தன் வாழ்வைக் கைகழுவி விட்டான். முஷிப்காக்கா உக்ர வேசங்கொண்ட சிங்கத்தைப்போல் எதிரியின் சேனைக்குள் புகுந்து எங்கும் பிணமலைகளாய்க் குவித்துவிட்டார். மீதமிருந்த சிலர்களோ அங்குமிங்குமாக ஓடத் தலைப்பட்டார்கள். முஷிப்காக்கா என்பவருடைய பராக்கிரம சாலிகளான வீரர்கள் அப்படி ஓடினவர்களைப் பின்தொடர்ந்து வெட்டிக்கொண்டிருந்தார்கள். இந்த ஜெயமோ ஆண்டவனால் கிடைத்த அபூர்வ ஜெயமாயிருந்தது.

முஷிப்காக்கா என்பவர் ஷெய்கு ஷுமுர்லயீன் என்பவனைப் பிடித்துக்கொண்டு வந்து அவனுடைய கைகளையும் கால்களையும் பலமாய்க் கட்டினார்கள். பின்னும் அவர் தம்முடைய சகோதரர்களாகிய உமர் அலி வகைறுக்களிடம் வந்து சிறையாயிருந்த அவர்களை இரும்புக் கூட்டிலிருந்து வெளியாக்கிவிட்டு அந்த ஷுமுர் லயீனை அக்கூட்டில் போட்டு அடைத்து வெகு பலமாய் அதைப் பூட்டிவிட்டார். இதின் பின் அவர் உமர் அலி என்பவரைத் தன் கழுத்தோடு அணைத்துக் கொண்டார். காலிப் அலி என்பவரையும், அகில் அலி என்பவரையும் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டார்.

அப்பால் உமர் அலி என்பவர் முஷிப்காக்காவை நோக்கி "இந்த ஷுமுர்லயீன் என்பவனே என்னுடன் யுத்தம் செய்துகொண்டிருந்தான். அப்போது நான் அவனுடைய சேனையை எல்லாம் என்பட்டாக் கத்தியால் வெட்டி நாசமாக்கினேன். பின்னும் அவனுடைய பாளையங்களையெல்லாம் நிர்மூலமாக்கினேன். இப்படிப்பட்ட எங்கள் ஜெய சமயத்தில் எங்களுடன் இருந்த எங்கள் அணியாளி ஒருவன் நம்பிக்கை துரோகமும், மித்திர துரோகமும் செய்து எங்களைப் பிடித்துச் சிறையாக்கி அந்த மல்வூனாகிய ஷுமுர்லயீன் என்பவன் கையில் ஒப்பித்தான். எங்களை மீட்டவர்கள் ஆண்டவனையும் அவனுடைய ரசூலையுந்தவிர வேறொருவனுமிருந்ததில்லை. அவர்களே மீட்டவர்களாயிருந்தார்கள். பின்னும் ஆண்டவனே எல்லோருடைய அங்கலாய்ப்பையும் கேட்கிறவனாயிருக்கிறான். ஆகையால் ஓ என் சகோதரரே, ஆண்டவன் கிருபை செய்து அவன் உம்மை இவ்விடம் அனுப்பிவைத்துவிட்டான். தாங்கள் வருகிற சங்கதியை நாங்கள் கேள்விப்பட்டு வெகு சந்தோஷமுள்ளவர்களாயிருந்தோம். இதற்குள் தாங்கள் வந்து எங்களை மீட்டீர்கள். ஆண்டவன் உமக்கு எல்லா நன்மைகளையுந் தருவானாக" என்று சமாச்சாரத்தையுஞ் சொன்னார். இந்தச் சங்கதிகளையெல்லாம் ஷெய்கு முஷிப்காக்கா என்பவர் கேட்டு "நீங்களோ எங்களுடைய இருதயக்கண்டங்களாயுங் கண்மணிகளாயுமிருக்கிறீர்கள். பின்னும் நீங்கள் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய புத்திரராயிருக்கிறீர்கள். எவன் உங்களை என்னுடன் சேர்ப்பித்தானோ அவன் உண்மையான வல்லமையுள்ள ஆண்டவனாயிருக்கிறான். பின்னும் மகா பெரிய கிருஷ்டிகன்தானே என்னை உங்கள் எல்லோரையும் மீட்கும்படியான உபகரணமாக்கி இவ்விடங் கொண்டுவந்தான்" என்று சொன்னார். பின்னும் அவர் ஓ என் சகோதரர்களே நாங்கள் வெகு சீக்கிரமாய்ப் புறப்பட்டுச் செய்யிதினாகிய ஹசரத்து முஹம்மது ஹனீபஷா அவர்களிடம் போகவேண்டுமென்று அவர் தன் திருவாய் மலர்ந்து சொன்னார். இதின்பின் அவர்கள் எல்லோரும் வெகு ஆவலோடு மதீனமா நகரின் பக்கம் போகப் புறப்பட்டார்கள். பின்னும் ஷுமுர்லயீன் என்பவனுடைய கைகளும் கால்களும் முன்னமே கட்டப்பட்டுப் போயிருந்ததுந் தவிர இப்போது அவனுடைய கழுத்திலுங்கூட இரும்பு விலங்கைப்போட்டு முஷிப்காக்கா என்பவர் இவனையும் தம்முடன் கொண்டுபோனார்.

முஷிப்காக்கா வகைறு சகோதரர்கள் ஹனீபஷா அவர்களிடம் போய்ச் சேர்ந்ததும், உத்துபா என்பவனுடன் யுத்தம் செய்ததும்.

ஒரு நாள் ஹசரத்து முஹம்மது ஹனீபஷா அவர்கள் உத்துபா என்பவனுடைய சேனையோடு யுத்தம் செய்தபோது அவர்களில்

எண்ணிறந்தவர்கள் மாண்டார்கள். அப்போது வலீது என்பவனோ எங்களுடைய ஆயிரக்கணக்கான சேனையை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் நாசமாக்கிவிட்டார்களே என்று விசாரத்தில் மூழ்கியிருந்தான். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் தமது சகோதரராகிய அக்பர் அலி என்பவரை அழைத்து "ஓ என் சகோதரனே, இன்றைய தினம் நமது வீரரில் முன்னூறு குதிரை போர்ச் சேவகர்கள் ஷஹீதாய்ப்போய் மோட்சம் போய்ச் சேர்ந்தார்களே, நாளையும் நம்முடைய சேனை இவ்விதமாகவே யுத்தகளத்தில் ஷஹீதாய்ப் போனால் எப்படியாகும், எங்கள் ஜனங்கள் இதே பிரகாரம் இறந்தும் கரைந்தும் போவார்களாகில் நாங்கள் எவ்விதமாய் யுத்தம் செய்வோம். ஆகையால் என் மனதில் வியாகூல முண்டாயிருக்கிறது. எங்களுடைய உதவிக்காக ஒரு சகோதரனும் வரக்காணோமே. உமர் அலி என்பவராவது, முஷீப்காக்கா என்பவராவது தோகான், போர கான் என்பவர்களாவது வருவார்களோ தெரியவில்லையே" என்று விசாரத்தோடு சொன்னார்கள். இவ்வித விசாரத்திலேயே இராமுழுமையும் சென்று விடியற்காலம் வந்து சம்பவித்தது.

மறுநாள் ஆதித்தன் உதயமானதே அச்சண்டாளனுடைய சேனை யுத்தத்துக்காக ஆயத்தமாய் மைதானத்தில் வந்து நின்றது. அப்போர்ச்சேவகர்களோ ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்கும்படி இரணபேரிகைகளை அடிக்கத் தொடங்கினார்கள். எஜீது என்பவனைப் போலொத்த வெட்கம் கெட்டவனும், பாவியும் உலகத்தில் ஒருவனுமில்லை என்று ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சொல்லிக்கொண்டு விசாரத்தில் இருக்கையில் நகாருவுடைய சத்தத்தைக் கேட்டார்கள். பின்பு அவர்கள் யுத்தகளத்தில் வந்து நின்று அணிஅணியாய் அலங்கரிக்கப்பட்டிருந்த எஜீது என்பவனுடைய சேனையின் முன் தன் சேனையை நிறுத்தினார்கள். இவர்களோ தங்கள் உயிர்களை உள்ளங்கைகளில் வைத்து நின்றுகொண்டிருந்தார்கள். இத்தருணத்தில் திடீரென்று வெகு இருட்டான தூசு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய பின் புறத்தில் பறந்துகொண்டிருந்தது. பேரிகைகளின் முழக்கங்கள் பூமியதிரும்படி சப்தித்துக்கொண்டிருந்தது. இதற்குள் படைச் சேவகர்கள் தங்கள் தலைகளைக் காட்டத் தொடங்கினார்கள். அலி அக்பர் என்பவர் இதைக் கண்டு திகில்பட்டு வியாகூலமாய் ஓ என் அரசரே, என் கிரீடமே, மோசம்

வந்து சம்பவித்ததாகத் தெரியவருகிறதே. எஜீதுகளோ மோசத்தால் எங்களைச் சுற்றிக்கொள்ள எங்கள்-பின்புறத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் "ஓ சகோதரனே, பயப்படலாகாது. நீ திகைக்கவும், திகிலடையவும் வேண்டாம். ஆண்டவன்மேல் பாரம் போடவேண்டும். இவை யெல்லாம் விதியின் சங்கதிகளாயிருக்கின்றன. ஆகையால் இப்போது நாம் நம்முடைய சேனையை இரண்டு பாகங்களாகப் பிரித்து ஒரு பாக சேனையை நீர் கொண்டுபோக வேண்டும். நான் ஒருபாக சேனையை வைத்துக்கொண்டு இந்த இடத்தில் யுத்தம் செய்துகொண்டிருக்கிறேன். பின்னும் நான் ஆண்டவனுடைய சக்தியாலும் வல்லமையாலும் இவர்களை ஒரு நிமிஷத்தில் பாழாக்கி விடுகிறேன். நீர் மனதிருப்திகரமாயிரும் என்று தேறுதல் கூறினார். அவ்வாறே அவ்விரண்டு சகோதரர்களும், மனத்தைரிய மடைந்து இருந்துகொண்டிருந்தார்கள்.

இச்சமயத்தில் திடீரென்று ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய கொடி காணப்பட்டது. அதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் பார்த்துச் சந்தோஷப்பட்டு "ஓ என் சகோதரனே, ஆண்டவனுடைய கிருபை எவ்விதமாய் வந்து சம்பவித்திருக்கிறது நீர் பாரும். இப்போது எங்களுக்கு வியாகூலமில்லை. ஏனெனில் இப்போது என் கண்மணிகளான சகோதரர்கள் வருகிறார்கள், எங்களுக்குத் துணையாய்விட்டது" என்று சொன்னார்கள். பின்னும் அவர்கள் அவர்களை அழைத்துக்கொண்டுவர முன் சென்றார்கள். எப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் முன் சென்று வருவதை அச்சகோதரர்கள் கண்டார்களோ அப்போது அவர்கள் தங்கள் தங்கள் குதிரைகளின் மேலிருந்து கீழே இறங்கி கால்நடையாய் நடக்கத் தொடங்கினார்கள். பின்னும் உமர் அலி என்பவரும், ஆகில் அலி என்பவரும், தாலிப் அலி என்பவரும், முஷீப்காக்கா என்பவரும் தன்தன் குதிரைகளை விட்டு இறங்கி கால்நடையாய் வந்துகொண்டிருப்பதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கண்டு வெகு சந்தோஷமாய் நடந்து அவர்களைச் சந்தித்தார்கள். பின்னும் நட்சத்திரங்களைப்போலுள்ள அவர்கள் எல்லோரும் சந்திரனாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய பாதங்

களில் விழுந்தார்கள். அவர்கள் இவர்கள் எல்லோரையுந் தூக்கித் தந் நெஞ்சோடும் கழுத்தோடும் அணைத்துக் கட்டிக்கொண்டார்கள். பின்னும் இவர்கள் எல்லோரையும் அவர்கள் தம்மிடம் உட்காரவைத்துப் பேசிக்கொண்டிருக்கையில் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நினைத்துக்கொண்டார்கள். அப்போது அவர்கள் எல்லோரும் துயரக்கடலி லமிழ்ந்தவர்களானார்கள். பின்னும் ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் துக்கத்தால் அவர்கள் எல்லோரும் அழத்தொடங்கினார்கள். பின்பு சகோதரர்கள் சகோதரர்களுடன் வந்து சேர்ந்ததை உத்துபா என்பவன் கண்டு மனம் புழுங்கினான். அப்பாவிகள் எல்லோரும் ஜெயத்தின் நம்பிக்கை யற்றவர்களாய் யுத்தகளத்திலிருந்து திரும்பினார்கள். இதின்பின் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும், தம்முடைய சேனையையுந் திருப்பிக்கொண்டார்கள். சூரியன் அஸ்தமித்தது. அப்போது முஷிப்காக்கா என்பவர் வெகு ஒழுக்கத்தோடு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய முன் வந்து நின்று "ஓ என் தலைவனே, தாங்கள் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பேரப்பிள்ளையாயும், ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராயும், எங்கள் எல்லோர்களுடைய சிரேஷ்டராயுமிருக்கிறீர்கள். பின்னும் தாங்கள் எஜீதுகளோடு செய்த வாட்போரின் திறத்தை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்களோ இவ்வுலகத்தில் அந்தந் தேசங்களில் அளவற்றவர்களை மடித்து நாசமாக்கினீர்கள். பின்னும் தங்களுடைய திருநாமம் உலகம் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. தாங்கள் உலக அரசராயிருக்கிறீர்கள். ஓ என் ஆத்மாவானவரே, இப்போது தாங்கள் தங்கள் மனதில் யாதொருவித விசாரமுமடைய வேண்டாம். உங்கள் மேல் என்னுடைய வாழ்வு தசத்தக்காயிருக்கின்றது. தங்கள் மேலிருந்து நானென்னைத் தலைசுத்திப் போடுவேன். நான் ஆயத்தமாயிருக்கிறேன். தங்கள் முன்னுக்கு இப்போது நான் வெட்டுண்ணப்படுவேன். தங்களுடைய மனம் சந்தோஷமடையும்படிக்கு நான் என் உயிரை வஞ்சகமில்லாமல் செலவழிப்பேன். என் பிராணனைப் பலியுமாக்கிவிடுவேன். தாங்களோ பராக்கிரமசாலியா யிருக்கிறீர்கள். தங்கள் மேல் நான் என்

உயிரைத் தத்தம் செய்வது என் பாக்கியமாயிருக்கிறது" என்று வெகு தாணிகரத்தோடு இவ்வித வாக்கியங்களைப் பேசத்தொடங்கினார். பின்னும் அவர் அசராதிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய மனதைச் சந்தோஷப்படுத்தத் தொடங்கினார். இவ்வித புகழ்ச்சிக்குப் பின்னே முஷிப்காக்கா என்பவர் தம்முடைய சேனையிலிருந்து இருப்புக்கூட்டை வரவழைத்தார். பின்னும் அவர் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களும், ஹசரத்து அலி முர்த்துஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் எவனை வெறுத்திருந்தார்களோ அந்த ஷுமுர்லயீன் என்பவனை அவர்களுக்குக் காட்டினார். அந்த மல்ஊனுடைய ஆயுளுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது. ஆகையால் அவன் கடின இருதயமுள்ளவனாயும் அக்கிரமமான மனமுள்ளவனுமா யிருந்தான். அவனுக்கு நரகம் போய்ச் சேர வெகு பிரியமிருந்தது. நரகமும் அவனை ஏற்றுக்கொள்ள ஆவலோடு காத்துக்கொண்டிருந்தது. அப்போது அப்பாவி அவ்வசரை முழு கர்வமான பார்வையால் முறைக்கமாய்ப் பார்க்கத் தொடங்கினான். இதைக் கண்டு அவனுடைய கண்களைப் பிடுங்கிவிடும்படி ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய போர்ச்சேவகர்களுக்குக் கட்டளையிட்டார்கள். உடனே அவர்கள் அவனுடைய இரு கண்களையும் பிடுங்கிவிட்டார்கள். பின்னும் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களோ ஹசரத்து அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிரியமுள்ள குமாரராயிருந்தார்கள். அவரோ பஞ்சத்தனுடைய முத்தாயிருந்தார்கள். பின்னும் அவர் பெருமையிலும் மகிமையிலும் எல்லோரையும்விட பேர்போனவராயும் நுபூவத்துடைய விருக்ஷத்தின் கனியாயுமிருந்தார். இப்பேர்ப்பட்ட கண்ணியமுள்ளவரை ஷுமுர்லயீன் என்பவன் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமல் அலக்கழித்தான். தண்ணீர்ப்பானத்தையும் அடைத்துவிட்டான். இப்படிச் செய்ததுமன்றி அவரை வெகுவாய் இம்சித்து மிக்க குரூரமாய்க் கொன்றுவிட்டான். ஆகையால் இப்பேர்ப்பட்ட பாவியையும் சேனையும் கண்ணால் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்ப்பது நீதியுமல்ல சரியுமல்ல என்று தம்முடைய போர்ச்சேவகர்களோடு அவர்கள் சொன்னார்கள். பின்பு அப்போர்ச்சேவகர்கள் அந்த ஷுமுரியை வெளியில் கொண்டுவந்து அவன் தேகத்தின்மேல் ஆணியைச் சுற்றி அவனை ஒரு மரத்தில் பலமாய்க் கட்டினார்கள். இப்படிச் செய்த

இதின் பின் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அவன்மேல் ஒரு அம்பு செலுத்தினார்கள். அந்த அம்போ அவனுடைய நெஞ்சின்மேல் பட்டுத் துளைத்து அது முதுகின் வழியாய் போய்விட்டது. அவ்வடியால் அந்த முர்தாரானவன் நாசமாய்விட்டான். இதின் பின் ஒவ்வொருவரும் ஆத்திரத்தால் அவனுடைய தேகத்தின்மேல் அம்பெய்து அவனுடைய நெஞ்சில் துவாரத்தின் மேல் துவாரம் செய்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு துஷ்டனாகிய ஷுமூர் லயீன் என்பவன் நரகத்துக்குப் போய்ச் சேர்ந்தான். இதற்குள் இரவு வந்து விட்டது. மறுநாள் கதிரவன் கீழ்க்கடலில் தன் கிரணங்களை வீசிக்கொண்டு உதயமானதே உத்பா என்பவனுடைய சேனை யுத்தக்களத்தில் வந்து நின்றது. இதின் பின் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய புத்திரர்களின் சேனைகளும், ஆயத்தமாய் பக்கு வந்து அணிவகுத்து நின்றன. இதின்பின் எதிரிகள் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய கைகளால் வெட்டுண்ண வரிசை வரிசையாய் யுத்தக்களத்தில் வந்துகொண்டிருந்தார்கள். எப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் யுத்தகளத்தில்வந்து நின்றார்களோ அப்போது இவரோ இரண்டாவது சூரியன் மைதானத்தில் வந்து நின்றது போல் இருந்தது. இதற்குள் இபொன்று சந்தருவின் சேனையிலிருந்து ஒருவன் புறப்பட்டு மைதானத்தில் வந்து நின்று ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனையைப்பார்த்து பெருத்த சத்தத்துடன் "ஓ பாளையக்காரர்களே, எவன்யுத்தக்களத்தில் என்முன்னுக்குவர விரும்புவானோ அவன் முதலில் தன்னுடைய உயிரைக் கையைக்கழுவி அப்பால் அவனுடைய பராக்கிரமத்தைக் காட்டவேண்டும்" என்று சொன்னான். இந்தச் சத்தத்தை முஷீப்காக்கா என்பவர் கேட்டு உடனே ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமூகத்தில் வந்து ஒழுக்கத்துடன் நின்று அவர்களுடைய பாதங்களின் மேல் தன் தலையை வைத்து "ஓ என் அரசானவரே, எனக்கு உத்தரவு கொடுத்து என்னை அனுப்புங்கள். நான் என் மனதில் வெகு ஆசை நிறைந்தவனாயிருக்கிறேன். நான் அவனை ஒரு நிமிஷத்தில் போய் அடித்துக் கொன்றுவிடுகிறேன்" என்று அறிவித்தார். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அதைக் கேட்டு துஆ செய்து அவரை நோக்கி "நான் உம்மை ஆண்டவன் வசம் ஒப்பிவித்திருக்கிறேன்,

நீர் சுகமே போய்வாரும். அவன் உம்மைக் காத்துக்கொள்ளுவான்" என்று சொல்லி அவரை அனுப்பிவித்தார்கள். அவரோ உத்தரவைப் பெற்றுக்கொண்டு அவனை நாசமாக்கப்புறப்பட்டு யுத்தகளத்தில்வந்து நின்று பகைவனைநோக்கி, "ஓ அக்கிரமக்காரர்களே, ஓ கொலைபாதகர்களே, நீங்களோ ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஷஹீது செய்தீர்கள். அவர்களுடைய குமாரர்களாயிருக்கிறீர்கள். பின்னும் இமாமத்தின் ஆகாயத்தினுடைய சந்திரனானவரை இரக்கமின்றிக் கொன்றுவிட்டீர்கள். எவ்வகையாய் அவர்களை ஷஹீது செய்தீர்கள் என்பதை நீங்கள் சற்று யோசியுங்கள். இப்போது என் கைகளால் தப்பி நீங்கள் எங்கே போவீர்கள். எந்த இடம் உங்களுக்கு அடைக்கலஸ்தலமாயிருக்கின்றது. இன்றைக்கோ நான் உங்களுடைய குடும்பங்களை நாசமாக்குவேன். நான் உங்களை ஒருபோதும் விட்டு விடமாட்டேன் பாருங்கள். நானே உங்கள் எல்லோரையும் ஒரு நிமிஷத்துக்குள் நாசமாக்கி விடுகிறேன்" என்று சத்தத்தோடு சொன்னார்.

இதைக்கேட்ட அக்கண்டாளர்களின் குதிரைப்படைச் சேவகர்களில் ஒருவன் தன் உயிரைப் பலிகொடுக்க அவர் முன் வந்து நின்று சற்றும் அஞ்சாத தீரத்தோடு முஷீப்காக்கா என்பவரின் மேல் தன் கையை நீட்டினான். அவரே அவனுடைய அடியைத் தட்டிவிட்டு நஃரு என்ற சப்தத்தைச் சப்தித்து அவன் சமீபம்போய் அவனுடைய மடியில் தம்முடைய கையைப்போட்டு அவனைக் குதிரைமேலிருந்து பலத்தோடு தூக்கித் தன் தலைமேல் அவனைச் சுற்றிப் பூமியின்மேல் டபார் என்று அடித்தார். அப்போது அவனுடைய எலும்புகள் எல்லாம் கடகடவென்று முறிந்துபோய்விட்டன.

இப்பேர்ப்பட்ட பலத்த அடியை உத்பா என்பவன் கண்டு இவர் யார், இவர் பேர் என்ன, இவர் ஆதனமானவராயிருக்கிறாரோ, இவரோ என்னுடைய குதிரைப் போர்ச்சேவகனைக் கொன்றுவிட்டாரே என்று வலீது என்பவனிடம் சொன்னான். அதற்கு அவன் ஓ உத்பா என்பவனே நன்றாய்க் கேள். இவரோ இராக்கு தேசத்தில் அரசராயிருக்கிறார். ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அபிமான புத்திரராயிருக்கிறார். இவருக்கு இருலோக ராஜமானனுடைய பலமிருக்கின்றது. இவருடைய நாமமோ முஷீப்காக்கா வென்றிருக்கிறது. இவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்க

ளுக்கு உதவிசெய்ய வந்திருக்கிறார். பின்னும் இருலோகபாக்கியத்தையடைந்தவராயிருக்கிறார் என்று சொன்னான். அப்போது உத்துபா என்பவன் பெருமூச்சிட்டு அப்போ இந்த சேனை அவருடைய கையால் மாண்டுபோகுமே என்னசெய்யலாம் என்று சொன்னான். எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களில் யுத்தகளத்தில் முன் வந்து நின்றவன் மறுபடி உயிரோடு திரும்பிச் செல்லவில்லை. பின்னும் முஹீப்காக்கா என்பவர் வெகு வீரியத்தோடு யுத்தம் செய்து அனேகர்களை வெட்டிவிட்டார். அவர் ஒரு நிமிஷத்துக்குள் முன்னூறு குதிரைப்படைச் சேவகர்களை வெட்டிவிட்டார். பேர் பெற்றிருந்த அனேக சூரர்களை நாசமாக்கினார். இவருடைய வீரத்தை வலீது என்பவன் கண்டு கோபம் கொண்டு இப்போது நீ வெகு சீக்கிரமாய்ப் புறப்பட்டுப்போவென்று ஹுரீரம் என்பவனுக்குச் சொன்னான். பின்னும் அவன் ஓ சூரனே, நீயோ அவரைப்போலவே பலமுள்ள பஹில்வானாயிருக்கிறாய். நீ நிச்சயமாய் அவரைக் கொல்லுவாய். இதில் சந்தேகமில்லை என்று சொன்னான். அப்போது ஹுரீரம் என்பவன் இதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து வீராவேசத்துடன் அவனுடைய கட்டளையை ஒப்புக்கொண்டு முஹீப்காக்கா என்பவருக்கு முன் வந்து நின்றான். அப்போது முஹீப்காக்கா என்பவர் அவனைப் பார்த்து “ஓ பகையாளியே, நீ எஜீது என்பவனைப்பற்றிக் கலவரங்கொண்டிருக்கிறாய். பின்னும் பேராசை யென்னும் உபாயத்தை நீ உன் கழுத்தில் போட்டிருக்கிறாய். நரகத்துக்குப் போக ஒப்புக்கொண்டவனாயிருக்கிறாய். நீ தீர்க்கதரிசனத்துடைய ஜனங்களை விரோதித்திருக்கிறாய். கியாமத்து நாளில் ஆண்டவன் உன்னைக் கேள்வி கேட்கிறவனாவான். ஓ மூடனே அப்போது நீ அவனுக்கு என்ன உத்தரவு கொடுப்பாய்” என்று சொன்னான்.

அப்போது அவன் முஹீப்காக்கா மொழிந்த இந்தச் சொற்களையெல்லாம் கேட்டு எஜீது என்பவனிடம் வெகு சொத்தும் பொருளும் தேசங்களும் இருக்கின்றன. நான் அவன்மேல் என்னையும் என் பிள்ளைகளையும் தசத்துக்குச் செய்துவிட்டேன் என்று சொன்னான். அதற்கு முஹீப்காக்கா என்பவர் ஓ நீசனே நீ துன்யாவுக்காகவென்று தீனைப் போக்கடித்துக் கொண்டாய். விலை மதிக்கக் கூடாத இரத்னத்தையீந்து வளையலோட்டை வாங்கிக்கொண்டாய்” என்று சொன்னார். அவனோ இதைக் கேட்டுக் கோபப்பட்டுப் பட்டயத்தை உறையி

லிருந்து உருவிக் கையில் பிடித்துக்கொண்டு சுறுசுறுப்பாய் அவர் மேல் பாய்ந்து தாக்கினான். அவர் அவன் அடியைத் தன் கேடகத்தின் மேல் வாங்கிக்கொண்டு அவனைப் பதிலுக்குத் தாக்கினார். அவனும் அவர் அடியைச் சூட்சுமமாய் விலக்கி விட்டான். இவ்விதமாகவே அவ்விருவர்களும் ஒருவரை யொருவர் கொல்லவேண்டுமென்று வீராவேசத்தோடு யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்க ஹுரீரம் என்பவன் திடீரென்று தன் ஈட்டியைக் கையில் பிடித்துக்கொண்டு சமயம் பார்த்து அவர்மேல் குத்தினான். அப்போது முஹீப்காக்கா என்பவர் அவ்வீட்டியை அவன் கையிலிருந்து இழுத்துக்கொண்டு தன் குருஜு என்ற ஆயுதத்தை யோங்கி அவன் இடுப்பின் மேல் அடித்தார். அவ்வடியால் அவன் குதிரையின்மேலிருந்து ஒரு மலையைப்போல விழுந்து சமாளித்தெழுந்து ஓடிப்போய் விட்டான். அப்போது முஹீப்காக்கா என்பவர் தன் குதிரையை அவன் பின் ஓட்டமாய் விட்டு அவனை யணுகி சம்சாம் என்ற பேருள்ள தன் பட்டயத்தால் அவனை யொரே வீச்சில் இரண்டு துண்டாக்கி விட்டார்.

இதை ஷை எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் கண்டு வியாகுலப்பட்டு மிக்க திகில் அடைந்தார்கள். பின்னும் உத்துபா என்பவனும் வலீது என்பவனும் ஹுரீரம் என்பவன் வெட்டப்பட்டு மடிந்து போனதைக்கண்டு துக்கமடைந்து பின்னும் உடனே சேனையைத் திருப்பிக்கொள்ள நக்காறுவை அடித்தார்கள். அப்போது எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் எல்லோரும் திரும்பி தன் தங் கூடாரங்களுக்குப்போய் உட்கார்ந்து ஆச்சரியத்தோடு விசாரப்பட்டார்கள்.

முஹீப்காக்கா என்பவரும் மிக்க சந்தோஷத்தோடு திரும்பி ஹஜரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடைய சன்னிதானத்தின்முன் வந்து நின்று அவர்களுக்கு சலாம் செய்தார். அப்போது அவர்கள் அவரைத்தன் நெஞ்சோடு அணைத்துக்கட்டிமர்ஹபா மர்ஹபாவென்று சொன்னார்கள். பொழுதுபோய் விட்டபின் பின் இரவில் அச்சண்டாளர்கள் நித்திரையின் வெறியில் இருந்தார்கள். ஆனால் ஹஜரத்து முஹம்மது ஹனீபா வகைருக்களோ ஆண்டவனுடைய தியானத்திலும் தொழுகையிலும் இருந்தார்கள். இதற்குள் பொழுது விடிந்தது. அப்போது உத்துபா என்பவன் தன் சேனையை யுத்தகளத்துக்குக் கொண்டுவந்தான். ஹஜரத்து முஹம்மது ஹனீபா அவர்களும்

புறப்பட்டு யுத்தகளத்துக்கு வந்தார்கள். இதற்குள் தாலிப் அலி என்பவர் ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடைய சமூகத்தில் வந்து நின்று இன்றைய தினம் நான் யுத்தகளத்துக்குப் போகிறேன். என் மரணம் வந்திருக்குமானால் நான் சாவேன். அதுவரை நான் சாக மாட்டேன். ஆனபடியால் தாங்கள் என்னை யுத்தத்துக்குப் போகும்படி செலவு கொடுத்து அனுப்ப வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டார். அப்போது அவருக்கு அவர்கள் செலவு கொடுத்து அனுப்பிவிட்டு இன்னா பத்ஹ்னா என்ற சூரத்தை ஓதினார்கள். பின்பு தாலிப் அலி என்பவர் சலவாத்துகளையும் ஆயாத்துகளையும் மந்திரங்களையும் ஓதிக்கொண்டு குதிரையின் மேல் ஏறி யுத்தகளத்தில் வந்து நின்று ஹைதரி நஃறுவை சப்தித்தார். பின்னும் அவர் எனக்கு ஆண்டவனுடைய அதிக சகாயமிருக்கின்றது என்றும் சொன்னார்.

இதின் பின் அவர் எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களின் பக்கம் திரும்பி "ஓ துராசாரர்களே நரகத்துடைய இரை உங்களுக்கு இருக்கின்றது. என்மேல் நீங்கள் இருபது அல்லது முப்பது பேர்கள் சேர்ந்து வந்து விழுந்தாலும் கூட நான் உங்கள் எல்லோரையும் ஆண்டவன் உதவியால் நாசமாக்கி விடுவேன்" என்று சொன்னார். அப்போது தீனையும் ஈமானையும் மதிக்காதவன் சைத்தான் ஒருவன் இராக்ஷசர்களுடைய சந்ததியில் பிறந்தவனாயிருந்தான். இவன் பேரோ சோஹ்றுப். இவன் உக்பா என்பவனிடம் வந்து நின்று "ஓ என் தலைவரே, யுத்தகளத்திற்குப் போகவும், தாலிப் அலி என்பவருடன் யுத்தம் செய்யவும் தாங்கள் எனக்குச் செலவு கொடுக்க வேண்டுகிறேன்" என்று மனுச்செய்து கொண்டான். இதை வலீது என்பவன் கேட்டுச் சந்தோஷப்பட்டு "ஓ சூரனே, நீ கெட்டிக்காரனாயிருக்கிறாய். நீ உடனே போய் தாமதிக்காமல் தாலிப் அலி என்பவனைப் பிடித்து அவனை என்னிடம் கொண்டுவர வேண்டும்" என்று சொன்னான். அப்போது அந்த சோஹ்றுப் என்பவன் அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு யுத்தகளத்தில் வந்து தாலிப் அலி என்பவரின் முன் நின்று அவரைப்பார்த்து "ஓ இளைஞனே, ஒன்றும் அறியாதவனே, உன் பேரென்ன, உன் அப்பன் யார், அவன் பேர் என்ன" என்று அவரிடம் கேட்டான். அத்தருணத்தில் இருதரத்தாருடைய சேனைகளும் இருபக்கங்களில் நின்றுகொண்டிருந்தன.

அவன் அவ்விதமாய்ச் சொன்ன சொற்களைத் தாலிப் அலி என்பவர் கேட்டு "ஓ மூடனே கேள். என்னுடைய நாமமோ தாலிப் அலி.

நானோ ஹசரத்து மௌலா அலி கர்ரமல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரனாயிருக்கிறேன்" என்று சொன்னார். அப்போது அந்த இராட்சசன் இதைக் கேட்டவுடனே மிக்க ஆவேசத்தோடு பாய்ந்து தன் வாளை ஓங்கி அவர்மேல் வீசினான். அதைப் பராக்கிரமசாலியானவர் கேடகத்தின் மேல் வாங்கிக்கொண்டு அவனைப் பதிலுக்குத் தாக்கினார். அவனும் அவ்வடியைத் தந்திரமாய் விட்டுப் போர் புரிந்தான். இவ்விருவர்களுடைய பட்டயங்களும் ஒன்றின் மேல் ஒன்று தாக்கியதனால் உண்டாகும் சத்தம் யுத்தகளத்தைப் பதறச் செய்தது. அங்கு நின்றுகொண்டிருந்த இருதரத்தாருடைய போர்ச்சேவகர்களும் இவ்வேடிக்கையை வெகு கூர்ந்த பார்வையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நக்காராவின்மேல் நக்காராக்களும், பறையின்மேல் பறைகளும் முழங்கிக்கொண்டிருந்தன. இவர்கள் யுத்தத்தைக்கண்டு எல்லோரும் ஆச்சரியமுள்ளவர்களாயிருந்தார்கள். அத்தருணத்தில் தாலிப் அலி என்பவர் ஹசரத்து மௌலா அலி கர்ரமல்லாஹு அன்ஹு அவர்களால் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ஒருவித வித்தையை அச்சமயம் நினைத்துக்கொண்டு கோபாவேசத்தோடு அவன்மேற் பாய்ந்து அந்த வித்தையின் பலத்தைச் செலுத்தினார். அந்த அடி அவனுடைய மார்பிலிருந்த கவசத்தைப் பிளந்து உள்ளே நுழைந்து விட்டதால், இராட்சதனாகிய அவன் அடியற்ற விருட்சம்போல் பூமியிற் சமமாய் சாய்ந்துவிட்டான்.

இப்படி அவன் விழவே, எஜீது என்பவனுடைய சேனை மனக் தளர்ந்து திகில் கொண்டாய் விட்டது. தாலிப் அலி என்பவர் எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் அளவற்றவர்களை நாசமாக்கினார். இதின்பின் சோஹ்றுப் என்பவன் செத்தான் செத்தான் அப்போ செத்தான் என்று எஜீது என்பவனுடைய சேனைக்குள் கூக்குரல் கிளம்பியது. தன் சேனை பதுங்கிக்கொண்டு வருகின்றது என்று வலீது என்பவன் கண்டு சேனைக்குள் புகுந்து ஜெயசூரராகிய தாலிப்அலி என்பவர் பராக்கிரமத்தோடு யுத்தம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு உடனே அவர்களிடம் போய் அவருடன் யுத்தம் செய்யத் தொடங்கினான். இவ்விருவர்களும் சாமர்த்தியமுடைய பயில்வான்களாயுமிருந்தார்கள். ஆனால் வலீது என்பவனோ வெகு பலமுள்ள பயில்வானும் புஜ மூச்சுள்ளவனுமாயிருந்தான். அத்தருணத்தில் தாலிப் அலி என்பவரோ யுத்தங்கள் மேல் யுத்தங்கள் செய்து அனேக பகை

யாளிகளைக் கொன்று அலுத்துப்போயிருந்தார். அப்பாவியோ அவருடைய இடுப்பில் உடனே தன் கையைப்போட்டு முழுபலத்தைக் காட்டி மல்யுத்தம் செய்தான். அப்போது அவர் கோபமுள்ளவராய் அவனுடைய இடுப்பிலும் அவர் தம்முடைய கையைப் பலத்தோடு போட்டார். ஆக இவ்விருவர்களும் ஒருவரோடு ஒருவர் மல்லுக்கட்டி யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். வெகுநேரம் வரை இருவரும் இவ்வாறு யுத்தம் செய்துகொண்டிருந்தபோது வலீது என்பவனோ தருணம் பார்த்து தாலிப் அலி என்பவரைத் தன் முட்டுகளுக்குமேல் தூக்க முயல்கிறான். அப்போது உமர் அலி என்பவர் தம்முடைய சகோதரராகிய தாலிப் அலி என்பவருடைய இவ்வித ஸ்திதியைக் கண்டு என் சகோதரரே நூற்றிறும்பது சூரர்களைக் கொன்று சோஸ்ரூப் என்பவனையும் வெட்டியிருக்கிறார். ஆனால் இப்போது அவர் அலுத்துப் போயிருக்கிறார். நான் போகாதிருந்தால் சரியில்லை என்று சொல்லிக்கொண்டு அவர் தன் குதிரையை வேகமாய் யுத்தகளத்தில் விட்டு தாலிப் அலி என்பவரிடம் வந்து நின்று கொண்டார். அப்போது உமர் அலி என்பவர் தாலிப் அலி என்பவரிடம் வந்து நின்றிருப்பதை வலீது என்பவன் கண்டு, அய்யோ இப்போது நான் பிழைக்க மாட்டேன். சாகவே சாவேன் என்று அவன் தன் மனதில் எண்ணிக்கொண்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிப்போய்த் தன் சேனைக்குள் புகுந்துகொண்டான். பின்பு மேகத்துக்குள் மின்னல் எவ்விதமாய் நுழைந்துகொண்டிருக்கிறதோ அத்தன்மையாய் உமர் அலி என்பவர் அவனுடைய சேனைக்குள் நுழைந்து கர்ஜித்துக்கொண்டும் ஒரு பட்டய வீச்சுக்கு நல்வால் கவ்வால் போர்ச்சேவகர்களை வெட்டிக்கொண்டிருந்தார். அப்போது வலீது என்பவன் உமர் அலி என்பவரிடம் வந்து நின்று ஓ உமர் அலி என்பவரே, வாஸ்துவமாய் நீர் ஹைதரே கர்ரார் அவர்களுடைய குமாரராயிருக்கிறீர். இதில் சந்தேகமில்லை. நான் எப்போது முதலில் உம்மைக் கண்டேனோ அப்போது நிச்சயமாய் உமக்குப் பயந்து சேனைக்குள் புகுந்துவிட்டேன். ஆனால் இப்போது நான் உம்மிடம் தனிமையாய் வந்திருக்கிறேன். நீர் பத்திரமாயும் சாக்கிரதையாயுமிருக்க வேண்டுமென்று சொல்லி அவர்மேல் பட்டயத்தை ஓங்கி அடித்தான். அந்த ஜெயசூரர் அவ்வடிக்குத் தப்பித்துக்கொண்டு அவன் சமீபத்தில் போய்க் கைப்போட்டு அவனுடைய இடுப்பைப் பலமாய்ப்பிடித்து அவனைக் குதிரையிலிருந்து

அந்தரமாய்த் தூக்கிக்கொண்டார். இப்படி அவனைத் தூக்கிக்கொண்டதின்பின் அவனைச் சிறையாக்கித் தம்முடைய சகோதரர்களிடங் கொண்டுபோக வேண்டுமென்று அவர்மனதில் உத்தேசித்தார். இதற்குள் சஅது என்று பேருள்ள ஒருவன் உமர் அலி என்பவரிடம் வந்து நின்று குருஜு என்ற ஆயுதத்தைக்கொண்டு அவருடைய பிடரியின் மேல் ஓங்கி ஓர் அடி அடித்தான். பின்னும் அப்துல்லா ஜியாதி யென்று பேருள்ள ஒருவன் இதைக்கண்டு தன் மனதில் சந்தோஷத்தையடைந்து வெகு சீக்கிரமாய் உமர் அலி யென்பவரிடம் வந்து அவர்மேல் பட்டயத்தால் அடித்தான். இப்படி அவன் அடிக்கவே எல்லோரும் வந்து சேர்ந்து அவர்மேல் பாய்ந்தார்கள். அப்போது உமர் அலி என்பவர் புகலற்று வலீது என்பவனை விட்டுவிடாமல் அவனை ஒரு கையில் பிடித்துக்கொண்டு அவனைத் தம்முடைய கேடகமாக்கிக்கொண்டார். அதனால் அவர்கள் எல்லோரும் அவரையடித்த அடிகளனைத்தும் அவன்மேல் விழுந்துகொண்டிருந்தன. பின்னும் அவர் தம்முடைய வேறொரு கையால் எதிரிகளை அடித்துக்கொண்டிருந்தார். இவ்வித ஸ்திதியை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கண்டு தாமிருந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். அப்போது அவர்களிடமிருந்த எல்லோரும் தங்கள் தங்கள் குதிரைகளையும் வெகு துரிதமாக அவர்களின் பின் விட்டார்கள். ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்களோ ஹைதரி நஃரு என்ற சத்தத்தை உயர்த்திக்கொண்டும் யா, மௌலா அலி என்று சொல்லிக்கொண்டும் போய்க்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய சத்தத்தை அப்பகையாளிகள் எல்லோரும் கேட்டுப் பயந்துகொண்டிருந்தார்கள். உமர் அலி என்பவரைப் பகைவர்களெல்லாம், சூழ்ந்துகொண்டிருப்பதை ஷா முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கண்டு சகிக்காமல் மறுபடியும் ஹைதரி நஃரு என்ற சத்தத்தை உயர்த்தினார்கள். இந்தச் சத்தத்தைக் கேட்டு எஜீது என்பவனுடைய படைச்சேவகர்கள் பயந்து ஓ ஹோ சிங்கமானவர் வந்துவிட்டாரே என்று சொல்லிக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

இப்படி அவர்கள் எல்லோரும் உமர் அலி என்பவரை விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டபின் அவர் அந்த மர்தூதை பூமியின் மேல் தூக்கி அடித்தார். அந்த மர்தூதானவன் கீழே விழவே எழுந்து ஓடித் தன் சேனைக்குள் புகுந்துவிட்டான். பின்பு முஷீப்காக்கா என்பவரும், ஆகில் அலி என்பவரும். உமர் அலி என்பவரும் ஆக இம்மூவர்களும்

ஆர்ப்பரித்துக்கொண்டும் தங்கள் தங்கள் குதிரைகளை ஓட்ட மோட்டமாக விட்டுக்கொண்டும் நாலாப்பக்கமும் அடிமேல் அடி அடித்துக்கொண்டிருந்தார்கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில் மைதானமெல்லாம் ஒரு இருளாய் மூடிக்கொள்ளத்தக்க செந்தூள் எங்கும் பறந்தது. இப்படியிருந்தும் அவர்கள் அடிமேலடி அடித்துக்கொண்டு ஆயிரம் ஆயிரங்களானவர்களை மடித்துக்கொண்டிருந்தார்கள். எதிரி சேனையில் கோழை நெஞ்சுள்ளவர்களும், ஆரோக்கிய மற்றவர்களும், யுத்தகளத்தில் நின்றிராமல் ஓடிப்போய்க்கொண்டிருந்தார்கள். பின்னும் நின்று யுத்தம் செய்துகொண்டிருந்த எஜீது என்பவனுடைய பராக்கிரமசாலிகளான போர்ச்சேவகர்களின் தலைகளோ இலை உதிர்க்காலங்களில் மரங்களிலிருந்து பழுத்த இலைகள் உதிர்ந்து கொண்டிருப்பதைப்போலப் பட்டய வடிகளால் விழுந்துகொண்டிருந்தன. இவ்விதமாக அந்தச்சண்டாளர்களை அவர்கள் வெட்டி நாசமாக்கினார்கள். அப்போது பூமியின்மேல் இரத்த ஆறுகள் ஓடின. யுத்தகளம் எங்கும் இரத்தமயமாகவும், பிணக்காடாகவுமிருந்தது. பின்னும் முஷீப்காக்கா என்பவரும், உமர் அலி என்பவரும், யுத்தம் செய்துகொண்டே வெட்டிக்கொண்டே எதிரிகளின் கொடி நிற்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் கொடியின் சமீபம் வந்துவிட்டதை வலீது என்பவன் கண்டு திகில்பட்டுப் பயந்து புத்தி இழந்து, அவ்விடத்தை விட்டு உயிரைக்காப்பாற்ற ஓட்டம்பிடிக்கத் தொடங்கினான். பின்பு உத்துபா என்பவனும், சஅது என்பவனும், அப்துல்லாஜியாதி என்பவனும் நாம் இவ்விடம் நின்றிருப்பது நன்மையல்ல, ஓட்டம்பிடிப்பதே நலமென்று தமக்குள் யோசனை செய்துகொண்டு ஓட்டம் பிடித்தார்கள். இதற்குள் முஷீப்காக்கா என்பவர் வெகு துரிதமாய் வலீது என்பவனைப் பிடித்துக்கொள்ள அவன் பின் தொடர்ந்து அவனை நோக்கி வெகு கோபத்தோடு "ஓ வெட்கங் கெட்டவனே, ஓ மூடனே, நீ எங்கே ஓடுகிறாய். நானுன்னை விடமாட்டேன். ஆண்டவன் சத்தியம் இப்போது நான் உனக்குத் தேசத்தின் பாதையைக் காட்டிவிடுகிறேன். அவ்விடம் நான் உன்னை அனுப்பிவித்து விடுகிறேன் பார்," என்று சொல்லி அவன் தலைமேல் அவர் பட்டயத்தை ஓங்கி அடித்தார். அந்த அடியால் அவன் மண்டை பிளந்து விண்டலைந்து சென்றான். இதன்பின் உமர் அலி என்பவர் சஅது என்பவன் ஓடிப்போய்க் கொண்டிருப்பதைக் கண்டு அவனைக் கொல்ல அவன்பின் தொடர்ந்தார். ஆனால் அவனோ வெகு சுறுசுறுப்பான குதிரையின்மேல் ஏறியிருந்தான். ஆகையால் அக்குதிரையோ காற்றைப்போலப் பறந்துகொண்டிருந்தது. இதை அவர் கண்டு அவன் தன் கைக்கு அகப்படுவது கூடாமையாய் போகிறதே என்றும், தன் குதிரையோ அந்த ஓட்டத்தைப் பிடிக்க சக்தியற்றதாயிருக்கிறதென்றும் எண்ணி உடனே தம்மிடமிருந்த கமந்து என்ற சுருக்கை யெடுத்து அவன் கழுத்தின்மேல் எறிந்தார். அந்தச்சுருக்கு ஆண்டவன் கட்டளையால் அவன் கழுத்தில் போய்விழுந்தது. அப்போது அவர் அவனை உடனே பலத்தோடு மீனை இழுக்கிறதைப்போல் இழுத்துப் பூமியின் மேல் தாக்கி அடித்தார். அவனோ மலையைப்போலப் பூமியின் மேல் டபார் என்று விழுந்தான். பின்னும் அவர் அவன் கையிலும் காலிலும் விலங்குபோட்டு அவனைச் சிறையாக்கிக்கொண்டார். நண்பர்களே, இப்போது பாருங்கள் வலீது என்பவனோ செத்துப்போனான். சஅது என்பவனோ சிறையாய்ப் போனான். ஆக இவ்விருவர்கள் கெதியும் இவ்வாறு முடிந்தது. உத்துபா என்பவன் இதைக்கண்டு மனம் வெந்து ஆவிசோர்ந்தான். அப்துல்லா ஜியாதி என்பவனுடைய நெஞ்சோ தாங்கமுடியாத பாரமாய்விட்டது. இவ்விருவர்களுடைய இடுப்பு முறிந்துபோய்விட்டது. நாங்கள் என்ன செய்தோம், என்னமாய் முடிந்தது என்று சொல்லிக்கொண்டு பதறவும் நடுங்கவும் தொடங்கினார்கள். பின்னும் இவர்கள் பெருமூச்சிட்டுத் துயரத்தோடு தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொண்டு 6-மயில் தூரம் ஓடிப்போய்விட்டார்கள். இவர்கள் யுத்தஞ்செய்ய யுத்தகளத்தில் வராமல் இருந்துகொண்டிருந்தார்கள். இதற்குப்பின் ஹசரத்து முஹம்மது ஹனீபதா அவர்களும் அவர்களுடன் இருந்தவர்களும் சவுக்கியமுடைய தங்கள் தங்கள் கூடாரங்களுக்குத் திரும்பினார்கள்.

* * *

உத்துபா என்பவன் தோல்வியடைந்த சங்கதியை எஜீது என்பவனுக்கு எழுதி அனுப்பியது.

பின்பு உத்துபா என்பவனும், அப்துல்லா ஜியாதி என்பவனும் ஒன்றாகக்கூடி யோசனை செய்து எஜீது என்பவனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பிவித்தார்கள். அதில் "ஓ மகத்துவத்துடையவும் மாட்சிமையுடையவும் நட்சத்திரமே, ஆதபத்திரம் எல்லோரின்மேல் என்னாளும் இருப்பதாக முஹம்மது ஹனீபதா என்பவர் எங்களுடன் வெகு பெரிய

யுத்தம் செய்தார். பின்னும் அவர் பேர்பெற்ற சூரர்களான சேனைத் தலைவர்களையும் எத்தனையோ ஆயிரங்களான போர்ச்சேவகர்களையும் நாசமாக்கிவிட்டார். பின்னும் அவர் வலீது என்பவனையும், சோபிருப் என்பவனையும் கொன்றுவிட்டார். இவர்கள் எல்லோருஞ்சேர்ந்து தான் யானைவிட்டுக் கடந்து போனார்கள். பின்னும் அவர் சஅது என்பவனை யோ பிடித்துச் சிறையாக்கிக் கொண்டார். முஷீப்தாக்கா என்பவரும் உமர் அலி என்பவரும், தாலிப் அலி என்பவரும், ஆகில் அலி என்பவரும் ஆக இந்த நான்கு பேர்களும் ஒன்றுசேர்ந்து சேனையின்மேல் பாய்ந்து போர்ச்சேவகர்களை யெல்லாம் வெட்டி வெட்டி நாசமாக்கினார்கள். ஆனால் மீதமிருந்த சிலர் பயந்தும் பதறியும் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். இப்போது உம்முடைய பெரும் இராச்சியமும் உலகத்தில் இருக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறதாயிருந்தால் வெகு சீக்கிரத்தில் எங்கள் உதவிக்காகச் சேனையை கொடுத்து அனுப்பவிக்கவேண்டும்" என்ற இச்சங்கதிகள் எழுதப்பட்டிருந்தன. இந்தக் காகிதம் எஜீது என்பவனிடம் போய்ச்சேர்ந்து அவன் ஆத்திரப்பட்டு எரிந்து விழுந்தான். நிம்மதி அவன் இருதயத்திலிருந்து நீங்கிப்போய் விட்டது. பின்னும் அவன் விசாரத்திலும் துக்கத்திலும் விழுந்து மெய்ம்மறந்து பைத்தியம் பிடித்தவனைப்போலானான். பின்பு அவன் மர்வான் என்பவனைப்பார்த்து "அய்யோ, அகஸ்மாத்தான இந்த பலாவும் பீடையும் என் தலைமேல் எங்கேயிருந்து வந்தது. அய்யோ இந்த ஆபத்து எங்கேயிருந்து முளைத்தது. எனக்குத் தெரியாதே. ஓ சமதுக்கனே எப்போது நீ முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய சங்கதி என்னுடன் சொன்னுயோ, அப்போதே நான் உலகத்தில் எவருடையவும் பயமும் எனக்கு இல்லவே இல்லை என்றும், ஆனால் உலகத்தில் மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர்களே, என் பகையாளிகளாயிருக்கிறார்கள் என்றும் முதலில் நான் உன்னுடன் சொன்னேனே ஆகையால் மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராகிய முஹம்மது ஹனீப்ஷா என்பவரைப் பிடித்துச் சிறையாக்கி என்னிடம் கொண்டுவந்து நிறுத்தி என்னுடைய மனதை ஆறுதல் செய்ய ஒருவருமில்லையே. இப்படி ஒருவரும் செய்யாவிட்டால் புகலத்து அவருடன் யுத்தஞ்செய்ய நானே புறப்படுவேன். கேளடா தம்பீ" என்று பிரலாபித்தான். மர்வான் என்பவன் எப்போது இவ்

விதச் சொற்களைக் கேட்டானே அப்போது அவன் ஒழுக்கத்தோடு அவன் முன்னின்று ஓ என் இராஜாவே, உன்னுடன் சரிசமானத்தின் தாவா செய்ய எவன் இருக்கிறான். பின்னும் நீர் எனக்குக் கட்டளை கொடுத்து என்னுடன் சேனையுங் கொடுப்பீரேயானால் நானுடனே போய் முஹம்மது ஹனீப்ஷா என்பவருடன் யுத்தஞ்செய்வேன். அப்தல்லா என்பவனையும், உத்பா என்பவனையும் ஆக இவ்விருவர்களைத் துணையாக நான் என்னுடன் வைத்துக்கொண்டு யுத்தம் செய்வேன். முஹம்மது ஹனீப்ஷா என்பவர் என்னுடைய யுத்தத்தைத் தன் கண்களால் பார்த்து அச்சமும் ஆச்சரியமுமடைவார். நான் அவருடன் யுத்தஞ்செய்து தந்திரத்தோடு முஹம்மது ஹனீப்ஷா என்பவரைப் பிடித்துக்கொள்வேன். அவரை உயிரோடு நான் உன்னிடம் அனுப்பிவித்து விடுவேன்" என்று சொன்னான். ஷை எஜீது என்பவன் இதைக்கேட்டு சந்தோஷப்பட்டு ஐந்து இலட்சம் போர்ச்சேவகர்களையும், நாற்பதினாயிரம் யானைகளையும் அவன் வசம் ஒப்பித்து ஆடையாயும் பணங்களையும் அவனுக்குத் தந்து அவனுக்கு வெகு ஆசையையுங் காட்டி, அவனை அனுப்பவித்தான். மர்வான் என்பவன் சேனையைக் கூட்டிக்கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டான். இவனை வழி அனுப்ப இவனுடன் சில தூரம்வரை எஜீது என்பவன் போனான். மர்வான் என்பவன் யாத்திரை ஸ்தலங்களை வெகு சீக்கிரமாய்க் கடந்து சென்றான்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய செய்தியும், மர்வான் யுத்தத்துக்குப் புறப்பட்டிருக்கிறுனென்று வேவுகாரன் அவருடன் போய்ச் சொன்ன செய்தியும்.

எமன் தேசத்து அரசரான ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எஜீது என்பவனுடைய சேனையின்மேல் ஜெயமடைந்து சில நாள்களுக்குப் பின் யுத்தத்துக்காகக் கட்டியிருந்த தன் இடுப்புக் கட்டை அவிழ்த்தார்கள். இதின்பின் அவர்கள் இரண்டு வாரங்கள்வரை விசாரமற்றுச் சவுக்கியத்தை யடைந்தார்கள். இப்படியிருக்கையில் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய ஜியாரத்து செய்ய எங்கள் மனம் விரும்புகின்றது என்றும், பின்னும் ஜியாரத்து செய்து இருலோக பாக்கியத்தை அடைய நாங்கள் அபேட்

யிக்கிறோம் என்றும் அச்சகோதரர்கள் எல்லோரும் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சமூகத்தில் சொன்னார்கள். இதற்குள் உமர் அலி என்பவர் நாம் சிறையாக்கி யிருந்த சஅது என்பவனை ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் கொண்டுவந்து அவர்களின் முன் நிறுத்தினார். அப்போது அவர்கள் அம்மல்ஊனைப் பார்த்து இவனைச் சீக்கிரத்தில் தூக்குப்போடுங்கள் என்று தங்கள் ஜனங்களுக்குக் கட்டளை யிட்டார்கள். அக்கட்டளைப்படி யவனைத் தூக்குமரத்தில் தூக்கிவிட்டார்கள். இத்தருணத்தில் சுறுசுறுப்பான நடையுள்ள ஒரு வேவுகாரன் வந்து "உலகத்தை யாளும் அரசரே! தங்களுக்கு ஆண்டவனுடையவும், ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடையவும் அடைக்கலம் இருக்கின்றது என்று புகழ்ந்து அசுபியான மர்வான் என்பவன் உங்களுடன் யுத்தஞ் செய்ய ஐந்து இலட்ச போர்ச்சேவகர்களையும், நாற்பதினாயிரம் யானைகளையும் கொண்டுவருகிறான். பின்னும் அப்துல்லா என்பவனையும், உத்பா என்பவனையும் தன்கூடவே இட்டுக்கொண்டு தங்களுக்குச் சிட்சைசெய்ய வருகிறான். அவன் விடிவதற்கு முன் தங்களிடம் வந்து சேருவான்" என்று சொன்னான். அரசராகிய ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இச்சங்கதியைக் கேட்டு அய்யோ எங்கள் மனதிலோ மதீனமா நகரின் தரிசனையுடைய அபேட்சை இருக்கதே, அது நிறைவேறாமல் போகிறதே, மர்வான் என்பவன் சேனையைக் கொண்டு வந்து விட்டானே என்று சொன்னார்கள். பின்னும் அவர்கள் ஆண்டவனுடைய கட்டளையாலும், அவனுடைய தயவாலும் நான் ஜெயம் அடைந்து இதின்பின் சோதிப்பொருந்திய ஹஸரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய திருரவ்ஜாவின் ஜியாரத்தை செய்வேன் என்றும் சொன்னார்கள். இதற்குள் சூரியனுடைய இலட்டி அணைந்தது. இரவின் இருள் வந்து விட்டது. அப்போது ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய எல்லாச் சகோதரர்களையும் தன் கூடவைத்துக்கொண்டு அன்ன விரிப்பின்மேல் உட்கார்ந்தார்கள். இராப்போஜனஞ் செய்யத்தொடங்கி அது முடிந்தபின் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு அஞ்சலக்காரன் இப்ராஹீம் உஷைத்தார் என்பவருடைய கடிதத்தை ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் கொண்டுவந்து சேர்த்தது.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று ஒருவன் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் வந்து வெகு வணக்கத்தோடு ஒரு கடிதத்தை அவர்கள் முன் வைத்தான். அக்கடிதமோ இப்ராஹீம் உஷைத்தார் என்பவருடைய கடிதமென்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். பின்பு அம்மனிதனை ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் பார்த்து இம்மனிதனோ வெகு விவேகமானவனாயிருக்கிறான். இவன் வெகு அற்புதமானவனாகத் தெரியவருகிறது என்று சொன்னார்கள். அப்போது ஒருவன் வெகு ஒழுக்கத்துடன் நின்று தன் வாயைத் திறந்து ஓ அரசரானவரே, இவனோ உமர்ஜாமரி என்பவனுடைய சத்தியாளா யிருக்கிறான். இவனுடைய நாமம் அபூமது சாபூஷி. இவனுடைய உத்தியோகமோ இப்ராஹீம் உஷைத்தார் என்பவருடைய சன்னிதானத்தில் இருக்கவேண்டியதே இவனுடைய உத்தியோகமாயிருக்கின்றது," என்று அறிவித்தான். இதை ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டு அக்கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்கள். அதிலே "நான் தங்கள் கண்ணிய சமூகத்தின் பக்தியுள்ளவனா யிருக்கிறேன். பின்னும் நான் முழு இருதயத்தோடு கீழ் பணிந்தவனாயிருக்கிறேன். நான் இப்ராஹீம் உஷைத்தாரா யிருக்கிறேன். தாங்கள் என் தலையின் கிரீடமாயிருக்கிறீர்கள். நீக்கதீசனைத்துடைய குடும்பத்தார்களின் மேல் நான் என்னுடைய உயிரையும் இருதயத்தையும் தசத்துக்கு செய்து எழுதுகிறேன். அதாவது ஜெயவீரராகிய தாங்கள் யுத்தம் செய்து குப்பார்களை நாசமாக்கி விட்டீர்களென்றும், யுத்தகளத்தை இரத்த பூங்காவன மாக்கிவிட்டீர்களென்றும், எல்லாக் குடும்பத்தின் நாமத்தைப் பிரகாசிக்க செய்தீர்களென்றும் நான் கேள்விப்பட்டேன். பின்னும் தங்களுக்கு ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய உதவி இருக்கின்றது. தங்கள் சிரசின் மேல் ஹஸரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குடை யிருக்கின்றது. இப்போ தாங்கள் / தங்கள் மனதில் விசாரமடையலாகாது. தங்களுக்கு உதவிசெய்ய நான் தங்கள் பாதசன்னிதானத்தில் வந்திருக்கிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தை ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் படித்து முடித்துவிட்டு வெகு சந்தோஷப்பட்டார்கள். பின்பு படுக்கைக்குப் போனார்கள்.

ஹசரத்து முகம்மது ஹனிப்பா அவர்கள் மர்வான் என்பவனுடன் செய்த யுத்தம்.

இராவேளை முழுதும் போய் விடியற்காலத்தின் நகாரு அடிக்கப்பட்டது. இடென்று மர்வான் என்பவன் சேனையைக் கொண்டு வந்து ஹசரத்து முகம்மது ஹனிப்பா அவர்களுடன் யுத்தஞ் செய்ய யுத்தகளத்தில் வந்து நின்றான். அப்போது இவருடைய மணவாளனானவர் குதிரையின்மேல் ஏறி சூரியன் வானத்தின்மேல் பிரகாசிப்பதைப் போல் யுத்தகளத்தில் பிரகாசித்தார்கள். பின்னும் ஜெயமடையவேண்டி யுத்தின் நகாராக்கள் அடிக்கப்பட்டன. பின்பு மர்வான் என்பவனோடு யுத்தம் செய்ய முடிவெடுத்து நின்றுகொண்டார்கள். இதற்குள் மர்வான் என்பவனுடைய பக்கத்திலிருந்து ஒரு குதிரைப் போர்ச்சேவகன் யுத்தகளத்தின் முன்வந்து நின்று கர்ஜித்தான். இதின்பின் அஹமது சேனையிலிருந்து ஒருவன் தானாகவே புறப்பட்டு அக்களத்தில் வந்து நின்றான். இவனே முஹ்லிப்காக்கா என்பவருடைய பந்துவாயிருந்தான். அப்போது அப்போர்ச்சேவகன் இவர்மேல் ஓர் பட்டய அடி அடித்தான். உடனே இவர் ஷஹீதாய்ப் போனார். இவருடைய சகோதரர் இவ்விதங்கண்டு மயங்கி அந்த போர்ச்சேவகனிடம் கொதிப்போடு ஓடிவந்தார். இவர்மேலும் அப்பாவி ஓர் பட்டய அடி அடித்தான். பின்னும் இவரைக் குதிரையின் மேலிருந்து கீழே விழச் செய்தான். அப்போது இவர் அபாயமடைந்து நிஷ்பலமாய் நின்றுகொண்டு அதாசித்தப்பிரமையோடு அவன்மேல் ஒரு பட்டய அடி அடித்தார். அப்போர்ச்சேவகனோ இவரையும் பட்டயத்தால் கொன்றுவிட்டான். இதின்பின் ஒருவருக்குப்பின் ஒருவராக அக்களத்தில் வந்து ஷஹீதாய்ப் போனார்கள். இவ்விதமாய் அப்போர்ச்சேவகனுடைய கையால் ஷஹீதாய்ப் போனவர்கள் எழுபது பேர்கள். இதை ஆகில் அலி என்பவர் கண்டு வெகு கோபங்கொண்டு ஈட்டியைத் தன் கையில் பிடித்துக்கொண்டு பாவியாகிய அப்போர்ச்சேவகன் முன்போய் நின்றுகொண்டார். அப்பாவியோ இவர்மேலும் ஓர் அடி அடித்தான். அவ்வடியை அவர் தப்பவைத்துக்கொண்டார். அவன் கோபத்தோடு மறுபடி வேறொரு அடி அடித்தான். அப்போது ஆகில் அலி என்பவர் அவனுடைய பட்டயப் பிடியைப் பலத்தோடு பிடித்துக்கொண்டு உடனே அவனுடைய வயிற்றில் ஒரு குத்துவாளைக் கொண்டு குத்தி அவனைக் கொன்றுவிட்டார். அவனோ நரகத்தில் சதாக்காலம் இருக்கிறவனானான்.

அவன் சாகவே ஷஜீது என்பவனுடைய வேறொரு பராக்கிரமமுள்ள போர்ச்சேவகன் ஒருவன் அவர் முன்னுக்கு வந்தான். இவனே உடனே ஆகில் அலி என்பவர்மேல் எம்பது மணங்குள்ள குருஜு என்ற ஓர் ஆயுதத்தை வீசினான். உடனே அவர் அந்த குருஜைத் தன் கையால் பிடித்துக்கொண்டு அதைக் கொண்டே அவன்மேல் அடித்தார். அந்தக் குருஜு என்ற ஆயுதமோ அவன்சிரசில் பட அவன் தட்சணம் ஆவி பிரிந்தான். இவ்விதமாகவே அப்பாவி சேனையிலிருந்து ஒருவனுக்குப்பின் ஒருவன் அவர்மேல் வந்துகொண்டிருந்தார்கள். எவர் எவர்கள் வந்து அவருடன் எதிர்த்துக்கொண்டிருந்தார்களோ அவர்கள் எல்லோரும் அவருடைய கையால் அடிபட்டு ஜஹன்னம் போய்ச் சேர்ந்துகொண்டிருந்தார்கள். அநேக சூரர்கள் தன் பாலைவிட்டு நாசமாய்ப் போனதை மர்வான் என்பவன் கண்டு, தன் சேனையைத் திருப்பிக்கொள்ளப் பறை அடித்தான். பின்பு அவன் தன் ஸ்தலம்போய் உட்கார்ந்தான். இதின்பின் அஹமது சேனையும் திரும்பி தங்கள் ஸ்தலம் வந்து சேர்ந்தது. அப்போது ஹசரத்து முகம்மது ஹனிப்பா அவர்கள் தம்முடைய சகோதரராகிய ஆகில் அலி யென்பவரைப் புகழ்வும், அவருடைய பராக்கிரமத்தின்மேல் மர்ஹபா செய்யவுந் தொடங்கினார்கள். இதின்பின் ஷஜீ மர்வான் என்பவன் தன்னுடைய சேனையின் எல்லாச் சூரர்களையும் அழைத்து நீங்களோ மேலான குலஸ்தர்களாயும், பெருமையுள்ளவர்களாயுமிருக்கிறீர்கள். பின்னும் நீங்களோ ஷஜீது என்பவன் முன்னிலையில் பெருமை பாராட்டி தங்களை மெச்சித்துக்கொண்டீர்களே, அப்படியிருக்க இப்போது நீங்கள் ஒருவனையும் கொல்ல உங்களால் முடியவில்லையே, உங்களுக்கு வெட்கமுமே வருகிறதில்லையே, பின்னும் உங்களுடைய பாராட்டுதலையும் பலத்தையும் நீங்களே பார்த்து மெச்சிக்கொண்டு உங்களுடைய மூக்கை நீங்களே அறுத்துக் கொள்ளுகிறவர்களாயும், கண்களை உடைத்துக் கொள்ளுகிறவர்களாயுமிருக்கிறீர்கள், என்று சொன்னான். இந்த வார்த்தைகளை யெல்லாம் ஒரு பாவியானவன் நின்றுகொண்டு செவிகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தான். இவனோ எல்லோரிலும் வெகு பலசாலியாயும், பயில்வானுமாயிருந்தான். இவனுடைய பெயர் போலாத் (போலாத் என்பதின் அர்த்தம் எஃகு). இவனுடைய தகப்பன் தன் பலத்திலும் வரமுள்ளவனாயிருந்தான். அவனுடைய பெயர் வர்திக்கான். ஷஜீ போலாத் என்பவனுக்கு எதி

தனையோ புத்திரர்களும் புத்திரிகளும் பேரப்பிள்ளைகளு மிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அவன் சொல்லுக்கு அடங்கினவர்களாயிருந்தார்கள். பின்னும் அவர்கள் எல்லோரும் பலத்தில் வெகு பராக்கிரமசாலிகளாயும், யுத்தக்கல்வியில் தேர்ந்தவர்களாயும், தந்திரசாமர்த்தியமுள்ளவர்களாயுமிருந்தார்கள். இவனுடைய குடும்பம் வெகுபெரியதாயிருந்தது. பின்னும் இவனுக்கு சமதுங்கர்களும், ஆதரவுக்காரர்களும் மிகுதியாயிருந்தார்கள்.

இவனோ மர்வான் என்பவன் சொன்ன சொற்களைக் கேட்டுப் பட்டயத்தைத் தன் கையில் பிடித்துக்கொண்டு ஷை. மர்வான் என்பவனிடத்தில் போய் "ஓ சேனாதிபதியே! நான் சொல்லுவதை நீர்கவனமாய்க் கேளும். முஹம்மது ஹனீப்ஷா என்பவன் யுத்தகளத்தின் முன்னிற்க இன்னும் பிரயத்தனமாயிருக்கிறான். அவன் என் எதிரில் எம்மாத்திரம். நான் போய் அவனுடைய காலைப்பிடித்து உயிருடன் அவனை உம்முன் கொண்டுவருகிறேன். அப்படிநான் அவனைக்கொண்டுவந்தால் எனக்கு என்ன பிரயோஜனம் கிடைக்கும்? நீர் என்னுடைய கஷ்டத்திற்கு என்ன பதிலளிப்பீர்? எவ்வளவு பூமியும் திரவியமும் தருவீர்" என்று கேட்டான்.

அதற்கு மர்வான் என்பவன் நீ என்ன கேட்பாயோ அதை நான் உனக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன் என்று மறுமொழி சொன்னான். அப்போது ஷை. போலாது என்பவன் மர்வான் என்பவன் சொன்னதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு யுத்தத்துக்குப் புறப்பட இரணபேரிகை யடிக்கும்படி கட்டளையிட்டான். இந்த வார்த்தையை மர்வான் என்பவன் கேட்டு உடனே அவனுக்கு ஆடையாபரணங்களையும், வேண்டிய ஆயுதங்களையும் தந்தான். அதன்பின் போலாத் என்பவன் மர்வானுடைய சேனைகளை நடத்திக்கொண்டு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோடு யுத்தஞ்செய்ய யுத்தகளத்தில் வந்து நின்றான். இரணபேரிகையின் முழக்கத்தை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டவுடனே, தம்முடைய சேனையை ஆயத்தமாக்கி போர்ச்சேவகர்களை அணிவகுத்து யுத்தமைதானத்தில் நிறுத்தினார்கள். அப்போது யுத்தத்திற்கு வாருங்களென்று கூவிச் சத்தமிட்டான். இதற்குள் போலாத் என்பவன் தன்னுடைய சைனியத்தின் முன்னணியைக் கடந்து வந்து யுத்தமுனையின் முன்னின்று அடித்துக் கண்டபடி கூறினான்:— "நானே போலாது யிருக்கிறேன்.

என்னோடு யுத்தஞ்செய்ய வல்லமையுள்ளவர்கள் என் பெயர் போலாத் என்பதை முன்னாடி யறிந்துகொள்ளுங்கள். அதுவுமன்றி நான் இரண்டாவது ருஸ்தமாயிருக்கிறேன். இப்போது என்முன் எவன்வர விரும்புகிறானோ அவன் முன்னாடி வெகு நன்றாய் யோசித்து வந்து நிற்கவேண்டும். நான் என் உயிரைக் கீர்த்திக்குத் தத்தஞ்செய்துவிட்டு யுத்தமுனைக்கு வந்திருக்கிறேன். நான் என் உயிரை என் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு நிற்கிறேன்." போலாத் அகங்காரத்தோடு இவ்வாறு கூறிக்கொண்டிருக்கையில் முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சேனையில் ஒரு பக்கத்திலிருந்து ஒரு மோமினானவர் புறப்பட்டுப் போலாதை நோக்கி, "ஓ போலாது என்பவனே, என்னுடைய பட்டயத்தின் ஓர் அடியை நீ பெற்றுக்கொள்" என்று சொல்லிக்கொண்டே தன் வாளை யுருவிக்கொண்டு அவன்மேல் பாய்ந்தார். உடனே அவன் அந்த மோமினுடைய கையைப் பிடித்து இழுத்து அவரைத் தன் தலைமேல் தூக்கிச் சுழற்றிப் பூமியின்மேல் மோதி யடித்தான். அப்படி அடிக்கவே அவர் ஷஹீதாய்ப் போனார். இதின்பின் வேறொரு மோமினானவர் அவன் எதிரில் வந்து தன் பட்டயத்தை யோங்கி அவனை யடிக்கப்போனார். இவரையும் அந்தச் சண்டாளன் அப்படியே பிடித்து அடித்தான். இவர் கீழே விழுந்து மரணமூர்ச்சை யடைந்தார். இதின்பின் வேறொரு பயில்வான் புறப்பட்டு அவன்மேல் பாய்ந்தான். போலாத் என்பவன் அந்தப் பயில்வானையுந் தூசியைப்போல உதறிவிட்டு இவரையுங் கொன்றுவிட்டான். ஆக அன்று நாற்பது பராக்கிரமசாலிகள் அவன் கையால் ஷஹீதாய் ஜன்னத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

முஹிப்காக்கா என்பவர் இச்சம்பவங்களைக் கண்டதும், அவருடைய கோபமென்ற அக்னி சுவாலித்தெரியத் தலைப்பட்டது. அவர் கண்கள் கோவைக்கனிபோல் சிவந்து கோபத்தினால் மீசை படபடவென்று துடிக்கப் பெருமூச்செறிந்துகொண்டு நமது வீரில் நாற்பது பேரைக் கொன்ற இத்துஷ்டனை யொருபோதும் உயிரோடு விடக்கூடாதென்று அவனைச் சங்கரிக்க ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் சற்று தூரத்திலிருந்து வரும் பேரிகை சத்தத்தைக் கேட்டதே முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அத்திக்கை யுற்றுநோக்கி அது ஒரு புதுச்சேனையென்று தெரிந்ததே விரோதிக்குத் துணைப் படையாய் வருஞ்சேனையோ வென்று சந்தேகமடைந்தார்கள். இப்படி

இருக்கையில் வேவுகாரன் ஒருவன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சன்னிதானத்தில் வந்து "ஓ அரசரே, அதோ வந்துகொண்டிருக்கும் சேனையைப்பற்றி தாங்கள் யாதொரு சந்தேகமும் கொள்ள வேண்டாம். இப்போது கேட்கும் பேரிகை முழக்கமும் நமது கண்களுக்குப் புலப்படும் பிரகாசம் பொருந்திய கொடியும் இப்றாஹீம் உஷ்த்தார் என்பவருடையதா யிருக்கின்றன" என்று கூறினான்.

இம்மொழிகளைக் கேட்டதே ஹனீப்ஷா அவர்கள் சந்தோஷமடைந்து இப்றாஹீம் உஷ்த்தார் என்பவரை அழைத்துக்கொண்டு வரத் தாமே எதிர்கொண்டு முன் சென்றார். இதற்கிடையில் போலாத் என்பவன் தன்மேல் யுத்தம் செய்ய ஒருவனும் வரக்காணோமென்றெண்ணித் திரும்பித் தன் சேனைக்குள் சென்று மர்வானிடம் தான் நாற்பது வீரரை வென்று வந்த சங்கதியைக் கூறினான். அதைக் கேட்ட மர்வான் அவனைப் புகழ்ந்து சந்தோஷப்படுத்தி, அதன் பின்பு அவனை நோக்கி, "ஓ போலாத்தே, ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா என்பவரோ பட்டய வீரராயிருக்கிறார். அவர் எல்லோரைவிட மேலானவராயிருக்கிறார். நீ அவருக்கு எதிர்த்து வென்றுவரச் சமபலமுள்ளவனென்றுவது எனக்குத் தோன்றவில்லை" என்று மொழிந்தான். போலாத் இதைக்கேட்டு மனத்தாங்கலும் கோபமுமடைந்து ஆகிரத்தோடு மர்வானை நோக்கி, "நான் அந்த எமன் தேசத்து அரசனை வெட்டி வருவேன். நானும் என்னுடைய புத்திரர்களும், பவுத்திரர்களும் ஆக நாங்கள் நாற்பது பேர்களும் சேர்ந்து நாளையதினம் அவ்வரசரோடு யுத்தஞ்செய்து எங்களுடைய வாட்களால் அந்த அரசனுடைய சகோதரர்கள் அனைவரையும் அகத்தியம் நிர்மூலம் செய்து ஜெயபேரிகை முழக்குவோம்" என்று ஆரவாரித்தான். இம்முடன் மர்வானிடம் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கையில் முஹம்மது ஹனீப்ஷா முதலியவர்கள் இப்றாஹீம் உஷ்த்தார் என்பவரை எதிர்கொண்டழைக்கச் சமீபித்தார்கள். இவர்கள் வருவதைக் கண்டு இப்றாஹீம் உஷ்த்தார் என்பவர் அறிந்து தம் குதிரையிலிருந்து இறங்கி நடந்துவந்து ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைக்கண்டு அவர்களின் பாதங்களின்மேல் விழுந்தார். ஹனீப்ஷா அவர்கள் அவரை அன்போடு தூக்கி தோளோடு தோளும், மார்போடு மார்பும் பொருந்தும்படி தழுவிக்கொண்டு நல்வரவு கூறினார்கள். இதின்பின் ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பற்றி சம்பாஷிக்க

நேர்ந்தபோது இருவர் கண்களினின்றும் நீர் தாரை தாரையாய் வடிந்தது. இதின்பின் ஹனீப்ஷா அவர்கள் இப்றாஹீம் உஷ்த்தார் என்பவரையும் அவர் பரிவாரத்தையும் தம்முடன் கூட்டிக்கொண்டு தாம் பாளையமிறங்கி யிருக்குமிடத்தை நோக்கி நடந்தார்கள். ஹனீப்ஷா அவர்கள் இப்றாஹீம் உஷ்த்தார் என்பவரைத் தம்முடைய கூடாரத்திற்கு அழைத்துச்சென்று உபசரித்தார்கள். அப்போது சூரியன் மேற்குத் திசையில் போய் மறைந்துவிட்டான். எங்கும் இருள் மூடத் தலைப்பட்டது. பின்பு யாவரும் இராப்போஜனம் செய்ய உட்கார்ந்தார்கள். இராச்சாப்பாட்டுக்காக அன்னவிரிப்பு விரிக்கப்பட்டது. அறுசுவை யுண்டிகளும், பலவகையான பதார்த்தவகைகளும், பலகாரவகைகளும் பரிமாறப்பட்ட அப்பந்தியில் முஹம்மது ஹனீப்ஷா அவர்களும், அவர்கள் சகோதரர்களும், இப்றாஹீம் உஷ்த்தார் அவர்களும், இவர்களுடைய படைவீரர்கள் முதலிய பரிவாரங்களும் சூழ்ந்து உட்கார்ந்து போஜனம் செய்யத் தொடங்கினார்கள்.

மறுநாட்காலை இருட்படலத்தைக் கிழித்து எங்கும் வெளிச்சத்தை யுண்டாக்கக் குணதிசையில் ஆதித்தன் தன் செவந்த கிரணங்களை வீசிக்கொண்டு உதயமானான். மர்வான் என்பவன் அதிகாலையில் யுத்தத்திற்காகத் தன் சேனைகளை ஆயத்தமாய் அணிவகுத்து வியூகம் கட்டி ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களின்மேல் சமுத்திர அலைகளைப்போன்ற தன் சேனைகளைக்கொண்டு யுத்தம் செய்வதற்காக இரணகளத்தில் ஆயத்தமாய் வந்து நின்றான்.

போலாத் என்பவன் காலையில் எழுந்ததும், தன் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டும், கவசத்தையும் தன் தேகத்தின் மேல் அணிந்து கொண்டும், தன் புத்திரர்களையும், பவுத்திரர்களையும் தன்னோடு கூட்டிக் கொண்டும் மர்வான் என்பவன் முன் வந்து நின்று அவனுக்கு வந்தனஞ் செய்து அவனை நோக்கி "ஓ மர்வானே, நீர் எதற்கும் சிந்திக்கவேண்டாம். எனக்குச் செலவு கொடுத்தனுப்பும். நான் போய் யுத்தம் செய்து எதிரிகளை யதோகெதியாக்கிவிட்டு வருகிறேன்" என்றான். இதற்குள் ஹசரத்து முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய கொடியானது யுத்தகளத்தில் இளங்காற்றில் பறக்க ஆரம்பித்தது. பின்னும் ஹசரத்து முர்த்தஜா அவர்களுடைய போர்ச் சேவகர்களும் யுத்தகளத்தில் ஒரு பக்கம் அணிவகுத்து நின்றார்கள். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இப்றாஹீம் உஷ்த்தார் என்பவரையும், முஷ்டிப்காக்கா வகைகளுக்களையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு போர்முனையின் முன்போய் நின்றார்கள்.

இப்றுஹீம் உதைத்தூர் என்பவருடைய பதினொன்று வயதுள்ள குமாரராகிய ஹாரிஸ் என்பவர் செய்த யுத்தம்.

இப்றுஹீம் உதைத்தூர் என்பவருக்கு ஒரு குமாரர் இருந்தார். அவருக்கு வயது பதினொன்று. இவருடைய திருநாமமோ ஹாரிஸ். அவரோ பகைவர்களுடைய இரத்தத்தின் மேல் அபேட்சையுள்ளவரா யிருந்தார். இவருடைய சிரசின்மேல் ஆண்டவனுடைய கிருபையாகிய கிரீடம் சூட்டப்பட்டிருந்தது. உடனே இவர் அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடைய சமுகத்தில் வந்து நின்று வணக்கத்துடன் சலாம் செய்து, ஓ இஸ்லாமுடைய எஜமானரே! நான் யுத்தகளத்தில் போய் பட்டயம் வீச தாங்கள் எனக்குச் செலவு கொடுங்கள் என்று பிரார்த்தித்தார். அதற்கு ஹனீபா அவர்கள் என் இருதயப் பிரியரே, நீர் உம்முடைய பிதாவினிடம் செலவு பெற்றுக்கொள்ளும். அவர் உம்முடைய சிரசாயிருக்கிறார் என்று சொன்னார்கள்.

அப்போது ஷை இப்றுஹீம் உதைத்தூர் என்பவர் அரசருடைய வசனங்களைக் கேட்டு “ஓ உலக அரசரே! என் சிரேஷ்டரே, இந்த ஹாரிஸ் என்பவன் என்னுடைய குமாரனாயிருந்தபோதிலும் இவ்வரசருடைய பாதங்களை முத்தமிடத் தக்கவனாயிருக்கிறான். தங்கள் திருப்பாதங்களின் மேலிருந்து நான் அவனுடைய உயிரைக் குர்பான் செய்வேன். தாங்களோ தங்கள் திருவாக்கால் ஆசீர்வதித்து செலவு கொடுத்து அவனை அனுப்புங்கள்” என்று சொன்னார். பின்பு அப்பாலகனானவர் ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடைய உத்தரவையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு, ஹசரத்து அலீ அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கவசத்தைத் தன் தேகத்தில் உடுத்திக்கொண்டும், சகல ஆயுதங்களையும் தரித்துக்கொண்டும் ஆயத்தமாய்த் தம் தேசத்துப் புரவியின்மேல் ஏறி யுத்தகளத்தில் வந்து நின்று கோபங்கொண்ட ஆண் சிங்கம்போல் கர்ஜித்து எதிரிகளை நோக்கி, “ஓ மூடர்களே! புத்தியீனர்களே! தீவிரமாய் என் எதிரில் வந்து நில்லுங்கள். நான் உங்கள் நால்வரையும் உங்களின் தலைவர்களையு மிருக்கும் ஆத்மாக்களையும் விண்ணுலகில் குடியேற்றக் கங்கணம் கட்டிக்கொண்டு இதோ வந்து நிற்கிறேன்” என்று வீரவேசத்தோடு மொழிந்தார்.

அப்போது இந்த வாக்கியங்களை மர்வான் என்பவன் கேட்டு போலாதை நோக்கி, “ஓ போலாத், இதோ உன் முன்னுக்கு உன்னுடைய உபாத்தியாயர் போல் ஒருவர் வந்து நிற்கிறார். முன்னே அவருக்கு உத்தரவு சொல்” என்று சொன்னான். போலாத் இதைக் கேட்டு “ஓ மர்வானே, நான் சொல்லுவதைக் கேளும். பால்மறக்காத இந்தக் குழந்தையோ எனக்கு ஏற்றவன் அல்ல. சிறுவர்களுடன் யுத்தஞ் செய்யும்படி நீ என்னைச் சொல்லுகிறாயே நான் எவ்விதமாய் அக்குழந்தையுடன் யுத்தஞ் செய்யக்கூடும். ஆனால் நான் என்னுடைய குமாரனை அவருடன் யுத்தஞ்செய்யும்படி அனுப்பிவிக்கிறேன். அவன் அக்குழந்தையை உயிரோடு பிடித்து உன்னுடைய சமுகத்தில் கொண்டுவருவான்” என்று சொன்னான். ஷை போலாத் என்பவனுக்கு ஒரு குமாரன் இருந்தான். அவனோ வெகு பலசாலியாயிருந்தான். அப்போது அவன் அவனை ஓ ஷம்ஷாத் என்று அவனுடைய பெயரால் கூப்பிட்டான். உடனே அவன் வெகு பயபக்தியோடு தன் பிதாவினிடம் மிக்க சீக்கிரமாய் வந்தான். போலாத் அவனைப் பார்த்து “ஓ என் மகனே, நீ யுத்தகளத்துக்குப் போய் அதோ முன் அணியில் நின்று நம்மை யுத்தத்திற்குக் கூவியழைக்கும் அப்பாலகனை உயிரோடு பிடித்துக்கொண்டுவா” வென்று சொன்னான். இதை அவன் கேட்டு ஆஹா நல்லது என்று சொல்லிப் புறப்பட்டான். தன் தந்தையின் கட்டளைப்படி யுத்தத்திற்குப் புறப்பட்ட ஷம்ஷாத் என்ற வாலிபன் முன் அணிக்கு வந்து அங்குச் சிங்கக்குட்டிபோல் நிற்கும் ஹாரிஸ் என்பவனுக்கு முன்னின்று “ஓ பாலகனே, இப்போது நான் உன்னைப் பிடித்துச் சுலபமாய்க் கட்டிக்கொண்டு போக வந்திருக்கிறேன். அய்யோ பாபம். நீ இன்னும் சரியாய்த் தாயின் பாலை மறவாத பாலகனாயிருக்கிறாயே, உன்னை யெப்படி அடிப்பதென்று இரக்கப்படுகிறேன். நீ பேசாமல் என்கூட வந்துவிட்டால் அடிபடாமல் தப்பித்துக் கொள்வாய்,” என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஹாரிஸ் “அடே என்னிடம் இரக்கம் காட்டுவதற்காக நான் உன்னை யழைக்கவில்லை. உன்னை யனுப்பிய உன் தந்தையின் முகத்தை மறுபடி பார்க்க உனக்குப் பிரியமிருந்தால் நீ சீக்கிரம் வந்த வழியே திரும்பி யோடிவிடு. இன்றேல் என் வாளுக்கிரையாய் விடு” என்று தன் வாளை யோங்கிக்கொண்டு அவனை நெருங்கினான்.

ஷம்ஷாத் என்பவன் ஆத்திரத்தோடு தன் வாளை வீசி ஹாரிதின் மேல் தாக்கினான். ஹாரிசு அவ்வடிக்குச் சாமர்த்தியத்தோடும் தந்திரத்தோடும் தப்பித்துக்கொண்டு தன் வாளையோங்கி அவன் மண்டை மேல் ஓர் பலத்த அடி கொடுத்தார். அந்த அடியால் அவன் மண்டை பிளந்து பூமியில் அடியற்ற மரம்போல் விழுந்து மடிந்தான். ஷம்ஷாத் இறந்ததை அவன் சகோதரனாகிய சர்சால் என்பவன் கண்டு மெய்ம்மறந்து கோபத்தோடு வந்து தன் கையில் ஈட்டியைப் பிடித்துப் பாலரான ஹாரிசு என்பவரைத் தாக்கினான். அப்போது அவர் தந்திரமாய் அந்த ஈட்டியைத் தன் கையால் பிடித்துக்கொண்டு சர்சால் என்பவன் இருதயத்தை நோக்கித் தன் ஈட்டியால் குத்தினார். அந்த ஈட்டி அவன் தேகத்தில் ஊடுருவிப் பாய, அவன் தட்சணம் ஆவியொழிந்து சவமானான். ஷம்ஷாத், சர்சால் இருவரும் மடிந்ததை யறிந்த அவர்கள் சகோதரன் அக்காஃப்ரெக்தலனுப், ஹாரிசு என்பவன் மேல் கொடிய வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று மனம்பொங்கி வெகு கோபத்தோடு குருஜு என்ற ஆயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு ஹாரிசைத் தாக்கினான். அப்போது ஷெய்கு ஹாரிசு என்பவர் அந்தக் குருஜைத் தந்திரத்தோடும் வெகு சுறுசுறுப்போடும் தட்டிவிட்டுத் தன்னைக் காப்பாற்றிக்கொண்டதோடு அந்த குருஜு என்ற ஆயுதத்தையும் கைப்பற்றிக்கொண்டார். அதன்பின் ஹாரிசு தன் வாளை யோங்கிப் பகைவனை மூன்றடி யடித்து அவன் பிராணனை விண்ணுலகிற் கனுப்பிவிட்டார். இவ்வாறு ஒருவர்பின் ஒருவராய் மூவர்மடிந்த சங்கதியைப் பர்ஹூது என்பவன் கேட்டு மிக்க துயரமடைந்து இச்சிறு பையன் இவ்வாறு மூவரைக்கொல்ல நாம் சும்மாயிருப்பது விந்தையோ. இவனை இந்த இடத்திலே தரையோடு தரையாய்த் தேய்த்து விடவேண்டுமென்று கோபாவேசமடைந்து ஹாரிசு என்னும் வாலிபன் முன்வந்து தோள் தட்டி நின்று நில்லென்று அவன் இடுப்பில் கையைப் போட்டான். உடனே இருவர்க்கும் கொடிய மல் யுத்தம் ஆரம்பமாயிற்று. பர்ஹூது என்பவன் ஹாரிசைவிட மூத்தவனாயிருந்தும் ஹாரிசை மயிரிழைகூட அசைக்க முடியவில்லை. இருவரும் தங்கள் முழுபலத்தையும் காட்டி ஒருவரை யொருவர் பின்தள்ளவும்; பூமியில் தட்டி விழுத்தவும் முயன்றார்கள். இவ்வாறு இருவரும் அரை மணிநேரம் போராடியபோது ஹாரிசு நில்லென்று ஒரு தந்திரத்தால் அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, அவன் திகைத்து

சமாளிப்பதற்குள் தன் கால்களால் அவனைக் குண்டுக்கட்டாய்க் கட்டி அடியோடு தலைக்குமேல் தூக்கிச் சுழற்றிப் பூமியில் எறிந்துவிட்டான். அவ்வாறு எறிந்ததால் பர்ஹூத் என்பவன் மூச்சு தடுமாறி தூரத்தில் போய்க் குப்புறத் தரையில் விழுந்து மூர்ச்சை யடைந்தான். அருகிலிருந்த முஹம்மதிய படைவீரர் உடனே ஓடிவந்து பர்ஹூதின் கால் கைகளைக் கட்டி அவனைச் சிறைப்பிடித்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

பர்ஹூது என்பவனுக்கு நேர்ந்த விபத்தை தைஜூர் என்பவன் கண்டு வெகு உக்கிரங்கொண்டான். தன்னுடைய சகோதரர்களின் பிரிதலால் அவனுடைய தேகமுழுவதும் நெருப்பிட்டுத் தகிப்பது போல் வேதனை யுற்றான்.

தைஜூர் என்பவன் மிக்க பருத்த பலமான தேகமுடையவன். மேலும் இவன் மிக்க கடின குணமும் முரட்டுத்தனமுமுடைய காபிராயிருந்தான். தன் சகோதரர் மடிந்ததால் மிக்க கோபாவேசமடைந்த இந்தத் தைஜூர் என்பவன் எவ்விதமாகவாயினும் நான் அந்தச் சிறுவனை எமனுக் கிரையாக்குகிறேன் என்று சபதம் செய்துகொண்டு அடியுண்ட வேங்கைபோல் வந்து ஹாரிசைத் தாக்கினான். ஹாரிசு என்பவன் சற்றும் அஞ்சாமலும் பின்னிடையாமலும் நின்று அடே அக்கிரமக்காரனே வா சீக்கிரம். நரக உலகம் உன்னையும் அழைக்கிறது. நான் அதற்கு வழிகாட்ட ஆயத்தமாயிருக்கிறேன், என்று தன் கதையால் ஓங்கியடித்தான். அவ்வடியை தைஜூர் தூசியைஉதறி விடுவதைப்போல் உதறிவிட்டான். இதன்பின் இவ்விருவரும் வாட்போர் செய்யத் தொடங்கினார்கள். பளபள வென்ற பிரகாசத்தோடு இவர்களுடைய இரண்டு வாட்களும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் சத்தமானது இரணகளத்தையே நடுங்கச் செய்தது. சுற்றிலுமுள்ள போர்வீரர்கள் இவர்களுடைய இணையற்ற வாட்போரின் திறமையைக்கண்டு மிக்க வியப்போடு புகழ்ந்துகொண்டு நின்றார்கள். இவர்கள் நெடுநேரம் ஒருவருக்கொருவர் இடங்கொடாமலும் பின் வாங்காமலும் போர்புரிந்துகொண்டிருந்தார்கள். தைஜூர் என்பவன் தம்மோடு வெகுநேரமாய் நின்ற நிலையாய் யுத்தம் செய்துகொண்டேயிருக்கிறான் என்பதை ஷெய்கு ஹாரிசு என்பவர் சிந்தித்து இவனோடு நாம் இன்னும் போராடுவதோ வென்று தன் குருவை நினைத்துத் துதித்தார். உடனே தன் குரு தனக்கு உபதேசித்திருந்த ஒரு வச

ஜாலம் அவர் சிரசிற்கு வந்தது. உடனே யவன் அதை யுபயோகித்து வைதஜுனருடைய கத்தியைத் தட்டிவிட்டு ஒரு வீச்சால் அவனை யமபுரத்திற் கனுப்பிவிட்டான்.

தன்னுடைய குமாரர்கள் நாசமாய்ப் போனதை இவர்களின் பிதாவாகிய போலாத் என்பவன் அறிந்து அப்போது வெகு வியாகூலமும் அடைந்தான். அவனொரு பலத்தில் வெகு பலசாலியாயும் பராக்கிரமசாலியாயுமிருந்த ஒருவனிடம் போய் "ஓ என் சகோதரனே, என் பிராத்தனையை நீ கேள். ஒரு சிறுவயன் என்னுடைய சந்ததியார்களை நாசமாக்கிவிட்டான். இந்தப் பீடை என்தலைமேல் எங்கேயிருந்து வந்ததோ எனக்குத் தெரியாதே. அச்சிறுவனே என்னுடைய வாழ்நாளின் சந்தோஷத்தையடியோடு பறித்துவிட்டான். என்னுடைய வீட்டை நாசமாக்கிவிட்டான். ஆகையால் நான் சந்தோஷமடையும்படி நீ தாமதிக்காமல் உடனே புறப்பட்டு யுத்தகளத்துக்குப் போய் அவனை உயிரோடு பிடித்துக்கொண்டுவா" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே கூக்குரலிட்டு அவனுடன் சொன்னான்.

அந்தப் பயில்வான் இதைக்கேட்டு நெருங்கிய மரணத்தால் தூண்டப்பட்டவனாய்க் கோபத்தோடு தன் குதிரையின்மேலேறிப் புறப்பட்டு ஹனீப் என்னும் இளவரசன் முன்வந்து கர்ச்சித்து நின்று "அடே சிறுபயலே! உன் அகங்காரத்தை யடக்கி யுன்னைக் குண்டுக்கட்டாய்க் கட்டிக்கொண்டுபோக வந்திருக்கிறேன் என்பதைப் பூரணமாய் நம்பிக்கொண்டு என்முன் நில்" என்று தன் வாளையுருவிக்கொண்டு கூறினான். ஹனீபோ "அடே மூட சிகாமணியே, இங்கே வாயால் தன்னைத்தானே புகழ்ந்து கூறிக்கொள்வதில் என்ன பயன். அதற்கு இதல்ல இடம். சீக்கிரம் உன் சக்தியை நீட்டு. உனக்கு முன் வந்தவர்கள் உன் வரவிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நீயும் சீக்கிரமாய் அவர்களிடம் போய்ச்சேர்" என்று தன் வாளை யோங்கிக்கொண்டு ஆயத்தமாய் நின்றான்.

அச்சமயம் அப்பயில்வான் அவனைத் தாக்கினான். ஹனீப் தன் கேடயத்தால் அந்த அடியைத் தட்டிவிட்டுப் பதிலுக்குத்தான் அடித்தான். பயில்வானோ அந்த அடியை வேகமாய்த் தட்டிவிட்டதோடு மிக்க உக்கிரத்தோடு படபடவென்று ஒன்றின்மேலொன்றாய் மூன்றடி யடித்து ஹனீபின் புரவியை இருதுண்டாக்கிவிட்டான்.

தன் குதிரையை யிழந்த ஹனீப் சீக்கிரமாய்ப் பூமியிற் குதித்து தன் பகைவனைத் தாக்கினான். பயில்வான் மிக்க ஆத்திரத்தால் முரட்டுத்தனமாய் அடிக்கத் தொடங்கினான். ஹனீபோ எச்சரிக்கை தவிராமல் எதிரி கைசோர்ந்து சாக்கிரதை தப்பும் சமயமறிந்து ஒரு வீச்சால் அப்பயில்வான் நெற்றியில் நீண்ட காயத்தை யுண்டாக்கி விட்டான். மறுநிமிடம் அவன் கண்களில் காயத்திலிருந்து வடியும் இரத்தம் நிறைந்துவிட அவன் கண் தெரியாமல் ஒரு கையால் கண்களைத் துடைக்க நேர்ந்தது. அச்சமயம் ஹனீப் ஒரே வீச்சில் அவனுடைய சிரம் துண்டித்துப்போய் தூரத்தில் விழும்படி இருதுண்டாய் வெட்டிவிட்டான்.

அப்போது அவ்விளவரசரானவர் ஆனந்தத்தோடு கெர்ஜித்து ஜெயபேரிகை முழக்கினார். மலாயக்குகள் வானங்களிலிருந்து மர்ஹபா லஃமர் ஹபா வென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். தனக்கு நேர்ந்த துன்பங்களை நினைத்து போலாத் என்பவன் பெருமூச்சிட்டு உடனே எழுந்து தன் வலது இடது பக்கங்களில் திரும்பிப்பார்த்தான். அப்போது தம்முடைய குடும்பத்தாரில் ஒருவனும் தம்மிடம் இல்லாமலிருந்ததைக் கண்டு பின்னும் துக்கப்பட்டான். ஏனெனில் ஷை ஹனீப் என்பவரோ அவனுடைய குடும்பத்தார் எல்லோரையும் நாசமாக்கிவிட்டார். ஆகையால் அவன் இருதயத்தில் நெருப்புப்பற்றி யெரிந்துகொண்டிருந்தது. ஷை இளவரசரானவருடைய கையால் அப்பாவியின் சுற்றத்தார் ஐம்பத்தைந்து பேர்கள் மாண்டு போனார்கள். பின்பு ஷை போலாத் என்பவன் தன்னுடைய கெதி இவ்விதமாய்ப் போய்விட்டதைக் கண்டு கோபத்தோடு தன் உதடுகளையும் கைகளையும் பற்களால் கடிக்கத் தொடங்கினான். பின்பு அவன் அய்யோ இப்போது என் முறை வந்திருக்கிறதே என்று மனதில் சொல்லிக்கொண்டு துக்கத்தோடு தன்னை யுத்த உடுப்புகளால் சிங்காரித்துக் குதிரையின்மேல் ஏறி அவ்விளவரசன் முன்சென்று நின்று கோபத்தால் மீசை படபட வென்று துடிக்கப் பற்களை நெறநெற வென்று கடித்துக் கண்களில் நெருப்புப்பொரி பறக்க "ஓ இளைஞனே, நீ என்னுடைய வீட்டாரையும், என் சந்ததியாரையும் நாசமாக்கினாய். நானே போலாதா யிருக்கிறேன். நான் வர்தாறு வென்று பிரக்யாதி பெற்ற தாயுடைய குமாரன். நானே இக்கால ருஸ்த்துமா யிருக்கிறேன். விரல்பிடியில் பிளைக நசுக்குவதைப்போல நான் இரும்பையும்

நசுக்குகிற வல்லமையுடையவன். நீ இப்போது என் கையால் தப்பி உயிரோடு திரும்பிப் போய் உன் தாய் தந்தையரைக் காணமுடியாது. இப்போதே அவர்களாசையையும் இந்தத் துனியாவில் நீ அநுபவிக்கலாமென்றெண்ணியிருக்கும் சுகபோகங்களின் ஆசையையும் மறந்துவிடு. உன் வாழ்நாளின் முடிவு வந்துவிட்டது" என்று சொன்னான். இந்த வார்த்தைகளை எல்லாம் ஷை இளவரசரான ஹாரிது என்பவர் கேட்டு "நீ இரும்பை பிளைப்போல் விரல் பிடியால் நசுக்குகிறவனாயிருப்பது நிஜம். நிஜமே நிஜம். இவ்விதமாய் நானென்ற கர்வம் பாராட்டுகிறவனும் சீக்கிரம் மாண்டுபோவதும் நிஜமே. சந்தேகமில்லை. நீ உன் நாமதேயம் முதலியவற்றைக் கூறியதுபோல் நானும் கூறி விடுகிறேன் கேள். என் நாமமோ ஹாரிதா யிருக்கிறது. என் பிதாவானவர் இப்றாஹீம் உதுத்தாரா யிருக்கிறார். எனக்கு இரவும் பகலும் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உதவியும் ஒத்தாசையு மிருக்கின்றது. நான் என் கால்களைக் கொண்டு எருமை பிளைப்போலப் பொடியாக்குவேன்" என்று சொன்னார். இந்த வார்த்தைகளை ஷை போலாத் என்பவன் கேட்டு வெகு கோபத்தோடு அக்கினிப்பொறியைப்போலாய் ஷை ஹாரிது என்பவர்மேல் தன் பட்டயத்தை யோங்கி வீசினான். அவ்வடியை அவர் தன் கேடகத்தின்மேல் தாங்கிக்கொண்டார். ஆனால் அவ்வடியோ அவருடைய கேடகத்தை அறுத்து அவர் தோளின்மேல் பட்டு அவரைக் காயப்படுத்திவிட்டது.

அவ்விளவரசரானவர் காயப்பட்டுப் போனதை ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் கண்டு ஆண்டவன் சந்நிதியில் கெஞ்சிக் கதறி தன் கைகளை எடுத்து ஓ என் ஆண்டவனே, ஓ இரட்சகனே என் கண்மணியாகிய ஹாரிது என்பவனை நீ உன்னுடைய அடைக்கலத்தில் வைப்பாயாக வென்றும், ஓ பரிசுத்த ஜப்பாரே அந்தப்பாவி அவர்மேல் ஜெயமடையாமல் இருக்கும்படி நீ அவருக்குத் துணை செய்வாயாக வென்றும் துஆ செய்தார்கள். பின்னும் அவ்விளவரசருடைய பிதாவாகிய இப்றாஹீம் உதுத்தார் என்பவர் தன் பிள்ளையாகிய ஹாரிது என்பவரைச் சத்தமிட்டுக் கூப்பிட்டு ஓ என் கண்மணியே, இப்போது நீ பின் சென்று வந்து விடு என்று சொன்னார். இதை ஹாரிது கேட்டு "ஓ என் இரு கண்க ளொளியானவரே, இந்தப் பகையாளியோ வெகு கடினமானவனும் பலத்தவனு மிருக்கிறான். ஆயினும் இப்போது நான் இப்பேர்ப்பட்ட பலசாலிக்கு முதுகு காட்டுவது சரி அல்ல. வெட்கமே அன்றி வீரியமல்ல. இவனுடனே நான் யுத்தம் செய்வது எனக்கு உத்தமமாயிருக்கிறது. இவன் சிறுவனாகிய என்னைச் செயிப்பதால் இவனுக்குப் புகழ்ச்சி யொன்றுமில்லை. இவனிடம் தோல்வியடைவதால் எனக்கு இகழ்ச்சியில்லை. ஆனால் என்னிடம் இவன் தோற்றால் இவனுக்கு எவ்வளவு இகழ்ச்சி யென்பதையும், இவனைச் செயித்தால் எனக்கு எவ்வளவு புகழென்பதையும் தயவுசெய்து சிந்தித்துப்பாரும். உமக்குந் தெரியாதது ஒன்றுமில்லை. ஆனால் புத்திரவாஞ்சையால் அப்படிக் கூறிவிட்டீர். இகழ்ச்சி கொண்டுவரும் அறுபது வயது புத்திரனை விட புகழ்ச்சியைக் கொண்டுவரும் பன்னிரண்டு வயது புத்திரனிருப்பது மேலென்பது தாங்களறிந்ததே. பின்னும் ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய புத்திரராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காக நான் என் உயிரைக் கொடுப்பது எனக்கு வெகு நன்மையாயிருக்கிறது. பின்னும் நான் ஷஹீதாய்ப்போய் அவர்கள் சந்நிதியில் போய் நிற்பது எனக்கு வெகு பாக்கியமாயிருக்கிறது" என்று சொன்னான். மறு நிமிடம்போலாத் என்பவன் தன் குதிரையைப்பாயவைத்து ஹாரிதிடம் நெருங்கி அவன் மேல் ஓர் அடி அடித்தான். அவ்வடியை அவர் தாங்கிக்கொள்ளவே வேறொரு அடியை அடிக்க கை எடுத்தான். இப்படி இவன் கை எடுத்த உடனே அவனுடைய கையின் கீழ் உள்ள ஸ்தலமாகிய கவசம் விலகி தேகம் வெளியாய்த் தெரிந்தது. உடனே ஹாரிது தந்திரத்தோடு அந்த இடத்தில் தன் பட்டயத்தால் சாயப்பான ஓர் அடி அடித்தார். அவ்வடியால் அவன் தோள் வெட்டுண்டு குதிரையினின்றும் கீழே விழுந்து சற்று நேரத்தில் மரணமடைந்தான்.

ஹாரிது என்பவர் போலாது என்பவனை வென்ற பின்பு தம்முடைய பட்டயத்தைப் பளபளப்பாக வீசிக்கொண்டு எவன் என்னுடன் யுத்தஞ்செய்ய வருகிறானோ அல்லது விரும்புகிறானோ அவன் வெகு சீக்கிரமாய் வரவேண்டும். தாமதிக்கலாகாது என்று சத்தமிட்டுச் சொல்லிக்கொண்டிருந்தார். பின்னும் அவர் அங்குமிங்குமாக உலாத்திக்கொண்டும் கர்ஜித்துக்கொண்டுமிருந்தார். ஒருவனும் அவர் முன்னுக்கு வரவில்லை. அப்படி வர ஒருவனுக்கும் தைரியமும் சக்தியுமில்லாதிருந்தது. இந்த எல்லா வேடிக்கைகளை ஷைத்தானாகிய மர்வான்

என்பவர் கண்டு அவன் தன் புத்தியை இழந்து கிலேசப்பட்டுத் தன் சேனையைத் திரும்பிவிடும்படி கட்டளையிட்டான். அவ்வாறே எல்லாச் சேனையும் திரும்பிப் போய்விட்டது. அப்போது முஃழிப்வாக்கா என்பவர் ஒரு குதிரையுடன் ஹாரிசு என்பவரிடம் போய் அவரை அக்குதிரையின் மேல் ஏற்றிப் பட்டணப்பிரவேச மாப்பிள்ளையைப்போல் அவரைச் சேனைக்குள் கொண்டுவந்தார். பின்னும் எல்லாத் தளகர்த்தர்களும் படைச்சேவகர்களும் அவருடைய கழுத்தில் அருமையுடைய புஷ்பமாலைகளைப் போட்டுச் சந்தோஷத்தோடு அவருடைய தேகத்தில் சந்தனம் அத்தர் புனுகு முதலிய வாசனை திரவியங்களைப் பூசினார்கள். பின்னும் மர்ஹபா மர்ஹபா லக் மர்ஹபா வென்று சத்தத்தையும் உயர்த்தினார்கள். இதின்பின் ஷை ஹாரிசு என்பவர் அவ்வரசருடைய சந்நிதியில் போய் அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டார். பின்னும் அவர் தம்முடைய நயனங்களை அவர்களுடைய பாதங்களின்மேல் தேய்த்தார். அப்போது அவர்களோ அவரைத் தூக்கித் தன் கழுத்தோடு அணைத்துக் கட்டிக்கொண்டு அவருடைய கண்களுக்கு முத்தமிட்டார்கள். இதின்பின் எல்லாப் படைச்சேவகர்களும் தங்கள் தங்கள் கூடாரங்களில் போய் சவுக்கியத்தை யடைந்தார்கள். பின்னும் ஷை ஹாரிசு என்பவர் அவ்விதமாகவே யுத்தகளத்துக்கு நாள்தோறும் போய்க்கொண்டும், எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களை வெட்டிக்கொண்டு மிருந்தார்கள். பின்னும் ஷை மர்வான் என்பவனிடத்திலிருந்த நல்ல நல்ல கீர்த்தியான சிறந்த பகுலில்வான்கள் எல்லோரும் வெட்டப்பட்டு நாசமாய்ப் போனார்கள்.

மர்வான் என்பவன் எஜீது என்பவனுக்கு எழுதிய கடித சமாச்சாரம்.

பின்பு மர்வான் என்பவன் வெகு துக்கத்துடன் எஜீது என்பவனுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் ஓ பாக்கியவானே ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோடு யுத்தம் செய்வது உனக்கு ஏற்றதாயில்லாதிருக்கிறது. யுத்தமோ தனக்கு மிஞ்சி வெகு அதிகமாய்ப் போய்விட்டது. ஷை முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காக இப்றுஹீம் உஷுத்தர் என்பவர் தமது தேசத்திலிருந்து வந்திருக்கிறார். அவருக்கு ஒரு குமாரர் இருக்கிறார். அவரோ பாலிய பூங்காவனத்தின் புஷ்பமாயிருக்கிறார். அவருடைய முகமோ பிரகாசமுள்ள சந்திரனைப்போல இருக்கின்றது. அவருடைய வயதோ பதினாறு வயதாயிருக்கிறது. அவருடைய நாமம் ஹாரிசு என்றிருக்கிறது. அவரோ பராக்கிரமத்தில் பேர் பெற்றவராயிருக்கிறார். ஒருவரும் அவருக்கு ஈடில்லை. எதிரியில்லை. பின்னும் பலத்திலோ அவர் எல்லோரைவிட வெகு மேலானவராயிருக்கிறார். எங்கள் சேனையின் எல்லாப் பகுலில்வான்களையும் அவர் துண்டுதுண்டாக்கி நாசமாக்கினார். எல்லோரையும் தூளும் தூளியுமாக்கிவிட்டார். பின்னும் அவர் உன்னுடைய எல்லா வீரர்களோடு யுத்தம் செய்து அவர்களை எல்லோரையும் வெட்டிவிட்டார். இப்போது நீ எங்களுக்கு உதவிசெய்ய வேண்டியது மிக்க அவசியமாயும் அவசரமாயும் இருக்கிறது. இது உன்னுடைய கடமையாயிருக்கிறது. அப்போது தான் நாங்கள் அவரோடு யுத்தம் செய்வோம் என்று இந்த வக்கனைகளை எழுதி அதை மடித்து எஜீது என்பவனுக்கு அனுப்பிவித்தான். அஞ்சலக்காரன் அதை எடுத்துக்கொண்டு அதிக சீக்கிரமாய்ப் புறப்பட்டான்.

மர்வான் என்பவனுடைய கடிதத்தை அஞ்சலக்காரன் எஜீது என்பவனிடம் கொண்டுபோய்க் கொடுத்தது.

அஞ்சலக்காரன் வெகு சுறுசுறுப்பாய்ப் பயண ஸ்தலங்களைக் கடந்துகொண்டு ஷாம் தேசம் போய்ச் சேர்ந்து மர்வான் என்பவனுடைய கடிதத்தை எஜீது என்பவனிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். அப்போது ஷாம் தேசத்து அரசனாகிய எஜீது என்பவன் அக்கடிதத்தைத் தன் கையில் வாங்கி அதைத்திறந்து படிக்கத் தொடங்கினான். அதை அவன் படித்துக் கண்ணீர்விடத் தொடங்கினான். அவனுடைய கண்ணீரால் தரை எல்லாம் நனைந்துபோய்விட்டது. அவனுடைய இடுப்பு முறிந்துபோய்விட்டது. பின்னும் அவன் தன் நெஞ்சின்மேல் அடித்துக்கொள்ளத் தொடங்கினான். இப்போதோ நாம் பிழைப்பது வெகு அரிதாயும் வருத்தமாயுமிருக்கிறது என்று சொன்னான். பின்னும் அவன் தன் இராச்சியத்தையும், அரசாட்சியையும் வெறுத்து விட்டான். இதின்பின் அவன் தன் சபையார் எல்லோரைப் பார்க்கத்தொடங்கி "தீப்பொறியைப்போலாய் என்மேல் இந்த வருத்தமான காரியம் வந்து சம்பவித்திருக்கிறதே. இந்த வருத்தமான காரியத்தை நீக்கிவிடவும் எனக்கு உதவிசெய்யவும் எனக்குச் சகோ

காரணம் பக்கமில்லையே. பின்னும் எவன் இந்த வருத்தமானகாரியத்தை நீக்கி முஹம்மது ஹனீப்ஷா என்பவரை அவருடைய சகோதரர்கள் சகிதம் கொல்லுவாரோ அல்லது அவர்களை உயிரோடு பிடித்து என்னிடம் கொண்டுவருவாரோ அப்பேர்ப்பட்டவனை நான் என்னுடைய உறவோனாக்கிக் கொள்வேன். நான் அவனை என்னுடைய பிரதிக் காரியஸ்தனாக்கிக்கொள்வேன் அவன் என் பிராணனுக்குச் சமானமாயிருப்பான்," என்று சொன்னான். அப்போது அவனிடம் மூன்று பயில்வான்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனுடைய நாமம் மஷ்ஹூர், இரண்டாவது பயில்வானுடைய நாமம் ஜங்கியாகவும், அவனுடைய பட்டப்பேர் பஹறாம் என்றாகவுமிருந்தது. பின்னும் மூன்றாவது பயில்வானுடைய நாமமோ கஹாப் என்றிருந்தது. இவனே இரண்டாவது மர்வானாயிருந்தான். இந்த மூன்று பயில்வான்களும் பேதீனாயும் பாவிகளாயு மிருந்தார்கள். இவர்கள் எஜீது என்பவன் முன் வந்து நின்று "ஓ எங்கள் அரசரே, நீர் உமது உள்ளத்தை விசாரத்தில் வைத்திருக்கலாகாது. சந்தோஷமாயிருங்கள். நாங்கள் இருக்கிறவரைக்கும் தங்களுக்கு என்ன விசாரம். நாங்கள் மூவர்களும் நம்மவிடம் வேட்டைக்காரர்களா யிருக்கிறோம். சீக்கிரமாய் நீர் தங்கள் வசம் போதுமான சேனைகளைக் கொடுத் தனுப்புங்கள். நாங்கள் தங்கள் மன எண்ணத்தை வஞ்சகமின்றி முழு இருதயத்தோடு நிறைவேற்றி விடுகிறோம். நாங்கள் போய் நிர்ப்பயமாய் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய எல்லாப் புத்திரர்களையும் பிடித்துக்கொண்டு வருகிறோம். நீர் மனத்திருப்தியோடு இரும்" என்று சொல்லி ஆறுதல் செய்தார்கள். அப்போது கெடு எஜீது என்பவன் இவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு அவர்களைப் புகழ்ந்தான். இதின் பின் அவன் விலையுயர்ந்த ஆடையாபரணங்களை வரவழைத்து அவர்களுக்குக்கொடுத்து அவர்கள் மனதை யுற்சாகப்படுத்தினான். அவர்கள் வசம் ஒரு இலட்சம் போர்ச்சேவகர்களைக் கொடுத்து நீங்கள் சீக்கிரமாய்ப் புறப்பட்டுப் போங்களென்று அவர்களை அனுப்பிவித்தான். அப்போது அப்பாவிகள் சகிதமாய்ப் புறப்பட்டுச் சென்றார்கள். இந்த மூன்று பயில்வான்களும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடன் யுத்தம் செய்ய இரவும் பகலும் நடந்து சென்றார்கள். இவர்கள் கடைசியில் அவர்கள் மர்வான் என்பவன் இருக்கு மிடத்திற்கு வந்து அவன் சமுகத்தில் வந்து நின்று வந்தனம் புரிந்து "ஐயா நாங்கள் எஜீது அரசரிடமிருந்து அவர்கட்டளைப்படி தங்களுக்குத் துணைப் படையாய் வந்தோம். நாங்கள் இப்போது தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். உடனே யுத்தகளத்திற்குச் சென்று தங்கள் பகைவரோடு யுத்தம் செய்யத் தங்கள் கட்டளைக்கு எதிர்பார்த்தவர்களா யிருக்கிறோம். பகைவர்மேல் எங்கள் வல்லமையைக்காட்ட மிக்க ஆவலுள்ளவர்களா யிருக்கிறோம். நாங்கள் எவ்விதமாய் முஹம்மது ஹனீப்ஷாவின் சைனியத்தை பதமாக்குகிறோமென்பதைத் தாங்கள் கண்ணாரக் காணும்படி செய்ய விரும்புகிறோம். பின்னும் ஹசரத்து மௌலா அலியின் புத்திரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை பேரையும் நாங்கள் உயிரோடு பிடித்து வந்து தங்கள் சமுகத்தில் ஒப்புவிக்கிறோம்" என்று கூறினார்கள்.

அவர்கள் மொழிகளைக் கேட்ட மர்வான் என்பவன் மிக்க மகிழ்ச்சியடைந்து தைரியத்தோடு கூடாரத்தை விட்டு வெளியே வந்து எல்லோரையும் கூட்டிக்கொண்டு இரணகளத்திற்குப் புறப்பட்டான்.

இதற்கிடையில் மர்வான் என்பவன் யுத்தத்துக்குப்புறப்பட்டான் என்ற சமாச்சாரத்தை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேள்விப்பட்டு உடனே இரண பேரிகை முழங்கச் செய்து தமது சைனியத்தை யுத்தாலங்கிருதம் செய்து அணிவகுத்து யுத்தமுனைக்குப் புறப்படச் செய்தார். இஸ்லாமான சேனைமுழுதும் ஆண்டவனுக்குத் துவா செய்து வீராவேசத்தோடும், வீரசிங்கமாகிய ஹசரத் முஹம்மது ஹனீப்ஷா அவர்களால் நடத்தப்பட்டு நாம் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கையோடும் யுத்தகளம் சேர்ந்து வியூகங் கட்டி நின்றன. இருதரத்து சேனைகளும் யுத்தசன்னத்தராய் இரணகளத்தில் ஒருவர் முன் ஒருவர் எதிர்நோக்கி நின்றார்கள்.

முஹீப்காக்கா என்பவருடைய ஒன்பது வயதுள்ள பிள்ளையின் வீரத்தன்மை.

ஹசரத் ஹனீப்ஷா அவர்களுடைய சேனை இரணகளத்தில் வந்து நின்றதே எதிரியின் சேனையிலிருந்து ஒருவன் முன் அணியில் வந்து நின்று யுத்தத்திற்கு ஆரம்பம் செய்யுங்கள் என்று அறை கூவினான், ஓ நண்பர்களே, இந்த யுத்தத்தில் முஹீப்காக்கா என்பவருடைய புத்திரராகிய காக்கா முஹீப் என்பவரின் வீரியத்தையும் பராக்கிரமத்தை

யும் வளையுங்கள். இந்த பாலசிங்கமோ வெகு வீரதீரமுடையவர். இவருடைய இருதயத்தில் பயம் என்பதற்கு எள்ளளவும் இடம் கிடையாது. இவர் நல்ல உயர்குடியிற் பிறந்தவர். இவர் பிராயத்தில் குறைந்தவராயினும் பராக்கிரமத்திலும் தைரியத்திலும் சவுரியத் தன்மையிலும் குறைவில்லாதவரா யிருந்தார்.

இவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சன்னிதானத்தில் வந்து ஷம்ஷாது என்ற செடியைப்போல் நின்றுகொண்டு அவர்களுடைய பாதங்களின்மேல் விழுந்து முத்தமிட்டார். இவருடைய வயதோ ஒன்பது வருடம். இவருடைய நாமம் தன் பிதாவின் நாமத்தோடு பொருந்தியதாயிருந்தது. அதாவது காக்காமுஷீப். இவருடைய திருவாயிலிருந்து பால்மணம் மாறாதிருந்தது. இவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைநோக்கி "ஓ எங்கள் எல்லோரின் இரட்சகரே! சக்கிரவர்த்தியே! யுத்தகளத்தில் யுத்தம் செய்யவேண்டுமென்ற அபேட்சை எனக்கு இருக்கின்றது. ஆகையால் தாங்கள் தயவுசெய்து அவ்விடம்போகவேண்டியதற்கு அடியேனுக்கு அனுமதி யளிக்க பிரார்த்திக்கிறேன்" என்று வெகு தாழ்மையுடன் வேண்டிக்கொண்டார். அப்போது அவர்கள் "ஓ பாலசிங்கமே! நீர் உம்முடைய பிதாவினிடம் செலவு பெற்றுக்கொள்ளும்" என்றுசொன்னார்கள். அதை அவர்கேட்டு தம்முடைய பிதாவின் சமுகத்தில் போய் ஒழுக்கத்துடன் நின்று "ஓ என் பிதாவானவரே! தாங்களோ என்னுடைய இருலோகத்தின் இப்வானாயிருக்கிறீர்கள். பகையாளிகளிடம் யுத்தம் செய்வதற்காகத் தாங்கள் எனக்கு அனுமதி தரவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். வீரராகிய ஒவ்வொருவரும் யுத்தம் செய்து தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றியதோடு அழியாப் புகழையு மடைந்தார்கள். இப்போதே என்னுடைய முறை வந்திருக்கின்றது. ஹாரிஸ் என்பவரும் யுத்தம் செய்துதம்முடையமுறையையும்கடமையையும்நிறைவேற்றிக்கொண்டார். என்னுடைய முறையோ இன்றைக்கு வந்திருக்கின்றது. பின்னும் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காக நான் என்னுடைய பிராணனைத் தத்தம் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்.

தம்முடைய அருமையான புத்திரனுடைய வீரமொழிகளைக் கேட்ட தந்தையான முஷீப்காக்கா என்பவர் ஹனீப்ஷா அரசனிடம்

போய் செலவு பெற்றுக்கொள்ள தன் குமாரர் சகிதம் புறப்பட்டார். அவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகத்தின் முன் நின்று "ஓ இருலோக அரசரானவரே, என் கண்மணியும் என் இருதய கண்டமுமான காக்காமுஷீப் என்பவன் யுத்தகளத்துக்குப் போக செலவு கேட்கிறான். ஆகையால் தாங்கள் தயவுசெய்து இப்போது அவனுக்கு அந்தக் கௌரவ பதவியை யளிக்க வேண்டுகிறேன். அவன் யுத்தத்தின் கஷ்டங்களுக்கும், ஆபத்துகளுக்கும் அஞ்சாதவனாய் மரணத்திற்குத் துணிந்தவனாயிருக்கிறான்" என்று சொன்னார்.

இவ்வசனங்களைச் செவியுற்ற ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா ஆச்சரியப்பட்டு புன்சிரிப்போடு முஷீப்காக்காவை நோக்கி, "இவரோ இன்னும் சிறுபிராய முள்ளவராயும், குழந்தையாயுமிருக்கிறார். இக்காலம்வரை எந்த யுத்தத்திலும் பழகினவரல்லவே. இத்தகைய சிறுபிராயமுள்ள பிள்ளையை, எவ்விதமாய் யுத்தத்துக்கு நான் அனுப்பக்கூடும். ஆனால் இவர் வீரதீரத்திலும், துணிகரத்திலும், வயது வந்தவர்களுக்குச் சமமாகவே யிருக்கிறார் என்பதில் சற்றும் ஐயமில்லை. மேலும் இவர் தன் இன்னுயிரைத் தந்தையாகிய உமதுபாதங்களில் காணிக்கையாய் வைத்துவிட்டிருக்கிறார்," என்று கூறினார். ஹனீப்ஷா அவர்களுடைய அவ்வார்த்தைகளைக் கேட்ட முஷீப்காக்கா அவரை நோக்கி வணக்கத்தோடு "ஓ என் அரசரே, நானும் என்னுடைய சகோதரர்களும் பந்துக்களும் பிள்ளைகளும் தங்கள் திருப்பாதங்களின் மேல் உயிரைக் காணிக்கையாய் வைத்திருக்கிறோம். பின்னும் தங்களுடைய பாதங்களின் பாக்கியத்தால் ஷஹீதாய்ப் போய் சதாக்காலம் பிஹிஷ்த்தில் இருப்போமாக. எப்போது ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், சந்திர சூரியர்களும், ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் இத்துன்யாவை விட்டுப் போய்விட்டார்களோ அப்போதே நாங்களும் இத்துன்யாவின் இச்சையை வெறுத்துவிட்டோம். ஓ என் அரசரேறே, தாங்கள் தங்களுடைய திருக்கையை என் கண்மணியான புதல்வன் சிரசின் மேல் வைத்து அவனை ஆசீர்வதித்து யுத்தத்திற்குச் செல்லும்படி செலவு கொடுத்து அனுப்பும்படி பிரார்த்திக்கிறேன். தங்கள் ஆசீர்வாத பலத்தால் என் மதலையுடைய வேடிக்கையைப் பார்ப்பீர்களாக வென்று சொன்னார். பகைவரைச் செயித்து வெற்றிமாலையைக் கொண்டுவந்து தங்கள் திருப்பாதங்களில் சூட்டத் தடையிராது" என்றார்.

அதன்மேல் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அச்சிறுவரை அழைத்து அவர் தலைமேல் தம்முடைய திருக்கையை வைத்து "உமக்கு ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய துணை இருக்கின்றது. ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் உம்மைச் சுகமாக வைப்பாராக. பகையாளிகளை நாசமாக்குவார்களாக. ஆண்டவன் உம்மைக்காப்பாற்றுகிறவனாயிருப்பானாக" வென்று ஆசீர்வதித்துப் பின்பு இன்னா பத்ஹனாவின் சூரத்தை ஓதி அவர் மேல் ஊதி ஒரு பட்டாக்கத்தியையும், ஒரு வில்லையும், ஐந்து அம்புகளையும் அவருக்குத் தந்து, ஆண்டவன்மேல் பாரம் போட்டுப் போகும்படி அவருக்குச் செலவு கொடுத்தனுப்பினார்கள்.

அப்போது ஷை காக்காமுஹ்ஷீப் என்பவர் அவர்களுக்குக் குனிந்து சலாம் செய்து வெகு சுறுசுறுப்பான குதிரையின் மேல் ஏறி சேனையை விட்டு யுத்தகளத்தின் முன் அணிக்குச் சென்று யுத்தசன்னத்தராய் வீரசிங்கம்போல் நின்றார். மலாயக்குகளோ வானத்தின் மேலிருந்து இந்த அதிசய வேடிக்கையைப் பார்த்து ஆண்டவனுடைய தஸ்பீஹை விட்டு இவரோ வெகு சிறுகுழந்தையாயிருக்கிறார். இவர் எல்லோரை விட்டுவிட்டுத் தனிமையாய் யுத்தகளத்தில் யுத்தம் செய்ய வேண்டியதற்காக வந்திருக்கிறார், என்று சொல்லி இவர் விஷயமாய் ஆண்டவனிடம் துஆ செய்து அல்ஹம்து ஓதினார்கள். பின்னும் அவர்கள் வானத்தில் அல்லாஹுத் தஆலாவின் ரஹுமத்துடைய வாசல்களை அவருக்காகத் திறந்துவிட்டு மர்ஹபா மர்ஹபா குல்மர்ஹபா என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இதின்பின் அப்பால் சிங்கமாகிய காக்காமுஹ்ஷீப் என்பவர் யுத்தகளத்தில் ஜெயசூரராய் நின்று எதிர்நிற்கும் பகைவரை நோக்கி, "ஓ ஜனக்கூட்டத்தார்களே! ஓ லஜீனா என்பவனுடைய கூட்டத்தார்களே! உங்களில் எவனுக்காவது என்னுடன் யுத்தம் செய்யப் பிரியமிருந்தால் அவன் முன்னுக்கு வரலாம். நானோ முஹ்ஷீப்காக்கா அவர்களுடைய புத்திரனாகிய இளஞ்சிங்கமாயிருக்கிறேன். என்னுடைய நாமம் காக்காமுஹ்ஷீப். நான் வயதில் சிறு குழந்தையாயிருந்தாலும் உங்களில் பராக்கிரமசாலிகளின் உபாத்தியானாயிருக்கிறேன். நான் உங்களை ஒரு நிமிஷத்துக்குள் நாசமாக்க வேண்டியே யிங்கு வந்திருக்கிறேன். நான் உங்களை நாசமாக்குவேன் என்று என் மனதில் பூரண நம்பிக்கை யிருக்கிறது. என்னோடு யுத்தஞ் செய்ய வல்லமையுள்ள ஆண் சிங்கம் எவனாவதிருந்தால் சீக்கிரமாய் வெளியில் வரட்டும்" என்று கோபாவேசத்தோடு மொழிந்தார். இம்மொழிகளைக் கேட்ட சுஹாப் என்ற வீரன் ஜங்கி என்பவனைப் பார்த்து, "ஓ என் சகோதரனே, நீ எழுந்து உடனே போய் இந்தச் சிறுபிள்ளையை உயிரோடு பிடித்துக்கொண்டுவா. தாமதஞ் செய்யாதே" என்று கட்டளையிட்டான். இதை அந்த அபாக்கியன் கேட்டு உடனே எழுந்து தன் குதிரையின் மேல் ஏறி அல்வந்து என்ற மலையைப்போல் காக்காமுஹ்ஷீபின் எதிரில் சென்று நின்று, இடலென்று அவருடைய மடியில் கையைப்போட்டு அவரை யடியோடு தூக்கிவிட முயன்றான். அப்போது அவ்விளவரசரானவர் அந்த ஷைத்தான தன் இடுப்பில் போட்டிருந்த சங்கிலியைப்பிடித்து அவனை இழுக்கத் தொடங்கினார். இப்படி இவரும் அவனும் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்கள். இத்தருணத்தில் அவ்விளவரசரானவர் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மனதில் துதிசெய்து அவனை அவாந்தரமாய்த் தூக்கிக்கொண்டார். அவனைத் தன் தலைக்குமேல் சுழற்றிப் பூமியின்மேல் எறிய வேண்டுமென்று கருதினார். ஆனால் அந்த ஜங்கியென்பவன் ஒரு யானையின் சவத்தைப்போல வெகு பாரமுள்ளவனாயிருந்ததால் ஒன்பது வயதுள்ள சிறுவரான அவரா லப்படிச் செய்யமுடியவில்லை. ஆகையாலவர் அவனைப் பூமியில் ஓங்கியடித்தார். அப்போது அவன் பூமியின் மேல் விழுந்து உடனே துரிதமாய் சமாளித்துக்கொண்டு எழுந்து வெட்கமில்லாமல் குழந்தையாகிய ஷை காக்காமுஹ்ஷீப் என்பவரை மூன்றுதரம் தாக்கினான். அவர் தந்திரத்தால் அவன் கையிற் சிக்காமல் தப்பித்துக்கொண்டார். அதனால் அவன் கோபப்பட்டு வெகு சுறுசுறுப்போடு தன் பட்டயத்தையோங்கி அவர்மேல் வீசினான். அவ்வடியால் அவருடைய குதிரையின் கால்கள் வெட்டப்பட்டன. ஆகையால் அவ்விளவரசரானவர் பூமியின்மேல் பக்குவமாய்க் குதித்துவிட்டார். அப்போது அந்த ஜங்கி என்பவன் அவரை வெகு சீக்கிரமாய் கொன்றுவிடலா மென்று ஆசைகொண்டு அவ்விளவரசருடைய புஜத்தைப் பிடித்து அவரைப் பூமியில்விழத் தட்டிக் கொல்ல வேண்டுமென்று எத்தனப்பட்டான்.

ஆனால் அவனுடைய எண்ணம் அவனுடைய மனதிலேயே இருந்துவிட்டதன்றி நிறைவேறவில்லை, ஏனெனில் அதற்குள் காக்கா

முஹ்ஷிப் என்பவர் அவன் எண்ணத்தை யறிந்துகொண்டு வெகு அதிகமாய்த் தன் குத்துவாளை யெடுத்து அவன் மார்பில் ஓங்கிக் குத்திவிட்டார். அதனால் அவன் மலையைப்போல் பூமியில் விழுந்து மடிந்தான். இதைக்கண்ட வானத்திலுள்ள மலாயக்குகள் காக்காமுஹ்ஷிப்மேல் பூமாரி பொழிந்து, ஜெயபேரிகை முழங்கி, மர்ஹபா மர்ஹபா குல்மர்ஹபா வென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சுஹாப் என்பவன் தன் சகோதரனுக்கு நேர்ந்த கோர மரணத்தைக் கண்டு மிக்க துயரமடைந்தான்; கோபத்தீ ஒருபுறம் அவன் மனதை யெரித்தது. அதனால் அவன் மிக்க கோபாவேசமடைந்து தன் புத்திரனை வெகு அதிகமாய் அழைத்து வரும்படி கட்டளையிட்டான். இவனுடைய குமாரன் பேர் ஜஃபறாப். அவன் ஒரு புதிய வாலிபனாயிருந்தான். பலத்திலும் வீரத்திலும் குறைவில்லாதவன். மல்யுத்தம், வாள் யுத்தங்களில் நல்ல பயிற்சி யுடையவன். அவன் தன் தந்தையின் கட்டளையைக் கேட்டதும் அதிகமாய் வந்து அவன் சமூகத்தில் நின்று நமஸ்காரம் செய்து "தந்தையே, என்னை யழைத்த காரணம் என்னவோ? கட்டளையிட்டால் அதை நிறைவேற்ற ஆயத்தமாய் இருக்கிறேன்" என்றான். தன் எதிரில் வணங்கி நிற்கும் புத்திரனை சுஹாப் என்பவன் பார்த்து, "ஓ என் மகனே, நீ அதிவிரைவாய்ச் சென்று குழந்தைக்குச் சமானமான அந்தக் காக்காமுஹ்ஷிப் என்ற சிறுவனை உயிரோடு பிடித்துக் குண்டுக்கட்டாய்க் கட்டி என்னிடம் கொண்டுவா. அப்படிக்கில்லையேல் அவனுடைய சவத்தையேனும் கொண்டுவா" என்று கூறினான். தன் தந்தை மொழிகளைக்கேட்ட ஜஃபறாப் என்பவன் காக்காமுஹ்ஷிபைத் தன் வாளாயுதத்தால் இரு துண்டாய் வெட்டிவிடவேண்டும் என்கிற பேராவலோடு அதிகமாய் ஆயுதமணிந்து யுத்தகளத்திற்கு இடமாப்போடு புறப்பட்டான்.

ஜஃபறாப் என்பவன் காக்காமுஹ்ஷிபின் எதிரில் வந்து நின்று அவருடைய பாலியத்தைப் பார்த்து, இவனைச் சுலபமாய்க் கட்டிப்பிடித்தேகலாமென்றெண்ணி கமந்து என்ற உருக்குக் கயிற்றைக் கைசாதித்தியத்தால் அவர் கழுத்தில் போட்டான். பாலசிங்கமாகிய காக்காமுஹ்ஷிபோ யுத்தக்கல்வியில் தேர்ந்தவராயிருந்ததால் வெகு தந்திரமாய் அச்சுருக்கு தன் கழுத்தில் விழாதபடி தட்டிவிட்டுச் சுருக்கப்பாய்த் தன்னிடமிருந்த சுருக்கை யவன் கழுத்தில் குறிபார்த்து வீசினர். அது தவறாமல் அவன் கழுத்தில் மாட்டிக்கொண்ட

போது அவர் அவனைத் தன் பக்கமாயிழுத்தார். அப்போது அவன் முரண் செய்ததால் கழுத்து ஒடிந்து பூமியில் விழுந்து மடிந்தான்.

இதின்பின் தன் சகோதரனும் மகனும் ஜஹன்னம் போய்ச் சேர்ந்ததை சுஹாப் என்பவன் கண்டு தனக்குண்டான பெருந்துக்கமனைத்தும் கோபமாய் மாறி காலனைப்போல் வந்திருக்கும் அச்சிறுபயலை மிக்க சீக்கிரமே கொன்றுவிட்டு மறுவேலை பார்ப்பதே காரியம் என்று ஆத்திரத்தோடு ஆயுதமணிந்து புறப்பட்டு யுத்தகளத்திற்கு வந்து காக்காமுஹ்ஷிப் முன்னின்று, கண்களில் தீப்பொறி பறக்க அவரை நோக்கி "அடே சிறுபயலே, எப்படியோ ஏமாற்றி என் சுற்றத்தாரைக் கொன்ற உன்னை யிதோ ஒரு நொடியில் விண்ணுலகிற் கனுப்புகிறேன் பார்" என்று தன் வில்லை வளைத்து குணத்தொனி செய்து ஒரு கூர்மையான அம்பை அந்தப் பாலசிங்கத்தின்மேல் எய்தான். காக்காமுஹ்ஷிப் அவன் எய்த அம்பைக் தன் கரத்தால் பிடித்துக்கொண்டு பூமியில் அலட்சியமாய் எறிந்துவிட்டுப் பதிலுக்குத் தன் வில்லில் ஓர் கணையைப் பூட்டி விட்டார். சற்றுநேரம் இருவரும் சரமாரியாய் ஒருவர்மேலொருவர் அம்புகளைப் பொழிந்துகொண்டார்கள். காக்காமுஹ்ஷிப்பிடமிருந்த அம்புகள் செலவழிந்து மீதியாய் ஒரே அம்பு இருக்கும்போது அவர் தன்மேல் வரும் அம்புகளையே பிடித்துப்பிடித்து மறுபடி தன் வில்லில் பூட்டி சுஹாப் என்பவன்மேல் விட ஆரம்பித்தார். இவ்வாறு இருவரும் சற்றுநேரம் சண்டையிட்டபோது காக்காமுஹ்ஷிப் தன்னிடமிருந்த மீதியான வடித்த கணையைக் கையிலெடுத்து யா மௌலா அலி என்றும், யா அலி என்றும் சொல்லி துவா செய்துகொண்டு சுஹாப் என்பவனுடைய இருதயத்திற்கு இலக்கு வைத்து அம்பைக் காதளவும் இழுத்துப் பிரயோகித்தார். அந்த அம்பானது வில்லினின்று விடுபட்டதும் சிவ்வென்று ரீங்காரமிட்டுக்கொண்டு மின்னல்போல் பறந்துபோய், (நல்லோர்சொல்லும் புத்திமதிகள் அற்பருடைய ஒரு செவியிற் புகுந்து மறுசெவியில் வெளியே போய்விடுவதுபோல்) சுஹாப் என்பவன் மார்பில் நுழைந்து முதுகின் புறமாய் ஊடுருவிப்போய்விட்டது. உடனே சுஹாப் அடியற்ற மரம் தரையில் விழுந்து தன் சகோதரன் புத்திரன் முதலியோர் சென்ற ஜஹன்னத்திற்குப்போய்ச் சேர்ந்தான்.

இவ்வாறு அஹ்மாப் என்பவனும் ஷக்கி என்பவனும் மடிந்து போனதை யறிந்த பஹுறும் என்பவன் மிக்க கோபவேசமடைந்து தன் கூர்மையான ஈட்டியைக் கையிலேந்தி காக்காமுஹீப் என்ற பாலசிங்கத்தின் முன் வந்து நின்று கோபமிகுதியால் வாய் பேசக்கூடாதவனாய் மிக்க ஆத்திரத்தோடு அவரை போங்கிக் குத்த முயன்றான். அவரோ அவ்வீட்டியைக் கொசுவைத் தட்டினது போலத் தட்டிவிட்டார். தன்னுடைய அடி அவர்மேல் படவில்லையே என்று கண்ட பஹுறும் இன்னும் அதிகமாக கோபமடைந்து குருஜு என்ற ஆயுதத்தைக்கொண்டு அவர் தலைமேல் அடித்தான். அவ்வடியையும் அவர் தந்திரத்தோடு விலக்கிக்கொண்டார். அதனால் அந்த குருஜு என்ற ஆயுதம் பூமியின்மேல் போய் விழுந்துவிட்டது. அப்போது அவன் தீவிரமாய்த் தன் உடைவாளை யுருவினான். ஆனால் பாலசிங்கம் அச்சமயம் பார்த்து அவன் வாளை யோங்குமுன் தன் உடைவாளால் அவனை இருதுண்டாக்கிவிட்டார். இதைக்கண்ட மனாபக்குகள் மர்ஹபா மர்ஹபா லக் மர்ஹபா என்று அப்பாலசிங்கத்தை வாழ்த்தினார்கள். இஸ்லாமானவர்களோ அருது ஓதிக்கொண்டிருந்தார்கள். இப்படித் தன்னைச் சேர்ந்தவர்கள் மாண்டு போனதை சன்று என்பவன் கண்டறிந்து பெருமூச்சிட்டு இந்தப் பச்சைக்குழந்தை இவர்களை எல்லாம் கொன்றுபோட்டானே என்று அடங்காக் கோபங் கொண்டவனாய் வீரவேசத்தோடு ஆயுதமணிந்து புறப்பட்டு யுத்தகளத்துக்குச் சென்று பால சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் காக்காமுஹீப் முன்னின்று புயத்தைத்தட்டி அவரோடு மல்யுத்தம் செய்யத் தொடங்கினான். இருவரும் ஒருவரை யொருவர் புயத்தால் தாக்கியும், மார்போடு மார்பைப் பிடித்து மோதியும், ஒருவரை யொருவர் பூமியின் விழத் தட்டவேண்டுமென்று தங்களால் கூடிய சாமர்த்தியங்களை யெல்லாம் உபயோகித்துப் பார்த்தார்கள். இவ்வாறு யுத்தம் செய்துகொண்டிருக்கையில் காக்காமுஹீப் சமயம் பார்த்து தன் முழு பலத்தையும் பிரயோகித்து பஹில்வானாகிய சன்று என்பவனைத் தன் முதுகின்மேல் தூக்கிக்கொண்டார். இதற்குள் அவன் பயப்பட்டு தன் முழுபலத்தைக் கொண்டு அவர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான். பின்பு அந்த சன்றுவானவன் அவ்விளைய [illegible] இரண்டு புஜங்களையும் பிடித்து [illegible] கீழே விழத் தட்டி அவருடைய நெஞ்சின்மேல் ஏறுவதற்காகச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். இதற்குள் அவரும்சமயம்பார்த்து அவனுடைய நெஞ்சின்மேல் ஓர் உதை உதைத்தார். அதனால் அவன் பூமியின்மேல் மல்லாந்து விழுந்தான். உடனே இவரெழுந்து அவனுடைய நெஞ்சின் மேல் ஏறிக்கொண்டார். அப்போது அவன் தன் கையால் அவர் மேல் ஓர் குத்து குத்தினான். அவர் அதனால் துன்புற்று சமாளிப்பதற்குள் அவன் பூமியிலிருந்து எழுந்து அக்குழந்தையின் பக்கம் கூர்மையான பார்வையால் பார்க்கத் தொடங்கினான். இதை ஹசரத்து முஹம்மது ஹனீபஷா அவர்கள் கண்டு உடனே முன்வந்து நின்றார்.

பஹில்வானாகிய ஷை. சன்று என்பவன் அவ்வரசரைக் கண்ட உடன் பூனை பதுங்குவதைப்போல் பதுங்கிக்கொண்டு சேனைக்குள் ஓடிப்போய் விட்டான். இதின்பின் அவ்வரசானவர் அப்பாலசிங்கத்தைத் தம்முடன் கூட்டிக்கொண்டு தம்முடைய சேனைக்குள் கொண்டு வந்து விட்டார்கள். இதின்பின் முஹீப்காக்கா என்பவர் வந்து தன் பாலகரைக் கண்டு அவரைத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

இவ்வாறு தன் படைத்தலைவர் மாண்டு தன் பலம் குன்றி விட்டதைக்கண்ட மர்வான் என்பவன் தன் சேனையைத் திருப்பிக்கொண்டு இரணகளத்தை விட்டுச் சென்றான். அப்போது எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் எல்லாம் தங்கள் தங்கள் ஸ்தலங்களுக்குத் திரும்பினார்கள். சன்று என்பவன் மர்வான் என்பவனிடத்தில் அரை யுயிராய்வந்து நின்று "ஓ என் நண்பரே! தனித்தனியாய் யுத்தம் செய்வது நன்மையல்ல. நல்லதல்ல. எல்லோரும் ஒன்றாகக்கூடி ஒரே மொத்தமாகத் தங்கள் தங்கள் குதிரைகளோடு முஹம்மது ஹனீபஷா வகையறாக்களின் மேல் பாய்ந்து அவர்களோடு யுத்தம் செய்யவேண்டும். அப்படிக்கு இல்லாவிட்டால் எங்கள் சேனை யெல்லாம் மாண்டு போகும். நாங்கள் ஜெயமடையமாட்டோம்" என்று சொன்னான். மர்வான் என்பவன் இதைக் கேட்டு ஓ பஹில்வானே இவ்விதமாகவே நான் காரியம் செய்கிறேன். நீ இருப்பிடமாயிரு என்று அவனுக்குச் சொல்லி ஆடையாபரணங்களைத் தந்து அவனைச் சந்தோஷமா யனுப்பினான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் இருதரத்தாருடைய சேனைகள் ஆயத்தமாய் யுத்தத்துக்காக யுத்தகளத்தில் வந்துநின்று கொண்டன. பின்பு அப்துல்லா என்பவனும், உத்பா என்பவனும் ஆக இவ்விருவர்களும் சேர்ந்து தம்முடைய சேனையையும் அவன்

தரித்து யுத்தத்திற்காக மைதானத்திற் கொண்டு வந்தார்கள். சல்த்தான் அவர்களும் தம்முடைய ஸகோதரர்கள் சகிதமாய் யுத்த களத்தில் வந்து நின்றார்கள். முஹீப்காக்கா என்பவர் ஒரு பக்கத்திலும், உமர் அலி என்பவர் வேறொரு பக்கத்திலும் இப்றாஹீம் உதுத்தார் என்பவர் மற்றொரு பக்கத்திலுமாக நின்றுகொண்டு எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களின்மேல் யுத்தம் செய்தார்கள். இருதரத்தாருடைய சேனைகள் ஒரே ஒரு முச்சோடும் பாய்தலோடும் யுத்தம் செய்யத் தொடங்கின. ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்கும் சத்தமும், வீரர்கள் கர்ச்சனைசெய்து கொக்கரிக்கும் சத்தமும், வீராவேசத்தோடு கூச்சலிடும் சத்தமும், புரவிகள் கனைக்கும் சத்தமும், யானைகள் வீறிடும் சத்தமும், காயப்பட்டு விழுவோர் கோஷ்டமிடும் சத்தமுங் கூடி ஆகாயமெங்கும் நிறைந்து அண்டகடாகங்களும் அதிரச் செய்தன. பின்னும் ஹஸரத்து முஹம்மது ஹனீபது அவர்கள் ஒருபக்கம் நின்றுகொண்டு யுத்தம் செய்தார்கள். அப்போது ஆண்டவனுடைய உக்கிரம் பூமியின்மேலிருந்தது. பின்னும் உமர் அலி என்பவரும், ஆபில் அலி என்பவரும், காலிப் அலி என்பவரும் ஆக இம்மூவர்களும் ஒரு மனதாய் சேர்ந்து ஒரு பக்கத்திலிருந்த யானைக்கூட்டங்களின்மேல் சிங்கங்கள் போல் விழுந்தார்கள். இவர்கள் முழங்காற் படியிட்டு உட்கார்ந்து ஒரே ஒரு வெட்டில் யானையுடைய முன்பின்னுள்ள கால்களையும், துதிக்கைகளையும் வெட்டிக்கொண்டிருந்தார்கள். பின்னும் முஹீப்க்காக்கா என்பவர் தமது கண்மணியாகிய காக்காமுஹீப் என்பவரைத் தம்முடன் வைத்துக்கொண்டு உத்துபா என்பவன்மேலும் அப்துல்லா என்பவன் மேலும் யுத்தத்திற்குச் சென்றார். பின்பு இப்றாஹீம் உதுத்தார் என்பவர் தம்முடைய பாலகராகிய ஹாரிசு என்பவரைத் தம்முடன் வைத்துக்கொண்டு சன்று என்பவனோடு போர்புரியப் புறப்பட்டார்கள்.

சன்று என்பவன் உதுத்தார் என்பவரைக் கண்டவுடனே வெகு சீக்கிரமாய் அவர்முன் வந்து நின்று அவரைநோக்கி "உதுத்தார் என்பவரே, நீர் இன்றைக்கு எங்கே போவீர்; என் கையிலிருந்து எப்படித் தப்புவீர்? உம்முடைய மரணம் உம்மை இவ்விடம் இழுத்துக்கொண்டு வந்திருக்கின்றது" என்று அகம்காரத்தோடு கூறி "ஓ படைச்சேவகர்களே! ஓ படைத்தலைவர்களே! நாலாப்பக்கமும் இவனைப் பத்திரமாய் சூழ்ந்துகொள்ளுங்கள். இவனை ஒருபோதும் விட்டு விடாதேயுங்கள். இவனைக் கொன்றுவிடுங்கள் அல்லது பிடித்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னான். அப்போது உடனே படைச்சேவகர்கள் எல்லோரும் சேர்ந்து அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அத்தருணத்தில் உதுத்தார் என்பவர் நின்ற நிலையில் ஸ்திரமாய் நின்றுகொண்டிருந்தார். தன் பிதாவிற்கு வந்திருக்கிற இந்த விபத்தையும் அவர் எஜீது என்பவனுடைய சேனை கூட்டத்துக்குள் மின்னலைப்போல் நின்றிருப்பதையும் அவர் பிள்ளையாகிய ஹாரிசு என்பவர் கண்டு "ஓ என் பிதாவே, உம்முடைய பணிவிடைக்காரனாகிய நான் இதோ நிற்கிறேன். ஆண்டவன் தங்களைப் பாதுகாக்கிறவனும், தங்களுக்கு உதவிக்காரனுமாயிருக்கிறான்," என்று சந்தத்தோடு சொன்னார். அப்போது எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் எல்லோரும் ஹாரிசு என்பவரைக் கண்டவுடனே ஓட்டம் பிடித்தார்கள். இதினின் பிதாவானவர் தன் பிள்ளையைக் கண்டு சந்தோஷப்பட்டார். இதற்குள் செடு சன்று என்பவன் ஹாரிசு என்பவருக்கு முன்வந்து நின்று அவரை எதிர்த்தான். அவரோ அவனை ஒரே வெட்டில் வெட்டிவிட்டார். உமர் அலி என்பவர் தன் கையில் பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு யானைகளின் கூட்டத்தில் நின்று அவைகளை வெட்டிக்கொண்டிருந்தார். காலிப் அலி என்பவரோ அவருடைய முதுகின் பின் நின்று அவைகளை வெட்டிக்கொண்டிருந்தார். அளவற்ற யானைகளை அவர் வெட்டிவெட்டி நாசமாக்கினார். அவைகளைக் குப்பல் கும்பலாக விழுத்தட்டினார். இவ்விதமாக யானைகள் எல்லாம் நாசமாய்ப் போனதையும் அவை எல்லாம் அடியைப் பொறுக்காமல் தங்கள் துதிக்கைகளைத் தலைமேல் தூக்கிக்கொண்டு வீறிட்டலறச் சத்தமிட்டுக்கொண்டு ஓடிப் போவதையும் மர்வான் என்பவன் கண்டு தலைகுனிந்து துக்கித்துக் கொண்டிருந்தான். பின்னும் அவன் சற்று நேரத்துக்குப் பின் தலையை எடுத்துப் பார்த்தான். அப்போது உமர் அலி என்பவர் தனிமையாய் நின்றுகொண்டு அடிமேல் அடியாக அடித்துக் கொண்டிருப்பதையும் கண்டான். அவன் உடனே தன்னுடன் யானைகளின் கூட்டத்தை வளைத்துக்கொண்டு அவர் முன்னுக்கு வந்துநின்றான். மைதானமோ யானைகளால் நெருங்கப்பட்டு இருந்தது. அத்தருணத்தில் காலிப் அலி என்பவர் தன் சகோதரராகிய உமர் அலி என்பவரை விட்டுப் பிரிந்து போய் வேறொரு பக்கம் நின்று யானைகளை வெட்டிக்கொண்டிருந்தார். பின்னும் உமர் அலி என்பவர் யானைகளின் வட்டாரத்துக்குள் அகப்

பட்டுப் போயிருந்தார். அச்சமயம் அவர் வெளியில்வந்துவிட அவருக்குப் பாதை யில்லாதிருந்தது. அவர் என்ன பிரயத்தனஞ் செய்தும் வெளியே வர அவரால் கூடவில்லை. யானைகள் அவருடைய அடிக்குப் பயந்து அவரைப் பிடித்துக்கொள்ள சக்தியற்றவைகளா யிருந்தன. ஆனால் மர்வான் என்பவனுடைய யானையோ வெகு அழகுள்ளதாயும், மெத்த மதமேறினதாயும், எல்லா யானைகளையும்விட பிரத்தியேகமான வகையுள்ளதாயு மிருந்தது. இந்த யானைப்பாகனுக்கு மர்வான் என்பவன் வெகு அதிகமான ஆடையாபரணங்களைக் கொடுத்து அவனைச் சந்தோஷப்படுத்தி, நீ வெகு சீக்கிரமாய் உன் யானையைக் கொண்டுபோய் அவர்மேல் துதிக்கையைப் போடப்பண்ணி அவரைப்பிடித்துக்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான். அவன் இதைக் கேட்டவுடனே உலக ஆசையால் தன் யானையை அவர்மேல் நடத்தினான். மதமேறிப் போயிருந்த அவ்யானையோ வெகு சீக்கிரமாய் வந்து அவரைப் பிடித்துக்கொள்ளத் தன் துதிக்கையை அவர்மேல் போட்டது. அப்போது உமர் அலி என்பவர் அவ்யானையைக் கண்டு அதின்முன் சென்று துதிக்கையைப் பட்டயத்தால் துணித்து விட்டார்.

உமர் அலி அவர்கள் சிறையாக்கப்பட்டது.

இதை மர்வான் என்பவன் கண்டு ஆச்சரியப்பட்டு பெருமூச்சிட்டழுகவும், அய்யய்யோ வென்று அக்கசத்தங்களைச் சப்திக்கவுந் தொடங்கினான். பின்னும் அவர் இப்பேர்ப்பட்ட யானையையுங்கூட விடவில்லையே, அவருடைய கையால் அது தப்பவுமில்லையே என்று கூக்குரலிட்டான். பின்னும் அவன் யானைப்பாகர்களின் பக்கந் திரும்பி ஓ யானைப்பாகர்களே வெகு சீக்கிரமாய் நீங்கள் முன்சென்று நீங்கள் எல்லோருஞ் சேர்ந்து அவர்மேல் கமந்து என்ற சுருக்குகளைப் போடுங்கள். அவரை வெகு சீக்கிரமாய்ச் சிறையாக்கிக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான். இந்தக் கட்டளையை அவர்கள் கேட்டு எல்லோரும் ஒருமிக்க அவர்மேல் ஆயிரம் ஆயிரங்களான சுருக்குகளைப் போட்டார்கள். அவரோ அச்சுருக்குகளில் மறைந்து போனார். அப்போது உமர் அலி என்பவர் அச்சுருக்குகளை அறுத்துவிட்டு அவைகளால் விடுதலைப்பெற அவரால் கூடவில்லை.

ஆகையால் அவர் அசக்தராய்ப் போனார். உடனே யானைப்பாகர்கள் அவரைப் பிடித்துக்கொண்டு வெகு சந்தோஷத்தோடும் ஆனந்தத்தோடும் மர்வான் என்பவனிடம் ஒப்பிவித்தார்கள். அவனோ என் இருதய கருத்துகளில் ஒன்று நிறைவேறப்பட்டதென்று சொல்லிக்கொண்டு அவரைச் சிறையாக்கிக்கொண்டு யானைமேல் ஏற்றிக்கொண்டான். அவன் சந்தோஷமாய் உடனே தமது சேனையைத் திருப்பிவிடும்படி பேரிகை யடிக்கக் கட்டளையிட்டான்.

மர்வான் என்பவன் யுத்தகளத்திலிருந்து திரும்பிப்போய் தன் கூடாரத்தில் இறங்கி, உமர் அலியையும் இறக்கிக்கொண்டான். இதின் பின் அரசரான ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய சேனையையுந் திருப்பிக்கொண்டு தங்கள் ஸ்தலங்களுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒவ்வொருவரும் வந்து அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சந்நிதானத்தில் குனிந்து சலாம் செய்து கொண்டும், தங்கள் தங்கள் விடுதிகளுக்குப் போய்க்கொண்டு மிருந்தார்கள். ஆனால் உமர் அலி என்பவர் வராதிருந்தார். இப்படி அவர் வராத காரணத்தைக்கொண்டு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் விசாரப்பட்டு, ஓ என் பிரியமுள்ளவர்களே, உமர் அலி என்பவர் வரக்காணோமே. உங்களுக்கு அவருடைய செய்தி யேதேனும் தெரியுமா? அவரோ என்னுடைய சகோதரராயும், ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராயும் இருக்கிறார். அவர் எங்கே போயிருக்கிறாரென்று எனக்குத் தெரியவில்லையே என்று சொன்னார்கள். அப்போது தாலிப் அலி என்பவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமூகத்தில் வந்து நின்று ஓ மெய்யானி அரசரே அவர் என்னுடன் இருந்தார். நாங்கள் இருவரும் யானைகளுடைய யுத்தத்தில் இருந்தோம். அவைகளின்மேல் சிங்கங்களைப்போல நாங்கள் பாய்ந்துகொண்டிருந்தோம். நான் அவருடைய முதுகின்பின் காவல்காரனைப்போல அவரைப் பாதுகாத்துக்கொண்டிருந்தேன். இத்தருணத்தில் மர்வான் என்பவன் மதமேறின யானைகளை எங்கள்மேல் அனுப்பிவித்தான். அப்போது அந்த மைதானமோ யானைகளால் நெருக்கப்பட்டது. ஆகலால் நான் அவரைவிட்டுப் பிரிந்துவிட நேர்ந்தது. அதுமுதல் நான் அவரைப் பார்க்கவில்லை. அவருக்கு என்ன

சம்பவித்ததோ அதை ஆண்டவனே அறிவான். எனக்குத் தெரியாது என்று சொன்னார்.

இதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டு மௌனமாய்ச் சற்று உட்கார்ந்திருந்தார்கள். அவர் மனம் கலக்கமடைந்திருந்தது. ஜெயத்தினால் அன்றைய தினம் அவர் மனதில் உண்டாயிருந்த சந்தோஷம் எல்லாம் மாறிப்போய் விட்டது. பின்னும் தன் சகோதரன் வாராமல் போனதின் துக்கம் அவர்கள் இருதயத்தில் வேதனையையுண்டாக்கிவிட்டது. அவ்வரசரானவர் தன் பிரதானிகளின் பக்கம் திரும்பி "ஓ என் பிரியமுள்ளவர்களே உமர் அலி என்பவருக்கு என்ன சம்பவித்திருக்கிறதென்று தெரியாததால் என் மனதில் மிக்க வியாகூலமுண்டாயிருக்கிறது. அவர் ஷஹீதாய்ப்போய் உலகத்தை விட்டுப் போய்விட்டாரோ? அல்லது எஜீதிகளிடம் சிறையாய்ப் போயிருக்கிறாரோ தெரியவில்லையே" என்று துக்கத்தோடு சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு குதிரைப்படைச்சேவகன் அவ்வரசருக்கு முன்வந்து; "ஓ ஆண்டவனுடைய இராச்சியத்தின் எஜமானனே! உமர் அலி என்பவரை நான் கண்டேன். எஜீதிகள் அவரைப் பிடித்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். அவருடைய சரீரத்தில் கமந்துகள் என்ற சுருக்குகள் அளவற்றதாய் விழுந்திருந்தன. அத்துடன் அவரை அவர்கள் யானையின்மேல் ஏற்றிக்கொண்டு போனதைக் கண்டேன். அவரோ துக்கம் நிறைந்தவராயிருந்தார். அப்போது அவ்வேளையோ எனக்குக் கியாமத்துடைய நாளாகக் காணப்பட்டது" என்று சொன்னான். இந்தச் சங்கதி ஏமன் தேசத்து அரசரானவர் கேட்டுத் துக்கம் நிறைந்தவராய் "அய்யோ அவ்வஞ்சகர்கள் அவரை உயிரோடு வைத்திருக்க மாட்டார்களே. என்ன மோசம் அவருக்கு வந்து சம்பவித்திருக்கிறதோ தெரியாதே" என்று பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள்

தோகான், மோகான் இவர்களுடைய கடிதத்தை ஒரு அஞ்சலக்காரன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்குக் கொண்டுவந்து சேர்த்ததும் உமர் அலி என்பவரைச் சிறையிலிருந்து மீட்டதும்.

இதற்குள் ஒரு குதிரைப்படைச் சேவகன் அங்கு வந்தான். அவன் பச்சை உடுப்பு உடுத்திருந்தான். அவன் தலைமேல் மகிமையின் கிரீடமிருந்தது. அவன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் முன்னுக்கு வந்துநின்று குனிந்து சலாம் செய்து, அவ்வரசருடைய விஷயத்தில் துஆ செய்து தங்கள் சத்துருக்கள் எல்லாம் அழியவேண்டும் என்று சொன்னான். அப்போது அவ்வரசரானவர் இதைக்கேட்டு ஓ மனிதா, நீ யாருடைய அஞ்சலக்காரன், விஷயத்தைச் சொல். நீ எங்களுடையவனா அல்லது பிறருடையவனா என்று கேட்டார்கள். அதை அவன்கேட்டு சதாகாலம் தங்களுக்குச் சந்தோஷம் ஆண்டவன் தருவானாக. நானே உமரே ஆமிரியுடைய சந்ததியாயிருக்கிறேன். என்னை அர்கஷ் என்ற நாமத்தோடு ஜனங்கள் அழைக்கிறார்கள். பின்னும் நான் தோகான் என்பவருடையவும், மோகான் என்பவருடையவும் ஊழியக்காரனாயிருக்கிறேன் என்று சொல்லித் தான் கொண்டுவந்திருந்த கடிதத்தை அவர்களிடம் கொடுத்து அவர்கள் சொல்லி அனுப்பிவித்த சமாசாரங்களையும் அவ்வரசர் சமுகத்தில் வெளியிட்டான்.

அவ்வரசரானவர் அவன் கொடுத்த கடிதத்தைத் திறந்து படிக்கத் தொடங்கினார்கள். அதில் தோகான் மோகான்களாகிய நாங்கள் இரு சகோதரர்களும் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின்மேல் ஆஷிக்காயிருக்கிறோம். பின்னும் நாங்கள் ஆதிமுதல் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அடியார்களாயிருக்கிறோம். அவர்களுடைய குடும்பத்தார்களின் பேரில் உயிரோடும் இருதயத்தோடும் தலத்துவாயிருக்கிறோம். எங்களிடம் படைச்சேவகர்களோ இலட்சத்தி பதினாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கண்ணிய சமுகத்தின் பாதங்களின் மேல் தங்கள் உயிர்களைத் தத்தம் செய்தவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் எஜீது என்பவனுடைய அநேக போர்ச்சேவகர்களை வெட்டி நிர்மூலமாக்கினதை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். துன்யாவில் ஆண்டவன் தங்களைக் காப்பாற்றுகிறவனாயிருக்கிறான். அவனே உங்களுக்குத் துணையாயிருக்கிறான். பின்னும் தங்களுடைய ஜெயத்தின் நக்காருக்கள் வானங்களின்மேல் தொனிக்கின்றன. தாங்களோ தெய்வசிங்கமாகிய ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குடும்பத்தின் பேரைப் பிரகாசிக்கப் பண்ணினீர்கள். இப்போது தாங்கள் தங்கள் மனதில் எவ்விதமான பாரமும் துக்கமும் வைக்கலாகாது. அடிமைகளாகிய நாங்கள் ஊழியம் செய்ய இப்போது

தங்கள் அன்னிய சமூகத்தில் வந்து சேர்ந்திருக்கிறோம். தாங்கள் எங்கள் மேல் கிருபையும் கடாட்சமும் வைக்கவேண்டும்" என்று இவ் வித வசனம் எழுதப்பட்டிருந்தது.

இதை அரசராகிய ஹசரத்து முகம்மது ஹனீப்பா, அவர்கள் படித்துத் துயரப்பட்டார்கள். அப்போது அந்த அஞ்சலக்காரராகிய அர்கஷ் என்பவன் "ஓ அரசரேறே! வானத்திலிருந்து நக்ஷத்திரங்கள் உதிர்வதுபோலத் தங்கள் திருநயனங்களிலிருந்து கண்ணீராகிய முத்துகள் உதிர்வதின் காரணமென்ன, அடியேனுக்குச் சொல்லுங்கள், நானும் சமுகத்திலிருக்கிறேன்" என்று வெகு தாழ்மையோடு கேட்டுக்கொண்டார். அப்போது ஹசரத்து முகம்மது ஹனீப்பா அவர்கள் "ஓ என் பிரியமுள்ள அன்பரே, சமாச்சாரத்தை நான் சொல்லுகிறேன் நீர் நன்றாய்ச் செவிகொடுத்துக் கேளும். நேற்றைய தினம் ஒரு பெரிய இரத்தப்பழியான யுத்தம் எஜீது என்பவனுடைய படைச் சேவகர்களோடு நடந்தது. அந்த யுத்தத்தில் நாங்கள் எதிரியின் சேனையைக் கீழ்மேலுமாக்கினோம். அடி அடி என்று வெட்டிக்கொண்டிருந்தோம். அப்போது இரத்தவெள்ளம் ஓடிக்கொண்டிருக்கும் அந்த யுத்தத்தில் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரரும், என் சகோதரருமான உமர் அலி என்பவர் சிறையாக்கப்பட்டார். அந்தப் பரிசுத்த தேகத்தின்மேல் எஜீதிகள் என்ன செய்திருக்கிறார்களோ தெரியவில்லை. அவர் சுகமாயிருக்கிறாரோ அல்லது வருத்தத்தில் இருக்கிறாரோ தெரியாது. ஆகையால் இக்காரணத்தால் என்னுடைய மனம் வியாகுலமடைகின்றது. நேற்று முதல் என் மனதுக்குச் சந்தோஷமில்லை" என்று சொன்னார்கள். இதை அஞ்சலக்காரராகிய அர்கஷ் என்பவர் கேட்டு, "ஓ சக்கிரவர்த்தியானவரே! தாங்கள் துக்கிக்கலாகாது. தாங்கள் தங்கள் மனதைச் சந்தோஷத்தோடு வைத்திருங்கள். நான் தங்களுடைய மனக்கருத்தை நிறைவேற்றிவிடுகிறேன். பின்னும் நான் தங்களுடைய சகோதரரை ஆண்டவன் கிருபையால் தங்களிடம் ஒரு நிமிஷத்துக்குள் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறேன். யுத்தகளத்தின் குழப்பத்தையும், இரைச்சலையும் தங்களுக்கு நான் காட்டுவேன். அப்போது தாங்கள் சந்தோஷத்தால் அத்துக்கத்தை மறந்துவிடுவீர்கள்" என்று சொல்லிப் பின்பு அவர் விசித்திர வகையாய்ப் பழம் புசிக்கும் பதார்த்தங்களை வரவழைத்து ஹசரத்து முகம்மது ஹனீப்பா அவர்களுக்குப் புசிப்பித்தார். அவர்களும்

அவருடைய தாட்சணியத்துக்காகச் சாப்பிட்டார்கள். அவர்கள் மனமும் கொஞ்சம் உல்லாசமடைந்தது. இதின்பின் ஷெ. அர்கஷ் என்பவர் அவ்வரசனிடம் செலவு பெற்றுக்கொண்டு உமர் அலி அவர்களைக் கொண்டுவர உடனே புறப்பட்டுப் போய்விட்டார்.

அவர் மாறுவேட மணிந்து எஜீதுகளிருக்கு மிடத்திற்குள் புகுந்துவிட்டார். அவர் அவ்விடம் போய் சேர்ந்தபோது அங்கு அப்துல்லா என்பவன் குதிரையின்மேல் ஏறியிருப்பதையும், உத்பா என்பவன் சந்தோஷமாய் அங்கும் இங்கும் திரிந்துகொண்டிருப்பதையும், சேனைகள் தண்டுத்தண்டாய் நின்றுகொண்டிருப்பதையும், வேடிக்கை பார்க்க ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்ப் போய்க்கொண்டிருப்பதையும், வெகு உயரமான ஒருவிடத்தில் தூக்குமரம் கொண்டுபோய் நாட்டப்பட்டிருப்பதையும், அதின் கயிறுகள் இழுத்துக்கட்டியிருப்பதையும் பார்த்தார். அவர் உடனே ஏதோ விபரீதம் நடக்கப்போகிறதென்று தெரிந்துகொண்டார். தூக்கு மரத்திற்கும், உமர் அலி அவர்களுக்கும் சம்பந்த மிருப்பதாய் அவர் மனதிற்பட்டது. அவர் ஒருவிடத்தில் மேடைமேல் மர்வான் உட்கார்ந்திருப்பதையும், அவனைச் சூழ்ந்து பல பஹில்வான்கள் நிற்பதையும் கண்டார். அந்தவிடத்திற்கு எதிர்பக்கம் தூக்குமரத்தின் ஓரமாய் நிற்கும் ஜனக்கூட்டத்தில் கலந்துகொண்டு தானும் வேடிக்கை பார்க்கவந்தவர்போல் முன் அணியில் ஜாக்கிரதையோடு நின்றார். அச்சமயம் மர்வான் என்பவன் கெட்டிக்காரர்களான பத்து பஹில்வான்களை விளித்து உமர் அலி என்பவரை அவர் இருக்கும் இடத்திலிருந்து தூக்கிக்கொண்டு தூக்குமர மிருக்கு மிடத்திற்குக் கொண்டுபோங்கள் என்று கட்டளையிட்டான். ஷெ.பஹில்வான்களில் ஒருவனைவிட ஒருவன் அதிக பலசாலியாக இருந்தான். இவர்கள் உமர் அலி என்பவரைத் தூக்கிக்கொண்டுபோக அவரிருக்கு மிடத்திற்குச் சென்றார்கள். அப்போது அப்பஹில்வான்கள் வெகு பலசாலிகளாயிருக்கிறார்களென்று உமர் அலி அவர்கள் அறிந்து ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நினைத்து ஹசரத்து இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமியை இழுத்துப் பிடித்துக்கொண்டதைப்போல் பூமியை இழுத்துப் பிடித்துக்கொண்டார். அப்போது உமர் அலி என்பவரை மர்வானிடம் கொண்டுபோக அப்பத்து பஹில்வான்களும் வந்து தூக்கினார்கள். இவர்களில் ஒருவனுடைய பலமும் அவர்மேல் செல்லவில்லை. உமர் அலி என்பவர்

தன் ஸ்தலத்தைவிட்டு நகரவேயில்லை. அப்பஹ்லிவான்களும் அவரைத் தங்களால் கூடியமட்டும் தூக்க முயன்று ஓய்ந்து போனார்கள்.

எவருக்கு ஹமசரத்து மௌலா அலீ அவர்களுடைய துணையுண்டோ அப்பேர்ப்பட்டவர்மேல் எவனுடைய பலம் செல்லும்? அங்கு நடக்கும் இச்சங்கதிகளையெல்லாம் அந்த அஞ்சலக்காரராகிய அர்கஷ் என்பவர் அறிந்து இதுவே நேர்த்தியான தருணமாயிருக்கிறதென்று எண்ணி, மர்வான் என்பவனிடம் வெகு துரிதத்தோடு போய், தம்முடைய பலத்தையும், வீரியத்தையும் அவனுக்குக்காட்டி, இந்த பத்து பஹ்லிவான்கள் அந்தச் சிங்கத்தின் எதிரில் நரியைப்போலாய் விட்டார்கள். அந்த பராக்கிரமசாலியானவரோ தம்முடைய ஸ்தலத்திலிருந்து கொஞ்சங்கூட நகரவில்லை. இவர் ஒருவர் அவர்கள் எல்லோரையும் அசக்தராக்கிவிட்டார். நீர் எனக்கு உத்தரவு கொடுப்பீரானால் நான் தனியாகவே அவரிடம் போய் அவரைப் பிடித்துத் தங்கள் முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறேன். அப்போது நீர் சந்தோஷப்பட்டு எனக்கு என்ன பிரதிபலனை யளிப்பீர் என்று கேட்டார். இதைக் கேட்ட மர்வான் என்பவன் சந்தோஷமடைந்து அர்கஷ் என்பவரை நோக்கி, “மட்டும் அவரை யிங்குக் கொண்டுவந்து விட்டால் உனக்குவேண்டிய ஏராளமான திரவியமும் காணியாட்சியும் தருவேன் என்று பெரிய ஆசைவார்த்தைகள் கூறி சீக்கிரமாய்ப்போய் அவரைத் தூக்கிக்கொண்டு வாரும்” என்று சொன்னான்.

அப்போது அர்கஷ் தன் மனதில் சந்தோஷப்பட்டு பஹ்லிவான்கள் இருக்குமிடம் சென்று இடுப்பைக்கட்டி நீங்கள் எல்லோரும் விலகிப்போங்கள். உமர் அலீ என்பவரைத் தம்மிடம் கொண்டுவரும்படி மர்வான் என்பவர் எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார் என்று சொல்லவே, அந்தப் பஹ்லிவான்கள் எல்லோரும் இவன் ஒண்டியானவன், எவ்விதமாய் அவரைக் கொண்டு வருவான் என்று வெகு ஆச்சரியப்பட்டுக் கொண்டே எல்லோரும் விலகிப் போனார்கள். அப்போது ஷைகு அர்கஷ் என்பவர் உமர் அலீ என்பவரிடம் போய்த் தம்முடைய முழுபலத்தோடு அவர் வயிற்றுக்குள் தன் கையை நுழைத்து அவரை யடியோடு தூக்கிக்கொண்டார். இப்படித் தூக்கிக்கொள்ளவே அங்கு நின்றுகொண்டிருந்த சகலரும் ஆச்சரியமும் பிரமையுமடைந்தார்கள்.

உமர் அலீ என்பவர் திகிலடைந்து “அந்தோ! இந்தப் பகையாளி எங்கே இருந்து எனக்கு கிலியாய் வந்து சேர்ந்தான்” என்று தம்முடைய மனதில் எண்ணி அர்கஷை நோக்கி “ஓ விரோதியானவனே! நீ என் என்னைத் தூக்குகிறாய். நீ எப்படி எங்கள் குடும்பத்தின் விரோதியாயிருக்கிறாய்? உனக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம்?” என்று கேட்டார்.

இதை ஷைகு அர்கஷ் என்பவர் கேட்டுத் தாழ்ந்த குரலாய் “ஓ எஜமானனே, நான் உம்முடைய பகையாளியல்ல. ஒருபோதும் நீர் அப்படி நினைக்கவேண்டாம். நீங்கள் பயப்படவேண்டாம். இப்போது தாங்கள் சற்று நேரம்வரை பேசாமல் இருக்கவேண்டும். நான் உங்களை உங்கள் சகோதரர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். நீங்கள் பத்திரமாயிருங்கள். பதராதேயுங்கள். இன்னொரு சங்கதி நினைவிருக்கட்டும். அதாவது எப்போது நான் பறந்து விடுவேனோ, அப்போது தாங்கள் என்னுடைய தலைரோமங்களை வெகு பத்திரமாயும் கெட்டியாயும் பிடித்துக்கொள்ளவேண்டும்” என்று சொன்னார்.

இந்த வார்த்தைகளை உமர் அலீ என்பவர் கேட்டதே அவருடைய மனதில் வியப்பும் சந்தோஷமு முண்டாய்விட்டது. அவருடனே ஆண்டவனுடைய ஷுக்குர் நியிதத்தோறும் செய்தார். பின்பு ஷைகு அர்கஷ் என்பவர் அவரைத் தூக்கிக்கொண்டு மர்வான் என்பவனிடம் கொண்டுவந்து அவரைக் காட்டி “உம்முடைய உத்தரவு எனக்குக் கிடைக்குமாகில் நான் இப்போதே இவரைக் கொண்டுபோய்த் தூக்குமரத்தின் மேல் தூக்கிவிடுகிறேன்” என்று சொன்னார். அப்போது மர்வான் என்பவன் இதைக்கேட்டு சீக்கிரமாய் இவரைக் கொண்டுபோய் தாமதிக்காமல் தூக்கிவிடும் என்று சொன்னான். அர்கஷ் என்பவர் உடனே உமர் அலியைத் தூக்கிக்கொண்டு தூக்குமரத்தடியிற் சென்று அங்கிருந்தவர்களை நோக்கி “இந்த உமர் அலியைத் தூக்கிப் போடும்படி மர்வான் எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார். ஆகையால் நீங்களனைவோரும் தூரத்தில் விலகிப்போய் நின்று நடக்கும் சங்கதியை வேடிக்கை பாருங்கள்” என்றார். அதன்படியே ஜனங்கள் எல்லோரும் தூரமாய் ஒதுங்கிப் போனார்கள். சகல ஜனங்களும் ஒதுங்கிப் போனதையும் பாதை விஸ்தாரமாயிருப்பதையும் அர்கஷ் என்பவர் கண்டு சந்தோஷமடைந்து உமர் அலியைத் தூக்கிக்கொண்டே அந்தத் தூக்குமரத்தைப் பன்முறை சுற்றிக்கொண்டிருந்தார்.

இப்படி இவர் சுற்றிச்சுற்றிக்கொண்டிருப்பதை உமர் அலி என்பவர் கண்டு திகில்பட்டு கண்ணீரிட்டார். பின்னும் அவர் "இம்மனிதன் நமது சேனையிலுள்ளவனைப்போலக் காணப்படவில்லை. இவன் யாரோ நாம் முன்பின் கண்டறியோம். ஆண்டவனே இவன் உண்மையை அறிவான்" என்று தன் மனதில் விலேசப்பட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் மர்வானுடைய பரிவாரத்திலிருந்தவர்களில் ஒருவனான உத்பா என்பவன் மர்வானை நோக்கி "எஜமானே, இந்த முன்பின் அறியாத மனிதனை நம்பி அவன் வசம் நமது முக்கிய விரோதியை ஒப்பித்துவிட்டீர். அவன் செய்கைகளைப் பார்த்தால் நவீனமாயிருக்கிறது. இது ஒருசமயம் அந்தரங்கமும் சூதுமாயிருக்குமோ தெரியவில்லை" யென்று சொன்னான். அதேசமயம் அர்கஷ் என்பவர் ஆக்குமரத் தடியில் நின்று உரத்தசத்தமாய் "ஓ மர்வானே, ஓ மூடனே, நீ [illegible] சாயிருக்கிறாய். நீ என்னை அறிவாயா, நானே உம்ரே அய்யார் என்பவருடைய பேரன். ஹசரத்து அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொந்த அடியானாயிருக்கிறேன். உமர் அலியவர்களை மீட்டுக்கொண்டு போக ஆண்டவன் என்னை இவ்விடம் அனுப்பியிருக்கிறான். நான் இவரை நிச்சயமாய்க் கொண்டுவந்து தங்களிடம் சேர்ப்பிப்பேன் என்று ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் வாக்குறுதி கூறிவிட்டு வந்ததுபோல் உன் வாயில் மண்ணைப்போட்டு இதோ இவரைக்கொண்டு போகிறேன் பார்" என்று கூறியதும் உமர் அலியைத் தூக்கியபடியே ககனமார்க்கமாய்க் கிளம்பிவிட்டார்.

இம்மொழிகளைக் கேட்டு வியப்பும் கோபமுமடைந்த மர்வானும் அவன் ஆட்களும் இவர் ஆகாயத்தில் கிளம்பியதைக் கண்டதே திப்பிரமை யடைந்து கைகாலசையாது கட்ட மரங்கள்போல் நின்றுவிட்டார்கள். இவர்களுக்கு முதலில் எல்லாம் கனவுபோலிருந்தது. அவர்கள் பிரமை நீங்கி கண்களைத் துடைத்துக்கொண்டு பார்ப்பதற்குள் ஆகாயத்திற் சென்றவர்கள் நெடுந்தூரம் போய்விட்டதால் மிக்க சிறிய உருவங்களாய்க் காணப்பட்டார்கள்.

இதைக் கண்டவுடனே மர்வான் என்பவனுடைய இடிப்பு முறிந்துபோய் விட்டது. அவனுடைய தைரியமும் நாசமடைந்தது. அவன் தன் புத்தியை இழந்து நாணத்தால் தலைகுனிந்து ஆயாசக்கடலி லாழ்ந்தவனாய் தன் அருகிலுள்ளவர்களை நோக்கி "ஓ அப்துல்லா! ஓ உத்பா! நீங்கள் சீக்கிரமாய் அவர்களைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று

சத்தமிட்டான். ஓ நண்பர்களே, தொனித்து வீசும் காற்றைக் கையால் பிடிப்பது எவனால் முடியும்? எவனுக்கு அவ்வித வல்லமை இருக்கின்றது? ஒருவராலும் அப்படிச் செய்ய முடியாதே. ஷை. அர்கஷ் என்பவர் காற்றின்மேல் பறந்துபோய் விட்டதை அப்துல்லா என்பவனும், உத்பா என்பவனுங் கண்டு மனமெரிந்து அவ்விடத்திலிருந்து திரும்பினார்கள்.

அர்கஷ் என்பவரோ பறந்துவந்து ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமுகத்தில் இவர் சகோதரராகிய உமர் அலி என்பவரைக் கொண்டுவந்து சேர்த்தார். அப்போது சகோதரர்கள் சகோதரனைக் கண்ணாரக்கண்ட பின்பு எல்லோருக்கும் ஆனந்தக்கடல் பொங்கிவிடவே அவர்கள் எல்லோரும் சேர்ந்து அழுதார்கள். ஆண்டவனைப் புகழ்ந்தார்கள். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய இருதயத்தில் சந்தோஷம் நிறைந்தது. விசாரமுள்ளவர்களாயிருந்த படைச்சேவகர்கள் எல்லோரும் ஆநந்தமடைந்தார்கள். எங்கும் பலவகை வாத்திய கோஷ்டங்கள் முழங்கின.

அர்கஷ் என்பவருடைய தந்திரத்தையும் சாமர்த்தியத்தையும் கேள்விப்பட்டு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் மிக்க சந்தோஷமடைந்தார்கள். அவரை அவ்வரசரானவர் கழுத்தோடு சேர்த்து அணைத்துக்கொண்டு அன்போடு உபசரித்தார். அவரும் வெகு மரியாதையோடும் வணக்கத்தோடும் பணிந்தார். பின்பு அர்கஷ் என்பவர் அவ்வரசர் முன் நின்று ஓ சந்திரரானவரே! நான் செய்த இந்தக் காரியமானது தங்களுக்காகமட்டும் செய்யப்பட்டதல்ல ஆனால், ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்காகவும், ஹசரத்து அலி முர்த்தஜா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காகவும், ஹசரத்து பீபி பாத்திமா நாச்சியார் அவர்களுக்காகவும் செய்தேனே அன்றி வேறல்ல. நானோ ஆண்டவன் அருளைத் தேடிக்கொண்டேன். இப்போது நான் தங்களுடைய காரியத்தையும் பூர்த்தியாய் நிறைவேற்றிவிட்டேன். தாங்கள் உத்தரவு கொடுப்பீர்களானால் நான் ஆண்டவன் வழியில் தர்மம் செய்வேன் என்று சொன்னார். இதின்பின் அவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு எல்லா பக்கிரிகளையும் சேகரித்து ஆண்டவன் வழியில் தருமம் செய்தார்.

மர்வானுக்கு உதவிசெய்ய எஜீது என்பவன் சேனையை அனுப்பியிருக்கிறான் என்ற செய்தியும், அச்சேனை நாசமடைந்துபோன செய்தியும்.

முன் கூறியபடி அர்கஷ் என்பவர் தருமம் செய்துகொண்டிருக்கும் தருணத்தில் ஒருவர் காற்றைப்போலப் பறந்து வந்து ஷெ. அர்கஷ் என்பவருடைய கழுத்தை அணைந்துக்கட்டிக்கொண்டார். பின்பு இவ்விரு சகோதரர்களும் ஆண்டவனுக்கு ஷுக்குர் செய்தார்கள். இப்படிப் பறந்து வந்தவருடைய நாமம் அஹமது. பின்னும் இதற்குள் இடீரென்று ஒரு வேவுகாரன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமுகத்தில் வெகு ஒழுக்கத்துடன் வந்து நின்று குனிந்து சலாஞ்செய்து அவர்களை வாழ்த்தினான். அவன் தன் வாயைத்திறந்து எஜீது என்பவன் மர்வான் என்பவனுக்கு ஒத்தாசை செய்ய வேண்டியதற்காக இலட்ச குதிரை போர்ச்சேவகர்களையும், எண்பதினாயிரம் காலாட்படைச் சேவகர்களையும், எண்பது யானைகளையும் அனுப்பியிருக்கிறான் என்று சொன்னான். இதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டு எங்களுக்கோ ஆண்டவனுடைய உதவியும் துணையுமிருக்கின்றது, என்று சொன்னார்கள்.

இதற்குள் பொழுதுபோய் இரவு வந்தது. இந்த இரவோ எஜீது என்பவனுடைய கூட்டத்தார்களுக்கு வெகு வருத்தத்தை யுண்டாக்கும் இரவாக வந்து சம்பவித்திருந்தது. அந்த இரவில் எங்கும் காரிருள் மூடியிருந்தது. அர்கஷ் என்பவரும், அஹமது என்பவரும் ஆக இவ்விருவர்களும் சேர்ந்து ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமுகத்தில் வந்து நின்று "ஓ தெய்வவிசுவாசமானவரே, மர்வான் என்பவனுக்கு உதவிக்காக எஜீது என்பவன் நாசமான சேனைகளை அனுப்பியிருக்கிறான். அதில் அளவற்ற குதிரைகளும், யானைகளும் இருக்கின்றன. படைச்சேவகர்களும் அவர்களின் தலைவர்களுமிருக்கிறார்கள். அந்தச் சேனையோ இவ்விடத்திலிருந்து கொஞ்சதூரத்தில்தான் பாளையம் இறங்கியிருக்கின்றது. தங்களுடைய உத்தரவானால் நாங்கள் போய் அதை நாசமாக்கி விட்டுத் திரும்பி வருகிறோம்" என்று சொன்னார்கள். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இதைக்கேட்டுப் புன் சிரிப்பு கொண்டு "ஓ சகோதரர்களே, இதுவோ இராக்காலமாயும் மிக்க இருளாயுமிருக்கிறது. எதிரிகளோ

பெருந் தொகையாயிருக்கிறார்கள். இந்த இருட்டில் சென்று அவர்களை யழிக்க உங்கள் இருவர்க்கும் வல்லமையும் தைரியமு மிருக்குமாகில் நீங்கள் அப்படியே செய்யலாம். ஆண்டவன் உங்களுக்குத் துணை செய்வாராக. அல்லாஹுத்தாலா கிருபையால் நீங்கள் சவுக்கியத்தோடு மறுபடியும் திரும்பிவந்து சேர்வீர்களாக" வென்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்து செலவு கொடுத்து அனுப்பிவித்தார்கள்.

அவர்கள் இருவரும் உடனே சகல ஆயுதங்களையும் தரித்துக் கொண்டு புறப்பட்டார்கள். இவர்கள் தங்களுடைய தந்திரங்களையும், உபாயங்களையும், சாமர்த்தியங்களையும் உபயோகித்துத் தாங்கள் கோரி வந்த காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்று துணிவடைந்திருந்தார்கள். இவ்விருவர்களும் அந்தச்சேனையின் சமீபம் போகும்போது அச்சேனை முழுதும் பிரயாணத்தால் அயர்ந்து நித்திரை செய்வதைக் கண்டார்கள். பின்பு இவ்விருவர்களும் அச்சேனையின் வலது இடது ஆகிய இருபக்கங்களில் போய் நின்றுகொண்டு பெருத்த சத்தத்தோடு கூக்குரலும் இரைச்சலும் போட்டார்கள். அசந்து நன்றாய் நித்திரை செய்துகொண்டிருக்கும் அந்தப் படைவீரர் சலவாத்தோடு விழித்துக்கொண்டு ஓஹோ-ஆஹா இப்போது அபாயமும் மோசமும் வந்துசேரிட்டதே. ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனைகள் எங்கள்மேல் வந்து விழுந்துவிட்டதே. அது இராத்தாக்குதல் செய்கிறதே என்று பாவித்துக் கொண்டு அலங்கோலமாய் ஆசைக்கு எட்டிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஒவ்வொருவனும் தனக்கெதிரிலிருப்பவனை ஹனீப்ஷாவின் படைவீரன் என்று எண்ணிக் கொண்டு தங்கள் படைகளைத் தாங்களே வெட்டிக்கொள்ளவும், ஈட்டிகளால் குத்திக்கொள்ளவும் ஆரம்பித்தார்கள். அர்கஷ், அஹமது என்ற இரண்டு சகோதரர்களும் இவ்வாறு தந்திரமாய் எதிரிகள் தங்களால் தாங்களே மாளும்படி செய்துவிட்டு அந்த விட்டுப் புறப்பட்டு உடனே ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் வந்து அவர்களைக் கண்டு தாங்கள் செய்த விந்தையான தந்திர சாமர்த்தியத்தை அவர் முன் வெளியிட்டார்கள்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டு வெகு சந்தோஷப்பட்டு ஷெ. அர்கஷ் என்பவரைத் தன் நெஞ்சுடன் அணைந்து அவர் விஷயத்தில் ஆண்டவனிடம் துஆ செய்து அவர்களிருவர்க்கும்

உயர்ந்த ஆடையாபரணங்களைக் கொடுத்தார்கள். இதின்பின்பு ஷைகு அர்கத் என்பவர் அவ்வரசர் அவர்களிடம் செலவு பெற்றுக் கொண்டு தோகான் என்பவரிடம் போகப் புறப்பட்டார். அவரிடம் போய்ச் சேர்ந்ததும், அவர் தாம் போயிருந்த இடத்தில் செய்த எல்லாக் காரியங்களையும் தோகான் என்பவரிடம் சொன்னார். மறுநாள் விடிந்தவுடன் தோகான் என்பவர் சமுத்திர அலைகளைப்போலுள்ள தன் சேனையுடன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் போகப் புறப்பட்டார்.

இங்கு மர்வானுடைய உதவிக்காக வந்த எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களோ எங்கே மறுபடியும் முஹம்மது ஹனீப்ஷாவின் சேனைகள் இரவில் வந்து தங்களைத் தாக்குவார்களோ வென்று பயமடைந்ததால், அவர்களில் மடிந்துபோனவர்கள் போக மீதமிருந்தவர்கள் மர்வான் என்பவனிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் வழியில் நடந்த சமாச்சாரங்களை அப்பாவியினிடம் சொன்னார்கள். அவன் அதைக்கேட்டுத் துக்கமுள்ளவனானான். பின்பு மர்வான் என்பவன் மறுநாட்காலை தன்னுடைய எல்லாப்போர்ச்சேவகர்களுடன் சென்று ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சேனையைத் தாக்கவேண்டுமென்று தனக்கிருந்த எண்ணத்தை உத்துபா என்பவனிடம் அறிவித்தான். அதற்கு அவன் என்னுடைய மனதிலும் அவ்விதமாகவே வருகின்றது. இதுவே உத்தமம். இதுவே சரி என்று சொன்னான். இதற்குள் இரவு வந்து சேர்ந்ததால் எல்லோரும் படுத்துக்கொண்டார்கள்.

ஹனீப்ஷா அவர்களுடன் யுத்தஞ்செய்ய மர்வான் புறப்பட்ட செய்தி.

மறுநாட்காலை மர்வான் என்பவன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடன் யுத்தஞ்செய்ய குதிரையின்மேல் ஏறித் தன் சேனையுடன் யுத்தகளத்திற்குப் புறப்பட்டான். உத்துபா என்பவனும் அப்துல்லா என்பவனும் அவனுடனே இருந்தார்கள். மர்வான் என்பவன் தன் சேனைகளோடு புறப்பட்டானென்ற சமாச்சாரம் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு எட்டிற்று. அவ்வரசரானவரும் உடனே தன் சேனைகளையும் ஆயத்தமாய் யுத்தத்திற்குப் புறப்படும்படி இரணபேரிகை பறைவித்தார். இருதரத்து சேனைகளும் இரணகளத்தில் வந்து யுத்தத்திற்கு ஆயத்தமாய் அணிவகுத்து நின்றன.

மர்வான் என்பவன் ஏழு இலட்சத்தி எண்பதினாயிரம் குதிரை போர்ச்சேவகர்களையும், ஒன்பது இலக்ஷம் காலாட்படைச் சேவகர்களையும், ஏழாயிரம் யானைகளையும் வாங்கிக்கொண்டு யுத்தகளத்தில் வந்து நின்றிருந்தான். உடனே இரண்டு சேனைகளும் யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். மர்வானுடைய சேனைகள் தாக்க ஆரம்பித்ததே, சக்ரவர்த்தியான ஹனீப்ஷா தம்முடைய போர்ச்சேவகர்களை எதிரிகள் மேல் விழுந்து யுத்தம் செய்யும்படி தூண்டினார். அவர்களோ உடனே மின்னலைப்போல் பாய்ந்து இடி முழக்கத்தைப்போல் கர்ச்சித்துக் கொண்டே மர்வான் என்பவனுடைய சேனையின்மேல் விழுந்தார்கள். பின்பு இருதரத்தாருடைய சேனைகளும் ஒன்றோடொன்று கைகலந்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்துவிட்டன. சூரியவொளியில் பட்டயங்கள் பளபளவென்று மின்னின. ஆரம்பத்தில் செவ்வான மிட்டதுபோல பூமியினின்ற புழுதி மேல் கிளம்பி ஆகாசமுழுதும் தூசி பறந்து இருள் மூடியதுபோலாயிற்று. ஆயினும் சற்று நேரத்திற்குள் வாட்களும், ஈட்டிகளும், வல்லயங்களும் சிந்திய இரத்தமானது பூமியிலுள்ள புழுதியைச் செய்த சேறாக்கிவிட்டது. தலை வெட்டுண்ட கவந்தங்கள் வீராவேசத்தோடு கையிலுள்ள வாளை வீசிக்கொண்டு கர்ஜித்து முன்னுக்கு நடந்து பிறகு தரையிலிருக்கும் சவத்தில் காலிடறிக் கீழே விழுந்தன. கையறுப்புண்டவர்களும் காலறுப்புண்டவர்களும் குத்துப்பட்டு குற்றுயிரோடிருப்பவர்களும் பிரலாபிக்கும் கோரமானது கன்மனதையும் கரையச் செய்யக் கூடியதாயிருந்தது. வெட்டுப்பட்டு விழுந்த சிரங்கள் மீசை துடிக்கப் பற்களை நறநறவென்று கடித்தன. இன்றுதான் கியாமத்து நாள் வந்துவிட்டதோ வென்று நினைக்கக் கூடியதாயிருந்தது.

இதற்குள் தோகான், போகான் என்பவர்கள் தங்கள் படைத் தலைவர்களோடும், இலக்ஷத்திருபதினாயிரம் யுத்தவீரர்களுடனும் இடீரென்று மர்வான் என்பவனுடைய சேனையின் பின்பக்கமாய் வந்து அப்போர்ச்சேவகர்களின் மேல் விழுந்து அவர்களை நொறுக்கடித்து அணிகளைக் கீழும் மேலுமாய்க் கலைத்துவிட்டார்கள். அப்போது இந்த இரத்த சிந்துதலானது நாழி [illegible] அவர்களுடைய

அக்கால ஜலப்பிரளயம்போன்றதா யிருந்தது. இந்தக் கொடிய யுத்தத்தால் மைதான முழுதும் இரத்தவெள்ளமாய் விட்டது. எண்ணிறந்த சவங்கள் அந்த இரத்தத்தில் முழுதும் மறைந்து கிடந்தன. பருந்து, கழுகு, கூளி, நாய், நரி முதலியவைகளுக்கு ஒன்றும் கிடைக்காத பெருவிருந்தாயிருந்தது. குதிரைகளின் சவங்களும் வீரரின் பிரேதங்களும் ஒன்றின்மேல் ஒன்றாய் விழுந்து போர்போராய்க் குவிந்து கிடந்தன. ஜஃது என்பவனுடைய சேனையின் பெரும்பாகம் அழிந்து போயிற்று.

அப்போது ஜஃது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் பயந்து திகைத்து தங்கள் கைகளைப் பிசையத் தொடங்கினார்கள். இவ்வித ஸந்தியை உத்பா என்பவனும், அப்துல்லா என்பவனும் கண்டு இப்போது நாம் நின்றிருப்பது சரியல்லவென்று ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள். இவ்விருவர்களும் தங்கள் சேனைகளை விட்டுவிட்டு ஓடிப் போய்க்கொண்டிருப்பதை முஸைப்காக்கா என்பவர் கண்டு தம் குதிரையைத் தட்டிவிட்டு உத்பா என்பவனிடம் போய் அவனைக்கண்டு "ஓ மானம் கெட்டவனே! ஓ துர் அதிஷ்டனே! எங்கோடுகிறாய். உன் விஷயமாய் தோசக்குக்குச் சஞ்சலம் இருக்கின்றது. நீ எங்கே போகிறாய், நான் உன்னை விடேன். நான் உன்னைத் திருப்பி விடுகின்றேன். இப்போது நீ என்னுடைய கையின் ஓர் பட்டைய வெட்டை உண்பாயாக என்று சொல்லி ஹைதரி கஃறுவைச் சப்தித்து அவனை ஓர் வெட்டு வெட்டினார். உடனே அவ்வடியால் அவன் இரண்டு துண்டுகளாக விழுந்தான். உஷ்தர் என்பவர் அப்துல்லா என்பவனிடம் போய்ச் சேர்ந்து அவனைக் கண்டு ஓ அப்துல்லா என்பவனே! ஓ காபிரே! அய்யோ இப்போது நீ எங்கே போகிறாய். எங்கே போக எத்தனித்திருக்கிறாய். என் கையிலிருந்து எப்படித் தப்புவாய். வீண் நீ உன் உயிரை நசிக்கிறாய். இப்போது நீ உயிரோடு பிழைத்திருப்பதின் ஆசையை நீக்கிவிட்டு நரகம்போய்ச் சேர்ந்து அதை உன்னுடைய வாசஸ்தலமாக்கிக்கொள். பின்னும் நீ அதை செழிப்பாக்குவாயாக" என்று சொன்னார். இந்த அப்துல்லா என்பவனே ஜஃது என்பவனுடைய சேனையில் எல்லோரையும்விட பகையில் வெகு மேலானவனாயிருந்தான். உஷ்தர் என்பவர் கூறியதைக்கேட்டு அவன் கோபமடைந்து தன் ஈட்டியைக் கையில் பிடித்துக்கொண்டு வெகு சத்தத்தோடு கர்ஜித்து அவரை ஒரு குத்து குத்தினான். அவரோ அவ்வீட்டியின் அடியைத் தன் கேடகத்தின்மேல் தாங்கிக்கொண்டு தன்னைத் தப்பவைத்துக் கொண்டார். பின்பு அவர் அதே அப்துல்லா என்பவன் மேல் வெகு சீக்கிரமாயும் உக்கிரமாயும் தன் பட்டயத்தால் தாக்கினார். அந்த அடியால் அவன் குதிரையினின்று கீழே விழுந்தான். ஆனால் உடனே சமாளித்தெழுந்து தன் பட்டயத்தை உருவினான். ஆனால் ஜெயசூராகிய ஹாரிசு என்பவர் தீவிரமாய்ப் பாய்ந்து ஒரே வீச்சில் அவனை யிருதுண்டாய் வெட்டிவிட்டார். அத்துஷ்டன் உடனே ஆவிநீங்கிச் சவமாய்ப் பூமியில் விழுந்தான். அவனுடைய பிராணன் அவனுக்குச் சொந்தவீடாகிய தீவாய் நரகம் போய்ச் சேர்ந்தது. பிறகு உமர் அலி என்பவரும், தாலிப் அலி என்பவரும், ஆகில் அலி என்பவரும் சக்கிரவர்த்தியாகிய முஹம்மது ஹனீபா அவர்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். மனிதர்கள் உதிரமும், யானை குதிரை முதலிய மிருகங்களின் உதிரமும் பூமியிற் சிந்தி இரத்தவெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்தது. ஜஃது என்பவனுடைய சேனைத்தலைவர்களாகிய உத்பா என்பவனும், அப்துல்லா என்பவனும் நரகம் போய்ச் சேரவே, மர்வான் என்பவன் மிக்க அதைரியமும் திகிலும் அடைந்தான். பின்னும் தன்னுடைய சேனை எல்லாம் பாழாய்ப்போய்விட்டபடியால் தான் இனி யங்கிருப்பது ஆபத்துக்கிடமாகு மென்றெண்ணி இரணகளத்தை விட்டு ஓட்டம் பிடித்தான். தோசான் என்பவர் மர்வான் என்பவன் ஓடுவதைக் கண்டு அவன் பின் அவனை மூன்று மயில் தூரம்வரை துரத்தினார். அவன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அதிவேகமாய் ஓடிவிட்டான். ஆகையால் தோசான் என்பவர் திரும்பி சக்ரவர்த்தியாகிய ஹஸரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடைய சன்னிதானத்தில் வந்து அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டார். அப்போது முஹம்மது ஹனீபா அவர்களுக்கு ஹஸரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பேரப்பிள்ளைகளாகிய ஹஸரத்து ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு, ஹஸரத்து ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய துக்கம் ஆதாரமாய் மனதில் உதித்ததால் அவர்கள் துக்கக்கொடியை நிறுத்தினார்கள். அதைக்கண்டயாவரும் துக்கக்கடலில் அமிழ்ந்தவர்களானார்கள். பின்னும் அவ்வரசருடைய கன்னங்களின்மேல் முத்துகளைப்போல் நீர்த்துளிகள் உருண்டிழிந்தன. அவருடைய துயரத்தைக்கண்டு சகிக்க முடியாமல் வானத்திலுள்ள மலாயக்குகளும் அழத்தொடங்கினார்கள். எல்லாப் படைச்சேவகர்களும் இன்

மூழ்கிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சத்தமோ வானங்களின் அர்ஷின் மேலும் போய்ப் பரவியது.

ஹனீபா அரசரானவர் தோகான் என்பவர் மிக்க ஆயாசப்படுவதைக் கண்டு அவரைத் தூக்கித் தன் மார்போடு அணைத்து "ஓ என் சகோதரனே, நீர் சபர் செய்யும். நீர் ஹசரத்து இமாம் ஹுசைனென் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின்மேல் பாத்திஹா ஓதும்" என்று அவருக்குச் சொன்னார்கள். அவ்வாறே தோகான் என்பவர் பற்பல வகையான சமையல்களைச் செய்து பாத்திஹா ஓதி ஏழைகள், பகிர்கள் முதலிய சகலர்களுக்கும் புசிப்பளித்தார். பின்னும் ஆறுதலாக ஓதி ஹசரத்து ஹுசைனென் அவர்களுடைய பரிசுத்த ஆத்துமாக்களுக்குச் செலுத்தினார்.

மர்வான் என்பவன் முறிபட்டோடிய பின் எஜீதுக்கு யோசனை கூறுவது.

அசத்தனாகிய மர்வான் என்பவன் முறிபட்டு யுத்தகளத்தை விட்டோடி விட்டான் என்று கூறினோமல்லவா. அவன் நாணத்தால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு ஒவ்வொரு பாழான ஸ்தலங்களையும் துக்கத்துடனும் பயத்தோடும் கடந்துகொண்டு சாம் தேசத்திற்குப் போய்ச் சேர்ந்து எஜீது என்பவனுடைய சமுகத்தில் நின்றான். ஆனால் ஆயாசத்தால் அவனுக்கு வாய்திறந்து பேச முடியவில்லை. கடைசியில் பெருமூச்சோடு விக்கித்துக் கண்ணீர் விட்டுக்கொண்டே நடந்த போரின் சங்கதி யாவற்றையும் வெளியிட்டு, "ஓ என் அரசனே, கலீபாவே, எல்லாத் தேசங்களின்மேல் உம்முடைய வல்லமையும், பயங்கரமும் எந்நாளும் இருப்பதாக. நீரோ இப்போது அச்சமற்றவராய்ப் பராக்கிரமத்தோடு இருக்கும் சிங்கமாகிய ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடன் யுத்தஞ் செய்கிறீர். அவர்களுக்கும் எங்களுக்கும் வெகு கடினமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தமோ பிரளயத்தைப்போலிருந்ததென்று நாங்கள் உண்மையாய் மனதில் எண்ணவேண்டும். ஹசரத்து முஹம்மது ஹனீபாவின் சேனைகள் நாலாபக்கத்திலுமிருந்து வெகு பலத்தோடும் தீரத்தோடும் யுத்தம் செய்தார்கள். அடிமேல் அடி இரக்கமின்றி அடித்துக்கொண்டிருந்தார்கள். அதனால் எங்களுடைய எல்லாச் சேனைகளும் மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டது. இன்னும் அலீ ஹசரத்து மௌலா அலீ அவர்களுடைய குமாரரும் ஹசரத்து இமாம் ஹுசைனென் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிரதிநிதியுமாகிய ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுக்குத் அர்க்கிகளாகிய தோகான் என்பவரும், மோகான் என்பவரும் ஒரு இலட்ச சேனையுடன் வந்து உதவி செய்தார்கள். அவர்கள் எங்களுடைய சைனியத்தை யெல்லாம் கோடரிகளாலும் அம்புகளாலும் பட்டயங்களாலும் ஈட்டிகளாலும் குத்துவாள்களாலும் வெட்டியும், குத்தியும் கொன்று நாசமாக்கிவிட்டார்கள். எனக்கோ ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடன் யுத்தம் செய்யச் சற்றுவது சக்தியில்லை. சேனையுமில்லை, நானே சக்தியற்றவனாய்ப் போனேன். அந்த யுத்த சங்கதிகளைத் தங்களிடம் விவரமாய்ச் சொல்லவும் எனக்குத் திராணியில்லை என் வாயுங்கூட சக்தியற்றிருக்கிறது" என்று சொன்னான். ஷெ. எஜீது என்பவன் இந்தச் சமாச்சாரங்களையெல்லாம் கேட்டு விசாரத்தால் தலையைக் கவிழ்த்துக்கொண்டு மவுனமாயிருந்தான். பின்னும் அவனுடைய இடுப்பும் முறிந்ததுபோல் அதைரியமுள்ளவனாய் விட்டான். கோபத்தால் அவனுடைய இரத்தம் கொதித்துக்கொண்டிருந்தது. அவன் முகத்தின்மேல் இருள் மூடிக்கொண்டது. அவன் விசாரமாகிய கடலில் மூழ்கிப் போயிருந்தான். கடைசியில் அவன் தன் மனதை யொருவாறு தேற்றிக்கொண்டு, சற்றுநேரம் சிந்தித்து மர்வானைநோக்கி "என் பிரியமுள்ள மர்வானே, நான் சொல்லுவதை நீ கவனமாய்க் கேள். என் மனது திருப்தியும் சந்தோஷமு மடையும்படி முஹம்மது ஹனீபா என்பவரைப் பிடித்துக்கொள்ள நீ சூட்சமபுத்தியோடுந் தந்திரத்தோடும் ஏதேனும் ஒரு ஆலோசனை செய்வாயாக. எனக்கு ஒருபோதும் இந்தச் சத்துருவின்மேல் சற்றுவது நாட்டம் இருந்ததே இல்லை. கருமத்தின் பயனாய் இந்தக்கொள்ளி எங்கேயிருந்து முளைத்ததோ தெரியவில்லை. எங்கள் கெட்ட கருமமாகிய காற்றால் அது வேகமாய் எங்கள்மேல் வந்து பாய்ந்திருக்கின்றது" என்று சொன்னான்.

மர்வான் என்பவன் எஜீது என்பவன் கூறிய இச்சொற்களைக் கேட்டுத் தன் புத்திக்குள்ளாகத் தோற்றாமல் சற்றுநேரம் மவுனமாயிருந்தான். பின்பு அவன் சற்று ஆலோசனை செய்து, "ஓ என் அரசரே, உமக்கு உதவி செய்யும்பொருட்டு பலமான பகில்வான்களையும், உண்மையுள்ள போர்ச்சேவகர்களையும் அனுப்பும்படி நான்கு கடிதங்கள்

[illegible] அவர்களை வரவழையுங்கள். அவர்கள் போய் சந்தோஷமாய் யுத்தம் செய்யும்படி தாங்கள் அவர்களுக்கு ஆடையாபரணங்களையும் பொருளையும் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துங்கள்" என்று விடையளித்தான். இவ்வார்த்தைகளைக் கேட்ட எஜீது என்பவன் கடிதங்கள் எழுதுகிற இராயசக்காரனை அழைத்து, ஒரு கடிதம் றூம் தேசத்து அரசனாகிய கைசூம் என்பவனுக்கும், மற்றொரு கடிதம் அப்படாகையிலிருக்க வெள்ளைக்காரனுக்கும், வேறொரு கடிதம் சப்பார் தேசத்து அரசனுக்கும், பின்னுமொரு கடிதம் ஹபஷ் தேசத்து அரசனுக்கும் தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று எழுதச் சொல்லிக் கையொப்பமும் மோஹரும் வைத்து அஞ்சலக்காரர்களிடம் கொடுத்துத் துரிதமாய்ச் செல்லும்படி ஆக்ஞாபித்து அனுப்பினான். நான்கு அஞ்சலக்காரர்களும் நான்கு கடிதங்களை வாங்கிக்கொண்டு நாலாபக்கமும் போனார்கள்.

முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஹஸரத்து நபிநாயகம் அவர்களுடைய ரௌஜாவைத் தரிசிக்கப்போனதும் ஐந்து அஞ்சலக்காரர்கள் வந்து சொன்ன சங்கதியும், யுத்தங்கள் நடந்ததுமான சமாச்சாரங்கள்.

திரு-ரௌஜாவைத் தரிசித்தல்.

ஓ நண்பர்களே, ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஷாம் தேசத்திலிருந்து வந்த மர்வான் என்பவனுடைய வீரம் பொருந்திய சேனைகளை யெல்லாம் யுத்தமுனையில் நாசமாக்கி விட்டார்கள். அவர்கள்மேல் ஆண்டவனுடைய கோடானுகோடி ரஹ்மத்து உண்டாவதாக. பின்னும் அவருடைய பகைஞர்கள்மேல் அளவற்ற லஃனத்து சதாக்காலமு முண்டாவதாக. ஆமீன்.

ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ அந்த யுத்த மைதானத்தில் இரண்டுநாள் வரை இருந்தார்கள். பின்பு இவருடைய மனமோ ஹஸரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கப்ரே ஷரீபை ஜியாரத்து செய்வதில் விருப்பமுள்ளதாயிருந்தது. ஆகையால் இவர் தம்முடைய பந்துக்கள், சிநேகிதர்கள் முதலிய அனைவரையும் அழைத்துக்கொண்டு மதினமா நகரை நோக்கிப் புறப்பட்டார். ஹஸரத்து நபிநாயகம் அவர்களுடைய பிரதிநிதியாயும் பகைஞருடைய சங்காரராயும், ஹஸரத்து மௌலா அலி அவர்களுடைய உயிர்போன்றவருமான இவர் க்ஷேமமாய் அவ்விடம் போய்ச் சேர்ந்தார். அப்போது எல்லா அறபியர்களும் மதினமா நகரின் சகல பிரபுக்களும் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களை வந்து கண்டு அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டார்கள். ஹனீப்ஷா அவர்களைப் பேட்டி செய்தபின் அவர்கள் எல்லோரையும் அனுப்பிவிட்டுப் பிறகு தமக்கு மனோவியாதியை யுண்டாக்கிய ஹஸரத் இமாம் ஹுசைன் ரலி அல்லாஹு அன்ஹு அவர்களுடைய துயரத்தால் தூண்டப்பட்டு திருரௌஜாவில் போய்ச் சேர்ந்து மகிழ்ச்சி யடைந்தார்.

உலக சுவாமிநாதனுடைய பிரியரும், பாவிகளின் இரட்சகருமாகிய ஹஸரத்து றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் சோதிப்பொருந்திய ரௌஜாவின்மேல் எப்போது அவ்வசாதாரணவருடைய பார்வை விழுந்ததோ, அப்போது அவருடைய இருதயத்திற்குக் குளிர்ச்சியும், திருப்தியும், சௌக்கியமும் கிடைத்தது. அவர் ஆயாசம் நீங்கிச் சந்தோஷமுள்ளவரானார். பின்னும் அஞ்ஞான அந்தகாரத்தை யொழிக்கவெழுந்த ஞானசூரியராயும், பூச்சக்கரத்துடைய [illegible] வான சக்கரத்துடையவரும் காரணராயும், சிறப்பானவராயுமான ஹஸரத்து றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய ஜியாரத்தை மனப்பூர்த்தியுடன் அவர் பகிரங்கமாய் செய்து கொண்டிருந்தார். ஏக சிருஷ்டிகனும் அழிவற்றவனுமான ஆண்டவனுடைய பரிசுத்த றசூலானவராயும், லௌலாக்கு லிமா கலக்துல் அப்லாக்குடைய குடையானவராயும், இக்க தரிசனத்தின் சக்கிரவர்த்தியானவராயும் ஆகாயங்களில் சூரியனானவராயுமான ஹஸரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய மகிமை பொருந்திய கப்ரே ஷரீபின்மேல் தன்னை அவர் [illegible] செய்து "ஓ கௌசர் ஜலத்தைப் பருகினவரே! ஹஸரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹஸரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் தங்கள் அடைக்கலத்திலிருந்தார்களே, அவர்களில் ஹஸரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தங்கள் வீட்டாருடையபகைஞனும் பாவியுமான யஜீது என்பவன் நஞ்சுகொடுத்துக் கொன்றுவிட்டான், பின்னும் ஹஸரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய

புஷ்ப இரேகத்னதியோ பட்டயங்களால் கொரூரச் ஷஹீதாம் செய்தான். பின்பு அவன் ஹஸரத்து ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், தங்கள் வீட்டாரையும் அநீதமாய்ப் பலவந்தத்தோடு சிறையாக்கிக்கொண்டு கால்நடையாய் திமிஷ்க்கு தேசத்துக்குக் கொண்டுபோனான். இக்காரணத்தால் நான் வெகு துக்கமுள்ளவனாயிருக்கிறேன். அத்துயரத்தைச் சகிக்க என்னால் முடிகிறதில்லை. தாங்கள் தங்கள் கடாக்ஷத்தால் என்னைச் சந்தோஷமடைகிறவனாய்ச் செய்வீர்களாக. பின்னும் எஜீது என்பவனோ தங்கள் திருவீட்டாரின் ஜன்ம விரோதியாயிருக்கிறான். அவன் என் கைகளால் வெகு சீக்கிரத்தில் நாசமடையும்படி தாங்கள் எனக்குத் துணை செய்வீர்களாக. அப்போது நான் இலக்ஷ இலக்ஷ ஷுக்குர் செய்வேன். தங்கள் பாதங்களின்மேல் நான் என் முகத்தைத் தேய்ப்பேன்; என் கண்களையோ தங்கள் நஃலீன்களின்மேல் தேய்ப்பேன். அந்த துஷ்டன் நுபூவத்தின் புஷ்பவனத்துடைய செடியை அக்கிரமமாய்ப் பிடுங்கிவிட்டான். இந்தக் குடும்பத்தின் பகைஞனும், ஹஸரத்து மௌலா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குடிக்குச் சத்துருவாயும் இவன் எங்கிருந்து வந்தானோ தெரியவில்லை. இத்துஷ்டன் கர்பலாவின் வனாந்திரத்தை இரத்தமாக்கினான். தங்களுடைய பேரப்பிள்ளைகளைப் பட்டயங்களால் மடித்துவிட்டான். ஹஸரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரணத்தால் என் கண்கள் இருண்டுபோயிருக்கின்றன. உலகம் முழுமையும் எனக்கு அந்தகாரமாயிருக்கின்றது. ஓ நபிநாயகம் அவர்களே எஜீது என்பவன் மேல் நான் ஜெயம் பெறும்படி அநுக்கிரகம் செய்வீர்களாக. என்னுடைய உள்ளத்தின் புண்ணைத் தாங்கள் ஆற்றுவீர்களாக. என்னுடைய இருதயமோ அனலாய் எரிந்துகொண்டிருக்கின்றது. என் மனமோ [illegible] வருந்துகின்றது. பின்னும் ஹஸரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இல்லாமல் நான் பிழைப்பது எனக்கு நன்மையாய்த் தோன்றவில்லை. எனக்கு இப்போது உங்களுடன் மண்ணில் மறைந்துவிடுவதே நலம் என்று தோன்றுகிறது. அப்போ என் ஜீவியம் இப்போது எனக்கு வருத்தமாயும் பாரமாயு மிருக்கின்றது. இவற்றினின்றும் விடுதலை பெறத் தங்களையன்றி எனக்கு வேறெந்த மார்க்கமுமில்லை. தாங்களே எனக்கு இவ்விஷயத்தில் வழி காட்டவேண்டும். நான் எஜீதின்மேல் ஜெயம் பெறும்படி அருள்புரி

வதே என் மனப்புண்ணை யாற்றக்கூடிய பிளாஸ்திரியாகும். ஓ ஆண்டவனுடைய நபியானவரே! எனக்கு உத்தாசை செய்யுங்கள். ஜெயத்தைத் தந்தருளுங்கள். சந்தோஷமில்லாத என் மனதை இப்போது சந்தோஷிப்பியுங்கள்" என்று முஹம்மது ஹனீப்பா அவர்கள் தம்முடைய தலையையும் முகத்தையும் கண்களையும் முபாரக்கு கப்ரின் மேல் வைத்துத் தேய்த்துக்கொண்டும் அழுதுகொண்டும் உருண்டுகொண்டு மிருந்தார்கள்.

இப்படித் தேய்த்து அழுதுகொண்டிருக்கையில் ஏழு வானங்களின் தூதர்களும், எட்டு பிஹிஷ்துகளின் சொர்க்க கன்னிகளும் தூதர்களும்கூட அத்துக்கசத்தத்தைக்கேட்டு அழத்தொடங்கினார்கள். பின்னும் அவர்களுடைய துக்கத்தோடு அர்ஷும் பூமியும் அசையவும் நடுங்கவும் தொடங்கின. பின்னும்பறவைகளும் மிருகங்களும் மச்சங்களும் துக்கித்து அழுதன. பின்னும் ஹஸரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் ஓ தீவினைக்காரர்களின் இரட்சகரே, தாங்களும் கராமத்தின் அரசராகிய ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹஸரத்து மௌலா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உயிரானவராகிய ஹஸரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், மோட்ச நாயகியாகிய ஹஸரத்து பாத்திமா நாச்சியார் அவர்களும், பாக்கிரமத்தின் சிங்கமானவராகிய ஹஸரத்து மௌலா அலீ அவாகளும் ஆக தாங்கள் ஐந்து பேர்களும் நட்சத்திரத்தின் ஐந்து முத்துகளாயிருந்தீர்கள். இவர்களில் தாங்கள் மூவர்கள் முதலில் உலகத்தைவிட்டு கடந்துபோனீர்கள். பாக்கியிருந்தவர்கள் தங்களுடைய இருகண்மணிகளாயிருந்தார்கள். இவ்விருவர்களும் தீனுடைய நக்காறுவை அடித்து உங்களுடன் சேர்ந்து ஜன்னத்தில் போயிருந்துவிட்டார்கள். தாங்கள் ஐந்து பேர்களும் நிச்சயமாய் நிச்சந்தேகமாய் ஒன்று சேர்ந்து போய் என் தலைமேல் வருத்தமான காரியத்தைச் சுமத்திவிட்டீர்கள். பின்னும் கர்பலாவின் மைதானத்தில் இரத்தசாக்ஷி மரணத்தின் கிண்ணியை நான் பானம் பண்ணும்படி அதை எனக்குத் தாங்கள் தருவீர்களாக என்று சொன்னார்கள்.

பின்னும் அவர் ஓ மோக்ஷ நாயகியாகிய என் மாதாவே! என் விண்ணப்பத்தைத் தாங்கள்கேளுங்கள். என் அங்கலாய்ப்பிற்குத்தாங்கள்

செவிக்கொடுங்கள். உங்கள் தலைமேல் கருமத்துடைய போர்வையிருக்கின்றது. தங்களுடைய ஆத்மா ஆண்டவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆண்டவன் உங்களை உம்மத்துடைய இரக்ஷகராக்கி இருக்கிறான். எப்போது ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய உயிரைக் கொடுத்துவிட்டதை நான் கேட்டேனோ அதுமுதல் என் பிழைப்பு என்மேல் வெகு பாரமாயிருக்கின்றது. பின்னும் அவர்கள் உலகத்தில் இன்னும் கொஞ்ச நாள் பிழைத்திருந்து எங்களுக்கு உபதேசித்துப் பின்பு அவர்கள் பகாவுக்கு போய்ச் சேர்ந்திருப்பார்களாகில் அப்போது வெகு நலமாயிருந்திருக்கும். பின்னும் எனக்கு இரவும் பகலும் நிமிஷந்தோறும் அவர்களுடைய விசாரம் இருந்துகொண்டேயிருந்தது. ஆனால் சமாச்சாரம் ஒன்றும் எனக்குத் தெரியாதிருந்தது. அத்துரோகியாகிய எஜீது என்பவன் யுத்தஞ் செய்து என் குடும்பத்தை நாசமாக்கினான். பின்னும் அவன் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை எதுமுதல் கர்பலாவில் ஷஹீது செய்தானோ, அதுமுதல் என் இருதயத்துக்கு ஆரோக்கியமில்லை. என்னுடைய இருதயம் துக்கத்தில் தூள் தூளாய்ப் போயிருக்கின்றது. பின்னும் என் கண்களிலிருந்து துக்கக்கடலின் தண்ணீர் ஓடுகின்றது. கண்ணீருக்குப் பதிலில் இரத்தக் கண்ணீர் ஓடுகின்றது," என்று முறையிட்டுக்கொண்டே பாத்திமா நாச்சியார் அவர்களுடைய கோரியின் பாதங்களை முத்தமிட்டார். பின்னும் கபுருடன் இவை எல்லாம் அழுது அழுது சொல்லி இரத்த ஜலத்தால் தன் முகத்தைக் கழுவினார். பின்னும் அவர் பெருமூச்சு விட்டுக்கொண்டும், அழுதுகொண்டும் தாம் இறங்கியிருந்த ஸ்தலம் வந்து சேர்ந்தார்.

அவர் அந்நாள் முழுவதும் வெளியே புறப்படாமல் வீட்டிலேயே இருந்துகொண்டிருந்தார். அந்த நாள் முழுமையும் அவருக்குத் துக்கத்திலும் அழுகையிலுமே கழிந்தது. இதற்குள் இவருடைய துயரைக் கண்டு சகிக்க முடியாதவனாய் ஆதித்தன் மேற்குக்கடலில் போய் மறைந்துவிட்டான். இரவு வந்து சேர்ந்தது. ஆனால் அது சன்னம் சன்னமாய் நகர்ந்துகொண்டிருந்தது. அந்த ஒரு இரவு கழிவது ஒரு யுகம்போலிருந்தது. கடைசியில் விடியற் காலமானபோது எல்லோரும் எழுந்திருந்து, ஆண்டவனுடைய திக்ர் செய்யத்

தொடங்கினார்கள். பின்னும் இனி முஹம்மதுடைய நக்காரு சப்தித்தது. மோதின் வந்து பாங்கு சொன்னான். அப்போது எல்லா இஸ்லாமானவர்களும் மஜீதுக்குள் பிரவேசித்தார்கள். அறப்பியா தேசத்தா சகலரும் தொழுகைக்காக ஜமாஅத்து ஜமாஅத்தாய் நின்றார்கள். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீபத்து அவர்கள் இமாமத்து செய்ய ஆயத்தமானார்கள். முதலில் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய சன்னத்தை முழு இருதயத்தோடு தொழுதார்கள்.

இதின்பின் ஹசரத்து மௌலா அலீ அவர்களுடைய கண்மணியான முஹம்மது ஹனீபத்து அவர்கள் இமாமாக இன்று பாஜுடைய நிய்யத்துசெய்து ரக்அத்து கட்டினார்கள். எல்லோரும் முக்ததிகளாய் நின்று பாஜு தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்பு பாத்திஹா ஓதினார்கள். இதின்பின் ஹசரத்து முஹம்மது ஹனீபத்து அவர்கள் மிம்பர் என்ற படியின்மேல் ஏறி ஆண்டவனுடைய புகழை ஓதினார்கள். பின்னும் அவர்கள் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களை ஸ்தோத்திரித்தார்கள். இதின்பின் ஹசரத்து அபூபக்கர் சித்தீக்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து உமறோபாறுக்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து உதுமான் ஜின்னூறைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் ஸ்துதியையும் கூறினார்கள். அப்போது எல்லா ஜனங்களும் அழத் தொடங்கினார்கள். பின்னும் சோதி பொருந்திய மஸ்ஜிதோ இவர்களுடைய அழுகையால் அதுவும் மாறொலி ஒலித்தது. அவர்களுடன் அவ்வாசாரனவரும் அழுதார். பின்னும் அவ்வேளையோ நிச்சயமாய் கியாமத்தைவிட குறைந்ததாயிருந்ததில்லை. அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீபத்து அவர்கள் எல்லோருக்கும் புத்திமதி கொடுத்து பாத்திஹா ஓதினார்கள்.

இவர்கள் மதினமா நகரில் சில நாள்வரை யிருந்து அவ்விடம் தம்முடைய தலைவர்களை நியமனம் செய்தார்கள். இதுவும் தவிர எல்லா இரவுகளிலும் ஒரு இரவு வெகு சோதிப்பொருந்தியதாயும் புகழத்தக்கதாயுமிருந்தது. அவ்விரவோ மனக்களிப்புள்ள சந்திரனையும்

பகட்டமுள்ள நக்ஷத்திரங்களையு முடையதாயிருந்தது. அப்போது மனோ இன்பமும் நிர்மலமுமான நிலா விழுந்துகொண்டிருந்தது. இவ்விரவில் ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்கள் சபையைச் சிங்காரித்து அதில் அவர்கள் உட்கார்ந்துகொண்டு ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய பிரஸ்தாபத்தைச் செய்து கொண்டிருந்தார்கள். பின்னும் அதில் ஆண்டவனுடைய புகழும் ஹசரத்து நபியாண்டவர்களுடைய வர்ணிப்பும் சொல்லப்பட்டது. பரிமாறுவோனே காப்பியை ஒருவரையும் விட்டுவிடாமல் குடிப்பித்துக் கொண்டிருந்தான். பின்னும் ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்களோ மாதுரியமான ஸ்வரத்தோடு கீதா சொல்லிக்கொண்டிருந்தார்கள். எல்லோர்களுடைய உள்ளங்களும் குணஸ்துதியில் விருப்பமுள்ளவைகளாயிருந்தன. பின்னும் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய பக்தியில் எல்லோரும் ஆதீனமுள்ளவர்களாயிருந்தார்கள். அரசரானவர் அக்கணமே நித்திரையின் வசமாகிக்கொள்ளப் போய்விட்டார். அப்போது இவர்களுடைய நயனங்கள் நித்திரையிலிருந்தபோதிலும் அவருடைய இருதயமட்டும் விழித்துக்கொண்டேயிருந்தது. இத்தருணத்தில் ரிசாலத்துடையவராகிய ஹசரத்து முகம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அவருடைய சொப்பனத்தில் வந்து "ஓ என் ஆத்துமாவின் மகப்பிரியனே, நீ விழித்துக்கொள். பகையாளிகளை வெட்டி நாசமாக்கிவிடு. பின்னும் நீ எஜீது என்பவனிடம் போய் உன் சகோதரனுடைய பழியை வாங்குவாயாக. நீ இன்று செய்யும் காரியத்தை நாளைக்கென்று விட்டுவையாதே. இச்சொல்லின் கருத்தை நீ பிரியத்தோடும் மனதில் வைத்திருப்பாயாக. நீ கஷ்டங்களை யநுபவிக்க இராஜியாயிருப்பாயாக. நீ உன்னுடைய இருதயத்தை சபுராக்கொண்டு திருப்தியும் சமாதானமும் செய்வாயாக. அஜல் என்ற ஆதி காலிலேயே இவ்விதமாகவே போர் நடந்திருக்கின்றது. பின்னும் இவ்விதமாகவே லௌஹே மஹ்பூல் என்ற பலகையின்மேல் எழுதப்பட்டிருக்கின்றது. பின்னும் ஷஹாத்தின் தேசத்துடைய சிம்மாசனத்தின் மேல் உட்கார வேண்டியதற்காக மௌலா அலீ என்பவருடைய குமாரர்களாகிய ஹசன் ரலியல்லாஹு அன்ஹு என்பவரும், ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு என்பவருமே உரிமையுள்ளவர்களாயிருந்தார்கள். இதுவும் தவிர எனக்குப் பின் உலகத்தில் ஒருவரும் தீர்க்கதரிசியாய்த் தோன்றுவாரில்லை.

அப்படித் தோன்ற இடமுமில்லை. ஏனெனில் தீர்க்கதரிசனம் என்னோடேயே முடிந்துபோய்விட்டது. இக்காரணத்தால் நுபுவத்துடைய கிரீடம் என் மனப்பிரியர்களின் தலைமேல் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஷருப்படி நீ எஜீது என்பவனுடன் யுத்தம் செய்ய வேண்டும். பழிக்குப்பழி வாங்கவேண்டும். நீயே அவனுடைய கொலைஞனாயிருக்கிறாய். இது உன்மேல் பொருத்தமாயிருக்கிறது" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்கள்.

உடனே ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன. அவர்கள் விழித்துக்கொண்ட க்ஷணமே அரசரானவர் சபையில் வந்து தம்முடைய சொப்பனத்தின் எல்லாச் சமாச்சாரங்களையும் யாவர்க்கும் சொன்னார்கள். அதை அச்சபையார் எல்லோரும் முழு இருதயத்தோடும் விசுவாசத்தோடும் செவிக்கொடுத்து வணக்கத்துடனும் பயபக்தியுடனும் கேட்டார்கள். பின்னும் இராவின் எல்லா இருளும் நீங்கிப்போய்விட்டன. காலைச்சூரியன் வானத்தின் மேல் புறப்பட்டது. பின்பு ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்கள் "ஓ முஜிப்காக்கா என்பவரே வாரும். நீர் என் கூடவாரும். நாம் இப்போது போய் ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய கப்ரே ஷரீப்பின் ஜியாரத்தை செய்து இருஜகத்துடைய பாக்கியத்தையுமடைவோம். ஏனெனில் நான் இனி அச்சோதி பொருந்திய திரு ரவுலாவைப் பார்ப்பேனோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆண்டவனே அறிவான்" என்று சொன்னார்கள்.

இதின்பின் அவ்வரசரானவர் தன் சொந்த ஜனங்களைத் தம்முடன் கூட்டிக்கொண்டு அந்த திரு-ரவுலாவிற்குள் பிரவேசித்து முஸ்ஹப் என்ற குர்ஆனை தன் கையில் பிடித்துக்கொண்டு இன்பசத்தத்தோடு படிக்கத்தொடங்கினார். இதின்பின் திடீரென்று கப்ரே ஷரீப்பிலிருந்து "ஓ பராக்கிரமமுள்ள சிங்கமாகிய ஓ முகம்மது ஹனீப் என்பவரே! நிச்சயமாய் நீர் மௌலா அலீ என்பவருடைய குமாரராயிருக்கிறீர். நீர் எஜீது என்பவனுடைய தலைமேல் பட்டாக்கத்தியை வீசுவீராக. பின்னும் நீர் அவனுடைய மூட்டையும் வேரையும் பிடுங்கி விடுவீராக" என்று சப்தம் வந்தது. இதை ஷெ. முகம்மது ஹனீப்ஷா என்பவர் காதினிலேயே கேட்டார். இப்படிக் கேட்டபின் அவருடைய துக்க சமுத்திரம் பொங்கிற்று. பின்னும் அவர் பெருமூச்சுடைய சத்தங்களை

உயர்த்தினர். தம்மைக் கப்ரே ஷரீபின் மேலிருந்து தசத்தாக்குச் செய்துகொண்டிருந்தார். பின்பு அவர் சுவாதீனத்தில் வந்து ஹக்குக்குடைய சஜதா செய்து அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று சொல்லிப் பாத்திஹா ஓதி திருஹுஜ்ராவைவிட்டு வெளியே வந்தார். அவர் தன் ஸ்தலத்திற்குப் போய் அக்கால் முழுவதும் அவ்விடமே தங்கி இருந்தார். [illegible] கண்ட இடங்களில் அஜீர்ணமாயிருப்பதைப் பழுதுபார்க்கும்படி அவ்விடத்திய எல்லாப்பிரபுக்களையும் அழைத்து அவர்களுக்குக் கட்டளையிட்டார். பின்பு அவர்கள் எல்லோர்களுக்கும் செலவுகொடுத்து அனுப்பிவித்துத் தன் சகோதரராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காகச் சத்துருவாகிய எஜீது என்பவன்மேல் பழி வாங்குவதற்காக அவன்மேல் யுத்தஞ் செய்ய திமிஷுக்கு தேசத்துக்குப் புறப்பட்டார்.

அச்சக்கிரவர்த்தியுடைய சேனையோடு புறப்பட்டபோது எல்லாச் சேனைகளுக்கு முன் ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களுடைய பட்டயத்தை முஷிப்காக்கா என்பவர் பிடித்துக்கொண்டு வீரியத்தோடு போய்க்கொண்டிருந்தார். இவருடைய நம்பிக்கையுள்ள குதிரைப் போர்ச்சேவகர்கள் மொத்தம் நாற்பதினாயிரம் பேர்கள் இருந்தார்கள். இவர்கள் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சத்துருக்களுடன் போர் செய்யவும், அவர்களுடைய கிளையை வேரோடு நிர்மூலம் செய்து விடவும், அந்த முஷிப்காக்கா என்பவருடன் போய்க்கொண்டிருந்தார்கள். இதுவும் தவிர பொக்தாது தேசத்து பராக்கிரமசாலிகளான அரசர்கள், முப்பதினாயிரம் குதிரைப்பட்டாளத்தார்கள் சகிதமாய்ப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்குப் பின் இப்றாஹீம் உஷைத்தார் என்பவர் தம்முடைய குமாருடனும், தம்முடைய நாற்பதினாயிரம் சேனை சகிதமாயும் சத்துருவின்மேல் பழிவாங்குவதற்காகப் புறப்பட்டிருந்தார். இவர்களுக்குப் பின் சவுந்தரிய ரூபமுள்ளவராயும், சந்திர முகமுள்ளவராயும், இரண்டாவது சூரியராயும், ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிரியமுள்ள குமாரருமான முஹம்மது ஹனீபா அவர்களும், சந்திர சூரிய ரூபமுள்ளவர்களாகிய தோகான் என்பவரும், மோகான் என்பவரும் ஆக இந்த இரண்டு சகோதரர்களும் புறப்பட்டார்கள்.

கடல்போன்ற இந்த இரண்டு சேனைகள் எல்லாவற்றையும் வழி அனுப்புவதற்காக மதீனமா நகரத்தார் எல்லோரும் ஆயத்தமாய் நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது அவ்வரசரானவர் ஆண்டவன் சன்னிதியிலும் ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய சமூகத்திலும் துவா செய்வதற்காகத் தம்முடைய இருகைகளைத் தூக்கித் தம்முடைய கருத்தை எல்லாம் சொன்னார். அப்போது எல்லா ஜனங்களும், மலாயிக்குகளும் ஆமீன் ஆமீன் என்றும், மர்ஹபா மர்ஹபா வென்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதற்குப் பின் ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டதைக் கண்டு யாவரும் ஆயாசமடைந்தார்கள். சேனைகள் செல்லும் அதிர்ச்சியால் பூமியெங்கும் நடுக்கமுண்டாயின.

தீரர்களாகிய தோகான் என்பவருடையவும் மோகான் என்பவருடையவும் சேனைகளாகிய இலட்சத்திபதினாயிரம் போர்ச்சேவகர்கள் அம்புகளையும் அம்பின் வில்லுகளையும் பட்டயங்களையும் பிடித்துக் கொண்டு நடந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் ஒவ்வொரு பயண ஸ்தலங்களையும் கடந்து சென்றுகொண்டேயிருந்தார்கள்.

இவ்வாறு இந்த வீரம்பொருந்திய பெருஞ்சேனையானது நடந்து கொண்டிருக்கும்போது, பாதையில் சோதியுள்ள ஒரு வனம் காணப்பட்டது. சோதியின் வெளிச்சம் அதிகமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதை ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் கண்டு ஓஹோ இது கர்பலா என்ற ஸ்தலமாயிருக்குமென்று யோசித்தார்கள். பின்பு அவர்கள் இந்தச் சோதிபொருந்திய வனத்தின் பேர் என்னவென்று விசாரித்தார்கள். அதற்கு எல்லா ஜனங்களும் ‟ஓ எங்கள் அரசரானவரே, இந்த வனாந்தரமோ கர்பலா என்று பேருள்ளதாயிருக்கிறது. இதற்கே கர்பலா வென்று சொல்லுகிறார்கள். இந்த ஸ்தலத்திலேயே தங்கள் சகோதரராயும் ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பேரப்பிள்ளைகளாயுமான ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெகு பிரயாசையோடும் வருத்தத்தோடும் தம்முடைய உயிரைத் தந்தார்கள்" என்று சொன்னார்கள். எப்போது அவ்வரசரானவர் கர்பலா என்ற நாமத்தைக் கேட்டாரோ அப்போது அவர் துக்கம் நிறைந்த

சாய் ஒரு சத்தத்தை உயர்த்தினார். அவருடைய இருதயம் நெய்பொரியைப்போல் எரிந்துவிட்டது. அவர் தம்முடைய கண்களில் வைத்துக்கொள்ள அவ்விடத்திய ஒருபிடிமண்ணை வாரியெடுத்துத் தம்மிடம் வைத்துக்கொண்டார். இதின்பின் அவ்வொரு ஸ்தலமும் கடந்துகொண்டேபோய் திமிஷ்க்கு தேசத்துக்கு எதிரில் தெளிவான ஒரு மைதானத்தைக் கண்டார். ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இதுவோ வெகு சேர்த்தியான ஸ்தலமாயிருக்கிறதென்று சொன்னார்கள். பின்னும் அவர்கள் அவ்விடம் தம்முடைய உபகரணங்களை இறக்கினார்கள். இதின்பின் எல்லாச்சேனைகளும் அவ்விடம் முகாம் செய்தன.

நன்றியுள்ளவர்களும் விசுவாசமுள்ளவர்களுமான சில சேனைத் தலைவர்கள் ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகத்தில் வந்து 'ஓ எங்கள் [illegible]! தங்களுடைய உத்தரவு எங்களுக்குக் கிடைக்குமாகில் நாங்கள் போய் திமிஷ்க்கு தேசத்தை ஒரு நிமிஷத்தில் நாசமாக்கி விடுவோம். பின்னும் அந்த இடத்திய எந்தக் கிரகத்திலும் ஒரு விளக்குக்கூட எரியாமலிருக்கும்படி செய்து விடுவோம். ஒரு குடிவளமையையுங்கூட நாங்கள் விட்டுவிடாமல் அழித்து விடுவோம்" என்று சொன்னார்கள். இவர்களுடைய இச்சொற்களை அவ்வசாரிய ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டு "ஓ என் பிரியமுள்ள ஜனங்களே, ஓ சமஜக்காரர்களே! இப்போது இவ்வுலகத்தில் நீங்கள் எல்லோரும் என்னை ஹஜரத்து மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஸ்தானத்தில் எண்ணிக்கொள்ளுங்கள். அப்போதுதான் என்னுடைய மனதுக்குத் திருப்தியும் சவுக்கியமும் உண்டாகுமென்று சொன்னார்கள். பின்னும் எதுவரை நான் ஹஜரத்து ஜைனுல் ஆபிதீன் அவர்களை மீட்டுக்கொள்ளமாட்டேனோ பின்னும் எதுவரை அவர்களை நான் கொண்டுவராமல் இருப்பேனோ அதுவரை நான் என் தலைமேல் சகல கஷ்டங்களையும் வருத்தங்களையும் சுமந்துகொண்டிருக்கிறவனாயிருக்கிறேன். அவைகளைச் சகித்துக்கொள்ளுகிறவனாயிருக்கிறேன். ஓ என் ஜனங்களே! எஜீது என்பவனுடைய படை எவ்வளவு இருக்கின்றதென்பதும் எங்களுக்கு நிதானமாய்த் தெரியவில்லை. ஆனால் அவனுடைய சேனையோ அளவற்றதாயிருக்கிறதென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதுவும் தவிர அவன் அன்னிய அரசர்களுக்குக் கடிதங்களை எழுதித் தன் உதவிக்காக அளவற்ற சேனைகளையும் கூட பற்பல இடங்களிலிருந்து வரவழைத்திருக்கிறான் என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

முதலாவது அஞ்சலக்காரன் எஜீது என்பவனுடைய சங்கதியைச் சொன்ன சமாச்சாரம்.

இதற்குள் ஒரு அஞ்சலக்காரன் அரசராகிய ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சன்னிதியில் வந்து நின்று ஒழுக்கத்துடன் சலாம்செய்து "ஓ என் அரசரானவரே! அடியேன் சொல்லுவதைத் தயவுசெய்து கேளுங்கள். என்னுடைய குடிஸ்தலமோ திமிஷ்க்கு தேசமாயிருக்கின்றது" என்று சொன்னான். இதை அவர்கள் கேட்டு "ஓ அஞ்சலக்காரனே, எஜீது என்பவனுடைய சகல அந்தரங்கங்களை சீக்கிரமாய் என்னுடன் சொல்லுவாயாக. பின்னும் அவனிடம் எவ்வளவு சேனை இருக்கிறதென்பதையும் தெளிவாய் வெளியிடுவாயாக" என்று சொன்னார்கள். அதற்கு அவன் "வெட்கங் கெட்ட எஜீது என்பவனுடைய நடையோ வெகு துர்நடையாயிருக்கின்றது. இவன் தன்னுடைய பொக்கிஷத்தை ஜனங்களுக்குக் காட்டிக்காட்டி நாள்தோறும் ஆயிரம் ஆயிரமான சேனைகளைச் சேகரிக்கிறான். இச்சேனைகளோ பதினைந்து இலட்ச போர்ச்சேவகர்களாயிருக்கிறார்கள். இதுவும் தவிர ஒரு இலட்ச யானைகளையும் ஆயத்தமாக்கி யிருக்கிறான். மேலும் அவன் தனக்கு உதவி செய்யும்படி நாலாப்பக்கங்களிலும் கடிதங்களை யெழுதி அனுப்பியிருக்கிறான். பாக்ரி தேசத்து அரசனும், ரூம் தேசத்து அரசனும், சங்பார் தேசத்து அரசனும், ஹபஷ் தேசத்து அரசனும் எஜீது என்பவனுக்கு அனுப்பப்பட்ட உதவி சேனையின் கணக்கோ முப்பத்தோர் இலட்சத்தி இருபதினாயிரமாயிருக்கின்றது" என்று சொன்னான்.

இரண்டாவது அஞ்சலக்காரன் ரூம் தேசத்து அரசனுடைய சங்கதியைச் சொன்ன சமாச்சாரம்.

ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஒன்றாவது அஞ்சலக்காரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் இரண்டாவது அஞ்சலக்

காரன் அவர்கள் சமுகத்தில் வந்து ஒழுக்கத்துடன் சலாஞ் செய்து "ஓ சக்கிரவர்த்தியானவரே, சதாகாலம் எல்லோர்களின்மேல் தங்களுடைய அதிகாரமும் வல்லமையு மிருப்பதாக. நானோ ரூம் தேசத்தி லிருந்து வருகிறேன். அவ்விடத்திய சமாச்சாரங்களைத் தாங்கள் என்னிடம் கேளுங்கள். நான் அதைச் சொல்லக் காத்திருக்கிறேன்" என்று சொன்னான்.

அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் அதைக் கேட்டு "அத்தேசத்து அரசன் எவ்விதமாய் அரசாளுகிறான். அவனுக்கு எவ்வளவு தேசமிருக்கின்றது. அவனுக்குச் சேனை எவ்வளவு இருக்கின்றது. அவைகளை நீ என்னுடன் விவரத்தோடு சொல்வாயாக" என்று சொன்னார்கள். அப்போது அவன் அவைகளைக் கேட்டு "ஓ சக்கிரவர்த்தியானவரே, ரூம் தேசத்து அரசனானவனோ ஐந்து இலட்சத்தி நாற்பதினாயிரம் சேனையை எதிஜ என்பவனிடம் அவனுடைய உதவிக்காக அனுப்பியிருக்கிறான். அப்போர்ச்சேவகர்கள் கடைந்து என்ற சருக்குப் போடுகிறவர்களாயும் வீரர்களாயும் பராக்கிரமசாலிகளாயு மிருக்கிறார்கள். அன்றியும் இவ்வித்தைகளில் அவர்கள் நன்றாய்த் தேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். அவர்களைத் தங்கள்மேல் யுத்தஞ் செய்ய ரூம் தேசத்து அரசனானவன் அனுப்பியிருக்கிறான்" என்று சொன்னான்.

மூன்றாவது அஞ்சலக்காரன் சங்கபார் தேசத்து அரசனுடைய சங்கதியைச் சொன்ன சமாச்சாரம்.

இப்படி இரண்டாவது அஞ்சலக்காரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் மூன்றாவது அஞ்சலக்காரன் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் சமுகத்தில்வந்து மரியாதையுடன் குனிந்து சலாம் செய்து நின்றான். அப்போது அவ்வரசரானவர் அவனைப் பார்த்து "ஓ அஞ்சலக்காரனே! நீ எங்கேயிருந்து வருகிறாய்" என்று கேட்டார்கள். அதற்கு அவன் "நான் சங்கபார் தேசத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்று சொன்னான். அரசர் அவனை நோக்கி "ஓ தூதனே! சங்கபார் தேசத்து அரசனுடைய செய்தியை நீ சொல்வாயாக. அவன் எவ்வித நடையுள்ளவனா யிருக்கிறான்" என்று கேட்டார்கள். அதற்கு அவன் "ஒன்பது இலட்சத்தி எண்பதினாயிரம்

குதிரைப் போர்ச்சேவகர்களைத் தங்களுடன் யுத்தம் செய்ய எதிஜ என்பவனிடம் அனுப்பியிருக்கிறான்" என்று சொன்னான்.

நாலாவது அஞ்சலக்காரன் ஹபஷ் தேசத்து அரசனுடைய செய்தியைச் சொன்ன சங்கதி.

இப்படி மூன்றாவது அஞ்சலக்காரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் நான்காவது அஞ்சலக்காரன் ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்களுடைய சந்நிதானத்தில் வந்து பயபக்தியுடன் நின்று குனிந்து சலாம் செய்து ஆண்டவன் தங்களுடைய இராச்சியத்தைச் சதாக்காலம் க்ஷேமமாய் வைப்பானாக வென்று சொன்னான். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் "ஓ அஞ்சலக்காரனே! நீயார் எந்தத்தேசத்தானாயிருக்கிறாய். என்னுடன் சொல் என்று கேட்டார்கள். அதற்கு அவன் நான் ஹபஷ் தேசத்தானா யிருக்கிறேன். ஓ அரசரானவரே! ஹபஷ்தேசத்து அரசனானவனோ ஒன்பது இலட்சம் ஹபஷிகளைச் சேகரித்துத் தங்கள்மேல் யுத்தஞ்செய்ய எதிஜ என்பவனிடம் அனுப்பியிருக்கிறான். அவர்களை வெகு பராக்கிரமசாலிகளா யிருக்கிறார்கள்" என்று சொன்னான்.

ஐந்தாவது அஞ்சலக்காரன் பாங்கு தேசத்து அரசனுடைய செய்தியைச் சொன்ன சங்கதி.

இப்படி நான்காவது அஞ்சலக்காரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் ஐந்தாவது அஞ்சலக்காரன் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் முன் வெகு தாழ்மையுடன் வந்து நின்றான். அப்போது அவர்கள் அவனைப்பார்த்து "ஓ அஞ்சலக்காரனே! நீயார்" எங்கேயிருந்து வருகிறாய் என்று கேட்டார்கள். அதற்கு அவன் நான் பாங்கு தேசத்திலிருந்து வருகிறேன் என்று சொன்னான். இதை அவர்கள் கேட்டு அவ்விடத்திய சமாச்சாரத்தை நீ எனக்குச் சொல்வாயாக வென்று சொன்னார்கள். அதற்கு அவன் "ஓ என் பெரியோரே! ஆண்டவனுடைய அருள் தங்களுக்குச் சதா உண்டாவதாக வென்று புகழ்ந்து, பாங்கு தேசத்து அரசனோ ஹசரத்து முஹம்மது ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை நிராகரிக்கிறவனாயிருக்கிறான். அவனோ ஏழு இலட்ச சேனையுடன் தானே

புறப்பட்டிருக்கிறான்" என்று சொன்னான். இந்த தூதனானவனுடைய சமாச்சாரத்தை அவ்வரசரானவர் கேட்டு விசாரப்பட்டுத் தம்முடைய சகோதரர்கள் பக்கம் திரும்பி "ஓ சகோதரர்களே, ஓ சமஸ்தக்கர்களே! இவ்வேளையோ வெகு கடினமான வேளையாயிருக்கிறது. ஆண்டவனைத்தவிர வேறொருவருடைய உதவியும் எங்களுக்கு இல்லை. அவனே எவ்வேளையும் எங்களுக்குத் துணையாயிருக்கவேண்டும்" என்று சொன்னார்கள். இச்செய்தியைச் சமதக்கர்களும், பட்டாளத்துக்காரர்களும் கேட்டுக் கவலைப்பட்டு மிக்க துயரமடைந்தார்கள்.

ஷை-ஊத்து சேனைகளின்மேல் யுத்தம் செய்ய இஸ்லாமான ஐந்து சேனைகள் புறப்பட்டதாம்

முதலாவது முஷீப்காக்கா என்பவர் யுத்தத்துக்காக அநுமதி பெற்றுக்கொண்டதாம்.

முஷீப்காக்கா என்பவர் ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகத்தில் வந்து நின்று எனக்குத் தாங்கள் உத்தரவு கொடுப்பீர்களானால் நான் முன் சென்று போய்ப் பரங்கியின் சேனையின் மேல் பாய்ந்து அச்சேனையுடன் யுத்தம் செய்து அதை நாசமாக்கிவிட்டு மறுபடியும் திரும்பி தங்கள் திருசமுகத்தில் வருகிறேன் என்று சொன்னார். அதற்கு அவ்வரசரானவர் வெகு சந்தோஷப்பட்டு ஓ உத்தம புத்தியுள்ளவரே! நீர் அப்படியே செய்யும். பின்னும் உம்முடைய சூட்சமபுத்தியின்மேல் இஷ்ட மர்ஹபா இருக்கின்றது. ஆண்டவன் உமக்கு உதவி செய்வானாக. நீர் போய்ச் சீக்கிரமாய் ஜெயம் பெற்றுக்கொள்ளும் என்று தம்முடைய திருவாயை மலர்ந்து சொன்னார்.

இரண்டாவது உமர் அலி என்பவர் யுத்தத்துக்காக அநுமதி பெற்றுக்கொண்டது.

அதற்குப் பின் உமர் அலி என்பவர் எழுந்து நின்று வெகு மரியாதையுடன் சலாம் செய்து ஓ என் அரசரும் கடாட்சமுள்ளவருமானவரே! எனக்குத் தாங்கள் செல்லு கொடுப்பீர்களானால் நான் ரூம் தேசத்து சேனையின் மேல் போய்ப் பாய்ந்து அவர்களை வெள்வாருக்கொடுத்து நாசமாக்கிவிடுகிறேன். பின்னும் நான் அவர்களுடைய பெண்சாதிகளை அர்த்தாங்கிகளாக்கியும், அவர்களுடைய குழந்தைகளை

யத்தீம்களாக்கியும் செய்துவிட்டுத் தங்கள் சமுகத்திற்குத் திரும்பிவிடுகிறேன் என்று சொன்னார். இதை ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டுச் சந்தோஷப்பட்டுக் குயிப்பாய் அவரைப் புகழ்ந்தார்கள்.

மூன்றாவது இப்றுஹீம் உஷைத்துர் என்பவர் யுத்தத்துக்காகப் பெற்றுக்கொள்ளும் அநுமதி.

இதற்குப் பின் இப்றுஹீம் உஷைத்துர் என்பவர் ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகத்தில் வந்து வெகு ஒழுக்கத்துடன் குனிந்து சலாம் செய்து சமுகத்தின் கட்டளை நான் பெறுவேனானால் சங்கபார் தேசத்து சேனையின்மேல் படையெடுத்துச் சென்று அவர்களை முறியடித்தும், கொளுங்கடித்தும் பாழாக்கிவிடுகிறேன். பின்னும் நான் அவர்களைத் துன்யாவிலிருந்து அழித்தும் விடுகிறேன் என்று சொன்னார். அப்போது அவ்வரசரானவர் கேட்டு அவரைத் தன் கழுத்தோடு அணைத்துக்கொண்டு ஓ ஹோ நீர் கெட்டிக்காரராயிருக்கிறீர். இதில் சந்தேகமில்லை. நீர் அப்படியே செய்யும். பின்னும் நீர் அவர்களை யடியோடு அதமாக்கிவிடும் என்று சொன்னார்.

நான்காவது தோகான் என்பவர் யுத்தத்துக்காகப் பெற்றுக்கொள்ளும் அநுமதி,

இதின்பின் தோகான் என்பவரும், மோகான் என்பவரும் ஹசரத்து முகம்மது ஹனீப்ஷா அவர்கள் சந்நிதியில் வெகு ஒழுக்கத்துடனும் விசுவாசத்துடனும் போய் நின்று குனிந்து சலாம் செய்து நாங்களோ ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அடியார்களாயிருக்கிறோம். பின்னும் நாங்கள் எங்கள் உயிர்களையும், தங்கள் மேல் தசத்துக்குச் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம். எங்கள்மேல் தாங்கள் தயவுசெய்து கட்டளை கொடுத்து எங்களை அனுப்பிவிப்பீர்களானால் நாங்கள் ஐமந் தேசத்து சேனையின்மேல் போய் அவர்களைப் பட்டயங்களாலும் ஈட்டிகளாலும் அம்புகளாலும் வெட்டியும், குத்தியும் நாசமாக்குகிறோம், என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் நீங்கள் அப்படிச் செய்வது வெகு உத்தமமாயிருக்கிறது. சீக்கிரம் புறப்பட்டுப் போய் அவர்களைச் சங்காரம் செய்யுங்கள், என்

மனதுக்குத் திருப்தி செய்யுங்கள் என்று சொல்லி அவர்களுக்குச் செலவுகொடுத்து அனுப்பிவித்தார்கள்.

ஐந்தாவது முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் யுத்தம் செய்யப் புறப்படுதல்.

இதின்பின் ஷைசாத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அந்நால்வர்களையும் பார்த்து ஓ என் சமஞக்காரர்களே! நீங்கள் நாலுபேர்களும் நாலு சத்துருக்களின்மேல் போய் ஜெயமடையுங்கள். அவர்களை வெட்டி நாசமாக்குங்கள். நானோ [illegible] போட்டு எஜீது என்பவனுடைய சேனையின்மேல் போகிறேன். நான் இவ்விதமாய்ச் செய்ய நீங்கள் எல்லோரும் எனக்கு அனுமதி கொடுக்கள் என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் எல்லோரும் அப்படித் தங்கள் சித்தத்திற்கு நாங்களோ மாறு கூறுவது என்றார்கள்.

இதின்பின் இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் சேனைகள் சகிதமாய் அந்தந்தச் சேனைகளின் பக்கம் திரும்பினார்கள். இவர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொருவரின்மேல் மகிமையும் மேன்மையும் வைத்துக் கொண்டிருந்தார்கள். பின்னும் இவர்கள் ஒருவரைவிட ஒருவர் வலிமையுள்ளவர்களா யிருந்தார்கள்.

யுத்த துவக்கம்.

எஜீது என்பவனுடன் ஹனீப்ஷா அவர்கள் யுத்தம் செய்தல்.

ஓ நண்பர்களே! ஷைசாத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ அறப்பியா தேசத்து சக்கிரவர்த்தியாயும், ஷைசாத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராயும், எஜீது என்பவனுடைய பிராண விரோதியாயும், அவனுடைய சேனையுடைய சங்காரராயுமிருந்தார்கள். பின்னும் இவர்கள் ஆண்டவன் தியானத்தில் சதா நிலையாயிருந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் தம்முடைய பராக்கிரமமுள்ள சேனையுடன் புறப்பட்டுத் திமிஷ்க்கு தேசத்து எதிரில் நின்று அவ்விடத்திய கோட்டையின் சுவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதற்குள் ஒரு சமாச்சாரகன் எஜீது என்பவனிடம் போய் அரசராகிய முஹம்மது ஹனீப்ஷா யுத்தத்திற்கு ஆயத்தமாய் வந்து நகர் புறத்தில் தன் சேனையை அணிவகுத்து நிற்கிறார் என்று சொன்னான். எஜீது எப்போது இந்த சமாச்சாரத்தைக் கேட்டானோ அப்போது அவன் உடனே திகில்பட்டு எழுந்து நின்றான், பின்னும் அவன் வெட்க முகத்தோடு தன் சேனையையும் குதிரைகளையும் சாமான்களையும் வெளியில் கொண்டு வந்தான். பின்னும் இவனிடம் ஒரு பஹில்வான் இருந்தான். அவனுடைய நாமமோ பல்கியா வென்றிருந்தது. அவனுக்கு அநேக பிள்ளைகளும், சகோதரர்களும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் பராக்கிரமசாலிகளாயும் பலசாலிகளாயு மிருந்தார்கள். பின்னும் அவர்கள் எல்லோரும் எண்ணிக்கையில் ஐம்பத்தைந்து பேர்களா யிருந்தார்கள்.

ஷெ. பல்கியா என்பவனே மர்தூதாகிய எஜீது என்பவனிடம் போய் வெகு ஒழுக்கத்துடன் நின்று நமஸ்காரம் பண்ணி அவனைப் புகழ்ந்து "அரசரே நீங்கள் எனக்கு உத்தரவு கொடுத்தால் அறப் தேசத்து சக்கிரவர்த்தியாகிய முஹம்மது ஹனீப்ஷா என்பவரை நான் உயிரோடு பிடித்துத் தங்களிடம் கொண்டுவந்து நிறுத்துகிறேன்"! என்று சொன்னான். அந்த எஜீது என்பவன் இதைக்கேட்டு வெகு

சந்தோஷப்பட்டு "ஓ என் புத்திரனே, நீ வெகு சீக்கிரமாய்ப் புறப்பட்டுப்போய் அவரை உயிரோடு பிடித்துக்கொண்டு வந்து என் மனதிலுள்ள கவலையை நீக்குவாயாக" என்று சொன்னான். அந்த பயில்வான் அவனுடைய உத்திரவு பெற்றுக்கொண்டு தம்முடைய சகோதரர்களையும் பிள்ளைகளையும் தன் கூடவே இட்டுக்கொண்டு போனான். பின்னும் அவன் தன் சேனையை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனைக்கு எதிரில் சரியானபடி வரிசை வரிசையாய் நிறுத்தினான். பின்னும் எப்போது அவ்விருதாத்தாருடைய சேனைகள் அலங்கரிக்கப்பட்டனவோ அப்போது ஈனனாகிய எஜீது என்பவன் கோட்டை சிகரத்தின் மேல் வந்து உட்கார்ந்துகொண்டான். பின்பு ஷெய் பல்கியா என்பவனுடைய சேனையில் எல்லாம் இவனுடைய சகோதரன் ஒருவனே வெகு கெட்டிக்காரனும் கூர்மை புத்தியுள்ளவனுமாயிருந்தான். அவனுடைய நாமமும் கூட பல்கியா என்றே இருந்தது. அப்போது அவன் தன் சகோதரனாகிய பல்கியா என்பவனைப் பார்த்து ஓ என் சகோதரனே! நீ உன் பட்டயத்தையும் உன் கேடகத்தையும் பிடித்துக்கொண்டு க்ஷணமே யுத்தகளத்திற்குப் போவென்று சொன்னான். அவ்வாறே அவன் உடனே யுத்தகளத்தில் வந்து ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் முன் நின்றான். அப்படி அவன் வந்து நிற்பதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனையிலிருந்த ஒருவர் கண்டு உடனே முன் அணியில் வந்து அவன் எதிரில் நின்றார். பயில்வான் அந்த வீரரைக் கண்டதும் கோபம் பொங்கி அடே புலிக்குமுன் ஒரு பூனை வந்து நிற்பதுபோல் நீயோ என்னோடு யுத்தம் செய்யத்தக்கவன். உனக்கு ஆயுள் முடிந்துவிட்டதாலேதான் நீ என் முன்வந்து நிற்கிறாய். இதோ உன்னை ஒரு நொடியில் துனியாவைவிட்டுக் கிளப்பி விடுகிறேன் என்று தன் வாளை வீசி அந்த ஒரே வீச்சில் அந்த வீரனை இரண்டு துண்டாய் வெட்டி எறிந்துவிட்டான்.

அதன் பிறகு வேறொரு வீரன் வந்து அவனை யெதிர்த்தான். அந்தப் பயில்வான் அவனையும் இரண்டு நிமிஷத்தில் கொன்றுவிட்டான். இவ்வாறு அவன் வெகு பராக்கிரமத்தைச் செலுத்தி எழுபது பேர்களை ஒன்றின்பின் ஒன்றாக ஹதம் செய்தான். அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இந்த நடவடிக்கைகளைக் கண்டதே அவர் கண்களில் கோபத்தனல் வீசியது. இனி நாம் இவனை ஒரு

கணமேனும் உயிரோடு வைக்கலாகாதென்றெண்ணித் தமது ஆயுதங்களை யணிந்துகொண்டு உடனே தங்கள் சகோதரராகிய அலி அக்பர் என்பவரைக் கூப்பிட்டு "நீர் கொஞ்சநேரம் என் ஸ்தலத்தில் நில்லும். நான் யுத்தகளத்துக்குப் போகிறேன். நீர் இப்போது சற்று என்னுடைய வேடிக்கையைப் பாரும்" என்று சொல்லி, அவரைத் தம் ஸ்தலத்தில் நிறுத்திவிட்டுத் தாம் யுத்தகளத்தில் அப்பாவியின் முன் வந்து நின்று இடிமுழக்கத்தைப்போல் ஓர் கர்ச்சனை யிட்டார்கள். அச்சக்ரவர்த்தியின் உருவத்தைக்கண்ட அப்பயில்வான் உடனே தன் வாளைச் சுழற்றிக்கொண்டு அவர்மேல் பாய்ந்து ஒரு வீச்சு வீசினான். அவர்களோ தந்திரத்தாலும் சாமர்த்தியத்தாலும் அவ்வடியை விலக்கிக்கொண்டு அவனுடைய மடியில் கையைப்போட்டு அவனைக் குதிரைச்சேணத்தின் மேலிருந்து தந்திரமாய்த் தூக்கிப் பூமியின்மேல் மோதி அடித்தார்கள். அவனுடைய காதின் வழியாயும் மூக்கின் வழியாயும் இரத்தமும் மூளையும் வெளியே புறப்பட்டது. உடனே அவன் செத்தான். அப்போது அண்ணனாகிய பல்கியா என்பவன் தன் சகோதரனுடைய இவ்வித ஸ்திதியைக்கண்டு வெகு துக்கமுள்ளவனானான். அவனுடைய மனம் நைப்பட்டெரிந்தது. இதின்பின் அவன் இரண்டாவது பயில்வானை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களின்மேல் அனுப்பினான். அவனோ அகுரியானவனும் இப்லீசாயுமிருந்தான். உடனே அந்த பயில்வான் அரசரை யெதிர்த்து முதல் முதல் குருஜு என்ற ஆயுதத்தால் அவரைத் தாக்கினான். ஹனீப்ஷா அவர்கள் இலகுவாய்க் கொந்து பார்த்து அந்த ஆயுதம் தன்மேல் படாமல் விலக்கிக்கொண்டதோடு தந்திரமாய் அதை யவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டு அதே குருஜினால் அவன் சிரசின்மேல் ஒரு அடி யடித்தார்.

அந்த அடியால் அவன் மண்டை பிளந்து வாயிலும் மூக்கிலும் இரத்தம் கக்கிக்கொண்டு பிராணனை விட்டான்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இவ்விதமாகவே அந்தப் பல்கியா என்பவனுடைய சகோதரர் ஐம்பத்தைந்து பேர்களில் ஒருவனையும் விட்டுவிடாமல் அவர்கள் எல்லோரையும் ஒருவர் பின் ஒருவராய் நமனுலகில் குடியேற்றினார். அதனால் ஷெய் பல்கியா என்பவனுடைய வீடு நாசமாய்ப்போய்விட்டது.

அதனால் பல்கியா என்பவன் மிக்க பயமும் கோபமுமடைந்து அடிபுண்ட வேங்கைபோற் சீறி ஆக்ரமித்து அந்த ஹனீப்ஷாவைக்

கொல்லாமல் விடேனென்று அவர் முன்பாக வந்து நின்று ரோஷத்தோடு அவரை நோக்கி, "ஓ கொலைபாதகனே, உன் பேரென்ன, உன் பட்டப்பேரென்ன, உன்னுடைய குடும்பம் எது, சீக்கிரம் சொல். நீயோ என்னுடைய குடும்பத்தார் எல்லோரையும் நாசமாக்கினாய். பின்னும் நீ என்னுடைய வாழ்வையே யழித்துவிட்டாய். நான் உன்னை யெவ்விதத்திலுங் கொல்லாமல் விடேன்" என்று மனவருத்தத்தோடு சொன்னான். அப்போது அரசரானவர் இதைக்கேட்டு, "ஓ பாவியே கேள். என்னுடைய நாமமோ முஹம்மது ஹனீபா. நானே ஜெயகுமாரனாயிருக்கிறேன். தெய்வசிங்கமாயிருக்கிறேன். பின்னும் நான் பானிபாஜி என்ற தேசத்தின் அரசனாயிருக்கிறேன். நான் மர்வான் என்பவனுடைய எல்லாச் சேனையை நாசமாக்கினேன். இப்போதோ நான் எஜீது என்பவனுடைய மண்டையை உடைக்க இங்கு வந்திருக்கிறேன். நானே எஜீது என்பவனுடைய பிராண விரோதியா யிருக்கிறேன். நானே அவனை விடமாட்டேன்" என்று அவர்கள் தம்முடைய மேன்மையான நாவால் சொன்னார்கள். அந்தப் பல்கியா என்பவன் இவ்வார்த்தைகளைக் கேட்டு அவரை நோக்கி "நீ என்னுடைய கையால் தப்பி எங்கே போவாய்? நானே உன்னுடைய விஷயத்தில் இன்றுயிர் கொன்ற எமனாயிருக்கிறேன்" என்று சொல்லி அவர்களுடைய தலைமேல் பட்டயத்தால் வீசினான். அப்போது அவ்வரசரானவர் தந்திரத்தால் அவ்வடியைத் தன் கேடகத்தின்மேல் தாங்கிக்கொண்டு அவன் தலைமேல் சட்டியால் ஓர் குத்து குத்தினார்கள். அவனோ வெகு பலசாலியாயிருந்தான். ஆதலால் அவன் அக்குத்தைத் தாங்கிக்கொண்டும், சட்டியைக் கையால் பிடித்துக்கொண்டும் அவரைத் தன் சட்டியால் ஓர் குத்து குத்தினான். அப்போது உடனே அவ்வரசரானவர் அவ்விட்டியைத் தன் கையால் பிடித்துக்கொண்டார்கள். பின்பு அவர்கள் தக்ஷணமே தன் பளபளப்பான பட்டயத்தால் அவனை வெட்டினார். உடனே அவன் தலை பழுத்தப்பழம் மரத்திலிருந்து கீழே விழுவதைப்போல் அவன்தலை அவன் திரேகத்திலிருந்து விழுந்துவிட்டது. அவனோ நரகம்போய்ச் சேர்ந்தான்,

எஜீது என்பவன் தனக்கு நேர்ந்த இவ்விக்கட்டைக் கண்டு தன்னுடைய அறிவை இழந்து திக்கப்பிரமை யடைந்தான். அவன் மிக்க கிலேசமடைந்து அங்கருகிலிருப்பவர்களை நோக்கித் துயரத்தோடு "அய்யய்யோ இப்போது எனக்கு நேரிட்டிருக்கும் இந்த ஆபத்தை நீக்க

ஒருவருமில்லையே. ஹனீப்ஷாவால் என் குலமே யழிந்துவிடும்போலிருக்கிறதே" என்று பிரலாபித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் அவனருகி லிருந்தவர்களில் மர்வான் என்பவன் அவனெதிரில் வந்து நின்று "ஓ என் அரசரே! தாங்கள் ஏன் இவ்வாறு வருத்தப்படுகிறீர்கள். இப்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. தாங்கள் யாதொன்றுக்கும் விசாரப்படவேண்டாம். எனக்குத் தயவுசெய்து அனுமதி தாருங்கள். இப்போதே முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய இரத்தத்தை உமது கண்களால் பார்க்கும்படி செய்கிறேன். எள்ளளவும் அய்யம் கொள்ளவேண்டாம்" என்று அவனுக்கு ஆறுதல் கூறினான்.

அச்சமயம் சூரியன் அஸ்தமித்தபடியால் எஜீது அரசன் தன் சேனையைத் திருப்பிக்கொண்டு துக்க முகத்தோடு பாசறை போய்ச் சேர்ந்தான். ஹனீப்ஷா அவர்களும் தமது படைகளைக் கூட்டிக்கொண்டு ஜெயபேரிகை முழக்கத்தோடு பாசறைக்குத் திரும்பினார்.

இரவுகழிந்து பகலோன் கீழ்த்திசையில் தன் சிவந்த கிரணங்களை உலகில் பரப்பிக்கொண்டு தோன்றினான். எஜீது என்பவன் காலையில் எழுந்ததும் தன் சேனைகளை யணிவகுத்து யுத்தகளத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் ஒரு மேடைமேல் நின்று அங்கிருந்த சாளரத்தின் வழியாய் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அச்சமயம் மற்போர், வாட்போர் முதலியவற்றில் சாமர்த்தியவானென்று பிரக்யாதி பெற்ற ஒரு சூரன் எஜீதிடம் வந்து மிக்க வணக்கமாய் சலாம் செய்து "ஓ அரசர்க்கரசே! தங்கள்முன்னிற்கும் இவ்வேழையின் பெயரைத் தாங்கள் கேட்டிருப்பீர்கள். என் பெயர்தான் கல்காஸ் சூரன் என்று கூறுவது. இப்பெயரைக் கேட்டதே எப்படிப்பட்ட வீரனும் நடுக்கங் கொள்வான். இப்படிப்பட்ட சூரன் தங்கள் ஊழியனாயிருக்கையில் தாங்கள் எதற்கும் அச்சமடையவேண்டிய காரணமே யில்லையே. தயவுசெய்து சேனையை யென்வசம் கொடுத்தனுப்புங்கள். நான் அந்த ஹனீப்ஷாவின் படைகளைப் பஞ்சைப்போல் பறக்கடித்து ஹனீப்ஷாவைக் கட்டிக்கொண்டு வந்து தங்கள் சமூகத்தின் முன் நிறுத்துகிறேன்" என்றான். எஜீது இவ்வசனங்களைக்கேட்டு மிக்க சந்தோஷமடைந்து அச்சூரனைத் தன் சேனைக்குத் தலைவனாக்கி யனுப்பினான். அச்சூரன் சேனைகளை நடத்திச்சென்று யுத்தகளத்தை யடைந்து அங்குத் தன் சேனைகளை வியூகம்கட்டி யுத்தத்தில் ஆயத்தமாய் முன் அணியில் இறுமாப்போடு நின்றான்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும், தம்முடைய சேனையுடன் தாம் புறப்பட்டு யுத்தகளத்தில் வந்து நின்றார்கள். கல்கால் என்பவன் ஹனீப்ஷா அவர்களைக்கண்டு ஆங்காரங்கொண்டு ஏழு மணங்கு பாரமுள்ள தன் குருஜு என்ற ஆயுதத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, அவரை நோக்கி "ஓ ஹனீப்ஷா என்பவரே, நீர் சற்று வெளியே வாரும் பார்ப்போம். உமக்குச் சக்தியிருந்தால் ஏதோ என் பட்டையத்தின் ஒரு அடியைமட்டும் தாங்கிச் சமாளித்துக்கொள்ளும்" என்று சத்தமிட்டான்.

இச்சத்தத்தை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டதும், அவன் எதிரில் போய் வீரத்தோடு நின்று தம்முடைய குருஜு என்ற ஆயுதத்தைக் கையில் தாங்கி "ஓ சூரனே, உன் பெருமையை நீயே வாயாற் சொல்லிக்கொள்வது புருடத்தனமல்ல. நீ யென்னதான் வாய்ச்சால மடித்தாலும் இனி நீ யிந்த யுத்தகளத்தை விட்டு உயிரோடு திரும்பப்போகிறதில்லை. அந்த எஜீது என்பவன் என்முன் நேரில் வர அச்சப்பட்டுக்கொண்டு உங்களை யொவ்வொருவராய் அனுப்பிப் பலியாக்குகிறான். இப்போது உன் காலம் குறுகிய படியால் நீ வந்து சேர்ந்தாய். சீக்கிரம் உன் சாமர்த்தியத்தையும் உன் குருஜின் வன்மையையும் காட்டு பார்ப்போம்" என்று கூறிவிட்டு ஆயத்தமாய் நின்றார்.

கல்கால் சூரன் உடனே கர்ச்சித்துத் தன் குருஜைத் தலைக்குமேல் தூக்கிச் சுழற்றி ஹனீப்ஷாவின் சிரசின்மேல் இலக்கு வைத்து அடித்தான். ஹனீப்ஷா சட்டென்று சமயத்தில் விலகி அந்த ஆயுதம் தன்மேல் படவொட்டாமல் தப்பித்துக்கொண்டு, தன் குருஜை யோங்கி சூரன் மண்டைமேல் அடித்தார். சூரன் சாமர்த்தியமாய் அதற்குத் தப்பித்துக்கொண்டான்.

இப்படி இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அடிப்பதும் தப்பித்துக்கொள்வதுமாய் சுமார் அரைமணிநேரம் யுத்தம் செய்தார்கள். அப்போது ஹனீப்ஷா அடித்த ஒரு அடி சூரனுடைய வலது புயத்தில் படவே, அவன் கையில் பிடித்த குருஜைத் தட்டென்று விட்டுவிட்டான். சூரன் அதை யெடுப்பதற்குள் ஹனீப்ஷா தன் குருஜால் மற்றொரு அடி யடிக்க அந்த அடி சூரன் சிரசைப் பிளந்து மூளை வெளியில் சிதறும்படி செய்துவிட்டது. சூரன் உடனே சவமாய்த் தரையில் விழுந்தான்.

கல்கால் சூரன் மடிந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த அவனுடைய தோழனான ஒரு பயில்வான் மனந்தாளாமல் மிக்க கோபமடைந்து தன் கூர்மைபொருந்திய ஈட்டியைக் கையிற் பிடித்து உக்ரத்தோடு முஹம்மது ஹனீப்ஷா அவர்கள்மேல் பாய்ந்தான்.

ஹனீப்ஷா தமது கேடையத்தால் அவ்வீட்டியைத் தட்டிவிட்டு வாளாயுதத்தால் ஒரே வீச்சில் அவனை யிரண்டு துண்டாய் வெட்டித் தள்ளினார். அவன் ஆவி தட்சணம் முன்னமே சென்றிருக்கும் அவன் கூட்டாளிகள் வசிக்கும் நரகலோகம் போய்ச் சேர்ந்தது.

அதன்பின்பு வேறொரு பயில்வான் வந்து ஹனீப்ஷா அவர்களை யெதிர்த்தான். இவன் அநேகம் பயில்வான்களை விடவும் வெகு பலசாலியாயும் பேர்போனவனாயும் இருந்தான். இவனுடைய பெயர் அல்பூக்கு. இவன் காகத்தைப்போன்ற கரிய நிறமும், அல்பர்ஜு என்ற மலையைப்போன்ற உயரமுமுள்ளவனாயும், பருத்தவனுமிருந்தான். இவன் அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் முன் வந்து நின்றதும் வீரத்தோடு தன் பட்டயத்தை யோங்கி அவர்கள் மேல் வீசினான்.

ஹனீப்ஷா அவர்கள் அவ்வடியைத் தடுத்துக்கொண்டு அவன் மறுபடி வாளோங்குமுன் தன் வாளினால் அவனை வெட்டினார். அவன் சிரம் பந்துபோல் மேலே கிளம்பி சில கஜங்கள் தூரம் சென்று தரையில் விழுந்தது.

இதன்பின் அநேகம் பயில்வான்களும் ஒருவர் பின் ஒருவராய் ஹனீப்ஷா அவர்கள்மேல் போருக்கு வந்து ஒருவராவது தப்பாமல் அனைவரும் அவருடைய வாளுக்கு இரையானார்கள்.

இத்தனை சூரர்களையும் சளைக்காமல் சங்கரித்த சூரசிங்கமாகிய முஹம்மது ஹனீப்ஷா இளைப்பாற வேண்டுமென்று கருதியவன்போலும் இரணகளத்திலோடும் இரத்தவெள்ளத்தைக் கண்டு சகிக்காதவன் போலும் கதிரவன் மேற்குக்கடலில் மறைந்துவிட்டான். ஹனீப்ஷா அவர்கள் பட்டையத்திற்கு இரையான பாவிகள் சென்றிருக்கும் நரக லோகம் இப்படித்தானிருக்கிற தென்று காட்டுவதுபோல் எங்கும் காரிருள் சூழ்ந்தது. எஜீது என்பவனுடைய எல்லாப் படைச்சேவகர்களும் யுத்தகளத்தை விட்டுத் திரும்பினார்கள். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் தமது சேனையோடு பாசறைக்குச் சென்றார்கள்.

பாசறை போய்ச் சேர்ந்த எஜீது என்பவன் மர்வானைப்பார்த்து "ஓ மர்வானே, முஹம்மது ஹனீப்ஷா என்பவரைப்போலொத்தவர் உலகத்தில் ஒருவனுமில்லை. நான் கூறும் இந்தச் சொல்லை நீ மெய்யென்று நினைத்துக்கொள். இவருடைய சகோதரர்கள், இன்னும் இவ்விடம் வந்து சேரவில்லை. இதற்குள்ளாகவே நமது சேனை யெவ்வளவோ மாண்டுவிட்டது. இனி அவர்களும் வந்து சேர்ந்தால் அப்போது என்ன ஆகுமோ தெரியவில்லை. ஆகையால் அவர்கள் எல்லோரும் வந்து சேர்வதற்கு முன்னதாகவே இவரைக் கொல்ல ஏதேனும் ஒரு யோசனை செய்யவேண்டும்" என்று சொன்னான்.

மர்வான் என்பவன் அதைக்கேட்டு "ஓ இராஜாவே, முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய சேனையில் பெரும்பாகம் மாண்டுபோய் இப்போது அவரிடம் சொல்ப சேனை மாத்திரமே யிருக்கின்றது. ஆனால் இப்போது நம்மிடமோ இன்னும் அளவற்ற சேனையும், குதிரைகளும் யானைகளும் இருக்கின்றன. ஆகையால் இப்போது நாங்கள் ஒரு தந்திரம் செய்யவேண்டும். அதாவது எங்களுடைய எல்லாச் சேனையும் அவர்களுடைய சேனையின் மேல் ஏகோபித்து ஏககாலத்தில் திடீரென்று மேல்விழுந்து அவர்களைத் துண்டு துண்டுகளாக்கி விடவேண்டும். இதே ஒரு சரியான யோசனையாயிருக்கின்றது" என்று சொன்னான்.

ஈன புத்தியுள்ளவனாகிய எஜீது என்பவன் இதைக்கேட்டுச் சந்தோஷத்தால் செத்த நாய் ஊதிப்போவதுபோல் ஊதிப்போய் இதுவே நல்ல தந்திரம், வெகு நேர்த்தி, வெகு கீர்த்தி என்று ஆரவாரித்தான்.

இருதரத்தாருடைய சேனைகளும் செய்த யுத்தம்.

இராமுழுமையும் கழிந்தபின் விடியற்காலம் வந்து சேர்ந்தது. எஜீதும் மர்வானும் செய்த யோசனைப்படி இன்று பகல் யுத்தம் எப்படி முடிகிறதோ பார்க்கவேண்டுமென்று ஆவலுடையவன்போல் பகலவன் கீழ்க்கடலில் உதயமானான். உடனே சகலரும் பூமியின்மேல் நடமாட்டம் செய்யத் தொடங்கினார்கள். எஜீது என்பவன் கோட்டையின் சிகரத்தின்மேல் குரங்கு உட்காருவதுபோல் உட்கார்ந்து தன்னுடைய சேனைகளை யெல்லாம் கோட்டைக்கு வெளியில் அணிவகுத்து நிறுத்தி எண்ணிப்பார்த்தபோது அச்சேனைமுழுவதும் பதினாறு இலட்சம் இருந்தது. இவர்களை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள்மேல் யுத்தத்துக்கு அனுப்பிவித்தான். அப்போது ஹனீப்ஷா அவர்களிடமோ எட்டு லட்சம் போர்ச்சேவகர்கள் மாத்திரமிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் ஒருமனப்பட்டவர்களாயும், உயிரைத் தங்கள் உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டிருந்தவர்களாயும், பராக்கிரமசாலிகளாயுமிருந்தார்கள். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் தன் சேனையோடு யுத்தகளத்தில் வந்து நின்றுகொண்டார்கள். அப்போது வானங்களிலும் பூமியிலும் நடுக்கமுண்டாய்விட்டது.

அவ்வேளையில் அவ்வரசானவர் தன் சகோதரரைப் பார்த்து "ஓ அலி அக்பர், நீர் சற்று என் ஸ்தலத்தில் வந்து நில்லும். என் உத்தரவன்றியில் உங்களில் எவனும் பிரிந்து போகலாகாது" என்று சொன்னார்கள். பின்பு ஹசரத்து ஹஸனைன் அவர்களுடைய சகோதரராகிய அவ்வரசராகிய ஹனீப்ஷாவானவர் ஒலு செய்துகொண்டு ஆண்டவனுக்குத் தொழச்செய்து, நபிநாயகம் முதலியவர்களைத் துதித்துத் தமது ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு குதிரையின்மேல் ஏறி அதை அந்தப் பதினாறு இலட்ச சேனைக்குள் வேகமாய்ப் புகவிட்டார். ஹனீப்ஷா அவர்கள் யானைக்கூட்டத்தில் சிங்கம் புகுந்ததுபோல் எஜீது என்பவனுடைய சேனைக்குள் புகுந்து தன் நீண்ட இருபக்கங் கூருடைய வாளாயுதத்தை முன் பக்கமும், பின் பக்கமும் மாறிமாறி வீசி ஒவ்வொரு வீச்சுக்கும் பனங்காய்கள் உருளுவதுபோல் எதிரிகளின் சிரங்கள் பலபல வென்று பூமியில் உருளும்படி செய்தார். இவர் நுழைந்தவிட மெங்கணும் சற்று நேரத்திற்குள் போர்போராய்ச் சவங்கள் குவிந்துவிட்டன. அறுபட்ட சிரங்கள் இரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தன. ஹனீப்ஷா ஒரு பக்கம் எதிரிகளை நாசமாக்கிக்கொண்டிருக்க அலி அக்பர் என்பவர் தன் சேனையைக் கூட்டிக்கொண்டு எஜீது என்பவனுடைய சேனைக்குள் புகுந்து அவர்களை நாசமாக்கத் தொடங்கினார். இவருடைய வாள் யார்மேல் பட்டதோ அவன் உடனே யிருதுண்டாய்த் தரையில் விழுவதன்றித் தப்பமுடியாது. எவர்கள் அவர் முன்னுக்குத் துணிகரமாய்த் துணிந்து வந்துகொண்டிருந்தார்களோ அவர்கள் ஒரே வெட்டில் இரண்டு துண்டாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். பின்னும் அவர் பதுக்கி உட்கார்ந்து யானைகளின் துதிக்கைகளையும் அவைகளின் முன்பின் கால்களையும் ஒரே ஒரு பட்டயவெட்டால் துண்டு துண்டுகளாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அலி அக்பர் என்பவர் இவ்வித தன்மையோடு யுத்தம் செய்து கொண்டும், செய்வித்துக்கொண்டு மிருக்கையில், அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் நின்ற நிலையாய் பராக்கிரமத்தோடு அசையாமல் சத்துருக்களை அடித்துக்கொண்டிருந்தார்கள். இதை ஷை. அலி அக்பர் என்பவர் கண்டு வெகு சந்தோஷப்பட்டு முன்னுள்ள துணிகரத்தைவிட வெகு அதிகமாக வைராக்கியத்துடன் சத்துருக்களை வெட்டத் தொடங்கினார்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் எஜீது என்பவனுடைய பார்வை அலி அக்பர் என்பவர்மேல் போய் விழுந்தது. அவன் திகிலடைந்து மர்வான் என்பவனைப் பார்த்து "ஓ மர்வானே, இதோ வெகு வீரியத்துடனின்ற நிலையாய் யுத்தம் செய்யும் இந்தக் குதிரைப்போர்ச்சேவகன் யார்? இவன்பேர் என்ன" என்று கேட்டான். அதற்கு அவன் "ஓ இராஜாவே, இவரோ முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய சகோதரராயும், ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராயுமிருக்கிறார். இவருடைய நாமமோ அலி அக்பர் என்றிருக்கிறது. இவர் முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய மந்திரியாயு மிருக்கிறார்" என்று சொன்னான்.

இதை எல்லாம் கேட்டபின் மறுபடியும் ஷை. எஜீது என்பவன் "ஓ மர்வான் என்பவனே, நான் சொல்லுவதை நீ கவனமாய்க் கேள். மௌலா அலி அவர்களுடைய குமாரர்கள் வெகு வல்லமைசாலிகளா யிருக்கிறார்கள். இவர்களால் என்னுடைய இருதயம் அச்சமடைகின்றது. நான் இவர்களால் வெட்க மடைகிறேன். இவ்விரு சகோதரர்களும் என்னுடைய பாதிசேனையை நாசமாக்கி விட்டார்கள். என்னுடைய சேனை நாசமாய்ப் போயும் இவர்களுடைய பலம் இன்னும் குறையவில்லையே. இவர்களின் இருதயத்தில் யாதொரு பயமும் விசாரமும் தோன்றவில்லையே. பின்னும் அவர்களிடம் சோர்வடைவதின் அடையாளமாவது அலுத்துப்போவதின் அறிகுறியாவது கொஞ்சங்கூட காணப்படுகிறதில்லையே. பின்னும் இவர்களுடைய தேகத்தின்மேல் எவ்வித காயமும் படவில்லையே. ஒருவனாவது இவர்களுடன் சரிசமானமாய் யுத்தம் செய்யத்தக்கவனா யில்லையே" என்று விசாரத்துடன் சொன்னான். இதற்குள் பொழுதமர்ந்து விட்டதால் மர்வான் என்பவன் தன் சேனையைத் திருப்பிக்கொள்ள நக்காரு அடித்தான். அச்சேனை யுத்தகளத்திலிருந்து திரும்பி கோட்டைக்குள் போய்விட்டது. அப்பால் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் தம்முடைய சேனையோடு தம் விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள் காலை சூரியன் உதயமானபோது மூர்த்தாகிய எஜீது என்பவன் சிம்மாசனத்தின்மேல் வந்து உட்கார்ந்து, தன்னுடைய மந்திரிமார்களையும் பிரபுக்களையும் அழைத்தான். அவர்கள் எல்லோரும் வந்து வெகு மரியாதையோடு அவன்முன் நின்றார்கள். அப்போது எஜீது என்பவன் அவர்களைப் பார்த்து "நீங்கள் நேற்று முஹம்மது ஹனீப்ஷா என்பவரோடு யுத்தம் செய்தும் ஜெயமடையவில்லையே. ஆனால் இப்போது நான் உங்களுடன் சேர்ந்து அவரோடு வெகு கடினமான யுத்தம் செய்ய விரும்புகிறேன்" என்று சொன்னான். அவர்கள் இதைக்கேட்டுத் தங்கள் தலையைப் பூமியின்மேல் வைத்து "இதுவோ வெகு உத்தமமாயிருக்கிறது. நாங்கள் உம்முடைய கட்டளைக்குட்பட்டிருக்கிறோம். தாங்கள் என்ன கட்டளையிடுவீர்களோ அதை நிறைவேற்ற நாங்கள் காத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். பின்பு மறுபடியும் ஷை. எஜீது என்பவன் செத்துப்போன போர்ச்சேவகர்கள் நீங்கலாக இப்போது மீதமிருக்கிறவர்கள் எத்தனை பேர்களாயிருக்கிறார்கள் என்பதின் கணக்கு நீ எனக்குச் சொல் என்று மர்வான் என்பவனிடம் சொன்னான். அப்போது அவன் கணக்கிட்டு ஓ இராஜாவே இப்போது ஹாஜிராயிருக்கிற போர்ச்சேவகர்கள் இலக்ஷத்தி எண்பதினாயிரம் பேர்கள் மாத்திரமிருக்கிறார்கள் என்று சொன்னான்.

பின்பு ஷை. எஜீது என்பவன் "ஓ என் நண்பனான மர்வானே! நீ எல்லா யானைகளையும் சேனைகளையும் ஆயத்தமாக்கு. நான் எல்லாச் சேனைகளோடும் சென்று முஹம்மது ஹனீப்ஷா என்பவரோடு யுத்தம் செய்வதை நீ பார். நான் எவ்விதமாய் யுத்தம் செய்வேனோ அதை முஹம்மது ஹனீப்ஷா என்பவர் தன் கண்களால் பார்த்து வெகு ஆச்சரியப்பட்டு பெருமூச்சிடுவார். நான் யானைகளைக் கொண்டு அவரைச் சூழ்ந்து அவர்மேல் கமந்துகள் என்ற சுருக்குகளை எறிந்து அவரை உயிரோடு ஒரு நிமிஷத்தில் பிடித்து சிறையாக்கிக் கொள்ளுகிறேன்" என்று சொன்னான்.

இதை மந்திரிமார்கள் கேட்டு "இது வெகு உத்தமமான காரியமாயிருக்கிறது. வெகு தந்திரமான செய்கையாயிருக்கின்றது" என்று எல்லோரும் ஒரே வாக்காய்ச் சொன்னார்கள்.

எஜீது என்பவன் தன் சேனைகளோடு தேசத்திலுள்ள எல்லாப் பயில்வான்களையும் சூரர்களையும் கூட அழைத்துக்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டான். இந்தப் பயில்வான்களில் வெகு கெட்டிக்காரனும் சூட்சும புத்தியுள்ளவனுமாய் ஒருவனிருந்தான். இவனுடைய நாமம் அல்கா என்றிருந்தது. இவன் பேர்பெற்ற சூரனும், வெகு பலசாலியுமாயிருந்தான். இவனைப்போல் ஒருவனும் அப்படைகளில் இருந்ததில்லை. இவனுடைய பிள்ளைகள் முதலிய குடும்பத்தார் எண்பது பேர்களிருந்தார்கள். இவர்களில் ஒவ்வொருவனுடைய சண்டையும் புகழ்படியுள்ளதாயும் திறமையுள்ளதாயுமிருந்தது.

இவன் தன்னுடைய குடும்பசகிதம் எஜீது என்பவனிடத்தில் வந்து ஒழுக்கத்தோடு நின்று "ஓ எங்கள் அரசனே, தாங்கள் எனக்குச் செலவு கொடுத்தால் நான் முஹம்மது ஹனீப்பா என்பவரை உயிரோடு பிடித்துக்கொண்டுவந்து தங்கள் சமுகத்தில் நிறுத்துகிறேன். அதையின்றி நான் தங்கள் மனவருத்தத்தை நீக்கிவிடுகிறேன்" என்று சொன்னான்.

எஜீது என்பவன் இம்மொழிகளைக் கேட்டு "ஓ சூரனே, இது உன்னுடைய சொந்த காரியமாயிருக்கிறது. உன்னைப் பெருத்ததாயிருக்கிறது. மேலும் இது உன்னாலாகக்கூடிய காரியம். நீ இவ்விதமாய்ச் செய்வாயானால் எங்கும் உன்னுடைய நாமம் பிரபலமாகும். அது மட்டுமல்ல. நான் உனக்கு ஏராளமான காணி பூமியும், சுவாஸ்தியங்களும், ரொக்கமும், இன்னும் உனக்குவேண்டிய எல்லாப்பொருள்களும் உன் ஆசை திரும்படி அளிப்பேன். அப்படிக் கொடுக்க நான் ஆயத்தமாயிருக்கிறேன். பின்னும் நான் உன்னுடைய மனதைச் சந்தோஷப்படுத்தக் காத்திருக்கிறேன். ஆனால் நீ இக்காரியத்தை வெகு சீக்கிரமாய் நிறைவேற்றி என் மனதை சந்தோஷப்படுத்துவாயாக" வென்று சொன்னான். எஜீது என்பவன் சொன்னதை யெல்லாம் அவன் கேட்டு மிக்க சந்தோஷப்பட்டான்.

மேற்படி அல்கா என்பவனுக்கு ஒரு சகோதரன் இருந்தான். இவனும் வெகு பலசாலியாயும் முழுமுறைப்பானவனுமாயிருந்தான். இவன் பேர் பல்கா. இவனை அல்கா என்பவன் கூப்பிட்டு "ஓ என் சகோதரனே, நீ யுத்தகளத்துக்குப்போய் அலி அக்பர் என்பவரோடு யுத்தஞ்செய். பின்னும் முஹம்மது ஹனீப்பா என்பவர் வந்தால் நீ என்னை எச்சரிப்பாயாக" வென்று அவனுக்குச் சொல்லிவிட்டு எஜீது என்பவனிடத்திலிருந்து அநுமதி பெற்றுக்கொண்டு தன் குடும்ப சகிதம் யுத்தகளத்துக்குப் போகக் கோட்டையைவிட்டுப் புறப்பட்டான். அவனோ துர் அதிஷ்ட முள்ளவனும், துர்எண்ண முள்ளவனும், பொறுமையுள்ளவனுமாயிருந்தான்.

தெய்வீகமாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் தம்முடைய விடுதியைவிட்டுப் புறப்பட்டு யுத்தகளத்துக்கு வந்தார்கள். எஜீது என்பவனோ கோட்டையின் சிகரத்தின்மேல் வந்து உட்கார்ந்து எல்லோரையும் பார்க்கத் தொடங்கினான். அல்கா என்பவன் தன் சகோதரனாகிய பல்கா என்பவனை அழைத்து நீ யுத்தகளத்துக்கு இப்போ போவாயாக என்று சொல்லி அவனை அனுப்பினான். பல்கா என்பவன் தன் தமையன் கட்டளைப்படி யுடனே யுத்தகளத்தில் வந்து நின்று எதிரிகளை நோக்கி "எவனுக்கு மரணம் சமீபித்திருக்கிறதோ அவன் பல்கா என்னும் வீரனாகிய என்னுடன் யுத்தம் செய்ய வரலாம்" என்று கூவினான்.

இவ்வார்த்தைகளை ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராகிய அலி அக்பர் என்பவர் கேட்டு ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் முன் வந்து நின்று "ஓ என் அரசரே, தாங்கள் எனக்குச் சீக்கிரமாய் செலவு கொடுங்கள். பல்கா என்பவன் யுத்தகளத்தில் வந்துநின்று யுத்தத்துக்குக் கூப்பிடுகிறான். இப்போதே நான் போய் அந்தப் பகைஞனை அடித்துக் கொன்று நாசமாக்கி விடுகிறேன்" என்று சொல்லி உத்திரவு கேட்டார். அதற்கு ஹசரத்து முஹம்மது ஹனீப்பா அவர்கள் "உமக்கு ஆண்டவனுடையவும், அவனுடைய ரசூலானவருடையவும், ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் ஆசீர்வாதமும் உதவியுமிருக்கின்றது. எவனுடைய வெட்டும் குத்தும் உம்மேல் படாது" என்று அவருக்குச்சொல்லி அவரை ஆசீர்வதித்து அனுப்பினார்கள். அப்போது அவர் குதிரையின்மேல் ஏறி அதைத் துரிதமாய் விட்டு பல்கா என்பவன் முன்வந்து நின்றார். விரைந்தோடி தன் முன் வந்து நின்ற அலி அக்பர் என்பவரைக் கண்ட பல்கா என்பவன் அவரை நோக்கி "நீ யார், உன்னுடைய பேர் என்ன, நீ யார் குமாரன்" என்று கேட்டான். அதற்கு அவர் "ஓ மடையனே, நான் சொல்லுவதை நீ கேள். நானோ ஹைதரே கர்ரார்

அவர்களுடைய குமாரனாயிருக்கிறேன். என் நாமமோ அலீ அக்பர் என்றிருக்கிறது. இப்போது நீ உன் பேரைச் சொல்வாயாக" வென்று சொன்னார். இதை அப்பாவியானவன் கேட்டு "என்னையோ ஜகத்தார் பல்கா என்று சொல்லுகிறார்கள். நானு பிரபலமான பஹில்வானாயிருக்கிறேன். உன்னை வெட்டவாவது, அடிக்கவாவது, கொல்லவாவது எனக்குப் பிரியமில்லை. ஆனால் உன்னை உயிரோடு பிடித்துச் சிறையாக்கி எஜீது என்பவருடைய சமுகத்தில் கொண்டுபோவதே என் கருத்தாயும், என் கடமையாயுமிருக்கின்றது" என்று சொல்லிக்கொண்டே அவரோடு மல்யுத்தம் செய்யக் கருதி அவருடைய இடுப்பில் தன் கையைப் போட்டான். அலீ அக்பர் என்பவரோ பராக்கிரமத்தில் பேர்போனவராயிருந்தார். ஆதலால் அப்போது அவரும் உடனே சாமர்த்தியமாய் அவனைப் பதில் பிடி பிடித்தார். ஆகவே இவ்விருவர்களும் ஒருவரோடு ஒருவர் மல்யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். இவ்வாறு சண்டை செய்துகொண்டிருக்கையில் பல்கா என்பவன் அலீ அக்பரைக் குதிரையின்மேலிருந்து பூமியில் வீழ்த்த இடைவிடாமல் மூன்று தடவை தம்முடைய முழுபலத்தைச் செலுத்தினான். இப்படி அவன் தன் பலத்தைச் செலுத்தியுங்கூட அவர் சற்றேனும் சேணத்திலிருந்து அசையவேயில்லை. ஆகையால் அவன் அசந்துபோய் அவருடைய இடுப்பை விட்டுவிட்டான். பிறகு அவன் அவரைக் கொல்ல சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தான். இதற்குள் அலீ அக்பர் என்பவர் சமயம் பார்த்துத் தந்திரமாய் அவனைச் சேணத்தின்மேலிருந்து தூக்கிக் கொண்டார்கள். அவர் அவனைத் தன் தலைக்குமேல் கொண்டுவந்து சுற்ற எண்ணம் கொண்டார். ஆனால் அவன் யானையைப் போலப் பாரமுள்ளவனாயிருந்தபடியால், அவர் அவனைத் தன் தலைமேல் தூக்கக்கூடாதவரானார். தவிர அவனும் அவரிடமிருந்து விடுபட தன் பலங்கொண்டமட்டும் முயற்சி செய்துகொண்டிருந்தான். ஆகையால் அவர் அவனைப் பூமியின்மேல் பலத்தோடு மோதி யடித்துவிட்டார். உடனே அவன் மலையைப்போலத் தரையில் விழுந்தான். அவனுடைய இரண்டு கைகள் பூமிக்குள் அமிழ்ந்துபோய்விட்டன. உமர் அலீ உடனே தன் குருஜ என்ற ஆயுதத்தைத் தன் கையில் பிடித்து ஓங்கி ஒரு அடி அடித்

தார். அவ்வடியால் அவன் ஆவி இம்மண்ணுலகைவிட்டு நீங்கி நரகம்போய்ச் சேர்ந்தது.

தன் சகோதரனாகிய பல்கா என்பவன் மடிந்த செய்தியை அல்கா என்பவன் அறிந்ததும், மிக்க துயரமும் கோபமுமடைந்து தன் மற்றோர் சகோதரனைப்பார்த்து "ஓ சகோதரனே, நீ வெகு சீக்கிரமாய் யுத்தகளத்துக்குப்போய் அலீ அக்பர் என்பவனைப் பிடித்துக்கொண்டுவா. அப்படிக்கு இல்லாமல் போனால் அவனை எப்படியாவது கொன்று நமது சகோதரனை யவன் கொன்ற பழியைத் தீர்த்துக்கொள்ள வகை தேடு" என்று கூறினான். தனக்கு முடிவு நாள் நெருங்கிவிட்டதை யுணராத அவன் தன் சகோதரன் கூறியதே, ஆயுதம் தரித்து மிக்க வீராவேசத்தோடு அலீ அக்பர் என்பவருக்கு முன் வந்து நின்று, "ஓ அலீ அக்பர் என்பவனே, நான் உன்னை யமனுலகிற்கனுப்ப வந்திருக்கிறேன். இதோ வரும் என் அடிக்குத் தப்பித்துக்கொள் பார்ப்போ" மென்று சொல்லிக் குருஜ என்ற ஆயுதத்தைக் கையில் பிடித்து அதைக்கொண்டு [illegible] அடித்தான். அவ்வடியை அவர் வெகு ஜாக்கிரதையுடன் தட்டிவிட்டுத் தந்திரமாய் அவன் கையிலிருந்த குருஜையும் பிடுங்கிக் கொண்டார். பின்பு அவர் அந்த குருஜைக்கொண்டே அவன் தலைமேல் ஓர் அடி அடித்தார். அந்த அடியால் அவன் மண்டை பிளந்து மூளை சிதறிச் சவமாய்த் தரையில் விழுந்தான். இவ்விதமாகவே அவர் தை அல்கா என்பவனுடைய குடும்பத்தை நாசமாக்கி அதன் வேரை அடியோடு பிடுங்கிவிட்டார்.

தன் இளைஞர்கள் அடியோடு அலீ அக்பர் கையால் மாண்டதைக் கண்ட அல்கா என்பவன் பொறுக்க முடியாத் துயரமடைந்தான். அவன் மனம் ஒரு பக்கம் துக்கத்தாலும், ஒரு பக்கம் கோபத்தாலும், நாணத்தாலும் நரகத்திற்குச் சமமான வேதனை யடைந்தது. ஆயினும் அந்தத் தெய்வசிங்கமாகிய அலீ அக்பர் என்பவரிடம் பழி வாங்கவேண்டும் என்ற சாத்தியமான எண்ணமட்டும் அவன் மனதை விட்டு நீங்கவில்லை. அவன் தன் துயரத்தை பொருமாது அடக்கிக்கொண்டு தன் பிராணனை வெறுத்தவனாய்க் கோபாவேசத்தோடு யுத்தகளத்தில் நுழைந்து அலீ அக்பர் எதிரில் வந்து நின்று அவரை நோக்கி, "ஓ அலீ

அக்பர் என்பவனே, நீ என்னுடைய குடும்பத்தை எல்லாம் நாசமாக்கிவிட்டாய். இப்போது நீ எப்படி உயிர் தப்பிப்போவாய். என் குருஜும், வாளும் நீ எங்கே சென்றாலும் உன்னைவிட்டுப் போகிறதில்லை. நீ என் வல்லமையை யறியாதுபோயினை, என்னை யாரென்று மதித்தாய். 'இதோ ஒரு நொடியில் உன் கையால் மாண்டவர்கள் சென்ற விடத்திற்கு உன்னையும் அனுப்புகிறேன் பார்" என்று கூறிக்கொண்டே தன் பலம் பொருந்திய இரும்பு குருஜைக் கையில் ஏந்தி யுத்தத்திற்கு ஆயத்தமாயினான். அந்த குருஜானது மணங்கு பாரமுள்ளதாயிருந்தது.

அலி அக்பர் என்பவர் மனோதைரியத்தோடும் பராக்கிரமத்தோடும் பின்னிடையாது நின்று தன் கையில் கேடகத்தைப் பிடித்துக்கொண்டு ஓ ஆண்டவனே எனக்கு உன்னுடையவும் உன் ரசூலானவருடையவும் அடைக்கலமே கேடகமாயிருக்கிறது. உன் கடாட்சமே சாயையாயிருக்கிறது என்று ஆண்டவனையும் ரசூலையும் துதித்தார். இதற்குள் அப்பாவியாகிய அல்கா என்பவன் அவர் மேல் தன் குருஜைக்கொண்டு ஓர் அடி அடித்தான். அதை அவர் தன் கேடகத்தின் மேல் தாங்கிக்கொண்டார். அந்த குருஜானுடைய அடியின் சத்தமோ பூமியின் மேல் வானம் இடிந்து விழுந்தது போலாயிருந்தது. அப்போது ஹஜரத்து முகம்மது ஹனீபா அவர்கள் தம்முடைய இருக்கைகளை வானத்தில் உயர்த்தி "ஓ அனந்தமும் பழுதும் குறைவுமற்ற ஆண்டவனே, நீ என்னுடைய சகோதரரைக் காப்பாற்றுவாயாக. நீ அவருக்குத் துணை செய்வாயாக. அவரை க்ஷேமத்தோடு திரும்பி வரச்செய்வாயாக" வென்று ஆண்டவன் சன்னிதியில் வெகு விசாரத்தோடும் உருக்கத்தோடும் துஆ செய்தார். பின்னும் அச்சத்தத்தைப் படைச்சேவகர் வகைகளுக்கள் கேட்டு மயங்கினார்கள்.

அல்கா என்பவன் குருஜினலடித்த அடியின் வேகத்தால் அலி அக்பர் என்பவருடைய நயனங்களில் இருள் மூடிக்கொண்டது. அவ்வடியோ அப்பாவி வெகு பலத்தோடும், தன் முழு சக்தியோடும் கோபங்கொண்டு அடித்த அடியாயிருந்தது. ஆகையால் அலி அக்பர் என்பவருடைய ஒவ்வொரு ரோமத்துவாரத்திலுமிருந்து வியர்வை வெளிவந்தது. அப்படி யிருந்துங்கூட அச்சிங்கமானவர் மயிரிழைகூட பின்னிடையாது நின்று வீரியத்

தால் தன்னைச் சமாளித்துக்கொண்டு துரிதமாய்த் தன் குருஜைத் தலைக்குமேல் வட்டமாய்ச் சுழற்றிச் சட்டென்று அல்கா என்பவனுடைய தலைமேல் அல்லாஹு அக்பர் என்று சொல்லி ஓர் அடி அடித்தார். அல்கா என்பவன் தந்திரமாய் விலகி அந்த அடி தன்மேல் படாதபடி தப்பித்துக்கொண்டு தன் பட்டயத்தை உறையிலிருந்து உருவினான். அதைக் கண்ட அலி அக்பரும், தம்முடைய கையில் சம்சாம் என்ற தன் புகழ்பெற்ற பட்டயத்தை ஏந்தி அவன் தன்னைத் தாக்கத் தொடங்குமுன் அவன் ஏறியிருந்த புரவியின் கால்களைத் தறித்துவிட்டார். அப்போது அந்நீசன் வாகனமிழந்து பாதசாரியாய் நின்று வெகு கோபமுள்ளவனாய் அலி அக்பரின் இருபுஜங்களையும் பிடித்துத் தன் முழுபலத்தையும் செலுத்தி அவரைத் தரையில் வீழ்த்த முயன்றான், ஆயினும் அவரோ தன் ஸ்தலத்தைவிட்டுக் கொஞ்சம் கூட அசையவில்லை. அலி அக்பர் என்பவரோ ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கர்ப்ப பிறப்பால் பிறந்தவரா யிருந்தமையால் வெகு பலசாலியா யிருந்தார். பின்பு இவர் தன் கையை அச்சண்டாளனுடைய வயிற்றின் கீழ் கொடுத்து வெகு பராக்கிரமத்தோடு யா அலி என்று கூப்பிட்டு அவனைப் பூமியிலிருந்து அந்தரத்தில் தூக்கிக்கொண்டு வெகு கோபத்தோடு பூமியின்மேல் மோதி அடித்தார். ஆயினும் அல்கா என்பவன் மிக்க சாமர்த்தியங்காட்டி தேகபாரத்தைச் சமாளித்துக்கொண்டு மெதுவாய் எழுந்து தந்திரத்தோடு மறுபடி அலி அக்பர் என்பவருடைய இருபுஜங்களையும் பிடித்துக் கொண்டான். இரண்டாந்தடவையும் அவன் அவரைப் பூமியில் வீழ்த்தத் தன்னால் கூடியவரையில் போராடினான். அதைக் கண்ட அலி அக்பர் இவனோடு இன்னமுமா நாம் போராடுவது என்று கோபமடைந்து தமது இடையிலிருந்த குத்துவாளை யெடுத்து அவனைப் பலத்தோடு ஒரு குத்து குத்தினார். அந்த அடி அவன் தேகத்தில் ஒரு புறமிருந்து மறுபுறம் வரையில் ஊடுருவிப் பாய்ந்துவிட்டதால், அந்த அல்கா என்பவன் அட்டஹாஸம் கோவென் றலறிப் பூமியில்விழுந்து மடிந்தான். மலைபோன்ற அவன் தேகம் பூமியில் விழுந்ததால் உண்டான சத்தத்தைக் கேட்ட ஜனங்கள் இடி விழுந்ததோவென்று திகைத்துப் பயந்

தார்கள். தனக்கு உதவி செய்ய முன் வந்து அலி அக்பரைப் பிடித்து வருவதாய் சபதம் கூறிச்சென்ற அல்கா வென்பவன் தன் சுற்றத்தோடு மாண்டதைக்கேட்ட எஜீது திகைத்து மிக்க துயரத்தோடு பெருமூச்செறிந்து ஒன்றும் தோன்றாமல் பிரமித்து, சற்று நேரங்கழித்து தன் அருகிலிருப்பவர்களில் மர்வானை நோக்கி "ஓ என் சகோதரனாகிய மர்வான் என்பவனே, இப்போது சேனையைச் சீக்கிரமாகத் திருப்பவேண்டும். வீணாய் நமது பஹ்லிவான்களை மாளவைப்பதில் பயனில்லை. பேசாமல் சேனையைத் திருப்பிச் செல்வதே நல்ல யோசனை. பிறகு யோசித்துத் தக்கபடி நடந்துகொள்ளலாம், என்று சொன்னான். அப்போது மர்வான் என்பவன் சேனையைத் திருப்பிக்கொள்ள நக்காரு அடிக்கும்படி கட்டளையிட்டான். எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களோ அல்கா என்பவனுடைய சங்கதியை யறிந்து எல்லோரும் மனங்குன்றினார்கள். மர்வான் என்பவன் எல்லாச் சேனையைத் திருப்பும்படி நக்காரு அடித்ததே எல்லாச் சேனையும் யுத்தகளத்தை விட்டுத் திரும்பிவிட்டது.

அலி அக்பர் என்பவர் சத்துருக்களை நாசமாக்கிவிட்டுத் தன் சேனையின் பக்கம் திரும்பினார். இவர் வருவதை அரசராகிய ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கண்டு குதிரையின் மேலிருந்து கீழே இறங்கி கால்நடையாய் முன்சென்று போய் தன் சகோதரரைக் கண்டு அவரைத் தன் கழுத்தோடு சேர்த்து அணைத்துக்கொண்டார். பின்பு இவ்விருவர்களும் தங்கள் விடுதிக்குப் போனார்கள். ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அலி அக்பரை நோக்கி "ஓ என் சகோதரரே, உம்மேல் இலட்ச மர்ஹபா இருக்கிறது. நீர் வெகு தந்திரத்தோடு அநேக பஹ்லிவான்களை நாசமாக்கினீர். நீர் கெட்டிக்காரராயிருக்கிறீர். கடவுள் எப்போதும் உமக்கு அருள்புரிவாராக" என்று அவரை வாழ்த்தினார்கள்.

இவ்விதமாக ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தொடங்கிய இந்த யுத்தம் இடைவிடாமல் ஒரு வருடம் வரை நடந்துகொண்டிருந்தது. அளவற்ற எதிரிகள் இவர்களால் மாண்டார்கள். இதை யித்துடன் நிறுத்திவிட்டு முஷீப்காக்கா என்பவர் பரங்கி சேனைகளோடு யுத்தம் செய்யச்சென்ற சங்கதியைக் கூறத்தொடங்குவாம்.

முஷீப்காக்கா என்பவர் பரங்கிகளுடன் செய்த யுத்தம்.

பகையாளியாகிய எஜீது என்பவனுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காகப் புறப்பட்டிருந்த சேனைகளை முறியடிக்கவும், நாசமாக்கவும் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனை வீரர்கள் நான்கு திக்குகளிலும் சென்றார்களென்ற விஷயத்தை முன்பே கூறியிருக்கிறோம். அவர்களில் முஷீப்காக்கா என்பவர் பரங்கி சேனையின் மேல் யுத்தம் செய்யப்போயிருந்தார் என்று கூறினோம். இவர் தன் குதிரையின்மேல் ஏறி வெகு துரிதமாய் நாள்தோறும் இரண்டு இரண்டு பயண ஸ்தலங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தார். ஆனாலும் இவருடைய ஞாபகமெல்லாம் அரசராகிய ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களின்மேல் தான் இருந்துகொண்டிருந்தது. பின்னும் இவரோ பராக்கிரமத்தில் வெகுபேர் போனவர். இவர் ஒரு நாள் ஒரு ஸ்தலத்தில் இறங்கி இருக்கும்போது ஒரு வேவுகாரன் இவரிடம் வந்து "பரங்கி தேசத்தரசன் தன் சேனையுடன் புறப்பட்டு இன்ன இன்ன விடத்தில் இறங்கியிருக்கிறான். அவனை எல்லோரும் சொக்லத்தி என்று அழைக்கிறார்கள். அவனுக்கு ஒரு சகோதரன் இருக்கிறான். அவனுடைய பேர் மக்லத்தி என்றிருக்கிறது. அந்த சொக்லத்தி என்பவனே தன் சகோதரனுடனும், சேனையுடனும், குதிரைப்படையாளர்களுடனும், கால்நடை போர்ச்சேவகர்களுடனும் பயண ஸ்தலங்களைக் கடந்துகொண்டு எஜீது என்பவனுக்கு உதவிசெய்ய வந்திருக்கிறான். இவனுடைய மொத்த சேனை எழுபதினாயிரமாயிருக்கிறது", என்று சொன்னான்.

இந்தச் சமாச்சாரத்தை முஷீப்காக்கா என்பவர் கேட்டுத் தன் சேனைகளுக்குக் கவசங்கள், கேடயங்கள், பட்டயங்கள், குருஜுகள், ஈட்டிகள் முதலிய சகல ஆயுதங்களும் கொடுத்துத் தக்க உடைகளால் அலங்கரித்து யுத்தசன்னதராக்கி, தன் சொற்களால் அவர்களுக்கு உற்சாகத்தையும் யுத்த ஆவேசத்தையும் உண்டாக்கி அவர்களை யணிவகுத்து யுத்த முனைக்குப் புறப்படும் குறியாகிய நக்காரவை யடிக்கும்படி கட்டளையிட்டார். இவருடைய மொத்த சேனை நாற்பதினாயிரமாக இருந்தது. இவர்களில் ஒவ்வொருவனும் சிங்கமாகவும், யுத்தப்பிரியனாகவும், எதற்குமஞ்சா

வீரனாகவும் இருந்தான். இவர்கள் தங்கள் பகைஞருடைய சேனையைப்பார்க்கிலும் வெகு அதிக குறைந்தவர்களாயிருந்த போதிலும் இவர்களின் ஒவ்வொருவனும் ஆயிரமாயிரம் வீரர்களை வெல்லக்கூடிய தீரமும் வல்லமையு முள்ளவனாயிருந்தான்.

இங்கு இவ்வாறிருக்க பரங்கி அரசன் பாளையமிறங்கியிருக்குமிடத்திற்கு ஒரு வேவுகாரன் போய் உம்முடன் யுத்தம் செய்ய முஷீப்காக்கா என்பவர் வந்திருக்கிறார். தாங்கள் ஜாக்கிரதையுள்ளவரா யிருக்கவேண்டும் என்று அவனுடன் சொன்னான். சொக்லத்தி என்பவன் இந்தச் சமாச்சாரத்தைக் கேட்டவுடனே தன் சகோதரனைத் தன் கூடவே வைத்துக்கொண்டு தன் எழுபது ஆயிரம் துருப்புகளையும் அணிவகுத்து நிறுத்தினான். அப்போது இருதரத்தாருடைய சேனைகளும் ஒருவருக்கொருவர் வெகு கூர்ந்த பார்வையாய்ப் பார்க்கத் தொடங்கினார்கள். பின்னும் அச் சொக்லத்தி என்பவனுடைய போர்ச்சேவகர்களோ முஷீப்காக்கா என்பவருடைய சேனையை வெகு இகழ்ச்சியான பார்வையாய்ப் பார்த்துச் சிரித்தார்கள். ஏனெனில் முஷீப்காக்கா என்பவருடைய சேனை பகையாளியுடைய சேனையின் எதிரில் வெகு குறைந்தவர்களா யிருந்தார்கள். ஆகையால் இவர்களை அவர்கள் பார்த்து சிரித்தார்களே அன்றி இவர்களுடைய பராக்கிரமத்தின்பேரிலும், வீரியத்தின்பேரிலும் தங்கள் பார்வையைச் செலுத்தவில்லை. பின்பு முஷீப்காக்கா என்பவர் வீரியமுள்ள தம்முடைய சேனையை வரிசைவரிசையாக அணிவகுத்து நிறுத்தினார். இப்போர்ச்சேவகர்களுடைய நெற்றியில் பராக்கிரமத்தின் அடையாளங்கள் காணப்பட்டுக்கொண்டிருந்தன; பின்னும் இவர்களோ தன் இரையின்மேல் பார்வை வைத்துக்கொண்டிருக்கும் சிங்கத்தின் பார்வையைப்போலுள்ள பார்வையால் பகையாளிகளைப் பார்த்து "ஓ சொக்லத்தி (பரங்கிகளின் அரசன்) என்பவனே, நீ இப்போது உன்னுடைய கர்வத்தை எடுத்து எறிந்துவிட்டு வீரர்களின் முன்வந்து நில்லு. எங்களை ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராகிய ஹசரத்து முஹம்மதுஹனீபா அவர்கள் உன்மேல் அனுப்பியிருக்கிறார்கள். ஆகையால் நாங்கள் உன்மேல் யுத்தம் செய்ய வந்திருக்கிறோம். நாங்கள் ஒரு நிமிஷத்தில் உன்னுடைய சிம்மாசனத்தையும் உன் சேனையையும் நாசமாக்கி விடுகிறோம்" என்று வீரவார்த்தைகளைப் பேசி அவ்வரசன் எதிரில் வந்து திடசித்தமுள்ளவர்களாய் நின்றார்கள். முஷீப்காக்கா என்பவருடைய நாற்பதினாயிரம் போர்ச்சேவகர்கள் அந்தப் பரங்கியுடைய எழுபதினாயிரம் வீரர்களோடு போர் செய்யத்தொடங்கி, சமுத்திரத்தில் கப்பல் ஓடுவதைப்போல அச் சேனைக்குள் புகுந்தார்கள். இவர்களுக்கு ஹசரத்து மௌலா அலி அவர்களுடையவும், ஹசரத்து இமாம் ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், பின்னும் இரட்சகராகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடையவும் துணையும் ஆசீர்வாதமுமிருந்தது.

பரங்கி அரசனுடைய சகோதரனாகிய மக்லத்தி என்பவன் வெகு பெரிய பஹில்வானாயிருந்தான். பராக்கிரமத்திலும் யுத்த கல்வியிலும் இவனுக்குச் சமானமானவன் ஒருவனுமிருந்ததில்லை. பின்னும் இவன் ஒவ்வொரு தந்திரத்திலும் வித்தையிலும் ஒப்பற்றவனாயிருந்தான். இவன் தன் தமையனாகிய சொக்லத்தி என்பவனிடம் போய் "ஓ என் அரசரே! தாங்கள் எனக்குச் செலவு கொடுங்கள். நான் முஷீப்காக்கா என்பவருடைய சேனையின்மேல் போய் என்னுடைய வித்தையைக் காட்டுகிறேன். பின்னும் அப்பாளையங்களை எல்லாம் ஒரு நிமிஷத்தில் நாசமாக்கி விட்டுத் திரும்பி வருகிறேன்" என்று சொன்னான். அப்போது அந்த சொக்லத்தி என்பவன் இதைக் கேட்டு "ஓ சகோதரனே, நீ சீக்கிரமாய்ப் புறப்பட்டுப்போய் முஷீப்காக்கா என்பவரை உயிரோடு பிடித்து என்னிடம் கொண்டுவா" என்று ஆவலோடு கூறினான். மரணமானது மக்லத்தி என்பவனுடைய இருதயத்தின் மேலும், கண்களின்மேலும் திரைபோட்டுவிட்டபடியால் அவன் புத்தி இழந்து யுத்தகளத்தில் வந்துநின்று தன் எதிரிகளை நோக்கி, "ஓ போர்ச்சேவகர்களே, ஏன் நீங்கள் எல்லோரும் சாக வந்திருக்கிறீர்கள். மரணம் உங்களை இவ்விடம் இழுத்துக்கொண்டு வந்திருக்கிறதுபோலும். உங்களில் எவனுக்கு மரணம் இன்பமாயிருக்குமோ அவன் இன்றைக்கு என் கையால் ஓர் அடி பெற்றுக் கொள்வானாக" வென்று வெகு வீரத்தோடு ஆர்ப்பரித்தான். இத் தருணத்தில் முஷீப்காக்கா என்பவருடைய சிறு பாலகராகிய

காக்கா முஷீப் என்பவர் தன் பிதாவின் சமுகத்தில் வந்து ஒடுக்கத்தோடு நின்று குனிந்து சலாம் செய்து "ஓ என் பிதாவானவரே! ஓ என் நாயகரே! மக்லத்தி என்பவனோடு யுத்தம் செய்ய என் மனம் வெகு விருப்பமுள்ளதாயிருக்கிறது. பின்னும் அவனைக் கொல்ல நான் விரும்புகிறேன். அவனை என் கையால் மரிக்கவே வந்திருக்கிறான் என்று நினைக்கிறேன், ஆகையால் தாங்கள் எனக்கு உத்திரவு கொடுப்பீர்களானால் நான் அவனோடு யுத்தம் செய்யப் போகிறேன்" என்று செலவு கேட்டார். அதற்கு முஷீப்சாக்கா என்பவர், "ஓ என் கண்மணியே! ஓ என் இருதய கண்டமே! நல் நடத்தையுள்ளவனே! உன்னுடைய வயதோ மிக்க இளவயதாயிருக்கிறது. இன்னும் உன் முகத்தின் மேல் பருவகால பசுமை வரவில்லையே. உன் வாயிலிருந்து இன்னும் பால்வாசனை நீங்கவில்லையே. நானோ மக்லத்தி என்பவனை அறிவேன். அவனோ பலத்தில் வெகு பேர்போன லஃவத்தியாயிருக்கிறான். அவன் நாள்தோறும் ஐம்பது பயில்வான்களோடு குஸ்தி செய்கிறான். பின்னும் அவன் தினந்தோறும் யானைகளோடு மல்லுக்கட்டி அவைகளின் பல்லுகளைத் தந்திரத்தோடு பிடுங்கிக்கொண்டிருக்கிறான். ஆகையால் நான் உனக்கு அவ்வித பலசாலியின் மேல் யுத்தம் செய்ய எவ்விதமாய்ச் செலவுகொடுத்து அனுப்பக்கூடும். பின்னும் இந்த மக்லத்தி என்பவனோ புத்தியிலும் யுக்தியிலும் வெகு கெட்டிக்காரனாயிருக்கிறான். இவ்வித சத்துருக்கு நீ தட்டல்ல, தகுதியானவனல்ல" என்று சொன்னார். இவ்விதமாய்த் தன் தந்தை கூறிய மொழிகளைக் கேட்ட காக்காமுஷீப் பின் தன் பிதாவை நோக்கி மிக்க வணக்கத்தோடு "ஓ என் அப்பனே, என் நாயகனே, அவன்மேல் யுத்தம் செய்ய தாங்கள் எனக்குச் செலவு கொடுங்கள், அகத்தியம் செலவு கொடுங்கள். நான் அவனோடு யுத்தம் செய்வேன். அவனோ பலத்தில் பெரியவனாகும். பரவாயில்லை. ஆண்டவனும் ரசூல்வர்களும் அவனை வெட்டத் தக்கபலம் எனக்கு அளிப்பார்கள். நான் அவனுடைய வல்லமையை யடக்கி விடுகிறேன். தாங்கள் என்னுடைய வீரியத்தையும் என் வித்தையையும் பாருங்கள்," என்று சொல்லி மன்றாடி வேண்டிக்கொண்டார். முஷீப்சாக்கா தன் தனயனுடைய வீர தீரங்களுக்கு உள்

வத்தில் சந்தோஷமடைந்து சில யுத்த தந்திரங்களை யவனுக்குக் கூறி ஆசீர்வதித்து விடையளித் தனுப்பினார். காக்காமுஷீப் என்ற நட்சத்திரமானவர் லாபத்தா இல்லா அலீ என்று ஓதி தன் குதிரையின் மேல் ஏறி அதிவேகமாய்ச் சென்று யுத்தகளம் சேர்ந்து அந்த மக்லத்தி என்பவன் எதிரில் நின்று, "ஓ மக்லத்தி என்பவனே, ஓ சொக்லத்தி என்ற அரசனுடைய சகோதரனே! நீதானே வெகு பலசாலியென்று இறுமாப்பு கொண்டிருப்பவன். ஆயினும் பத்திரமாயிரு. நானோ சிறு குழந்தையாயிருக்கிறேன். என்னுடைய கையின் ஓர் அடி நீ பெற்றுக்கொள் என்று சொல்லிக் கர்ஜித்தார். அப்போது அந்த மக்லத்தியானவன் அவர் சொன்னதை எல்லாம் கேட்டு உடனே அச்சிகளின் மேல் தன் பட்டயத்தின் வல்லமையைக் காட்டத் தொடங்கினான், இப்படித் தொடர்ந்தே பல தரம் அடித்தும் அவர் தன் மேல் ஒரு அடி கூட தாக்காதபடி எல்லா அடிகளையும் மிக்க தந்திர சாமர்த்தியமாய்த் தட்டிவிட்டார். இதைக்கண்டு அவன் இன்னும் அதிக கோபமுள்ளவனானான். இதின்பின் ஷை இவனார் தன் கையில் குருஜா என்ற ஆயுதத்தை யேந்தி முன் கெந்து பின் கெந்து பாய்ந்து திடீரென்று அவன் தலைமேல் ஒரு அடி அடித்தார். அதனால் அவன் பொறி கலங்கி கண் இருண்டு பூமியில் விழுந்து மறுபடி சீக்கிரத்திலேயே சமாளித்து எழுந்திருக்க முயன்றான்; அவ்வாசீப் சிங்கமோ அவன் சமாளித்து நின்று தன்னை யெதிர்க்கு மட்டும் அவகாசம் கொடாமல் உடனே மறுபடி இரண்டாவது ஒரு அடி மண்டைமேல் அடித்தார். அந்த அடி பட்டதே அவன் இடி விழுந்த விருட்சம்போல் பூமியில் சாய்ந்து ஆவியை விட்டான். இப்பேர்ப்பட்ட பலம் பொருந்திய சூரனை மக்லத்தி என்பவன் ஆண்டவனுடைய உதவியால் ஷை பாலகர் முன் கொசுவைப்போலாய் விட்டான். இது ஹசரத்து நபி நாயகம் அவர்களுடைய கருணையேயன்றி வேறில்லை.

அரசனாகிய அந்த சொக்லத்தி என்பவன் தன் சகோதரனாகிய மக்லத்தி என்பவனுடைய கதியை யறிந்து துக்காக்ராந்தனாய் சற்று நேரம் அறிவிழந்தவனாயினான். அவன் சற்று நேரத்திற்குள் சமாளித்துக்கொண்டு துயரத்தை யடக்கித் தன் சகோதரனைக் கொன்றவனைக் கொல்ல வேண்டுமென்று ஆவேஷமா

கொண்டு அதிக கோபாவேசத்தோடு ஆயுதமணிந்து இரணகளம் புகுந்து முஹீப்காக்கா என்பவருடைய பிள்ளையின் முன் வந்து நின்று, அவரைக் கொன்றுவிடத் துணிந்து அவர்மேல் தன் குருநால் மோதி ஒரு அடியடித்தான். அவ்வடியால் அப்பாலகருடைய கண்கள் இருளடைந்துவிட்டன. இப்படியிருந்தும் அவர் தன்னில் ஜாக்கிரதையுள்ளவராகவே இருந்தார். அவ்விருள் ஒரு நிமிஷத்தில் அவருடைய கண்களிலிருந்து நீங்கிப் போய்விட்டது. பின்பு அவர் சமயம் பார்த்து தந்திரத்தோடு அவன்மேல் கமந்து என்ற சுருக்கை போட்டார். அந்த சுருக்கோ கடவுள் சித்தமாய் அவன் கழுத்தில் போய் விழுந்தது. உடனே அவன் அச்சுருக்கை கத்திரிக்கோலால் கத்திரித்துவிட்டு அப்பாலகரைப்பார்த்து "ஓ காக்காமுஹீப் என்பவனே, நீ என்னுடைய சகோதரனைக் கொன்றுவிட்டாய், இப்போது என்னையும் கொல்லவெண்ணுகிறாய். ஆனால் நானே உன்னைக் கொன்று என் தம்பியின் பழியைத் தீர்த்துக்கொள்ள வந்திருக்கிறேன் என்பதை உறுதியாய் மனதில் வைத்துக்கொள்," என்று சொல்லிப் பின்பு அவன் தன் சேனைப்பக்கம் திரும்பி "ஓ படைச் சேவகர்களே, ஓ சூரர்களே, நீங்கள் எல்லோரும் வாருங்கள். ஏன் நிற்கிறீர்கள். இப்பிள்ளையைப் பிடித்துக்கொள்ளுங்கள். இவனை உயிரோடு விட்டு விடாதேயுங்கள்" என்று சத்தத்தோடு கூவினான். அப்போது அப்போர்ச்சேவகர்கள் எல்லோரும் குதிரைகளை ஓட்டம் ஓட்டமாய் விட்டுக்கொண்டுவந்து சேர்ந்தார்கள். இவ்வித ஸ்திதியை முஹீப்காக்கா என்பவர் கண்டு கோபாவேசத்தோடு தம்முடைய நாற்பதினாயிரம் சேனையுடன் சொக்லத்தி என்பவனுடைய சேனையின்மேல் போய் விழுந்தார். பின்னும் எதிரியின் போர்ச்சேவகர்களில் எந்தக்குதிரை போர்ச்சேவகன் முன்னுக்கு வந்துகொண்டிருந்தானோ அவன் அவருடைய வாளுக்கிரையாய்க்கொண்டிருந்தான். முஹீப்காக்காவும், அவர் வீரரும் அந்த சொக்லத்தி என்பவனுடைய போர்ச்சேவகர்களை வெள்ளரிக்காயை வெட்டுவதைப்போல வெட்டி வெட்டி இரணகளமெங்கும் பிரேதக் குவியல்களாக்கி விட்டார்கள். இரத்த வெள்ளம் ஆறுபோல் ஓடத்தலைப்பட்டது. அனேகம் சவக்குவியல்கள் அந்த இரத்த வெள்ளத்தில் அமிழ்ந்து மறைந்துவிட்டன. முஹீப்காக்கா என்பவர் இரத்தவெறியோடு அரசனாகிய சொக்லத்தி என்பவனிடம் போய்ச் சேர்ந்தார். அப்போது அவர் அவனைக் கண்டு, "ஓ சொக்லத்தி என்பவனே, நீ உன் முகத்தைக் கறுப்பாக்கிக்கொண்டு இப்போ எங்கே போகிறாய்? என், கையில் நின்றும் எவ்வண்ணம் தப்புவாய்" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே இவர் குமாரராகிய காக்கா முஹீப் என்பவர் அவ்விடம் வந்து சேர்ந்தார். அவர் அவனைக்கண்டு சந்தோஷப்பட்டு ஓ என் நயினாரே, என் பிதாவே! இவனுடைய சங்காரன் நானாகவே யிருக்கிறேன். ஆகையால் அவனைத் தாங்கள் வெட்டலாகாது. நானே அவனை வெட்டுவேன் என்று சொல்லி அரசனாகிய அந்த சொக்லத்தி என்பவனைத் தம்முடைய பட்டயத்தால் தாக்கினர். சொக்லத்தி யென்பவன் சிறுவனைக் கண்டதே மிக்க கோபத்தோடு அவரை யெதிர்த்து அவருடைய முதல் அடியைத் தட்டிவிட்டு ஆத்திரத்தால் கண் மண் தெரியாமல் பன்முறை யவர்மேல் அடித்தான். அவர் சிறுவனாயிருந்தும் மிக்க சாமர்த்திய முடையவராதலால் தன் எதிரியின் கை யோயும் சமயம் பார்த்திருந்து ஒரு வீச்சில் அவன் சிரம் வேறு, உடல் வேறாகத் துணித்துவிட்டார்.

சொக்லத்தி என்பவனுடைய போர்ச்சேவகர்கள் தங்கள் அரசனானவன் மடிந்து போனதைத் தங்கள் கண்களால்பார்த்து பெருமூச்சுவிட்டுத் துக்கப்பட்டார்கள். பின்னும் அப்போர்ச் சேவகர்களில் வெட்டப்பட்டுப் போனவர்கள் நீங்கலாக உயிரோடிருந்தவர்கள் பயப்பட்டும், பதறியும் யுத்தத்தை விட்டுவிட்டு ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள்.

முஹீப்காக்கா என்பவர் அந்த சொக்லத்தி என்பவனுடைய சேனையை நாசமாக்கி ஓடிக்கொண்டிருக்கிறவர்களின் பின் தொடர்ந்து அவர்களையும் தமது வாளுக்கிரையாக்கினர். பின்பு அவர் ஆண்டவன் தமக்கு ஜெயமளித்ததைப்பற்றி துதி செய்தார்.

இதின் பின் அவர் ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்களிடம் போய்ச் சேர மருநகர் திமிஷ்க்கு தேசத்தின் பக்கம் திரும்பினர். அவர் அங்கிருந்து புறப்பட்டு அனேக நாடு நகரங்

கள் காடு மலைகள் யாவும் கடந்து கடைசியில் திமிஷ்க்கு (டமாஸ்கஸ்) தேசத்தின் ஓரத்தில் வந்து சேர்ந்தார். அவர் அரசராகிய ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைக் கண்டுகொள்ள ஒரு பயண ஸ்தலம் மாத்திரம் பாக்கியிருந்தது. இதை யிம்மட்டில் நிறுத்தி முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எஜீது என்பவனோடு செய்த மீதி யுத்தத்தைப்பற்றிக் கூறுவாம்.

முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எஜீது என்பவனுடன் செய்துகொண்டிருக்கும் மீத யுத்தம்.

எஜீது என்பவனோடு ஒருவருடக் காலமாய் நாள்தோறும் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களால் யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் எஜீது என்பவனுடைய காகான் என்ற பெருள்ள ஒரு பஹில்வான் அவனிடம் போய் தன்னுடைய பராக்கிரமத்தின் பெருமையைப் பாராட்டி "இன்றைக்கு நான் யுத்தகளத்துக்குப்போய் முஹம்மது ஹனீப்ஷா என்பவரை உயிரோடு பிடித்து உமது சன்னதியில் கொண்டுவருகிறேன்" என்று சொன்னான். எஜீது என்பவன் இதைக்கேட்டு வெகு சந்தோஷப்பட்டு ஓ என் அன்பனே அப்படியே நீ போய் சீக்கிரமாய் அவ்வரசனைப் பிடித்துக்கொண்டுவா வென்று அவனுக்குக் கட்டளை யிட்டான். அந்த காகான் என்பவன் உடனே யொரு யானையின்மேல் ஏறி சேனையுடன் யுத்தகளத்துக்குப் புறப்பட்டு அங்குச் சேர்ந்ததும் சேனையை யணிவகுத்து யுத்தத்திற்கு ஆயத்தமாய் நிறுத்தினான்.

எஜீது என்பவனோ கோட்டையின் சிகரத்தின் மேல் வந்து உட்கார்ந்தான். சேனை முழுவதும் வரிசை வரிசையாய் வந்து நின்றது. காகான் என்பவனோ வெகு பெரிய பஹில்வானாயிருந்தான். அவன் யுத்தகளத்தில் வந்து நின்று முஹம்மது ஹனீப்ஷாவை நோக்கி மஹாவீரத்தோடு "ஓ முஹம்மது ஹனீப்ஷாவே, நீ சுத்த வீரனாயின் உமது வாளைக் கையிலேந்தி யென்னோடு போருக்கு வாரும்" என்று கூவினான். அச்சமயம் முஹம்மது ஹனீப்ஷாவினருகிலிருந்த அவர் சகோதரராகிய அலி அக்பர் என்பவர் இம்மொழிகளைக் கேட்டதும், தன் தமையனும் அரசனுமான ஹனீப்ஷாவை நோக்கி "ஓ என் அரசரே, தாங்கள் என்னைக் காகான் என்பவன் மேல் யுத்தம் செய்ய அனுப்புங்கள்" என்று வேண்டிக்கொண்டார். அப்போது அவ்வரசரானவர் நான் உம்மை ஆண்டவன் வசமாகவும், ஹஸரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் பொறுப்பாகவும் செய்திருக்கிறேன். நீர் போய் ஜெயம் பெற்று வாரும் என்று ஆசீர்வாதம் செய்து அனுப்பினார். அலி அக்பர் தன் தமையனிடம் விடை பெற்றதும் ஆயுதபாணியாய் காகான் என்பவனோடு யுத்தம் செய்ய அவன் முன் போய் நின்றார். இவர் ஒருவரே ஆயிரம் பேர்களை வெட்டக்கூடிய வல்லமையுடையவர். இவர் வரவைக் கண்ட காகான் இவரை யுற்று நோக்கி, "ஓ வீரனே! என்னோடு யுத்தம் செய்யத் துணிந்து வந்த நீ யார்? உன் பெயரென்ன? என்னோடு யுத்தத்திற்கு வருவதானால் உலகவாழ்க்கையை மறந்துவிட்டு வரவேண்டுமென்பதை யறிவாயா?" என்றான். அதற்கு அவர் "என் பெயர் அலி அக்பர். நான் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சகோதரனாயிருக்கிறேன்," என்று சொன்னார். இதை காகான் என்பவன் கேட்டு "நானோ உன்னுடைய சகோதரராகிய முஹம்மது ஹனீப்ஷா என்பவரை யுத்தத்திற்கு அழைத்திருக்கிறேன். உன்னை அழைக்கவில்லை. அப்படியிருக்க அவர் வராமல் நீர் வருவது உமக்கு வெட்கம் வரவில்லையா?" என்றான். இவ்வார்த்தைகளை அலி அக்பர் என்பவர் கேட்டு வெகு கோபத்தோடு அவனை நோக்கி "ஓ மூடனே கேள். முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ களங்கமற்ற பிறப்புள்ளவராயும், ஹஸரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராயும், எமன் தேசத்து அரசராயுமிருக்கிறார். பின்னும் அவர் பெருமையில் வெகு பேர் போனவராயுமிருக்கிறார். நீயோ ஒரு அரசனிடம் ஊழியம் செய்யும் சேவகனாயிருக்கிறாய். மேலும் அவருடைய வல்லமைக்கு நீ சற்றும் இணையானவனல்ல. உன்னைக் கொல்வதால் அவருக்கு ஒரு கௌரவமும் கிடையாது. ஒரு நாயைக் கொல்வதால் சிங்கத்திற்கு என்ன பெருமை யிருக்கிறது? உன் அகங்காரத்தை யடக்க இதோ நான் வந்திருக்கிறேன். நீ ஓடிவிடாமல் என் முன் நின்று சற்று நேரம் உன் வல்லமையைக்காட்டு.

நீ என்னை ஜெயித்து விட்டால் அதன் பின்பு அந்த சிங்காசனத்தைப் பற்றிப் பேசு" என்றார். இவ்வித வார்த்தைகளை ஷை காகான் என்பவன் கேட்டு மிக்க கோபங்கொண்டு தன் குருஜு என்ற ஆயுதத்தைக் கையில் பிடித்துச் சுழற்றி வீரத்தோடு மோதி அவர் மேல் ஒரு அடி அடித்தான். அலீ அக்பர் என்பவரோ புத்திசாலியாயும், தந்திரக்காரராயுமிருந்ததால் உடனே அவர் அவ்வடி தன் மேல் படாதிருக்கும்படி சட்டென்று தான் குதிரையின் வயிற்றின் புறமாய் நழுவிக்கொண்டார். ஆகையால் அவ்வடி அவர் மேல் படாமல் குதிரையின் முதுகின்மேல் பட்டது. அதனால் குதிரை முதுகுடைந்து விழுந்துவிட்டது. பிரகாசமுள்ள அச் சந்திரன் போன்ற அலீ அக்பர் இலகுவாய்ப் பூமியின்மேல் தாவிப் பாய்ந்து நின்றார்.

அவர் தப்பித்துக்கொண்ட தந்திரத்தையும், அவர் சாமர்த்தியத்தையும் கண்ட காகான் மனம் புழுங்கி பின்னும் கோபமடைந்து உடனே யானைமேலேறிக்கொண்டு தன் யானையை அவர் மேல் விட்டான். அவரோ அந்த யானையின் துதிக்கையைப் பிடித்து அதைத் தன் பட்டயத்தால் துண்டித்து விட்டுத் தன்னுடைய குருஜு என்ற ஆயுதத்தால் யானையின் தலைமேல் ஓங்கி ஓர் அடி அடித்தார். உடனே யானையின் கபாலம் பிளந்து இரத்தம் வெள்ளமாய்ப் பெருக அது வீரிட்டுக்கொண்டு பூமியில் விழுந்து மடிந்தது. யானையோடு பூமியில் விழுந்த காகான் என்பவன் மானம்விட்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் ஒரே எண்ணங்கொண்டவனாய்த் தன் சேனைக்கூட்டத்தில் புகுந்து ஓட்டம் பிடித்தான். பின்பு அலீ அக்பர் என்பவர் வேறொரு குதிரையின் மேல் ஏறி யுத்த பூமியில் வீராவேசத்தோடு நின்றுகொண்டிருந்தார். அச்சமயம் முஷீப்காக்காவும் அங்கு வந்து சேர்ந்தார்.

முஷீப்காக்காவும், அலீ அக்பரும் எஜீது என்பவனுடன் யுத்தம் செய்தது

முஷீப்காக்கா என்பவர் ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமுகத்தில் வந்து சேர்ந்து அவர்களுடைய பாதத்தை முத்தமிட்டு, "ஓ என் அரசரானவரே, ஜெயம் தங்களுக்கு மங்களமாவதாக. நான் தங்கள் சமுகத்திலிருந்து புறப்பட்டு பாங்கிகளின் மேல் போய் அவர்களுடன் யுத்தம் செய்து அவர்களை நாசமாக்கிவிட்டேன். பின்னும் அரசனாகிய சொக்லத்தி என்பவனையும், அவன் சகோதரனாகிய மக்லத்தி என்பவனையும் வெட்டி மடித்துவிட்டேன். யுத்தகளத்தை இரத்தமயமாக்கிவிட்டேன். மீதமிருந்த படைச்சேவகர்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள்," என்று சொன்னார். அப்போது ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அதைக் கேட்டு வெகு சந்தோஷப்பட்டு அவரைத் தன் கழுத்தோடும் மார்போடும் சேர்த்து அணைத்து ஆலிங்கனம் செய்துகொண்டார்கள்.

யுத்தகளத்தில் மும்முரமாய் நின்றுகொண்டிருந்த அலீ அக்பர் என்பவர் வெகு சுறுசுறுப்பாய் எதிரிகளின் சேனைவெள்ளத்தில் புகுந்து அவர்கள் அணிகளைக் கீழும் மேலுமாய்க் கலக்கிக்கொண்டிருந்தார். அன்றைய தினம் எஜீது என்பவனுடைய அளவற்ற போர்ச்சேவகர்களை அவர் நாசமாக்கிவிட்டார். அப்போது முஷீப்காக்கா என்பவர் அங்கு வந்திருக்கும் சமாசாரத்தை யறிந்த காகான் என்பவன் திகிலடைந்து கோட்டைக்குள் போய் மறைந்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தோடு ஓடத் தொடங்கினான். அவ்வாறு திரும்பித்திரும்பி பார்த்துக் கொண்டே ஓடிக்கொண்டிருக்கும் காகானை அலீ அக்பர் என்பவர் பார்த்து "ஓ கோழையே! ஓ வீரமற்றவனே! ஓ பேடியே! நீ யெங்கு ஓடிப்போகிறாய்? சற்று நில். இப்போது நீ என் கைக்குத் தப்பிப்போவது சுலபமான காரியமல்லவே" என்றார். அப்போது அந்த காகான் என்பவன் சிங்கத்தைக் கண்ட கஜத்தைப் போல் இடிவிழுந்தவனாய் ஆவி சோர்ந்து "அய்யையோ விதியே! இனி என்ன செய்யலாம். இவன் நமக்கு எமனாய் வந்து வழி மறிக்கின்றானே" என்று மொணமொணத்துக்கொண்டே தன் வாளை யுருவிக்கொண்டு ஆத்திரத்தோடு அலீ அக்பர்மேல் பாய்ந்தான். அவர் ஒரு இலகு பாய்ந்து அவன் அடிக்கு விலகிக்கொண்டு அவன் திரும்பித் தன்னைத் தாக்குவதற்குள் தன்வாளால் அவனை யிரண்டு துண்டாக்கிவிட்டார். உடனே அச்சேனைக்குள் கூக்குரலும் அழுகையும் உண்டாயிற்று. ஷை காகான் என்பவனுடைய சங்கதியை எஜீது என்பவன் அறிந்தே மனம் நொந்து துயர்க்கடலில்

முழுகினவனாகி அண்டையிலிருந்த மர்வானை நோக்கி "ஓ நண்பனே! நாம் சேனைகளை யுடனே திருப்பிக்கொண்டு போகவேண்டும். ஏனெனில் இப்போது யுத்தம் செய்வது வீண் எத்தனமாயிருக்கிறது. சேனை எல்லாம் பயமும் விபாகூலமுமடைந்திருக்கிறது" என்று அவனுக்குச் சொன்னான். இவ்வுத்தரவுப்படி மர்வான் என்பவன் தக்காரு அடித்து எல்லாச் சேனையையும் யுத்தகளத்திலிருந்து திருப்பிக்கொண்டான்.

இதைக்கண்ட ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஜெயபேரிகை அடித்துத் தன் சேனையைத் திருப்பிக்கொண்டு தங்கள் பாசறைகளுக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் சந்தோஷத்தோடும், சவுக்கியத்தோடும் அன்றிரவு நித்திரை செய்தார்கள். அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் முஃதப்காக்கா என்பவரைத் தன் நெஞ்சோடு அணைத்து அவரைப் புகழ்ந்துகொண்டார்கள். இவ்விதமாகவே நாள்தோறும் அவ்வரசரானவர் யுத்தகளத்தில் வந்துநின்று எஜீது என்பவனுடன் யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். இந்தச் சங்கதியை இம்மட்டில் நிறுத்தி ரூம் தேசத்து படையின் மேல் யுத்தம் செய்யப் போயிருந்த உமர் அலி என்பவருடைய சங்கதியைப்பற்றிக் கூறுவாம்.

உமர் அலி என்பவர் ரூம் தேசத்து சேனையுடன் செய்த யுத்தம்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சகோதரராகிய உமர் அலி என்பவர் ரூம் தேசத்து போர்ச்சேவகர்களோடு யுத்தம் செய்ய செலவு பெற்றுக்கொண்டு நச்ருன் மினல்லாஹி பத்ஹுன் கரீப் என்ற ஆயத்தை ஓதி தம்முடைய எல்லாச் சேனையையும் கூட்டிக்கொண்டு சத்துருக்களை நாசமாக்க பயணஸ்தலங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தார். பாதையில் அவரை எதிர்க்க ஒருவனுமில்லாதிருந்தான். இந்த ஸ்திதியோ மின்னலுக்குச் சமானமாய் அவர் சென்றுகொண்டிருக்கையில் ஒரு நாள் ஒரு வேவுகாரன் அவர் சன்னதியில் வந்து "ஓ குணத்தமானவரே! ரூம் தேசத்து அரசனானவன் தன் சேனையுடன் நமக்கு முன்னே பாதையில் இறங்கியிருக்கிறான். அவனுடைய

போர்ச்சேவகர்களோ வெறிகொண்டவர்களைப்போல் இருக்கிறார்கள். [illegible] அரசனோ யானையைப்போல் பருமனாயிருக்கிறான். பின்னும் அவன் துர்ச்சேட்டை யுள்ளவனாயுமிருக்கிறான்" என்று சொன்னான்.

இச்சமாசாரத்தை உமர் அலி என்பவர் கேட்டு ஆண்டவன்மேல் பாரம் போட்டுத் தம்முடைய சேனையின் பக்கம் திரும்பி "ஓ என் வீரர்களே! சந்தோஷமாய் எழுந்திருங்கள். ரூம் தேசத்து சேனையை நாசமாக்கப் புறப்படுங்கள். இன்றைக்கோ வெகு நேர்த்தியான சந்தர்ப்பமிருக்கிறது. எதிரிகளுக்கு அவகாசம் கொடுக்கலாகாது" என்று சொல்லி முப்பதினாயிரம் பேரடங்கிய தன் சேனையுடன் சத்துருக்களோடு யுத்தம் செய்யப் புறப்பட்டார்.

ரூம் தேசத்து படைச்சேவகர்களுக்கு உமர் அலி என்பவருடைய செய்தி யாதொன்றும் தெரியாதிருந்தது. ஆதலால் அவர்கள் வெகு அஜாக்கிரதையாயிருந்தார்கள். உமர் அலி என்பவருடைய சேனை திடீலென்று அவர்களின்மேல் சிங்கங்களைப் போலப் பாய்ந்து ஆணிகரத்தோடு அவர்களை வெட்டத்தொடங்கினார்கள். தாங்கள் சற்றும் எதிர்பார்க்காத சமயத்தில் திடீலென்று பகைவர்கள் தங்கள்மேல் வந்து பாய்ந்ததைக் கண்ட ரூம் தேசச்சேனைகள் பயமும் கலவரமுமடைந்து எதிரிகளின் வாளுக்குச் சுலபமாய் இரையானார்கள். சற்று நேரத்திற்குள் அந்தத் தலம் முழுதும் இரத்தமயமாய் விட்டது. எங்கும் தலையறுந்ததும், இடை அணிந்ததும், தோள் சரிந்ததும், காலறுந்ததும், குடல் சரிந்ததுமாகிய சவங்கள் போர்போராய்க் குவிந்துவிட்டன. ஆகையால் சற்று நேரத்திற்குள் ரூம் தேசத்துப்படைகள் சகிக்க முடியாமல் மாண்டவர்கள் நீங்கலாக மீதமிருந்த சொற்ப போர்ச்சேவகர்கள் பூனையைக்கண்டு எலி ஓடுவதைப் போல ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள்.

உமர் அலி என்பவர் தம்முடைய காரியத்தை ஜெயமாக்கிக்கொண்டபின் அந்நாள் முழுவதும் அவ்விடத்திலேயே தங்கியிருந்து மறுநாள் அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய பாதங்களைத் தரிசித்து முத்தமிட்டு மேலானபாக்

கிபத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும், ஷஹீதாய்ப் போவதற்காகவும் அபேட்சை வைத்துக்கொண்டு திமிஷக்கு தேசத்தை நோக்கி வெகு சந்தோஷத்தோடும் வீரியத்தோடும் புறப்பட்டுச் சென்றார். அவர் பல பயண ஸ்தலங்களையும் கடந்து கடைசியில் திமிஷக்கு நகரத்திற்கு ஒரு மைல் தூரமுள்ள ஒரு குளிர்ந்த தோட்டத்தில் தன் சேனைகளோடு தங்கினார். இச்சங்கதியை இம்மட்டில் நிறுத்தி ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய மீதிச் சண்டையின் வரலாற்றைக் கூறுவாம்.

சக்கிரவர்த்தியாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய மீதி யுத்தம்.

அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் நாள்தோறும் யுத்தம் செய்துகொண்டிருக்கையில் ஒரு நாள் ஹபஷ்தேசத்து கறுப்புநிறமுள்ள ஒரு பஹில்வான் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடன் யுத்தம் செய்ய எஜீது என்பவனிடம் போய் உத்தரவு கேட்டான், எஜீது என்பவன் வெகு சந்தோஷமாய் போகும்படி அவனுக்குக் கட்டளையிட்டான். இவனுடைய நாமமோ கிஹா என்றிருந்தது. இவன் எஜீது என்பவனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு யுத்தகளத்தில் வந்து நின்று யுத்தம் செய்யத் தொடங்கினான். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ தம்முடைய சகோதரர் வகைரு போர்ச்சேவகர்கள் சகிதம் யுத்தகளத்தில் யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். எஜீது என்பவனோ கிரகத்தின் மேல் உட்கார்ந்திருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அன்றைய தினத்தின் யுத்தமோ வெகு கடினமானதாயும் கோரமானதாயுமிருந்தது. ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய போர்ச்சேவகர்கள் முன்னூறு பேர்கள் வரை ஷஹீதாய்ப் போனார்கள். இதுவும் தவிர அன்று அலி அக்பர் என்பவரும் காயப்பட்டுப் போனார். ஆகையால் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய மனதுக்கு அமைதியில்லாதிருந்தது. பின்னும் முஸீப்காக்கா என்பவரோ மிக்க ஆயாசமடைந்திருந்தார். இதற்குள் உமர் அலி என்பவருடைய போர்ச்சேவகர்கள் எதிர்ப்பட்டார்கள்.

உமர் அலி வகைருக்கள் அரசருடன் வந்து சேர்ந்ததும் இவர்களுடைய சேனை எஜீது என்பவனுடன் யுத்தம் செய்ததும்.

ஜெய சூரரான ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் யுத்தகளத்தில் வெகு மும்முரமாய் எஜீது என்பவனுடைய சேனையுடன் யுத்தம் செய்துகொண்டிருக்கார்கள். இத்தருணத்தில் உமர் அலி என்பவர் வந்து சேர்ந்து தன் சகோதரரும் அரசருமாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைத் தரிசித்து அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டு நான் ஜெயித்து வந்தேன். இந்த ஜெயம் தங்களுக்கு மங்களமாவதாக வென்று சொன்னார். பின்பு அவர் அவ்வரசரிடம் செலவு பெற்றுக்கொண்டு தம்முடைய சகோதரர்கள் சகிதம் அந்த யுத்தத்தில் கலந்துகொண்டார்.

ஆகில் அலி என்பவரோ யுத்தகளத்தில் வந்து கிஹா என்ற பஹில்வான் எதிரில் நின்றுகொண்டார். அவன் இவரைக்கண்டு ஓ ஹோ என் இரை வந்தது என்று சொல்லி அவர்மேல் ஓர் பட்டய அடி அடித்தான். அவ்வடியை அவர் தூசைப்போல உதறிவிட்டு அவனுடைய மடியில் தன் கையைப்போட்டு பெருச்சாளியைத் தூக்கிக்கொள்ளுவதைப்போல அவனைக் கோபத்தோடு தன் தலைக்குமேல் தூக்கிச் சுழற்றிப் பூமியின்மேல் படாரென்று எறிந்தார். அதனால் அவனுடைய எலும்புகள் மளமளவென்று முறிந்தன. மண்டையோ படீர் என்று உடைந்தது. அவன் தட்சணம் ஆவியிழந்து தனக்குரித்தாகிய எரிவாய் நரகம் போய்ச் சேர்ந்தான்.

இவன் இவ்விதமாக மடியவே எஜீது என்பவன் வெகு துயரப்பட்டு, பயந்து நடுங்கி அய்யோ இவன் யார், இவன் முஹம்மது ஹனீப்ஷா என்பவருடைய சகோதரனா, இவன் வந்து அவனுடன் சேர்ந்து போனானா வென்று சொல்லி "ஓ மர்வான் என்பவனே, ஓ என் அன்பனே, நீ இப்போது என் சேனையைத் திருப்பிக்கொள்ளும். நாம் திரும்பிச் செல்வோம்" என்று சொன்னான். இதை அம்மர்வான் என்பவன் கேட்டு உடனே நக்காரு அடித்து எல்லாப் போர்ச்சேவகர்களையும் யுத்தகளத்திலிருந்து திருப்பிக்கொண்டான். எல்லாப் போர்ச்சேவகர்களும் தங்கள் தங்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் தம்முடைய சேனையுடன் திரும்பினார்கள். பின்பு நாள்தோறும்

அவ்வாசாரானவர் இத்தன்மையாகவே யுத்தகளத்தில் வந்து யுத்தம் செய்துகொண்டிருந்தார்.

இந்தச் சங்கதியை இம்மட்டில் நிறுத்தி சங்கபார் தேசத்துப் போர்ச்சேவகர்களோடு யுத்தம் செய்யப் போயிருந்த இப்றுஹீம் உஷத்தர் என்பவருடைய செய்தியைச் சொல்லத் தொடங்குவாம்.

இப்றுஹீம் உஷத்தர் என்பவர் சங்கபார் தேசத்து சேனையுடன் செய்த யுத்தம்.

இப்றுஹீம் உஷத்தர் என்பவர் சங்கபார் தேசத்துப் போர்ச்சேவகர்களோடு யுத்தம் செய்ய அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் செலவு பெற்றுக்கொண்டு இன்னா பத்தஹ்னா லக்காபத்ஹன் முபீனா என்ற ஆயத்தை ஓதி, தம்முடைய சேனைகளைக் கூட்டிக்கொண்டு சத்துருக்களை நாசமாக்க தவக்கலத்து அல்லலா வென்று நாள்தோறும் பயண ஸ்தலங்களைக் கடந்துகொண்டிருந்தார். இவர்களுடைய சேனை நடக்கும் அதிர்ச்சியால் பூமி நடுங்கிக்கொண்டிருந்தது. இவர்களோ இரத்தப்பழி வாங்குகிறவர்களாகவும் எல்லோரும் ஒருமனப்பட்டவர்களாகவு மிருந்தார்கள்.

இதற்குள் இப்றுஹீம் உஷத்தர் என்பவர் தங்களுடன் யுத்தம் செய்ய வருகிறார். அவருடன் முப்பத்தி மூவாயிரம் பராக்கிரமமான போர்ச்சேவகர்களடங்கிய சேனை யிருக்கின்றது. அவர் நமது சேனையை மடக்கிக்கொண்டு நம்முடைய போர்ச்சேவகர்களின் இரத்தத்தால் பூமியைச் சிவப்பாக்கி விடுவார் என்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது என்ற சமாச்சாரத்தை ஒரு வேவுகாரன் போய் சங்கபார் தேசத்து சேனையின் தலைவனிடம் சொன்னான். அத்தலைவனுடைய நாமமோ பஹுறும் என்றிருந்தது. அவனோ பனங்காயைப்போல் கறுநிற முள்ளவனாயிருந்தான். அவனுடைய புத்திரர் பந்துக்கள் முதலியவர்கள் எண்பது பேர்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் அவன் சொல்லுக்குக் கீழ்ப்பணிந்து நடப்பவர்களாயும் உயிரைத்தந்து முழு மனதோடும் அவனுக்குத் துணை செய்கிறவர்களாயு மிருந்தார்கள்.

தலைவனாகிய பஹுறும் என்பவன் வேவுகாரன் வாய் மொழியாய்க் கூறிய சங்கதிகளைக் கேட்டதே தன்னுடைய சேனையை யுத்த ஆயுதங்களால் அலங்கரித்து அணிவகுத்துத் தன் சுற்றத்தாரோடு வரிசை

வரிசைகளாக யுத்தகளத்தில் கொண்டுவந்து நிறுத்தினான். இப்றுஹீம் உஷத்தர் என்பவரும், அச்சேனையின் எதிரில் தன் சேனையையும் வரிசை வரிசையாக அணிவகுத்து நிறுத்தினார். இவர்களோ தங்கள் உயிர்களை உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டு எதிரிகளின் இரத்தத்தை உறிஞ்சும் ஆத்திரமுடையவர்களாய் வந்து நின்று எதிரிகளின் மேல் மூர்க்கமான திருஷ்டியைச் செலுத்தினார்கள். இதற்குள் பஹுறும் என்பவன் யுத்தகளத்தில் வந்து குதித்தும் துள்ளியும் ஆரவாரம் செய்தான். இவனைக்கண்டு ஹாரிசு என்பவர் புறப்பட்டு அவன் எதிரில் வந்து நின்றுகொண்டார். அப்போது உடனே ஷை பஹுறும் என்பவன் ஹாரிசு என்பவரைக்கண்டு "ஓ சிறுவனே, நீர் யார், உன்னுடைய நாமம் என்ன? இன்னும் உன்னுடைய முகத்தின்மேல் வாலிப் பசமை வரவில்லையே, இதற்குள் நீ சாக வந்தாயா?" என்று சொன்னான். ஹாரிசு என்பவர் இதைக்கேட்டு "ஓ பஹுறும் என்பவனே, என்பேர் ஹாரிசாயிருக்கிறது. இப்றுஹீம் உஷத்தர் என்பவரே என் பிதாவாயிருக்கிறார்" என்று சொன்னார். இதைக்கேட்டு ஷை பஹுறும் என்பவன் உடனே ஹாரிசு என்பவர் மேல் பாய்ந்து தன் பட்டயத்தால் அவரைத் தாக்கினான். அவ்வடியை அவர் தந்திரத்தோடு தட்டிவிட்டுத் தானும் தன் வாளால் அவனைத் தாக்கினார். இருவரும் சற்றுநேரம் இவ்வாறு உக்கிரத்தோடு வாள் யுத்தம் செய்யும்போது, பஹுறும் மிக்க கோபாவேசமடைந்து முரட்டுத்தனமாய் அவரைப் பலதரம் தாக்கினான். சூட்சும புத்தியுடைய ஹாரிசு என்ற வாலிபர் சமயம் பார்த்திருந்து அவன் ஒரு வீச்சு வீசி மறுபடி கத்தியை மேலே தூக்குவதற்குள் தன் வாளால் அவன் மண்டைமேல் பலத்த ஒரு அடி கொடுத்தார். அதனால் அவன் மண்டை யிரண்டாய்ப் பிளந்து மூளை சிதறி பூமியில் சவமாய் விழுந்தான். தங்கள் தலைவன் மடிந்ததைக் கண்ட சேனைகள் மிக்க துயரமும் கோபமுமடைந்து நமது தலைவனைக்கொன்ற இச்சிறுவன்மேல் பழிவாங்காது விடலாகாதென்று எல்லோரும் ஏகோபித்து தலையில்லா சேனையாயிருந்தும் ஹாரிசு என்பவரோடு ஒரு ஜாமம்வரை இரத்தப்பழியான யுத்தம் செய்தார்கள். ஷை ஹாரிசு என்பவரோ வீரியமுள்ள சிங்கமானவராயிருந்தார். இவருடைய முகத்தில் ஜெயத்தின் பிரகாசம் ஜொலித்துக்கொண்டிருந்தது. இவருடைய கண்களோ சத்துருக்களின் கொலைகளால் வெறிகொண்டவைகளாயிருந்தன. யுத்த பிரியராயும் பராக்கிரமசாலியாயுமிருந்தார். பின் செல்லாமல் நின்ற நிலையில் இருந்துகொண்டே யுத்தம் செய்கிற

இவர் முன் நிற்கமுடியாமல் சக்கபார் தேசத்து போர்ச்சேவகர்களில் மடிந்தவர்கள் போக மீதமாயிருந்தவர்கள் அலங்கோலமாய்ச் சிதறி யோட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள்.

இப்ருஹீம் உஷத்தர் என்பவர் சத்துருக்களின் சேனையை நிமிஷத்தில் வெட்டி நாசமாக்கி ஜெயங்கொண்டு ஆண்டவனுடையவும் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடையவும் ஹம்துஞ் ஷுக்ருஞ் செலுத்தினார். பின்னும் அவர் அரசாதிப ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா, அவர்களுடைய பாதங்களைத் தரிசிக்க திமிஷ்க்கு தேசத்தை நோக்கிப் புறப்பட்டார். அவர் நாள்தோறும் பயண ஸ்தலங்களைக் கடந்துபோய்க் கொண்டிருந்தார்.

இப்ருஹீம் உஷத்தர் என்பவர் முஹம்மது ஹனீப்ஷா அவர்களிடம் வந்து சேர்ந்ததும், நாலு பேர்களுடைய சேனையும், எஜீது என்பவனுடன் யுத்தம் செய்ததும்.

ஜெயசூரரான ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் வழக்கப்படி ஒரு நாள் யுத்தகளத்தில் வந்து நின்று யுத்தம் செய்துகொண்டிருந்தார். அன்றைய தினம் கைசு என்று பேருள்ள ஒரு சூரன் இவர்களோடு யுத்தம் செய்ய எத்தனித்தான். அவனோ வெகு உயர்ந்த மலையைப்போல உயரமுள்ளவனாயிருந்தான். அவனுக்கு அநேக பிள்ளைகளும் சகோதரர்களுமிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் அவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தவர்களாயும் உடலையும் உயிரையும் இவனுக்குத் தத்தம் செய்தவர்களாயு மிருந்தார்கள். இவன் அளவற்ற திரவியமுள்ளவனா யிருந்தான். பின்னும் இவனுக்கு நூற்றிருபத்தைந்து பொக்கிஷங்கள் இருந்தன. இதுவும் தவிர வேறு ஏராளமான சொத்துகளுமிருந்தன. இவன் எஜீது என்பவன் சமுகத்திற்போய் நின்று தன்னுடைய பெருமையைப் பாராட்டி, "முஹம்மது ஹனீப்ஷா என்பவருடன் யுத்தம் செய்யத் தாங்கள் எனக்குச் செலவு கொடுத்தால் நான் இன்றைய தினம் என் குடும்ப சகிதம் போய் [illegible] முஹம்மது ஹனீப்ஷா என்பவருடன் எவ்வித தந்திரத்தோடு யுத்தம் செய்வேனோ அதை நீங்கள் நாலு கண்களால் பார்ப்பீர்கள். பின்னும் தாங்கள் அதைக்கண்டு வெகு ஆச்சரியப்படுவீர்கள்" என்று சொன்னான். எஜீது என்பவன் இதைக்கேட்டு வெகு சந்தோஷப்பட்டு

அவனைத் தன்னிடம் அழைத்துத் தன் கழுத்தோடு அணைத்து அவனைத் தன் ஆசனத்தில் உட்கார வைத்துக்கொண்டு முகஸ்துதியான வார்த்தைகளைப் பேசி சாராயம் நிறைந்த கின்னிகளை அவனுக்குக் குடிக்கக் கொடுத்தான். இதுவுமன்றி வெகு விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும் ஏராளமான நவரத்தினங்களையும் அவன் சந்தோஷமடையும்படி அவனுக்குக் கொடுத்து, அவன் வசம் அளவற்ற சேனையையும் கூட்டி அவனைக் கோட்டைக்கு வெளியில் யுத்தம் செய்யும்படி யனுப்பிவிட்டுத் தன் மாளிகையின் மேல்மாடியில் ஏறி உட்கார்ந்தான்.

பின்பு [illegible] கைசு என்பவன் யுத்தகளத்தில் வந்து நின்று சேனையை வரிசை வரிசையாக அணிவகுத்து நிறுத்தினான். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் புறப்பட்டு யுத்தகளத்தில் தன் சேனைக்குச் சேனாதிபதியாய்ப் போய் நின்றிருந்தார். அப்போது அந்தக் கைசு என்பவன் எவன் சூரனாயிருக்கிறானோ, எவனுக்கு மரணம் பிரியமாயிருக்கிறதோ அவன் என் முன்னுக்கு வரலாம் என்று கூவினான். இதை உமர் அலி என்பவர் கேட்டு இராஜ சிங்கமான ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகம் போய்க் கைசு என்பவனோடு யுத்தம் செய்யத் தனக்கு அனுமதி யளிக்கும்படி கேட்டான். அதற்கு அவர்கள் "ஓ என் சகோதரரே, நீர் போய் இந்த அக்கினி மேடையை நிவர்த்திவிடும். அவனைக் கொன்று விடும். நான் உம்மை ஆண்டவன் வசம் செய்திருக்கிறேன்; அவன் உமக்குத் துணைசெய்து ஜெயத்தைத் தருவான்" என்று சொல்லி உத்தரவு கொடுத்தார்கள். அப்போது அவர் அவ்வரசருடைய பாதங்களை முத்தமிட்டுக் குதிரையின்மேல் ஏறி ஆண்டவன் மேல் பாரம் போட்டுத் துரிதமாய் யுத்தகளத்திற்கு வந்தார். கைசு என்ற பாவி அவரைக்கண்டு "ஓ உமர் அலி என்பவனே, ஏன் சாக வந்தாய். உனக்கு மரணம் பிரியமாயிருக்கிறதா, நீ என் எதிரில் எம்மாத்திரமானவனா யிருக்கிறாய்" என்று சொல்லித் தன் வாளைக் கையிலேந்தி அவரோடு யுத்தம்புரியப் புறப்பட்டான். இருவரும் போர் புரிய ஆரம்பித்து சற்று நேரத்திற்குள் கைசு என்பவனுடைய வாளால் உமர் அலியின் புரவி மடிந்துவிட்டதால் அவர் பாதசாரியாய் விட்டார். இதின்பின் இவ்விருவரும் செய்யும் வாட்போரைக்கண்ட சூரர்களெல்லாம் மனங்கலங்கிவிட்டார்கள். அப்பட்டங்கள் ஒன்றோடொன்று

தாக்கும் சத்தம் இரணகளமெங்கும் ஒலித்தது. இதற்குள் பகல் மூன்றும் ஜாமம் வந்துவிட்டது. இப்படியிருந்தும் ஒருவர்மேல் ஒருவர் பட்டய வீச்சுகள் வீசிக்கொண்டே யிருந்தார்கள். இவ்விருவர்களில் உமர் அலி என்பவரோ தெம்பில்லாமலிருந்தார், கைசு என்பவனோ காட்டெருமையா யிருந்தான். இப்படிப்பட்ட சமயத்தில் இப்றாஹீம் உசுத்தார் என்பவர் தன் சேனையுடன் அங்கு வந்து சேர்ந்தார். பின்னும் இவர் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் குதிரையின் மேல் ஏறி சத்துருக்களின் தலைகளின்மேல் உக்கிரங்கொண்டு இந்தத் தைப்போலப் பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டு அவர்களுடைய வலதுபக்கத்தில் வெகு மரியாதையுடன் வந்து நின்று "ஓ என் கலீபாவே, ஜெயம் தங்களுக்கு மங்களமாவதாக வென்றும், ஆண்டவன் தங்களுக்குச் சத்துருக்களின்மேல் ஜெயம் தந்திருக்கிறான்" என்றும் சொன்னார். பின்பு ஹாரிசு என்பவரோ யுத்தகளத்தின்மேல் திருஷ்டியை வைத்து கைசு என்பவன் யுத்தகளத்திலிருந்து நின்றுகொண்டிருப்பதைக் கண்டு இவரும் ஷெ உமர் அலி என்பவருடைய பக்கத்தில் வந்து நின்றுகொண்டார். ஹாரிசு என்பவர் வந்து நின்றிருப்பதை ஷெ கைசு என்பவன் கண்டு தன்னுடைய சமுதாயத்தார்களை ஜாடை காட்டினான். இவர்கள் எல்லோரும் வெகு வீரியமுள்ள பயில்வான்களா யிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் அச்சாடையை அறிந்து ஓர் கூட்டமாயாக ஏகோபித்து எழும்பி ஷெ ஹாரிசு என்பவரைச் சூழ்ந்துகொண்டார்கள். இவர்மேல் ஆண்டவன் துணையே யிருந்தது. இச்செய்தியைத் தாலிப் அலி என்பவர்கண்டு உக்கிரங்கொண்டு தம்முடைய குதிரையை வெகு வேகமாகச் சுறுசுறுப்புடன் விட்டு உமர் அலி என்பவரிடம் வந்து சேர்ந்து கைசு என்பவன் தலைமேல் குருஜு என்ற ஆயுதத்தால் தாக்கினார். அந்தக் குருஜு என்ற ஆயுதமோ அப்பாவியின் பிடரியின்மேல் போய்ப் பட்டது. அவ்வடியால் அவனுடைய நெஞ்சு பிளந்து எலும்புகள் முறிந்துபோய்விட்டன. அவன் இரத்தம் கக்கிக்கொண்டு பூமியில் விழுந்து மடிந்தான். கைசு என்பவன் மடிந்ததையறிந்த அவனுடைய குடும்பத்தாருக்கு வெகு துக்கமுண்டாய்விட்டது. கைசு என்பவனுடைய சேனையில் மீதியிருந்தவர்கள் எல்லோரும் பயந்து திகைத்து ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள்.

எஜீது என்பவன் கைசு என்பவனுடைய சங்கதியைப் பார்த்து உடனே சேனையைத் திருப்பிக்கொள்ளும்படி மர்வான் என்பவனுக்குக் கட்டளையிட்டான். அவன் அவ்வாறே பேரிகை யடித்து சேனைகளைத் திருப்பிக்கொண்டான்.

அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய சேனையுடன் திரும்பி தம்முடைய விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள். இப்படி வந்து சேர்ந்தபின் இப்றாஹீம் உசுத்தார் என்பவரைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு அவரைப் புகழ்ந்தார். பின்னும் நாள்தோறும் இத்தன்மையாகவே அவ்வரசரானவர் யுத்தகளத்துக்குப் போய் எஜீது என்பவனுடைய சேனையுடன் யுத்தம் செய்துகொண்டும், ஜெயம் அடைந்துகொண்டு மிருந்தார். இச்சங்கதியை இம்மட்டில் நிறுத்தி எஜீது என்பவனுக்கு உதவிசெய்ய வேண்டியதற்காக வந்துகொண்டிருந்த ஹபஷ் தேசத்து சேனையின்மேல் யுத்தம் செய்யப் போயிருந்த தோகான், மோகான் என்பவர்களுடைய சங்கதியை யியம்பத் தொடங்குவாம்.

தோகான் என்பவரும் மோகான் என்பவரும் ஹபஷ் தேசத்து சேனையுடன் யுத்தம் செய்தல்.

தோகான், மோகான் என்ற இவ்விருவர்களும் ஹபஷ் தேசத்து சேனையின்மேல் யுத்தம் செய்ய எப் அதுல்லாஹ் மாயஷா அல்லாஹு வென்று சொல்லிக்கொண்டு அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைவிட்டுப் புறப்பட்டார்கள். இவ்விருவர்களும் ஹசரத்து இமாம் ஹுஸைன் அவர்களுடைய துக்கத்தால் மனம் நொந்தவர்களா யிருந்தார்கள். இவர்கள் அச்சேனையை நாசமாக்கப் போய்க்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய மனங்களில் தங்கள் உயிர்களைப்பற்றிய கவலை கொஞ்சங்கூட இருந்ததில்லை. இவர்கள் பாதையில் எங்கும் சற்றேனும் தங்காமல் இரவும் பகலும் வெகு வேகமாய் நடந்துகொண்டே யிருந்தார்கள். இவர்கள் எத்தனையோ நாள்களுக்குப் பின் ஒரு பயண ஸ்தலத்தில் சேனையுடன் தங்கியிருந்தார்கள்.

அங்கு ஒரு வேவுகாரன் வந்து "ஓ அரசரே, தாங்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஹபஷ் தேசத்து அரசனுடைய சேனை எஜீது என்பவனுக்கு உதவியாக உங்களுடன் யுத்தம் செய்யப் புறப்பட்டு வழியில் தங்கி இருக்கின்றது. அச்சேனையில் வீரமுள்ள ஒன்பது இலட்ச போர்ச்சேவகர்கள் இருக்கிறார்கள்" என்று சொன்னான்.

இச்சங்கதியைத் தோகான் என்பவர் கேட்டு ஒரு நிமிஷம் மவுனமாய் விசாரத்திலிருந்தார். பின்பு அவர் தன் சகோதரராகிய மோகான் என்பவர் பக்கம் திரும்பி "ஓ என் சகோதரனே, நீர் சேனையை ஆயத்தமாக்கும். யுத்தம் செய்யவேண்டும். எதிரி சேனையைக் கொன்று பாழாக்கவேண்டும். மேலும் இப்போதோ இராவேளையாயிருக்கிறது. இதுவே நல்ல சமயமுமாயிருக்கிறது. ஹப்ஷிகளின்மேல் போய் அவர்களின்மேல் விழுந்து இராத்தாக்குதல் செய்ய வேண்டும்" என்று சொன்னார். பின்பு அவர்கள் ஆயுதபாணிகளாகிய தங்கள் சேனைகளோடு புறப்பட்டார்கள். இப்படிப் புறப்பட்ட வேளையானது நடுச்சாமமாயிருந்தது. இவ்வாறு இவர்கள் ஹப்ஷிகளின் சேனைகளைத் தாக்கும்போது அச்சேனாவீரர்கள் எல்லோரும் கடும் தூக்கத்திலிருந்தார்கள். பின்னும் அவர்கள் எல்லோரும் செத்த சவங்களைப்போலப் படுத்துக்கொண்டிருந்தார்கள். இந்தத் துர்க்கி சேனை அவர்களின்மேல் விழுந்து கியாமத்துநாள்வரை அவர்கள் தூங்கிக் கொண்டேயிருக்கும்படி பட்டயங்களால் அவர்களைத் தாக்கினார்கள். இவர்கள் வேட்டைக்காரர்களாயும், அவர்கள் வேட்டைப் பிராணிகளாயுமிருந்தார்கள். இவர்களுக்கு ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய துணையும் உதவியுமிருந்தது. பின்பு இவர்கள் அச்சேனைத் தலைவனை இரண்டு துண்டுகளாக்கிவிட்டார்கள். அச்சேனையின் மூன்றில் இரண்டு பங்கு போர்ச்சேவகர்கள் மடிந்தார்கள். அச்சமயம் பொழுதும் விடிந்துவிட்டது. இப்படி விடிந்தபின் மீதமிருந்த ஒரு பங்கு போர்ச்சேவகர்களும் சங்கரிக்கப்பட்டார்கள். இவர்களில் தப்பித்தவறிப்போயிருந்தவர்கள் ஓடிப்போய்க்கொண்டிருந்தார்கள். இப்படி ஓடுகிறவர்களை [illegible] துர்க்கி குதிரைவீரர்கள் துரத்திச் சென்று கைக்கெட்டியவர்களைச் சங்காரம் செய்துகொண்டிருந்தார்கள். அச்சேனை யெல்லாம் மாண்டுபோக அவர்களுடைய ஆயுதங்கள் சாமான்கள் பொருள்கள் முதலியயாவும் இவர்கள் சூறையாடி எடுத்துக்கொண்டார்கள். இதின்பின் [illegible] தோகான் என்பவரும், மோகான் என்பவரும் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய பாததரிசனத்துக்காகத் திமிஷக்கு தேசத்தின் பக்கம் திரும்பினார்கள். இவர்கள் சேனையுடன் நாள்தோறும் நடந்துகொண்டும் பயண ஸ்தலங்களைக் கடந்துகொண்டு மிருந்தார்கள். இச்சங்கதியை இம்மட்டில் நிறுத்தி அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய மீத யுத்தத்தைச் சொல்வாம்.

தோகான் என்பவரும், மோகான் என்பவரும் அவ்வரசருடன் வந்து சேர்ந்ததும், ஐந்துபேருடைய சேனை ஒன்றாய்க்கூடி எஜீது என்பவனுடன் யுத்தம் செய்ததும்.

ஜெபசிங்கமாகிய அவ்வரசரான முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் வழக்கப்படி யுத்தகளத்தில் வந்து யுத்தம் செய்துகொண்டேயிருக்கும்போது ஒருநாள் எஜீது என்பவன் வெகு ஏராளமான சேனையைக் கோட்டைக்கு வெளியில் யுத்தத்துக்காக அனுப்பினான். அப்போர்ச்சேவகர்கள் எல்லோரும் போர்க்களத்தில் வந்து நின்றார்கள். பின்பு அரசரான முஹம்மது ஹனீப்ஷா அவர்களும், தமது சேனையை யுத்தகளத்துக்குக் கொண்டுவந்து வரிசை வரிசையாய் நிறுத்தினார்கள். அப்போது எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் எல்லோரும் ஏகோபித்து ஹனீப்ஷா அரசர் சேனையின்மேல் விழுந்தார்கள். இந்தத் தருணத்தில் துர்க்கிகள் அதாவது தோகான் என்பவரும், மோகான் என்பவரும் தங்கள் சேனையுடன் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். இருகட்சியாரும் மும்முரமாய் யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். எப்படியெனில் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய சேனையைக்கூட்டிக்கொண்டு எஜீது என்பவனுடைய சேனையின் எதிரில்போய் நின்றார்கள். இதற்குள் எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்கள் ஒன்றாய்க்கூடி ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனையின்மேல் பாய்ந்தார்கள். அப்போது அவ்வரசருடைய போர்ச்சேவகர்களும் தங்கள் குதிரைகளை ஓட்டமாய் எதிரியின் சேனையின்மேல்விட்டுத் தாக்கினார்கள். இவ்விருதரத்தாருடைய போர்ச்சேவகர்களும் தலையோடு தலை, மார்போடு மார்பு நெருங்கும்படி கைகலந்து சண்டையிடத் தொடங்கினார்கள். வீரர்களின் வீராவேச கோஷ்டமும், கத்தியோடு கத்தி, ஈட்டியோடு ஈட்டி, குருஜோடு குருஜு முதலிய ஆயுதங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் கோஷ்டமும் கடலொலிபோல் வானமெங்கும் நிறைந்தது. ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ கர்ஜித்தல் மேல் கர்ஜித்தல் செய்துகொண்டு பகையாளிகளின் தலைகளைப் பனங்காய்கள்போல் பூமியின்மேல் உருட்டிக்கொண்டிருந்தார். இத்தருணத்தில் தோகான் என்பவரும் மோகான் என்பவரும் தங்கள் சேனாசகிதம் எஜீது என்பவனுடைய சேனையின் பின்புறமாய்

வந்து வளைந்துகொண்டு தாக்கத் தொடங்கினார்கள். இப்பேர்ப்பட்ட கடின யுத்தத்தில் அவ்விருவர்கள் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைத் திடீரென்று கண்டு அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டு அல்லாஹு அக்பர் ஆண்டவன் ஜெயத்தைத் தந்தான் என்று சொன்னார்கள். அப்போது அவ்வரசரானவர் அவர்களைக் கண்டு சந்தோஷப்பட்டுப் பலசாலிகளே நீங்களும் கூடச் சேர்ந்து வெட்டுங்கள். அவர்களை நாசமாக்குங்களென்று சொன்னார்கள். இவ்விதமான உத்திரவு அவர்கள் பெற்று எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களைப் பட்டயத்தால் வெட்டவும், துண்டுதுண்டாக்கவும், நாசமாக்கவும் தொடங்கிச் சற்று நேரத்திற்குள் அவர்களை யணிகுலைந்து அலங்கோலமாய்ப் பறக்கும்படி செய்தார்கள்.

எஜீது என்பவனோ தன் சேனையின் கேடான இவ்வித நிலைமையைக் கண்டு துக்கத்தின் மேல் துக்கமடைந்து ஓ மர்வான் என்பவனே! சேனையைத் திருப்பிக்கொள் என்று சொன்னான். அப்போது மர்வான் என்பவன் நக்காராவை அடித்து யுத்தத்தை நிறுத்திவிட்டு மாண்டுபோன போர்ச்சேவகர்கள் நீங்கலாக மீதமிருந்த எல்லாப் போர்ச்சேவகர்களைத் திருப்பிக்கொண்டு சென்றான். பின்பு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் ஜெயபேரிகை முழக்கத்துடன் தமது சேனையைத் திருப்பிக்கொண்டு பாசறை போய்ச் சேர்ந்தார்கள். இதின்பின் நோமான் என்பவரும், ஹோமான் என்பவரும் சாவகாசமாய் அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகத்தில் போய் அவர்கள் பாதங்களின்மேல் விழுந்து வணங்கினார்கள். அப்போது அவர்கள் அவர்களைத் தூக்கித் தன் நெஞ்சுடன் அணைத்து அவ்விருவர்களையும் புகழ்ந்தார்கள். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அதே தன்மையாய் நாள்தோறும் எஜீது என்பவனுடன் யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய இருபுஜம் ஷஹீதானது.

அரசரானவராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் நாள்தோறும் எஜீது என்பவனுடைய சேனைகளோடு யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். எஜீது என்பவன் எப்போது பெருத்த சண்டையைக் கண்டானோ அப்போது அவன் துயரமும் கோபமுமடைந்து மர்வான் என்பவனைப் பார்த்து, "ஓ மர்வான் என்னும் நண்பனே! இப்போது நீ சீக்கிரமாய் ஆயத்தமாய்ப் போவாயாக. நானே குதிரையின்மேல் ஏறிச் சேனையுடன் யுத்தகளத்தில் போய் யுத்தம் செய்வேன் என்று நான் உனக்கு இதற்கு முன்னமே சொல்லி இருந்தேன் அல்லவா அதன்பிரகாரம் நான் இப்போது புறப்படுகிறேன். ஆகையால் நீ இப்போது சேனையின் கணக்கை எனக்குச் சொல்லுவாயாக" என்று சொன்னான். அதற்கு மர்வான் என்பவன் "ஓ ராஜனே செத்தவர்கள் நீங்கலாக இப்போது ஆயத்தமாயிருக்கும் போர்ச்சேவகர்கள் கணக்குப்படி நான்கு இலட்சம் போர்ச்சேவகர்கள் இருக்கிறார்கள். தவிர அம்பு எய்கிறவர்கள் நாற்பதினாயிரம் பேர்களும், பேர்பெற்ற சூரர்கள் அனேகரு மிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் உயிர் கொடுக்க அஞ்சாதவர்களாயும், வஞ்சகம்செய்யத் தகாதவர்களாயும், வீரர்களாயு மிருக்கிறார்கள்," என்று சொன்னான். இதை ௸ எஜீது என்பவன் கேட்டு "ஓ மர்வான் நாளைய தினம் யுத்தகளத்திற்போய் யுத்தம் செய்ய நீ ஆயத்தமாய்ப் போ. நீ இவர்கள் எல்லோரையும் உன்னுடன் வைத்துக்கொண்டு விடிந்தவுடன் அவ்வரசனாகிய முஹம்மது ஹனீப்ஷா என்பவன்மேல் போய் விழுந்து இச்சேனையைக்கொண்டு அவனைச் சூழ்ந்துகொள். பின்னும் நீ நின்ற நிலையாய் நின்று பட்டயத்தைப் பிடித்து சேனாபதி யுத்தியோகத்தை நிறைவேற்றுவாயாக. பின்னும் நீ அவ்வரசனுடைய எல்லாச் சேனையையும் சங்காரம் செய்து ஜெயசீலனாய்த் திரும்பி வருவாயாக. நான் கமந்து எனற சுருக்குகளைப் போடுகிறவர்களையும் யானைகளையும் அழைத்துச் செல்கிறேன். அவைகளைக்கொண்டு நான் முஹம்மது ஹனீப்ஷா என்பவரைப் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்று சொன்னான். இவ்வித சபாஷணையிலும் ஆலோசனையிலும் இராமுழுமையும் நீங்கிப்போய் விட்டது.

மறுநாள் காலை சூரியன் உதயமானவுடனே மர்வான் என்பவன் இராயோசனையின்படி முஹம்மது ஹனீப்ஷா என்பவரின்மேல் யுத்தம் செய்ய நான்கு லட்சம் சேனையுடன் புறப்பட்டான். அப்போது அச்சேனைகள் சமுத்திர அலைகளைப்போலப் புறப்பட்டன. ௸ மர்வான் என்பவன் யுத்தம் செய்ய யுத்தகளத்தில் வந்து நின்றான். அக்களத்தில் ஒரு எள்ளளவு இடமும் காலியாயிருக்கவில்லை. பின்பு எஜீது என்பவன் கமந்து போடுகிறவர்களையும், யானைகளையும் தன்னுடன் இட்டுக்

கொண்டு அக்களத்தில் வந்து நின்றான். இவன் மர்வான் என்பவனைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு நின்றிருந்தான். அப்பால் அவன் தன்னுடைய சேனையையெல்லாம் அணிவகுத்து நிறுத்தினான்.

எஜீது என்பவன் இன்றைக்கு யுத்தம் செய்யத் தானே புறப்பட்டிருக்கிறான் என்ற செய்தி, ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்குத் தெரிந்தது. அப்போது அவர்கள் தம்முடைய எல்லாச் சேனையையும் யுத்தத்திற்கு ஆயத்தமாக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் யுத்தகளத்தில் வந்து நின்று எஜீது என்பவனுடைய யானைகளின்மேலும் குதிரைகளின் மேலும் சேனைகளின் மேலும் தமது பார்வையைச் செலுத்தினார். அப்போது அவர்கள் விசாரப்பட்டு இன்றைக்கு எனக்கு ஆண்டவனே துணையாயும் காப்பாற்றுகிறவனாயுமிருக்கிறான் என்று சொன்னார்கள்.

அந்நாளானது துர்க்கையுள்ள நாளாயும் அமங்களமுள்ள நாளாயுமிருந்தது. அன்றைக்கோ மிக்க கோரமான யுத்தம் நடந்தது. மர்வான் என்பவன் சேனைகளைக் கிளப்பிக்கொண்டு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனையின்மேலும், அவ்வரசரவர் தமது சேனையை உயர்த்தி மர்வான் என்பவனுடைய சேனையின்மேலும் விழுந்து தாக்கினார்கள். இவ்விருதரத்தாருடைய போர்ச்சேவகர்கள் ஒன்றோடு ஒன்று கலந்து தத்தம் வீரியத்தை காட்டத் தொடங்கினார்கள். எந்த அடி எவனுக்குப் படுகின்றது என்பது எவனுக்கும் தெரியாது அவ்வளவு குழப்பமாயிருந்தது. யுத்தகளத்தில் கிளம்பும் தூசால் வானமெங்கும் இருளாய்விட்டது.

சற்று நேரம் கொடிய யுத்தம் நடந்தபோது இருகட்சியிலும் எண்ணிறந்த பேர் மாண்டு இரணகளத்தில் இரத்தவெள்ளம் ஓடத் தொடங்கியபோது அந்தச் செந்நிறக்குருதியால் புழுதி படிந்து இருள் நீங்கி வானத்தில் மறைந்திருந்த ஆதித்தன் மறுபடி தோன்றினான். ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தமது சேனை யுத்தகளத்தில் உயிரை வெறுத்து யுத்தம் செய்துகொண்டிருப்பதைக் கண்டு தம்முடைய குதிரையையும் எஜீது என்பவனுடைய சேனைக்குள் செலுத்தினார்கள். எப்போது இவர்களை இஸ்லாம் போர்ச்சேவகர்கள் கண்டார்களோ அப்போது அவர்களுக்கு வீரியம் முன்னிலும் அதிகமாய்விட்டது. ஆகையால் இவர்கள் அனிகத்தோடு எஜீது என்பவனுடைய போர்ச்சேவகர்களை வெட்டத் தொடங்கினார்கள். பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களும் இரக்கமின்றி எஜீதுகளைப் பட்டயத்தால் வெட்டினார்கள். எல்லாச் சேனையையும் கீழும் மேலுமாக்கி சிதறடித்தார்கள்.

இவ்வாறு தங்கள் சேனை மடிவதை எஜீது என்பவனும் மர்வான் என்பவனும் அசைவற்று மவுனமாய் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதின்பின் வெட்கம் கெட்ட எஜீது என்பவன் அரசராகிய முஹம்மது ஹனீப்ஷா அவர்களைக்கண்டு இவரைப் பிடித்துக்கொள்ள இதுவே நல்ல சமயமென்று நினைத்து யானைகளின் கூட்டத்தைக்கொண்டு அவர்களைச் சூழ்ந்துகொண்டான். யானைகளுடைய கூட்டங்கள் அவர்களை வந்து சூழ்ந்துகொண்டதே எஜீது என்பவன் வெகு சந்தோஷப்பட்டு இன்றைய தினம் பெரிய வேட்டை அகப்பட்டது. என் எண்ணம் நிறைவேறியது என்று சொன்னான். அளவற்ற யானைகள் நெருங்கித் தம்மைச் சூழ்ந்துகொண்டிருப்பதையும் மைதானம் வெகு நெருங்கிப்போயிருப்பதையும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கண்டதே விசாரப்பட்டார்கள். யானைப்பாகர்கள் யானைகளை அவர்கள்மேல் அதிகமாய் நெருக்கி ஓட்டத் தொடங்கினார்கள். அப்போது அவ்வரசரானவர் எஜீதிகளின் மோச எண்ணத்தை அறிந்து அவ்யானைகளுடைய துதிக்கைகளை வெட்டத் தொடங்கினார். பின்னும் அனேக யானைகளின் கால்களையும் வெட்டிவிட்டார்கள். பின்னும் எவர்கள்மேல் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய பட்டயம் விழுந்துகொண்டிருந்ததோ அவர்கள் வெட்டொன்று துண்டு இரண்டாய் விழுந்துகொண்டிருந்தார்கள். பின்னும் அவர்களுடைய தலைகளோ பனங்காய்கள்போல் பூமியில் உருண்டுகொண்டிருந்தன. இப்படியிருந்தும்கூட எஜீதிகள் யானைகளை மேலுக்குமேல் நெருக்கிக்கொண்டிருந்தார்கள். இதை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கண்டு தமது குதிரையைப் பாயச்செய்து தம்முடைய கோபமுள்ள கையை வீசிக்கொண்டிருந்தார்கள். இப்படிக் கோபத்தால் பட்டயத்தை வீசி அளவற்ற யானைகளை வெட்டிவிட்டார்கள். இப்படி வெட்டிவிட்டுத் தன் எதிரிலிருந்த பாந்தையை

விசாலமாக்கிக்கொண்டார்கள். பின்னும் அவர்கள் அளவற்ற யானைகளை வெட்டிவெட்டிக் குவியல் குவியலாக்கி விட்டார்கள். அப்போது அவ்வரசருடைய திருக்கை அசந்துபோய்விட்டது. எஜீது என்பவன் ஓஹோ ஒருவேளை இவர் தப்பிப்போவார், இவரைப் பிடித்துக்கொள்ளுங்கள்! பிடித்துக்கொள்ளுங்கள்! என்று பெருத்த சத்தத்தோடு கூச்சலிட்டான். பின்னும் "என்ன நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். இப்போது இவர்மேல் கமந்துகள் என்ற கருக்குகளை வெகு சீக்கிரமாய்ப் போட்டுவிடுங்கள்" என்று சொன்னான். அப்போது கருக்கு போடுகிறவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்து ஒருமித்து அவர்கள் மேல் கருக்குகளின்மேல் கருக்குகளைப் போடத் தொடங்கினார்கள். ஆயிரமாயிரமான கமந்துகளை அவர்கள்மேல் போட்டார்கள். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் புத்திசாதுர்யத்தாலும் தந்திரங்களாலும் அக்கருக்குகளை அறுத்துக்கொண்டிருந்தார்கள். எப்போது அச்சிங்கமானவர் அசந்து போனாரோ, அப்போது அவர்களுடைய திருதேகத்தின்மேல் நூற்றுக்கணக்கான கமந்துகள் விழுந்திருந்தன பாருங்கள், எப்படிச் சிங்கம் வலையில் அகப்பட்டுப்போகின்றதோ அம்மாதிரி இருலோக எஜமானனும் சக்கிரவர்த்தியுமான முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சிறையாய்ப் போனார்கள். எப்போது இவர்கள் சிறையாய்ப் போனார்களோ அப்போது வானமும் பூமியும் எஜீது என்பவனைத் தூஷிக்கத் தொடங்கின. ஹனீப்ஷா அவர்களுடைய ஒவ்வொரு அவயவங்களின் மேலும் கருக்குகள் விழுந்திருந்தன. அப்போதுதான் அவர்கள் அசக்தராய்ப் போனார்கள். அப்போது ஷைத்தானாகிய மர்வான் என்பவன் அவர்களிடம் வந்து அவர்களைப் பார்த்தான். அவ்வரசரானவரோ யானைகளின் கூட்டத்தால் சூழப்பட்டவர்களாயும் கமந்துகளில் கட்டப்பட்டவர்களாயுமிருந்தார்கள். அன்பர்களே பாருங்கள். விதியின் காரியமோ மேலானதாயிருக்கிறது. வானசக்கிரமோ அவ்வரசர்மேல் ஆபத்தைக் கொண்டுவந்து விட்டது. ஆதிநாளில் எது எழுதப்பட்டிருக்கிறதோ அது தவறமாட்டாது. அதுநடந்தே தீரும். அவ்விஷயத்தில் ஒருவருடைய பிரயத்தனமும் நடக்கக்கூடியதல்ல. அப்படி

அகப்பட்டுப் போயிருந்த அவ்வரசரை அந்த நீசனும் ஹராமியுமான மர்வான் என்பவன் கண்டு அவர்கள் சமீபம் வந்து அவர்களைப் பார்த்து ஓ ஹனீப்ஷா என்பவரே, இதே கையைக் கொண்டல்லவா எங்கள் போர்ச்சேவகர்களை நீர் வெட்டினீர். ஆகையால் நான் இப்போது அதின் பதிலை உமக்குத் தருகிறேன் என்று சொல்லி அவர்களுடைய திருபுஜத்தைப் பட்டயத்தால் வெட்டிவிட்டான். அந்தப் புஜம் வெட்டப்பட்டது. இப்படி மர்வான் என்பவன் வெட்டினதை எஜீது என்பவன் கண்டு ஓ ஹோ மர்வான் என்பவனே என்ன செய்தாய். பத்திரம். அவரை ஒன்றும் செய்யாதே என்று அதட்டி பெருத்த சத்தத்தோடு சொன்னான். பின்னும் அவன் இவரை இவ்விடத்தில் கொல்லலாகாது. இவரை உயிரோடு திமிஷ்க்கு தேசத்துப் பட்டணத்துக்குள் கொண்டு போகவேண்டும் என்றும் இவரை எல்லோரும் சேர்ந்து பலத்தோடு பிடித்து எழுப்பி யானையின் மேல் வைத்துப் பலமாய்க் கட்டிவிடுங்கள் என்றும் சொன்னான். பின்பு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களை யானையின்மேல் தூக்கிவைத்துப் பலமாய்க் கட்டினார்கள். இவ்வேளையில் உமர் அலி என்பவருடைய பார்வை அவ்யானையின் மேல் போய் விழுந்தது. அப்போது அவர் அழுது துக்கப்பட்டுத் தம்முடைய முகத்தின் ரோமங்களைப் பிடுங்கவும், முகத்தைக் கிள்ளவும் தொடங்கினார். பின்னும் எஜீது என்பவன் இவரை வெகு சீக்கிரமாய்க் கொண்டுபோங்கள். இப்போது நீங்கள் மௌலா அலி அவர்களுடைய குமாரர்களுக்குப் பயப்படுங்கள். அவர்கள் எல்லோரும் பெரிய பலாட்டியராயிருக்கிறார்கள். ஒரு நிமிஷத்தில் இரத்தங்களால் பூமியைச் சிவப்பாக்கி விடுவார்கள் என்று சொன்னான். பின்னும் அவன் மௌலா அலி அவர்களுடைய குமாரர்கள் திடீரென்று மின்னலைப்போல் பாய்ந்து எதிர்த்துத் தன் அரசருக்குப் பதிலில் என்னை மடக்கிக்கொள்வார்கள். என்னைப் பிடித்துக்கொள்வார்கள். பின்னும் அவர்கள் எனக்கு என்னென்ன கெடுதிகளைச் செய்வார்களோ தெரியாதே என்று நடுங்கிக்கொண்டிருந்தான்.

அவன் இவ்விதம் பயத்தோடு அவ்வரசரைக் கோட்டைக்குள் வெகு சீக்கிரமாய்க் கொண்டு போனான். இதின்பின் அவ்வரசருடைய சகோதரர்களும் சமஸ்தர்களும் வியாகுலப்பட்டு அழுத்

தொடங்கினார்கள். பின்னும் இவர்கள் உலர்ந்தும் வறண்டும் போன உதடுகளுடனும், அமிர்தம் வற்றிப்போன நாவுடனும், பலவீனமாயும் மயக்கமாயும் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் கோட்டைக்குள் போகவும் தங்களுடைய சக்கிரவர்த்தியை விடுவித்துக்கொண்டு வரவும் அசக்தர்களாயிருந்தார்கள்.

எஜீது என்பவன்* அவ்வரசரைக் கொண்டு போனதின் பின் ஓ பிரபுக்களே, இப்போது நீங்கள் சந்தோஷமாக ஜெயபேரிகை அடியுங்கள் என்று சொன்னான். அப்போது அவர்கள் எல்லோருக்கும் தெரியும்படிக்கும், அவர்கள் அறிந்துகொள்ளும்படிக்கும் உடனே ஜெயபேரிகைகளை அடிக்கத் தொடங்கினார்கள். பின்னும் வேணுகளும், முரளிகளும், வேய்ங்குழல்களும், எக்காளம், பேரிகைகளும், சங்கநாதங்களும் முழங்கப்பட்டன. மேளங்களும், பறைகளும், டமங்களும் எங்கும் கடலொலிபோல் சப்தித்தன.

அப்போது இந்தச் சந்தோஷ மேளங்களுடைய சத்தத்தைச் சிறையாயிருந்த ஹசரத்து இமாம் ஜைனுல் ஆபிதீன் அவர்களும், ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டார்களும் கேட்டு, "ஓ காவல்காரனே! இன்றைக்கு என்ன விசேஷமிருக்கிறது. சந்தோஷத்தின்மேல் சந்தோஷத்தின் மேளங்கள் எக்காரணத்தால் அடிக்கப்படுகின்றன" என்று தங்கள்மேல் காவலாயிருந்த காவலாளி இடத்தில் கேட்டார்கள். அதற்கு அக்குரூரரும், முரடருமான காவலர் "ஓ துர் அதிஷ்டர்களே, உங்கள் அதிஷ்டம் உங்களுக்கு இப்போது உதவி செய்யத்தக்கதாயிருக்கவில்லை. உங்கள்மேல் இன்னும் உலகச் சக்கிர கெடுதியிருக்கின்றது. உங்களுக்கு அடைக்கலமும் சரணமுமில்லை. உங்களை விடுவிக்க வந்த அரசராகிய முஹம்மது ஹனீப்ஷா என்பவரை எஜீது என்ற எங்களரசர் பிடித்துச் சிறையாக்கிக்கொண்டு வந்திருக்கிறார். பின்னும் அவருடைய கையையும் வெட்டிவிட்டார். ஆதலால் இப்போது எஜீது என்பவன் சந்தோஷத்தால் ஜெயபேரிகை அடிக்கிறார்" என்று சொன்னார்கள்.

இந்த துக்க வார்த்தைகளை ஹசரத்து ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டுத் தமது தலைப் பாகையைப் பூமியின்மேல் எறிந்துவிட்டார்கள். பின்னும் பிபீ உம்முஸ்ஸலீமஹ் நாச்சியாரும் அழவும், அலறவும், கதறவும் தொடங்கினார்கள். பின்னும் அவ்வீட்டார் தம் கைகளை ஆண்டவன் சன்னதியில் எடுத்து "ஓ ஆண்டவனே! ஓ எங்கள் எண்ணங்களை நிறைவேற்றுகிறவனே! எங்கள் குற்றங்களை மன்னிக்கிறவனே! எங்கள் தோபாவை கபூல்செய். பின்னும் நாங்கள் சீக்கிரமாய் விமோசனமடையும்படிக்கான வழியை நீ எங்களுக்குக் காட்டுவாயாக. பின்னும் உலகத்தில் அவ்வரசராகிய முஹம்மது ஹனீப்ஷா என்பவரே எங்கள் வீட்டார் எல்லோருக்கும் ஆதரவாயிருந்தார். யாவர்க்கும் அவரே உதவிக்காரராயிருந்தார். நீ அவரை எஜீது என்பவன் கையில் சிறையாக்கிக் கொடுத்தாய். உன் கிருபை இவ்வாறிருந்தது. உன்னுடைய குத்ரத்து உனக்கே ஏற்றதாயிருக்கிறது. நீ அவரைப் பாதுகாப்பாயாக. நாங்கள் உன்னிடம் துஆ செய்துகொள்ளுவது எங்கள் கடமையாயிருக்கிறது. இரட்சிக்கவேண்டியதும் காப்பாற்றவேண்டியதும் உன் கிருபையாயிருக்கிறது. ஓ ஆண்டவனே ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்காக வென்று அவர்மேல் கடாக்ஷத்தின் திருஷ்டி நீ போடுவாயாக" என்று துஆ செய்தார்கள். பின்பு அப்பாவியும் ஹறாமியுமான எஜீது என்பவன் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைத் தம்மிடம் கொண்டுவரச்செய்து அவர்களைத் தன் முன் நிறுத்தி ஓ ஹனீப்ஷா என்பவரே! கலகக்காரராயும் இராஜத்துரோகியுமானவர்களாயிருக்கிறவர் நீராகவே இருக்கிறீர். நீர் எங்கள் மேல் யுத்தநெருப்பைக் கொளுத்தினீர். நீர் எனக்கு மிக்க கெடுதியைச் செய்தீர். இன்றைக்கு உம்முடைய மரணம் என் கையிலிருக்கின்றது. அதை நீர் என் கையால் பெற்றுக்கொள்ளும் என்று சொன்னான். இவ்வித வார்த்தைகளை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் கேட்டு வெகு கோபமடைந்து, அவனை நோக்கி, "ஓ ஹறாமியே, உன்னுடன் நாம் பேசுவது நமக்கு ஏற்றதல்ல. நீ முற்றிலும் நீதியற்றவனாயிருக்கிறாய். உனக்கு வெட்கமில்லை. நீ கடிமனதுள்ளவனாயிருக்கிறாய். உன்னில் இரக்கமில்லை. குற்றமற்றவர்களும் கௌசர் ஜலத்தைப் பகிர்கிறவர்களுமாகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய இருதய கண்டங்களா

யும், ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய கமல உறுப்புகளாயும், பீபி பாத்திமா நாச்சியார் அவர்களுடைய இருகண்மணிகளாயும், என்னுடைய இருதயமும் என்னுடைய உயிராயுமிருந்தவர்களை அகாரணமாயும் அநீதமாயும் கொன்றுவிட்டாய். அப்போ நீ குலமகனும், உயர்ந்தகுல பிறப்புள்ளவனுமிருப்பாயானால் அவர்கள் விஷயத்தில் இவ்வித கொடுமை செய்திருக்கமாட்டாய். ஆனால் அவர்களோ ஆண்டவனுடைய கட்டளையால் மூச்சுக்காட்டாதவர்களாயும், வினயத்தில் இராஜியானவர்களாயுமிருந்தார்கள். அவர்களை நீ வீணாய் கொலை செய்தாய். இவ்வித துரோகியாகிய நீ வெட்கமன்னியில் என்னுடன் பேசுகிறாயே. உன்னுடைய பிறப்போ தேளின் பிறப்பைப்போன்றதாயிருக்கிறது. நீயோ சாராயக்குடியனுமிருக்கிறாய்” என்று சொன்னார்கள். எஜீது என்பவன் இவ்வித கசப்பும் துக்கமுமான வார்த்தைகளை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சொல்லக் கேட்டு மர்வான் என்பவன் பக்கம் திரும்பி “ஓ மர்வான் என்பவனே, இவரை எத்தன்மையாய் எவ்வித வருத்தங்களோடு கொல்லவேண்டுமென்பதை நீ யோசித்து சீக்கிரமாய் என்னுடன் சொல்” என்று சொன்னான். அதற்கு அந்த கன்னசானவன் ஓ அமீரே; இவரையோ உயிரோடு நெருப்பில் போட்டுச் சுட்டு சாம்பலாக்க வேண்டும்; பின்னும் இவருடைய சாம்பலைத் தூற்றி விடவேண்டும். இதுவே இவர் விஷயத்தில் நேர்த்தியான தெண்டனையாயிருக்கிறது என்று சொன்னான். இதை அந்தத் தேள் பிறவியான எஜீது என்பவன் கேட்டு ஓஹோ சரி, அதுவே வெகு நேர்த்தியான சிட்சை என்று சொல்லி இந்தக் கோட்டையின் வெளியில் வெகு நேர்த்தியான ஒரு மலை இருக்கின்றது. அதில் ஒரு கிரகமுமிருக்கிறது. அக்கிரகத்தில் இவரைக் கொண்டுபோய் வெகு கடும்நெருப்பைக் கொளுத்தி அதில் இவரைப் போட்டுச் சுட்டுச் சாம்பலாக்கிவிடவேண்டும் என்றும் சொன்னான்; பின்னும் அவன் தன் பிதாவாகிய மாவியா என்பவருடைய பிரமாணத்தையும் பாழு செய்து இவரை ஒரு வாரத்துக்குப்பின் சுட்டு எரித்து விடவேண்டும் என்று சொன்னான். ஆனால் இப்போது இவரைக் கொண்டுபோய் அதுவரை வெகு பத்திரமாய் வைத்திருங்கள் என்று கட்டளையிட்டான். இதின்பின் அவ்வரசராகிய

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களைக் கொண்டுபோய் வெகு இக்கட்டான இடத்தில் சிறையாக வைத்தார்கள். அப்போது அவர்கள் ஆண்டவனையும் ஹசரத்து நபிநாயகம் அவர்களையும் தியானித்து ஸ்தோத்திரம் செலுத்தி துருது ஓதினார்கள். இச்சங்கதியை இம்மட்டில் நிறுத்தி ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சேனையின் சங்கதியைச் சொல்வாம். அவ்வரசருடைய போர்ச்சேவகர்கள் எல்லோரும் முறிந்த மனமுள்ளவர்களாய் திகிலடைந்து உட்கார்ந்திருந்தார்கள். பின்பு அவ்வரசர்களுடைய சகோதரர்களும் சமதுக்கர்களுமாகிய உமர் அலி என்பவரும், ஆகில் அலி என்பவரும், தாலிப் அலி என்பவரும், உஷத்தார் முஷீப்காக்கா என்பவரும், இப்றுஹீம் என்பவரும், அக்பர் அலி என்பவரும், தோகான் என்பவரும், மோகான் என்பவரும், மற்றும் வியாகூல மடைந்துகொண்டிருந்த சகலரும் வந்து ஓரிடத்தில் கூடினார்கள். அப்போது இவர்களில் ஒருவர் எழுந்து நின்று “ஓ என் சமதுக்கர்களே, நான் சொல்லுவதைச் செவிகொடுத்துக் கேளுங்கள். நாளதுவரை நாங்கள் அவ்வரசருடைய பாதங்களால் பாக்கியங்களை அடைந்துகொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கோ நாங்கள் எங்கள் கிரீடத்தைப் போக்கடித்துக்கொண்டோம். எங்கள் வாழ்நாட்களை நாசமாக்கிக்கொண்டோம். அவர்களோ எங்கள் எல்லோருக்கும் கிரீடமாயிருந்தார்கள். அவர்களோ எங்கள் சமதுக்கராயிருந்தார்கள். அப்பேர்ப்பட்ட எங்கள் எஜமானனை நாங்கள் இழந்துவிட்டோம். அய்யோ அவர்களை நாங்கள் எப்படிக் கண்டுபிடிப்போம். மகா வீரர்களாகிய நாங்கள் இப்போது ஊமையைப்போலவும் குருடர்களைப்போலவும் உட்கார்ந்திருக்கிறோம். இப்போது உலகம் முழுமையிலும் இருள்மூடிக்கொண்டிருக்கின்றது. இப்போது எங்கள்மேல் மரணம் வந்தால் வெகு நலமாயிருக்கின்றது. எங்களை உலகத்திலிருந்துகொண்டு போய்விட்டால் வெகு சந்தோஷமடைவோம். நாங்கள் எங்கள் தலைவரைப் போக்கடித்துவிட்டு இப்போது வீரியத்தையும் வெட்கத்தையும் பாழாக்கி உட்கார்ந்திருக்கிறோம். ஆகையால் இப்போது நாங்கள் எங்கள் ஸ்தலங்களுக்குப் போகலாம் என்று சொன்னார்கள். இதைக் கேட்ட சபையார் எல்லோரும் விசாரமடைந்து கண்ணீர்விட்டுக்

கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்த ஆலோசனையை ஒப்புக்கொள்ளவில்லை.

இதற்குள் முஹீப்காக்கா என்பவர் எழுந்து நின்று "ஓ சமஆக்கர்களே, நாங்கள் எல்லோரும் எங்கள் தேசங்களுக்குப்போய் விட்டால் முதலாவது நாங்கள் அவ்வரசர் விஷயத்தில் மித்திர துரோகிகளாகிறோம். இரண்டாவதோ எஜீது என்பவன் எங்கள் எவரையும் விட்டுவிடாமல் ஒவ்வொருவரையும் பொறுக்கிப் பொறுக்கிக் கொன்றுவிடுவான். எவனையும் உயிரோடு விட்டு வைக்கமாட்டான். இப்படிச்சாவது புருஷத்துவமான காரியமா யில்லை. ஆதலால் இப்போது நாங்கள் சகலரும் ஹாஜருயிருக்கிறோம். எங்களில் ஒருவர்மாத்திரம் இல்லை. அப்படி யில்லாமல் போனால் என்ன ஆய்விட்டது. எங்களுக்குத் தலைவனாக ஒருவர் இல்லாமலிருப்பதால் நாங்கள் இப்போது ஒருவரை எங்கள் தலைவராக நியமித்துக்கொண்டு திமிஷக்கு தேசத்தின்மேல் படையெடுத்துச் செல்வோம் வாருங்கள். நாங்கள் செய்யும் யுத்தமானது ஆண்டவனுக்காகவும் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காகவுமே இருக்கிறது. ஆகையால் முதுகுக் காட்டி ஓடிப்போவது வெட்கக் கேடாயிருக்கிறது. ஒருவேளை யுத்தத்தில் நாங்கள் மாண்டுபோவோமாகில் அப்போதும் வெகு உத்தமமாயிருக்கும். நாங்கள் ஜெயித்துக்கொள்வோமாகில் அப்போது எங்கள் அரசரானவரை மீட்டுக்கொண்டு வந்துவிடுவோம். பின்னும் எஜீது என்பவனையும் கொன்று விடுவோம். இதுவே உத்தமம். இதுவே நலம். இப்படிச் செய்யாமல் இருப்போமாகில் நாங்கள் அப்போது நபும்சகர்களாவோம். துரோகிகளுமாவோம். இதுவே என் அபிப்பிராயம்" என்று வெகு யுத்திபுத்தியுடன் சொன்னார்.

இதை அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சகோதரர்கள் கேட்டு இந்த யோசனையே வெகு உத்தமமாயிருக்கிறது என்று சொல்லி நாங்கள் இப்போது உம்மையே தலைவராக்கிவிடுகிறோம். ஆகையால் நீரே தலைவராயிருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை முஹீப்காக்கா என்பவர் கேட்டு சற்று ஆலோசித்து ஹசரத்து மௌலா அலீ அவர்களுடைய சந்ததியை இதுவரை ஆண்டவன் வைத்திருக்கிறான். எப்படியென்றால் அலீ அக்பர் என்பவர் ஹசரத்து மௌலா அலீ அவர்களுடைய குமாரராயிருக்கிறார். இப்படி இவரிருக்க நான் எப்படித் தலைவனா யிருக்கக்கூடும். அது என்றால் கூடாத காரியமாயிருக்கிறது. உலகத்தில் இவ்விதமாய் நடந்திருக்கவில்லையே. பின்னும் உமர் அலீ என்பவரோ ஹசரத்து மௌலா அலீ அவர்களுடைய கர்ப்பப்பிறப்பானவராயும், அரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சகோதரராயும், இரண்டாவது அரசராயு மிருக்கிறார். ஆகையால் இவர்களையே நீங்கள் எல்லோரும் தலைவராக்கிக்கொண்டு திமிஷக்கு தேசத்தின்மேல் போய் யுத்தம் செய்யுங்கள்" என்று சொன்னார். அப்போது இதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

மாஹியா என்பவன் அவ்வரசருடைய சகோதரராகிய உமர் அலீ என்பவர் பேருக்கு எழுதிய கடிதம்.

மாஹியா என்று பேருள்ள ஒருவன் திமிஷக்கு தேசத்தில் இருந்துகொண்டிருந்தான். இவனோ தெளிவான அந்த மனமுள்ளவனும், ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய குடும்பத்தின் சிநேகிதனும் அபிமானியாயுமிருந்தான். இவன் பிரபுவாயிருந்தான். பின்னும் இவன் எஜீது என்பவனிடத்தில் மந்திரியாயும் அக்குடும்பத்தின் விசுவாசியாயுமிருந்தான். எப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சிறைப்பட்டு போனார்களோ அப்போது அவன் வெகு துக்கமுள்ளவனானான். பின்னும் இவன் உமர் அலீ அவர்கள் பேரால் ஒரு கடிதத்தை யெழுதி அவரிடம் அனுப்பினான். அஞ்சல்காரன் அக்கடிதத்தைக் கொண்டுவந்து வெகு பயபக்தியுடன் உமர் அலீ அவர்களிடம் கொடுத்தான். அவரோ அதை வாங்கிப் படித்தார். அக்கடிதத்தில் "ஓ ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய சமஆக்கர்களே, நீங்கள் எல்லோரும் வெகு ஜாக்கிரதையாயிருங்கள். அவ்வரசரை நெருப்பில்போட்டுச் சுட்டெரித்து சாம்பலாக்கி விடவேண்டுமென்று பாவியாகிய எஜீது என்பவன் ஷைத்தானாகிய மர்வான் என்பவனோடு ஆலோசித்துத் தீர்மானித்திருக்கிறான். பின்னும் இப்பட்டணத்துக்கு வெளியில் ஒரு மலையில் ஒரு சிறை யிருக்கிறது.

அதுவோ பாழான கிரகமா யிருக்கிறது. அக்கிரகத்தில் விறகுகளைக் குவியலாக்கி அதைக் கொளுத்தி அதில் அவர்களைப் போட்டு சுட்டெரித்து விட இன்ன தினத்தின் காலையில் அவர்களை இவ்விடத்தி லிருந்து அவ்விடம் கொண்டுபோகப் போகிறான். நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும், பின்னும் ஓ சஹாக்களானவர்களே, உங்களுடைய விசுவாசம் நிலையுள்ளதாயும், பூர்த்தியுள்ளதாயு மிருக்குமாகில், அவர்களுக்காக நீங்கள் வந்திருந்து தங்கள் வீரியத்தையும் பராக்கிரமத்தையும் பலத்தையும் காட்டியும் செலுத்தியும் நீங்கள் எல்லோரும் ஒருமிக்க சேர்ந்து பாய்ந்து உங்கள் அரசரானவரைக் கொண்டுபோய் விடுங்கள். இப்பேர்ப்பட்ட சமயம் உங்களுக்கு ஒருபோதும் வாய்க்காது. இந்தத் தருணம் வெகு சௌகரியமான தருணமாயிருக்கிறது. பின்னும் நீங்கள் வெகு சாவகாசமாயும் ஜாக்கிரதையாயும் நடக்கவேண்டும். பின்னும் ஹஸரத்து மௌலா அலி அவர்கள் பிரமாணமாய் நான் இச்சங்கதிகளை யதார்த்தமாக எழுதியிருக்கிறேன். இதில் பிசகு இல்லை. இப்பேர்ப்பட்ட சமயம் கைக்கு வருவது கூடாமை" என்று எழுதியிருந்தது. இந்தக் கடிதத்தை உமர் அலி என்பவர் சபையில் படித்தார்கள். அப்போது சகோதரர்களும் அன்பர்களும் சமஸ்தர்களும் பின்னும் எல்லோருங் கேட்டுச் சந்தோஷப்பட்டார்கள். ஹஸரத்து மௌலா அலி அவர்களால் அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட புத்திரராகிய முஷ்டீப்காக்கா என்பவர் தக்ஷணமே எழுந்து, "தாங்கள் எனக்கு உத்திரவு கொடுப்பீர்களானால், நான் இப்போதே போய் அச்சக்கிரவர்த்தியாகிய எங்கள் தமையனாரைக் கொண்டுவருகிறேன்" என்று உமர் அலி என்பரிடம் செலவு கேட்டார். இதை இப்றுஹீம் உஷ்த்தார் என்பவர் கேட்டு அவர் எழுந்துநின்று "இந்தக் காரியம் என்றால் ஆகக்கூடிய காரியமாயிருக்கிறது. அக்காரிய முழுமையும் எனக்குந் தெரியும். நான் அந்த ஸ்தலத்தில் அறிமுகமுள்ளவனா யிருக்கிறேன். அந்த இடத்தை நான் அனேகந்தடவை பார்த்திருக்கிறேன். அதின் படாகைகளையும் மைதானங்களையும் நான் வெகு நேர்த்தியாய் அனேகந்தடவைகளில் சுற்றிப் பார்த்திருக்கிறேன். இது முஷ்டீப்காக்கா என்பவரால் ஆகக்கூடிய காரியமல்ல. ஆகையால் எனக்கு உத்திரவானால் நான் என் சேனையுடன் போய் குகைகளில் ஒருவரும் அறியாதபடி பதுங்கியும் ஒளித்துமிருந்து விடிந்த உடன் அச்சக்கிரவர்த்தியை வெகு சீக்கிரமாய் ஆண்டவன் கிருபையால் இந்த ஸ்தலத்துக்குக் கொண்டு வருகிறேன்" என்று சொன்னார்.

பின்பு இவர் உத்திரவு பெற்றுக்கொண்டு வெகு சந்தோஷமாய்த் தன் சேனையைத் தம்முடன் அழைத்துக்கொண்டுபுறப்பட்டார். பின்னும் அவர் அக்கிரகத்துக்குச் சம்பந்தமான குகைகளில் போய்த் தன் சேனையை ஒளித்து வைத்துவிட்டார். இப்படி அவர் போனதின் பின் அவர் புத்திரராகிய ஹாரிஸ என்பவர் எழுந்து "ஓ தலைவராகிய உமர் அலி அவர்களே, எனக்கு உத்திரவு கிடைத்தால், நான் இபிலுக்கு தேசத்து கோட்டையின் மேல் யுத்தத்திற்குப் போகிறேன்" என்று சொன்னார்.

இவரோ மகிமையுடைய மேன்மையின் சந்திரனாயிருந்தார். பின்னும் இவர் பராக்கிரமத்தின் பூங்காவனத்தினுடைய விருக்ஷமாயிருந்தார். பின்பு ஹாரிஸ என்பவர் அத்தலைவருடைய உத்தரவு பெற்று ஜெய நக்காருக்களை அடித்துக்கொண்டு யுத்தத்துக்காக மைதானத்தில் வந்து அச்சத்துருவின் முக்கியமான யுத்தமுனைக்கெதிரில் நின்று கொண்டார்.

சக்கிரவர்த்தியாகிய ஹஸரத்து முஹம்மது ஹனீப்ஹா அவர்களுடைய சேனை மைதானத்தில் யுத்தத்துக்காக வந்து நின்றிருக்கிறதென்று எஜீது என்பவனிடம் போய் ஒருவன் சொன்னான். அச்சமாச்சாரத்தை அவன் கேட்டு "ஓ மர்வான் என்பவனே, அவ்வரசாகிய முஹம்மது ஹனீப்ஹா என்பவருடைய சகோதரர்கள் யுத்தம் செய்ய வந்திருக்கிறார்கள். பின்னும் மௌலா அலி அவர்களுடைய புத்திரர்கள் ஒரு பெருத்த பிரிவாயிருக்கிறார்கள். நீ அவர்கள் விஷயத்தில் ஒரு யோசனை செய்வாயாக" வென்று சொன்னான். அதற்கு அவன் "ஓ என் அரசரே! தாங்கள் தமது சேனையின் ஒரு பாகத்தைத் திரட்டி அச்சேனைக்கு ஒருவனைத் தலைவனாக்கி அவர்கள் எதிரில் சீக்கிரமாய் அனுப்புங்கள்" என்று சொன்னான்.

அப்போது அந்த சபையில் தல்யால் என்ற பேருடைய ஒருவன் இருந்தான். இவனோ மிக்க உயர முள்ளவனாயிருந்தான். எஜீது என்பவன் இவனைத் தலைவனாக்கி இவனுக்கு ஒரு யானையும் ஆடையாபரணங்களையுந் தந்து, பின்னும் யுத்தம் செய்வதற்காக அனேகபோர்ச் சேவகர்களையும் அவன் வசமாக்கி "ஓ சூரனே நீ போய் மௌலா அலியவர்களுடைய குமாரர்களில் ஒருவரையும் விட்டுவிடாமல் எல்லோரையும் வெட்டிவிட வேண்டும்" என்று சொன்னான்.

தல்மால் என்பவன் உடனே யானையின்மேல் ஏறிக் கோட்டைக்கு வெளியில் வந்தான். இதின்பின் எஜீது என்பவன் கோட்டையின் சிகரத்தின் மேல் வந்து உட்கார்ந்தான். தல்மால் என்பவன் யுத்தகளத்தில் போய் நின்று தன் எதிரிகளை நோக்கி வெகு டம்பமான வார்த்தைகளைப் பேசத் தொடங்கி அவர்களை நோக்கி நீங்கள் மௌலா அலி அவர்களுடைய குமாரர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் சகோதரரும் அரசருமான முஹம்மது ஹனீப்ஷா அவர்களைப் போக்கடித்துக்கொண்டீர்கள். பின்னும் நீங்கள் உங்கள் எஜமானனைப் பறிகொடுத்துவிட்டு விசாரமற்று இப்போது என் கையால் சாகவும் கஷ்டங்களை யனுபவிக்கவும் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வெட்கமில்லையா, முஹம்மது ஹனீப்ஷா என்பவர் உலகத்தில் இனிப்பிழைத்திருக்கமாட்டார். அவர்செய்த காரியமோ சரியான காரியமாயிருந்ததில்லை. ஆகையால் இப்போது நான் சொல்லுவதை நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள். நீங்கள் என்னுடன் வாருங்கள். நீங்கள் எஜீது என்பவனுடைய பாதங்களின்மேல் விழுந்து மன்னிப்பு கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் அவன் கையின்மேல் பையத்து செய்துகொள்ளுங்கள். அப்போது நான் உங்களை விடுதலையாக்கி உங்களுக்கு வெகுதிரவியங்களையும் வாங்கித்தருகிறேன் என்று சொன்னான்.

இவ்வித சொற்களை அந்தத் தாலிப் அலி என்பவர்கேட்டுச் சகிக்கக்கூடாத கோபமடைந்தார். இவ்விதத்தருணத்தில் ஷை தல்மால் என்பவன் அவர் தலைமேல் ஓர் பட்டாக்கத்தியால் அடித்தான். அதை அவர் தப்ப வைத்துக்கொண்டார். ஆனால் அவர் குதிரைக்கு அந்த அடிபட்டதால் அது மடிந்து போய்விட்டது. அப்போது அவர் பாதசாரியாய்ப் போனார். பின்னும் ஷை தல்மால் என்பவன் வெகு முரடனும் உறுதியுள்ளவனுமிருந்தான். இவன் அப்படியிருந்தபோதிலும் தாலிப் அலி என்பவரும் கூட ஆவேசமுள்ளவராயும் தைரியமுள்ளவராயுமிருந்ததால் அவர் அப்படியே பாதசாரியாகவே யுத்தம் செய்துகொண்டிருந்தார். பின்பு ஷை தல்மால் என்பவன் தாலிப் அலி என்பவரைப் பிடித்துக்கொள்ள அவர்மேல் யானையை விட்டான். அப்போது அந்த யானை அவர்மேல் துதிக்கையைப் போட்டவுடனே அவர் பட்டாக்கத்தியால் அவ்யானையின் துதிக்கையை இரண்டு துண்டாக்கிவிட்டார். அவ்யானை உடனே கீழே விழுந்துவிட்டது. பார்வையில் அது பூமியின்மேல் ஒரு மலையைப்போல் தோற்றிக்கொண்டிருந்தது. இந்தயானை விழவே அதின்மேல் உட்கார்ந்திருந்த ஷை தல்மால் என்பவனும் கீழே விழுந்தான். இப்படி விழுந்தும்கூட அவன் வெகு சீக்கிரமாய் எழுந்து தாலிப் அலி என்பவரோடு யுத்தம் செய்யத் தொடங்கினான். பின்பு அவன் அவருடைய மடியில் கையைப் போட்டு அவரைத் தூக்கிக்கொள்ள வெகு பலத்தைச் செலுத்தினான். அப்போது இவரும் அவன் மடியில் கையைப்போட்டு அவனைத் தூக்கிக்கொள்ள முயன்றான். இப்படிக்கு அவனும் இவரும் மல்யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் தாலிப் அலி என்பவர் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராயிருந்தபடியால் பலத்தோடு அவனைப் பிடித்துத் தன் தலைமேல் தூக்கி அவனைக் கம்சுற்று சுற்றிப் பின்பு பூமியின்மேல் படார் என்று அடித்தார். அப்போது அவன் பூமியின்மேல் பனைமரத்தைப்போல் விழுந்தான். அப்போது அர்கஷ் என்பவர் அவனிடம் போய் நின்றார். அந்த தல்மால் என்பவன் எழுந்திருக்க விரும்பிக்கொண்டிருந்தான். ஆனால் அர்கஷ் என்பவர் உடனே அவன் தலைமேல் மின்னலைப்போல் பட்டையத்தால் ஒரு வீச்சு வீசினார். அவ்வீச்சால் அவன் ஆவி நீங்கிப் பூமியின்மேல் இராக்ஷசனைப் போலக் கிடந்தான். அவன் ஆன்மா ஜஹன்னம் போய்ச் சேர்ந்தது.

தல்மான் என்பவன் மடிந்துபோனதை எஜீது என்பவன் கண்டு தன் அறிவைப் போக்கடித்து மௌலா அலி அவர்களுடைய குமாரர்கள் பெரிய மலாட்டியராயிருக்கிறார்கள். ஆகையால் ஓ மர்வான் என்பவனே நீ சீக்கிரமாய் சேனையைத் திருப்பிக்கொள்வதற்காக நக்காருவை அடி என்று சொன்னான். அப்போது அந்த மர்வான் ஆனவன் நக்காருவை யடித்துச் சேனையைத் திருப்பிக்கொண்டான்.

சக்ரவர்த்தியாகிய முஹம்மது ஹனீப்ஷா அவர்களை நெருப்பில் சுட்டெரித்துவிடக் கொண்டுபோகுதல்.

இப்படிச் சேனையைத் திருப்பிக்கொண்டதின் பின் எஜீது என்பவனே மனம் எரிந்தவனாய் எழுந்து சிம்மாசனத்தின்மேல் வந்து உட்கார்ந்தான். அப்போது எல்லாப் பிரபுக்களும் வந்து உட்கார்ந்தார்கள். எஜீது என்பவன், மனதில் இசைவுடையவனையும், விசாரமுள்ளவனையும், அச்சபையார்களில் சில சமதுக்கர்களையும் மந்திரிமார்களையும் ஏகாந்த ஸ்தலத்தில் அழைத்து அவர்களைநோக்கி "ஓ என் மனப்பிரி

யர்களே! மௌலா அலி அவர்களுடைய எல்லா குமாரர்களும் வந்து வெகு பலத்தோடும் வீரியத்தோடும் யுத்தம் செய்கிறார்கள். இது எனக்கு நல்லதாய்த் தோன்றுகிறதில்லை. என் சந்தோஷமெல்லாம் நீங்கிப்போய்விட்டது. என் புத்தியும் பக்தியும் ஒளிமழுங்கிப் போய்விட்டது. எதுவரை மௌலா அலியுடைய குமாரர்கள் நாசமாய்ப்போக மாட்டார்களோ அதுவரை எனக்கு நிம்மதி கிடைக்கமாட்டாது. ஆகையால் இவர்களை வெட்டி நாசமாக்கி என் மனக்கலக்கத்தை நீங்கள் நீக்கிவிடுங்கள்" என்று அச்சபையாரைப் பார்த்துச் சொன்னான்.

எஜீது என்பவன் கூறிய மொழிகளை அப்பிரபுக்கள் கேட்டதே அவர்கள் மனம் வெதும்பி, "ஓ எங்கள் அரசரே! இந்த சிம்மாசனமும் கிரீடமும் சேனையும் உமக்கு என்றென்றைக்கு மிருப்பதாக. தாங்கள் உண்மையாய் எல்லா ஜகத்தையும் ஆளுகிறவரா யிருக்கிறீர்கள். இப்போது தாங்கள் அதைப்பற்றி சற்றும் வியாகூலமடைய வேண்டியதில்லை. தாங்கள் சகலத்தையும் அறிகிறவரா யிருக்கிறீர்கள். நாங்கள் உமக்குப் புத்திசொல்ல நினைப்பது எங்களுக்குப் புத்தியீனமா யிருக்கிறது. பின்னும் அவ்வரசராகிய முஹம்மது ஹனீப்ஷா அவர்களை வெகு சீக்கிரமாய் நெருப்பில் போட்டுக் கொளுத்திவிட வேண்டும். அவர் உயிரோடு இருந்துகொண் டிருப்பதினாலேயே அவருடைய சகோதரர்கள் நாள்தோறும் தங்களுடன் யுத்தம் செய்து கொண் டிருக்கிறார்கள். பின்னும் அவர் உயிரோடு இருக்கிறார் என்று நினைத்தே அவர்கள் இந்த கெடுதிகளைத் தங்களுக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவரைச் சீக்கிரமாய் சாம்பலாக்கி விடவேண்டும். உலகத்தைவிட்டு அவரைச் சீக்கிரமாய் அனுப்பிவித்து விடவேண்டும். அவரை வைத்திருக்கலாகாது. அவரை வைத்திருப்பதினால் என்ன பிரயோஜனம். எப்போது அவர் அக்கினியில் சுட்டெரிந்துபோவாரோ அப்போது அவர்கள் எல்லோரும் ஒழிந்து போவார்கள். தாங்கள் சொல்லுவதைத் தயவுசெய்து கவனியுங்கள். சர்ப்பத்தை இம்சித்து அதை விட்டு விடுவது புத்திமான்கள் காரியமல்ல" என்று இவ்விதமான ஆலோசனைகளை அவனுக்குக் கூறினார்கள்.

இந்த ஆலோசனையை எஜீது என்பவன் கேட்டு நாளையதினம் அவ்வரசரை அந்த மலை சிகரத்தில் கொண்டுபோய் சுட்டெரித்து விட வேண்டுமென்று சொன்னான். இச்சங்கதியைக் கேட்டவுடனே

ஆதித்தன் துயரமடைந்தவன்போல் மேற்குக்கடலில் போய் மறைந்து கொண்டான். அப்போது சந்திரன் அரசனாய்ப் புறப்பட்டுத் தன் இராஜியத்தை ஆளத்தொடங்கினான். பின்பு எஜீது என்பவன் சபையோரனைவரையும் அனுப்பிவித்துவிட்டுத் தானும் அரண்மனையில் போய்ப் படுத்துக்கொள்ளச் சென்றான். மறுநாள் காலை சூரியன் ஏதோ துக்கக்குறியைக் காட்டுபவன்போல இரத்தமயமான கிரணங்களைப் பரப்பிக்கொண்டு உதயமானான்.

எஜீது அரசன் காலையில் எழுந்ததும் தன் சிம்மாசனத்தில் உட்கார்ந்து தன்னைச் சூழ்ந்திருக்கும் மந்திரிப்பிரதானிகளை நோக்கி, முஹம்மது ஹனீப்ஷா அவர்களைத் தன் முன்னுக்குக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். ஹனீப்ஷா அவர்களுக்கோ புஜத்தின் காயம் ஆறாமலிருந்தது. அக்காயத்தின்மேல் மருந்தாவது பளாஸ்திரியாவது போடப்படாமலிருந்தது. பின்னும் அவ்வரசரிடம் வைத்தியத்துக்கு எவனுமில்லை. பின்னும் மேல்விசாரணைக்காக எவனும் அவரிடமில்லை. அவருடைய காயத்துக்கு எவ்வித சிகிச்சையும் செய்யப்படவில்லை. அவருக்கு இன்றியமையாத சவுகரியங்களைக் கவனிக்கவும் எப்பணிதனும் அவருகிலில்லை. அவர் உடைகள் முழுமையும் இரத்தத்தில் நனைந்து போயிருந்தன. அவருக்கு ஆறுதல் கூறவும் எவனுமில்லை. அவர்களோ நாலுநாள் சிறையாயிருந்தார்கள். வெகு வருத்தங்களோடு நாலு இரவையும் நாலு பகலையும் கழித்தார்கள். ஓ என் நண்பனே! முக்கியமாய் வருத்தங்கள் ஆண்டவனுடைய சொந்தக்காரர்களின் மேல் மாத்திரம் இருக்கின்றன. இவ்வாறு இரத்தம் நிறைந்த உடுப்புகளை யணிந்திருக்கும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களை எஜீது என்பவனிடம் அழைத்துக்கொண்டுபோகப் புறப்பட்டார்கள். அக்காயத்தின் வலி அவ்வரசரானவர்களுக்கு அதிகமா யிருந்துகொண்டிருந்தது. நாள்தோறும் அக்காயத்திலிருந்து இரத்தம் வடிந்துகொண்டே யிருந்தது. இரக்கமுள்ளவர்கள் இந்த வருத்தத்தையும் துக்கத்தையும் கண்டு அழுதுகொண்டிருந்தார்கள்.

எஜீது என்பவன் கட்டளைப்படி ஆட்கள் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களை அவன் எதிரில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அப்போது அந்த எஜீது அவரைப்பார்த்து "ஓ முஹம்மது ஹனீப்ஷா என்பவரே! உம்முடைய சமாச்சாரமென்ன? இப்போது உம்முடைய

மனதில் என்ன நன்மை தின்மை இருக்கின்றதோ அதைச்சொல்லும். உம்முடைய ஆயுசு நாள்கள் முடிந்துபோய்விட்டன. உம்முடைய வயதின் நாள்கள் கடந்து போய்விட்டன. இப்போது மரணம் உமக்கு முகத்தை எட்டிக் காட்டுகின்றது. இதென்று உம்முடைய சாவு வந்து விட்டது. அது உமக்கு உதவி செய்கின்றது. உம்முடைய வயது இன்றைக்கு முடிவு பெறுகிறது" என்று சொன்னான். எஜீது என்பவனுடைய வார்த்தைகளைக் கேட்ட ஹனீபதா அவனை நோக்கி "ஓ எஜீது என்பவனே! கேள். உன்னுடைய மூலமானது தேளுடைய கொடுக்கின் கொட்டுதலாயிருக்கிறது. எவ்விதமாய் தேள் வருத்தத்தைத் தருகின்றதோ அத்தன்மையாகவே நீயும் ஜனங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கிறவனாயிருக்கிறாய். அந்தக் குணம் உன்னில் பிறந்திருக்கின்றது. ஆனால் என்னுடைய தன்மையோ அல்லாஹ்வின் வெகு நேர்த்தியாயிருக்கிறது. என்மேல் ஆண்டவனுடைய ரஹ்மத்தும் உன்மேல் ஆண்டவனுடைய ஜஹ்மத்துமிருக்கின்றது. உன்னுடைய கால சக்கரமானது இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது. உன்னுடைய பாக்கியத்துடையவும் இராஜ்யத்துடையவும் சூரியன் மேற்கு திசையில் அஸ்தமிக்க ஆத்திரமுள்ளவனாயிருக்கிறான். ஓ பாவியே, உனக்கு ஆபத்தின் அச்சமும் பயமுமில்லை. நீயோ நிர்க்கதியின் குடும்பத்தின் பகைவனாயிருக்கிறாய். எவன் மேலும் குரூரத்தையும் கெடுதியையும் செலுத்துவது உன் ஜன்ம காரியமாயிருக்கிறது. நாளை உனக்குக் கியாமத்தின் பயமில்லை. நீ உலகத்தை விரும்பும் நாயாயிருக்கிறாய். நீ எல்லோரின் முன் உன்னை மேன்மையென்று பாராட்டுகிறாய். ஆனால் வாஸ்தவத்தில் நீயோ இழிவானவனும் கீழானவனுமாயிருக்கிறாய். பின்னும் நீ புறக்கச்சி மகனாயிருக்கிறாய். ஓ தீத்திடுவனே கேள். எங்களுக்கு காரணமானது பூங்காவனத்தின் இஸ்லாமுத்தாயிருக்கிறது. பின்னும் ஓ பாவியே கேள். ஹஸரத்து இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காகவும் ஹஸரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காகவும் நான் என் இடையைக் கட்டி உன் ஸ்தலம்வரை வந்து சேர்ந்திருக்கிறேன். எனவே சொல்லவேண்டியதின் எண்ணம் உன் மனதில் இருக்குமேல் கூட. நான் தயாராயிருக்கிறேன். நான் என் விதியின்படி சகிக்க ஆயத்தமாயிருக்கிறேன்," என்று சொன்னார்கள். எஜீது அவ்வார்சாரானவர்கள் சொன்ன எல்லாவற்றையும் கேட்டு மிக்க கோப

மடைந்து அவரை நெருப்பில் போட அவ்வனத்திற்குக் கொண்டு போகப் புறப்பட்டான். அப்போது வானமும் பூமியும் நடுநடுங்கத் தொடங்கின. எஜீது என்பவன் ஒரு உன்னதமான மஞ்சிலின்மேல் போய் உட்கார்ந்துகொண்டு ஹஸரத்து முஹம்மது ஹனீபதா அவர்களைப் பூமியின்மேல் உட்காரவைத்து அவர்கள்மேலும் அவர்கள் பக்கங்களிலும் விறகுக்கட்டுகளைக் குவியல் குவியலாய்க் குவித்துவிடும்படி செய்தான். அப்பால் அதில் தீ வைக்கும்படி கட்டளையிட்டான். ஹஸரத்து இப்றாஹீம் கலீலுல்லா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நெருப்பு அகழியில் போட்டதைப்போல் அவ்வாரசாரானவர்களையும் விறகுகளுக்குள் வைத்துத் தீமூட்டிவிட்டார்கள். ஆனால் ஆண்டவனுடைய குத்ரத்தால் அது எவ்விதமாய் முடிந்ததென்று ஓ அன்பர்களே கண்ணுற்றுப் பாருங்கள்.

எவனைக்காப்பாற்ற வேண்டுமென்று ஆண்டவன் விரும்புகிறானோ அப்பேர்ப்பட்டவன் விஷயத்தில் அவன் அவ்வக்கினியைப் புஷ்பவனமாக்கி விடுகிறான். எவன்மேல் ஆண்டவனுடைய கடாக்ஷப்பார்வை இருக்கின்றதோ அப்பேர்ப்பட்டவனுடைய பகையாளி கொசுவைப் போலாய்விடுகிறான். அவ்விறகுகளில் நெருப்பைக்கொளுத்தினபோது அது ஆண்டவனுடைய கட்டளையால் அணைந்துபோய் விட்டது. இப்படி அணைந்து போய்விட்டதை அச்சண்டாளர்கள் மறுபடியும் மறுபடியும் பன்முறை கொளுத்தியும் அது அணைந்து அணைந்து கொண்டே இருந்தது. கொஞ்சம்கூட பற்றவில்லை. ஆனால் புகைமாத்திரம் எழும்பிக்கொண்டே இருந்தது. இவ்வாறெழும்பிய புகையை இப்றாஹீம் உஷ்த்தார் என்பவர் கண்டு தாம் மறைந்திருந்த குகையிலிருந்து புறப்பட்டு முப்பத்தோராயிரம் போர்ச்சேவகர்களுடன் இடியென்று நிர்பயத்தோடு எஜீது என்பவனுடைய சேனையின்மேல் போய்ப் பாய்ந்தார். அப்போது எஜீதென்பவன் பயந்து திகைத்து அய்யய்யோ என்ன மோசம் வந்து சம்பவித்தது என்று சொல்லிக்கொண்டு தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வெண்ணித் தான் இருந்த இடத்தை விட்டு ஓடத் தொடங்கினான். பின்னும் அவன் இந்தச் சேனை பூமிக்குள்ளிருந்து எவ்விதமாய் முளைத்தது என்று வியப்பும் திகிலுமடைந்து புறமுதுகிட்டோட்டம் பிடித்தான். அவன் அடிபட்டு ஓடிக் கோட்டைக்குள் புகுந்துவிட்டான்.

இப்றாஹீம் உஷ்த்தார் என்பவர் தன் சேனையை வெகு சீக்கிரமாய் அந்நெருப்பின் அருகில் கொண்டுபோய் அந்நெருப்பை அவித்து

அதை நாசமாக்கிவிட்டு அக்கிணற்றுக்குள் இருந்த பிரகாசமுள்ள சூரியனான முஹம்மது ஹனீப்ஷாவை வெளியாக்கினார். அவருடைய சோதியால் அவ்வனமுழுமையும் பிரகாசித்தது. அவ்வனமோ ஒரு பூங்காவனமாய் மாறிவிட்டது. அவ்வரசரானவர்களுடைய புஷ்பதேகத்தின்மேல் கொஞ்சங்கூட அக்கினியின் சூடு படாதிருந்தது.

இப்னுஹனீபு உகைத்தார் என்பவர் அவ்வரசரவர்களுடைய பாதங்களின்மேல் விழுந்து ஒரு பல்லக்கைக் கொண்டுவந்து அதில் அவர்களை உட்காரவைத்து சேனையுடன் வெகுசந்தோஷத்தோடு தன்ஸ்தலத்தை நோக்கிப் புறப்பட்டார். போர்ச்சேவகர்களும் சமதுக்கர்களும் முன் சென்று வந்து அவர்களைத் தங்கள் ஸ்தலத்துக்கு அழைத்துக்கொண்டு போய் ஒவ்வொருவரும் அவர்களின் பாதங்களின்மேல் விழுந்து தங்கள் கண்ணீரால் அப்பாதங்களை நனைத்தார்கள். பின்பு அவர்கள் எல்லோரும் சந்தோஷசாகரத்தில் முழுகியவர்களாய் ஜெயபேரிகையாகிய நக்காராக்களை அடித்தார்கள். சற்று நேரத்திற்குள் முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு அறுசுவையுள்ள சூடான பதார்த்தங்களைப் புசிக்கக் கொடுக்கப்பட்டன. இவ்விதம் தங்கள் உயிரினும் சிறந்த அவ்வரசர் பிராணாபத்திலிருந்து காப்பாற்றப் பட்டதற்காக ஆண்டவனையும் ரஸுல்சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களையும் வாழ்த்திப் போற்றி, அவ்வரசரானவர்கள் பேருக்கு எண்ணிறந்த குதிரைகளையும் யானைகளையும் ஒட்டகங்கள் ஆடுமாடு வகைகளையும் சதகா கொடுத்தார்கள். அவ்வரசரானவர்களோ தன் விஷயமாய் துக்கமடையாமல் ஹசரத்து ஸைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விஷயமாய் இரவும் பகலும் வெகு விசாரமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய விசாரம் சற்றேனும் குறையவில்லை. இரவும் பகலும் அவர்கள் துக்க சாகரத்தில் முழுகினவர்களாகவேயிருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது அவர்கள் தம்முடைய சகோதரர்கள் வகைகளுக்களைப் பார்த்து “ஓ சமதுக்கர்களே, இப்போது ஸைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மீட்டுக்கொள்ள எவ்விதமாய்க் காரியங்களை நடத்தவேண்டும். நானோ அவர்களை மீட்டுக்கொள்ள வேண்டியதற்காக என் குடும்பத்தாரையும், வீட்டாரையும், இராஜ்யத்தையும் விட்டுவிட்டு வந்தேன். ஆனால் அய்யோ எனக்கு என் மனதைக் குன்ற என் சகோதரர் குமாரரை மீட்க வேண்டுமென்ற ஆசையும் விசாரமுமே இருந்துவிட்டது. அவரோ என்னுடைய இருகண்மணி

யாயும் என் இருதய கண்டமாயுமிருக்கிறார். நான் என் கையில் பட்டயத்தைப் பிடித்து என்னால் கூடிய பிரயத்தனங்களெல்லாம் செய்தேன். ஆனால் விதியால் அசக்தனாய்ப்போனதால் அவரை மீட்க என்னால் கூடவில்லை. நான் ஒற்றைக்கையுள்ளவனாய்ப் போனேன். பாருங்கள், அய்யோ என் ஆசை என் இருதயத்தில் மட்டுமேயிருக்க வேண்டியதாய் நேரிட்டு விட்டதே. நான் என்ன செய்வேன்” என்று இவ்விதமாய் சொல்லித் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். பின்னும் அவர்களுடைய கண்ணீர் வற்றாமலே இருந்துகொண்டிருந்தது. எல்லாச் சமதுக்கர்களும் அவ்வரசரானவர்களுக்கு மனதிருப்தியும் மனதேற்றுதலும் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அவரை நோக்கி “ஓ அரசரானவர்களே, தாங்கள் துக்கிக்க வேண்டாம். நாங்கள் சொல்லுவதைத் தாங்கள் கேளுங்கள். நீங்கள் தங்களுடைய எல்லாக்காரியங்களையும் ஆண்டவன்மேல் ஒப்புவித்து விடுங்கள். ஆண்டவன் அதைச் சீராய் முடித்து விடுவான்” என்று சொன்னார்கள். இப்படி அவர்களுக்கு எல்லோரும் பலவிதமாய்த் தேறுதல் கூறியுங்கூட அவர்களுடைய மனப்புண் ஆறாமலே யிருந்தது. ஆகையால் அவர்கள் ஒரு இரவு ஆழ்ந்த துயரத்தோடு தங்கள் படுக்கையின்மேல் படுத்து நித்திரை போய்விட்டார்கள். அப்போது இருலோக சக்கிரவர்த்தியானவராயும் இரக்ஷகரானவராயுமுள்ள ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களைக் கனவில் தரிசித்தார். அவர்கள் அவரிடம் வந்து நின்றார்கள். நபிகள் நாயகமாகிய அவர்களுடைய சோதிபொருந்திய திருமுகத்தைக் கண்டதே முஹம்மது ஹனீப்ஷா வெகு சந்தோஷப்பட்டு எழுந்து நின்று, அவர்களுடைய பாதங்களை முத்தமிட்டார். ஹசரத்து நபிநாயகம் அவர்கள் அவரைச்சமுகத்தோடு அணைத்துக்கொண்டு ஓ என் பிரியமுள்ளவரே உமக்கு வெகு வருத்தங்களும் துக்கங்களும் சம்பவித்தன என்று சொல்லி அப்புயத்தின் காயத்தையும் கண்டு அதின்மேல் ஏதோ படித்து ஊதினார்கள். தம்முடைய திருக்கையால் அக்காயத்தைத் தடவினார்கள். பின்பு அவர்கள் ஹனீப்ஷாவை நோக்கி ஓ சிங்கமானவரே! நீர் இப்படித் துக்கிப்பதின் காரணத்தை நம்மிடம் சொல்லும் என்று திருவுளமானார்கள்.

அந்த அமிர்த வசனங்களைக் கேட்ட ஹனீப்ஷா அவர்கள் தனியாய்க் கடல் நடுவில் விழுந்து தத்தளிப்பவன் ஒரு கப்பலைக் கண்டது

போதும்; கண்பார்வையைப் பெற்ற குருடன் போலும் சந்தோஷமடைந்து "ஓ என் பாட்டனார் அவர்களே, என் தலைக்குமேல் தாங்கள் எஜமானனா யிருக்கிறீர்கள். இப்போது எனக்கு என் வாழ்நாளே வெட்கமா யிருக்கிறது. ஏனெனில், நான் சைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மீட்க இவ்விதமான எல்லா வருத்தங்களையும் அடைந்தேன். ஆனால் இப்போது நான் என் கையால் அசக்தனாய்ப் போனேன். நான் ஒற்றைக் கையுள்ளவனாய் துக்கத்தை யடைகிறேன்;" என்று அறிக்கை செய்துகொண்டார். அப்போது ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் "ஓ என் சிங்கமானவரே, நீர் துக்கப்படவேண்டாம். நீர் உம்முடைய புஜத்தை வரவழைத்து அதை உம்முடைய தேகத்தில் அதின் ஸ்தலத்தில் ஒட்டி இந்த முஹவரே அதுவத்தையும் அதின்மேல்வைத்துக் கட்டிவிடும். அப்போது ஆண்டவனுடைய கிருபையால் உம்முடைய புயம் உம்முடைய தேகத்தில் பழையபடி ஒட்டிக்கொள்ளும். நீர் மூன்று வாரங்கள்வரை அக்கட்டை அவிழ்க்கவேண்டாம். அப்போது நீர் சொஸ்தமடைவீர்" என்று இரசூல் அவர்கள் சந்தோஷ செய்தியை அவருக்குச் சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்கள்.

உடனே அவ்வரசரானவர் விழித்துக்கொண்டு ஹசரத்து நபி நாயகம் அவர்களின்மேல் அளவற்ற சலவாத்துகளை ஓதினார். பின்பு அவர் தம்முடைய சமீபத்திலிருக்கும் சூட்சம புத்தியுள்ளவர்களும், சமதுக்கர்களுமாகிய நண்பர்களை நோக்கி, "ஓ என் சமதுக்கர்களே கேளுங்கள். நான் ஒரு சொப்பனம் கண்டேன். அச்சொப்பனத்தில் ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் வந்து எனக்குச் சந்தோஷ செய்தியைத் திருவாய் மலர்ந்தார்கள். அவர்கள் என்னுடைய அளவற்ற அபாக்கியத்தைக் கண்டு தங்கள் கடாக்ஷத்தில் என்னோடு தமது கருத்தோடு அணைத்து என் காயத்தின் மேல் பரிந்து தடவி நான் காலை தினம் என்னுடைய புயத்தை வரவழைத்து என் சரீரத்தின்மேல் அதின் ஸ்தலத்தில் ஒட்டி அதின்மேல் முஹவரே அதுவத்தையும் வைத்து பலமாய்க் கட்டி மூன்று வாரங்கள் வரை அக்கட்டை அவிழ்க்காமல் வைத்திருக்கவேண்டும் என்றும், அதுவரை நான் வெளியில் புறப்படாமலிருக்கவேண்டுமென்றும், அப்போது ஆண்டவனுடைய கிருபையால் என்கை முன்னிருந்ததுபோலாய் விடுமென்றும் எனக்குத் தங்கள் திரு

வாக்கால் சொல்லிப் போயிருக்கிறார்கள் என்று அவர்களுக்குச் சொன்னார்கள். அவ்வரசருடைய சமதுக்கர்கள் இந்தச் சொப்பனத்தைக் கேட்டு முழு இருதயத்தோடு விசுவாசித்து அவர்கள் தங்கள் துக்கங்களில் நின்றும் நீங்கினார்கள். பின்னும் அவர்கள் மங்கள வாழ்த்துக்களில் ஓதலின் சத்தங்களை உயர்த்தி அவ்வரசரானவர்களைப் பார்த்து "ஓ எங்கள் சீடரே, தங்கள் புஜத்தைக் கொண்டுவரும்படி எங்களுக்குத் தாங்கள் கட்டளையிடுங்கள்" என்று ஒவ்வொருவரும் சொல்லத் தொடங்கினார்கள். அப்போது முஷீப்காக்கா என்பவரெழுந்து நின்று, "ஓ என் அரசரானவர்களே, அப்புஜத்தைக் கொண்டுவரும்படி தாங்கள் எனக்குக் கட்டளையிடுங்கள். நான் அக்காரியத்தை நிறைவேற்றிப் புயத்தை யடைவேன்" என்று சொன்னார். இதற்குப்பின் இப்றாஹீம் உஷ்த்தர் என்பவர் எழுந்து நின்று, "ஓ என் சீடரே, உயிருக்கு அஞ்சாதவனாகிய எனக்குத் தாங்கள் அக்கட்டளையிடுங்கள். நான் அதைப் பூர்த்தி செய்து செல்வத்தை யடைவேன். இதோ என்னாலேயே ஆகக்கூடிய காரியமாயிருக்கிறது. வேறொருவராலும் ஆகக்கூடியதல்ல. நானே எல்லாச் சக்திகளையும் அறிந்தவனா யிருக்கிறேன்" என்று வெகு தாழ்மையுடன் அனுமதி கேட்டார். பின்பு இரவு கழிந்து பொழுது விடிந்து சூரியன் உதித்ததும், இப்றாஹீம் உஷ்த்தர் என்பவருக்கே புயத்தைக் கண்டுபிடித்துக் கொண்டுவரும்படி அனுமதி யளிக்கப்பட்டது. இப்றாஹீம் உஷ்த்தர் உடனே குதிரையின்மேல் ஏறி அத்திருப்புஜத்தைக் கொண்டுவரப் புறப்பட்டார். எந்த இடத்தில் அவ்வரசரானவர்களுடைய புஜத்தைப் பாவியாகிய மர்வான் என்பவன் வெட்டிவிட்டிருந்தானோ அந்த இடத்திற்குச் சென்றார். அந்த இடமோ அவ்வரசரானவர்கள் யானைகளை வெட்டிவெட்டிக் குவியல் குவியல்களாக்கியிருந்த இடமாயிருந்தது. அந்த இடத்தில் அளவற்ற யானைகள் செத்து மலைகளைப்போல் குவிந்து கிடந்தன. இதுவுந் தவிர அவ்வரசரால் வெட்டப்பட்ட யானைகளின் துதிக்கைகள் ஒருபுறம் போர்போற் கிடந்தன. ஆகலால் அவ்விடத்தில் காலெடுத்து வைப்பதற்காகக் கொஞ்சங்கூட இடமில்லாதிருந்தது. பின்னும் செத்த யானைகள் அழுகிக்கொண்டும் நாற்றமடித்துக்கொண்டும் புழுக்கள் விழுந்துகொண்டு மிருந்தன. அந்த இடத்தில் இப்றாஹீம் உஷ்த்தர் என்பவர் அத்திருக்கையைத் தேடத் தொடங்கினார். அங்கிருந்த சவக்குவியல்களை ஒவ்வொன்றாய்க் கீழ்மேலுமாய்ப் புரட்டித் தேடினார். கடைசியில் அத்திருக்கையானது

பட்டயத்தைப் பிடித்தபடியே பூமியில் ஓரிடத்திலிருந்து அகப்பட்டது. அதை அவர் கண்ட உடனே மிக்க சந்தோஷமடைந்து குதிரையின் மேலிருந்து கீழிறங்கி அத்திருக்கையை எடுத்து முத்தமிட்டு அதைத் தன் தலைமேல் வைத்துக்கொண்டார். அத்திருக்கையோ சற்றேனும் தன் ஸ்திதியிலிருந்து மாறாதிருந்தது. பின்பு இப்றாஹீம் உஷ்த்தர் என்பவர் அதைச்சால்வையில் சுற்றிக்கொண்டு குதிரையின்மேலேறிப் புறப்பட்டார். எதிரிகளில் ஒருவருடைய திருஷ்டிக்கும் புலப்படாமல் அவர் வெகு சீக்கிரமாய்த் தமது ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார். அத்திருக்கையை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சமுகத்தில் கொண்டுவந்து வைத்தார். அப்போது அவர்கள் அக்கையை அதின் ஸ்தலத்தில் வைத்து முஹரே நுபூவத்தைப் பெருத்த சத்தத்தோடு படித்தார்கள். பின்னும் மூன்று தடவை அதின்மேல் ஊதினார்கள். பின்பு அந்த முஹரே நுபூவத்தை அதின்மேல் வைத்துப் பலமாய்க் கட்டிவிட்டார்கள். அப்பால் அவர்கள் தம்முடைய திருக்கையை எடுத்து ஆண்டவன் சன்னிதானத்தில் துவா செய்தார்கள். அப்போது எல்லா சமுகத்தர்களும் பின்னின்று ஆமீன் ஆமீன் என்றுசொல்லிக்கொண்டிருந்தார்கள். பின்பு அவர்களை ஒரு அடக்கமான ஸ்தலத்தில் கொண்டுபோய் வைத்து வெகு பத்திரத்தோடு பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். பத்தியமான பதார்த்தங்களை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தன. ஒருவருக்கும் அவ்வரசர் இருக்கும் இடத்திற்குச் செல்ல அனுமதியில்லை.

ஆண்டவனுடைய கட்டளையால் அவர்களுக்கு அவர்களுடைய பிதாமகரின் துணையிருந்தது. பின்பு அப்புஜம் தேகத்துடன் ஒட்டப்பட்டு சொஸ்தமடைந்து கொண்டிருந்தது. பின்னும் இரக்ஷகராகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய கிருபையால் நாளுக்கு நாள் ஆரோக்கியமாய்க்கொண்டிருந்தது. ஆண்டவன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய துஆவை ஒப்புக்கொண்டு அவர்களுடைய கையை சொஸ்தமாக்கி விட்டான். ஆண்டவனுக்கு சகல வல்லமையும் பூர்த்தியாயிருக்கிறது. அவனே ஒரு துரும்பை மலையாக்கவும், மலையைத் துரும்பாக்கவும் கூடும். பின்னும் அவன் சிப்பியில் மழையின் ஒரு துளியைக்கொண்டு நன்முத்தை உண்டாக்கும் குதரத்துள்ளவனாயிருக்கிறான். பின்னும் அவன் உலர்ந்துபோன

மரத்தைப் பச்சையாக்கி துளிர்க்கச்செய்து அதில் கனிகளுண்டாகும்படி செய்கிற வல்லமையுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய குதரத்தைப்பாருங்கள். அவன் சூரியனுக்கும் சந்திரனுக்கும் எவ்வித பிரகாசமான ஒளியைத் தந்திருக்கிறான். உயிரோடிருக்கிறவனைப் பிணமாக்கியும், பிணமாயிருக்கிறவனை உயிர்ப்பித்தும் விடுகிறான். கடலில் கப்பலை ஓடும்படிக்கும் செய்கிறான். பூமியில் பசுமையான விரிப்பை விரிக்கவும் செய்கிறான். அவ்வாண்டவனுடைய "புகழை வர்ணிக்க யாருக்கும் சக்தியில்லை. அவனே சந்தேகமற பழுதற்றவனாயிருக்கிறான். பின்னும் அவன் ஹசரத்து றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்காக வென்று முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய கையை முன்னைவிட வெகு பலமுள்ளதாகவும் உறுதியுள்ளதாகவும் செய்து விட்டான்.

எஜீது என்பவனுடைய வியாகுல சங்கதி.

ஓ புத்திமான்களே, மெத்தனத்தை விட்டுவிட்டு ஜாக்கிரதையுடன் பாருங்கள். ஆகாயமானது எஜீது என்பவனுக்கு எவ்விதத் துணை செய்து கடைசியில் எவ்விதக் கேட்டை அவன்மேல் கொண்டு வந்து விடுகின்றது. இந்த வானமோ பூர்வீக விசுவாச காதகனாயும், நம்பிக்கை துரோகியாயுமிருக்கின்றது. பின்னும் அது சிலருக்குப் பாக்கியத்தின் பளபளப்பைச் சிலகாலவரைக் காட்டுகின்றது. பின்பு அவர்களைக் கெடுதியின் சுழலிலும் தடுமாற்றத்திலும் போட்டுவிடுகின்றது. அப்பால் அவர்களின் தலைமேல் மண்ணைத் தூற்றியும் விடுகின்றது. எஜீது என்பவனே இப்றாஹீம் உஷ்த்தர் என்பவருடைய கையால் அந்தமலை ஓரத்திலிருந்து தப்பி வெட்கத்தோடும் துக்கத்தோடும் ஓடிக் கோட்டைக்குள் புகுந்து போயிருந்தான். பின்பு அவன் தன் தலைமயிர்களையும், கன்னங்களையும், கிள்ளவும், பிடுங்கிக்கொள்ளவும் தொடங்கினான். அவன் வெகு விசாரக்கடலில் முழுகிப்போயிருந்தான். அவன் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்குப் பயந்து நடுநடுங்கத் தொடங்கினான். அவர்களுடைய பயம் அவனுடைய இருதயத்தில் கல்லில் செதுக்கப்பட்ட அட்சரத்தைப்போல பதிந்திருந்தது. அவன் தன் புத்தியை எல்லாம் இழந்துவிட்டான். அவனுடைய இடுப்போ முறிந்துபோய்விட்டது. பின்னும் அவன்

விசனத்தால் உருளவும் புரளவும் தொடங்கினான். விசனத்தின் கடலில் அகப்பட்டுப்போய் அவனுடைய இருதயத்தில் அனேக விசாரங்கள் உண்டாயிருந்தன. பின்னும் அவன் கண்களிலிருந்து நித்திரை ஒழிந்துபோய் இருள் மூடிக்கொண்டது. கண் திறந்து பார்த்தால் உலகம் இருளாயிருந்தது. படுக்கையில் படுத்துக்கொள்ளாமலே இருந்துகொண்டிருந்தான். இப்படிப்பட்ட சமயத்தில் அவனை நரகத்தில் போட்டுவிட வியாதி வந்து சம்பவித்தது. நாளுக்கு நாள் வியாதி அதிகப்பட்டுக்கொண்டிருந்தது. அவனை அது கரைய வைத்துக்கொண்டிருந்தது. பின்னும் அவன் அவ்வியாதியின் விஷயமாய் விசாரத்தின் தொட்டியிலும் கெடுதியின் நீர்ச்சுழியிலும் விழும்பொருட்டே அப்போது, அவன் இராஜ்யத்தையும் இராஜரீகத்தை ஆளுவதையும் மறந்துபோய் அவன் ஸ்திதி வேறு வகையாய்ப் போய்விட்டது. அவனுக்கு இருவகையான விசாரம் வந்து மூடிக்கொண்டது. பின்னும் விசாரத்தின்மேல் விசாரம் வந்து சம்பவித்தது. ஆதலால் அவன் தன் தலையை முட்டிக்கொள்ளவும் தலைமேல் அடித்துக்கொள்ளவும் தொடங்கினான். இவன் அபூசுப்யான் ரலியல்லாஹு அன்ஹு என்பவருடைய சந்ததியுள்ளவனாயிருந்தான். நாளுக்குநாள் இவன்மேல் வலி மென்மேலும் விருத்தியடைந்துகொண்டிருந்தது. இதுவே மரண வலியாயிருந்தது. மரணம் அவனுக்குத் தன் முகத்தைக்காட்டிக் கொண்டிருந்தது. இதற்குள் இரண்டு வாரங்கள் கழிந்துபோய் விட்டன. இதின்பின் மூன்று வாரங்களும் கழிந்துபோய் விட்டன.

முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சொஸ்தமடைந்ததின்பின் எஜீது என்பவனுடன் செய்த யுத்தம்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய புஜம் சொஸ்தப்பட்டுப்போய் விட்டதோ அப்போது அது முன்னுள்ள புஜத்தைவிட வெகுபலமுள்ள புஜமாய்ப் போயிருந்தது. சோதி அவர்களுடைய நெற்றியிலிருந்து பிரகாசிக்கத் தொடங்கினது. பின்னும் அவர்களுடைய விருப்பத்தின் அக்கினி பற்றிக்கொண்டிருந்தது. அவர்கள் அடிக்கடி திமிஷுக்கு தேசத்தைப் பார்க்கத் தொடங்கினார்கள். பின்னும் அப்பக்கீரிகளுக்கும் தரித்திரர்களுக்கும் சதகா கொடுக்கத் தொடங்கினார்கள். பணங்களையும் திரவியங்களையும் தட்டுத்தட்டுகளாகக் கொடுத்துக்

கொண்டிருந்தார்கள். பின்னும் தேவதூதர்கள் வானத்தின் பாத்தாளங்கள் நிறைய கூட்டத்திரள்களை அவ்வானவர் அவர்கள்மேல் நிவேதிர்க்கை செய்துகொண்டிருந்தார்கள். மோட்ச கன்னிகைகளோ அவர்களுடைய தலைமேல் தங்கள் கைகளைத்தட்டி தங்கள் தலைகளின்மேல் முட்டிகளை உடைத்துக் கொண்டிருந்தார்கள். பின்னும் சகல சமதுக்கர்களுடைய இருதயங்களிலிருந்தும் விசாரங்கள் நீங்கிப் போய்விட்டன. பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய நாமத்தால் பாத்திஹா ஓதி யத்தீம்களுக்கு அன்னத்தைப் புசிப்பித்தார்கள். பின்னும் பணங்களையும் திரவியங்களையும் அவர்கள் பேரால் கைருத்து செய்தார்கள். இதின்பின் திமிஷுக்கு தேசத்தின் கோட்டையைப் பிடிக்க அவ்வரசரானவர்கள் தங்கள் தோழர்களுடன் யோசனை செய்தார்கள். பின்னும் அவர்கள் ஓ என் சமதுக்கர்களே நான் போய் திமிஷுக்கு பட்டணத்தை ஒரு நிமிஷத்துக்குள் ஆண்டவன் கிருபையால் பிடித்துக்கொள்ளுகிறேன். ஓ தோழர்களே, எனக்கு ஆண்டவனுடையவும் ஹசரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடையவும் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய குமாரத்தியும் சொர்க்கலோகத்தலைவியுமாகிய பாத்திமா நாச்சியார் அவர்களுடையவும் ஆண்டவன் சிங்கமானவராகிய பராக்கிரமசாலியான ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் எஜமானனாகிய ஹசரத்து இமாம ஹசன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் பிரமாணமிருக்கின்றது. பின்னும் எனக்கு ஹசரத்து நபிநாயகம் அவர்களுடைய குடும்பத்தின் வெட்கம் அதிகமாயிருக்கின்றது. இதுவும் தவிர ஔலியாக்களின் அரசராயும் கர்பலாவில் ஷஹீதானவராயுமாகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் பிரமாணமிருக்கின்றது. நான் இப்போது என்னுடைய மனக்கருத்தை உண்மையாய் நிறைவேற்றுவேன். பகையாளியை நாசமாக்குவேன். ஓ என் தோழர்களே நீங்கள் இப்போது ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிரியமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். பின்னும் நீங்கள் தெய்வ சிங்கமானவராகிய ஹைதரே கர்றார் அவர்களுடைய கர்ப்பப் பிறப்பானவர்களாயிருக்கிறீர்கள். பின்னு நீங்களோ விலாயத்தின் அரசர்களாயும் பால சிங்கங்களாயும் ஜெயவீரர்களாயும் பராக்கிரமத்தின் களத்தின்

மேல் ஜெயிப்போர்களாயிருக்கிறீர்கள். ஆகையால் கோட்டையைப் பிடித்துக்கொள்வது உங்களுக்கு ஒருவிதமான பாரமுமல்ல. யாதொரு வருத்தமுமில்லை. உங்கள் கைகளில் தெய்வசெயகாரணமின் பட்டயங்களிருக்கின்றன என்று சொல்லிப்பின்பு அவர்கள் தம்முடைய போர்ச்சேவகர்களின் எண்ணிக்கையைச் செய்தார்கள். அப்போது அச்சேவகர்களோ நூர் இலட்சத்தி முப்பத்திராயிரம் பேர்களிருந்தார்கள். ஒருநாள் இரவின் பின்ஜாமத்தில் அவ்வரசரானவர்கள் எழுந்து சேனையை அலங்கரித்துப் பகைவரிடின்மேல் யுத்தம் செய்ய அல்லாஹு யப்அலு மாயஷாவு என்று சொல்லிக்கொண்டு சேனையுடன் புறப்பட்டார்கள். இவர்களுடன் எல்லாச் சமதாக்கர்களுமிருந்தார்கள். அப்போர்ச்சேவகர்கள் கோட்டையின் அகழின் சமீபத்தில் போய் நின்றுகொண்டார்கள். பின்பு அவ்வரசரானவர்கள் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து ஒரு நிமிஷத்துக்குள் அந்த அகழைத் தாண்டி கோட்டையின் கதவெதிரில் நின்று அதைக்குருஜ் என்ற ஆயுதத்தைத் திருப்பிக்கொண்டு அடித்தார்கள். அதனால் அக்கதவு உடைந்துபோய் தூள்தூளாய்விட்டது. பின்னும் அவர்கள் தம்முடைய கையால் அதைவிழுத்தட்டி மற்றொரு கதவைக் கையால் தூக்கி பெயர்த்துக்கொண்டுபோய் அவ்வகழின்மேல் பரப்பி விட்டார்கள். இவ்விதமாய் அவ்வகழின்மேல் ஒரு பாலம் கட்டிப் போர்ச்சேவகர்களை அதின் மூலமாய் கோட்டைக்குள்ளாக்கி விட்டார்கள். ஹஸரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் கோட்டைக்குள் போனபோது அந்த ஜனங்கள் எல்லோரும் அசந்த நித்திரையிலிருந்தார்கள். பின் இவர்கள் யா அலி யா அலி என்று எப்போது சத்தங்களை உயர்த்தினார்களோ அப்போது நிமிஷத்துக்குப் பட்டணத்துக்குள் பயப்பட்டமும் இரைச்சலும் கூக்குரலும் உண்டாய்விட்டது. அவ்வரசரானவர்கள் மின்னலைப்போல அகங்காரத்தோடு எதிரிகளின் மேல் விழுந்து அவர்களை வெட்டத்தொடங்கினார்கள். பின்னும் மேகம் கர்ஜிக்கிறதைப்போல் சத்துருக்களின் மேல் கர்ஜித்துக்கொண்டு பட்டயத்தின் வீச்சுகளை வீசிக்கொண்டிருந்தார்கள். மரணமோ அந்நீசர்களை வந்து அழுக்கிக்கொண்டது. பின்னும் எதிரிகளை இரக்கமின்றி வெட்டிக்கொண்டிருக்கும்போது அனேகர்கள் ஓடத் தொடங்கினார்கள். பகலுக்கள் ஒரு நிமிஷத்துக்குள் ஆயிரம் ஆயிரங்களானவர்களை வெட்டி நரகத்துக்கு அனுப்பிவித்து விட்டார்

கள். பின்னும் எவர்கள் எதிர்த்துக்கொண்டிருந்தார்களோ அவர்களை அவர்கள் சங்கரித்துக்கொண்டிருந்தார்கள். எவர்களை அவர்கள் அடித்துக்கொண்டிருந்தார்களோ அவர்கள் பிழைக்காதிருந்தார்கள். ஒவ்வொரு தெருவிலும் அளவற்ற பிரேதங்கள் குவிந்து கிடந்தன. எப்போது இரவு போய்விட்டதோ அப்போது விடியற்காலத்தின் வெளிச்சம் காணப்பட்டது. அவ்வரசரானவர்களுடைய போர்ச்சேவகர்கள் சத்துருக்களைப் பொறுக்கிப்பொறுக்கித் தேடித்தேடி வெட்டிக்கொண்டிருந்தார்கள். பின்னும் ஆயிரமாயிரங்களானவர்கள் பயத்தால் அகழில் விழுந்து செத்தார்கள். எப்போது இவ்வித பெருத்த சங்காரம் நடந்துகொண்டிருந்ததோ அப்போது அந்த மர்வான் என்பவன் நித்திரையில் இருந்தான். பின்பு அவன் தடுமாறி எழுந்து ஒவ்வொரு இடத்திலும் அரசரவர்களுடைய சேனை பரவிப்போயிருப்பதைக் கண்டு அய்யய்யோ எங்களுடைய பிழைப்பு வீணாயிருக்கிறது. நம்முடைய ஆயுளெல்லாம் மண்ணில் போய்விட்டதே யென்று சொல்லிப் பாக்கியங்களையும் வீடுவாசல் பிள்ளைக்குட்டி முதலியவைகளையும் விட்டுவிட்டு ஓடத் தொடங்கினான். பின்னும் அவன் திகலடைந்தவனும் வியாகுலமடைந்தவனுமாயிருந்தான். அப்போது மாலிகா என்பவர் அவனைக் கண்டு ஓ குருட்டு இருதயமுடையவனே, ஓ இருண்ட கமலமுள்ளவனே, எங்கே ஓடுகிறாய். இப்போது உன்னுடைய இருப்பிடம் தோசக்கா யிருக்கிறது. நீ அநியாயமாயும் பலாத்காரமாயும் ஹஸரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய பேரமார்களை நாசமாக்கினாய். ஓ பாவியே, நீ என்னுடைய கையால் தப்பித்தவறி எங்கே போவாய் என்று அவனுடன் சொல்லி வெகு சீக்கிரமாய் அவனுடைய கைகளை முதுகின் பின் கட்டி அரசரானவர்கள் முன் அவனைக் கொண்டுவந்து நிறுத்தி அரசரை நோக்கி "ஓ என் அரசரானவர்களே, இவனே தங்கள் சகோதரர்களுடைய கொலைஞனாயிருக்கிறான்," என்று சொன்னார். அப்போது அவர்கள் இதைக்கேட்டு இவனை எவ்விதமாய்க் கொல்லவேண்டுமென்று அவரிடத்திலேயே கேட்டார்கள். அதற்கு அவர் இவனுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்துவிட்டு அவன் பேடனா[illegible] பிழைக்கும்படி அவனைக் கொல்லாமல் விட்டுவிடவேண்டுமென்று சொன்னார். அவ்வரசரானவர்கள் அதைக்கேட்டு அவ்விதமாகவே செய்து அவனை விட்டுவிட்டார்கள்.

புறப்பட்டான். இவ்வித வேதனையில் அவன் எந்தெந்த இடம் போய்க்கொண்டிருந்தானோ அவ்விடங்களில் எல்லாம் அவன் குத்தும் உதையும் பட்டுக்கொண்டிருந்தான். பின்பு அவன் இவ்விடமிருப்பது அவமானமாயிருக்கிறதென்று எண்ணி வனாந்தரம் போய்ச் சேர்ந்தான். பின்னும் அவன் அவ்விடமிருந்துகொண்டு கலகத்துக்காக வெகு பெரிய சேனையைச் சேகரிக்கத் தொடங்கினான். அவ்வரசரானவர்கள் மாஹியா என்பவரைத் தம்முடன் வைத்துக்கொண்டார்கள். பிழைத்திருந்த மற்ற எல்லா ஜனங்கள் அவ்வரசரானவர்களிடம் வந்து பையத்து செய்து அவர்களுக்குக் கீழ்ப்பணிந்துகொண்டார்கள். பின்பு அவ்வரசரானவர்கள் எஜீது என்பவனை நாசமாக்க அவனுடைய அரண்மனைக்குப் போகப் புறப்பட்டார்கள். அவ்வரண்மனைக்குள் போய் தன் சகோதரர்களின் கொலைஞனை வெகுசாகத் தேடினார்கள். அப்பாவி அகப்படவேயில்லை. ஆகையால் அவன் எந்த இடத்திலாவது ஒளித்துக்கொண்டிருப்பான். அவனைக் கண்டுபிடியுங்களென்று போர்ச்சேவகர்களுக்குச் சொன்னார்கள். அப்போது போர்ச்சேவகர்களும் மற்ற சகலரும் அவனைத் தேடத் தொடங்கினார்கள். அப்படித் தேடியும் அவனை ஓரிடத்திலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுடைய அப்பும் தலங்களில்லை. பின்னும் அவனைக்கண்டு பிடிக்க ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு பெட்டியிலும் தடங்களிலும் கொல்லைகளிலும் தேடினார்கள். இப்படித் தேடியும் அவன் அகப்படவில்லை. இதின்பின் அவ்வரசரானவர்கள் திடமொன்று அவனைத்தேட மேடையின்மேல் போனார்கள். அவ்விடமும் அவனுடைய அப்பு வெளிப்படவில்லை. ஆகலால் அவர்கள் அவனோ தன் உயிரைக் கைகழுவி எங்கேயோ ஓடிப்போய் விட்டான் என்று சொல்லி அரண்மனையைவிட்டு, வெளியே புறப்பட்டு வானத்தின்மேல் திருஷ்டியைப் போட்டார்கள். அப்போது கோட்டையின் பக்கம் சோதி நிறைந்த ஒரு சுவாலையை அவர்கள் கண்டார்கள். அச்சுவாலையோ வானத்தின்மேல் போய்க்கொண்டிருந்தது. அவர்கள் அதைப்பார்த்து அதின் சமீபம்போய் ஓ சுவாலையே என் நீ போகிறாய். உன்னை எவன் உலகத்தில் படைத்திருக்கிறானோ அவன் என்னையும் படைத்துப் பூமியில் வைத்திருக்கிறானோ அவ்வாண்டவனுடைய பிரமாணம் உனக்கு நான் இட்டிருக்கிறேன். உன்னுடைய சங்கதி என்ன இருக்கிறது, அதை எனக்கு நீ தெளிவாய்ச் சொல்வாயாக. பின்னும் நீ

ஏன் வானத்தின்மேல் போகிறாய். உன் நாமத்தையும் எனக்குக் காட்டுவாயாகவென்று சொன்னார்கள். அப்போது அந்தச் சோதிபொருந்திய சுவாலையோ ஓ ஹனீப்ஷா என்பவரே கேளும். நானோ ஹசரத்து அலி முர்த்துஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராகிய இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆத்துமாவாயிருக்கிறேன். நான் கர்பலாவில் ஷஹீதானவனாயிருக்கிறேன். இவ்விடமிருக்கும்படி எனக்கு ஆண்டவனுடைய கட்டளையாயிருந்தது என்று சொல்லிப் பின்பு எஜீது என்பவன் ஆண்டவனுடைய ஆக்கினைக்குள்பட்டு அவன் ஒரு கிணற்றுக்குள் செத்துக்கிடக்கிறான். நீர் போய்ப் பார்த்துச் சீக்கிரமாய்த் திரும்பி தம்முடைய ஸ்தலத்துக்கு வந்து விடுமென்று சொல்லி அந்தச் சுவாலை வானத்தின்மேல் போய் விட்டது. அரசரானவர்கள் எப்போது இந்த அந்தரங்கமான சங்கதியைக் கேட்டார்களோ அப்போது அவர்கள் தம்முடைய கையில் பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு அந்தக் கிணற்றுக்கு அவனைப்பார்க்கப் புறப்பட்டார்கள். அந்தக் கிணறு தேளைப்போலவே இருந்தது. அதில் அவன் கேடான ஸ்திதியோடு வாயைத்திறந்து செத்துக் கிடந்தான். இவ்வித ஸ்திதியோடு அவன் செத்துக்கிடந்ததை அவர்கள் கண்டார்கள். எஜீது என்பவன் தோசக்கு போய்ச் சேர்ந்தான்.

ஹசரத்து ஜைனுல் ஆபிதீன் அவர்களை முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சிறையிலிருந்து வெளியாக்கினது.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எஜீது என்பவன் செத்துக் கிடந்ததைப் பார்த்தார். அதின்பின் திரும்பி ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சிறைச்சாலையிலிருந்து மீட்பதினாசை மனதில் வைத்துக்கொண்டு அச்சிறைச்சாலையை விசாரித்துக்கொண்டே அவ்விடம் போனார்கள். அவ்விடத்திய காவல்காரன் வெகு ஒழுக்கத்தோடு அவ்வரசரவர்களுடைய பாதங்களைத் தரிசித்து நின்றான். அப்போது அவர்கள் அந்தக்காவல்காரனைப்பார்த்து ஓ கஸ்ரூனே, நீ இச்சாலையின் திறவுகோலைக்கொண்டுவந்து என்னிடங்கொடுவென்று சொன்னார்கள். அதற்கு அவன் ஓ அரசரானவர்களே அந்தக் கன்றாகிய எஜீது என்பவன் இந்தக் கதவின் திறவுகோலைத் தன்னுடைய

காடாமலொடு சதாகாலம் வைத்துக்கொண்டிருந்தான். என்னிடமில்லை என்று சொன்னான். அப்போது ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் இதைக்கேட்டுத் தம்முடைய கையிலிருந்த குறுஜ் என்ற ஆயுதத்தைத் திருப்பி அவன்தலையின்மேல் பலத்தோடு அடித்தார்கள். அதனாலே அத்தலை உடைந்துபோய்விட்டது. பின்பு அவர்கள் அதற்குள் பிரவேசித்தார்கள். இவர்களை பீபீ உம்மஹானீ அவர்கள் கண்டு சந்தோஷப்பட்டு ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களிருந்த இடம் போய் ஒரு சங்கம் நிறைந்த மனமோனவரோடிருந்து இன்னும் ஆண்டவன் கிருபை உம்மிடமிருக்கிறது. அவர் உம்முடைய சித்தப்பாவை அனுப்பியிருக்கிறான். அவர் வந்திருக்கிறார். சந்தோஷப்பட வேண்டுமென்று சொன்னார். இதை அவர்கள் கேட்டு சந்தோஷப்பட்டு எழுந்து நிற்கவே அரசானவர்கள் அவர்களைத் தங்கள் கழுத்தோடு அணைத்துக்கொண்டார்கள். பின்பு அவ்விருவர்களும் கண்ணீர் உதிர்த்தார்கள். பின்பு அரசானவர்கள் ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மன ஆறுதல் செய்து சபர் செய்யும்படி உபதேசம் செய்தார்கள். பின்னும் சிறைச்சாலையில் சிறையாயிருக்கும் அகுறுபத்தார் சகலரையும் கொண்டுவரும்படி அவ்வரசானவர்கள் கட்டளையிட்டார்கள். அவர்கள் எல்லோரும் வந்தார்கள். அவர்கள் எல்லோரும் மெலிந்துபோயிருந்தார்கள். அவர்கள் சரீரத்தின்மேல் தோலும் எலும்புமே இருந்தன. அவர்கள் எல்லோரையும் ஸ்நானம் செய்விப்பதின் கட்டளையிட்டு அவர்களுக்கு ஜரிகை உடுப்புகளை உடுத்தும்படி செய்தார்கள். பின்பு ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சிம்மாசனத்தின்மேல் கொண்டுபோய் உட்காரவைக்கப் பிரயத்தனம் செய்தார்கள்.

முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் சைனுல் ஆபிதீன் அவர்களைச் சிம்மாசனத்தின்மேல் உட்காரவைத்த சங்கதி.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தலைமேல் கிரீடத்தை வைத்துத் தம்முடைய சகல தோழர்களுடன் அவர்களை சிம்மாசனத்தின்மேல் கொண்டுவந்து உட்காரவைத்தார்கள். பின்பு முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அரச ஒழுங்கின்படி சலாம் செய்தார்கள். இதின்பின் சகலரும் வரிசை வரிசையாய் கைகளைக் கட்டிக்கொண்டு ஹசரத்து சைனுல் ஆபிதீன் அவர்கள் முன் நின்றிருந்தார்கள். பின்பும் பாதுஷா என்பவர் மந்திரிக்குள் வைக்கத் தக்கவராயிருக்கிறார் என்றும், அவருடைய விசுவாசமோ அவ்விடத்தார் விசுவாசத்தில் சிறந்ததாயிருக்கிறதென்றும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் அறிந்து தம்முடைய தயவால் அவரை ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மந்திரியாக்கினார்கள். பின்பு சுபமங்களத்தின் மேளங்களும் நகாராக்களும் பறைகளும் அடிக்கப்பட்டன. பின்னும் ஒவ்வொரு இடங்களிலும் ஆனந்தங்களும் சந்தோஷங்களும் உண்டாயிருந்தன. அப்பால் பணங்களையும் திரவியங்களையும் தானமும் தர்மமும் செய்யத்தொடங்கினார்கள். எவர்கள் சமுகத்தார்களாயிருந்தார்களோ அவர்கள் எல்லோரும் சந்தோஷத்தையடைந்தார்கள். எவர்கள் பகைஞர்களாயிருந்தார்களோ அவர்கள் எல்லோரும் நாசமாய்ப்போனார்கள். எப்போது இருலோக காவலனவராயும் அக்கால இமாமானவராயும் தோன்றிய அரசராகிய ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரரானவருமாகிய ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சிம்மாசனத்தின்மேல் உட்கார்ந்தார்களோ அப்போது சகலரும் ஆண்டவனுடைய ஷுக்குரை நிறைவேற்றினார்கள். பின்னும் அவர்கள் சிம்மாசனத்தின் மேல் உட்கார்ந்த அதனாலே வெளிச்சமுடையதாயிருந்தது. இதின்பின் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஓ என் சகோதரர் பிள்ளையே. இப்போது நீர் என்னுடன் பள்ளிக்கு வாரும். குத்பாவை ஓதும் என்று சொல்லிச் சேனை சகிதமாய் அவர்களை பள்ளிக்குக் கொண்டுபோனார்கள். பின்னும் பள்ளிக்குள் போனதின்பின் ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை மிம்பரின்மேல் ஏற்றினார்கள். இந்த இமாம் அவர்களுடைய முகமோ சந்திரனைப்போல் ஒளியுள்ளதாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. பின்னும் ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய அன்புள்ளவராகிய ஹிதாயத்தின் வானத்துடைய நட்சத்திரமானவர் மிம்பரின்மேல் நின்று முதலில் ஆண்டவனுடைய ஏகத்துவத்தை விளங்கப் பண்ணினார். பின்பு

அவர்கள் ஹசரத்து முஹம்மது முஸ்தப்பா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய புகழை வாழ்த்தினார்கள். இதின்பின் மெய்யா மத்து நாளின் வேதங்களுடைய பயானைத் தெளிவாய்த் திருவாக்கால் விவரித்துச் சகலருக்கும் தெரியப்படுத்தினார்கள். அப்போது மஜ்லிசில் உட்கார்ந்திருந்த சகலரும் கேட்டு பெருமூச்சிட்டு அழத் தொடங்கினார்கள். அப்போது ஹசரத் இமாம் அவர்கள் “ ஓ ஜனங்களே, நானே எஜீது என்பவனால் வேதனையடைந்த தோஷமற்ற பரிசுத்த இமாமாகிய ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரனும் சொர்க்கலோகத் தலைவியாகிய ஹசரத்து பாத்திமா நாச்சியார் அவர்களுடையவும் தெய்வீகமாகிய ஹசரத்து மௌலா அலீ அவர்களுடையவும் பவுத்திரனும் தீர்க்கதரிசிகளின் சக்கிரவர்த்தியானவராயும் முடிவான தீர்க்கதரிசியானவராயும் உங்கள் இரக்ஷகராயுமான ஹசரத்து முஹம்மது முஸ்தப்பா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பேரப்பிள்ளையாயுமிருக்கிறேன் என்று சொன்னார்கள். அப்போது, ஜனங்கள் இவ்வித சொல்களை இமாம் அவர்கள் சொல்லக்கேட்டுக் கீழே விழுந்து உருண்டு உருண்டு அழுதார்கள். இதின்பின் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உரத்த சத்தத்தோடு இகாமத்தைச் சொன்னார்கள். தொழ இமாம் அவர்களே இமாமத்து செய்தார்கள். இவ்விதமாக சுபுஹு நமாஸை முடித்தார்கள். இதின்பின் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஹசரத்து இமாம் அவர்களுடைய தலைமேல் கிரீடத்தை வைத்துச் சிம்மாசனத்தின்மேல் உட்கார வைத்து அரசபரிபாலனத்தின் ஒழுங்குகளையும் சட்டங்களையும் அவர்களுக்குப் போதித்தார்கள். பின்னும் வீரியத்துடையவும் பராக்கிரமத்துடையவும் யுத்தங்களுடையவும் வகைகளையும் கூட அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எஜீது என்பவனை நாசமாக்கி அவனை நரகத்துக்கு அனுப்பிவித்து அவனுடைய சகல தேசங்களையும் சொத்து பொருள்களையும் கையாடிக்கொண்டார்கள். பின்னும் வைடூரியங்களையும் சிகப்புகளையும் பச்சைகளையும் முத்துகளையும் இரத்தினங்களையும் பவழங்களையும் பொக்கிஷங்களையும் இராச்சியத்தையும் இராச்சியத்திலுள்ள சகலமானவற்றையும் கைவசமாக்கிக் கொண்டார்கள். இதுவுந் தவிர அவனுடைய சேனை பதினைந்து இலட்சமிருந்தது. அப்போர்ச்சேவகர்கள் எல்லோரும்

கீழ்ப்படிந்துகொண்டார்கள். இவைகளை எல்லாம் இமாமாகிய ஹசரத்து ஜைனுல் ஆபிதீன் அவர்கள் வசம் ஒப்புவித்து விட்டார்கள் பின்பு ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எல்லோருக்கும் யானைகளையும் குதிரைகளையும் ஆடையாபரணங்களையும் கொடுத்தார்கள். பின்னும் கஜானாவையும் பங்கிட்டார்கள். தோழர்களும் சமதுக்கர்களும் பின்னும் சகலரும் வெகு சந்தோஷ ஸ்திதியோடு வாழத் தொடங்கினார்கள்.

முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் எல்லாச் சமதுக்கர்களை அவரவர்களின் தேசங்களுக்கு அனுப்பிவித்தது.

அரசரானவர்களாகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் ஒருநாள் சபையிலிருந்தபோது அச்சபையில் அவர்களுடைய சகோதரர்களும் அவர்களுடன் இருந்தார்கள். பின்னும் வானத்தின்மேல் சந்திரனைச்சுற்றி இருக்கும் நட்சத்திரங்களைப்போல் அச்சபையார் எல்லோரும் அவர்களைச் சுற்றிக்கொண்டு நின்றிருந்தார்கள். அந்தச் சபையோ நிறைந்த சோதியால் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பின்னும் அவர்கள் எல்லோரும் ஆண்டவனுடைய தியானத்தால் பரிபூரணர்களாயிருந்தார்கள். அத்தருணத்தில் எஜீது என்பவனுடைய யுத்தத்தின் சமாச்சாரங்கள் புறப்பட்டன. அப்போது பலர்கள் பலபல வகையாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் அவ்வரசானவர்களுக்குத் தன் தேசத்துடையவும் வீடு வாசல் சம்சாரம் முதலியவைகளுடையவும் ஞாபகம் வந்துவிட்டது. அப்போது அவர்கள் தமது தோழர்களைப் பார்த்து ஓ என் சமதுக்கர்களே, நான் சொல்லுவதை நீங்கள் கவனமாய்ச் செவிகொடுத்துக் கேளுங்கள். நான் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காக இந்தச் சண்டையின்மேல் இடுப்புக்கட்டி புறப்பட்டேன். பின்னும் நான் என்னுடைய வீடுவாசலையும் குடும்பத்தார்களையும் விட்டுவிட்டு அவ்வீட்டாரைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப் புறப்பட்டேன். பரிசுத்தனாகிய ஆண்டவன் என் மனக்கருத்தைப் பூர்த்தியாக்கினான். பின்னும் அவன் என் எண்ணத்தை நிறைவேற்றினான் இப்போதோ நான் மனத்திருப்தியுடையவனானேன். நான் என் கருத்

தைக் கைக்கொண்டேன். இப்போது நீங்கள் எல்லோரும் தங்கள் தங்கள் தேசங்களுக்குப்போய்த் தங்கள் தங்கள் குடும்பங்களோடு சேருங்கள், என்று சொன்னார்கள். எப்போது அரசரானவர் கூறிய இந்தச் சங்கதிகளை அவர்கள் கேட்டார்களோ அப்போது எல்லோரும் சத்தமிட்டு அழுதார்கள். பின்னும் அவர்கள் ஓ எங்கள் அரசரானவர்களே, எங்கள் உயிர் உங்கள்மேல் தசத்துக்காயிருக்கிறது. மூன்று வருடக் காலமாய் நாங்கள் தங்களுடைய பாதங்களினால் பாக்கியத்தை யடைந்துகொண்டிருந்தோம். ஒருநாளும் நாங்கள் தங்களுடைய உத்தரவின்னியில் நடக்கவில்லை. தங்கள் கட்டளையின்மேல் நாங்கள் யுத்தம் செய்தோம். நாங்கள் தங்கள் கட்டளையை மீறவில்லை. நாங்கள் யுத்தஞ்செய்து பகையாளிகளை நாசமாக்கினோம். நாங்கள் எல்லோரும் சேர்ந்து தங்களுடைய உறவோடு புஷ்பவனத்தில் புஷ்பங்கள் விரிந்துகொண்டிருப்பதைப்போல் மலர்ந்துகொண்டிருந்தோம். இப்போது எங்கள்மேல் தங்கள் கிருபை ஏன் குறைந்திருக்கிறது. இவ்விஷயத்தில் எங்கள் புத்தி எட்டாததாயிருக்கிறது. தங்கள் பாதங்களிலிருந்து ஏன் எங்களைத் தூரமாக்குகிறீர்கள். ஏன் எங்களை மனங்கரைய செய்கிறீர்கள். எங்களுக்குத் தங்களுடைய பாதங்களின் பாக்கிய மிருக்கின்றது. ஆகையால் தாங்கள் எங்களைத் துர்விதியுள்ளவர்களாக்காதேயுங்கள் என்று அறிக்கை செய்துகொண்டார்கள். இதை ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் கேட்டு ஓ என் சமதுக்கர்களே, துன்யாவானது அழிவுள்ளதா யிருக்கிறது. ஆகையால் நீங்கள் திருமக்கத்துடையவும் மதினமா நகரினுடையவும் தரிசனை செய்து பாக்கியத்தை யடைந்து சுகமே தங்கள் தங்கள் தேசங்களுக்குப் போயிருங்கள் என்று சொன்னார்கள். பின்னும் அவர்கள் எங்கள் மேல் ஹசரத்து நபிநாயகம் அவர்களுடையவும் ஹசரத்து மௌலா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் மாதாவாகிய ஹசரத்து பாத்திமா நாச்சியார் அவர்களுடையவும் கிருபை இருக்கின்றது என்று சொன்னார்கள். சூட்சம புத்தியுள்ளவர்களா யிருந்த அத்தோழர்கள் இவ்வித சொற்களைக் கேட்டு அழுகவும் விக்கப்படவும் தொடங்கினார்கள். இவ்வித கஷ்டம் அவர்கள் மேல் சம்பவிக்கவே காற்றின்மேல் பறக்கும் பறவைகளும் ஜலத்திலிருக்கு மச்சங்களும் அழுகத் தொடங்கின. பின்பு அந்தத் தோழர்கள் புகழ்ந்து சபர் செய்து ஓ எங்கள் அரசரானவர்களே, முதலில் தாங்கள் தங்கள் தேசமாகிய எமன் தேசத்துக்குப் போகப் புறப்படுங்கள். அதின் பின் நாங்கள் எங்கள் எங்கள் சுய தேசங்களுக்குப் போகப் புறப்படுவோம் என்று சொன்னார்கள். அப்பால் அவ்வரசரானவர்கள் ஓ என் தோழர்களே, ஓ என் அன்புடைய பூங்காவனத்தின் புஷ்பங்களே, நீங்கள் சதாக்காலமும் என்மேல் கிருபை வைத்துக்கொண்டிருங்கள். இப்போது நான் இவ்விடத்தில் சிலநாள் இமாம் அவர்களிடம் இருப்பேன். எல்லாத் தேசத்தையும் சொத்துகளையும் கையாச்சனை செய்வேன். ஆதலால் நான் இவ்விடமிருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகையால் நீங்கள் சுகமே சுயதேசங்களுக்குப் போங்கள் என்று அவர்களுக்குச் சமாதானம் சொல்லிச் சபையைக் கலைத்து விட்டார்கள். உடனே அஸ்தமித்தது. இரவு வந்து சம்பவித்தது. பின்பு வான்விளக்கு(சந்திரன்)ஆகாயத்தின்மேல்வெளிச்சத்தைத் தந்தது. எல்லோரும் படுக்கைக்குப் போய் சுகமே நித்திரை செய்தார்கள். பின்பு இரவு நீங்கிப்போய் சூரியன் புறப்பட்டது. அப்போது சபையின் பூங்காவனமானது புஷ்பங்களைப்போல மலர்ந்து உடனே சேனைகளின் எல்லாத் தலைவர்களும் அவ்வரசரானவர்களாகிய ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் சமுகத்தில் வந்து அவர்களைக் கண்டு தாங்கள் பிரிந்துபோவதின் துக்கத்தால் அழுது அவர்களுடைய பாதங்களின் மேல் விழுந்து முத்தங்களிட்டார்கள். இவர்களுடைய அழுதலைக்கண்டு அவ்வரசரானவர்களும் அழுதார்கள். பின்பு அவர்கள் இவர்கள் எல்லோரையும் வெகு கிருபையுடன் தம்முடைய நெஞ்சோடு அணைத்து அவர்களுக்கு மனஆறுதல் செய்தார்கள். இதின்பின் அத்தோழர்கள் உத்தரவு பெற்றுக்கொண்டு அவர்களால் பிரிந்து ஆஹா ஒஹோ வென்று சொல்லிக்கொண்டு தங்கள் தங்கள் சுயதேசங்களுக்குப் புறப்பட்டார்கள். இவர்களில் எல்லோருக்கு முன் முஷீப்காக்கா என்பவர் சேனையுடன் தன் தேசமாகிய இராக்கு தேசத்துக்குப் போனார். இவருக்குப்பின் துர்க்கிகளாகிய தோகான் என்பவரும், மோகான் என்பவரும் ஆக இவ்விரு சகோதரர்களும் தங்கள் தேசமாகிய நட்ரோகு தேசத்துக்குச் சேனையுடன் போனார்கள். இவர்களுக்குப் பின் இப்ராஹீம் உஷ்த்தார் என்பவர் தன் குமாரரோடு தன் தேசமாகிய

கஷப்தேசத்துக்குப் போனார். இவருக்குப்பின் ஹஜரத்து மௌலா அலி அவர்களுடைய மூன்று குமாரர்களாகிய தாலிப் அலியாருக்கள் தங்கள் தேசமாகிய பொக்தாது தேசத்துக்குப் போனார்கள். பின்பு அவ்வாசாரனவர்களாகிய ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் தம்முடைய சகோதரரின்னேவிட மிருந்துகொண்டு நியிவுக்கு தேசம் முழுமையையும் கைப்பற்றிக்கொண்டு அரசாளத் தொடங்கினார்கள். பின்பு அவர்கள் ஒருவின்படியுள்ள எல்லா அறநாமுகளைத் தேசமுழுவதிலும் நிறைவேற்றினார்கள். மறுபடியும் ஹஜரத்து சைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பட்டத்தில் உட்காரவைத்து எல்லா அரசாட்சியை அவர்களுடைய கையில் ஒப்புவித்தார்கள். அப்போது பூமியிலுள்ள எல்லா ஜீவஜெந்துக்களும், சமுத்திரத்திலுள்ள எல்லா உயிர்ப்பிராணிகளும், வானத்திலுள்ள எல்லா மலாயிக்குகளும் சந்தோஷமடைந்தார்கள்.

எஜீது என்பவனுடைய சமுதாக்கர்கள் முஹம்மது ஹனீப்ஷா அவர்களோடு யுத்தம் செய்தது.

ஹஜரத்து இமாம் சைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இராஜீகம் ஆண்டுகொண்டிருக்கையில் ஒருநாள் அவர்களிடம் ஒரு வேவுகாரன் வந்து சகல எஜீதிகள் ஒன்றுகூடி அவர்கள் ஒரு பெரிய சேனையாகச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கணக்கில் லெட்சாதி லெட்சர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் இன்ன மலைக்குகையில் வந்து கூடுகிறார்கள். பின்னும் அவர்கள் எறும்பு கூட்டங்களைப்போலக் காணப்படுகிறார்கள். பின்னும் அவர்கள் இன்னநாளை வந்து தங்களைத் திடமென்று சூழ்ந்துகொள்வார்கள் என்று சொன்னான். இதை ஹஜரத்து இமாம் சைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டுத் தன் சேனையை ஆயத்தமாக்கத் தொடங்கினார்கள். எவர்கள் இப்படித் தாக்கணாயிருக்கார்களோ அவர்களுக்கு வெகு துக்கம் சம்பவித்தது. பின்னும் ஹஜரத்து சைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தத்துக்குப் புறப்பட ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றும் எஜீதிகள் எல்லோரும் ஒரு மலைப்

உ௯3॥

பட்டு இருக்கிறார்களென்றும் அவர்களால் வருத்தம் நேரத்துபோயிருக்கிறதென்றும், இன்னநாளையதினம் யுத்தத்துக்கு அவர்கள் புறப்படுகிறவர்களாயிருக்கிறார்களென்றுமான சமாச்சாரம் அவ்வாசராகிய ஹஜரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுக்கு எப்போது தெரிந்ததோ அப்போது அவர்கள் சித்தங்கொண்டு விசாரம் வைத்தாமலே சந்தோஷத்தோடு வெகு சீக்கிரமாய் ஹஜரத்து இமாம் அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். பின்னும் அவ்வாசாரனவர்கள் வருவதை ஹஜரத்து இமாம் அவர்கள் கண்டு சந்தோஷப்பட்டு உடனே சிம்மாசனத்தைவிட்டிருந்து எழுந்து நின்றார்கள். பின்பு அவ்வாசரானவர்கள் தம்முடைய சகோதரப்பிள்ளையுடைய கையைப்பிடித்துத் தம்மிடம் உட்காரவைத்துக் கொண்டார்கள். அப்பால் அவ்வாசரானவர்கள் ஹஜரத்து இமாம் அவர்களைப்பார்த்து ஏ என்கண்மணியே, நீரே எனக்கு இரண்டாவது ஹுஸைனுவாயிருக்கிறீர். பின்னும் நீர் ஹஜரத்து மௌலா அலி அவர்களுடைய குமாரராகிய ஹஜரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாராயிருக்கிறீர். பின்னும் நீர் தீர்க்கதரிசனத்துடைய வானத்தின் சந்திராயிருக்கிறீர். விலாயத்துடைய விருக்ஷத்தின் கனியாயிருக்கிறீர். ஆண்டவன் உம்மை எக்காலும் நிலையாய் வைப்பான். உம்மைக் கொண்டு சந்ததியை உற்பத்திசெய்வான். அது நிலையாயிருக்கும். பின்னுமநீரே ஹஜரத்து இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பூங்காவனத்தின் புஷ்பமாயிருக்கிறீர். நீர் சந்தோஷமாயும் மகிழ்ச்சியாயுமிரும். பின்னும நீர் சொர்க்கலோகத்தலைவியாகிய பீபி பாதிமா நாச்சியார் அவர்களுடையவும், ஹஜரத்து மௌலா அலி அவர்களுடையவும் அடையாளமாயிருக்கிறீர். நீரோ குழந்தையாயிருந்ததின் நிமித்தம், நீர் உம்முடைய பெற்றோர்களின் சுகத்தைப் பார்க்கவில்லை. அனுபவிக்கவுமில்லை. ஆனால் அதற்கு எதிரிடையாய் துக்கங்களையும் வருத்தங்களையும் அனுபவித்திருக்கிறீர். இப்போது நீர் உம்முடைய மனதில் யாதொரு விதமான கவலைகளும் விசாரமும் வைக்க வேண்டாம். உம்முடைய நிரோதத்தின் மேல கண்களை எடுத்துப்பார்க்க எவனுக்கு வல்லமை இருக்கின்றது. எனக்கு இப்போது என்னுடைய ஆண்டவனுடையவும் ஹஜரத்து நபிநாயகம் அவர்களுடையவும் பிரமாணமாயிருக்கிறது. பின்னும் எனக்கு ஹுதகோர்களுர் அவர்களுடையவும் சாயிர்களின் சங்காரானவர்களுடையவும் பிரமாணி

யிருக்கிறது. நான் ஆண்டவனுடைய கட்டளையைக்கொண்டு எஜீதுகளின் பக்கம் ஒரு சாடை செய்து அவர்கள் எல்லோரையும் ஒரு நிமிஷத்தில் நாசமாக்கி விடுவேன். பின்னும் நான் எல்லோரையும் தூள் தூளாக்கி நாசமாக்கி விடுவேன். நான் உம்முடைய சத்துருக்களைக் கீழ்மேலுமாக்கி அவர்களுடைய குடும்பங்களையும் நாசமாக்கி விடுவேன். உம்முடைய சிம்மாசனம் உமக்கு சதாக்காலம் மங்களமாயிருக்கும். நான உம்மிடமிருக்கிறேன். நீர் கொஞ்சங்கூட அச்சமடையவேண்டியதில்லை. நீர் நீதியுடனும் நியாயத்துடனும் சதாகாலம் இராச்சிய பரிபாலனம் பண்ணும். நீர் உம்முடைய மனதில் சத்துருவின் விசாரம் வைக்கவேண்டியதில்லை. நான் நாளையக்காலமே போய் சகல எஜீதிகளை வெட்டி விடுகிறேன். பின்னும் நான் நிர்ப்பயமாய் எஜீதிகளை நரகத்துக்கு அனுப்பிவிடுகிறேன். நான் அவர்களுடைய வேரை உலகத்திலிருந்து மூட்டோடு பிடுங்கிவிடுகிறேன். நான் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய சந்தானமாயிருக்கிறேன் என்று நீர் என்னை அறியும். நான் பராக்கிரமசாலியாயிருக்கிறேன் என்றும் நீர் அறிவீராக. நான் ஹசரத்து இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குடும்பத்தார்மேல் தசத்துக்காய்ப் போய் ஒரு கையில் பட்டாக்கத்தியைப் பிடித்து ஒரு கையின் உள்ளங்கையில் என் தலையை வைத்திருக்கிறேன். நான் ஹசரத்து மௌலா அலி அவர்களுடைய நிஜமான குமாரனாயிருப்பேனானால் எல்லா எஜீதிகளையும் ஓர் நடையில் தூற்றியும் பெருக்கியும் விடுவேன்" என்று இவ்விதங்களாய் சத்துருக்கள் விஷயத்தில் ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் சொல்லத் தொடங்கினார்கள். பின்பு கீழ்த்திசையின் அரசனாகிய சூரியன் மேற்குத்திசைக்குப் போய்த் தன் தலையைக் குனியவைத்து விட்டது. உடனே இரா அரசனாகிய சந்திரன் புறப்பட்டது. அப்போது அரசப்பிரபுக்கள் எல்லோரும் சயனித்துக்கொள்ளப் போனார்கள். அவ்வரசரானவர்களும் போய்ப் படுத்துக்கொண்டார்கள். இதின்பின் விடிவதின் வாசனை புறப்பட்டது. அப்போது மலஜ்ஜின் சத்தத்தோடு பாங்கு கொடுத்தான். எல்லோரும் சுபஹோ தொழுதார்கள். பின்பு விடியற்காலம் வந்தது. சூரியன் பந்தோடு பிரகாசிக்க வாரம்பித்தது. உடனே அரசரானவர்களாகிய ஹசரத்து முஹம்மது ஹனீபா அவர்கள் யுத்தத்துக்குப் போக ஆயத்தமானார்கள். பின்பு ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு

குதிரையின்மேல் ஏறி ஆயத்தமாய்ப் போகவென்று போர்ச்சேவகர்களுக்குக் கட்டளையிட்டார்கள். அப்போது எல்லாச் சேனையும் ஆயத்தமாய் போய்விட்டது. அவர்களெல்லோரும் இரத்தம் உறிஞ்சுகிறவர்களாயும் சிங்கங்களாயும் பராக்கிரமசாலிகளாயு மிருந்தார்கள். எல்லாச் சேனையும் ஓரிடம் சேர்ந்துவிட்டது. அப்போது அரசரானவர்களும் மற்றும் எல்லோரும் ஹசரத்து இமாம் அவர்களிடம் வந்து அவர்களைக் கண்டுகொண்டார்கள். பின்னும் அரசரானவர்களோ இமாம் அவர்களை அன்பால் தன் கழுத்தோடு அணைத்து உத்தரவு பெற்றுக்கொண்டு எஜீதிகள்மேல் யுத்தம் செய்யவும் அவர்களின் தலைமேல் மண்போடவும் புறப்பட்டார்கள். இவர்களுடன் இவர்களுடைய சகோதரராகிய அலி அக்பர் அவர்களு மிருந்தார்கள். சேனையின் மேகம் புறப்பட்டது. ஆயுதத்தாரிகளுடைய கூட்டமும் புறப்பட்டது. ஆயுதத்தாரிகளுடைய ஆயுதங்கள் மின்னலைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அப்பிரகாசத்தால் கண்கள் கூச்சமடைந்துகொண்டிருந்தன. அச்சேனையில் அரசரானவர்கள் சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் எஜீதிகளின்மேல் பராக்கிரமத்தோடு புறப்பட்டிருந்தார்கள். பின்னும் அவர்கள் அம்மிருகங்கள் இருந்துகொண்டிருந்த அம்மலை சமீபம் போனார்களோ அப்போது அம்மிருகங்கள் நக்காருவுடைய சத்தத்தைக்கேட்டு யுத்தம் செய்ய ஆயத்தமாய்ப் புறப்பட்டார்கள். அவர்களுடைய சேனையோ கணக்கற்றதாயிருந்தது. அவ்வரசரானவர்களுடைய திருஷ்டி எதுவரை சென்றுகொண்டிருந்ததோ அதுவரை அவர்களால் எல்லாப் பூமி நிறைந்திருந்தது. பின்பு அவ்வரசரானவர்கள் அச்சேனையின்மேல் பார்வையைப் போட்டுக்கொண்டிருக்கையில் சேனைக்குள் நின்றுகொண்டிருந்த கழுதையாகிய மர்வான் என்பவன்மேல் அவர்களுடைய திருஷ்டி திடீரென்று போய் விழுந்தது. உடனே அவ்வரசரானவர்கள் சமந்து என்ற சுருக்கை அவன்மேல் எறிந்து அவனை வேட்டைப் பிராணியைப்போல் பிடித்துக் கொண்டார்கள். பின்பு அவர்கள் அவனை ஓ மர்வானே நீ பிழைத்துக்கொள்ளும்படிக்கும் நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்துகொள்ளும்படிக்கும் நான் உன்னை உயிரோடு விட்டிருந்தேன் அன்றி வேறல்ல. அப்படியிருக்க—நீ அப்படி நடக்கவில்லை. பின்னும் உன்னுடைய இந்தத் துர்ச்சேஷ்டை உன்னிலிருந்து நீங்கவில்லை. நீ கன்னுசா யிருக்கிறாய்— ஒன்

கலைக் கலகத்துக்கு எழுப்பினாய். பின்னும் நீ எங்கள்மேல் அளவற்ற சேனையைச் சேகரித்தாய். ஆதலால் இப்போது நான் உன்னை உயிரோடுவிட்டு வைப்பதில்லை. அப்படி விட்டுவைப்பது புத்தியல்ல. அனுகூலமுமல்ல, உன்னால் வெகு கெடுதியிருக்கிறதென்று சொல்லி, அவன் தலைமேல் பட்டாக்கத்தியைக்கொண்டு சாய்ப்பான ஓர் அடி அடித்தார்கள். உடனே அவன் வெட்டப்பட்டுப் பூமியில் விழுந்தான். வெகுசீக்கிரத்தில் அவனைத் தோசாக்குக்கு அனுப்பிவிட்டார்கள். அவனும் எஜீது என்பவனோடு போய்ச் சேர்ந்தான். இதின்பின் எல்லா எஜீதிகள் ஒருமிக்க கூடிச் சத்தமிட்டுக்கொண்டு அவர்கள்மேல் பாய்ந்தார்கள். அப்போது அவ்வரசரானவர்களும் மற்றவர்களும் ஹைதரி சத்தத்தைச் சப்தித்துக்கொண்டு கண்ட இடங்களில் எஜீதிகளை வெட்டத் தொடங்கினார்கள். அவ்வேளையோ கியாமத்தின் நாளுடைய வேளையாயிருந்தது. அப்போது எஜீதிகளின்மேல் தெய்வ ஆக்கினை வருவித்துக்கொண்டிருந்தது. அவ்வரசரானவர்களுடைய போர்ச்சேவகர்களோ ஆயிரமாயிரமான எஜீதிகளை வெட்டத் தொடங்கினார்கள். அவர்களை விழத்தட்டினார்கள், நாசமாக்கினார்கள். பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களோ வெகு உக்கிரங்கொண்டு தம்முடைய பிரமாணத்தின்படி தம்முடைய கையை வெகு சுறுசுறுப்பாக்கி எஜீதிகளை வெட்டிவெட்டிப் பூமியின்மேல் குவியல் குவியல்களாக்கினார்கள். அப்படி அவர்கள் வெட்டிப்போட்ட பிரேதங்களோ மலைமலைகளாக இருந்தன. அவர்களுடைய உயிர்களோ சக்கர் என்ற தோசக்கிலும், ஜஹீம் என்ற நரகத்திலும் மற்ற தோசக்குகளிலும் போய் நிறைந்துபோய்விட்டன. அன்றைக்கு நடந்த யுத்தத்தில் சகச விசேஷமான சங்காரம் நடந்தது. அதனால் ஹசரத்து இஜ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அசந்தும் அலுத்தும் போயிருந்தார்கள். பூமியிலோ இரத்த நதிகள் ஓடப்பட்டன. சக்கர் என்ற தோசக்கின் எஜமானன் வெகு சந்தோஷப்பட்டுத் தாம் முன் சென்று வந்து அவர்களைக் கொண்டுபோய் ஏழு தோசகுகளில் நிரப்பிக்கொண்டார். பின்னும் அவர் தம்முடைய கடமையை வெகு நேர்த்தியாய் நடத்தினார். பின்னும் ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய கண்களில் இரத்தவெறி வெகு அதிகமாய் ஏறிவிட்டது. ஆதலால் அவர்கள் முற்றிலும் இரக்கமற்ற பட்டயத்தை வீசிக்கொண்டிருந்தார்கள். பின்னும் பூமியென

கும் எஜீதிகளுடைய இரத்தத்தைச் சிந்தினார்கள். அப்போது இரத்தத்தமோ ஜலப்பிரளயமாய்ப் புரண்டது. மண்ணில் இரத்த சமுத்திரமாயும் நின்றிருந்தது. அதில் அவ்வரசராகிய ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடையவும் அவர்களுடைய வீரர்களுடையவும் குதிரைகள் நீந்திக்கொண்டிருந்தன. அப்பராக்கிரமசாலிகளோ அவ்வித இரத்தத்துக்குள் தங்கள் குதிரைகளை அச்சமன்னியில் பாய வைத்துக்கொண்டும் எதிரிகளை வெட்டிக்கொண்டும் இருந்தார்கள். இதற்குள் "ஓ முஹம்மது ஹனீப்பு என்பவரே, என்ன இந்த அடியார்கள் என்னுடையவர்களா யிருக்கிறார்களா அல்லது உம்முடையவர்களா யிருக்கிறார்களா என்பதை நீர் எனக்குச் சொல்லும். இன்றைக்கு நீர் இவ்வித அனிகரமாய் அவர்களை வெட்டுகிறீர். பின்னும் இரக்கமின்றிக் கொல்லுகிறீர். என்ன இவர்களுடைய சிருஷ்டிகளும் படைத்தவனும் நீராயிருக்கிறீரா அல்லது நானா என்பதை நீர் சொல்லும். பின்னும் இவர்களுடைய சவரக்ஷகன் நீரா அல்லது நானா. நானே அவர்களுடைய ஜப்பாராயிருக்கிறேன். இதை நீர் அறியவில்லையா. நீர் வெகுஇரக்கமற்றுக் கடின இருதயமுள்ளவராய் வேட்டைக்காரனைப்போல வெட்டுகிறீர். பின்னும் ஏன் நீர் மரணஆக்கினை செய்வோனைப்போல வெட்டுகிறீர்" என்று ஒரு அசரீரி வாக்கு புறப்பட்டது. இச்சத்தத்தை ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் செவிகொடுத்துக் கேட்டார்கள். உடனே அவர்களுடைய புத்தி மயங்கிப்போய் விட்டதும் தவிர அந்தக் கொதிப்பும் கொந்தளிப்பும் அவரால் நீங்கிப்போய் விட்டது. பின்னும் அவர்கள் தம்முடைய குதிரையை நிறுத்தி ஆச்சரியப்பட்டு உண்மையான ஆண்டவனால் ஆகாயத்திலிருந்து புறப்பட்ட அச்சத்தத்தை மறுபடியும் செவிகொடுத்து வெகு கவனமாய்க் கேட்டுப் பயந்து நடுங்கி ஆம் வல்லுவத்தில் நீயே பரிசுத்த ஆண்டவன். நீயே கப்பாராயிருக்கிறாய் என்று முழு இருதயத்தோடு ஒப்புக்கொண்டு அதைச் சொல்லித் தன் மனதில் வெட்கமடைந்து உயிரோடும் மனதோடும் தொபா செய்தார்கள். பின்னும் அவர்களுடைய இருதயமோ நடுநடுங்கிக்கொண்டிருந்தது. இதின்பின் அவ்வரசரானவர்கள் அப்படாகையிலிருந்த ஒரு மலைக்குகையைக்கண்டு அவ்விடம் போய் அதைப் பார்த்தார்கள். அந்தக்குகையோ வெகு அசுயமுள்ளதாயும் கெட்டதாயுமிருந்தது. அதற்குள் அப்புண்ணியபதிரேகியானவர்கள் போய் வெகு நடுக்கத்தோடும் பதர்த்

தத்தோடிப்பின்று ஓ குகையே, நீ ஆண்டவனுக்காக உன்னில் எங்களை இடம் கொடுப்பாயாக. நீ எங்களை மூடிக்கொள்வாயாக. பின்னும் நீ எங்களை மறைத்துக்கொள்வாயாக என்று அதற்குச் சொன்னார்கள். அப்போது அந்தக் குகையோ அவ்வாசரவர்களால் அச்சொற்களைக் கேட்டு அதற்கு வெகு விருப்பமுண்டாய் விட்டதுந் தவிர இரக்கமும் வந்துவிட்டது. அப்போது அது அவர்களைத் தன்னில் வாங்கிக்கொண்டது. அப்பால் அவ்வாசரானவர்கள் மறைவாய் அக்குகையில் இருந்துவிட்டார்கள். படுத்துக்கொண்டார்கள். பின்னும் அவ்வாசரானவர்களோ எல்லா எஜீதிகளை வெட்டிவிட்டு அம்மலைக்குகையில் இருந்து விட்டார்கள். பின்னும் அவர்கள் தம்முடைய முந்தானையை உலகத்தால் உதறிவிட்டு அக்குகையில் மறைந்து போனார்கள். பாருங்கள், ஹசரத்து முஹம்மது ஹனிப்பா அவர்கள் ஆண்டவனால் இரஜியாய் அக்குகையில் இருந்துவிட்டார்கள். அப்பால் அவர்களுடைய போர்ச்சேவகர்கள் எல்லா எஜீதிகளைப் பொறுக்கிப் பொறுக்கி வெட்டினார்கள். ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. இப்படி ஜெயித்து அவர்கள் திரும்பினார்கள். பின்பு அலி அக்பர் அவர்கள் தம்முடைய சகோதரரும் அரசருமான ஹசரத்து முஹம்மது ஹனிப்பா அவர்களைத் தேடினார்கள். அவர்கள் அகப்படவில்லை. ஆகையால் அலி அக்பர் அவர்கள் அழுகவும் துக்கப்படவும் தொடங்கினார்கள். பின்னும் அவர்கள் அவர்களை வனாந்திரங்களிலும் வனங்களிலும் தேடத் தொடங்கினார்கள். அங்கும் அவர்கள் அகப்படாததினால் பிரேதங்களின் குவியலில் போய்ப் பிரேதங்களை உருட்டி புரட்டித் தேடினார்கள். அங்கும் அகப்படவில்லை. பின்னும் ஷை அலி அக்பர் அவர்கள் வெகு வியாகுலப்பட்டு ஒவ்வொரு வீடுகளிலும் கிணறுகளிலும் பள்ளங்களிலும் தேடத்தொடங்கினார்கள். அங்கும் அகப்படவில்லை. ஆதலால் அவர்கள் வெறுத்து ஆசையற்றுக் கடைசியாய் அம்மலைக்குகையின் சமீபம்போய் அதற்குள் பிரவேசிக்க எத்தனித்தார்கள். அப்போது உடனே ஓ அலி அக்பர் என்பவரே நீர் எச்சரிக்கையாயிரும். இதில் பிரவேசிக்காதேயும். சீக்கிரமாய் நீர் இவ்விடத்திலிருந்து திரும்பிப் போய்விடும். சைனுல் ஆபிதீன் அவர்களுக்கு எல்லாச் செய்தியைச் சொல்லிவிடும். பின்னும் ஹனிப்பா என்பவரால் எனக்கு வெகு காரியங்கள் இருக்கின்றன. அவர் என் சமூகத்தில் இரவும் பகலும் இருந்துகொண்டிருப்பார்கள். அவரை நான் அமானத்தாகவும், சலாமத்தாகவும் வைத்திருக்கிறேன்; சந்தோஷமாய் அவர் படுத்திருக்கிறார். அவர் வெகு அடைக்கலமாயும் க்ஷேமமாயுமிருப்பார். பின்னும் நான் அவரை மஹதி அலைஹிஸ்ஸலாம் என்பவர்களுடன் சேர்ப்பிப்பேனென்று அசரீரி வாக்குப் புறப்பட்டது. இச்சத்தத்தை அலி அக்பர் அவர்கள் கேட்டு சமாதானமுற்றவரானார். பின்பு அவர்கள் சற்று நேரத்துக்குப்பின் விழித்துக்கொண்டு, அந்தக் குகையைத் [illegible] நன்றாய் உற்றுப்பார்க்கத் தொடங்கினார். உடனே ஆண்டவனுடைய கட்டளையால் அவ்வாசரே கதவுகளை மூடிக்கொண்டதுபோல் அக்குகையின் வாய் ஹசரத்து முஹம்மது ஹனிப்பா அவர்களை மூடிக்கொண்டது. பின்னும் அக்குகை பூமியின் மட்டமாய்ப் போய்விட்டது. ஹசரத்து முஹம்மது ஹனிப்பா அவர்கள் அகோரமான உலகத்தை விட்டுவிட்டுக் குகைக்குள்போய்ச் சுகத்தையடைந்தார்கள். பின்னும் அவர்களுடைய விஜயத்தின் நக்ஷத்திரமே உலகத்தைவிட்டு ஒரு மூலையைப் பிடித்துக் கொண்டது.

அலி அக்பர் என்பவர் ஓ என் அரசனே! ஓ என் அண்ணனே! இருளில் போய்த் தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்? எப்படிப் படுத்துக்கொண்டீர்கள்? உங்களுடைய சோதியுள்ள முகத்தை—நான் எப்படிப் பார்ப்பேன்? எப்போது பார்ப்பேன்? இதுவோ ஆண்டவனுடைய கட்டளையால் விதியின்படியே நடந்திருக்கிறது. அப்போ இப்போது நாம் ஒருவருக்கொருவரைக் கண்டுகொள்ளுதல் கியாமத்துநாளில் நியமனமாய் இருக்கும். இவையெல்லாம் விதியின் செய்கையாயிருக்கின்றன. இதில் பிராயத்தனஞ் செய்வதால் ஒரு பயனுமுண்டாகாது என்று இவ்விதமான சொற்களைச் சொல்லிக்கொண்டு துக்கிக்கத் தொடங்கினார். பின்னும் அவர் பெருமூச்சிட்டுக்கொண்டும் கைகளைப் பிசைந்துகொண்டும் அடித்துக்கொண்டும் துக்கப்பட்டுக்கொண்டும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். இவருடைய தேகம் முழுதும் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிவதுபோலிருந்தது. இந்த ஸ்திதியுடன் அவர் சேனைக்குள் வந்தார்.

அப்போது அங்கிருந்த போர்ச்சேவகர்கள் முதலிய சகலரும் தங்களுடைய சக்கிரவர்த்தியவர்களின் செய்தியைக் கேட்டுத் துக்கிக்கவும் அழுவுந் தொடங்கினார்கள். அலி அக்பர் அவர்களுடைய பயண

களிலிருந்து வற்றாத கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. துக்கம் கொந்தளிக்கும் கடல்போல் பொங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் துக்கத்தைச் சகிக்காமல் பூமியில் புரண்டுகொண் டிருந்தார்கள். அவர்களுடைய இருதயம் துக்கமாகிய அக்கினியினால் வெதும்பிக் கொண்டிருந்தது. அவர்கள் தன் நெஞ்சின்மேல் பெரிய பாறாங்கல் வைத்ததுபோல் கனத்த பாரமாயிருந்தது. பின்னும் நக்ஷத்திரங்கள் விழுந்துகொண்டிருப்பதைப்போல் அவர்களுடைய கண்களிலிருந்து இரத்தத்துளிகள் விழுந்துகொண்டிருந்தன. அவர்கள் யா அலீ யா அலீ என்று பெருத்த சத்தத்தோடு கூப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். இவ்விதமாய் அவர்கள் அழுதுகொண்டு வீட்டுக்குப் போனார்கள். அப்போது வீட்டார் எல்லோரும் அச்சங்கதியைக் கேட்டுக் கூக்குரலிட்டு அழத் தொடங்கினார்கள். வீட்டாருடைய அழுகையின் சத்தத்தால் எதிரொலி யுண்டாயிற்று. பின்னும் வானவாசிகளாகிய தேவதூதர்களும், காற்றில் பறக்கும் பறவையினங்களும், பூமியின் கண்ணுள்ள சகல உயிர்ப்பிராணிகளும், சமுத்திரத்தில் வசிக்கும் மச்சம் வகையறாக்களும் அழுது துக்கம் கொண்டாடினார்கள்.

அரசகுடும்பத்தார் அவ்வரசர் அவர்களுடைய துயரமான செய்தியைக் கேட்டவுடனே அவர்களுடைய இருதயங்கள் வெடித்துவிடக் கூடிய இம்சையை யடைந்தன. பின்னும் ஹசரத்து ஸைனுல் ஆபிதீன் றளியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உள்ளமாகிய கடலில் துக்கத்தின் அலைகள் ஒன்றின்மேல் ஒன்றாக அடித்துக்கொண்டிருந்தன. அப்போது சபையார் பெரியோர்களை இழந்து அழுதுகொண்டிருந்தார்கள். அவருடைய இருதயங்களும் தீயில் எரிந்துகொண்டிருப்பதுபோ லிருந்தது. இதின்பின் புத்திமானாகிய அலீ அக்பர் என்பவர் அவர்கள் எல்லோர்களுடைய இருதயங்களையும் சபுரைக்கொண்டு ஆற்றினார்கள். எல்லோர்களுக்கும் சபுருடைய வசியத்து செய்து ஆண்டவனுடைய களாவின்பேரில் சந்தோஷமாயிருக்கும்படி கட்டளை யிட்டார்கள். தாமும் அப்படியே சபர் செய்தார். அப்படிச் சபர் செய்தும் அடங்காமல் அவர்களுடைய நயனங்களிலிருந்து இரவும் பகலும் கண்ணீர் வடிந்துகொண்டே யிருந்தது. பின்னும் அவர்களுடைய சுகங்களும் சவுக்கியங்களும் நீங்கிக்கொண்டே யிருந்தன. அவர்கள் தங்களால் கூடியமட்டில் தங்கள் மனங்களுக்கு ஒருவித ஆறுதலை யுண்டாக்க முயன்றார்கள்.

அலீ அக்பர் அவர்கள் உதுமான் என்பவர்களுடைய குமாரரைத் தன்னிடம் அழைத்து இராஜ்ஜிய முழுமையையும் செங்கோல் செலுத்தும் அவர்வசம் ஒப்புவித்து மாவியா என்பவரை மந்திரியாக்கி விட்டார்கள். அப்போது உதுமான் என்பவர்களுடைய குமாரர் அரசாளவும் மாவியா என்பவர் மந்திரித்துவம் செய்யவும் தொடங்கினார்கள். இச்சங்கதியை இம்மட்டில் நிறுத்தி ஹசரத்து ஸைனுல் ஆபிதீன் றளியல்லாஹு அன்ஹு அவர்கள் றவுலா முபாரக்கை ஸியாரத்து செய்யப் புறப்பட்ட செய்தியைச் சொல்வாம்.

அலீ அக்பர் அவர்களும் ஸைனுல் ஆபிதீன் அவர்கள் வகையறாக்களும் மதீனமா நகருக்கு றவுலா முபாரக்கை ஸியாரத்து செய்யப் புறப்பட்டது.

பின்பு உமர் அலீ யவர்கள் ஹசரத்து ஸைனுல் ஆபிதீன் றளியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஹசரத்து ரசூலுல்லா சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய வீட்டாரையும் தம்முடன் இட்டுக் கொண்டு அவர்கள் எல்லோரையும் வாகனங்களின்மேல் ஏற்றி மதீனமா நகருக்குப்போகப் புறப்பட்டார்கள். இவர்கள் வருகையின் சமாச்சாரம் மதீனமா நகரத்தில் தெரிந்தபோது, அவ்விடத்திய பிரபுக்களும் பிரமுகர் முதலியவர்களும் இவர்கள் எல்லோரையும் எதிர் கொண்டழைத்துவரப் பட்டணத்தைவிட்டு வெளியில் வந்து சற்று தூரஞ் சென்றபோது எதிரில் வந்துகொண்டிருக்கும் ஹசரத்து ஸைனுல் ஆபிதீன் அவர்களைக் கண்டு அவர்களுடைய பாதங்களின்மேல் விழுந்து பாதங்களை முத்தமிட்டுக்கொண்டார்கள். பின்பு அவர்கள் யாவரையும் இட்டுக்கொண்டு பட்டணத்துக்குள் வந்தார்கள். ஹசரத்து உமர் அலீ அவர்கள் றவுலா முபாரக்கில் போய் “ஓ என் ஸெய்யிதும் தீர்க்கதரிசியுமானவர்களே, ஹனீபா அவர்கள் சமூகத்தின் ஸியாரத்தைச்செய்து இவ்விடத்திலிருந்து பிரயாணியாய்ப்போய் விட்டார். அவர் தம்முடைய மனக்கருத்துகள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக்கொண்டார். அதின்பின் அவர் குழியில் போய் ஆண்டவனோடு சேர்ந்துபோனார். என்னை விட்டுவிட்டார். ஓ ஹசரத்து நபிநாயகம் அவர்களே உலகத்தில் நான் ஒண்டியாயும் ஆதர

வற்றவனாயிருக்கிறேன்,'' என்று சொல்லித் துக்கித்துக்கொண்டிருந்தார். பின்னும் அவர் தன் சகோதரருடைய நாமத்தைக்கூவி அவரைக் கூப்பிட்டுக்கொண்டும் ஹசரத்து றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கு எல்லாச் சங்கதிகளையும் ஒப்புவித்துக் கொண்டுமிருந்தார். இதின்பின் அவர் வெளியே வந்துவிட்டார். பின்பு ஹசரத்து சைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கிலாப்பைத் தந்து அவரை எல்லோர்களுக்கும் இமாமாக்கினார். பின்பு அவர் தன் சுயதேசம் போக எத்தனப்பட்டார். பின்பு அவர் துக்கித்துக்கொண்டு எல்லோரையும் விட்டுப் பிரிந்து புறப்பட்டுப் பயண ஸ்தலங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தார்.

அவர் அநேக நாள்கள் பிரயாணஞ் செய்தபின் தன் தேசமாகிய அன்பாஜி என்ற தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார். பின்பு அவர் அவ்வரசான ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய ஸ்தலத்தில் தாம் உட்கார்ந்து அரசாகி வெகு புத்தியோடும் பக்தியோடும் அரசாளத் தொடங்கினார். அவ்விடத்திலிருந்த சகலரும் அவருடைய ஆளுகையின் நீதியையும் ஒழுங்கையுங் கண்டு அவரைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்களுடைய துக்கமோ ஹசரத்து மௌலா அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராயும் கர்பலாவில் ஷஹீதானவராயுமான ஹசரத்து இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய துக்கத்தைவிடக் குறைந்ததல்ல. இதுவோ கியாமத்துநாள் வரை நாள்தோறும் இருக்கும். ஓ என் சகோதரனே! இந்தத் துக்கத்தை நான் வெளியிட எனக்குச் சக்தியில்லை. எதுமுதல் இந்தப் புத்தகத்தை எழுத நான் எண்ணத்தைக்கொண்டேனோ அதுமுதல் இருலோக பாக்கியத்தை நான் அடைந்தேன். ஆண்டவன் என்னுடைய கருத்தை நிறைவேற்றினான். அப்போது இந்தப் புத்தகத்தை முடித்தேன். எப்போது கியாமத்துநாள் வருமோ அப்போது தாங்கள் என்னை மஹ்ஷரின் ஷபீஆ செய்கிறவர்களாகிய ஹசரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்காகத் தாங்கள் என்னையும் என் வீட்டாரையும் விடுவிப்பீர்களென்று நான் நம்பிக்கையுள்ளவனாயிருக்கிறேன். ஓ ஜியா என்பவனே சீக்கிரமாயிப்போது நீ ஜெயப் புத்தகத்தை முடித்துவிடுவாயாக. எப்போது நான் இந்தப் புத்தகத்தை மொழிபெயர்ப்பதினால் முடித்துவிட்டேனோ அப்போது 1332-ம் ஹிஜ்ரி-ஆம் ஷவ்வால்பிறை 27உக்கு கி. பி. 1914-ஆம் செப்டம்பர்மீ 19உயாயிருந்தது. அசல் புத்தகம் எழுதினவர் எழுதிமுடித்தது 1204-ம் ஹிஜ்ரி வருஷமாயிருந்தது. இப்போது என் சிநேகிதர்களே ஹசரத்து றசூலுல்லா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மேல் துரூதுகளை ஓதுங்கள், பின்பு பஞ்சதனே பாக்கு அவர்கள் மேலும், கர்பலாவில் ஷஹீதானவர்கள் மேலும், மற்றும் ஷொஹதாக்கள் மேலும், ஹசரத்து முஹம்மது ஹனீப்ஷா அவர்கள் மேலும், அவர்களுடைய யுத்தத்திலிருந்த சகல சமஜுக்கர்களின் மேலும் பாத்திஹா ஓதுவீர்களாக.

67 N15

முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம் முற்றிற்று.

83562

ஐரோபா மஹா யுத்தசரித்திரம்.

இங்கிலாந்திலுள்ள பிரக்கியாதி பெற்ற பத்திரிகைகளில் ஒன்றாகிய "இலண்டன் டைம்ஸ்" என்ற பத்திரிகையின் கியாதிபெற்ற பத்திராதிபரால் எழுதப்பட்ட ஐரோபா யுத்த சரித்திரத்தையும், இன்னும் பல முக்கிய பிரசங்கங்களையுந் தழுவி இந்த ஐரோபா மஹா யுத்த சரித்திரம் எழுதப்பட்டது.

இதில் யுத்தத்தில் நடக்கும் விஷயங்களை உள்ளபடி தெரிவிப்பதற்கென்றே பிரத்யேகமாய் தரைப்படையோடும், கப்பற்சேனையோடும் அனுப்பப்பட்டவர்கள் தெரிவித்த சமாசாரங்களும், இதுவன்றி யுத்தம் நடக்கையில் நேரில் போய்ப் பார்த்து வரவேண்டுமென்று சென்றவர்கள் கண்கூடாய்க் கண்டு வந்து கூறிய சமாசாரங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் இதுவரையில் வெளிவராத அனேகம் சங்கதிகளை இதிற் காணலாம்.

இதுகாறும் பத்திரிகைகளில் நாம் அன்றாடம் வாசித்த சங்கதிகளே இதிலிருக்கப்போகிறதென்று சிலர் நினைக்கலாம். அது தவறு. பத்திரிகைகளில் அன்றாட சமாசாரங்கள் சுருக்கமாய் வெளியிடப்படுகின்றன. சில சமயங்களில் உண்மையில்லாத சங்கதிகளும் பிரசுரிக்கப்பட்டு பிறகு அது உண்மையல்லவென்ற சங்கதி பிரசுரிக்கப்படுவது அனுபவம். இச்சரித்திரத்திலோ விஷயங்கள் நடந்தபின் உண்மையாய் நடந்த சங்கதிகள் கிரமப்படி தொகுத்துக் கதாரூபமாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்த யுத்த சம்பந்தமாய் அந்தந்தத் தேசங்களில் அப்போதைக்கப்போது நடந்து இதுகாறும் வெளிவராத இரகசிய சங்கதிகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

யாவரும் எளிதில் உணருமாறு மிக்க தெளிவான நடையில் எழுதப்பட்டதோடு, நமது நாட்டார் அறிந்துகொள்வதற்குச் சற்று கடினமாயிருக்கும் விஷயங்களைத்தாம் நன்றாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எல்லா அரசர்களின் படங்களும், முக்கிய சேனாதிபதிகளின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. யுத்தம் நடந்த இடங்களின் தேசபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல மெஷின் கடிதத்தில் நாணயமாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

முதற்பாகம் விலை ரூ. 1 0 0

மற்ற பாகங்களும் சீக்கிரத்தில் வெளியாகும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஷாஹுல் ஹமீதிய்யா புஸ்தகசாலை
93, பள்ளப்பன் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.